கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)

பாலகுமாரன்

கங்கை கொண்ட சோழன்

(சரித்திர நாவல்)

பாலகுமாரன்

மின்னூலாக்கம் : செல்லா

விசா பப்ளிகேஷன்ஸ்

சுகான்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்,

பழைய எண்: 28, புதுஎண்: 13, சிவப்பிரகாசம் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

தொலைபேசி: 24342899, 24327696

e-mail: enquiry@thirumagalnilayam.com

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

முதற் பதிப்பு	டிசம்பர், 2012
இரண்டாம் பதிப்பு	ஜனவரி, 2013
மூன்றாம் பதிப்பு	மே, 2013
நான்காம் பதிப்பு	அக்டோபர், 2013
ஐந்தாம் பதிப்பு	மார்ச். 2014
ம் பதிப்பு	ஆகஸ்ட், 2014

ஆசிரியருக்கு ©

Title	**GANGAI KONDA CHOZHAN**
By	**Balakumaran**
Sixth Edition,	August. 2014
Paper	Book Print 18.6
Total No. of Pages	568 + 16 கலர் படங்கள்

விலை **ரூ.435-00**

விசா பப்ளிகேஷன்ஸ்
"சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்
முதல் மாடி எண்.13, சிவப்பிரகாசம் தெரு,
தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி எண் 2434 2899, 24327696
பேக்ஸ் எண் 91-44-24341559
E-mail enquiry@thirumagalnilayam.com
website www.thirumagalnilayam.com

Typesetting **RVK DESIGNERS**, Chennai
Mobile 9710329866
Printed at Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891 28446166

முன் அட்டையில்: கங்கை கொண்ட சோழபுரம் கோவிலின் விமானம்.

பின் அட்டையில்: சண்டேஸ்வர நாயனாருக்கு சிவன் முடி சூட்டுவது கோவிலுக்குள் இருக்கிறது.

யோகி ராம்சுரத்குமார்

இராஜேந்திர சோழன்

அத்தியாயம்

1

அந்த மிகப் பெரிய ஹோமக் குண்டத்திலிருந்து ஆள் உயரத்திற்கு அக்னி செழிப்பாய் எரிந்து கொண்டிருந்தது. காற்றினுடைய அசைவைக் கொண்டு முறுகலாகவும், நெடியதாகவும் சிலசமயம் மலர்ந்தும் அது மாறிக் கொண்டிருந்தது. நெருப்பு இருட்டை விலக்க முயற்சித்து முடியாமல் தவித்தது.

அந்த இடத்தில் இருபதுக்கும் மேற்பட்டவர்கள் அந்த ஹோம காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள். ஹோமகுண்டத்தின் நான்கு பக்கமும் நின்றவர்கள் உள்ளங்கை நிறைய அரிசி சோறு எடுத்து அதில் நெய் ஊற்றி உயரத் தூக்கிப் பிடித்தார்கள். மந்திரங்கள் ஜபித்தார்கள், நெய் மிகுந்த அந்த அன்னத்தை அக்னிக்கு சமர்ப்பித்தார்கள்.

ஏ! அக்கினியே நீ நான்கு கொம்புகளை உடையவன். நான்கு தலைகள் உடையவன். நான்கு நாக்குகள் உடையவன். உன்னை நான் நமஸ்கரிக்கிறேன். உன்னுடைய சக்தியை உணர்ந்து என்னுடைய தூதுவனாக இருக்கும்படி உன்னை கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நீயே எல்லா யோக்யதையும் உடையவன்.

நான் கர்த்தா, நீ ஹோதா, இந்த ஹவிசை தயவுசெய்து தேவர்களிடம் சமர்ப்பித்துவிடு, பல்வேறு சங்கல்பங்கள் செய்து கொண்டு அக்கினியே உன்னை வளர்த்து உன் மூலமாக இந்த பிரபஞ்சங்களை ஆளும் தேவர்களுக்கு எங்களுடைய நமஸ்காரங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அக்கினியே எங்களிடம் நல்ல மாணாக்கர்களை அனுப்பு. அவர்களும், நாங்களும் ஒன்றாக இருந்த செயலாற்றும்படி செய், பரஸ்பரம் கவலைகளை துரத்தி பிரதிக்ஞைகளை நிறைவேற்று. மகா காளியை வரச் சொல். எங்கள் குறைகளைச் சொல்லி அவளை நமஸ்கரிக்கின்ற விதமாக இங்கே அழைத்து வருவாயாக. உன்னால் அது முடியும். உனக்கு அந்த யோக்கியதை இருக்கிறது.

'நான் கர்த்தா, நீ ஹோதா' மிகுந்த பணிவோடும், கூர்மையோடும் அவர்கள் அக்கினியை போற்றி பல்வேறு விதமான

வேண்டுகோள்கள் வைத்தார்கள். தெய்வங்களை வரவேற்க வேண்டுமென்று மனம் கனிந்து வேண்டினார்கள்.

எட்டு பேர் மிக நெருக்கமாக அந்த ஹோம குண்டத்திற்கு அருகே இருந்து ஹவிசை சமர்ப்பித்துக் கொண்டிருக்கும்போது மற்றவர்கள் அதற்கு துணையாக வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். நீண்ட அரசங்கொம்பங்களை ஒடித்து சிறு துண்டுகளாக்கி, அந்தத் துண்டுகளைக் கூடையில் போட்டு ஒருவன் அக்கினிக்கு அருகே அனுப்பிக் கொண்டிருந்தான். அவன் மட்டுமே அந்த ஹோமத்தோடு சம்பந்தப்படாதவன் போல விலகி இருந்தான். அவனுக்கு போதும் என்று அவர்கள் சமிக்ஞை செய்தார்கள். 'சமித்துகள் நறுக்கினது போதும், வேறு வேலைக்கு போ,' என்பது போல் சைகையில் உத்தரவிட்டார்கள்.

பெரிய பானைகள் எடுத்துக் கொண்டு அந்த இருட்டில் கிடைத்த வெளிச்சத்தினூடே பாதை தேடி கண்டுபிடித்து ஆற்றோரம் நோக்கி அவன் போனான். நீர் மொண்டு வந்து ஹோமத்துக்கு அருகே வைத்துக் கொண்டான். அங்குள்ளவர்கள் சப்தம் எழாமல் உட்கார்ந்து ஜபம் செய்யத் துவங்கினார்கள். நான்கு பேர் அதே ஜபத்தை முணுமுணுப்பாய்ச் சொல்லி நான்கு விதமான திரவியங்களை அக்கினியில் சமர்ப்பித்தார்கள்.

''இந்த முறை பூஜை இன்னும் வெறியோடு நடக்கிறது'' பூஜைகளில் நேரடியாக பங்குபெறாமல் உதவிகள் செய்த இருவர் அருகருகே உட்கார்ந்து கொண்டு மெல்லிய குரலில் பேசத் துவங்கினார்கள்.

''ஆமாம் இதற்கு பிறகு இந்த இடத்தில் இருப்பதில் அர்த்தமில்லை. இந்த தேசத்தில் வாழ்வதற்கு எந்தவித விருப்பமும் இல்லை. இந்த ஹோமத்தோடு ஊரைவிட்டு கிளம்பிவிட வேண்டியதுதான். சோழ தேசத்தை ஊடறுத்து நடுநாட்டிற்கு, பிறகு தொண்டை மண்டலத்திற்கு, தொண்டை மண்டலத்தில் திருவொற்றியூர் வழியாக கீழைச் சாளுக்கியம் போய் அங்கேயிருந்து வடக்கே போய்விட வேண்டும். வடக்கே போய் இதே வித்தையை இன்னும் நன்றாகக் கற்று மறுபடியும் இந்தப் பக்கம் வர வேண்டும். வயது முடிந்து, மரணம் அடையும் நேரத்தில் இதே இடத்தில் இதே விதமாக ஹோமம் செய்து இந்த இடத்திலியே பிராணஹுத்தி செய்து கொள்ள வேண்டும்.''

''ஆமாம் வேறு என்ன வழி இருக்கிறது. நமக்கு இந்த ஹோமத்தை விட்டால் வேறு என்ன கதி, நம்மால் இதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்'' என்று அடுத்தவர் பேச அந்த குரலில் மெல்லியதாய் அலுப்பும், கொஞ்சம் கோபமும் தெரிந்தன.

இரண்டு பேரும் மௌனமாய் தகதகத்து எரியும் அக்கினியை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருளும், ஒளியும் மாறி மாறி அவர்கள் முகத்தில் மோதின.

''ஆனால்'' என்று இரண்டாமவர், முதல்வரை நோக்கி மெல்லத் திரும்பினார்.

''என்ன சொல்ல வருகிறீர்கள் என்று தெரிகிறது. இந்த ஹோமத்தை நம்பியா நாம் இறங்கியிருக்கிறோம். இதுவா நம்மை ஒப்பேற்றும், நம்முடைய க்ாரியங்களை முடித்துக் கொடுக்குமா. என்று சந்தேகம் வருகிறது இல்லையா''?

''ஆமாம் எவ்வளவு கூர்மையாக, உண்மையாக ஈடுபட்டாலும் அடிமனதில் ஒரு அரிப்பாக அந்த சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.''

''நமக்கு வேறு வழிய இல்லையா. எத்தனை நாள் இந்த ஹோமம் எங்கெல்லாம் இந்த ஹோமம், இதைத் தாண்டி யார் நமக்கு தலைமை ஏற்பார்கள். யாரால் நமக்கு விடிமோட்சம் கிடைக்கப் போகிறது. என்கிற துக்கமும், ஏக்கமும் நெஞ்சைப் பிளக்கின்றன.''

''அது சரி, சோழ தேசத்தை பூண்டோடு அழிக்க வேண்டும் என்ற பிரதிக்ஞை எளிமையானதா? சோழமும் நாமும் கொஞ்சிப் குலாவி நட்பு என்ற பெயரில் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டிருந்தோம். அவர்கள் நம்மை கலைத்து விட்டு உறுதியாக வளர்ந்துவிட்டார்கள். இடையே சேரனை நம்பி மோசம் போனோம். சிங்களவனை நம்பி உதை வாங்கினோம். கடைசி முயற்சி கடைசி முயற்சி என்று பலமுறை முயன்று விட்டு மொத்த மதுரையும் இன்று சுடுகாடாக இருக்கிறது. பாண்டிய தேசத்து சரித்திரத்தில் இதைவிட ஒரு மோசமான காலம் இருந்ததில்லை என்று தோன்றுகிறது.''

சங்கம் வளர்த்த மதுரை, கடவுள் திருவிளையாடல் செய்த மதுரை, இன்று குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. இடிபடாத வீடு இல்லை. எரியாத மாளிகை இல்லை. கோவில்களைத் தவிர

மடங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் இடித்து தரை சாய்த்து விட்டான். ஜனங்கள் மரத்தடியிலும், இருந்த இடத்திலும் தூங்கு கிறார்கள். எல்லார் முகத்திலும் மரணக்களைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உள்ள நமக்கு ஆயுதம் ஏந்தியா போராட முடியும்? என்று ஒன்று திரள்வது? எங்கே ஒன்று திரள்வது? எதுவும் முடியாது என்று தான் இந்த இடத்திற்கு வந்து விட்டோம். இது கடைசி முயற்சி அல்ல. இதுதான் முதல் முயற்சி, வேறு வகையானப் போர்.

''இந்த இடத்தில் வேறு வகையான வாழ்க்கை வாழ வேண்டும் என்று நாம் தீர்மானித்து இருக்கிறோம்.''

''அதுதான் நடைபெறுமா என்று சொல்கிறேன்.''

''ஏன் நடைபெறாது, நிச்சயம் நடைபெறும். சோழ தேசத் தின் வெற்றிக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள். அவர் களுடையது சைவ சிந்தாந்தம், கபாலிகமும், காளாமுகமும் அவர்களுக்கு கொடுத்த வீரம், மரணம் பற்றி சிறிதளவும் பயப் படாது வெறியோடு தாக்குகின்ற வீரர்கள்.'' முதலாமவர் தொடர்ந்து பேசினார்.

''இறந்து போவது சுகமான ஒரு விஷயம், வீர சொர்க்கம், நிச்சயம் உண்டு என்று வீரர்களுக்கு கள்ளோடு சொல்லிச் சொல்லி போதை ஏற்றிவிட்டார்கள்.'' ''வாழ்க்கையை விட சாவு மிக முக்கியமானது என்ற அர்த்தத்தில் அவர்களை வளர்த்து விட்டார்கள்.'' எனவே ஒவ்வொரு சோழ வீரனும் தாக்குகின்ற பொழுது அது மிருகத் தாக்குதலாக முடிகிறது. அப்பன் போன வழியே, பிள்ளையும் போயிருக்கிறான். அப்பன் போனபடியே அவனும் அதே காரியத்தை செய்திருக்கிறான். முப்பத்தி இரண்டு வருடங்களுக்கு முன்பு இராஜராஜ சோழன் காந்தளூர்சாலையை கலமறுத்திருக்கிறான் போல இராஜேந்திர சோழனும் உள்ளுக் குள் நுழைந்து தாக்கியிருக்கிறான். காந்தளூர் போக வேறு வழியே இல்லையா? நேராக மதுரையை முட்டி, சூறையாடி, தீக்கிரை யாக்கி விட்டு அங்கிருந்து மலை ஏறி கேரளத்துக்குள் நுழைந் திருக்கிறான்.

''வடப்பக்கத்து கணவாய்கள் வழியாக ஒரு பெரும்படை வந்திருக்கிறது. நாஞ்சில் நாட்டு வழியாக இன்னொரு படை நகர்ந்திருக்கிறது. ஆக மூன்று படைகளும் இரண்டாம் முறையாக

காந்தளூர் சாலையை குறிவைத்து இழுத்து அடித்து, தோய்த்து இப்பொழுது ஒரு மூங்கில் கூட அந்த இடத்தில் நிற்கவொட்டாது. சாய்த்து விட்டார்கள். இனி வலிய சாலை என்கிற அந்த கல்லூரி இல்லை, போர் பயிற்சி தருகின்ற பாடசாலை இல்லை. சிதற அடித்து விட்டார்கள். வலிவுமிக்க சேரனே காணாது போனான், நம்முடைய ஆட்கள் ஆட்கள் எப்படி தாங்குவார்கள், திகைத்துப் போய் நிற்கிறார்கள்.''

''நம்மோடு இளித்துக் கொண்டிருந்த சிங்களவன் எனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதுங்கிக் கொள்கிறான். நிர்கதியாக நிற்கிறோம். நமக்கு தெய்வத்தை விட வேறு யார் துணையாக இருக்க முடியும்.''

''நாம் நிர்கதியாக நிற்கிறோம் என்று புரிகிறது. ஆனால் இந்த ஹோமமா சோழனைச் சாய்க்கும், இதுவா சிதற அடிக்கும்.''

''உடனே செய்யாது, மெல்ல மெல்ல செய்யும், இப்பொழுது விதை ஊன்றினால் பிறகு மெல்ல மரம் முளைக்கும், இதோ இந்த ஆலமரம் நூற்றுக்கணக்கான விழுதுகளை விட்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான விழுதுகள் பூமியில் பதிந்திருக்கின்றன. எது அடிமரம் என்று தெரியவே இல்லை. ஒரு வேளை அடிமரம் இற்றுப்போய் விட்டதோ என்னமோ, ஆனால் விழுதுகள் உறுதி யாக நிற்கின்றன.

''எப்போது நட்டது. யார் நட்டது யார் யாரையெல்லாம் இது பார்த்திருக்கும் தெரியாது. இதன் வயதென்ன தெரியாது. ஆனால் என்றோ ஒருவன் நட்ட அந்த வித்துதான் இன்று இத்தனை பெரிய விழுதுகள் உள்ள ஆலமரமாக மாறியிருக்கிறது. அதே போல இன்று விதை நடப்பட்டிருக்கிறது. சோழ சாம்ராஜ்யம் நிர்மூலமாக வேண்டும்.''

ஆலமரத்துக்கு ஒரு வயது சொல்லலாம். இப்போது விதை நடப்பட்டிருக்கின்ற இந்த விஷயம் என்றைக்கு முழுமையாகும். இரண்டாமவர் முதலாமவரைக் கேட்க முதலாமவர் அமைதியாக இருந்தார்.

''உங்களைத்தான் கேட்கிறேன். என்றைக்கு முழுமை யாகும்.''

''நான் பதில் சொன்னால் உன்னால் ஏற்க முடியுமா என்று தெரியவில்லை. ஆனால் உள் கேள்வியுனுள் உள்ள ஆதங்கத்தைப்

பொறுத்து இந்த பதிலைச் சொல்லுகிறேன்! நானூறு வருடங்கள், இன்றிலிருந்து நானூறு வருடங்கள், பாண்டிய தேசத்தின் கொடி சோழ சாம்ராஜ்யத்தில் ஊன்றி நடப்படும்.''

''என்ன நானூறு வருடங்கள் ஆகுமா.'' கூவலாக கேட்டார்.

''ஆமாம், நிச்சயம் ஆகும்.''

''நானூறு வருடங்கள் கழித்து வெற்றி பெறுவதற்கு இப்போதே பூஜையா.''

''ஆமாம், இது தள்ளிப்போனால் வெற்றியும் தள்ளிப் போகும்.''

எதை வைத்துக் கொண்டு இவ்வளவு துல்லியமாகப் பேசுகிறீர்கள்?.

''சோழர்கள் எங்கிருந்து வந்தார்கள், கல்லனை கட்டிய சோழன் எத்தனை வருடம் முன்பு இருந்தான், நடுவே அந்த குலம் என்ன ஆயிற்று, பிறகு மறுபடியும் எப்படி எழுந்தது. பல்லவர்களும், பாண்டியர்களும் ஆட்சி செய்தார்கள். அப்பொழுது சோழ சாம்ராஜ்ஜியம் மங்கியது. பிறகு விஜயபாலயன் காலத்தில் மறுபடியும் துவங்கியது. அவருடைய மகன்களும், பேரன்களும் மெல்ல மெல்ல சாம்ராஜ்யத்தை விரிவடைத்து விட்டார்கள்.''

''கடைசியாக வந்த இராஜராஜ சோழன் குமரி முனையிலிருந்து வடக்கே திருவேங்கடம் வரை ஆழமாக அகலமாக சோழ சாம்ராஜ்ஜியத்தை நிறுவிவிட்டுப் போய்விட்டான். இப்பொழுது இராஜேந்திர சோழன் அப்பனுக்கு மிஞ்சிய சூரன், ஓய்வு ஒழிச்சலே இல்லாது போரிடுகிறான். வடக்கே படை எடுத்து வந்தவன் சட்டென்று மேற்கே திரும்புகின்றான். கீழை சாளுக்கியத்திலிருந்து மேலை சாளுக்கியத்திலிருந்து சேர தேசத்துக்கு வருகிறான். மறுபடியும் மேலைச் சாளுக்கியம் போகிறான். போர் போர் போர் என்று நாலாப்புறமும் பறந்து கொண்டே இருக்கிறான்.''

''அவனுடைய மைந்தர்கள் அவனைவிட சூரர்களாய் இருப்பார்கள் போலும், நீங்கள் சொல்லுவது சரி. சமீபமாய் பாண்டிய தேசத்து வெற்றி கண்களுக்குத் தென்படவே இல்லை.''

''கவலைப்படாதே, உயர்ந்தது தாழும், தாழ்ந்தது உயரும். இது உலக நியதி.''

''பல்லவர்களை ஜெயித்த விஜயாலயச் சோழன் முதலில் செய்தது என்ன தெரியுமா? தஞ்சையை தலைநகரமாக மாற்றினான், தஞ்சையில் எட்டு திக்குகளிலும் எட்டுவிதமான தேவதைகளை நிறுவி எல்லைக் காளிகளாக நியமித்தான். சாக்த உபாஸகம், சக்தி வழிபாடு, கிழக்கேயிருந்து தான் தஞ்சைக்கு ஆபத்து வரும் என்று தெள்ளத் தெளிவாகக் கருதி நிசும்பசூதனியை கிழக்கே வைத்திருக்கிறான்.''

''நிசும்பசூதனி கோரவடிவம், தூமாவதி என்ற தேவதையின் இன்னொரு முகம், மண்டை ஓடு, கோரைப் பற்கள், வற்றிய முலை, எலும்புக் கூடான மார்பு, குச்சிக் குச்சியான கைகளும், கால்களும், ஆனால் எட்டடி உயரம், சூலத்தால் காலிலுள்ள மனிதனைக் குத்தி கொன்றியபடியிருப்பாள். கிழவி, அகோரி ஆனாலும் மிகுந்த வலிமையுடையவள்.''

''தெற்கே மதுரை பக்கம் வீரகௌரியை ஸ்தாபித்திருக்கிறார். தேசத்தை அழிப்பது வேலை அல்ல. முடமாக்கிப் போடுவது, முடமாக்கிப் போட்டுவிட்டான். விஜயாலயன் அன்று வைத்த இந்த தேவதைகள் தான் இன்று அவர்களுக்குத் துணையாக இருக்கின்றன.''

''அதே சாக்த உபாஸகம் இப்பொழுது இங்கே நடைபெறுகிறது. நாம் பல்வேறு தேவதைகளை வரவேற்க இங்கு அக்கினியை வளர்த்து நமஸ்கரித்து, அக்கினியைக் கொண்டாடி அக்கினியின் மூலம் எல்லாவிதமான தேவதைகளையும் தஞ்சையை நோக்கிப் போகும்படி வேண்டிக் கொள்ளப் போகிறோம்.''

''சைவத்தினுடைய வலிவு குறைந்து, வைஷ்ணவத்தினுடைய பொலிவு குறைந்து முழுக்க சாக்தம் பரவ வேண்டும். சாக்தம் வளர வளர சோழ தேசம் அழியும்.''

இது என்னப் பேச்சு, என்ன கணக்கு, எனக்கு புரியவில்லை, சைவத்திற்கும், சோழத்திற்கும், சாக்தத்திற்கும் தோல்விக்கும் என்ன சம்மந்தம்.

''உங்களிடமெல்லாம் பெரிய குறை இருக்கிறது. நின்று ஏப்பமிடுவது போல, உண்ட பிறகு வயிறு உடனே சப்தம் எழுப்புவது போல முன்னும் பின்னும் காற்று பிரிவது போல உங்களுக்கு உடனே பலன் கிடைத்தாக வேண்டும். உடனடியாக பலன்கள் எல்லாம் காற்று பிரிவது போலத்தான் இருக்கும்.

ஒரு தேசத்தின் அழிவு வேண்டி நாம் செய்கிறபொழுது அது உடனடியாகக் கொடுக்காது. மெல்ல மெல்லத் தன் வேலை யைக் காட்டும்.''

''சாக்தம் எப்படி சோழத்தை அழிக்கும்? அந்த கேள்விக்கு பதில் சொல்லுங்கள்.''

''இடையறாது யுத்தத்தில் ஈடுபடுகிற ஒரு தேசம் வலிமை மிக்க ஆண்களை இழக்கும். வலிமைமிக்க ஆண்களை இழப் பதால் அந்த தேசத்திலுள்ள குடும்பத்தில் குடும்பத்தின் தலைவி தான் முன்னோடியாக நிற்பாள். அவளைப் பின்தொடர்ந்து தான் அந்தக் குடும்பம் வளரும். ஆண் இல்லாது விதவையான ஒரு பெண் வளர்க்கின்ற குடும்பம், ஆண் வளர்த்த குடும்பத்தை போல முரட்டுத்தனமாக, மூர்க்கமாக இருக்காது.''

''காபாலத்தின், காலாமுகத்தின், கொள்கை நலிந்து போவ தற்கு காரணம் சோழ தேசத்தில் பெண்களுக்கு அதிகம் உரிமை தரப்பட்டுவிட்டது. அதனால் மென்மையான சைவ சித்தாந்தம் தழைத்து தலை எடுத்துவிட்டது. அதேபோல வைஷ்ணவத் தின் விஷயங்கள் அங்கங்கே களை கட்ட ஆரம்பிக்கின்றன. சரணாகதி கடவுளே கதி என்கிற விஷயங்களெல்லாம் முக்கிய மாகக் கொண்டாடப்படுகின்றன. சைவத்தின் வலிவு குறையக் குறைய போர் செய்கின்ற மும்மரம், வேகம் குறையும். குடும்பத் தில் ஈடுபாடு அதிகமாகும். குடும்பத்தில் ஈடுபாடு அதிகமாக இருந்தால் போருக்குப் போக எவருக்கும் பிடிக்காது. போருக்கு ஆட்கள் வரவு குறைந்தால் ஒரு தேசத்தின் தோல்வி நிச்சயம், படைபலத்தின் மெருகு குறைந்தால் அது வெகுசீக்கிரத்தில் கலகலத்துப் போகும்.''

''சைவத்தின் பொலிவு குறைந்து, வைஷ்ணவம் கொண் டாடப்படாமல் போய், சாக்தம் பரவும், எல்லா இடங்களிலும் பெண் தெய்வ வழிபாடு நடக்கும். பெண் தெய்வ வழிபாடு பெண் களால் செய்யப்படும். அப்படிப்பட்ட பெண்களால் வளர்க்கப் பட்ட ஆண்கள் பெண்தன்மையோடு இருப்பார்கள். அடங்கி நடப்பார்கள். நமக்கென்ன என்று கைகூப்பி விடுவார்கள்.''

''சக்தி வழிபாடு வளர வேண்டும், தேவதைகளுடைய ஆட்சி சோழதேசம் முழுவதும் பரவ வேண்டும் என்று தான் இந்த பாண்டிய நாட்டு காட்டில் சோழ தேசத்து எல்லையில் இந்த ஹோமம் நடத்தப்படுகிறது.''

''யார் நடத்துகிறார்கள்?''

''யார் நடத்தினால் என்ன? நொந்து நூலாகிப் போனவர்கள் நடந்துகிறார்கள். அடிபட்டு தோற்றவர்கள் நடத்துகிறார்கள். வேறு என்ன செய்வது என்று தெரியாமல் வாளை கீழே போட்டு விட்டு தர்ப்பைப் புல்லை கையில் எடுத்துக் கொண்டார்கள். பல்லை கடிக்கிற ஆக்ரோஷத்தை விட்டுவிட்டு சோகத்தை முழுங்கி, உள்ளுக்குள் தேக்கி வைத்து கண்களின் வழியே வெளியே விடுகிறார்கள்.''

''எழுந்திரு, ஹோமம் முடியப் போகிறது, பூரண ஆகுதி நடைபெறப் போகிறது. பட்டுத் துணியில் பல்வேறு விஷ யங்கள் மூட்டையாகக் கட்டப்பட்டு உயரே காண்பிக்கப்பட்டு அக்கினியை இதை சகல தேவதைகளுக்கும் என்கிற விதமாக முழங்கி அதை மிக நிதானமாக அக்கினியில் போடப்பட்டது.

சட்டென்று நெருப்பு அதை விழுங்கியது, உயரே எழும் பியது. பளபளத்தது. கொப்பரைகள் வெடித்து நெருப்பு நாலா புறமும் தெறித்தது. பச்சை நிற பிழம்பு தெரிந்தது. ஆஹா என்று ஹோமம் செய்தவர்கள் குதித்தார்கள், நீலமும், சிவப்பும், பச்சையு மாய் தழல் மாறியது. 'வாராஹி இங்கு வா' என்று கூவினார்கள். 'ப்ரித்யங்கரா எழுந்து நில்' என்று கூவினார்கள். ஏ, ராஜமாதங்கி இந்த இடத்தில் வருவாயர்க என்று அழைத்தார்கள்.

காலபைரவரை துணைக்கு அழைத்து வாருங்கள், எதிரி களை நாசம் செய்யுங்கள் என்று வேண்டினார்கள். படேர் என்று அக்கினி பொங்கியது. இன்னும் நான்கு முழு உயரம் எரிந்தது. காற்று சுழன்று அடிக்க அக்கினி அமுங்கி பிறகு கூர்மையாய் எழுந்தது, அடித்த காற்றில் ஏதோ உடைத்த கிளை ஒன்று மரத்தி லிருந்து நழுவவே பொடேர் என்று விழுந்தது. காற்றினுடைய சப்தம் மரங்களூடே போவதால் பெண் அலறும் குரல் போல கேட்டது. நடுநிசியில் அந்த சப்தத்திற்குப் பயந்து பறவைகள் அலறத் துவங்கின. நரிகள் ஊளையிட்டன, குரங்குகளின் கீச்சுகள் அதிகம் கேட்டன, பறவைகள் சடசடத்து எழுந்து அடங் கின. மிருகங்கள் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு அந்த அக்கினியின் வெளிச்சத்தில் வேகமாக அவர்களைத் தாண்டி ஓடின, புலியா, பெண் சிங்கமா, வேங்கையா எதுவும் அனுமா னிக்க முடியவில்லை, ஆனால் வேகம், ஆக்ரோஷம், சீறல் மிகப் பலமாக இருந்தது.

''கிளம்பிவிட்டாள், அன்னை கிளம்பிவிட்டாள். நம்முடைய பிரார்த்தனை பலித்துவிட்டது. வெகு நிச்சயம் சோழ மண்டலம் நிர்மூலமாகும். சோழ தேசம் மண்ணோடு மண்ணாகும். இந்த சோழத்தில் அன்னையே, மகாகாளி, பராசக்தி. கோயில் தவிர, மரங்கள் தவிர மற்ற எல்லா மாளிகைகளையும் ஒரு தூண்கூட நிற்கவொட்டாது இடித்து, கோவேறுக் கழுதை போட்டு உழுது பேய் கடுகு விதைத்து இதை வெறும் காடாக, குப்பை மேடாக நீ மாற்ற வேண்டும், உன்னால் மாற்ற முடியும், தயவுசெய்து செய்.''

''லட்சக்கணக்கான ஜனங்களின் வேதனை தாங்காது, லட்சக்கணக்கான ஜனங்களின் அழுகை தாங்காது, நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.''

''ஏ, காளி, மகாசக்தி மகாபைரவி, மகாகாளி, சாமுண்டி, வாராஹி, ப்ரித்யங்கரா என்று உரக்கச் சொல்லி ஒரு மனிதர் அக்கினியை வலம் வந்தார்.

ஒரே மொழி பேசுகிற சமூகம் இரண்டுபட்டு ஒன்றை ஒன்று அழித்துக் கொண்டிருந்தன.

''உனக்கு ஹவிஸ் போதாது, சமித்துகள் போதாது, நல்ல வீரிய விதைகள் போதாது, தேனும், பாலும் போதாது, உனக்கு எல்லாவற்றிலும் சிறந்த ஒரு விஷயத்தை ஆகுதியாக அளிக்கிறேன். என்னையே இந்த இடத்தில் உனக்குத் தருகிறேன். என்னை ஏற்பாயாக, என்னை ஏற்பாயாக. இந்த சோழ தேசத்தை நிர்மூலம் செய்ய என்னை உபயோகப்படுத்திக் கொள்.''

அவர் கணமும் தாமதிக்காமல் அக்கினிக்குள் பாய்ந்தார். மிகப் பெரிய அலறல் ஒன்று அவரிடமிருந்து வெளிப்பட்டது. எல்லோரும் திகைத்துப் போனார்கள். அக்கினி கொழுந்துவிட்டு எரிந்தது. கட்டைகளுக்கு நடுவே சுருண்டு, விழுந்து பொசுங்கிப் போனார். தழல்கள் மூடிக்கொண்டன, நிணநாற்றம் மேலே எழுந்து மூக்கைத் துளைத்தது.

தூரத்தே நீர் கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டிருந்தவன் திடுக்கிட்டு எழுந்து நின்றான். மற்றவர்களை எல்லாம் பார்த்தான். ''அந்த பானை நிறைய நீர் எடுத்து வாரும். சமனம் செய்யும், இங்கேயே நெருப்பை விட்டு விட்டு போகக்கூடாது. இந்நேரம் அவர் பஸ்பம் ஆயிருப்பார். அதனால் நாம் நீர் தெளித்து அக்கினினுடைய வேகத்தை குறைத்து விடலாம்.''

அவர்கள் விரைவாகச் செயல்பட்டார்கள். இந்த இடத்தை விட்டு வேகமாக நகருவது நல்லது என்று பேசிக் கொண்டார்கள்.

நேரிடையாக தஞ்சை போய் முட்டாமல் நாம் கிழக்கே நடந்து தொண்டித் துறைமுகத்தை அடைந்து கடற்கரை வழி யாகவே நாகை அடைந்து நாகையிலிருந்த மெல்ல மெல்ல கிழக்கு நோக்கி நகர்ந்து விடலாம், சோழ தேசத்தின் நடு மையத் தில் போய் மாட்ட வேண்டாம் என்று பேசிக் கொண்டார்கள். அவன் மெல்ல எழுந்தான்.

''ஏய் இங்கே வா'' - சைகை செய்து அவனை கூப்பிட்டார்.

அவன் கையில் சில கழஞ்சுகள் கொடுத்தார். போய் வா, போய் வா என்று விடை கொடுத்தார். அவன் சரி என்று தலை யசைத்தான்.

''பாவம் பேச்சு. வராது செவிட்டு ஊமை'' என்று முதலாமவர் இரண்டாமவரிடம் சொன்னார். எல்லோரும் கிழக்கு நோக்கி வேகமக நடந்தார்கள். அவன் காத்திருந்தான். நீர் நிறைந்த குடம் ஜலம் கொண்டு வந்து ஹோமகுண்டத்தை சமனம் செய்தான். பானையை அந்த இடத்தில் போட்டு உடைத்தான். மெல்ல சுற்றி வந்தான். சில ஓலைத் துணுக்குகளை பொறுக்கிக் கொண் டான்.

ஒரு புதரில் மறைந்திருந்த வாளை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டான். ஹோமத்தில் மிஞ்சிய உணவை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டான்.

இவனை போன்று பல சோழ தேசத்து ஒற்றர்கள் செவிட்டு ஊமைகளாய், குருடர்களாய் ஒன்றும் தெரியாத அப்பாவிகளாய் நடிக்க பழக்கப்பட்டிருந்தார்கள்.

முட்டாள்களா, சோழ தேசத்தை ஹோமம் வளர்த்தா அழித்து விட முடியும். அது எரிமலையடா, அதை இந்த ஹோமகுண் டத்தினால் அமுத்தி அணைத்துவிட முடியும், முட்டாள்களா, வாய் திறந்துச் சொன்னான்.

எங்கே போய் குதிரை சம்பாதித்துக் கொள்வது என்ற யோசனையோடு தஞ்சை நோக்கி நடந்தான். கடவுளே கிட்டத் தட்ட ஆறுமாத காலமாக இந்த காட்டில் இருந்தாகி விட்டது. இனி நல்ல உணவு சாப்பிடப் போகிறோம். நல்ல மனிதர்களோடு

பழகப் போகிறோம். தஞ்சையின் மையத்திலுள்ள மறவர்குடிக்கு போய் அங்குள்ள பெண்டுபிள்ளைகளைப் பார்த்து குசலம் விசாரித்து விட்டு மாமன்னர் இராஜேந்திரனை சந்திக்கப் போகி றோம். இங்கு நடந்ததை சொல்லப் போகிறோம்.

"நெருப்பால் சோழ தேசத்தைச் சாய்த்து விடுவார்களாம்," முட்டாள்கள், மறுபடியும் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

அவன் போன பிறகு நீர் மட்டும் அணையாத இந்த ஹோமகுண்டம் வீசிய காற்றில் மறுபடியம் படிக்கென்று பற்றிக் கொண்டது. கொழுந்து விட்டு எரிந்தது, உள்ளுக்குள்ளே பல கட்டைகளுக்கு நடுவே கிடந்த அந்த உருவம் முறுக்கி எழுந்தது, மறுபடியும் விழுந்தது.

ஒரு பிணம் கொழுப்பு நீங்கி முறுக்கி எழுந்து விழுவது இயல்புதான். ஆனாலும், அது எதையோ சொல்வது போல் இருந்தது.

* * *

அத்தியாயம்

2

ஒரு வெள்ளி கிண்ணத்தில் தளும்பத் தளும்ப நீர்த்த பசு நெய்யை எடுத்தபடி இராமநாத சிவாச்சாரியார் சமையல் அறை யிலிருந்து சாப்பாட்டுக் கூடத்திற்கு வந்தார். சாப்பாட்டுக் கூடத் தில் எதிரும் புதிருமாக பன்னிரெண்டு பன்னிரெண்டு அந்தணர் கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் வெறுமே விட்டத்தை பார்த்துக் கொண்டும், சிலர் கம்பீரமாக வேதகானம் செய்வது போலவும், சிலர் மிக அந்தரங்கமான அரசியல் விஷயத்தை பரிமாறிக் கொள்வது போலவும் பல்வேறு செயல்களில் ஈடுபட்டுக் கொண் டிருந்தார்கள்.

எல்லார் முன்பும் தலைவாழை இலை போட்டு அதில் பீர்க்கங்காய் துவையலும், மிளகு குழம்பும் ஊற்றப்பட்டு இருந்தன. இடரிக (இட்லி) எனப்படும் அவித்த அரிசி உணவைப் பறிமாறு வதற்கு முன்பு அந்தணர்களின் உடல் சூடு குறைவதற் காக பசு நெய்யை உருக்கி இராமநாத சிவாச்சாரியார் கொண்டு வந்திருந்தார். விரலால் சூடு தணித்திருக்கிறதா என்று பார்த்தார். சூடு தணிந்திருந்தது. வெதுவெதுப்பாக இருந்தது. ஒவ்வொரு அந்தணர் எதிரே போய் நின்றதும் அவர்கள் வலது கையை குவித்து வைத்துக் கொள்ள அதில் நெய்யை தாராளமாக விட்டார்.

நெய்யை வாங்கி மணத்தை முகர்ந்து உதடு வைத்து சர்ரென்ற சப்தத்துடன் அந்தணர்கள் உறிஞ்சிக் குடித்தார்கள். நெய் வாய் முழுவதும் பரவி தொண்டைக்குள் இறங்கி உணவுக் குழாய்க்கு நகர்ந்து இரைப்பையைத் தொட்டு விரைவாய் குடலை கழுவுவதை அத்தனை பேரும் உணர்ந்தார்கள்.

நல்ல உணவு சாப்பிடும் முன்பு இப்படி நெய் உருக்கி உண்பது வயிற்றுக்கு மிகவும் நல்லது. உணவு எளிதாக இடம் விட்டு இடம் நகரும். ஜீரணமாகும். அதையும் தவிர பசு நெய் யில் இருக்கின்ற பல்வேறு விதமான சத்துக்கள் உடம்புக்கு நல்ல ஆரோக்கியத்தை தருகின்றன.

இருபத்தி நான்கு பேரும் நெய் உறிஞ்சிக் குடித்த பிறகு இராமநாத சிவாச்சாரியாரின் மகன் சங்கர சிவன் இடரிக எனப்படும்

உள்ளங்கை அகல அரிசி பணியாரத்தை இரண்டு இரண்டாக இலைகளில் வைத்துக் கொண்டு போனான். வைக்கும்பொழுதே 'இன்னொரு எண்ணம்' என்று கை உயர்த்தி சிலர் கேட்க அவர்களை அலட்சியம் செய்தான். இருபத்தி நான்கு பேருக்கும் நாற்பத்தி எட்டு இடரிக வைத்துவிட்டு காத்திருந்தான். அதற்குள் மிளகு குழம்பில் இடரிகவை தோய்த்து பீர்க்கங்காயோடு பிரட்டி வேகமாக அந்தணர்கள் உண்ண ஆரம்பித்து விட்டார்கள்.

சிறிது நேரத்தில் விரல் உயர்த்தி 'ஒரு எண்ணம்' 'இங்கு ஒரு எண்ணம்' என்று குரல் கொடுத்தார்கள். அங்கங்கே இடரிக வைத்து விட்டு மனதுக்குள் கணக்கெழுதிக் கொண்டான்.

அந்தணர்கள் சாப்பிடும் பொழுதே நடுவே சங்கரனுடைய தம்பி சந்தான சிவன் உருண்டையான இரு அப்பங்களை இலைகளில் வைத்துக் கொண்டு போனான். அப்பங்களை பிய்த்து ஆவலாக உண்டார்கள். 'இன்னம் கொஞ்சம்' நெய் வேண்டும்' என்று இராமநாத சிவாச்சாரியாரை கேட்டு இலையில் ஊற்றச் சொல்லி ஊற்றப்பட்ட நெய்யில் அப்பத்தை அழுத்தி, பிரட்டி, பிசைந்து உண்டார்கள். ஏற்கனவே நெய்யில் பொறிக்கப்பட்ட அப்பம் மீண்டும் ஒருமுறை நெய்யுக்குள் முங்கி அவர்கள் வயிற்றுக்குள் இறங்கியது.

இம்மாதிரி உணவெல்லாம் மிகப் பெரிய பாக்கியம். எல்லோருக்கும் கிடைக்காது. எல்லா தேசத்திலும் கிடைக்காது. எல்லா ஊரிலும் கிடைக்காது. இந்த தஞ்சை பெரு மண்ணில் இராஜேந்திர சோழர் ஆட்சி செய்கின்ற இந்த அற்புதமான காலத்தில் 'சோழ நாடு சோறுடைத்து' என்று மற்ற ஊர்க்காரர்கள் பொறாமைப்படும் வண்ணம் செழிப்பாக சுவையாக கிடைத்தது. இந்த செழிப்பு அந்த சமையற் கூடத்தில் பசு நெய் வாசனையாக, அப்பத்தின் இனிப்பாக, இடரிகயின் ஆவியாக வெளியே தெரிந்தது.

அந்தணர்கள் எழுந்து புறக்கடை பக்கம் கை அலம்ப போனார்கள். உயர்ந்த பித்தளை அடுக்கில் வைக்கப்பட்டிருந்த நீரை கொண்டு வாய் கொப்பளித்து, முகம் தடவி அடுத்தவருக்கு மொண்டு கொடுத்து விட்டு வீடு சுற்றி வெளியே வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அந்தணர்கள் உண்டு நகர்ந்த அந்த இடம் பரப்பரப்பாக சுத்தம் செய்யப்பட்டது. வேறு ஒரு சாப்பாட்டு கூடமும் திறக்கப்

இராஜேந்திர சோழன் மனைவியர்களுடன்

பட்டது. இந்த முறை அறுபது, எழுபது பேர் உட்காரக்கூடிய பெரிய சாப்பாட்டு கூடமாக இரண்டு கூடங்கள் இணைந்து ஒன்றாக்கப்பட்டன. இலைகள் வேகமாக பரிமாறப்பட்டன. வாசலில் காத்துக் கொண்டிருந்த உழவர்களும், மறவர்களும், கொல்லர்களும், சிற்பிகளும், தச்சர்களும் உள்ளே புகுந்தார்கள். அவர்களுக்கும் கடுமையான பசி இருப்பதை அவர்கள் முகத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

'இவங்ககிட்ட மட்டும் பசு நெய் இப்படி வாசனை அடிக்குதே எதனால' என்று சிற்பி ஆவல் தாங்காமல் பொற்கொல்லரை கேட்டார். 'புல்லு மட்டும் போட்டு வளக்கறானுக அத்தான் பச்சுன்னு வாசனை வீசுது.'

'புல்லுன்னா வைக்கோல் புல்லுதானே'

'இல்ல பசும்புல், உங்க வீட்லயும், எங்க வீட்லயும் தான் வைக்கோல்போர். மாடு தின்னணும், அதும் தலை எழுத்து. இங்க அப்படி இல்ல. புல்லு வளக்கறதுக்குன்னே நிலம், புல்லு சாப்பிடற துக்குன்னே பசு, இவங்க தனியாக வைச்சிருக்காங்க.'

சுண்டு விரலின் ஒரு அங்குலாஸ்தி ஆழமுள்ள சிறு கரண்டியால் நெய் அளவாக ஊற்றப்பட்டது. 'ஏங்க எங்களுக்கு நெய் கம்மியா கொடுக்கிறீங்க' என்று வெகுநாள் முன்பே மறவர்கள் வாய்விட்டு கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மிகத் தெளிவான பதில் சோற்றுக்கடை நடத்தும் அந்தணர்களிடம் இருந்து பதில் வந்தது.

நீங்கள் மாமிச உணவு சாப்பிடுகிறீர்கள். மாமிசமும் சேர்த்து, நெய்யும் சேர்த்து ஒன்றாக சாப்பிட்டால் உங்கள் உடம்பு அந்த கொழுப்பை ஏற்காது. மாமிசத்தை விட்டுவிடுங்கள் அப்போது நிறைய நெய் சாபபிடலாம். மாமிசம் சாப்பிடாததை ஈடு செய்யவே அவர்களுக்கு நெய் ஊற்றப்படுகிறது. பசு நெய் என்பது பசுவின் இரத்தம்தான். ஆனால் பல வடிவம் எடுத்து சுத்தமாக்கப்பட்டு இரத்தமாக இல்லாமல் நெய்யாக கொடுக்கப் படுகிறது. ஆனால் அந்த இரத்தத்தின் அத்தனை போஷாக்கும் அந்த நெய்யில் இருக்கிறது. உங்களுக்கு மாமிசம் தேவை. எனவே, மாமிசம் சாப்பிடுங்கள். நெய் குறைந்த அளவு போதும். இது வாசனைக்காக' என்று சொல்ல, அவர்களுக்குள்ளாகவே பேசி அது சரிதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

'வெறும் பசும்புல் சாப்பிடுவதால்தான் இத்தனை வாசனை வருகிறதோ நெய்யில்' என்று பதில் சொன்ன பொற்கொல்லரே புதிதாக சந்தேகம் கேட்பதுபோல இராமநாத சிவாச்சாரியாரை கேட்டார்.

'பசும்புல் சாப்பிடுவதால் மட்டும் பசுவினுடைய பால், மணமாகிவிடுமா, அதைத்தாண்டி பல்வேறு விஷயங்கள் இருக் கின்றனவே,'

''என்னென்ன?''

''கடலை புண்ணாக்கு, வாழைப்பழத் தோல், அரிசி கஞ்சி பலதும் ஊட்ட வேண்டி இருக்கிறது. பழங்களை கூழாக்கி ஒரு கை தருகிறேன், அதுவும் அவைகளுக்கு உற்சாகம் தருகிறது. பிறகு மேய விட்டு விட்டால் எகிறி, துள்ளி குதித்து நாலு பக்கமும் ஓடி உடம்பை வலுப்படுத்திக் கொண்டு பசு புல்மேயத் துவங்கும். பிற்பகலில் உட்கார்ந்து கொண்டு சகலமும் வாய்க்கு கொண்டு வந்து அசை போடும். நிம்மதியாக அசை போடும். உட்கார்ந்து இருக்கின்ற பசுவை எழுப்பி கை வலிக்க வலிக்க பால் கறந்து, அந்த கறந்த பாலை காய்ச்சி வெண்ணெய் எடுத்து, வெண்ணைய் எடுத்த பாலை விட்டுவிட்டு வெண் ணெயை தனியாக காய்ச்சி உங்களுக்கெல்லாம் கொடுக்கிறேன். நீங்கள் இடரிக்கு மட்டும்தான் காசு தருகிறீர்கள். அப்பத்துக்கு மட்டும்தான் காசு கேட்கிறேன், இந்த நெய் இலவசம்.''

''எங்கள் கடைக்கு நீங்கள் வரவேண்டும் என்ற எண்ணத் தில் நான் ஏற்படுத்துகின்ற விளம்பரம்.'' அவர் குரலில் பெருமிதம் வழிந்தது. மிகப் பெரிய தானம் செய்கின்ற அலட்டல் தெரிந்தது.

''இப்ப கோவிலுக்கு போவதே இல்லை போலும்.'' ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்த மறவன் உரத்த குரலில் கேட்டான்.

'உமக்கு எங்க ஒய் வலிக்கிறது. நான் கோவிலுக்கு போனால் என்ன, போகலைன்னா என்ன, உனக்கு திருப்தியா. சோறு போடறேனா இல்லையா, கோவிலுக்கு போய் பூஜை பண்றதை விட இது பெரிய புண்ணியம் ஒய்' என்று இராமநாத சிவாச்சாரியார் அலட்டலாய்ப் பதில் சொன்னார். 'புண்ணியம் மட்டும் இல்லை, காசும் கூடுதலா வருத இல்ல' பொற்கொல்லர் சொல்ல, 'ஆமாம்' என்று தலை ஆட்டினார்.

'காசு கூடுதலா வருது. அப்படி வர்ற காசுலதான் பசுமாடு வாங்கி பால் கறந்து வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சி உங்களுக்கெல்லாம் ஊத்தறேன். உங்களுக்கெல்லாம் ஊத்தினாதான் நான் நன்னா இருக்க முடியும்னு தெரிஞ்சு ஊத்தறேன்' என்று இராமநாத சிவாச்சாரியார் மீண்டும் உரத்த குரலில் எல்லோருக்கும் காது கேட்கும் வண்ணம் பேசினார்.

'உமக்கு பெரிய மனசு ஒய். ஒரு முழு கரண்டி நெய் தானமா தர்ரீர்' என்று லேசாக கேலி செய்கின்ற குரலில் ஒரு கருந்தச்சர் பேசினார். 'நீங்க எனக்கு தானமா கொடுத்தா, நான் உங்களுக்கு தானமா கொடுக்கறேன். நான் பெருத்த காசு கொடுத்தா பசுமாடு வெச்சுண்டேன். எனக்கு ராஜா கிட்ட இருந்து நாலு பசுமாடு குறைந்த விலையில் கிடைச்சது. இன்னொரு நாலு பசுமாட்டுக்கு தீவனம் வைச்சு நல்லபடியா வளர்த்து, அதுல வர்ற நெய்யை உங்களுக்கெல்லாம் பரிமாற்றேன். நான் காசு கொடுத்து வாங்கி இருந்தா உங்ககிட்ட காசு வாங்கணும். ராஜா என்ன அப்படி வளர்க்கலியே. சௌகரியமா வைச்சிருக்காரே. சோழ தேசத்து மக்கள் வண்ணமா சாப்பிடட்டும் என்றுதானே இவ்வளவு கஷ்டப்படறார் என்று சொல்ல, இராமநாத சிவாச்சாரி யாரின் அந்த பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்க அங்குள்ள எவருக்கும் தைரியமில்லை.

'ஆக, இது உம்ம தானமில்லை' மறுபடியும் மறவர் துவங்கினார்.

''ஆமாம். இங்கு வந்த அத்தனையும் இராஜேந்திர சோழருடைய தானம்தான். நீ, தான், உங்கப்பா, அம்மா, உம்புள்ளை எல்லாமே அவருடைய தானம்தான். மொத்த சோழ தேசமும் அவர் போட்ட பிச்சைதான். அதனால்தான் சம்மணம் கட்டிண்டு சர் சர்ன்னு சாப்பிடுறீர். ரெண்டு நாள் கடந்து பாண்டிய தேசத்துக்கு போய்ட்டு வாரும். பொட்டக்காடு. புழுதிக் காத்து, ஒதுங்க வீடு கிடையாது. உட்கார திண்ணை கிடையாது. ஒவ்வொரு கிராமமும் குப்பை மேடா இருக்கு.''

''பாண்டிய தேசம் பரவாயில்லை. இன்னும் கொஞ்சம் தள்ளி சேர தேசத்துக்கு போனாப் போதும். வெறும் காடுதான். வீடு இருந்த இடத்தில் எல்லாம் ஆல மரமும், அரச மரமும் முளைச்சு கிடக்கு. ஏற்கனவே அங்கொரு வீடும், இங்கொரு வீடுமா இருக்கும். ஒன்னா கூடி உட்கார்ந்து சாப்பிட மாட்டாங்க.

அவனவன் தாப்பாள போட்டுண்டு வீட்டுக்குள்ள உட்கார்ந்து சாப்பாடு தின்பான். இப்ப இன்னும் மோசம். ஜனங்க இருக்காங் களான்னே தெரியல. ஜனங்களே இல்லாத காடு போல சேர தேசம் மாறிடுத்து.''

''துரத்தி, துரத்தி அடிச்சோம். அதனால உட்கார்ந்து இருக் கானுங்க இல்ல. மோசமான பயலுக, அந்த மலையாளத்து சேனைகள்.''

''போறுமய்யா, திரும்ப திரும்ப யுத்தத்தை பற்றியே பேசிக் கொண்டிருக்க வேண்டாம். நல்ல விஷயங்க பேசுவோம்.''!

''ஏன் யுத்தம் நல்ல விஷயமில்லையா?'' மறவன் சீறலாகக் கேட்டான்.

இப்பொழுது இந்த சோழ தேசம் அனுபவித்திருக்கிற அத்தனை விஷயத்திற்கும் காரணம் யுத்தம். ஒன்றல்ல, இரண் டல்ல பல நூறு யுத்தங்கள். விஜயாலய காலத்திலிருந்து எத்தனை போர்கள் கண்டிருக்கிறோம். எத்தனை முறை வென்றிருக்கிறோம். அந்த வெற்றியினுடைய விளைவுதானே இன்று உட்கார்ந்து கொண்டு இடரிகவும், அப்பமும் சாப்பிட்டுக் கொண்டிருக் கிறோம்.''

அவர்கள் கை அலம்ப எழுந்தார்கள். வாய் கொப்பளித் தார்கள். வீடு சுற்றி வந்தார்கள். வாசலில் போடப்பட்டிருந்த மரப்பலகைகளில், திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். வெற்றிலையும், கொட்டைப்பாக்கும் வைக்கப்பட்டிருந்தன. கொட்டைப் பாக்கை எடுத்து சிறு துண்டாக மறவர் நறுக்கிப் போட ஆளுக்கு ஒரு துண்டு எடுத்துக் கொண்டார்கள். வாயில் அடக்கிக் கொண்டார்கள். பிறகு சுண்ணம் தடவிய வெற்றி லையை பிரித்து போட்டுக் கொண்டார்கள்.

'போட்டுக்கோப்பா, ஒண்ணும் தப்பில்ல. இதுக்கும் காசு வாங்கல' என்ற மறவர் பொற்கொல்லரைக் கேலி செய்தார்.

பொற்கொல்லர் இன்னொரு பாக்கு எடுத்துக் கொண்டார்.

'மலையாளத்து பாக்கைய்யா. ஜாக்கிரதை, அதிகம் போட் டால் தொண்டை கட்டிக் கொள்ளும்.'

'இது உடனே போட்டுக் கொள்வதற்கல்ல. இன்று மாலை போட்டுக் கொள்வதற்கு' எடுத்த பாக்கை இடுப்பில் பத்திரப் படுத்திக் கொண்டார்.

தொண்டை மண்டலத்து எல்லையிலிருந்து நல்ல அரிசி, குடந்தையின் வெற்றிலை, தஞ்சாவூரின் வாழைப் பழங்கள், கங்க தேசத்திலிருந்து வந்த கடலை பருப்புகள் மறவர் சொன்னது போல இங்கு எல்லாமும் கிடைக்கிறது. தஞ்சை மிக சௌகரியமான வாசஸ்தலமாக போய்விட்டது.

ஆனால் ஒரு மாடைக்கு ஒரு தட்டு சோறு கிடைத்திருந்த தய்யா. அந்த ஒரு தட்டு சோறு போதும். ஆனால் .இப்போது மூன்று மாடை கொடுத்தால்தான் ஆறு இடரிக கிடைக்கிறது. அது அரை வயிற்றுக்குத்தான், எனக்கு போதுமானதாக இருக்கிறது.''

''பிற்பகல் உணவு என்ன விலை விற்கிறது'' என்று மறவர் கேட்க, 'ஆறு மாடைகள்' என்று பதில் வந்தது.

''இங்கிருந்து நாலு வீடு தள்ளி பொன்னம்மாள் என்கிற அந்தண பெண்மணி தன் இரண்டு மகளுடன், மூன்று மகன் களுடன் சோற்றுக்கடை நடத்துகிறார். இடரிக கிடையாது. அதற்கு பதிலாக வெல்லப்புட்டும், தேங்காய் புட்டும். இவர் செய்வது போல நெய் ஊற்ற மாட்டாள். அதற்குப் பதிலாக வாழைப் பழத்தை உரித்து பக்கத்திலேயே வெல்லத்தை வைத்து விடுவாள். வெல்லத்தோடு வாழைப் பழத்தை நசுக்கி சாப்பிட் டால் போதும், கொஞ்ச நேரத்தில் வேகமாக பசிக்கும். எவ்வளவு சாப்பிடுகிறோம் என்றே தெரியாது. இடரிகயாவது ஒரு எண் ணிக்கைக்கு கட்டுப்படுகிறது. அவள் கரண்டி கரண்டியாக வைப்பதுதான் கணக்கு. அவள் சொல்வதுதான் இறுதி. ஆனால் ஒரு பெண்மணியாக ஆறு அடுப்புகளில் மூங்கில் குழாயில் அடைத்து வேகவைத்து தேங்காய் புட்டை தட்டி தட்டி எடுத்து சுடச்சுட இலைகளில் போடுகிறாள்.''

''பொன்னம்மாள் கடையைப் பற்றித்தானே பேசுகிறீர். அதற்கு அடுத்ததாக ஒரு கடை இருக்கிறது. மாலையில் தேன் குழல் பிழிகிறார்கள். உள்ளங்கை அகலமாக இருக்கிறது. ஒரு மாடைக்கு நாலு தேன்குழல். இரண்டு மாடை கொடுத்து எட்டு தேன்குழல் வாங்கி மடியில் கட்டிக் கொண்டால் போதும். அத்தனையும் சாப்பிட்டு விட்டு குளிர்ந்த நீர் குடித்தால் போதும். அடடா! உணவு எத்தனை சுகம் என்று அப்பொழுதுதான் தெரி கிறது. மாமன்னர் இராஜேந்திர சோழர், வாழ்க. அவரால் கிடைத்த சுகம் இது.''

''மூன்றாவது கடைக்கு இன்னும் நான்கு கடை தள்ளி போனால் ஒரு இனிப்பு. இளஞ்சூடாக சாப்பிட வேண்டும் அப்பா. இப்போதே போய் சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது. எந்த நேரமும் கிடைக்கிறது. அவருடைய முக்கியமான விஷயம் திரட்டுப்பால் மட்டுமே.''

''அடடா கடைசிவரை சோறு பற்றிதான் பேசிக் கொண் டிருப்பீர்களா. வேறு எதுவும் பேச மாட்டீர்களா. வேறு விஷயங்கள் பேசுங்களாய்யா.'' மற்றவர் அலுத்துக் கொண்டார்.

''சிற்பியாரே, இராஜேந்திரருக்கு தனித்த வேலை செய்யத் தானே நியமிக்கப்பட்டிருக்கிறீர். ''வேலை இங்கா, ஜெயங்கொண் டத்திலா. ராஜ ராஜேஸ்வரம் முற்றுப் பெற வேண்டாமா?''

''ஒன்றும் புரியவில்லை.''

''ஏன் உத்தரவு வரவில்லையா, மூளியாக விடப்போகி றீர்களா?''

''அதை மூளி என்று எப்படி சொல்வது. உங்கள் வீட்டில் பின்புறம் சுவர் எழுப்பாது வெறுமே வேலி போட்டிருக்கிறீர்கள் என்றால் அது மூளி என்று அர்த்தமா. இல்லையே. அது போலத் தான். சிறு சிறு வேலைகள் மீதம் இருக்கின்றன. ஆனால் அதை முடிக்கச் சொல்லி உத்தரவில்லை.'' மாறாக..... அவர் பேச்சு நிறுத்தினார். முகத்தில் லேசாக ஒரு வருத்தம். அந்த இடைவெளி யில் மின்னி மறைந்தது.

''என்ன மாறாக'' என்று எல்லாரும் கேட்டார்கள். உடனடி யாக ஜெயங்கொண்டத்திற்கு கிளம்பச் சொல்லி உத்தரவு. பத்து, பதினைந்து சிற்பிகள் தவிர அதுவும் வயதானவர்கள் தவிர மற்ற எல்லா சிற்பிகளும் ஜெயங்கொண்டம் நோக்கி வந்துவிட வேண்டும்.'

''போயிற்று. இந்த தஞ்சாவூரின் அற்புதமான சாப்பாடு உமக்கு கிடைக்காமற் போகப் போகிறது. வருத்தம்தான்.'' என்று சொல்ல,

''அதெல்லாம் இல்லை. ஒருபொழுதும் இராஜேந்திர சோழர் நம் வயிறு வாட விடமாட்டார். நாங்கள் போவதற்கு முன்பு தொண்டை நாட்டு அந்தணர்கள் அங்கே போய் விட்டார்கள். பாத்திர பண்டங்களுடன் அங்கு குடியேறி விட்டார்கள்.''

''அப்படியா? ஆனால் இங்கு கிடைக்கின்ற அரிசியும், பருப்பும், பாலும், நெய்யும் அங்கு கிடைக்குமா?''

''இதைவிடப் பத்து மடங்கு அதிகமாகக் கிடைக்கும். வீர நாராயணபுரம் ஏரியை பார்த்ததே இல்லையா? உடையார்குடியை கேள்விப்பட்டதே இல்லையா? ஏரியை சுற்றி அத்தனை இடமும் நன்செய் நிலம். மூன்று போகம். ஊடுபயிறாக பருப்புகள் போடு கிறார்கள். கரும்புக்கு ஊடுபயிர். வெற்றிலைக்கு ஊடுபயிர் என்று எது போட்டாலும் ஊடுபயிர் போடுகிறார்கள். நெல் மட்டும்தான் தனித்து வளருகிறது. எனவே அ.ரிசி, பருப்பு, பால், நெய் எதற்கும் கவலை இல்லை,''

''பசுக்களுக்கு எங்கே போவது?''

''நடுநாட்டில் உள்ளவர்களுக்கு அதுதான் வேலை. கீழை சாளுக்கியத்திலிருந்து வந்த பசுக்களை மடக்கி அவர்களே வாங்கிக் கொள்கிறார்கள். பால் கறந்து உடனடியாக வெண் ணெய் கடைந்து நெய் ஊற்றி எல்லா கிராமங்களுக்கும் அனுப்பு கிறார்கள். மோர் கூட விற்கிறார்களய்யா.''

''மோர் காசுக்கு விற்பதா?''

''ஆமாம். கனமான மோர். தொட்டால் ஒட்டிக்கொள்கிற பிசுபிசுப்பான மோர். ஆதை கீழை சாளுக்கியத்திலிருந்து வந்த இடையர்கள் விற்கிறார்கள். அவர்களுக்கு மோர்தான் கூலியாக கிடைக்கும் போலிருக்கிறது.''

''பெரிய பானைகளில் மோரும், உலர்ந்த மீனும் எடுத்து வருகிறார்கள். இரட்டை உறியில் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அங்கங்கே நின்று விற்கிறார்கள். மோருக்கு கீழை சாளுக்கியத் தில் என்ன பேர் தெரியுமா?''

''தெரியாதே''

''பெருகு' என்று பெயர். அவர்கள் பெருகு என்று விற்க மாட்டார்கள். பெருகூ என்று கத்துவார்கள். பெருகூ என்பதில் மற்றதெல்லாம் மறைந்து கூ என்ற சத்தம் மட்டும் கேட்கும். பெருகு என்ற சத்தம் கேட்டால் போதும். குழந்தைகள் வெளியே ஓடி வந்து விடுகின்றனர். ஆளுக்கு ஒரு குவளை குடிக்கின்றனர். தாகத்துக்கு அந்த மோர் நன்றாக இருக்கிறது.''

''மறுபடி சோற்று விஷயமாக வந்துவிட்டோமா.''

''ஜெயங்கொண்டத்தில் என்ன நடக்கிறது, யாருக்காவது தெரியுமா?'' மறவர் கேட்டார்.

''நீ கோட்டைக் காவலா? இடம்பெயர வசதியே இல்லையோ. ஜெயங்கொண்டத்தில் மிக அற்புதமான ஒரு நகரத்தை இராஜேந்திர சோழர் பார்த்து, பார்த்து கட்டிக் கொண்டிருக்கிறார். வரைபடத்தின் மாதிரியை பார்க்க நேரிட்டது. மாதிரியே மூச்சு அடைக்க வைத்தது'' என்று சிற்பி தொடை தட்டிக் கொண்டு பேசினார்.

''இராஜராஜேஸ்வரம் போல மிக அழகான ஒரு கோவில். அந்த கோவிலை சுற்றி கோட்டை, கோட்டைக்கு பின்புறம் அரண்மனை, அரண்மனைக்கு அடுத்தபடி படைவீரர்கள் குடியிருப்பு. வலது பக்கமும் படைவீரர்கள் குடியிருப்பு. இடது பக்கமும் படைவீரர்கள் குடியிருப்பு. நடுவே வணிகர்கள். அதற்கும் நடுவே அந்தணர்கள். என்று விதம் விதமாக பிரித்துக் போட்டிருக்கிறார்கள். சுற்றி உள்ள எல்லா இடங்களும் காடு அழித்து விளைநிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.''

''சிறிய கால்வாய்கள் வெட்டப்பட்டு எல்லா பக்கமும் நதிநீர் பாயும்படி வைக்கப்பட்டிருக்கிறது.''

''கோவில் வேலை நடக்கிறதா?''

''ஒரு பனை உயரத்துக்கு எழும்பிவிட்டதாக சொல்கிறார்கள்.'' சட்டென்று எல்லார் கவனமும் வேறு திசை நோக்கி நின்றது.

ஏதோ ஒரு கல்வரக் கூச்சல் போல இரண்டும் கெட்டானாய் விளங்கியும் விளங்காததும் போல ஒரு சப்தம் வந்தது. சட்டென்று யாரோ ஓடுகின்ற சப்தம் கேட்டது. எல்லோரும் இறங்கி தெருவில் நின்று பார்த்தார்கள். பொன்னம்மாள் என்று சொல்லப்படுகின்ற அந்த அந்தணப் பெண்ணின் வீட்டு வாசலில் நாலைந்து பேர் கூடியிருக்க, யாரோ ஒருவன் திசை தெரியாமல் ஆடிக் கொண்டிருந்தான்.

வீட்டுக் கூரையில் இருந்த மூங்கில் கழியை உருவி ஓங்கி தரையில் அடித்தான். இடது பக்கம் மணிக்கூண்டு விளக்கை அடித்து உடைத்தான். 'காசுக்குத்தான் சோறு போடுவாயா, சோறு போட காசு வாங்குகிறாயா, என்ன அத்தனை பஞ்சமா

இந்த நாட்டில். எதுக்காக சோற்றுக்கு காசு வாங்குகிறாய்' என்று அவன் தள்ளாடியபடியே கேட்டான்.

மதுவினுடைய உச்சகட்ட போதையில் அந்த மறவன் இருப்பது அவர்களுக்கு தெரிந்தது. மற்றொரு மறவர் தலையில் அடித்துக் கொண்டார்.

''இது சரியாக முடியப்போவதில்லை. மூன்றாவது நாளாக இவன் இதே தொந்தரவு செய்து கொண்டிருக்கிறான், சோற்றுக்கு காசு வாங்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறதாம். அப்படி சோறு விற்பது மிகப் பெரிய பாவமாம். பசிக்கிற நேரத்தில் பசிக்கிற ஆளுக்கு பசிக்காத ஆள் சோறு போட்டே ஆக வேண்டு மாம்.''

''எந்த சட்டமய்யா, யாரைக் கேட்பது.''

வெளியே ஓடிவந்து மடக்கிய பொன்னம்மாள் பிள்ளைக்கு பளீரென்று ஒரு அடி விழுந்தது. அந்த பிள்ளை துடித்துடித்து ஒதுங்கி ஓரமாகப் போனான்.

''ஒரு தட்டில் உடனடியாக புட்டு எடுத்து வா. இல்லையென்றால் கொலை செய்து விடுவேன்.'' மூங்கிலை ஈட்டிபோல் பிடித்துக் கொண்டு அந்த வீட்டிற்குள் எறிவதற்கு முயற்சி செய்த போது வேறு சில மறவர்கள் சமாதானப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

ஆனால் அவன் எந்த சமாதானத்திற்கும் ஒத்துப் போக வில்லை. மூங்கிலைக் கெட்டியாக பிடித்துக் கொண்டு 'வரப் போகிறதா இல்லையா' என்று உரத்த குரலில் கேட்க,

'முடியாது' என்று பெண் குரல் உள்ளிருந்து கேட்டது.

முழு வீச்சில் கையில் இருந்த மூங்கிலை அவன் வீடு நோக்கி எறிந்தான். பல்வேறு அலறல் குரல்கள் கேட்டன. வாசலில் இருந்தவர்கள் திபுதிபுவென்று பொன்னம்மாளின் வீடு நோக்கி போனார்கள்.

'அடேய்! யார் நீ? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். எந்த தைரியத்தில் ஈட்டி எறிவது போல மூங்கிலை வீட்டுக் குள் எறிகிறாய். யார் மேலும் பட்டிருந்தால் என்ன ஆகும். அறிவுகெட்டவனே, தள்ளிப் போ' என்று சிற்பி முன்னே வந்து அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளினான். எதிரே இருப்பவன் சிற்பி என்று தள்ளாடியவனுக்கு தெரிந்துவிட்டது. சிற்பிகளை

யாரும் எளிதில் பகைத்துக் கொள்ள மாட்டார்கள். சிற்பிகளை அரசர் மரியாதையாக நடத்துவதால் ஊரும் மரியாதையாக நடத்திக் கொண்டிருந்தது.

'பசித்தவனுக்கு சோறு போட வேண்டும் என்று மனு தர்மம் சொல்கிறதய்யா. எனக்கு பசிக்கிறது. சோறு போடுங்கள்' என்று அந்த மறவன் குடிபோதையில் உரக்கக் கத்தினான்.

'பனங்கள்ளு பசி கிளறும்,' யாரோ பின்னாலிருந்து பேசி னார்கள்.

'ஆமாம், பனங்கள் சாப்பிட்டு விட்டுத்தான் வந்திருக் கிறேன், பசியெடுக்கத்தான் செய்கிறது, இதற்கு என்னபதில்.

ஒரு மறவன் உயிரை தரணமாக மதித்து போர்முனைக்கு போக வேண்டும், வெட்டும், குத்தும் பட்டு குத்துயிராக வர வேண்டும். அவனுக்கு ஒரு பிடி சோறு போடக்கூடாதா, கேட் டால் தரக்கூடாதா. மூன்று மாடை வேண்டுமாம். எங்கிருக்கிறது மூன்று மாடை.''

''ஆமாம், மொத்த மாடையும் கள்ளுக்கே போயிற்று.''

''கடன் வைத்திருக்கிறேனய்யா. கடன் வைத்து விட்டு குடித்துவிட்டு வந்திருக்கிறேன்.''

'அது இன்னும் உத்தமமான செயல். அப்பொழுது பசி கூடத் தான் இருக்கும்.' வேறு யாரோ கேலி பேசினார்கள். அவர்கள் கேலி செய்கிறார்கள் என்று அந்த மறவனுக்கு புரியவில்லை. புரிகின்ற நிதானம் இல்லை.

பேசிக்கொண்டே இருந்தால் எப்படி. எனக்கு புட்டு குடு. அவன் இந்த முறை தடுமாறி சுவரில் இடித்துக் கொண்டு திண்ணை பக்கம் இருக்கின்ற கம்பத்தில் முட்டி கொண்டு உள்ளே போக எத்தனிக்கிறபோது திடீரென்று வாசற் கதவு அடைக்கப்பட்டது.

உள்ளிருந்த பெண் குழந்தைகள் பயத்தோடு கூச்சலிட்டு கதவை அடைத்தார்கள். அவன் கதவை எட்டி உதைத்தான். இன்னொரு மூங்கில் கழியை பிடுங்கிக் கொண்டான். ஓங்கி கதவில் அடித்தான். தூணாக நின்றிருந்த மூங்கில் கழியை பிடுங்க அவன் முயற்சி செய்தான். பல பேர் அவனை அமைதி படுத்த முயற்சித்தார்கள்.

மறவன் ஒருவன் முன்னேறி 'இதற்கு மேல் ஆட்டம் போட்டால் அடி வாங்குவாய். இங்கு இருக்கின்ற யாரிடமாவது காசு வாங்கி அந்த காசை கொடுத்து உணவு சாப்பிடு. வீணாக ஆடாதே, கடன் வாங்கு,' என்று சொல்ல அவன் மறுத்துவிட்டான்

'முடியாது. எனக்கு பசிக்கிறது. பசித்த வயிறுக்கு சோறு போட வேண்டும். அது உங்களுடைய கடமை.'

'நீ அதிகமாக பேசுகிறாய்.'

'கீழைசாளுக்கியத்தின் வட எல்லை வரைக்கும் போய் வந்திருக்கிறேன் அய்யா. எனக்கு ஒரு சட்டி புட்டு கொடுக்கக் கூடாதா? அவ்வளவு இளக்காரமா,' என்று மறுபடியும் அவன் நாலாதிசையிலும் அலைந்து கத்த அவன் அலைவதை வேடிக்கை பார்த்தார்கள்.

'இராஜேந்திரன் சோழரின் நிர்வாகம் சரியில்லை,' என்ற முணுமுணுப்பு அங்கங்கே தோன்ற ஆரம்பித்திருந்தது.

* * *

அத்தியாயம் 3

மூச்சின் மீது முழு கவனமும் வைத்து உள்ளுக்குள் இழுத்து வெளியே அனுப்புவதற்கு பெயர்தான் சுவாசம். மற்றபடி மூச்சு என்ன செய்கிறது என்று கவனிக்காது அதாகவே உள்ளே போய் வெளியே வந்தால் அது ஆசுவாசம். உடம்பு இளைப்பாறிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

சுவாசிப்பது என்பது மற்ற எல்லா வேலைகளையும் விட மிகக் கூர்மையாக செய்ய வேண்டிய வேலை. எந்த வேலையை மிகக் கவனமாக செய்ய வேண்டுமோ அந்த வேலையை மனித குலம் சர்வ அலட்சியத்தோடு செய்கிறது. எவனொருவன் சுவாசத்தை மிகுந்த கவனத்துடன், ஈடுபாட்டுடன் செய்கிறானோ அவனுடைய மற்ற எல்லா காரியங்களும் மிகச் சுத்தமாகவும், வெற்றிகரமாகவும் இருக்கும்.

யார் நுரையீரலை முழுவதும் நிரப்பி முற்றிலும் காற்றை வெளியே அனுப்புகிறார்களோ அப்பொழுது பிராணவாயுவி லிருந்து பிராணசக்தி உடம்பில் ஒட்டிக் கொள்கிறது. பிராண வாயுவில் இருக்கின்ற பிராண சக்தி உடம்பில் ஒட்டிக் கொள்ள உடம்பு முழுவதும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சுண்டு விரல் நுனி, மூக்கின் நுனி, குதிகால், கழுத்தின் பின்புறம் என்ற பல சோம்பலான இடங்கள் சுறுசுறுப்படைகின்றன. கண்கள் ஜொலிக் கின்றன. காதின் கூர்மை மிக உன்னதமான இடத்தை அடைகிறது.

சுவாசம் என்பது ஒரு பயிற்சி அல்ல. ஒரு பழக்கமும் அல்ல. மிகச் சீராக காற்று இழுத்து வெளியே விடுதலை இயல்பாக, அதே நேரம் மிக முக்கியமானதாக செய்ய வேண்டும். இதை செய்கின்ற ஒரே உயிர் வாழினம் பாம்பு மட்டுமே. அதிலும் நாகப் பாம்புதான் இந்த சுவாசத்தை முற்றிலுமாக இழுத்து வாயுவில் இருக்கின்ற பிராணசக்தியை உடம்பு முழுவதும் அனுப்பி தன் னுடைய உடம்பு பளபளப்பையும், அதனுடைய உணவுச் செறிவையும் அதிகப்படுத்திக் கொள்கிறது.

குதிரைகள் பழக்கப்படுத்தினால் கற்றுக் கொள்கின்றன. ஆனால் அவ்வப்போது மறந்து விடுகின்றன. பசுக்களுக்கு சுவாசம்

பற்றி ஞாபகம் இருப்பதே இல்லை. யானைகள் ஒரு நாளில் சில வேளைகளில் மட்டும் இந்த பிராணத்தின் மீது கவனம் வைத்து செய்கின்றன. ஆனாலும், ஓரளவு வலிவுடையதாய், திறனுடையதாய் திகழ்கின்றன. மனிதர்களில் பாம்பாகவும், யானையாகவும், பசுமாடாகவும் பலர் இருக்கிறார்கள். பாம்பாக இருக்கிறவர்களை எளிதாக கண்டுவிடலாம். அவர்களால் அயர்ந்து உறங்க முடியாது. அடித்து போட்டதுபோல அயர்ந்து உறங்குவது மனிதருடைய குணமல்ல. அது சோம்பலான ஒரு மிருகத்தினுடைய குணம். யானைகளும், குதிரைகளும் நின்ற வண்ணம் தூங்குகின்றன. பாம்பு உறங்குவதே இல்லை. சட்டென்று சின்ன அசைவுக்குக் கூட ஒரு வாசனை மாற்றத்துக்குக் கூட விழித்துக் கொள்ளும்.

இன்னும் மூச்சு உள்ளே இழுப்பதற்கு மூச்சை முற்றிலுமாக வெளியே அனுப்ப வேண்டும். ஒரு துளி கூட மீதம் வைக்காமல் மூச்சை வெளியே விடும்போது உள்ளுக்குள் மிக வேகமாக காற்றுப் போய் நுரையீரலின் அத்தனை குமிழ்களிலும் காற்று நிரப்பப்படுகிறது. ஆரம்பத்தில் இது கடினம். ஆனால், இளம் வயதிலேயே இது பழகிவிட்டால் மூச்சின் மீது எப்பொழுதுமே புத்தியின் ஒரு பகுதி கவனமாக இருந்து கொண்டிருக்கும்.

இது காந்தளூர் சாலையில் இளம் வயதில் கற்றுக்கொண்டது. ஆனால் என்ன சொல்கிறார்கள்? - எதற்கு சொல்கிறார்கள் என்று புரியவில்லை. சொன்னவர்களும் விளக்கியது இல்லை. ஆனால் சமீபத்தில் நாகை போகும்போது அருண்மொழிப்பட்டன் மூச்சுப் பயிற்சி செய்வதை பார்த்து ஒரு பிட்சுமெல்ல சிரித்தார்.

''இதென்ன வாள் வீச்சா? ஈட்டி எறிதலா அல்லது வில் அம்பு சமாச்சாரமா? ஏன் இப்படி முறுக்கிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அமைதியாக இருங்கள்'' என்று சொன்னார்.

அருண்மொழிப்பட்டனுக்கு கொஞ்சம் அவமானமாக இருந்தது. ''ஏன், என்ன தவறு'' என்று உஷ்ணமாக கேள்வி எழுந்தது.

''அதற்குள் கோபம் வருகிறதா? அப்போது ஏதோ தவறு இருக்கிறது என்றுதான் அர்த்தம்'' சொல்லிவிட்டு மீண்டும் புத்த பிட்சு சிரித்தார்.

இன்னும் அவமானம் அதிகமாகியது. ''தவறை சொன்னால் திருத்திக் கொள்கிறேன்'' பதில் சொன்னான். இப்பொழுதும் சொல்லிய வார்த்தையில் கோபம் குறையவில்லை.

''நான் எதற்கு சொல்ல வேண்டும், அகந்தையும், அதிகார மும் இருந்தால் எப்படி கற்றுக் கொள்ள வரும். கற்றுக் கொள் பவருக்கும் முதலில் தேவை பணிவு. பணிவு என்பது ஒரு இழி வான குணமே அல்ல, பணிவு என்பது அறியும் ஆவலின் உச்ச கட்டம். பணிவு தன்னை முழுவதுமாக ஒரு விஷயத்திற்கு தயார் படுத்திக் கொள்கின்ற தெளிவு.''

''மூச்சு விடுதல் என்பதை பயிற்சியாக ஏன் செய்கிறீர்கள், மூச்சு விடுவது என்பது எல்லா நேரத்திலும் செய்ய வேண்டிய விஷயம். எனவே, அது இயல்பாக இருக்க வேண்டும். இதை பயிற்சியாக செய்தால் அவ்வப்போது உபயோகப்படும். அவ்வப் போது உபயோகப்படுத்துகிற விஷயமாக ஒரு நாளும் மூச்சு இல்லை. மூச்சு இருக்கவும் கூடாது. எல்லா நேரமும் உங்கள் மூச்சு உங்களுக்கு பயன்பட வேண்டும்.''

''அதாவது எல்லா நேரமும் நீங்கள் மூச்சை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வப்போது எடுத்து சொறிந்து கொள்கின்ற பிரம்புபோல மூச்சு இருக்கக் கூடாது.''

இப்படி பல நூறு விஷயங்கள் நாகைப்பட்டினத்து விகாரை யில் ஆசிரியர்களாக இருக்கும் புத்த பிட்சுக்களால் அருண்மொழி பட்டனுக்கு சொல்லித் தரப்பட்டது.

''நான் வைஷ்ணவன் ஆயிற்றே, என்னை விகாரைக்குள்ளே விடமாட்டீர்கள் என்று நினைத்தேன். ஓரளவு அனுமதிப்பீர்கள் என்றும் நினைத்தேன். ஆனால் இவ்வளவு எளிதாக, இனிமை யாக எல்லாமும் சொல்லித் தர தயாராக இருக்கிற உங்களைப் பார்த்தால் கட்டிக் கொண்டு கொண்டாட தோன்றுகிறது. பௌத்தம் இன்னும் ஒரு நல்ல மதமோ என்று தோன்றுகிறது. சொல்லிவிட்டு அருண்மொழிபட்டன் ஆச்சாரியாரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்கள் நன்றி அறிதல் புரிகிறது. ஆனால் உங்கள் நன்றி அறிதலை இப்படி சிக்கலான மொழியில் வெளிப்படுத்துவீர் கள் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் வைணவர். நாம் இருப்பது சைவத் திருநாடு. நானோ பௌத்தர். நான் இந்த கேள்விக்கு பதில் சொன்னால் நன்றாகவா இருக்கும். நாகை பட்டிணத்து விகாரயை சேர்ந்த புத்த பிட்சுக்கள் சைவத்திற்கு எதிராக இருக்கிறார்கள் என்ற பேச்சல்லவா வரும்.

பௌத்தம் ஒரு மதமல்ல. அது ஒரு வழி. புத்தம் என்பது ஒரு பெயரல்ல. அது ஒரு நிலை. சித்தார்த்தன் என்கிற இளவரசன் கௌதம முனிவர் என்று மாறி அந்த கௌதம முனிவன் புத்தம் என்ற நிலையை அடைந்தான். அவ்வளவே, நான் பிட்சு, புத்தம் என்ற நிலையை அடைய நகர்ந்து கொண்டிருக்கிற ஒரு பிட்சு. பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிற ஒரு பிட்சு. இறைவனை நோக்கி இறைஞ்சிக் கொண்டிருக்கிற ஒரு பிட்சு. அவ்வளவே.

''சைவ சித்தாந்தத்தில் இல்லாததா. திருமூலரை நீங்கள் படித்த தில்லையா? பல சித்த புருஷர்கள் மூச்சு பற்றி மிக விவரமாக சைவத்தால் சொல்லி இருக்கிறார்களே, அவர்கள் தங்களை சைவன் என்று கூட சொன்னது இல்லை. வெறுமே தான் அனுபவித்ததை பகிர்ந்து கொள்வதோடு நின்று விட்டார்கள்.''

''வைணவம் உயர்ந்தது. இந்த பேச்சு மூச்சு எல்லாவற்றையும் விட்டு விடு. எல்லாவற்றையும் தூக்கி எறி. இது ஒவ்வொன்றாக பிடித்துக் கொண்டு போவதற்குள் பல ஜென்மங்கள் ஆகிவிடும். வெறுமே ஏங்கி அழுது புலம்பி, கடவுளே கண்ணா, நீ வாடா என்று கை நீட்டி, விரித்து அவனை அழைத்தால் போதும். அவன் வந்து ஆட்கொள்வான் என்கிறது. இதைவிட எளிதான வழி உண்டா? பார்ப்பதற்கு எளிதாக இருக்கின்ற வழி மிகக் கடினமானது. எல்லாவற்றையும் துறந்துவிட்டு இறைவனை நோக்கி கை விரித்து காத்திருக்க சகலராலும் முடியுமா? அது மிக மிகப் பெரிய சரணாகதி.''

''எனவே, இது உயர்வோ, அது தாழ்வோ, அதில் இருக்கிறதோ, இதில் இல்லையோ என்றெல்லாம் குழப்பிக் கொள்ள வேண்டாம். நீங்கள் சில விஷயங்களை கற்றுக் கொண்டீர்கள். உங்கள் மதம் பற்றி மறந்து விடுங்கள். உங்கள் வாழ்வு பற்றி மறந்து விடுங்கள். மூச்சு, நீங்கள் என்றும் மட்டும் இருங்கள். அந்த மூச்சு உங்களை வாழ்விக்கும். உங்கள் வாழ்வு உங்களை வகையான இடத்திற்கு அழைத்துப் போகும்.''

''நீங்கள் புத்தனாக இருந்தால் என்ன? வைஷ்ணவனாக இருந்தால் என்ன? சைவனாக இருந்தால் என்ன? அல்லது மிலேச்சனாக இருந்தால்தான் என்ன? பூரண அமைதியோடு இருங்கள். அதுதான் முக்கியம். இறைவனை விட்டு விட்டு மதத்தை பிடித்துக் கொண்டால் இறைவனும் தெரியாது. உங்கள் மதமும் உளராது. உங்கள் மதத்துக்குள் நீங்களே பிளவுகள் உண்டாக்கி,

நீங்களே இரண்டாக பிளந்து நீங்களே உங்களை அடித்துக் கொண்டு மரணமடைவீர்கள். அப்படி பல மதங்கள் அழிந்து போய் இருக்கின்றன.'' அருண்மொழிப்பட்டனை விட வயதில் நிறைந்த பிட்சு ஆணி அடித்ததுபோல் பேசினார்.

கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்த பயிற்சி இந்த வயதிலும் தொடர்கிறது. இந்த வயதில் இன்னும் உபயோகமாக இருக்கிறது. நிறைய மறவர்களுக்கு முதுகு தளர்ந்துவிட்டது. மார்பு கூடிவிட்டது. கால்கள் நடுங்குகின்றன. பற்களில் பாதகம் ஏற்பட்டு அது உடம்பு முழுவதும் விதம் விதமான பிரச்சனைகளை கொண்டு வந்து சேர்க்கின்றன.

மாமன்னர் இராஜராஜசோழரிடம் இருந்த பல மறவர்கள், பல வீர தளபதிகள் பெரும் மீசை மட்டுமே வளர்த்துக் கொண்டு ஈட்டியை கோலாக ஊன்றிக் கொண்டு சிரமப்பட்டு நிற்கிறார் கள். ஆனால் அருண்மொழிப்பட்டனுக்கு உடல் திறனும், புத்தி கூர்மையும் குறையவில்லை. மாறாய் கூடியிருக்கிறது. ஐம்பது அகவையா தெரியவில்லையே. ஒரு நகை கூட காணோமே என்றார். ஐம்பது வயது பூர்த்தியை பெரிதாகக் கொண்டாடப் படவேண்டும் என்று இரண்டு மனைவியரிடம் சொல்கிறார்கள். குழந்தைகள் ஆமாம் என குதிக்கிறார்கள். நேரே அருண்மொழி அப்பாவிடம் போய் விண்ணப்பித்து இருக்கிறார்கள்.

'அதற்கென்ன செய்யலாமே, செய்வது வழக்கம் உண்டே' என்று சொல்கிறார். எல்லோரும் வந்து கொஞ்சி, கொஞ்சிய பிறகு சட்டென்று ஒரு வெட்கம் வந்துவிட்டது. அப்பாவிற்கு விருப்பம் என்றால் செய்யுங்கள் என்று பொதுவாக சொல்லி விட்டு இடத்தை விட்டு நகர்ந்துவிட்டான். ஐம்பது வயது, ஒரு சோழ சாம்ராஜ்ஜியத்தினுடைய வளர்ச்சியோடு வளர்ந்த ஐம்பது வயது, கொஞ்சம் கொஞ்சமாக விலகி கவனித்த அரசியலில் இன்று முழு நேர பணியாக மாறிவிட்டது.

ஒரு முறை கேரளாந்தகன் கோபுரத்திற்கு மிக நீளமாக செவ்வகப்பாறை தூணாக நிறுத்த தேவைப்படுகிறது என்று கணக்கிட்டு கல் எடுத்த இடத்திலேயே செதுக்கி தஞ்சையை நோக்கி கொண்டு வந்திருந்தார்கள். திடீரென்று ஒரு இடத்தில் மண் சரிந்து கல் இடது பக்கமாக வண்டியில் இருந்து நகர்ந்து சரியத் துவங்கிவிட்டது. சட்டென்று அந்த பள்ளத்தில் அருண் மொழி இறங்கி சரிகின்ற கல்லை தடுத்து ஒற்றை ஆளாய்



வாள் வீரர்

நிறுத்தினான். மற்றவர்களும் வர முயற்சித்தபோது மண் வேகமாக சரிந்தது. அது எல்லோருக்கும் ஆபத்தாக முடியும் என்று தெரிந்தது. நல்லவேளை சோழ சிற்பிகள் தடுத்து விட்டார்கள்.

'என்னால் அரைக்கால் நாழிகை இப்படி நிற்க முடியும். அதற்குள் கயிறை இறுக்கி மேலே இழுத்து விடுங்கள்', என்று அடிக்குரலில் அருண்மொழி உறும, சோழ சிற்பிகள் துரிதமாக செயல்பட்டார்கள்.

இருபது, முப்பது இடங்களில் கனத்த கயிறு போட்டு, சுருக்கிட்டு இழுத்து எதிர்பக்கம் கொம்பு நட்டு கொம்புக்கு நடுவே குறுக்கு கோல் சாய்த்து, அந்த குறுக்குக் கோலை இந்த கயிறுகளால் விசிறிப் போட்டு பிடித்து அங்கே வைத்து இழுத்து, இழுத்து, இழுத்து நடுத்தெருவுக்கு கொண்டு வந்துவிட்டார்கள்.

கல் நடு இடத்தில் இருக்கும்வரை அருண்மொழி அதை தள்ளிக் கொண்டே போனான். எப்படி முடிந்தது? எல்லோரும் வியந்தார்கள்.

இதுவும் நாகை விகாரையின் கற்றல்தான். வினாடி நேரத்தில் உடம்பை வஜ்ரமாக மாற்றிக்கொள்ள முடியும். மூச்சு சரியான படி உள்ளுக்குள் கும்பகம் செய்தால் உடம்பின் அத்தனை இடங்களும் மூச்சால் நிரப்பப்பட்டு ஒன்றுக்கு நான்கு விதமாக பலம் பெறும். இரும்பு போல் ஆகும் என்று அவனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது.

மண் சரியும்போது, நிறைய பேர் இறங்குவது ஆபத்து, சோழ சிற்பிகள் தடுத்து விட்டார்கள். மிகச் சாதுர்யமாக செயல்பட்டார்கள் அவர்கள். இவனை பாராட்ட இவன் அவர்களை பாராட்ட அந்த பெருங்கல் நல்ல கதையோடு தஞ்சையை நோக்கி பயணமாயிற்று.

இப்பொழுது கம்பீரமாக கேராளாந்தகன் வாயிலில் வலது புறத்தில் மூன்று கோல் உயரம் இருக்கிறது. பூமியில் இரண்டு முழு உயரம்தான் நிற்கப்பட்டிருக்கிறது. மேலே ஒரு முழு உயரம் கோபுரத்துக்குள் போயிருக்கிறது. மற்றதெல்லாம் வெளியே தெரிகிறது. இப்பொழுது போனாலும் அந்த கல் தூணை பார்க்க முடியும். சுவரோடு சுவராக இருக்கின்ற அந்த பாறையை தடவி விட்டு வர முடியும். ஒவ்வொரு முறை அதை தடவும் பொழுதும் மூச்சு முட்டி விரைப்பாக நின்ற அந்த வேகம் நினைவுக்கு வருகிறது. மரணத்துக்கு தயார் என்ற நிலையில்தான்

அப்படி மூச்சு இழுத்து உடம்பு முழுவதும் வலுவாக்கி நிற்க முடியும்.

இன்று காலை எல்லா அதிகாரிகளுக்கும் இராஜேந்திர சோழரிடமிருந்து அவசர ஓலை வந்தது. தஞ்சையில் முக்கிய மான இடங்களை திடீரென்று முழுவீச்சில் ரகசியமாய் சோதனை செய்ய வேண்டும் என்ற ஆணை வந்தது.

அருண்மொழிபட்டனுக்கு இராஜராஜேஸ்வரம் நிர்வாகத்தை நன்கு கவனிக்குமாறு தனியே எழுதப்பட்டிருந்தது. நன்கு என்று குறிப்பிடுகிறபோது அங்கு ஏதோ சரியில்லை என்று மாமன்னர் நினைக்கிறார் என்பது தெளிவாகப் புரிந்தது. எனவே ஆட்கள் எவரும் இல்லாது மெய்காவல்படை கூட இல்லாது தனியே குதிரை ஏறி அரண்மனையிலிருந்து கடைத் தெரு வழி யாக பலரின் முகமன்களை ஏற்றுக்கொண்டு இராஜராஜேஸ் வரம் நோக்கி போய்க் கொண்டிருந்தான். சோற்றுக்கடை பக்கம் திரும்பிய பொழுது அங்கு கூட்டம் தெரிந்தது. கோவில் போவ தற்கு சோற்றுக்கடை வீதி வழியாக போக வேண்டிய அவசியம் இல்லை. வலது பக்கம் தனி சிறகாக அந்த வீதி இருக்கிறது. இது சமீபத்தில் ஏற்பட்ட வீதி. கல் கட்டடங்கள் கூட அல்ல. எல்லாமே கூரை வீடுகள்தான். ஆனால் திண்ணையும், சுவரும் மிக உறுதியாகக் கட்டப்பட்டு எப்பொழுதும் நடமாட்டம் உள்ள தெருவாக போயிற்று.

'என்ன கூட்டம் அங்கே?' அருண்மொழி தயங்கி நின்றான். குதிரை லேசாய் முன்னும் பின்னும் அலைந்தது. தடவி கொடுத்து சமாதானப்படுத்தினான். புரவி அசையாமல் நின்றது.

'என்ன அங்கே?' எழுந்து நின்று முகமன் சொன்னவரைக் கேட்டான்.

'வழக்கம் போலத்தான். மது போதையில் அலட்டல், உரக்கக் கூவுதல். இந்த தெருவில் இது அதிகமாகிவிட்டது' என்று அந்த பெரியவர் அலுப்போடு சொன்னார்.

'யார் அவன்? அப்படி அலட்டுவது' நெற்றியை சுருக்கிக் கொண்டு விசாரித்தான்.

அருண்மொழிபட்டனை கண்டுவிட்டு சில வீரர்கள் குதிரை யில் தாவி ஏறி சோற்றுக்கடை மத்தியிலிருந்து வீதியின் ஆரம்பத் திற்கு வந்தார்கள்.

'என்னப்பா என்ன ரகளை?'

'அய்யா, கண்டன்மாறன் என்கிற குதிரைப் படை வீரன் முழு போதையில் இருக்கிறான். கையில் காசு இல்லை. சோறு போடு என்று ஒரு பெண் நடத்துகின்ற சோற்றுக்கடை மீது மூங்கிலை ஈட்டிபோல் ஏறிகிறான். கதவை அடித்து உதைக் கிறான். யார் மடக்கினாலும் பதிலுக்கு முகவாயில் குத்துகிறான். மறவன்என்று விட்டு விடுவதா? அடக்குவதா? புரியவில்லை. ஆனால் ஒரு சிற்பி அவன் தலைமுடியை பிடித்து அடித்து பின் கை கட்டாக கட்டி இழுத்துக் கொண்டு வருகிறார்.

'என்ன பிரச்சனை அவனுக்கு?'

'பசிக்கிறது. சோறு போடு என்கிறான்.'

அருண்மொழி பட்டன் மௌனமாக நின்றான்.

'ஏன் காசு இல்லையா?'

'எல்லா காசுக்கும் குடித்துவிட்டான். ஆகவே உணவுக்கு காசு இல்லை.'

'சோறு போட்டார்களா இல்லையா?' அருண்மொழிபட்ட ருடைய கேள்வியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

மௌனமாக இருந்தார்கள்.

'உங்களைத்தான் கேட்கிறேன். அந்த வீரனுக்கு சோறு போட் டார்களா இல்லையா?'

'இல்லை. போடவில்லை. மாறாக அடித்து இழுத்து வரு கிறார்கள்.'

அருண்மொழி பட்டன் சட்டென்று குதிரையை திருப் பினான். எதிரே வந்த இந்த ஊர்வம்புக்கு போனான். மத்திம வயதுள்ள அந்த வீரனை அவர் குதிரை சுற்றி வந்தான். அவனை உற்றுப் பார்த்தான்.

பல போர்களில் இவனை பார்த்திருக்கிறேன். இவன் இளை ஞனாக இருந்தபொழுது கவனித்திருக்கிறேன். திறமையான போர்வீரன். கொஞ்சம் அயர்ந்து உறங்குவான். உரத்த குரலில் தான் பேசுவான். இது சில வீரர்களுடைய வழக்கம். அதனால் யாரும் கண்டிக்காமல் விட்டு விட்டார்கள். ஆனால் மது அருந்தி நடு வீதியில் சண்டையிடுவது நல்லதில்லையே. ஒரு மறவனுக்கு இழுக்கான விஷயமாயிற்றே.

எல்லோரும் விலகிக் கொள்ள அந்த வீரனுக்கு அருகே குதிரை வந்து நின்றது. அவன் அவரைப் பார்த்ததும் முகம் கோணி அழத் துவங்கினான். ஒரு வேளை அவனுக்கு பல போர்கள் ஞாபகம் வந்திருக்கும்.

'யார் கட்டியது?'

சிற்பி முன்னே வந்து தலை வணங்க.

'அவர் கட்டை தயவு செய்து அவிழ்த்துவிடுங்கள்' என்று பணிவாக அருண்மொழி கட்டளை இட்டார்.

உடனே செயல்படுத்தப்பட்டது. இது யாருடைய கடை என்று பார்க்க, அந்த இடத்தில் அப்பமும், இடரிகவும் இருந்தது. மறவனை அந்த திண்ணையில் உட்கார வைத்து அவனுக்கெதிரே இலை போட்டு உள்ளே இருக்கின்ற நல்ல உணவுகளை பரிமாறச் சொல்லுங்கள். முதலில் இவன் பசியாறட்டும். பசி குறைந்தால் தானே போதை குறையும். வெறுமே இவரை போதையில் ஆடவிட்டு ஏன் வேடிக்கை பார்க்கிறீர்கள்.

'ஏன், என்ன ஆயிற்று உமக்கு. சும்மா இருக்க இயலாதா? என்று கடிந்து கொண்டார்.

'விரைவாக திண்ணை சுத்தம் செய்யப்பட்டு, திண்ணையில் ஒரு பலகை போடப்பட்டு, பலகையின் மீது வாழை இலை போடப்பட்டு வாழை இலை மீது அப்பங்கள் வைக்கப்பட்டன. எல்லோரும் பார்க்க அந்த வீரன் அப்பத்துக்கு எதிரே கைகட்டி உட்கார்ந்து கொண்டான். கை கூப்பி, கண் மூடி இறைவனை வணங்கினான். கூட்டம் மெல்லியதாக சிரித்தது. 'சற்று நேரம் செய்த அலம்பல் என்ன. இப்பொழுது செய்கிற பூஜை என்ன? என்று ஒருவர் உரக்கச் சொன்னார்.

கூட்டம் மீண்டும் சிரித்தது. அருண்மொழி பதில் சொல்லாது அந்த வீரனையே பார்த்துக் கொண்டிருந்தான். வீரன் அப்பத்தை உண்டான். ஆவி பறக்க இடரிக பரிமாறப்பட்டது. மிளகு குழம்பு, பீர்கங்காய் துவையல் வைக்கப்பட்டது. எள் எண்ணெய் ஊற்றப்பட்டது. எல்லாம் கலந்து ஒரு வினோதமான வாசனை எல்லோருடைய மூக்கிலும் பரவின. பசி கிளறின.

காலையில் பனிரெண்டு வாழைப் பழங்களும் கொய்யா பழங்களும் சாப்பிட்டு இருந்தும் இந்த வாசனை பசியை மறுபடியும் கிளறியது. அருண்மொழி மெல்ல அதட்டிமனை அடக்கினான்.

''அவன் எவ்வளவு சாப்பிடுகிறானோ, அதற்கு உண்டான மாடையை இந்த சிற்பியிடம் இருந்து வாங்கிக் கொள்ளுங்கள். பசிக்கிறது என்று சொன்னவருக்கு உணவு இல்லை என்று சொல்வது அவ்வளவு உயர்ந்த விஷயம் அல்ல. அவர் ஒரு வீரர், மறவர். சோழ தேசத்துக்காக போரிட்டவர். இப்பொழுது சோறு போட்டு விட்டு நாளை அல்லது நாளை மறுநாள் இவர் வருகிற பொழுது, இத்தனை சோறு தின்றீர். இவ்வளவு ஆயிற்று. அதற்குண்டான காசு கொடு என்று கேட்டால் அது மரியாதையாக இருக்கும். அப்படி அல்லாது, போதையில் இருந்தார் என்ற ஒரே காரணத் திற்காக அவருக்கு சோறு மறுத்ததும், அவரை சீண்டியதும் தவறு என்று நினைக்கிறேன்'' என்று அருண்மொழி மெல்லிய குரலில் பேச, அவன் அட்டகாசம் செய்ததை தலைக்கு தலை விவரித்தார்கள்.

''நீர் இப்போது பேசும்போது கூட போதையில் பேசுவது போலத்தான் இருக்கிறது. விசாரிக்காமல் அடித்துவிட முடியுமா? உரத்த குரலில் பேசியவர்கள் எல்லோருமே போதையில் இருப்பார்கள் என்று சொல்லவா. அவர் போதையில் இருந்தது உண்மை தான். ஆனாலும் மறவரை இழிவுபடுத்தாதீர்கள். மறவருடைய தியாகத்தை மறந்துவிடாதீர்கள். அவருடைய உக்கரமான போர் இன்று உங்களுக்கு உணவாக இருக்கிறது. நீங்கள் உணவு உண்ண பல்வேறு வகைகளை உபயோகப்படுத்தி சம்பாதிக்கிறீர்கள். மறவருக்கு போர் தவிர ஒன்றும் தெரியாது. போர் நடக்கின்ற காலத்தில் அவரிடத்தில் காசு புரளும். மற்ற நேரங்களில் இல்லாது போகும்.

எனவே, கடுமையாக இருக்க வேண்டாம். மறவரே உம்முடைய பெயர் என்ன?

'கண்டன் மாறன்.' வலக்கை வீரன். சேனை, தெரிஞ்ச கைக்கோளப்படை உபதளபதி பரமன் மளபாடி என் தலைவர்.

'உம்மைப் பற்றி பரமன் மழபாடியிடம் சொன்னால் என்ன ஆகும்?'

உணவு உண்பது சட்டென்று நின்றது. விழிகள் பெரிதாயின. முகத்தில் பயம் பரவியது. ''பிரம்பெடுத்து விளாசி விடுவார்.

தெரிந்தும் இப்படி செய்கிறீர்களே?''

''தெரியாது செய்துவிட்டேன்'' கெஞ்சினான்.

''அடிப்பார் என்று தெரியாது செய்துவிட்டீரா?''

''இல்லை. போதையில் என்ன செய்கிறோம் என்று தெரியாது செய்துவிட்டேன்.''

'உண்டு விட்டும் ரகளை செய்வீரோ. எங்கு அலம்பல் செய்தீரோ, அங்கு போய் பலமுறை மன்னிப்புக் கேட்டு, காசு கொடுத்து உணவு உண்ண வேண்டும். சமரசம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.'

'நிச்சயம் செய்கிறேன்'

'கண்டன் மாறன் இன்னொரு முறை இப்படி நீங்கள் செய்வது தெரிந்தால் உங்களை படையில் இருந்து விலகிக் கோட்டைக் காவலில் உட்கார வைத்து விடுவேன்.

கண்டன் மாறன் சட்டென்று எழுந்து நின்று கைகூப்பினான். விழுந்து வணங்கினான்.

'தயவு செய்து அப்படி செய்து விடாதீர்கள். போரே என் வாழ்க்கை. போரில்லை என்பதாலேயே கோபம் வருகிறது. அந்த கோபம் இப்படி தாறுமாறுகிறது. கோட்டைக் காவல் வேண்டாம். செத்து விடுவேன். போர் முனைக்கு அனுப்புங்கள்.

இவன் வீரன். சுத்த மறவன். போர் போர் என்று மது குடித்து வைத்து புத்தி வெறியேற்றி ஆயிரக்கணக்கான கிராமங்கள் தூண்டி அழைத்து வெட்டிக் கொல்லச் சொல்லி, அடித்து உதைக்கச் சொல்லி உபயோகப்படுத்தி விட்டு இப்போது அமைதியாய் இரு என்றால் முடியுமா? பனங்கள் புத்தியை சிலுப்பி விட்டது.

கோட்டை காவலில் செத்து விடுவானாம். அப்போது வாழ்தல் என்பது போரா? போர் முனையிலா?

இவனைப் போன்றவர்களால்தான் சோழ சாம்ராஜயம் உருவாயிற்று. எத்தனை ஆயிரம் மறவர்கள், எத்தனை விதமான திறமை, திடம்.

மறவரே கண்டன் மாறன், வருகிறேன். விடைபெற்றார்.

அவன் கூப்பிய கை பிரிக்காது, அவரையே கண்ணீர் வழிய பார்த்துக் கொண்டிருந்தான். அருண்மொழிப்பட்டன் குதிரை இராஜராஜேஸ்வரம் நோக்கி திரும்பியது. கேரளாந்தகன் வாயில் தொட்டான். இறங்கினான்.

அருண்மொழிப் பட்டரே இந்த பாறைத் தூணையா தூக்கி நிறுத்தினீர். மாமன்னர் இராஜராஜர் இந்தத் தூணைத் தடவிக் கொடுத்தார். அற்புதம், அற்புதம், வியந்தார்.

அவர் தடவிய இடத்தில் அருண்மொழி கண்ணம் வைத்துக் கொண்டான். மெல்லியதாய் கண்களில் நீர் கோர்த்தது.

எப்பேட்பட்ட ஒரு மனிதர், என்ன அற்புதமான ஒரு மன்னன். ஈடு இணையில்லாத ஒரு சக்கரவர்த்தி. அய்யா அய்யா ஸ்வர்கத்தில் எப்படி இருக்கிறீர்கள். உள்ளே அமைதியாய் ஒரு விசும்பல் அருண்மொழிக்கு ஏற்பட்டது.

* * *

அத்தியாயம்

4

'தாகத்திற்கு இளநீர் சாப்பிடுகிறீர்களா?'

உயர்ந்த செவ்வக வடிவிலான அந்த பாறைத் தூணை விட்டு நகர்ந்து கேரளாந்தகன் வாயிலின் உள்ளே புகுந்த நேரம் கீழ்த்தள அறையின் இருட்டிலிருந்து ஒரு குரல் வந்தது. சட்டென்று அனிச்சையாக அருண்மொழி பட்டனின் இடது கை வாளின் உறைக்கு போக வலது கை சுருங்கி விரிந்தது. இன்னும் ஒரு அசைவு வந்தால் வாள் சட்டென்று உருவப்பட்டு இருட்டை நோக்கி காண்பிக்கப்படும். இது திட்டமிட்டு செய்யப்படுவது அல்ல. புத்தியில் படிந்து போன வேலை.

''பதட்டப்படுத்தி விட்டேனா, மன்னிக்க வேண்டும். நான் வெளியே வர விருப்பமில்லாமல் தான் உள்ளே உட்கார்ந்திருக்கிறேன். இங்கே ஐம்பதுக்கும் மேற்பட்ட இளநீர்கள் இருக்கின்றன. நான் செம்புலி. மெய்க்காப்பாளர் படையில் உபதளபதி. என்னை உங்களுக்கு நினைவு இருக்குமா என்று தெரியவில்லை. நாம் சந்தித்து நாளாயிற்று.''

''செம்புலி, ஞாபகம் இருக்கிறதே இந்தப் பெயர். ஏன் இருட்டில் இருக்கிறீர்கள். வெளியே வாரும்.'' அருண்மொழித் தேவர் இருட்டைத் துழாவியபடி கேள்வி கேட்டார்.

''இப்போதைக்கு வரவேண்டாம் என்று நினைக்கிறேன். காய்கள் சீவி அனுப்புகிறேன். அப்படி உட்கார்ந்து தாகசாந்தி செய்து கொள்ளுங்கள்.''

''வெளியே வந்தால் என்ன?''

''இங்கு பலருக்கு அடையாளம் தெரியும். நான் வந்தால் வேறு யார் முக்கியஸ்தர்கள் வருவார்கள் என்று கேள்வி கேட்பார்கள். மண்டைக்குள் ஆராய்வார்கள். எனவே, அப்படி எவருக்கும் சந்தேகம் எழாவண்ணம் உட்கார்ந்திருக்கிறேன்.''

''யார் இங்கு முக்கியமாக வரப் போகிறார்கள்? எதற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்?'' இப்பொழுது செம்புலியின் உருவம் நன்றாகத் தெரிந்தது.

வல்லவரையர் வந்தியத்தேவர் என்று சொல்லப்பட்டது.

அறுபது அகவைக்கு மேலும் செம்புலியின் வயது இருக்கக் கூடும். மெய்க்காவல் படையின் வெகு நாளாக செம்புலி கலந் திருப்பதை பார்த்திருக்கிறார். பத்து வருடங்களுக்கு முன்பு இராஜேந்திர சோழரின் உணவை சோதிக்கும் ஆளாக வந்து அதற்குப் பிறகு எந்நேரமும் உடனிருக்கும் ஆளாக மாறி பிறகு இராஜேந்திர சோழனுடைய நகர்வுக்கு முன் நகர்வாய் போகின்ற ஆளாக வந்திருக்கின்றார்.

''வேற யார் இங்கு வரப்போவது? இராஜேந்திர சோழரோ?''

நீங்கள் வருவீர்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு அதிகாரிகள் இருக்கிறபொழுது அந்த இடத்தில் சூழ்நிலையை தக்கவாறு ஆராய்ந்து செய்தி சொல்ல வேண்டும் என்றும் எனக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. நான் வந்திய தேவருக்கு செய்தி சொல்லிவிட்டேன். இந்த இடம் சுத்தமாக இருக்கிறது. எந்த பிரச்சனையும் இல்லை என்று சமிக்ஞை அனுப்பிவிட்டேன்.''

'என்ன சமிக்ஞை அது?'

'பிரகதீஸ்வரர் உறங்கி கொண்டிருக்கிறார். இதுதான் நான் அனுப்பிய செய்தி.'

'என்னய்யா இது அக்கிரமமாக இருக்கிறது. இவ்வளவு பெரிய அற்புதமான ஒரு கோவிலை எழுப்பி இது கடவுளுடைய இடம் என்று இராஜராஜர் அறிவித்திருக்க, இந்த இடத்தில் உள்ள கடவுள் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்ற சமிக்ஞை அனுப்ப எவ்வளவு தைரியம் வேண்டும்.'

'கடவுளுடைய உறக்கம் நம்முடைய உறக்கம்போல் அல்ல. இந்த இடத்தில் இந்த நேரத்தில் ஆக்கலோ, அழித்தலோ எதுவு மில்லாத அமைதியாக அவர் இருக்கின்றதால் ஊர் சுகமாக இருக்கின்றது. அவர் இருக்கின்ற தைரியத்தில் எல்லாம் நலமாக நடந்து கொண்டிருக்கிறது என்ற அர்த்தம்தான் அது. காவல் காக்க அவர் இருக்கிறார் என்ற அர்த்தமும் அதில் அடங்கி யிருக்கிறது. நம்முடைய உறக்கம் மெய்மறந்த உறக்கம், கடவு ளுடைய உறக்கம் செயலற்ற அமைதி.'

'அடி சக்கை. தஞ்சாவூரில் யார்தான் தத்துவம் பேசுவது என்றில்லை. இராஜராஜர் ஆரம்பித்து வைத்த பழக்கம். எல்லாவற் றிலும் ஏதேனும் பொருள் தேடுவது என்பது அவருடைய இயல்பு.

அதை பல பேர் கைக்கொண்டு எல்லோரும் இராஜராஜராகவே நடிக்கவும், பேசவும் ஆரம்பித்துவிட்டீர்கள். நீர் வலப்பக்கம் மிகப் பெரிய கொண்டையாய் குடுமி முடித்ததும் இராஜராஜருடைய சாயல்தானோ, அவரைப் பார்த்து போட்டுக் கொண்டது தானோ.'

'என்ன தவறு இருக்கிறது போட்டுக் கொள்கிறேன். வழுக்கைத் தலையென்றால் இராஜராஜரை வேறு ஏதாவது ஒரு விதத்தில் நான் வெளிப்படுத்தியிருப்பேன்.'

'உமக்கு வழுக்குத்தலை. எப்படி இருப்பீர்?'

'குறுந்தாடி, அடர்த்தியான மீசை, நெற்றியில் பட்டைத் திருநீறு, நடுவில் சந்தனம். அதற்கு நடுவே குங்குமம். காதுகளில் ருத்ராட்ச மணிகள், கழுத்தில் பெரிய ருத்ராட்சம், வலது கையில் என்னுடைய கேயுரம். இடது கையில் ருத்ராட்ச வளையம்.'

'சரி. வந்தியத் தேவருடைய வருகை அதிரடிச் சோதனை என்று யார் உமக்குச் சொன்னார்கள்.'

'வந்தியத் தேவரே சொன்னார்.'

'வந்தியத் தேவரும் நானும் வருவதற்கு மெய்க்காவல் படை ஊடுருவி வருவானேன்.'

'ஒருவேளை வரலாம்.'

'யார் வரலாம்.'

'யார் வர வேண்டுமோ அவர் வரலாம்.'

'அடடா, மெய்க்காவல் படை உபதளபதி என்றால் நேரடியாக பேச மாட்டீர்களோ? நான் சோழப்படையின் சேனாதிபதி என்பது மறந்து போயிற்றோ?'

'எப்படி மறக்கும், உங்கள் வீரமும் புகழும், அறிவும், ஆற்றலும், மாமன்னர் இராஜராஜரால் கொண்டாடப்பட்டது. இப்போது சக்கரவர்த்தி இராஜேந்திர சோழர் அவர்களாலும் போற்றப்படுகிறது. உங்களை நெல்முனை அளவு கூட குறைத்து நான் மதிப்பிடவில்லை. நிதானமாக பேசுவதற்கு நாங்கள் பழக்கப் படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே, எப்படிப் பேசினாலும் அப்படித்தான் வரும். அதுவும் தவிர.'

'அதுவும் தவிர.'

'நான் சோழ தேசத்தின் சேனாதிபதி அருண்மொழிப் பட்டருக்கு கட்டுப்பட்டவன் அல்ல. இராஜேந்திர சோழருக்கு மட்டுமே கட்டுப்பட்டவன். எனவே உம்மை உபசரிப்பதிலும், என்னை வெளிக்காட்டிக் கொள்வதிலும், உங்களோடு மெல்லிய வாக்குவாதத்தோடு பேசுவதும் என்னுடைய கடமைகளில் ஒன்று.'

'நீர் வெளிவட்ட மெய்க்காப்பாளர் தானே?'

'ஆமாம்.'

'அப்படியானால் இராஜேந்திர சோழர் வருகிறார் என்று அர்த்தமா.'

'தெரியாது.'

'வந்தியத் தேவருக்கு சமிக்ஞை அனுப்பவா இராஜேந்திர சோழரின் ஆளை உபயோகப்படுத்திக் கொண்டார்கள்.' 'வந்தியத் தேவருக்கு இராஜேந்திர சோழரின் உத்தரவை மாற்றியமைக்கவும் உரிமை உண்டு. எனவே, அவர் சொல்படி இந்த இடம் வந்து பிரகதீஸ்வரர் உறங்கிக் கொண்டிருக்கிறார் என்ற சமிக்ஞையும் அனுப்பிவிட்டேன்.'

'சகிக்க முடியவில்லை அய்யா. உங்கள் வயது குறித்து ஒரு மரியாதை தரும் வண்ண்ம் அமைதியாக இருக்கிறேன்.'

'இருங்கள். இப்பொழுது தாகசாந்தி செய்தி கொள்ளுங்கள். நல்ல இனிப்பாக இருக்கிறது. சேர தேசத்து தென்னங்கன்று. நட்ட நான்கு வருடத்தில் பெரும் பலன் கொடுத்திருக்கிறது.'

'எங்கே நட்ட தென்னங் கன்று?'

'இவை அனைத்தும் திருக்கோவில் குளம் சுற்றி நடப் பட்டு இருக்கிறது. நீர் ஊறும் இடம். நல்ல கன்று. அமோக விளைச்சல்.'

'சரியான இடத்தில் சரியானபடி நட்டிருக்கிறார்கள். இல்லையெனில் இந்த இடத்தில் இவ்வளவு இனிப்பான இளநீர் எவ்வளவு அற்புதம்.'

'இன்னும் இரண்டு வெட்டவா?' எதிரே பதிலுக்கு காத்திராமல் கத்தியும், இளநீரும் மோதுவது தெரிந்தது. இப்பொழுது இருட்டில் அந்த மனிதர் செம்புலி தெளிவாகத் தெரிந்தார். கிட்டதட்ட இராஜராஜரின் நடை, உடை, பாவனைகளை தன்னுள்

ஏற்றுக் கொண்டு அவரைப் பற்றிய நினைவோடு வாழ்பவர் போலவே தெரிந்தார்.

தஞ்சையிலுள்ள வயதான மறவர்கள் இன்னும் பல பேர் இராஜராஜரின் மயக்கத்திலிருந்து விடுபடவில்லை. எது பேசி னாலும், எப்பொழுது பேசினாலும் அவர்கள் பேச்சு இராஜராஜ ரிடம்தான் வந்து முடியும்.

'நீங்கள் தொட்ட பாறையை சுருக்குக் கட்டி மேலே இழுத் ததில் எனக்கும் பங்கு உண்டு. உமது பக்கம் பாறையை மூன்று பேர் தூக்க அடியில் கைவிட்டு கயிறை மறுபக்கம் இழுத்தவன். அவர்கள் விட்டிருந்தால் என் இரண்டு கைகளும் துண்டாயிருக் கும். என் கதி அதோ கதி ஆயிருக்கும். ஆனால் சோழ வீரர்கள் ஒருபொழுதும் கைவிட மாட்டார்கள். சோழ வீரர்களுடைய உறுதி யும், துணிச்சலும்தான் இன்றைய நல்வாழ்வுக்கு அடிவாரம்.'

இளநீர் கிறுகிறுப்பான தித்திப்போடு இருந்தது. வழுக்கை நல்ல மணத்தோடும், சுகமாக சுவையோடும் இருந்தது. மூன்று இளநீர் வயிறை நிறைத்தது. இது இந்த நேரம் நிச்சயம் தேவை. ஆனால் வருகிறவர்களுக்கு இளநீர் வெட்டவா இவரை அனுப்பி இருப்பார்கள். வந்தியத்தேவர் இந்த இடம் சுத்தமாக இருக்கிற தென்று தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? சோழ தேசத்தில் எந்த இடம் அசுத்தமாக இருந்திருக்கிறது. எந்த பகுதி பயப்பட வேண்டிய இடமாக இருந்திருக்கிறது.

ஆனால் வந்தியத்தேவர் வருகைக்காகவும், என்னுடைய வருகைக்காகவும் செம்புலி வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வெகுநிச்சயம் இராஜேந்திர சோழர் இங்கு வரப்போகி றார். என்ன காரணமாக இருக்கும். அருண்மொழிபட்டரின் மனம் வேகமாக ஆராயத் துவங்கியது.

முன்னும் பின்னும் நாற்பது வீரர்கள். அதற்குப் பின்னால் நூறு பேர் ஈட்டியும், கேடயமுமாய் ஓடி வருகின்ற சிறிய படை. பிறகு சிறிது நேரம் கழித்து தேர் படை. அவசியமெனில் யானை களும் வரும். இதுதானே இராஜேந்திர சோழரின் உலா. இப்படி செம்புலியை அனுப்பி வேவு பார்க்க வேண்டுமென்றால் அப்படி வரப்போவதில்லை என்றுதானே அர்த்தம். அப்படி வராமல் இரகசியமாக மாறுவேடமிட்டு வரப்போகிறாரா. அப்படி வர வேண்டிய அவசியம் என்ன? அந்த அறையின் விளிம்பில்

உட்கார்ந்து கொண்டிருந்த அருண்மொழி மெல்ல எழுந்து கேரளாந்தகன் வாயிலைத் தாண்டி பெரும் வெளி ஒன்றை கடந்து இராஜராஜரின் வாயிலை அடைந்தார். அங்கும் இதுபோல பாறைகள், பாறைத் தூண்கள் இருந்தன. குறுக்குக் கட்டைகளும் நல்ல அகலத்திலும் நீளத்திலும் இருந்தன.

ஒவ்வொன்றாய் உற்று கவனித்தபடி இவை கட்டப்படும் போதெல்லாம் நான் கவனித்திருக்கிறேனே என்ற பூரிப்போடு நகர்ந்து சென்று கொண்டிருந்தார்.

கேரளாந்தகன் வாயிலும் இராஜராஜரின் வாயிலும் தாண்டி அவர் பெரும் திடலுக்குள் காலடி வைத்ததும் எதிரே பஹூம் என்ற ஒலியற்ற வரிவடிவத்தோடு விமானம் குபீரென்று தெரிந்தது.* மனம் கை கூப்பியது. வெட்டவெளிக்கு நடுவே தனியாக ஒரு விமானம். உள்ளே இறைவன் என்று ஒரு அழகு வேகமாய் நெஞ்சில் ஒட்டிக்கொண்டது. உள்ளுக்குள் இருப்பது மட்டும் இறைவனல்ல, அருண்மொழி. இந்த விமானமே சிவலிங்க ரூபம்தான். இந்த சிவலிங்கத்திற்குள் இன்னொரு சிவலிங்கம் உளளே இருக்கிறது. இந்த சிவலிங்கம் விமான சிவலிங்கத்திற்கு மேலே ஆகாயம் இன்னொரு சிவலிங்கமாக இருக்கிறது. ஆக ஆகாயம் என்ற சிவலிங்கம் விமானம் என்ற சிவலிங்கம் அதற்குள்ளே நடுவே உயரமாக நாம் அமைத்த சிவலிங்கம்.

இதுதான் இறைவன் என்று பிரம்மித்துப் போய் நின்றால் இல்லை இதனினும் பெரியவன் என்று வேறொரு வடிவம் தோன்றும். அடடே இதுதான் இறைவன் என்று பிரம்மித்துப் போய் நின்றால் இல்லை இது பிரபஞ்சம் முழுவதுக்கும் சொந்தமான ஒரு விஷயம் என்று தோன்றும்.

உள்ளுக்குள்ளே தோன்றுகின்ற ஆத்ம தரிசனம் மட்டுமே கடவுள் தேடலாக முடிந்துவிட முடியாது. அந்த ஆத்ம தரிசனம் தாண்டி எதிலிருந்து இது உண்டானது என்ற கேள்வி ஒன்று வரும். அப்பொழுது வேறு ஒரு வரி வடிவம் தோன்றும். அந்த வரி வடிவம் அங்கிருந்து ஏற்பட்டிருக்கும் என்றபோது பிரபஞ்சத்தினுடைய மிகப் பெரிய பரப்பு நமக்குள் வந்து அமர்ந்து கொள்ளும். பிரபஞ்சத்திற்கு மேலே என்ன இருக்கிறது தெரியாது. தெரிந்தாலும் சொல்ல முடியாது. சொல்ல முடிந்தாலும் புரிந்து

* இப்போதிருக்கிற பெரிய நந்தி அப்போதில்லை. அது பிற்காலத்தியது.

கொள்ள முடியாது. அது சொல்லுக்கு அப்பாற்பட்டது. பிரபஞ்சத்தின் பிரம்மாண்டம் வரை ஓரளவு அமைதியாக இருந்தால் புரிந்து கொள்ளலாம்.

இராஜராஜர் தோளில் கை வைத்து விமானம் பார்த்தபடி சொன்ன காலம் ஒன்று உண்டு.

''வந்திய தேவர் வந்துவிட்டார்'' செம்புலி அடிக்குரலில் பேசினார். ''அவருடைய மெய்க்காவல் இரண்டு பேர் நகர்ந்து உள்ளே போனார்கள். அவர்களும் பிரகதீஸ்வரர் உறங்குகிறார் என்று செய்தி அனுப்புவார்களோ.''

'இருக்காது. வேறு ஏதேனும் செய்தியாக இருக்கும்.'

'என்ன செய்தி.'

'கருடப்பட்சி வந்துவிட்டது.'

'என்னது கருடப்பட்சி, யாரைச் சொல்கிறீகள்.'

'உங்களைத்தான்.'

'நான் கருடப்பட்சியா?'

'ஆமாம்.'

'என்னய்யா இது?'

'நீர் வைஷ்ணவர். அந்தண சொரூபம். ஆனால் மாமிசப் பக்ஷினி. போர் தொழில் உம்முடைய வேலை. கருடன் பார்ப்பதற்கு அந்தணன் போல கழுத்து வெள்ளையாக இருந்தாலும் சீறிப் பாய்ந்து சாகஸங்கள் செய்வதில்லையா? அதேபோல நீரும் செய்கிறவர். எனவே, உமக்கு கருடப்பட்சி என்றுதான் பெயர்.'

'என்னை அவர்கள் பார்க்கவில்லையே?'

'பார்த்தும் பார்க்காதது போல் நடிப்பதுதான் அடிப்படை பாடம்.'

'இராஜேந்தர் வருவாரா?'

'எனக்குத் தெரியாது. அருண்மொழி மௌனமானான். என்ன காரணம் என்று செம்புலியை கேட்கலாமா?' 'வேண்டாம். பிசகாகப் போகும். செம்புலிக்கு அவ்வளவு மரியாதை கொடுத்து விட வேண்டாம்.'

அருண்மொழிப்பட்டன் எழுந்து நின்றான். தொலைவில் குதிரைகள் வரும் புழுதி உயர்ந்தது. முன்னும் பின்னுமாக முப்பது

படைவீரர்களோடு வந்தியத் தேவர் நடுநாயகமாக வந்திறங் கினார்.

என்ன வயதானால் என்ன? இந்த மனிதருக்கு மட்டும் எப்படி ஒரு பேரழகு. முகத்திலும், உடம்பிலும் ஒட்டிக் கொண் டிருக்கிறது. அரசிளம் குமரிகளை மயக்க வைக்கின்ற சொக்க வைக்கும் அழகு. இவர் எங்கிருந்து பெற்றார். காதோரம் தாடை மயிர் சிரிக்குமா? வெண்ணிற தாடியும் சிரிக்குமா? நீண்ட பின் சிகை சிரிக்குமா? சோழ வீரர்களை விட ஒரு பிடி உயரம். உடம்பு கட்டுப்பாடாலும், பயிற்சியாலும் இறுகிய உடம்பு. கழுத் தில் முத்து வடம், நீண்ட தங்கச் சங்கிலி. சங்கிலியில் கோர்த்த பதக்கம். பதக்கத்தில் இராஜராஜரின் உருவம். சோழ தேசத்தின் நிதி நன்மைக்கு முக்கிய மந்திரி என்பதற்காக இரண்டு பக்கமும் புலிச்சின்னம் பதிக்கப்பட்ட கோபுரங்கள். வாள் வீரர்கள் இறுக் கமாக அணிந்து கொள்கின்ற மணிக்கட்டு பட்டை. இடுப்பின் மேலும் சீனப்பட்டு. ஆனால் மூன்றாம் துண்டு பருத்தி துணியில் முறுக்கிக் கட்டப்பட்டு இடுப்பில் இறுகி இருந்தது. தலைப்பாகை பற்றியோ, கீரிடம் பற்றியோ எப்போதுமே வந்திய தேவர் கவலைப் பட்டதில்லை.

நிதி அமைச்சராக இருப்பதால் தலையில் அவருக்கென்று அணிந்து கொள்கின்ற ஒரு பாகை உண்டு. ஆனால் அதை அவர் அணிந்து பார்த்ததே இல்லை. கேரளத்தின் சந்தன நறு மணம் அவர் காதோரத்தில் இருந்தும், கழுத்துப் பிடரியில் இருந்தும் வீசிற்று. மன்னன் உடுப்பதில் படுசுத்தம். சுகவாசி என்று உடம்பின் எல்லா அங்கங்களிலும் தெரியும். பாதரட் சையை வாசலிலேயே கழற்றி போட்டிருப்பார் போல விரல் நகங்கள் சுத்தமாக இருந்தன.

'சோழ தேசத்தின் மிகப் பெரிய தூணை, நிதியமைச்சரை, சேனாதிபதி அருண்மொழிவர்மன் நமஸ்கரிக்கிறேன். நான் கௌஸிக கோத்ரம். யஜுர் வேதம். ஸ்ரீகிருஷ்ணன் என்பது எனக்கு வைத்த பெயர். ஆனால் அருண்மொழிவர்மன் என்று அழைக் கிறார்கள். நான் இன்னமும் மாணாக்கன்' என்று நமஸ் கரித்தான்.

'எதற்கு இப்படி ஒரு வணக்கம். நீர் அந்தணன். நான் மறவன். இது செய்வது வழக்கமில்லையே' அவர் மெல்லச் சிரித்தார்.

அந்த சிரிப்பிலும் வசீகரம் கொடிகட்டி பறந்தது.

'குலப்பிறப்பு மரியாதையை கொடுத்துவிடாது. ஆனால் சில முகங்களை பார்க்கும்பொழுது இவர் அந்தணரை விட உயர்வு என்று தோன்றும். அதனாலேயே மரியாதை இயல்பாக வரும். தன்னைப் பற்றி விண்ணப்பித்துக் கொள்ள ஆசை வரும். உங்களைப் பார்த்த பிறகு அப்படித்தான் தோன்றுகிறது. நான்கு தினங்களுக்கு முன்பு பார்த்தேன். ஆயினும் நமஸ்கரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.'

'அருண்மொழிப்பட்டா, உன்னுடைய பதவியில் வேறு எவர் இருந்தாலும் பேயாட்டம் ஆடி இருப்பார்கள். உன் தகப்ப னான கிருஷ்ணன் ராமனிடம் இருந்த செல்வாக்கை எந்த மகன் அனுபவித்திருந்தாலும் எந்த விதத்திலாவது ஆடியிருப்பார். இராஜராஜருக்கும் நெருக்கம், இராஜேந்திர சோழருக்கும் நெருக்கம். சோழ தேசத்தின் எல்லா படைகளுக்கும் மூத்த தளபதிகளில் ஒருவர் என்ற தகுதிகள் இருப்பினும் அதுபற்றிய அக்கறை கொஞ்சமும் கொள்ளாது எல்லா இடத்திலும் புகுந்து புறப்படுகிறாய் பார். இதுதான் உன்னை உயிர்ப்போடு வைத்தி ருக்கிறது. இதுதான் உனக்கு முன்னேற வாய்ப்புகள் அள்ளித் தருகிறது.

உன்னைப் பற்றி இன்று காலை ஒருவர் சொன்னார். ஒரே ஒரு வார்த்தையில் உன்னைப் பற்றி விளக்கினார்.

'என்ன என்று தெரிந்து கொள்ளலாமா?' அருண்மொழி சிரிப்போடு கேட்டான்.

'ஞானஸ்தன்' என்று சொன்னார். தத்துவ ஞானத்தில் சிறந்தவர் என்று இதற்கு அர்த்தமில்லை. கெட்டிக்காரர் என்று அர்த்தம். கெட்டிக்காரத்தனத்தை அவ்விதமாகவே சொல்லாமல் ஞானஸ்தன் என்று சொல்கிறார்களா ஏன்? யாருக்கும் தீங்கு செய்யாத கெட்டிக்காரத்தனம்தான் ஞானம். அகந்தை இல்லாத கெட்டிக்காரத்தனம்தான் ஞானம். உன்னை கெட்டிக்காரன் என்று சொல்லவில்லை. 'ஞானஸ்தன் என்று சொன்னார்.'

'சொன்னது மாமன்னர் இராஜேந்திரரா?'

இதுதான் ஞானஸ்தன் அடையாளம். காய்ந்த மூங்கிலில் நெருப்பு பிடித்துக் கொண்டது போல உடனே குப்பென்று விஷ யத்தை புரிந்து கொள்கிறாய். எதற்காகச் சொன்னார் தெரியுமா?'

வேல் வீரர்

'சொல்லுங்கள் அதையும் காது குளிரக் கேட்கிறேன்.'

'நாகை போகிறாயாமே''

'ஆமாம்'

'விகாரையில் தங்குகிறாயாமே?'

'ஆமாம்'

'அங்கு வருகின்ற கடல் பயணிகளை ஆவலோடு கவனிக் கிறாயாமே?'

'உண்டு'

'மரக்கலன்கள் ஏறி சோதிக்கிறாயாமே?'

'அது என் வேலையில் ஒரு பகுதி'

'மரக்கலன்களை படம் வரையச் சொல்லி தனித் தனிச் சுருளா வைத்திருக்கிறாயாம். எப்பொழுது வேண்டுமானாலும் இராஜேந்திரர் வந்து பார்க்கலாம் என்று அழைப்பு அனுப்பி னாயாமே?'

'உண்மை. ஆனால் இதில் ஞானஸ்தன் என்று சொல்வதில் என்ன இருக்கிறது. என்னுடைய வேலைகள்தானே?'

சோழ தேசத்தின் அடுத்த இடம் கடற்பயணம் என்று அருண்மொழி புரிந்து வைத்திருக்கிறான் என்று பாராட்டினார்.

'அவருக்கு என் நன்றியைச் சொல்லுங்கள். ஆனால் அடுத்த படி என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பது மாமன்னர் இராஜேந்திரரே தவிர நான் அல்ல. அப்படி அவர் ஏதேனும் ஒரு விஷயம் பற்றி கேள்வி கேட்டால் பதில் சொல்ல வேண்டும் அல்லவா. அதற்காகத்தான் எப்பொழுதும் என்னை தயார்ப் படுத்திக் கொள்கிறேன். தெரியாது என்று சொல்வது சேனாதி பதிக்கு அழகல்ல என்பதால் தகவல்கள் சேகரித்த வண்ணம் இருக்கிறேன்.

'ஸ்ரீவிஜயத்திலிருந்து வந்த கப்பலை மடக்கி கடுமையாக சோதனையிட்டாயாம். அந்த நாவாயிலுள்ள ஊழியர்கள் ஆறு பேரை இரண்டு மாலுமிகள் உட்பட கைது செய்து வைத்திருக் கிறாயாம்.'

'ஆமாம். குடந்தை சிறையில் இருக்கிறார்கள்.'

'பிட்சுக்கள் விடுவிக்கும்படி மன்றாடியும் மறுத்துவிட்டா யாம்.'

'ஆமாம். அந்த மாலுமிகள் நடவடிக்கை அகம்பாவமாக இருந்தது. அந்த புத்த பிட்சுக்கள் எதனாலேயோ அந்த மாலுமி களுக்கு பயப்படுகிறார்கள்? அதில் ஒருவன் மிக அகங்காரத்தோடு நடந்து கொண்டான். புத்த பிட்சு எதிரிலேயே மீது கால் போட்டுக் கொண்டு அமர்ந்து கொண்டான். இழுத்து தரையில் போட்டு மிதித்தேன். மிக வேகமாக மோதினான். இரும்பு போன்ற கைகள் அவனுக்கு. அந்த கைகளையே இறுக்க பற்றி திசை திருப்பி பிடரியில் ஓங்கி அடித்தேன். எழுந்திருக்க ஒரு நாளாயிற்று.'

'வேறு ஏதேனும் முக்கிய தகவல்கள் கிடைத்தனவா?'

'எங்கே?'

'அந்த மரக்கலத்திலிருந்து. அந்த மாலுமிகளிடமிருந்து.'

'மாமன்னர் இராஜேந்திரர் வருகிறாரா?'

'அருண்மொழி, நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொல். வேறு ஏதேனும் முக்கிய தகவல்கள் அந்த மரக்கலத்திலிருந்து கிடைத்ததா?'

'மாமன்னர் இராஜேந்திரர் வருகிறாரா?'

'ஏன்? என் கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டாயா?'

'நீங்கள் கேட்ட கேள்விக்கு உண்டான பதிலை மாமன்னர் இராஜேந்திரர் கேட்டால் அவரிடம் சொல்வதுதான் உசிதமே தவிர அவருக்கு முன்பு உங்களிடம் சொல்வது முறை அல்ல. சேனாதிபதியான எனக்கு வழி தவறி நிற்றல் என்ற கெட்ட பெயரை கொண்டு வந்து கொடுக்கும்.'

'அகம்பாவமாய்ப் பேசுகிறாய் அருண்மொழி'

'சற்று நேரம் முன்பு ஞானஸ்தன் என்று சொன்னீர்கள்.'

'ஞானஸ்தன் என்று நான் சொல்லவில்லை. மாமன்னர் இராஜேந்திரர் சொன்னார். அது பிசகு என்று இப்பொழுது தோன்று கிறது.'

'மாமன்னர் பிசகு என்பதையும், நீங்கள்தான் சரி என்பதை யும் அவர் வந்ததும் தெரிவித்து விடுகிறேன்.'

'என்ன பூச்சி காட்டுகிறாயா? அருண்மொழி, நீ அவருக்கு கீழே கை கட்டி வேலை செய்கிறவன். நான் அப்படி அல்ல. மாமன்னர் இராஜேந்திரருடைய தமக்கை குந்தவையை, இந்த சோழ தேசத்து அரசியலில் முக்கியமான பெண்மணியை திருமணம் செய்து கொண்டிருக்கின்றேன். நான் அவர் வீட்டு மாப்பிள்ளை. அவர் சிங்காசனத்தில் அமர்ந்து நான் உட்காரு கிறேனா என்று பார்த்து, என்னை உட்காரச் சொல்லி சமிக்ஞை செய்த பிறகுதான் நிமிர்ந்து உட்காருவார்.'

'கவனித்திருக்கிறேன். அந்த மரியாதை எல்லாம் உங்க ளுக்கு நன்றாகத்தான் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது.'

'ஆனால் உன்னிடத்தில் இருந்து வரவில்லையே.'

'ஒரு நூல் இழைகூட என் மரியாதை குறையவில்லை. ஆனால் நீங்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் எனக்கில்லை. சேனாதிபதி மன்னருக்கு அடங்கியவரே தவிர நிதி அமைச்சருக்கு கைகட்டி பேசுகிறவர் அல்ல.'

'சோழ தேசத்தின் மீது எனக்கு அக்கறை உண்டு.'

'யாருக்குத்தான் இல்லை. இங்குள்ள செம்புலி என்கிற மெய்க்காவல் படை கூட் தனக்கு சோழ தேசழத்தின் மீது மிகுந்த அக்கறை உள்ளதாய்ப் பேசினான்.'

'செம்புலி எங்கே?'

'யாருக்குத் தெரியும்'

'செம்புலியை பார்த்தீர்களா?'

'எனக்குத் தெரியாது'

'செம்புலி என்ன தகவல் சொன்னான்'

'எனக்குத் தெரியாது'

'இப்பொழுது உன்னுடைய முறையா? நீ பதில் சொல்ல மாட்டாயா?'

'சிறு துரும்பும் பல் குத்த உதவும், என்று ஒரு நிதி அமைச் சருக்குத் தெரிய வேண்டும். எப்படி தகவல் வேண்டும் ஏன்று ஆசைப்படுகிறீர்களோ, அப்படியே தகவல் கொடுக்கவும் தெரிய வேண்டும். தகவல் கொடுத்தால்தான் தகவல் கிடைக்கும் என்பது

சாதாரணமான ஒரு கணக்கு. இது உங்களுக்கு ஏன் புரியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

'மாமன்னர் இராஜேந்திரருடைய வருகையைப் பற்றி நீ ஏன் கேட்கிறாய்?'

'முறையீடு செய்ய வேண்டியிருக்கிறது'

'செம்புலி எங்கே?'

'உங்கள் வயது முன்னிட்டு, உங்கள் அறிவுத்திறன் முன்னிட்டு, உங்களுடைய அனுபவம் முன்னிட்டு நீங்கள் போர் செய்கின்ற தீரத்தை முன்னிட்டு உங்கள் கேள்விக்கு நான் பணிவாகப் பதில் சொல்கிறேன். செம்புலி இந்த இடத்திலிருந்து கிளம்பி அரைக்கால்நாழிகை ஆகிவிட்டது. கேரளாந்தகன் வாயில் தாண்டி வடக்கு நோக்கி சற்று தூரம் நகர்ந்து அங்கு நின்றபடி வடக்கு திசையில் மன்னர் வருகிறாரா என்று பார்ப்பதற்கு போய் இருக்கிறார். மன்னர் வருகிறார் என்று தெரிந்ததால்தான் அப்படி பரபரத்து போயிருக்கிறார் என்பது என் அபிப்ராயம்.

எனவே, மாமன்னர் இராஜேந்திர சோழர் இங்கு வருகிறார் என்பது திண்ணம்.'

வெளியூரிலிருந்து வரும் மாட்டு வண்டிகள் கோவிலுக்குள் நுழைந்தன. ஆண்களும், பெண்களுமாய் உள்ளே கிராமத்து மக்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். கேரளாந்தகன் வாயில் தாண்டியதும் கூச்சலிட்டார்கள். இராஜராஜன் வாயில் தாண்டியதும் இன்னும் வியந்தார்கள். கீழே இறங்கி நிலம்பட விழுந்து வணங்கினார்கள். சிவோஹம், சிவோஹம், சிவோஹம் என்று கத்தினார்கள். மாமன்னர் இராஜராஜர் வாழ்க என்று பிளறினார்கள்.

இரண்டு பெண்களுடன் கூடிய ஒரு மாட்டு வண்டி வலப் பக்கம் திரும்பி நின்றது. இடப்பக்கம் மற்ற வண்டிகளெல்லாம் நிற்க, வலப்பக்கம் அந்த வண்டி திரும்பியதை ஒரு கோவில் காவற்காரன் மறு பக்கம் திரும்ப அருகே போய் நின்று விசாரித்தான். அவன் முகம் மாறியது. பின்னடைந்தான். வணங்கினான்.

அருண்மொழிக்கு புரிந்துவிட்டது. மாமன்னர் இராஜேந்திரர் மாட்டு வண்டியில் வெறுமே முண்டாசு கட்டிக் கொண்டு தன்னுடைய துணைவி வீரமாதேவியருடன், தன்னுடைய துணைவி பரவையாருடன் வந்திருக்கிறார் என்பது தெரிந்தது.

நேரிடையாகப் போய் வரவேற்பதா அல்லது விலகி நின்று மன்னர் என்ன செய்கிறார் என்று பார்ப்பதா?

மன்னர் வந்ததை அருண்மொழி கவனித்தான். ஆனால் வந்தியத்தேவர் கவனிக்கவில்லை. `அவர் செம்புலியின் வரவை நோக்கிக் காத்திருந்தார்,

* * *

அத்தியாயம்

5

ஆனால் இது வழக்கம்தான். இராஜேந்திர சோழர் தனக்கு வரும் தகவல்களை மட்டுமே நம்பாமல் சட்டென்று மக்களோடு மக்களாக கலந்து தன்னுடைய நிர்வாகம் பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று நேரடியாய் தெரிந்து கொள்ளுவதற்கு மெல்லியதாய் உருமாறி உள்ளே புகுந்து விடுவது அவருடைய தன்மைகளில் ஒன்றுதான்.

மக்களை சோதிக்க மட்டும் இல்லாமல் தன்னுடைய மெய்க் காவல் படையை, தன்னுடைய சேனையின் குதிரைப் படையை, கைக்கோளப் படையை, யானைப் படையை என்று அவர் சோதிப்பதும் வழக்கம்தான். யானைப் பாகர்களுக்கு மெல்லப் பேசத் தெரியாது. அவர்கள் அந்த மிருகத்தோடு அதட்டிப் பேசி பேசி எது பேசினாலும் உரக்கத்தான் பேசுவார்கள். எனவே அந்த இடத்தில் பாகனோடு பாகனாய் யானையில் ஏறி நின்று ஏதேனும் ஒரு யானையை மெல்ல நகர்த்திக் கொண்டு போவார். மற்ற வர்கள் பேசுவதை உரக்கக் கேட்பார். அப்பொழுது அவருடைய உடை யானைப் பாகனுடைய உடையைப் போல மறுக்கிய தலைப்பாகையும், அந்த தலைப்பாகை அவிழாமல் இருப்பதற்கு அங்கங்கே பித்தளை ஊசியும் சொருகி இருப்பார்கள். தோளில் துண்டு போட்டு அதன் மீது அங்குசம் தொங்கவிட்டிருப்பார் கள். வேட்டியை பஞ்சகச்சமாக கட்டாது வெறுமே மடித்து தட்டு சுத்தாக கட்டிக் கொள்வார்கள். அந்த தட்டு சுத்துக்கு மேல் மூன்றாம் துண்டை விரித்து வேட்டி அழுக்காமல் உடுத்திக் கொள்வார்கள். அந்த மூன்றாம் துண்டு யானையின் மீது பட்டு அழுக்காக இருக்கும். வேட்டி சுத்தமாக இருக்கும். யானை யின் கழுத்துக்கு அருகே உட்கார்ந்திருப்பதால் காதுகளில் சமிக்ஞை செய்ய சில சமயம் கற்கள் பொருத்திய வீரக் கழலை வலது காலில் அவர்கள் அணிவதுண்டு.

அதேபோல வணிகனாய் உடுத்திக் கொண்டு பல சமயம் இராஜேந்திர சோழர் தஞ்சையை உலா வந்திருக்கிறார். வேறு ஊருக்கு பயணப்பட்டிருக்கிறார்.

இரவு நேரம் மெல்ல நகர்ந்து போய் மெய்க்காவல் படைக்கு அருகே தூங்கி இருக்கிறார். விடியற்காலையில் மெய்க்காவல் படை முழித்துக் கொண்டு மன்னரை காணோம் என்று பதறி நாலாபுறமும் தேட இவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார். இவரை தட்டி எழுப்பி அட எழுந்திரய்யா, மன்னரைக் காணோம் என்று உலுக்குவார்கள்.

இவர் எழுந்து நின்று சோம்பல் முறிக்க மொத்த மெய்க் காவல் படையும் இவர் காலில் விழும். 'வெகுதூரம் நடந்த களைப்பு. அதனால்தான் நல்ல தூக்கம். இல்லையா நண்பர் களே,' என்று அவர் பேசுவதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாமல் மெய்க்காவல் படை விழிக்கும். ஆமாம் என்று சொன்னாலும் தவறு, இல்லை என்று சொன்னாலும் குற்றம்.

ஒரு தடவை வணிகக் குழுவுக்கு காவலாக நெடுந்தூரம் நடந்திருக்கிறார். 'அடே குண்டா' என்று அந்த வணிகர் இவ ரிடம் விளித்திருக்கிறார். 'நான் அவ்வளவு பருமனாகவா இருக் கிறேன்' என்று வணிகரிடம் கேட்க, அந்த வணிகர் உற்றுப் பார்த்து வியந்து அலறி போட்டுக் கொள்ள, ''வீரமாதேவியார் கூறிக் கொண்டே இருக்கிறாள். இளைக்க முயற்சிக்க வேண் டும். இப்போது காடு தாண்டி விட்டோம். இனி எந்த கவலை யும் இல்லை. நீங்கள் தொடர்ந்து தைரியமாக பயணம் செய்ய லாம்'' என்று திரும்ப குதிரை ஏறி ஒற்றை ஆளாய் தஞ்சைக்கு திரும்பி இருக்கிறார்.

ஒரு நாள் பயணம் எங்கெல்லாம் பார்த்தாரோ என்னவெல் லாம் கற்றாரோ தெரியவில்லை. அவர் எப்பொழுதும் எங்கு வேண்டுமானாலும் புகுந்து புறப்படுகிறவர் என்ற பெயர் அவரை அச்சங்கொள்ளத் தகுந்த நபராகவே சோழ தேசத்தில் காட்டியது.

ஆனால் மறைந்த இராஜராஜ தேவருக்கு இம்மாதிரியான சங்கடங்கள் இல்லை. உத்தம சோழரை அரசாட்சி செய்ய விட்டு விட்டு அவர் சாதாரண படை அதிகாரியாக எல்லா இடத்திற்கும் பயணப்பட்டிருக்கிறார். கிராமம் கிராமமாக அலைந்திருக்கிறார். பல குறுக்கு வழிகளை மனப்பாடம் செய்து வைத்திருக்கிறார். பல வீரர்களை நேரிடையாக பெயர் சொல்லி குடும்ப வாழ்க்கை கேட்டு புரிந்து கொண்டிருக்கிறார். கிராம நிர்வாகிகளின் சங்கடங் களை, அவர்களின் வேலை பளுவை அறிந்திருக்கிறார்.

படையெடுப்பால் பாதிக்கப்படுவது யார். பெண்கள். அவர்களில் விதவைகளுக்கு என்ன மரியாதை. இந்த ஊரில் யார் அவர்களை காப்பாற்றுகிறார்கள் என்று விசாரிப்பது அவருடைய விசாரணைகளில் முக்கியமானது ஒன்று. இதனால் பெண்கள் மத்தியில் அவருக்கு மிகப் பெரிய பெயர் இருந்தது.

'என்னை, சாப்பிட்டாயா என்று கேட்க இந்த ஊரில் ஒரு ஆள் இருக்கிறார். அவருக்கு பெயர் மாமன்னர் இராஜராஜர். எனக்கு அதுபோதும்.' ஒரு விதவை முகத்தில் அடித்துக்கொண்டு அழுதிருக்கிறாள். அவருடைய ஆட்சி காலத்தில் பெண்களுக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு நிர்வாகத் திறமை உண்டு என்பதை புரிந்துகொண்டு அவர்களில் பலரை அரண்மனையில் 'அதிகாரிச்சி'களாக நியமித்தார்.

உத்தம சோழன் ஆண்டிருந்த பதினாறு ஆண்டு காலம் இவருக்கு சோழ தேசத்தினுடைய மொத்த மனோநிலைமையும் தெள்ளத் தெளிவாக பிடிபட்டு விட்டது. எனவே அவர் மன்னரான பிறகு மறைந்து ஒளிந்து பார்க்க வேண்டிய அவசியமே இல்லாது போய்விட்டது. அவர் ஒரு கேள்வி கேட்டால் பதினைந்து பதில்கள் தயாராக அவரிடம் பரிமாறுவதற்காக காத்திருக்கும். கேட்டதற்கு மேலும் விவரம் கிடைக்கும்.

ஆனால் இராஜேந்திர சோழர் அவ்விதம் இல்லை. இளவரசராகவே இருந்து மாதாண்ட நாயகராக உயர்ந்து படை எடுப்புகளுக்காக பல நேரங்களில் வெளி ஊரில் அலைந்து திரும்பி வந்தவர். அவருடைய கோபம் சோழ தேசத்தில் மிகவும் பிரசித்தமானது.

ஒரு முறை மேலை சாளுக்கியத்திலிருந்து ஒரு ஒற்றர் படை கும்பலாக பிடிபட்டது. குறி வைத்து சோழருடைய உளவுப் படை பிடித்தது. எத்தனை கேள்வி கேட்டாலும் எந்த பதிலும் சொல்லாது அழும்பு காட்டினார்கள். வாயில் காப்போனிடம் மெல்லிய பிரம்பு வாங்கி சபை நடுவே சிங்காசனத்திலிருந்து இராஜேந்திர சோழர் கீழே இறங்கினார். அவர்களில் பலவீனமான ஒருவனை மெல்ல அழைத்து எதிரே நிறுத்தினார்.

''அடித்துக் கொல்லப் போகிறேன். தோல் உரியும்படி அடிக்கப் போகிறேன். உரித்த தோலின் மீது உப்போ, வேறு காரமோ தேய்க்கப் போகிறேன். என்ன அலறினாலும் விடாது அடிக்கப் போகிறேன். சொல்லி விடு. இவர்களுடைய பெயர்கள்

என்ன. இவர்களுடைய தகுதி என்ன. பதவி என்ன, இவர்களுடைய பணி என்ன என்று சொல்லிவிடு. அப்படி சொல்லிவிட்டால் உடனடியாக உன்னை ஒரு நல்ல குதிரையும், உணவும் கொடுத்து கையில் கொஞ்சம் காசும் கொடுத்து மேலை சாளுக்கியம் வரை கொண்டு போய் விட்டு வர நான் ஏற்பாடு செய்கிறேன். மேலை சாளுக்கியம் போகிறாயா அல்லது இங்கேயே அடிபட்டு சாகிறாயா. நான் இறங்கி அடிப்பேன் என்று நினைக்கவில்லை அல்லவா. பலமுறை அடித்திருக்கிறேன். பல பேரை அடித்திருக்கிறேன்.''

''உதாரணமாக இந்த பிரம்பினால் உன் கன்னத்தில் அடித்தால் எப்படி இருக்கும்.'' பிரம்பு சுழன்று அவன் கன்னத்தை பளீரென்று தாக்கியது. துடித்துக் கதறினான். இப்பொழுது இரண்டு கைகளாலும் நீ முகத்தை பொத்திக் கொண்டு இருக்கிறாய். உன் முதுகு எனக்கு வாட்டமாக இருக்கிறது, இப்பொழுது முதுகில் அடிக்கப் போகிறேன்.'' இப்பொழுது பிரம்பை சுழட்டி மிக வேகமாக முதுகில் அடித்தார். சத்தம் படீர் என்று வந்தது. அவன் வளைந்து முதுகை தடவ ஆரம்பித்தான். ''இப்பொழுது முகம் கிடைத்துவிட்டதே,'' மறுபடியும் முகத்தில் அடித்தார். முகம், முதுகு, முதுகு முகம் மாறி மாறி அடிக்க, நின்று கொண்டிருந்த அத்தனை மேலை சாளுக்கிய உளவுப் படையும் மண்டியிட்டது.

தங்கள் பெயரைச் சொன்னது, பதவியைச் சொன்னது. அதில் உபதளபதியாக ஒருவன் இருக்கிறான் என்பதும் தெரிய வந்தது.

''படைத்திறனை கணக்கிட்டு வருவதுதான் எங்கள் பணி. மூன்று வார காலம் அவகாசம். எத்தனை யானைகள் இருக்கின்றன என்று மட்டும் முக்கியமாகக் கணக்கிடச் சொன்னார்கள். குதிரைகள் கணக்கும் இருக்கின்றன. காலாட் படையை, தெரிஞ்ச கைக்கோளப் படையை எங்களால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. உங்களிடம் அம்பும், வில்லும் குறைவு. ஈட்டிகள் அதிகம் என்ற விவரங்களை சேகரித்து விட்டோம். நாளை மறுநாள் நாங்கள் கிளம்பி போவதற்காக ஒன்று கூடினோம். மடக்கிவிட்டார்கள். இவ்வளவுதான் எங்களுடைய வேலை, தயவு செய்து அவரை துன்புறுத்தாதீர்கள்.''

''ஏன்? ஒரு சாதாரண வீரனை துன்புறுத்தினால் உபதளபதியாகிய உங்களுக்கு எங்கே வலிக்கிறது.''

''அவர் சாதாரணர் இல்லை.''

''பிறகு,''

''இராஜ வம்சத்தைச் சார்ந்தவர். மூன்றாவது இளவரசர்''

சபை திகைத்து நின்றது.

ஆஹா ஆஹா என்று கோஷம் போட்டது. பலர் பல் கடித்து எழுந்தார்கள். வாள் உருவினார்கள். இராஜேந்திர சோழர் பிரம்பை கீழே போட்டார்.

அரண்மனை வைத்தியரை கூப்பிடுங்கள். உடனடியாக வைத்தியம் செய்யச் சொல்லுங்கள். வலி மறப்பதற்கு மதுக் கஷாயத்தை, புளித்த காடியை வாயில் ஊற்றச் சொல்லுங்கள். உண்பதற்கு உணவு கொடுங்கள். இவருக்கு படுப்பதற்கு நல்ல இடம் கொடுங்கள். நன்கு தூங்கட்டும். பிறகு ஒரு பெண் குதிரையை கொடுத்து அதில் உட்காரச் சொல்லி மிருதுவாக மேலைச் சாளுக்கியம் அனுப்பி விடுங்கள்.

உபதளபதியாரே, என்னுடைய மொத்தப் படை விவரமும் உமக்கு இன்று மாலைக்குள் தரப்படும். உமது இளவரசருடைய உடல்நலம் தேறியவுடன் நீங்கள் அத்தனை பேருமே மேலைச் சாளுக்கியம் திரும்பி விடலாம். உங்களுக்கு ஒருவித தொந்தரவும் இருக்காது, இதை நான் ஆணையாக பிறப்பிக்கிறேன். சோழ தேசத்தின் எல்லை வரை சோழப் படைவீரர்கள் உங்களுக்கு துணையாக வருவார்கள், அதுவரை உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கும். சோழ தேசம் எல்லை தாண்டியதும் கட்டவிழ்த்து குதிரைகள் கொடுக்கப்பட்டு நீங்கள் ஊருக்கு அனுப்பப்படுவீர்கள். நடுவில் ஏதேனும், எந்தவித விவகாரமும் நீங்கள் செய்து விடக்கூடாது அல்லவா. அதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

உங்கள் இளவரசர் நல்லபடி கவனிக்கப்பட்டு கை, கால் பிணைக்கப்படாமல் உற்சாகமாக மேலைச் சாளுக்கியம் போய் சேருவார். கவலைப்பட வேண்டாம்.

விஷயம் எளிதாக முடிந்தாலும் அந்த இளவரசன் வாங்கிய பிரம்படி சோழ சபையை கதிகலங்கச் செய்திருந்தது.

இப்பொழுது இராஜேந்திர சோழர் தலைப்பாகையை இறுகக் கட்டியிருந்தார். இவர் முக்கியமாக கவனிப்பது தன்னுடைய தலை அலங்காரத்தை. கொஞ்சம் வினோதமானது. அவர் கேசம்

மிருதுவானது, நீண்டது, முகத்தில் படர்ந்து விழக்கூடிய தன்மை யுடையது. அப்படி கேசம் பறந்து தன் நெற்றியை மறைக் காமல் இருக்க அவர் பிஞ்சு ருத்ராட்சமோ, பவழ மாலையோ தன் தலையில் அழுத்தமாக அணிந்து கொள்வார். சைவ மடாதி பதிகள் செய்கின்ற அலங்காரம் போல அவருக்கு இருந்தது. அவர் இந்த அலங்காரம் செய்ய ஆரம்பித்ததும் சைவ மடாதிபதி கள் அப்படி மாலை அணிவதைக் கைவிட்டு விட்டார்கள்.

இப்பொழுது என்ன செய்வது. இராஜேந்திரரை நோக்கி போவதா அல்லது இங்கேயே நிற்பதா. இராஜேந்திரர் உள்ளே வரலாம் என்ற சைகை அவரது மெய்க்காப்பாளர்களால் தொலைவே இருந்து காட்டப்பட்டது. தலைப்பாகை அவிழ்த்து ஒருமுறை உதறி மறுமுறை கட்டிக் கொண்டார்கள். அது பார் வைக்கு சாதாரணமாக தெரிந்தாலும் உள்ளே வரலாம் என்பதற்கான தனித்த சமிக்ஞை என்பது அருண்மொழி புரிந்து கொண்டான்.

இராஜேந்திரர் மெல்ல பரவைநாச்சியாரோடு பேசியபடி கோவிலின் இடப்புறம் இருக்கின்ற வாசலை நோக்கி நடந்தார். வலப்புறம் பொதுமக்கள் போய்க் கொண்டிருந்தார்கள். விமா னத்தை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். வலப்பக்க வழியாக ஏறுவதற்கு இன்னும் சில நாழிகைகள் ஆகும். இவர்களுக்கு சாப்பாடு எங்கேயிருந்து வரும். எடுத்து வந்திருக்கிறார்களா? வேறு ஏதேனும் வழங்க வேண்டுமா? குடிநீருக்கு இங்கு வசதி இருக்கிறதா? அவர், யாரை இதற்கு அனுப்புவது என்கிறபோது செம்புலி அருகே வந்தான். நான் வந்தியதேவர், மெய்க்காவல் படைகளை சுற்றிலும் நிற்க வைத்து விட்டேன். அவர்கள் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள், நீங்கள்தான் இப்பொழுது மன்னருக்கு அருகே உறுதுணையாக நிற்க வேண்டும்.''

சற்று வியப்பாக இருந்தது.

''நான் உங்களிடமிருந்து சற்று தொலைவில் நின்று கொண டிருப்பேன். பொதுமக்களை உடனடியாக உள்ளே வர வேண் டாம் என்று தடுப்பதற்கு அதிகாரிகளை கேட்கப் போகிறேன்.''

''அது தவறாக வராதா. மன்னர் இருப்பது தெரிந்துவிடாதா?''

''இல்லை. உள்ளே சில சீரமைப்பு வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். என்று பொது மக்களிடம் தெரிவித்து விடு வேன். கால் நாழிகை அரை நாழிகையில் அனுப்பி விடுவார்கள் என்று உட்கார வைத்து விடுவேன்.''

''உட்கார்ந்தால் போதுமா. உணவுக்கு ஏதேனும் வழி உண்டா?''

''அவர்களே கையில் எடுத்து வந்திருப்பார்கள்,''

''இளநீர் இருக்கிறதல்லவா.''

''சரி. வீரர்கள் மூலம் அந்த இடத்திற்கு அனுப்புகிறேன். ஒரு இளநீர் ஒரு மாடை.''

''ஏன்? இலவசமாக கொடுத்தால் என்ன?''

''முப்பது நாற்பது பேர்கள் இருக்கிறார்கள். இலவசம் என்று சொன்னால் ஆளுக்கு ஆறு சாப்பிடுவார்கள். ஒரு மாடை என்று சொன்னால் ஆளுக்கு ஒரு இளநீர் கிடைக்கும். எனவே, அதுதான் சரி. இந்த இடத்தில் நீங்களெல்லாம் தயவு செய்து வராதீர்கள்,''

''அந்த மாடைக் காசு யாருக்கு போகும்?''

''எனக்கு போகாதய்யா, கோவிலுக்கு போகும். போதுமா.''

செம்புலி கொஞ்சம் கடுப்பாக பேசினார்.

''சிவன் சொத்து குலநாசம் உங்களுக்கு மட்டும்தான் தெரியுமா? எங்களுக்கும் அது தானய்யா பாடம்,'' அலுத்துக் கொண்டான்.

தொலைவே மாமன்னர் இராஜேந்திரர் ஒரு கல்வெட்டருகே நின்று நான் கொடுத்தனவும், நம் அக்கன் கொடுத்தனவும், நம் பெண்கள் கொடுத்தனவும், நாம் கொடுத்தார் கொடுத்தனவும் என்று அவர் படித்துக் கொண்டு போக பரவையரும் வீரமா தேவியரும் தலைசாய்த்து தொடர்ந்து படித்தார்கள். படியேறினார்கள். அவர் உள்ளே போனதும், வந்தியத்தேவரும், அருண்மொழியும் விரைவாக உள்ளே நுழைந்தார்கள்.

''மாமா வணக்கம்.'' இராஜேந்திர சோழர் மரியாதையாக வந்தியத்தேவரை நோக்கி கைகூப்பினார். ''மைத்துனரே வணக்கம்.'' மன்னர், நிதியமைச்சர் என்பதெல்லாம் போய் உறவு முறை முதலில் வந்து நின்றுகொண்டது. அருண்மொழி குனிந்து வணக்கம் சொன்னான். ''பொது மக்கள் அதிகமாக இருக்கிறார்களே. என்ன செய்வது'' இராஜேந்திரர் கேட்டார்.

உள்ளே சீரமைப்பு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு அரை நாழிகை உட்கார்ந்து கொண்டால் போதும். உள்ளே

சுவாமி தரிசனத்திற்கு போய் விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. செம்புலி போய் இருக்கிறார்.

''அந்த மக்கள் குடிப்பதற்கு நீர் இருக்கிறதா?''

''இளநீர் போய் கொண்டிருக்கிறது.''

'அப்படியா, இந்த இடத்தை மற்றவரை அனுப்பாமல் நானே நேரே வந்து சோதிக்க வேண்டுமென்று விரும்பினேன். இதை தொடர்ந்து எப்படி பராமரிப்பது. பராமரிக்க என்ன செலவு, இந்த கோவிலுள் முடியாத வேலைகளை எப்படி முடிப்பது? யாரை வைத்து முடிப்பது? அதற்கு என்ன செலவு என்பது பற்றி நிதி அமைச்சரோடு எனக்கு பேச வேண்டும்? அதுவும் தவிர இந்த கோவிலில் உள்ள இந்த குறைகள், குறைகள்தானா? இந்த கோவில் மூளியாக இருக்கிறதா அல்லது இந்த வேலைகள் மொத்தமும் முடிக்கப்பட வேண்டுமா? முடிக்க வேண்டிய அவசியம் எனக்கு உண்டா? அல்லது வேறு எவர் தலையிலாவது சுமத்தலாமா? இது நாள்வரை ஏன், எவரும் இந்த கோவிலுனுடைய முழுமை பூர்த்தியாக வேண்டுமென்று முயற்சி செய்யவில்லை. ஏன் குறையாக முடிந்த வேலைகளை முடிக்க வேண்டுமென்று எவருக்கும் தோன்றவில்லை. இதற்கும் இராஜேந்திர சோழன் வந்து இங்கு நிற்க வேண்டுமா? அவன்தான் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமா? எல்லா இடத்திலும் இராஜேந்திர சோழனை எதிர்பார்த்துத்தான் தஞ்சை காத்திருக்குமா? அப்பொழுது தஞ்சையிலுள்ள இராஜராஜ சோழனுடைய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்?'' பேசப் பேச இராஜேந்திர சோழர் குரலில் உஷ்ணம் ஏறியது. வீரமாதேவியார் அருகே வந்து தோள் தொட்டு ''போதும்'' என்பது போல் சமாதானம் செய்தார். சட்டென்று இராஜேந்திரர் அடங்கினார்.

''இந்தக் கோவில் மூளி என்று ஒருகாலும் சொல்ல முடியாது,'' அருண்மொழிபட்டன் மெல்லப் பேசினான். ''சில வேலைகள் முடிவு பெறாமல் இருக்கின்றன. மற்றபடி ஆகம விதிகளின்கீழ் இந்த கோவில் வழிபாட்டுத்தலமாக மாறிவிட்டது. சரியானபடி ஹோமயஞ்ஞாதிகள் நடந்து, பலவிதமான அபிஷேங்களால் சிவரூபம் குளிர்விக்கப்பட்டு அதில் சாந்நித்யம் ஏற்பட்டுவிட்டது. தொடர்ந்து பூஜைகள் அற்புதமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஓதுவார்கள் எவரும் குறையில்லாமல் வந்து தேவார, திருவாசகம் ஓதுகிறார்கள். நிருத்தம் நடைபெறுகிறது. வீணை

வாசிக்கப்படுகிறது. குழல் உதைப்படுகிறது. மற்றவித தாள வாத்தியங்களும் ஒலிக்கப்படுகின்றன. வேதம் ஓதப்படுகிறது. எனவே, இது ஒரு முழு கோவிலாக சரியான விதத்தில் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. அருண்மொழி பட்டன் தொடர்ந்து பேசினான்.

மேலே நடன கரணங்கள் முடியவில்லை. ஓவியங்கள் சில முற்றுப் பெறவில்லை. தலைக்கு மேல் இருக்கிற மாடத்தின் கீழ்ப்பகுதி முடிவு பெறவில்லை. அந்த மாடத்தின் உள்ளே தளத்திற்குப் போக படிகள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால் தூண்கள் நிறுவப்படவில்லை. தூண்கள் நிறுவி தளம் அமைத்து அந்தப் படிகள் உபயோகப்படுத்தினால் அந்த தளத்திலிருந்து, மகாலஷ்மி சிலையும், கைலாய மலையும் இன்னும் இருகே நின்று தரிசனம் செய்யலாம். அப்படித்தான் மாமன்னர் இராஜராஜ சோழருடைய எண்ணமாக இருந்திருக்க முடியும். அப்படித்தான் இதை செதுக்கிய சிற்பிகளுடைய எண்ணமும் இருந்திருக்கக் கூடும். எதனால் இந்த வேலை முடியவில்லை என்று தெரிய வில்லை. இராஜராஜர் மரணமடைந்ததும் எல்லோரும் ஒருமாதிரி சோர்வடைந்து விட்டார்கள். ஒரு சிற்பி சொன்னது நினைவிலே இருக்கிறது.''

''என்ன சொன்னார்.'' இராஜேந்திரர் வினவினார்.''

''அவர் தொட்டுப் பார்க்காத கல்லை நான் தூக்கிக்கொண்டு போய் எங்கே, ஏன் நிறுத்த வேண்டும். அவர் பார்த்த பார்வை யில் இந்த கோவில் எப்படி இருந்ததோ அப்படியே இந்த கோவில் இருந்துவிட்டு போகட்டுமே. இதை எதற்காக முழுமை யாக்க வேண்டும் என்று சொன்னார். தலைமை சிற்பியின் எண்ண மும் அதுவாகத்தான் இருக்கும்.''

''என்னிடம் வந்து கேட்க வேண்டும் என்று ஏன் தோன்ற வில்லை?''

''உங்களிடம் ஒரு பயம்.''

''என்ன பயம்.''

''முடியாது என்று சொல்லி விடுவீர்களோ என்று பயம்.''

''முடியாது என்று நான் ஏன் சொல்லப் போகிறேன்.''

''தெரியவில்லை, நீங்கள் தனியாக ஒரு கோவில் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த கோவிலை சீர்செய்ய வேண்டு

மென்றால் முடியாது என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பயப்பட்டிருக்கலாம்.''

''ஆக, இராஜராஜருக்கு எதிராக நான் இருக்கிறேன் என்று சிற்பிகள் எண்ணிக் கொண்டிருக்கிறார்களா''?

''அப்படி சொல்லிவிட முடியாது. இந்த இடத்தின் மீது உங்களுக்கு ஏற்படுகின்ற அக்கறையை விட ஜெயங்கொண்டத்தில் நீங்கள் கட்டிக் கொண்டிருக்கின்ற அரண்மனையும், கோட்டையும், கோவிலும் மிக உன்னதமான நிலைக்கு வரப் போகின்றன. அதில்தான் உங்கள் முழுக்கவனமும் இருக்கும். இது உங்கள் கவனத்தில் இருப்பானேன் என்கிற எண்ணமும் இருக்கலாம்.''

''அதை விடும். இந்தக் கோவில் மூளி இல்லை என்கிறீரா?''

''ஒருக்காலும் இல்லை. நீங்கள் அதைப்பற்றி அச்சம் தேவையில்ல. ஒருவேளை இந்த கோவில் மூளி என்று உங்களுக்கு எவரேனும் சொன்னால் உங்களுக்கு ஒரு இரகசியத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.''

''என்ன இரகசியம்?''

''இந்த சிவலிங்கத்தை சுற்றி உள்ள ஆவுடையார் ஒரே கல் என்று பொதுமக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி சொல்லப்பட்டு வருகிறது. சிற்பிகளை கேட்டால் 'ஆமாம்' என்று பதில் சொல்லாது வெறுமே தலையசைத்து விடுவார்கள். ஆனால் உண்மையில் அது ஒரே கல் அல்ல. எட்டுக்கல் ஒன்றாக பொருத்தப்பட்டு ஆவுடையாராக மாற்றப் பட்டிருக்கிறது. எட்டுக் கல் துண்டாக இருக்கின்ற ஆவுடையாரை இதுவரை நான் எந்தக் கோவிலிலும் பார்த்ததில்லை.?

''இது எனக்கு புதிதல்ல. இதைப் பற்றி நான் ஒரு சிற்பி சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். என்ன காரணம் என்று கேட்டிருக்கிறேன்.'' மாமன்னன் குறுக்கிட்டார்.

நமக்கு ஆவுடையார் முக்கியமில்லை. சிவலிங்கம்தான் முக்கியம். சிவலிங்கம் என்பது அந்த பாணம்தான். அந்த பாணம் அசையாமல் இருப்பதற்காக சுற்றி முட்டுக் கொடுத்தது போல ஆவுடையாரை வைத்திருக்கிறோம். சிவலிங்கமாக இருப்பதற்கு ஆவுடையாரை வைத்தது போலும் ஆயிற்று. முட்டுக் கொடுத்து நிற்பதற்கு சரியானபடி விஷயமுமாயிற்று என்று சொன்னார்.''

'ஏன் ஒரே கல்லில் ஆவுடையார் செய்யக்கூடாதா'? என்று கேட்டதற்கு,

''ஆவுடையாரை செய்து பாணத்தை இறக்குவதா, பாணத்தை இறக்கிவிட்டு ஆவுடையார் இறக்குவதா? ஒரே கல்லில் அவ்வளவு பெரிய பாணத்தை அல்லது ஒரு ஆவுடையாரை இடிக்காமல் எப்படி கீழே இறக்க முடியும் என்ற மிகப் பெரிய கேள்வி இருக்கிறது. இந்தக் கேள்விக்கு எங்களுக்கு பதில் தெரியவில்லை. ஆகவே, நாங்கள் துண்டு துண்டாகவே ஆவுடையார் இருக்கும்படி அமைத்து விட்டோம்' என்று சொன்னார். அவர் பேச்சும் நியாயமாகப்பட்டது.''

''நீ கட்டுகிறாயே. ஜெயங்கொண்டத்தில் அந்த கோவில் சிவலிங்கம் எப்படி இருக்கும்? இதைவிட அது பெரியது என்று கேள்விப்பட்டிருக்கிறேனே'' வந்தியத்தேவர் விசாரித்தார்.

''ஆ, மாமா சரியான இடத்திற்கு வந்துவிட்டார். மிகவும் நன்றி. கிட்டத்தட்ட இதே உயரம்தான் இருக்கும். ஆனால் பிளந்த ஆவுடையார் அல்ல. முழுமையான ஆவுடையார். ஆவுடையார் செய்து அடித்து வைத்து அதில் சிவலிங்கத்தை இறக்குவார்கள். இறக்குவதற்கு உண்டான வசதிகள் செய்திருப்பார்கள்.''

''அற்புதம் அற்புதம் திட்டம் தயாராகிவிட்டதா? வேலை முடிந்துவிட்டதா?

''இன்னும் செதுக்கவே ஆரம்பிக்கவில்லை. அதைவிட அற்புதம் ஒன்று இருக்கிறது மாமா.''

''என்ன இராஜேந்திரா.''

''அந்த தளத்திற்கு மேல் தளம் சந்திர காந்தக் கல்லால் ஆனது. அந்தக் கல் இங்கு கிடைக்கவில்லை. மேலைச்சாளுக்கியத்திலிருந்து பலகைப் போல செங்குத்தாக நிற்க வைத்து, பல சக்கரங்கள் பொறுத்தப்பட்ட மாட்டு வண்டியில் மெல்ல மெல்ல கொண்டுவந்து விட்டார்கள். கல் இப்பொழுது சாய்த்து வைக்கப்பட்டிருக்கிறது.''

''என்ன கல் அது.''

''சந்திரகாந்தக் கல்.''

''என்ன விசேஷம் அதில்?''

''குளுமையாக இருக்கும். அந்தக் கல்லை தாண்டி உஷ்ணம் உள்ளே இறங்கவே இறங்காது.'' கருவறையை நெருங்கிக் கொண்டே பின்னால் திரும்பிப் பார்த்தார்கள். பரவையாரோடும்,



வீரமாதேவியோடும் கல்வெட்டுகளை படித்தபடி அங்குள்ள துவாரபாலகரின் சிலையை பார்த்து வியந்தபடி நிற்க, அவர்கள் மூவரும் கருவறைக்கு வந்தார்கள். கொஞ்சம் இருட்டாக இருந்தது.

''இப்பொழுது தரிசனத்திற்கு அனுமதி இல்லையே. மாமன்னர் இராஜேந்திரர் வரப்போகிறார். எனவே, சற்று விலகி இருங்கள். அவர் வந்து போன பிறகு உங்களை அனுமதிக்கிறேன்.'' சிவாச்சாரியார் சொல்ல அவர்கள் விளக்கு வெளிச்சத்திற்கு அருகே வந்து நின்றார்கள்.

இராஜேந்திர சோழர் மெல்ல தன் தலைப்பாகையை கழற்றி அதை தன் தோளில் போட்டுக் கொண்டார். சிவாச்சாரியாருக்கு அடையாளம் தெரிந்தது. குனிந்து வணங்கினார். கைகளைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''மிகுந்த சந்தோஷம். ஆறுகால பூஜையும் சிறப்பாக நடைபெறுகிறதா?''

''நடைபெறுகிறது.''

''ஏதேனும் குறைகள் உண்டா?''

''நெல்முனையளவும் எந்தக் குறையும் இல்லை.''

''உங்களை மரியாதையுடன் நடத்துகிறார்களா?''

''மிகுந்த மரியாதை. நல்ல வரவேற்பு.''

''மக்கள் வந்து பார்க்கிறார்களா?''

''ஏகத்துக்கும் வருகிறார்கள். இன்று கொஞ்சம் கூட்டம் குறைவு. உண்மையில் மாதப் பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி தினங்களில் நல்ல கூட்டமாக இருக்கிறது. பௌர்ணமி தினங்களில் வெளியூர் ஜனங்கள் வருகிறார்கள். அமாவாசை நாட்களில் உள்ளூர் ஜனங்கள் வருகிறார்கள்.''

''சரி, திரையைப் போடும்.''

''என்ன விசேஷம்.''

''நாங்கள் மூவரும் கருவறைக்குள் போக வேண்டும்.''

''அதற்கு அனுமதி இல்லையே.''

''யாருடைய அனுமதி இல்லை.''

''எங்களுடைய குழு அனுமதிக்க வேண்டும். எங்கள் தலைமை சிவாச்சாரியார் சரி என்று சொல்ல வேண்டும். தவறாக நினைக்கக் கூடாது. இப்படி பல்வேறு நபர்கள் அனுமதிக்கு பிறகே.''

''ஏன் நான் பார்க்கக் கூடாது.''

''நீங்கள் மாமன்னர் ஆனாலும் சிவாச்சாரியார் தொடுகின்ற விக்ரகத்தை நீங்கள் தொடக்கூடாது.''

''மாமன்னர் என்றால் யாரைச் சொல்கிறீர்கள்.''

''உங்களைத்தான் சொல்கிறேன். மாமன்னர் இராஜேந்திரரைத்தான்'' என்று அவர் பணிவாக கைக்கூப்பினார்.

''மன்னர் என்ன அம்சம்?''

''நிச்சயமாக மன்னர் விஷ்ணு அம்சம்.''

''விஷ்ணு சிவனைத் தொட்டால் தவறா?''

''அப்படியில்லை.''

''ஏன்? என்னிடம் விஷ்ணு அம்சம் குறைவாக இருக்கிறதா? அல்லது விஷ்ணு மாதிரியே இல்லை, ராக்ஷஸகனாக இருக்கிறேனா?''

''அப்படியெல்லாம் வேகமாக பேச வேண்டாம். எங்களுக்குள்ள நியதியைச் சொன்னேன். நீங்கள் விஷ்ணு அம்சம். தாராளமாக நீங்கள் உள்ளே போய் வரலாம். போய் என்ன வேண்டுமானாலும் சோதிக்கலாம். ஆனால் இப்படி நீங்கள் வந்து போனது வெளியே தெரியாமல் இருப்பது நல்லது. ஏனென்றால் ஒவ்வொருவரும் தான் விஷ்ணு அம்சம் என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தால் தடுப்பது எங்களுக்கு கஷ்டமாக இருக்கும்.''

''அதுபற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள் மூவரும் உள்ளே போகிறோம்.''

''தயவு செய்து நில்லுங்கள்.''

''ஏன்?''

''நீங்கள் விஷ்ணு அம்சம். உள்ளே போகலாம். அவர்கள் அப்படி இல்லையே. அருண்மொழிபட்டரைக் கூட உள்ளே அனுமதிக்க முடியாதே. அவர் அந்தணராக இருந்தாலும் சிவ பூஜை செய்பவர் அல்லவே.''

''விஷ்ணுவின் படைக்கலன்கள் என்ன?''

''பாஞ்சசன்யமும் சக்ராயுதமும்.''

''இது பாஞ்சசன்யம்'' வந்தியத்தேவரை சுட்டிக் காட்டினார்.

''இது சக்ராயுதம்,'' அருண்மொழிபட்டனை சுட்டிக்காட்டினார்.

''விஷ்ணு இப்பொழுது பாஞ்சசன்யத்துடன், சக்ராயுதத்துடன் உள்ளே நுழையப் போகிறார். எனவே, வாசலில் காவல் இரும்.'' அவருடைய உத்தரவுக்கு காத்திராமல் இராஜேந்திர சோழர் தடாலடியாக உள்ளே நுழைந்தார். அவர்கள் உள்ளே நுழைந்தது பரவையாருக்கும், வீரமாதேவியாருக்கும் தெரியவில்லை. எங்கே என்று தேடினார்கள். சுற்றி சுற்றி வந்த மூவருக்கும் ஆவுடையாரின் அமைப்பு திகைப்பூட்டியது

என்ன அற்புதமான வேலை. எவ்வளவு அழகாக இணைத்திருக்கிறார்கள். அடடே, சோழ சிற்பிகளுக்கு இணை வேறு எவருமே இல்லை. இந்த பாணம் நிற்க வேண்டுமென்றால் இந்த ஆவுடையார் இருந்துதான் ஆகவேண்டும். இந்த ஆவுடையார் இல்லாமல் வெறும் பாணம் நின்றால் பாணத்திற்கு வயது குறைவாக இருக்கும். ஆவுடையார் வைத்து இறுக்க அடித்துவிட்டார்கள். மருந்து போட்டு கெட்டித்து விட்டார்கள். இப்பொழுது புரிகிறது. மருந்து ஒட்டவில்லை. மருந்து ஒட்டவில்லை என்று ஏன் சொன்னார்கள் என்று புரிகிறது. எல்லா இடுக்குகளிலும் மருந்து பூசப்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் அவஸ்தைப் பட்டிருக்கிறார்கள். எல்லா இடுக்குகளிலும் சுடச் சுட மருந்து ஊற்றி கயிறு போட்டு இறுக்க வைத்திருக்கிறார்கள்.

வாழ்க வாழ்க சோழ சிற்பிகள். இப்போதைக்கு இது நகராது. ஏன் எப்போதைக்கும் இது விடுபடாது. அற்புதமான வேலை. இராஜேந்திர சோழன் வாய் நிறையக் கொண்டாடினார்.

ஆக, ஆவுடையார் எட்டு துண்டாக இருக்கிறபொழுது மற்ற வேலைகளைப் பற்றி நாம் ஒன்றும் அலட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அங்கே, என்னை குறைவாக நினைத்துவிடுகிறார்களோ, இராஜேந்திர சோழன் கைவிட்டு போய்விட்டான் என்று சொல்கிறார்களோ. இராஜேந்திர சோழனால் இந்த கோவிலில் மூளி

யாக்கப்பட்டது என்று என் பெயரை இழுத்து விடுவார்களோ என்ற பயம். அதனால்தான் நேரே வந்தேன்.

இனிமேல் சிவாச்சாரியாரை சங்கடப்படுத்த வேண்டாம். மூவரும் தஞ்சை பெருவுடையாரை இறுக்கத் தழுவிக் கொண்டார்கள். படிகளில் ஏறினார்கள். மேலே ஏறி அங்கிருந்த குடங்களில் இருந்த நீரை அவர் தலையில் சொரிந்தார்கள். இறங்கி கீழே வடிந்த நீரை தங்கள் தலையில் தெளித்துக் கொண்டார்கள். முகத்தை துடைத்துக் கொண்டார்கள்.

இராஜேந்திர சோழர் மிக கவனமாக தனது மூன்றாம் துண்டில் அபிஷேக நீரை ஏந்தி நனைத்துக் கொண்டார். கருவறையை விட்டு வெளியே வந்தார். ஆக, நான் தஞ்சையை விட்டு வெளியேறி ஜெயங்கொண்டம் போய் அங்கே என் அரண்மனை வேலைகளையும், கோவில் வேலைகளையும் கவனிக்கலாம் அல்லவா. தஞ்சையை நிர்வாக அதிகாரிகளிடம் கொடுத்துவிட்டு அவர்களை வைத்துக் கொண்டு இந்த கோவிலை நடத்தலாம் அல்லவா'' என்று இராஜேந்திரர் கேள்வி கேட்க,

வந்தியத்தேவர் ''நடத்தலாம்'' என்று மறுமொழி சொன்னார்.

''என்ன அருண்மொழி என்ன மௌனம்'' என்று இராஜேந்திரர் கேட்க

''ஆமாம். நான் அடுத்த வேலை நோக்கி போக வேண்டிய அவசியம் வந்துவிட்டது'' என்று அருண்மொழி பதில் சொன்னார்.

இரண்டு பேர் பதிலும் திருப்தியாக, இராஜேந்திரர் கருவறை இருட்டிலிருந்து வெளியே வர, தொலைவே அவர்களுக்குண்டான அடுத்த வேலை வாசலுக்குள் நுழைந்தது.

மூன்று குதிரை வீரர்கள் வேகமாக கேரளாந்தகன் வாயில் தாண்டி இராஜராஜன் வாயில் தாண்டி அந்த இடப்பக்க படியை நோக்கி குதிரையில் வந்தார்கள். வழக்கமாக குதிரையில் யாரும் அவ்வளவு தொலைவு வருவதில்லை. இறங்கி நடப்பதுதான் வழக்கம். மிக அவசரம் என்பதால் அவர்கள் குதிரைகள் அனுமதிக்கப்பட்டன. அவர்கள் இறங்கினார்கள். படியேறினார்கள். வழியே வீர நாச்சியாரும். பரவை நாச்சியாரும் தடுத்து நிறுத்த, அவர்கள் தாங்கள் வந்த விஷயத்தை அவர்களிடம் தெரிவித்தார்கள்.

பரவை வாய் பொத்திக் கொண்டாள். வீர நாச்சியார் தலை யில் அடித்துக் கொண்டாள்.

தஞ்சையை விட்டு வெளியே போக முடியாதபடி ஏதோ ஒரு தடை வந்துவிட்டது என்று இராஜேந்திரருக்கு புரிந்தது.

''என்ன பரவை என்ன அங்கு விசேஷம்'' உரத்த குரலில் கேட்க,

சுவர் முழுவதும் பட்டு எதிரொலித்தது. மூவரும் விரை வாக வாயில் நோக்கி வந்தார்கள். வெளிச்சம் பரவிய அந்த துவாரபாலகர்கள் இருக்கின்ற மாடத்தில் வந்து நிற்க மூன்று வீரர் களும் விழுந்து வணங்கினார்கள். எழுந்து நின்றார்கள். அரச ருடைய உத்தரவுக்கு காத்திருந்தார்கள்.

''பரவை என்ன விஷயம்.''

''உங்கள் தங்கை குந்தவை பற்றிய விஷயம். குந்தவை விமலாதித்தனால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த தகவலை அவளுடைய மெய்க்காப்பாளன் ஒரு ஓலையில் எழுதி உங்களுக்கு அனுப்பி இருக்கிறான்.''

''என்ன அது?''

''ஒன்பது லட்சம். படைவீரர்களுடன் உடனடியாக கீழைச் சாளுக்கியத்தில் புகுந்து அந்த தேசத்தை நீர்மூலம் செய்து அவளை மீட்டு அவளுடைய மகனை அரசராக அங்கே நிலை நிறுத்த வேண்டும் என்று உங்களுக்கு கட்டளை இட்டிருக் கிறாள்.''

''ஒன்பது லட்சம் வீரர்களா? இவளுக்கென்ன கணக்கு இது.''

''அவர்களைத் தான் கேட்க வேண்டும்.'' அருண்மொழிப் பட்டன் சிரித்தான்.

''குந்தவை ஏன் தவறான பெண்ணாகவே இருக்கிறாள்?''

இராஜேந்திரர் அலுத்துக் கொண்டார்.

''சட்டென்று அப்படி பேசாதீர்கள். கொஞ்சம் ஆத்திரக்காரி. சொடுக்கு நேரத்தில் தனக்கு எல்லாம் நடக்க வேண்டும் என்கிற பேராசைக்காரி. இராஜேந்திர சோழன் என்ற மிக வலிமைமிக்க ஒரு மாமன்னன் தனக்கு அண்ணனாக இருப்பதால் தனக்கு

சகலமும் கிடைத்துவிடும் என்று நினைக்கின்ற தங்கையாக இருக்கிறாள். ஆனால் ஒன்பது லட்சம் வீரர்களுடன் உள்ளே வந்து என்று எழுதப்பட்டது அபத்தம்.''

''இப்பொழுது என்ன செய்ய?''

இவர்களை அரண்மனைக்கு வரவழைத்து விடுங்கள். சபையை கூட்டுங்கள். அங்கு பேசிக் கொள்வோம். ''நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு மாலை நேரம் சபைக்கு வந்தால் போதும்.'' இராஜேந்திரர் உத்தரவு கொடுக்க, அவர்கள் மெல்ல விலகினார்கள்.

இராஜேந்திரரும், வந்தியத்தேவரும், அருண்மொழியும் தரை இறங்க, சுற்றி இருந்த ஜனங்கள் திடீரென்று புரிந்து கொண்டு கூவலோடு அரசரை நோக்கி ஓடி வந்தார்கள். விழுந்து வணங்கி னார்கள்.

''மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க'' என்று மிளறினார்கள்.

எங்களுக்கு பக்கத்திலுள்ள பூந்தோட்டமய்யா. நாங்கள் அங்கிருந்து வருகிறோம். நாங்கள் எல்லோரும் ஒரே கிராமம் என்று பெருமை பொங்க சொல்ல,

இராஜேந்திர சோழர் தனது தங்கை குந்தவையை மறந்து போனார். அவர்களோடு இரண்டறக் கலந்தார்.

* * *

அத்தியாயம்

6

இந்தக் காட்சி ஒன்றும் புதிதல்ல. பற்றி எரிகிற பிரச்சனைகள் வருகிறபொழுது இராஜேந்திர சோழர் அந்த பிரச்சனை நடக்கும் இடத்தை விட்டு அல்லது அது பேசப்படும் இடத்தை விட்டு நகர்ந்துவிடுவார். வேறு ஏதேனும் காரியங்களில் ஈடுபடுவார். மிகுந்த முக்கியமான நேரங்களில் முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறபொழுது அவர் அதைப் பற்றி சிந்திக்காமல் வேறு விஷயங்களை சிந்திப்பதும், விளையாட்டாக இருப்பதும் அவருடைய வழக்கம்.

போனமுறை மேலைச் சாளுக்கியம் நோக்கி படை எடுக்கும் பொழுது அவர் அரண்மனை முற்றத்தில் நீர் இறைத்து வெளியே போகாமல் மர ஆப்பு வைத்து அடித்து இடுப்பு உயரமளவுக்கு குளம் போலச்செய்து அதில் மனைவியருடன் நீராடினார். கால் விரல் நகங்களை சுத்தம் செய்து கொண்டார். தலையை நுரை எழும்ப சிகைக்காய் போட்டு அலம்பி பிறகு கரையேறினார்.

உடம்பு துடைத்து, உடுத்தி, திருநீறு இட்டு, பூஜை செய்து வெளியே வந்ததும், ''நாளை நம் படைகள் மேலைச் சாளுக்கியம் நோக்கி நகருகின்றன. இன்றிலிருந்து பதிமூன்றாம் நாள் நாம் மேலைச் சாளுக்கியத்தை முழு வெறியோடு தாக்குகிறோம்'' என்று கட்டளையிட்டார்.

'குளித்ததும் ஏற்படுத்திய முடிவா அல்லது குளிப்பதற்கு முன்பே ஏற்படுத்திய முடிவா', என்று அருண்மொழிப் பட்டனுக்கு திகைப் பாக இருந்தது. மெல்ல சந்தேகம் கேட்டபோது,

''படை எடுப்பு நிச்சயம் என்று தெரிந்துவிட்டது. என்ன சேதம் ஏற்படும், யாரெல்லாம் பாதிக்கப்படுவார்கள், யாருக்கெல் லாம் மிக வேதனை தரும் என்று யோசித்து என்னுடைய நஷ்டக் கணக்குகளை ஒருமுறை சரி பார்த்தேன். நஷ்டங்கள் அதிகம் தான். ஆனாலும் இதை செய்தே ஆகவேண்டும் என்ற முடிவோடு எழுந்து வந்து அறிவித்தேன். ஒரு உத்வேகத்தில் ஒரு ஆவேசத் தில் எடுத்தேன். கவிழ்த்தேன் என்று ஒரு படை எடுப்பை சொல்ல

முடியாது அருண்மொழி. பரமன் மழபாடிக்கு அவ்வளவு தொலைவு வருவது தாங்க முடியுமா. அப்பொழுது பரமன் மழபாடி தலைமை ஏற்கவில்லையெனில் யார் தலைமை ஏற்பார்கள். கிருஷ்ணன் ராமனால் மேலைச் சாளுக்கியம் வர முடியுமா? எத்தனை முறை வந்திருக்கிறார்? இந்த முறை அழைத்துப் போவதா? அல்லது விட்டுவிடுவதா? அழைத்துப் போனால் கொண்டாட்டமா? அல்லது விட்டுவிட்டால் கொண்டாட்டமா? என்று அவர் சார்பில் நான் யோசிக்க வேண்டியிருக்கிறது. இராஜேந்திர சோழர் விளக்க அருண்மொழிப்பட்டன் நெகிழ்ந்து போனான்.

இவன் வெறும் மன்னனல்ல. ‘சாலச் சிறந்த பெரியோன்’ இவன் சாதாரண மனிதனல்ல. ‘பாண்டிதச் சோழன்.’ இவர் புலமை வெறுமே செருக்கு காட்டுவதற்கு அல்ல. மற்றவருடைய சுக துக்கங்களை சீர்தூக்கி பார்ப்பதற்காக உபயோகப்படுகிறது. மாமன்னர் இராஜராஜரை விட இராஜேந்திர சோழர் இன்னும் ஒரு பிடி உயரமோ என்ற எண்ணத்தை தவிர்க்கவே முடியவில்லை. வெளியே சொன்னால் முறைத்துக் கொள்வார்கள். பதிலுக்கு அப்படி இல்லை என்று கத்துவார்கள். ‘எதனால் அப்படி யோசிக் கிறாய்’ என்று ஏகடியம் பேசுவார்கள். ஆனால் உள்ளே தோன்று கிறதை ஒருபொழுதும் எவராலும் தவிர்த்துவிட முடியாது. எனக்கு தோன்றியதைப் போல மற்றவருக்கும் வெகு நிச்சயம் தோன்றும்.

கோவில் மண்டபத்துக்கு வெளியே வந்து வலதுபுற சிறகு படிகளில் இறங்கி பொதுமக்களை நோக்கிப் போக போக மக்கள் அவரை இனங்கண்டு கொண்டு ‘ஓ என்ற கூச்சலோடு வந்தார்கள். வயதானவர்கள் திடுக்கிட்டார்கள். பயந்து எதிர்புறமாக போனார்கள். எல்லோரையும் அரவணைத்து அருகே வரச் சொன் னார். அவருக்கென்று பெரிய மர நாற்காலி போடப்பட்டது. அதில் உட்கார்ந்து கொண்டார். அவர் மடியில் வெற்றிலைப் பெட்டி வைக்கப்பட்டது. திறந்து, பிரித்து பாக்கைப் போட்டு கடித்து அதக்கிக் கொண்டார்.

‘‘எந்த ஊர்? என்ன விஷயம்?’’ என்று விசாரிக்க ஆரம் பித்தார்.

ஆளுக்கு ஆள் தங்களுடைய கிராமம் பற்றியும் பெயர் பற்றியும் பேச ஆரம்பித்தார்கள். ஒற்றை விரலால் அடக்கினார்.

''நீ சொல்,'' என்று ஒரு இளைஞனை சுட்டிக் காட்டினார்.

''அய்யா, நாங்கள் பூந்தோட்டத்தில் இருந்து வருகின்றோம். பூந்தோட்டம் என்பது காவிரிக்கரையில் கடைமுகத்தில் இருக்கின்ற ஒரு செழிப்பான கிராமம். காவிரி கடந்த பதினோறு வருடங்களாக ஒருமுறைக்கூட பொய்க்காமல் முழு வேகத்தில் எங்கள் ஊர் பக்கம் வருவதால் விவசாயம் நன்கு நடைபெறுகிறது. வெற்றிலைக்கு ஊடுபயிராக துவரை போடுகிறோம். நெல் நன்றாக அறுவடை ஆகிறது. மூன்று போகம் செய்ய முடியவில்லை. இரண்டு போகம் செய்கிறோம். வீட்டுக்கென ஒரு போகத்திற்கு சோளமோ, கம்போ, துவரையோ, காராமணியோ போட்டு வருகிறோம். எல்லார் வீட்டிலும் கறிகாய் தோட்டம் இருக்கிறது. வாழை நன்கு வளர்கிறது. வாழைத் தாரை வணிகர்களே வந்து வெட்டிக் கொண்டு போய் காசு கொடுத்து விடுகிறார்கள். நாங்கள் எல்லோரும் மாமன்னர் இராஜேந்திர ஆட்சியில் சிறப்பாக இருக்கிறோம். உங்கள் தந்தையார் ஒரு அற்புதமான கோவில் கட்டி இருக்கிறார் என்று கேள்விபட்டு இப்பொழுது தான் முதன் முதலாக பதினைந்து வருடங்கள் கழித்து பார்க்க வந்திருக்கிறோம்.

இவ்வளவு உயரத்துக்கு இந்தக் கோவிலை எப்படி அய்யா கட்டினார்கள். எங்களுக்கு புரியவே இல்லை'' என்று அவன் வியப்போடு கேட்டான்.

அருகிலே ஒரு கிழவர் அதற்கு தனக்கு தெரியும் என்பது போல விடை சொன்னார். ''நான் அப்பொழுதே சொன்னேன். இவன் கேட்க மாட்டேன் என்கிறான். படுக்க வைத்து நிமிர்த்தி இருப்பார்களடா. படுக்க வைத்து கட்டி இருப்பார்கள். அப்பொழுது கட்டுதல் எளிதல்லவா. பிறகு கட்டை கொடுத்து நிமிர்த்தி இருப்பார்கள் என்று சொன்னேன். இவன் இல்லை என்று சிரிக்கிறான். உண்மையில் எப்படி கட்டினார்கள் நீங்கள் சொல்லுங்கள் அய்யா?''

இராஜேந்திரர் இடிபோல சிரித்தார்.

இந்த கோவிலை படுக்க வைத்து கட்டி நிமிர்த்தி நிறுத்துவது என்றால் இந்த கிராமவாசி எவ்வளவு வெள்ளையான மனம் கொண்டவர். என்ன கல் என்ன எடை என்று தெரியாதவர். அவருக்கு தெரிந்த எடை எல்லாம் உழுகலப்பை மட்டுமே. அவர்

மட்டுமல்ல, எல்லா விவசாயிகளும் வெள்ளேந்திகள்தான். பயிரோடு பேசுபவர்களுக்கு மனிதரோடு பேசக்கூட தெரியாது.

கிருஷ்ணன் ராமனான சேனாதிபதி முன்பே, சிறு வயதிலேயே சொல்லி இருக்கிறார்.

'நாளைக் காலைக்குள் பால் புடிச்சுபுடனும், என்ன புரிகிறதா?' என்று நெல்லை நோக்கி விவசாயிகள் அதட்டுவார்களாம். இரண்டு மூன்று நாட்களில் பால் பிடித்து விடுமாம்.

'பார்த்தாயா சொல் பேச்சு கேட்கிறது' என்று சந்தோஷப் படுவார்களாம். பருவத்தால் ஏற்பட்ட மாற்றமா? அல்லது இவர் சொன்னதால் ஏற்பட்டதா? எதுவாயினும் தன்னால்தான் விளைந்தது என்று அந்த விவசாயி பூரிப்படைவார்.

''நான் சொன்னதை நீ கேட்டாய் அல்லவா, உனக்கு வேண்டும் மட்டும் நான் தருகிறேன்'' என்று முதுகு வலிக்க வலிக்க சாண உரத்தை நாலாபக்கமும் வீசுவார். விழித்துக் கொண்டு நெற்பயிர் இன்னும் அதிகம் கதிர்கள் தள்ளும். தகப்பன் அப்படி நெற்பயிர்களோடு பேசுகிறான் என்பதால் வீட்டிலுள்ள பெண்ணும் வீட்டிலுள்ள செம்பருத்தி பூவோடு பேசும். ''பாக்கிய லக்ஷ்மி என்னாடி செய்யுறே'' ''செம்பருத்தி பூ பூக்க மாட்டேன் என்கிறது. திட்டிக் கொண்டிருக்கிறேன்.'' திட்டு திட்டு, நல்லா திட்டு. அப்பொழுதுதான் பூக்கும்.'' ''வெட்டி போட்டுடு வேன், பூக்கவில்லையென்றால்'' எட்டு வயது பாக்கியலக்ஷ்மி இடுப்பில் கை வைத்துக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருப்பாள். வீடு முழுவதும், சுற்றியும் வேலி போட்டது போல் செம்பருத்தி உள்ளங்கை அளவிற்கு பூக்கும்.

இந்த ஒரு மரம் மட்டும் பூக்கவில்லையெனில் பாக்கிய லஷ்மிக்கு கோபம் வராதா? என்று கிருஷ்ணன் ராமன் நாடகம் போல் பேச இளம் வயது ராஜேந்திரன் எகிறி குதித்துச் சிரித்தான்.

''அவ்வளவு வெள்ளேந்தியா? அவ்வளவு வெள்ளையான மனமா? நாம் ஏன் இப்படி இருக்கிறோம்?'' என்று குறுக்குக் கேள்வியாக கிருஷ்ணன் ராமனிடம் கேட்டார்.

''அதுதானய்யா தலை எழுத்து, நாம் வெள்ளையாக இருக்க முடியாது. இருந்தால் இந்த தேசம் உறுதியாக இருக்காது. யார் எது பேசினாலும் சந்தேகப்படுவது மன்னன் இயல்பு. நீ அப்படித் தான் இருக்க வேண்டும்,'' என்று விவசாயிக்கு நேர்பதமாக வாழ கிருஷ்ணன் ராமன்தான் சொல்லிக் கொடுத்தார்.

சூழ்ச்சி, சூழ்ச்சி, சூழ்ச்சி என்று வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் சூழ்ச்சியாகவே போய்விட்டது. ஒவ்வொரு நாழிகையும் எதிராளியை எடைபோடுவதாகவே போய்விட்டது. இப்பொழுதும் அந்த வேலைதான் வந்திருக்கிறது.

விமலாதித்தன் என்ற மடையன் என்ன செய்கிறான். என்ன செய்யப் போகிறான் என்ற கவலை உள்ளே பிடித்துக் கொண்டது. ஆனால் வெள்ளேந்தியான இந்த மனிதர்களுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டிருப்பது சந்தோஷமாக இருந்தது.

கோவில் எப்படி கட்டினார்கள் என்று விளக்க, கூட்டம் சிறிய சப்தம் கூட எழுப்பாமல் கேட்டது. அதில் பாதி பேருக்கு புரிந்தது. பாதி பேருக்கு புரியவில்லை என்பது முகத்தில் தெள்ளத் தெளிவாக தெரிந்தது. இதை எப்படிச் சொன்னாலும் அவர்களுக்கு புரிவது கஷ்டம்தான். வேண்டுமென்றால் எப்படி கட்டினார்கள் என்று சிற்பிகளை வைத்து ஒரு மாதிரி அமைக்கச் சொல்லலாம் என்று சிந்தித்தார். சட்டென்று அது சரியான யோசனை என்று பட்டது.

அடிக்கடி தினம் தினம் வந்து பார்க்கிறவர்களுக்கு தனியாக ஒரு மாதிரி அமைத்தால் என்ன. செம்புலியை நோக்கித் திரும்பினார். செம்புலி அருகே வந்து கைகட்டிக் கொண்டார். மெல்ல அவர் காதில் சில பெயர்களைச் சொன்னார்.

''உடனே ஆகட்டும்'' என்றார்.

செம்புலி இரண்டு வீரர்களை அழைத்து சிற்பிகளை உடனே வரச் செய்தார்.

இராஜேந்திரருடைய அடுத்த குணம் இது. எப்பொழுது என்ன நினைத்தாரோ அதை அப்பொழுதே செய்து ஆக வேண்டும்.

பல்வேறு சிற்பங்களாக, களிமண் மாதிரிகளாக இந்தக் கோவில் எழுப்பப்பட்டதை பொம்மைகளாக செய்ய வேண்டும் என்று உள்ளுக்குள் தீர்மானித்துக் கொண்டார். அதை சுடுமண் பொம்மைகளாக செய்து வைக்க வேண்டும் என்றும் உறுதி செய்து கொண்டார். ஆனால் உள்ளுக்குள்ளே விமலாதித்தனை பற்றிய கவலையும் ஓடிக்கொண்டிருந்தது.

விமலாதித்தன் மீது கூட தவறு இருக்காது. இந்த குந்தவை

ஏதேனும் அதிகப்பிரசங்கித்தனம் செய்திருப்பாள். குந்தவையை அடக்கி வைக்காதது தன்னுடைய தவறு அல்ல. மாமன்னர் இராஜராஜர் செய்த தவறு. முதல் பெண் என்று செல்லம் கொடுத்து முற்றிலும் மோசமானவளாக அவளை வளர்த்து விட்டார். தன் தமக்கையைப் போல மிகுந்த கெட்டிக்காரியாக வும், சூட்சும புத்தி உடையவளாகவும் கருணைமிக்கவளாகவும் இருப்பாள் என்று தன்னுடைய தமக்கையின் பெயரை அவளுக்கு வைத்தார். ஆனால் அத்தைக்கு நேர்எதிராக இந்த குந்தவை வளர்ந்தாள். ஆங்காரம், அலட்சியம், பிடிவாதம், எடுத்தெறிந்து பேசுதல், சீற்றம், பெண் என்ற நாணத்தை விட்டுவிட்டு துக்கிரித் தனமாக அலைதல் போன்றவை அவளுடைய இயல்பாக இருந்தது.

வீரமாதேவியார் காதோரம் ஒருமுறை இவளைப் பார்த்து விட்டு இராஜேந்திர சோழனிடம் சொன்னார். இவர் கற்புக்கரசி யாக இருக்கிறாளே, அதுவே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இவள் நினைத்தால் அந்த விஷயத்தையும் தூக்கி எறிந்துவிடு வாள். எதனாலேயோ அதற்கு கட்டுப்பட்டு இருக்கிறாள் என்று சொன்னாள்.

கொஞ்சம் கோபத்தோடு வீரமாதேவியாரை முறைத்து பார்த்தபோது, ''உங்களுக்கு பெண்களைப் பற்றி தெரியாது, குந்தவை எதற்கும் துணிந்தவள். இதை மட்டும் உங்கள் மனதில் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று தெள்ளத் தெளிவாகச் சொன்னாள்.

வீரமாதேவியர் மட்டும்தான் இராஜேந்திர சோழனிடம் இத்தனை உரிமையோடும், இத்தனை விவரமாகவும் பேச முடியும்.

இராஜேந்திரர் திரும்பி வந்தியத்தேவரும், அருண்மொழி யும் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தபோது இரண்டு பேரும் மூலைக்கு ஒரு திக்காய் மெல்ல அலைந்து கொண்டிருப்பது புரிந்தது. அவருக்கு சந்தோஷமாக இருந்தது. பிரச்சனையை தன் தலையில் போட்டுவிட்டு அவர்கள் நகர்ந்துவிடவில்லை. மாறாக அவர்களும் யோசிக்கிறார்கள். போய் உட்கார்ந்தால் போதும் மடமடவென்று அடுத்தபடியான விஷயங்களை இரண்டு பேருமே தெளிவாகப் பேசுவார்கள். இந்த சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய அதிர்ஷ்டம் அற்புதமான அதிகாரிகள் கிடைத்ததுதான்.

ஆனால், வந்தியத்தேவர் ஒரு கோணம் என்றால் அருண்மொழிப்பட்டன் இன்னொரு கோணம். இந்த இரண்டு

கோணங்களுமே நமக்கு உபயோகமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

கோவில் வாசலில் இருந்து வந்த இளநீரை வீரர்கள் வெட்டிக் கொடுக்க, கிராமவாசிகள் வெட்கத்தோடு வாங்கிக் கொண்டார்கள். குடிக்காமல் கையிலேயே வைத்திருந்தார்கள். ''ம்'' என்று கை உயர்த்தியதும் மடமடவென்று குடித்தார்கள். மன்னரின் செல்வாக்கு மக்கள் இளநீர் குடிப்பதிலும் தெரிந்தது.

''உண்பதற்கு என்ன வைத்திருக்கிறீர்கள் என்று கேட்க, அவர்கள்,

''புளியஞ்சாதம்'' என்று சொன்னார்கள்.

''எங்கே எனக்கு ஒரு கை கொடுங்கள்'' என்று சொல்ல வெட்கப்பட்டார்கள்.

''அய்யோ, உங்களுக்கு அதற்கு எது. நீங்கள் பஞ்ச பக்ஷ்க்ஷ பரமான்னம் சாப்பிடுகிறவர்கள்.''

''இல்லையே நேற்றும் எங்கள் வீட்டில் புளியஞ்சாதம்தான்'' என்று மன்னர் சொல்ல,

''அப்படியா?'' என்று வெள்ளையாய் மறுபடியும் வியந்தார்கள்.

அருண்மொழிப்பட்டன் மெல்ல வந்தியத்தேவருக்கு அருகே போய் நின்று அவருக்கு அருகே குனிந்து காதோரம் பேசினான். ''உங்களோடு குந்தவை விஷயம் பற்றி பேச விரும்புகின்றேன். நீங்கள் பேச விரும்புகிறீர்களா அல்லது வேறு ஏதேனும் சிந்தனையில் இருக்கிறீர்களா?'' வந்தியத்தேவர் தாமதித்தார். நெட்டுயிர்த்தார். பிறகு மெல்ல, ''சரி. பேசலாம்'' என்றார்,

இராஜேந்திர சோழரின் தங்கையார் குந்தவை பிராட்டியார் பற்றி எனக்குத் தெரியும். ஆயினும் உமது அளவு பழக்கம் இல்லை. அரண்மனைக்குள் என்ன நடக்கிறது என்று தெரிய எனக்கு வாய்ப்புகள் குறைவு. அதுவும் தவிர அவருடைய வாழ்க்கையில் நான் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. ஒருமுறை எனக்கும், அவர்களுக்கும் லேசாக சண்டை மூண்டது.

ஸ்ரீரங்கம் பெரிய கோவிலுக்கு ஒரு முறை போகும்போது என் உடைவாளை கழற்றி துவாரபாலகர் மீது சார்த்திவிட்டு போனேன். உள்ளுக்குள் கருவறையில் நுழைந்து மலர் சாத்தி

வணங்கிவிட்டு வெளியே வந்தபோது எனக்கு முன் போன குந்தவை பிராட்டியார் அந்த வாளை கையில் எடுத்து ''யாருடைய வாள் இது? எதற்கு இங்கே இருக்கிறது?'' என்று எகத்தாளமாகக் கேட்டார்.

நான் ''என்னுடைய வாள்தான்'' என்று சொன்னேன். என்ன வாளை இங்கே போட்டுவிட்டு போகிறீர்கள்? உங்களைப் போய் சேனாதிபதியாக நியமித்தார்களே என்று சொல்லிவிட்டு பதிலுக்கு காத்திராமல் போய்விட்டார். சுற்றி இருந்த அவர் தோழிகள் வேண்டுமென்றே உரக்கச் சிரித்தார்கள். அவர்கள் வார்த்தைதான் முடிவு என்பதுபோல் நடந்து கொண்டார்கள். அதற்கு பதில் சொல்ல கோபம் பொங்கி எழுந்தது. வீரமாதேவியார் 'வேண்டாம்' என்று விரல் அசைத்து அமைதியாக்கி விட்டார்கள்.

நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன. மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி என்று நான் நகர்ந்து விட்டேன். இப்பொழுது பிரச்சனை பூதாகரமாக இருப்பதால் உங்களிடம் விஷயங்களை தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். குந்தவை பிராட்டி எந்த மாதிரி?''

''அபத்தக் களஞ்சியம், ஆணவம் பிடித்த பெண்மணி. அட்டகாசம் செய்வதற்கே இடையறாது ஆசை காட்டுகிற அநாகரீகம். அரசர் குடும்பத்துப் பெண் என்றால் எல்லாவித பலமும் தனக்கு இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறவர். சேடிப் பெண்களை, வேலை ஆட்களை பிரம்பால் அடிக்க முயற்சிக்கிறவர். இராஜேந்திர சோழர் என்னவெல்லாம் செய்கிறாரோ அத்தனையும் தானும் செய்ய வேண்டுமென்று முட்டாள்தனமாக ஆசைப்படுபவர். எல்லையில்லா ஆசை அது. ஒரு விஷயம் கேள்விப்பட்டிருக்கிறாயா? அநேகமாக இராஜராஜரிடம் இருந்து அத்தனை தளபதிகளுக்கும் தெரியும்.

இராஜேந்திர சோழருக்கு பட்டாபிஷேகம் நடத்தபோது குந்தவை தனக்கும் பட்டாபிஷேகம் நடத்த வேண்டும் என்று சொன்னார். அப்படி நடத்துவது இயலாது என்று சொன்னபோது தன்னுடைய அரண்மனை வளாகத்தில் பெரிய சிங்காசனம் போட்டு காவிரியிலிருந்து ஜலம் கொண்டு வரச் சொல்லி சேடிகளை விட்டு தண்ணீர் ஊற்றச் சொல்லி தானே கிரீடம் அணிந்து கொண்டு தானே மலர் மாலை அணிந்து கொண்டு, தானே செங்கோல் வைத்துக் கொண்டு 'நான் சோழ தேசத்தின் மகாராணி'

என்று பிரகடனம் செய்து கொண்டார். 'எந்த சோழ தேசத்தின் மகாராணி' என்று இராஜராஜரின் மனைவி பஞ்சவன்மாதேவி கேட்டதற்கு 'சோழ தேசத்தை இரண்டாகப் பிரித்து வடபகுதி இராஜேந்திரனுக்கும், தென்பகுதி எனக்கும் தரப்பட வேண்டும்' என்று சொன்னார். இரண்டடி முன் வைத்து பளீர் என்று பஞ்சவன் மாதேவி குந்தவை கன்னத்தில் அறைந்தார். என்ன என்கிற பொழுது மறுபடியும் ஒரு அறை. 'யாரை அடிக்கிறீர்கள்' என்று சீறி சினந்தபோது 'சோழ தேசத்தை துண்டாடச் சொல்லி எவர் பேசினாலும் இப்படித்தான் இராஜேந்திரர் நடந்து கொள்வார்' என்று சொல்லி மறுபடியும் ஒரு அறை விழுந்தது.

சுற்றியுள்ளோர் எல்லோரும் பதறிப் போனார்கள். எவரும் இந்த ஒரு நடவடிக்கையை எதிர்பார்க்கவில்லை. 'ஐயோ ஐயோ' என்று கொஞ்சத் துவங்கினார்கள். அத்தனை பேரையும் ஒரு அதட்டில் விலக்கினார். ''இம்மாதிரி பேச்சுக்கள் இதுவே கடைசி முறை. இன்னொரு முறை உனக்கு இந்த பேச்சு வருவதாக இருந்தால் உன்னை என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும் என்று பயமுறுத்தி விட்டுப் போனார்.

இராஜேந்திர சோழரின் காதுக்கு அவர் சிற்றன்னை பஞ்சவன் மாதேவியின் அடிதடி ரகளை வந்தது. 'சிற்றன்னை செய்தால் சரியாகத்தான் இருக்கும். அவர்கள் தவறே செய்யாதவர்கள்'' என்று ஒரே வார்த்தையில் அந்த விஷயத்தை விலக்கி விட்டார். இராஜராஜருக்கு மட்டும் கொஞ்சம் வருத்தம் இருந்தது.

''அடிக்காமல் சொல்லிக் கொடேன்'' என்று மெல்லிய தாய் பஞ்சவன்மாதேவியை கடிந்து கொண்டார்.

''ஆனால் அடித்து சொல்லியும் கூட அந்த பெண்மணிக்கு புரியவில்லை.''

''என்ன காரணம்? வளர்ப்பு தவறா? அல்லது பிறப்பிலேயே ஜாதகக் கோளாறா?''

''இரண்டும்தான். கோளாறான ஜாதகம். பிறகு பட்டத்து அரசர் இராஜராஜ சோழரின் பதினான்கு மனைவிகளும் பட்ட மகிஷியின் பெண் என்பதால் கொஞ்சி, கொஞ்சி வைத்துக் கொண்டிருந்தார்கள். இவள் எல்லோரையும் மிரட்டிக் கொண்டிருந்தாள். இராஜராஜரும் முதல் மகள் என்பதால் அதிகம் கண்டு கொள்ள வில்லை.

''நடுவில் பெண் பிள்ளை'' ''அதாவது மாதேவடிகள் என்கிற சந்திரமல்லி'' ஏன் பௌத்த மதத்தை தழுவினார். சைவ சமயம் செழித்தோங்கிய சோழ தேசத்தில் அரசர் குடும்பத்தில் ஒருவர் பௌத்த மதத்தை தழுவுவது நியாயமானதா?' அருண் மொழி வினவினான்.

''விட்டால் நீரும் போயிருப்பீரல்லவா? பௌத்தம் அத்தனை கவர்ச்சியானது. அதில் பல்வேறு நல்ல விஷயங்கள் இருக்கின்றன. அவை நடுவில் பெண் பிள்ளைக்கு ஒப்புமையாக இருந்தன. அவர் அதிகம் குந்தவையால் காயப்பட்டவர். குந்தவை ஆடுகின்ற ஆட்டத்தை பார்த்து எப்படி இருக்கக்கூடாது என்று பாடமாக எடுத்துக் கொண்டவர். அந்த பாடம்தான் பௌத்தம் நோக்கி திருப்பி இருக்கக்கூடும். நான்காவது பெண்பிள்ளை இவளை கண்டு கொள்ளவேயில்லை. இவளிடமிருந்து விலகி வேறுவிதமாக வளர்ந்தாள். அவள் நேரிடையாக போரில் ஈடு படாமல் போருக்கு வேண்டிய கருவிகளையும், தனியங்களை யும் தருகின்ற ஒரு சிற்றசருக்கு வாழ்க்கைப்பட்டு மிக சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.''

''போர் என்று தீர்மானித்து விட்டால் முதலில் வருவது கங்கம்மா என்கிற அந்த மூன்றாவது பெண்ணினுடைய பெயர் தான். மிக எளிமையான குடும்பம் அவருடையது. அங்கே இடை யறாது புலவர் கூட்டம் நடந்து கொண்டிருக்கும்.''

''சரி, குந்தவையாரைப் பற்றி சொல்லுங்கள். அவர் திரு மணம் விமலாதித்தனோடு ஏன் நடந்தது?''

''திருமணம் என்றால் என்ன அர்த்தம்?'' வந்தியத்தேவர் எதிர் கேள்வி கேட்டார்.

''இதற்கு என்ன பதில் சொல்வது. திருமணம் என்றால் இரண்டு குடும்பங்கள் இணைகின்றன என்று அர்த்தம். பெரிய வர்கள் நீர் வார்த்துக் கொடுக்க பெண்ணை தானமாக கொடுப் பது என்று அர்த்தம். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து என் வாழ்நாளில் உறுதியாக உன்னை ஏற்கிறேன் என்று அர்த்தம். உன்னை விட்டு பிரியமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து கொள்வதாக அர்த்தம்.''

கூடலுக்கு பிறகு திருமணம் என்றால்....

''என்ன சொல்கிறீர்?''



சில ஆயுதங்கள்



கலிதண்டி என்கிற இடத்தில்தான் இராஜேந்திர பிரம்மராயர் கொல்லப்பட்டார். இங்கு மூன்று பள்ளிப்படை கோயில்கள் சிதிலமான நிலையில் உள்ளன.

''விமலாதித்தனை ஓடி ஓடிப்போய் குந்தவையார் காதலித்தார்கள்.''

''எங்கிருந்து எங்கு ஓடிப்போய்''

''தஞ்சையிலிருந்து திருவையாறு ஓடிப்போய் அங்கு அடைக்கலமாக இருந்த விமலாதித்தனை சுற்றி சுற்றி வந்து காதலித்தார்கள். விமலாதித்தனுக்கு வேறு வழியில்லை. கீழைச் சாளுக்கியத்தில் ஒட்டர்களாலும், மேலைச் சாளுக்கியத்தாலும், சுற்றியுள்ள நம்பிக்கை துரோகிகளாலும் அடித்து துரத்தப்பட்டு உயிர் பிழைப்பதற்காக தஞ்சைக்கு வந்து சரண் அடைந்திருக்கிறார். இராஜேந்திர சோழனின் பாதுகாப்பில் இருக்கிறார். இராஜ ராஜரும் அவனை ஆதரித்து இங்கேயே இரு. நான் ஒரு நல்ல நாள் பார்த்து அந்தப் பக்கம் போய் உன்னை அரசனாக நியமிக்கிறேன் என்று சொல்ல, அமைதியாய் காத்திருக்கிறார். இப்பொழுது ராஜராஜரின் மகள் ஓடிவந்து காதலித்தாள். அவன் என்ன செய்வான். பாவம் தர்மசங்கடம்தான். குந்தவையைப் பற்றி தெரிந்தும் காதலித்தான். எங்கே தன்னை மிரட்டக்கூடிய புருஷன் வந்துவிடுவானோ என்ற பயந்திருந்த குந்தவைக்கு விமலாதித்தனுடைய மென்மையும், அனுசரணையும் மிகவும் பிடித்துப் போயிற்று.''

எனவே உடனடியர்க திருமணம் செய் என்று பிடிவாதம் பிடித்தாள்.

''அப்படியெல்லாம் செய்ய முடியாதம்மா. நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டும்'' என்று சொல்ல,

அதெல்லாம் செய்ய முடியாது, நான் கருவுற்றிருக்கிறேன் என்று சொன்னாள். அரண்மனை கதி கலங்கிவிட்டது.

''அடக்கடவுளே'' அருண்மொழி பதறினான்.''

பரத கண்டம் முழுவதும் ஜெயித்த ராஜராஜர் எப்படி பதறி இருப்பார். யோசித்துப் பாரும். ஒரு தகப்பனுக்கு இது எவ்வளவு பெரிய வேதனை. யோசித்துப் பாரும்,''

''இது உண்மையா? பொய்யா?''

''அற்புதம், சரியான கேள்வி கேட்டீர். அது உண்மையில்லை. பொய். உடனடியாக திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக அந்தப் பெண் சொன்ன பொய்.''

''எப்படி பொய் என்று தெரிந்தது?''

''இது குறித்து விசாரித்து ஆட்களை அனுப்பி, விமலா தித்தரே ஏன் இப்படி செய்துவிட்டீர். அடைக்கலம் கொடுத் தால் இப்படி செய்வதா? என்று இராஜேந்திரர் விசாரிக்க, பூமி சத்தியமாக, என் தாய், தந்தையர் சத்தியமாக நான் இளவரசியை தொடவே இல்லை என்று அழுதபடியே சொன்னாராம்.''

''அடக்கடவுளே.''

''இவளிடம் வந்தால் நான் கருவுற்றிருக்கிறேன் என்று மறுபடி சொன்னாள். இப்பொழுது சிக்கல் வேறு விதமாகி விட்டது''

''ஆம் யார் காரணம் என்றல்லவா வந்துவிடும்''

''யார் காரணம் என்று வந்துவிட்டால் விமலாதித்தன் மறுத்துவிடக் கூடும் அல்லவா. இவ்வளவு தொலைவு வந்த பிறகு, அவன் மறுத்து இவள் மேற்கொண்டு வேறு ஆட்டம் போட சரியாக இருக்குமா? ஆகவே, எல்லா அரசிகளையும் அனுப்பி தாயே, பொய் சொல்லாதே. நிச்சயமாக உனக்கு விமலா தித்தனை திருமணம் செய்து வைக்கிறேன் என்ன சொல்றே என்ற கேட்டபொழுது உண்மையை சொல்லி இருக்கிறாள் அந்த பெண்மணி.''

''கொஞ்சம் ரசக் குறைவாக இருக்கிறதே''

ரசக்குறைவுதான். அரண்மனை ரசக்குறைவு. இதுவே ஒரு மறவர் வீட்டில் நடந்திருந்தால் வெட்டி வீழ்த்தியிருப்பார்கள். ஒரு வேளாளர் வீட்டில் நடந்திருந்தால் அடித்து வெளியே போ என்று ஊர் விட்டு துரத்தியிருப்பார்கள். அந்தணர் வீட்டில் நடந்திருந்தால் தற்கொலை செய்து கொள் என்று சொல்வார் கள். அரச குடும்பம், என்ன செய்வது. எது செய்தாலும் ஊரில் வெறும் புரளியாக அவச்சொல்லாக வரும். அது எதிரிகளுக்கு வாய்க்கு அரிசியாக போய்விடும். எனவே உடனடியாக விமலா தித்தன், குந்தவை திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

நிதானமாக நடக்க வேண்டிய ஒரு போர், விமலாதித் தனை மாப்பிள்ளையாக ஏற்றதும் அவருக்கு பரிசளிப்பதற்காக கீழைச்சாளுக்கியம் நோக்கி இராஜேந்திர சோழர் படை எடுக்க வேண்டியதாயிற்று. இராஜராஜர் சார்பில் இராஜேந்திரர் போய் கீழைச் சாளுக்கியம் முழுவதும் ஒரு சுற்று வந்து ஒட்டர்களை

அடக்கி மேலைச் சாளுக்கியம் ஆட்களை துரத்தி இங்கே நம்பிக்கை துரோகம் செய்தவர்களை தூக்கிலேற்றி பலரை தண்டித்து மிகச் சரியான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி அங்கு விமலாதித்தனுக்கு பட்டாபிஷேகம் செய்துவிட்டு வந்தார்.

பட்டாபிஷேகம் செய்த நாளிலிருந்து பத்தாவது மாதம் இராஜ நரேந்திரன் பிறந்தான்.''

''பிரச்சனை முடிந்து போயிற்றே. இனி இராஜ நரேந்திரன் தானே இளவரசன்''

''அதெப்படி. கீழைச்சாளுக்கியத்தில் அப்படி பிரச்சனை தீராது. இந்த அம்மையார் அமைதியாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். சிங்காசனத்திற்கு அருகே இன்னொரு சிங்கா சனம் போட்டு விமலாதித்தனுக்கு அருகே தானும் உட்கார்ந்து தன் கையிலும் செங்கோல் வைத்துக் கொண்டு தனக்கும் மெய்கீர்த்தி சொல்லச் சொல்லி ரகளை செய்து விட்டார். கீழைச் சாளுக்கியத்தில் உள்ள சிற்றரசர்களுக்கு சிறிதும் பிடிக்கவில்லை. கோதாவரியை தாண்டி உள்ள சிற்றரசர்களுக்கெல்லாம் கடுங் கோபம். 'இதென்ன குரங்கை கொண்டு வந்திருக்கிறாய்' என்று காதுபடவே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு தெளிவு இருந்தது.''

''என்னுடைய மனைவியான குந்தவையை அவர்கள் நன்கு அறிவார்கள். இராஜராஜ சோழனுடைய தமக்கையின் பண்பும், உத்தம குணமும், கருணையும், ஆதுரச்சாலைகள் ஏற்படுத்திய பாங்கும் அவர்கள் மிகவும் விரும்பினார்கள்.'' வந்தியத்தேவர் மிருதுவாகத் தொடர்ந்தார்.

''குறிப்பாய் விண்ணகரங்களுக்கு குந்தவை தேவியார் நிறைய உதவிகள் செய்வது கீழைச் சாளுக்கியத்தில் உள்ளவர் களுக்கு புரிந்தது. கீழைச்சாளுக்கியத்தவர்கள் வைஷ்ணவர்கள். விண்ணகரம் என்பது வைஷ்ணவத் திருக்கோவில்கள், சைவப் பழமாக இருந்தாலும், வைஷ்ணவக் கோவில்களுக்கு வாரி வாரி வழங்கும் தன்மை கீழைச் சாளுக்கியத்தவர்க்கு மிகவும் பிடித்திருந்தது.''

''திருவேங்கடமுடையான் வீற்றிருக்கும் திருமலை திருப்பதிக்கு வரச்சொல்லி அவர்களை பலமுறை வற்புறுத்தி கேட்டிருந்தார்கள். இவர்களும் பல காணிக்கைகளை அனுப்பி

வைத்தார்கள். சோழ அரச குடும்பத்தில் பலரும் சரி, இதுமட்டும் கெட்டுப்போயிருக்கிறது என்பதை புரிந்து கொண்டார்கள். ஏதேனும் தவறு நடக்கும் எனில் இராஜேந்திர சோழர் சரியான படி தீர்ப்பளிப்பார் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருந்தது.''

''ஆனால் அதில் காயம்பட்ட சில பேர் இருந்தார்கள். அவர்களை மேலைச் சாளுக்கியத்தினர் வளைத்துப் பிடித்து ஒன்றாக்கி அவர்கள் மூலம் மிக அழகிய ஒரு அரசகுலப் பெண்ணை விமலாதித்தனை சந்திக்க வைத்து அவளை இரண் டாம் முறையாக விமலாதித்தன் மணந்து கொண்டான். அந்த பெண்மணிக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. சண்டை ஆரம்பமாகிவிட்டது.''

''அது சரி இப்பொழுது இராஜேந்திரர் என்ன முடிவுக்கு வருவார்?''

''ஒரே ஒரு முடிவுதான் இராஜேந்திரர் சொல்வார் என்று எதிர்பார்க்கிறேன்.''

''என்னவென்று?''

''குந்தவையை கொன்றுவிடலாமா என்றுதான் இராஜேந் திரர் யோசிப்பார்''

''விளையாடுகிறீர்களா? உடன் பிறந்த சகோதரி அல்லவா. அவளை கொல்ல வெண்டுமென்றா மன்னர் யோசிப்பார்.''

''உனக்கு இராஜேந்திரரைப் பற்றி தெரிந்தது அவ்வளவு தான். இங்கு வந்தவுடன் நம் இருவரையும் நோக்கி அவர் கேட்கும் முதல் கேள்வி குந்தவையை கொன்றுவிடலாமா என்றுதான்.''

''அப்படி அவர் கேட்கவில்லை என்றால்,'' அருண்மொழிப் பட்டர் வந்தியத்தேவரை நோக்கி கைதட்டி ஆரவாரிக்கும் விதமாக கேட்டான்.

''என்னுடைய இந்த நாற்பது வருட அரசியல் வாழ்வை உதறிவிட்டு உத்தம சோழனின் மகன் மதுராந்தகன் போல நானும் கோவில் கணக்குகளை சரி பார்க்க போய்விடுகிறேன்.''

''அட உடனே ரோஷம் பொத்துக் கொண்டு வந்து விட்டதா?''

''உனக்கு அவ்வளவு தெரியுமா என்பது போல் நீ கேள்வி கேட்டால் எனக்கு அதைவிட அதிகமாக தெரியும் என்பதாகத்தான்

உனக்கு நான் பதில் சொல்ல வேண்டும். என்னுடைய அபிப் பிராயத்தில், என்னுடைய அரசியல் கணிப்பில், என்னுடைய அரசியல் அறிவில் நீ வெறும் சிறு குழந்தை, கை சூப்பும் பாலகன், வெறும் குந்தாணி குண்டு.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே செம்புலி அவர்களை நோக்கி நடந்து வந்தது தெரிந்தது. செம்புலி அருகே வந்ததும் மடியிலிருந்து சரக்கென்று ஒரு ஓலைச் சுருளை எடுத்து வந்தியத்தேவரிடம் நீட்டினான். ''என்ன அது?'' வந்தியத் தேவர் வாங்காமல் செம்புலியை கேட்டார்.

''உங்கள் இருவருக்கும் இந்த ஓலையை கொடுக்கச் சொன் னார்.''

''இருவருக்கும் கொடுக்கச் சொன்னார் என்று சொல்கிறாய். இருப்பது ஒரு ஓலை. அதை என்னிடம் நீட்டினால் எப்படி? அவர் சேனாதிபதி அல்லவா. சேனாதிபதிக்கு முதலில் கொடு. நான் நிதியமைச்சர் தானே.''

''இல்லை. அவர் சேனாதிபதி. நீங்கள் நிதியமைச்சர் என்று பிரிவுகள் இருக்கலாம். ஆனால் வயதிலும், அறிவிலும் மூத்தவர் நீங்கள். உங்களுக்குத்தான் முதல் மரியாதை. பிறகுதான் அருண் மொழிப்பட்டனுக்கு மரியாதை செலுத்துவது என்பது. விவரம் அறிந்த எவரும் செய்யக்கூடிய ஒன்று, அதைத்தான் நான் செய்தேன்.''

''அப்பொழுது சேனாதிபதி பட்டம் வெறும் ஒப்புக்குச் சப்பாணி என்று சொல்கிறாயாக்கும்.''

''என்னை வம்பில் மாட்டிவிடாதீர்கள். சேனாதிபதி மிகச் சிறந்தவர்தான். ஆனால் இரண்டு பேரில் யாரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொன்னால் அதில் வயதில் முதிர்ந்த உங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்.''

''சரிதான் செம்புலி, கிழவர்களுக்கு மரியாதை கொடுப் பதுதான் சோழ தேசத்தின் பண்பாடு.'' அருண்மொழிப்பட்டன் கேலி செய்தான்.

''செம்புலி, ஓலைச் சுருளை அவரிடமே கொடு. அவர் படித்துவிட்டு முழிக்கட்டும். பிறகு நான் பார்த்து விளக்கம் சொல் கிறேன்.'' வந்தியத்தேவர் சொன்னார்.

''வேண்டாமப்பா. நீ யாரிடம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறாயோ அவரிடமே கொடு'' நீ எடுத்த முடிவு சரி. வந்தியத்தேவர்தான் இங்கு மிகப் பெரிய அதிகாரி. அவர் அதிகாரி மட்டுமல்ல. அரசருக்கு உறவு, அவர் தமக்கையை மணந்த பேரறிவாளன். அத்தான் முறை. மன்னர் மாமா என்று வாஞ்சையுடன் அழைக்கின்ற மனிதரல்லவா? தன் மருமகர் கடிதத்தை அவரே படிக்கட்டும்'' என்று இரண்டடி அருண்மொழி பின்னே நடந்தான்.

ஓலைச்சுருள் வந்தியத்தேவரிடம் கொடுக்கப்பட்டது. ஓலைச்சுருளை பிரித்துப் படித்தார். மெல்ல அருண்மொழியிடம் நீட்டினார். அருண்மொழி அவரைப் பார்த்து ''என்ன?'' என்று கேட்டான்.

''படி'' என்று ஒரு வார்த்தையில் சொன்னார். மெல்ல பிரித்து படித்தான். 'குந்தவையை கொன்றுவிடலாமா' இரண்டே வார்த்தைகள் இருந்தன. அருண்மொழிப்பட்டன் திகைத்துப் போனான். ஆச்சரியத்துடன் வந்தியத்தேவரைப் பார்த்தான்.

''இது சிவன் சன்னதி. சிவன் சன்னதியில் சிவனைத் தவிர வேறு எவரையும் வணங்குவது முறைமை அல்ல. எனவே, உமது இரண்டு கைகளையும் கால்களாக பாவித்து நான் கண் ணில் ஏற்றிக் கொள்கிறேன்.'' இரண்டு கைகளையும் பற்றி கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

வந்தியத்தேவர் நெகிழ்ந்து போனார். குனிந்து வணங்கிய அவன் முதுகை தடவினார். தலையை கோதினார். இழுத்து அருகே உட்கார வைத்துக் கொண்டார்.

''என்னை பாராட்டுவது இருக்கட்டும். சொல். குந்தவையை கொன்றுவிடலாமா?''

''கூடாது''

''ஏன்?''

''இராஜநரேந்திரனுக்காக குந்தவை உயிரோடு இருக்க வேண்டும். குந்தவையை கொன்றுவிட்டு இராஜநரேந்திரனை என்ன செய்வதாக உத்தேசம். அவனை அங்கு அரசாக நிய மிக்க வேண்டும். விமலாதித்தன் லாயக்கில்லாதவன். இராஜ நரேந்திரனை சிம்மாசனத்திற்கு லாயக்கு உள்ளவனாக அங்கே திடமாக கால் ஊன்றி நிற்பவனாக நாம் செய்ய வேண்டும்.

வேண்டுமென்றால் குந்தவையை இராஜநரேந்திரனிடமிருந்து பிரித்துவிடலாம். மிகச் சிறந்த பண்டிதர்களை அவனுக்கு துணையாக வைக்கலாம். தாயைக் கொன்றுவிட்டு பிள்ளைக்கு பட்டம் என்றால் எங்கோ ஒரு இடத்தில் பிள்ளைக்கு வலிக்கத் தானே செய்யும். அதை செய்யக்கூடாது. செய்தது இராஜேந்திரர் என்றால் கசப்பு அதிகமாகும். கசப்பு அதிகமானால் அவனும் மேலைச்சாளுக்கியம் பக்கம் சாய்வான். அப்படி மேலைச் சாளுக்கியம் பக்கம் சாய்ந்தால் கீழைச்சாளுக்கியம் மேலைச் சாளுக்கியம் வசம் எளிதாகச் சிக்கிக் கொள்ளும். அப்படி கீழைச் சாளுக்கியம், மேலைச்சாளுக்கியத்தின் வசம் சிக்கிக் கொண்டால் கீழைச்சாளுக்கியத்திலிருந்து, மேலைச்சாளுக்கியம் படைகள் திரட்டிக்கொண்டு தெற்கு நோக்கி திருவொற்றியூர் வரும். திருவொற்றியூர் த்தாக்கத் தொடங்கி தொண்டை நாடு, நடு நாடு எல்லாம் தாண்டி தஞ்சையில் கால் வைக்கும். நாம் பலஹீனமாவோம். ஒருபோதும் குந்தவையை கொன்று விடக் கூடாது.''

''நாம் பலமாக இருக்க வேண்டுமென்றால் அந்த அம்மையார் உயிரோடு இருக்க வேண்டும். நாம் அந்த அம்மையாரை விட பலமும், தெளிவும் மிக்கவனாக இராஜநரேந்திரனை மாற்ற வேண்டும். இது இந்த எளியேனுடைய எண்ணம்.''

''அற்புதமடா. அற்புதம். ஒரு நூல் காட்டினால் போதும். மொத்த சேலையின் தரத்தை சொல்லிவிட்டாய். நீ இப்படி சொன்னாய் என்று இராஜேந்திரரிடம் சொல்லி விடுகிறேன்.''

''இருங்கள். ஏதேனும் தவறு இருக்கிறதா?''

''இல்லையே.''

''அப்பொழுது நீங்கள் சொன்னதாக சொல்லி விடுங்களேன்.''

''இல்லை. அருண்மொழிப்பட்டன் எவ்வளவு தெளிவாக இருக்கிறான் என்று நான் அவரிடம் சொன்னால் அது கூடுதல் மதிப்பு. நீ விழுந்து வணங்கினாய் அல்லவா. உனக்கு நான் ஏதேனும் பரிசு தர வேண்டுமல்லவா. இதை என் பரிசாக வைத்துக் கொள். இராஜேந்திரர் வந்தவுடன் உன்னுடைய புத்தி சாலித்தனத்தை நான் மனமாற, உண்மையாக பாராட்டப் போகிறேன்.''

இந்த முறை அவர் அவனை இறுக்க அணைத்துக் கொண் டார். அவனும் அவரை அணைத்துக் கொண்டான்.

ஐம்பது வயது இளைஞனும், அறுபத்தைந்து வயது கிழ வனும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு உட்கார்ந்திருப்பது அற்புதமான காட்சியாக இருந்தது. தொலைவில் திரும்பி சட் டென்று இதைப் பார்த்த இராஜேந்திரர் புன்னகை செய்து கொண் டார்.

அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். நான் இன்னும் வரவில்லையே என்று பரபரத்தார். ஜனங்களை நோக்கி கைகூப் பினார். மெல்ல நாற்காலி விட்டெழுந்தார். விடை பெற்றுக் கொண்டு வந்தியத்தேவரையும், அருண்மொழியையும் நோக்கி நடக்கத் துவங்கினார். நண்பர்கள் எழுந்து நின்றார்கள்.

* * *

அத்தியாயம்

7

''என்ன முடிவு செய்தீர்?'' வீரமாதேவியார் கேட்டுக் கொண்டே மாமன்னர் இராஜேந்திரரை நோக்கி வந்தார். அவருக்கு அருகே வந்து மிக நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார். மறுபுறத்தில் பரவையார் அழகாக அசைந்து வந்து இன்னும் நெருக்கமாக மன்னரிடம் உட்கார்ந்து கொண்டார்.

வந்தியத் தேவரும், அருண்மொழிப்பட்டனும் மெல்ல விலகி எதிர்ப்பக்கம் கைகட்டி நின்று கொண்டார்கள்.

''அடடே நீங்கள் நிற்கிறீர்களே'' என்று மன்னர் பரபரத்தார். ஆனால் தொலைவில் செம்புலி நீண்ட மர ஆசனத்தை தலையில் சுமந்து கொண்டு வந்தான். அந்த மர ஆசனம் உட்காருவதற்காக அல்ல. கோவிலில் உள்ள பாத்திர, பண்டங்களை வைப்பதற்கு உண்டானது. பாத்திர, பண்டங்களை எடுத்து வைத்து விட்டு அதை சுத்தமாக்கி கொண்டு வருகிறான்.

அதை அருகே கொண்டு வந்து போட்டு, தன் மூன்றாம் துண்டை எடுத்து துடைத்து அதை விரித்து வைத்தான். வந்தியத் தேவரை நோக்கி 'உட்காருங்களய்யா' என்று மரியாதையாக வினவினான். வந்தியத் தேவர் அமர்ந்து கொண்டார். பிறகு அருண்மொழியும் உட்கார்ந்து கொண்டான்.

'என்னை உட்கார் என்று சொல்லவில்லை அல்லவா செம்புலி, உன்னை கதற அடிக்கிறேன் பார்' என்று மனதுக்குள் மெல்லியதாய் அருண்மொழி கருவிக் கொண்டான்.

செம்புலிக்கு தஞ்சைதான் ஊர். தஞ்சாவூரில் அவனுக்கு வீடுகளும், நிலங்களும், தோப்புகளும் உண்டு. எனவே அவன் இங்கிருந்து போகப் பிடிக்காமல் அவன் அரண்மனை மெய்க் காவலில் இருந்து அரசரின் மெய்க்காவல் என்று இடம் மாறி விட்டான். இவன் படைத்தளபதிகளில் ஒருவன் அல்ல. ஆனால் மெய்க்காவல் படைக்கு முக்கியமானவன். கிட்டத்தட்ட உளவாளி, இவனை தஞ்சையிலிருந்து விரட்டி அடித்தால் சிறகு ஒடிந்தது போல ஆவான். தஞ்சையிலிருந்து இவனை வெளியே அனுப்ப

ஏற்பாடு செய்து பிறகு செம்புலி வேண்டாம். வேறு யாரை யாவது வைத்துக் கொள்ளலாம் என்று அவனை பின்தள்ளி விட வேண்டும். தனியே கூப்பிட்டு பிய்த்து எறிந்துவிடுவேன் ஜாக்கிரதை என்று பயமுறுத்த வேண்டும்.

செம்புலி போன்ற போன தலைமுறை ஆட்களை அதிகம் ஆடவிட்டால் இன்னும் வேகமாக ஆடிக்கொண்டிருப்பார்கள். அடேய் அருண்மொழி என்று கூப்பிடுவார்கள் என்று உள்ளுக் குள் லேசான ஒரு கோபம் பொங்கியது.

இது மெய்க்காவல் படைக்கே உண்டான ஒரு திமிர். இதை அடக்கி வைக்க வேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது.

''என்ன முடிவு செய்தீர்கள்'' மறுபடியும் வீரமாதேவி உரத்த குரலில் கேட்டாள்.

மன்னர் கோவிலை விட்டு வெளியே வந்து விட்டதால் கூட்டம் கோவிலுக்குள் 'சிவோஹம்' என்று சொல்லியபடியே உள்ளே போனது. இப்பொழுது வந்தியத்தேவரின் படைவீரர்கள் பெரிய வட்டமாக தள்ளி நின்று கொண்டார்கள். அவர்களைத் தாண்டி யாரும் உள்ளே வர இயலாது.

பின்னே இருக்கின்ற மண்டபத்தில் இராஜேந்திர சோழர் உட்கார்ந்து கொண்டிருந்தார். அங்கு வரிசையாக சிவலிங்கங் கள் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தன. சோழ சாம்ராஜ்யத்தில் மிக முக்கியமான பதவியில் இருப்பவர் இறந்து போனால் அவருக்கு நினைவாக இப்படி சிவலிங்கங்கள் வைப்பது பழக்கம். இது தவறான பழக்கம்' என்று கிருஷ்ணன் ராமன் இரண்டு, மூன்று முறை சொல்லியும் யாரும் கேட்கவில்லை. இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு சிவலிங்கமாக நின்று விடுகிறது.

இப்படியே, போனால் கோவிலைச் சுற்றி பல வரிசையில் சிவலிங்கங்கள் இருக்கும். எதற்கும் வழிபாடு இருக்காது. எதற்கும் மரியாதை இருக்காது. குழந்தைகள் ஒவ்வொரு சிவலிங்கமாக காலில் தடம் வைத்து ஓடிக் கொண்டிருப்பார்கள் என்று எச்சரித் தார். ஆனால் அந்த எச்சரிக்கை எதற்கும் பயன் தரவில்லை.

மிகச் சிறந்த தலைநகராக விளங்கிய தஞ்சாவூர் மெல்ல மெல்ல சோபை இழந்து கொண்டு வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு காட்சி. அருண்மொழிப்பட்டன் அதையும் மனதில் குறித்துக் கொண்டான். ஊர் விட்டு போகும் பொழுது இந்த இடத்தில்

இதற்கு மேல் சிவலிங்கங்கள் வைக்கக்கூடாது என்று எழுத்து மூலமாக உத்தரவு வாங்கி அதை கல்வெட்டாக அடித்து விட வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது.

மாமன்னர் ஒரு சிறிய யோசனை சொன்னார். அது எனக்கு உவப்பாக படவில்லை. நண்பர் அருண்மொழிப் பட்டனும் அவ்விதமாகவே எண்ணுகிறார். அதைப் பற்றி இனிமேல் தான் மன்னரிடம் தெரிவிக்க வேண்டும்.

"என்ன யோசனை சொன்னீர்கள்?" வீரமாதேவி வாஞ்சை யோடு விளித்தார்.

வீரமாதேவி நல்ல உயரம், கிட்டத்தட்ட இராஜேந்திர சோழ ருக்கு இணையான உயரம். அகலமான தோள்கள் கொண்ட கைகள். உறுதியான முன் கை. இறுக்கமான இடுப்பு. அகல மானது. பயிற்சியால் கெட்டிப்பட்டதுமான தொடை, சிறிய மார்பகங்கள், வீரமாதேவி போர் பயிற்சி பெற்றவர். ஓடுகின்ற குதிரையிலிருந்து ஈட்டி எறிவதற்கு அவளுக்கு மிகவும் பிடிக் கும். குறி தவறாமல் எறியக்கூடியவள். மாமன்னருடன் பலமுறை அவர் போருக்கு போயிருக்கிறார்.

மேலைச்சாளுக்கியத்தை ஊடுருவிப் போனபோது ஹொட்டூர் என்ற ஊரில் 'இரட்டை பாடி' நாட்டில் பாடி இறங்கி யிருந்தார்கள். அப்பொழுது மாமன்னர் இருக்கின்ற இடத்திற்கு அருகே உள்ள குளத்தில் குழந்தைகளை விடியற்காலையில் அனுப்பி விஷம் கலக்கச் செய்திருந்தார்கள். விஷம் இருப்பது தெரியாமல் சோழ வீரர்கள் பல் தேய்க்க நீர் அள்ளி குடித்துவிட்டு உடனே மயக்கமானார்கள். குரல் கூட கொடுக்க முடியாமல் விழுந்து இறந்து போனார்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று பலநூறு பேர்கள் இறந்து போக திடீரென்று மாமன்னர் விழித்துக் கொண்டு 'ஏதோ தவறு, ஏதோ தவறு' என்று எழுந்து பதற, என்ன தவறு என்று சில நிமிடங்களுக்குள் தெரிந்து விட்டது. அதற்குள் முன்னூறுக்கும் மேற்பட்ட வீரர்கள் இறந்து போனார்கள்.

இதுதான் உங்கள் நாகரீகம் என்றால், இந்த விதமாகத்தான் உங்கள் போர் என்றால் எங்கள் போர் இந்த விதமானது என்று வீரமாதேவி உரக்க கத்தினாள். தரையில் அடித்தார்.

கிராமம் முழுவதும் சோழப்படை சூறையாடியது. வீரமா தேவியாரே ஈட்டியை கையில் எடுத்துக் கொண்டு பலபேரைக்

குத்திக் கொன்றாள். 'தூ' என்று முகத்தில் துப்பிய ஒரு பெண் மணியின் புடவை உருவி பிரம்பால் விளாசினாள். கதறக், கதற அடித்தாள். பிறகு அருகே போய் கத்தியை கழுத்தில் வைத்து 'பரக்' என்று இழுத்து தலையைத் துண்டாக்கினாள்.

மாமன்னரின் கோபத்திற்கு இணையான ஒரு பெண் கோபத்தை அப்பொழுது தான் சோழப்படை பார்த்தது. அன்றிலிருந்து மிகப்பெரிய மரியாதை வீரமாதேவிக்கு சோழப்படையில் இருந்தது. தொடர்ந்து அந்த மேலைச்சாளுக்கிய போர் முழுவதும் வீரமாதேவியார் தன் திறமையைக் காட்டினார்.

ஆனால் பரவையார் வேறு விதம். பரவையார் நடனப் பெண்மணி. மாமன்னரின் கோபத்திற்கு வீரமாதேவியார் கூட கலவரப்பட்டு நிற்கும்போது, பரவையார் முன்னேறி, 'போதும் கோபப்பட்டது. உடல்நலத்திற்கு கேடு' என்று சொல்லி அவரை அடக்க முயற்சிப்பார். மன்னரும் அடங்கிப் போவார்.

பரவையார், இராஜேந்திர சோழர் காதல் சோழ தேசத்தில் பிரசித்தமானது. நாட்டிய நாடகமாகக் கூட நடைபெறுகிறது. பரவையாரின் உயரத்திற்கு வெண்கல விளக்கு செய்து அதை பரவையாரை சந்தித்த இடத்தில் ஏற்றி தூக்கிக் கொண்டு போய் அழகாக கோவில் கருவறையில் வைத்திருக்கிறார். 'எங்களுடைய காதல் தீபம்' என்று மன்னர் சொல்ல பரவையாருக்கு மிகப்பெரிய மரியாதை சோழ தேசத்தில் கிடைத்தது. பரவையாரோடு ஒரே தேரில் ஏறி மாமன்னர் திருவாரூரை வலம் வந்தார். நக்கன், நடனப் பெண்மணி என்று இருந்த பரவையாருக்கு அந்த ஊரில் மிகப்பெரிய மதிப்பு ஏற்பட்டது.

சில சமயம் அரசருடைய மற்ற மனைவியர் கூட மன்னரிடம் பரவையார் மூலமாக காரியம் சாதிப்பது உண்டு. அரண்மனைக் காவல், மெய்க்காவல் இவைகளும் பரவையாரை தங்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்காக அணுகுவது உண்டு. பரவையார் சொன்ன சொல்லை அனேகமாக மன்னர் மீறியதே இல்லை. காதல் திருமணம் முடித்து பத்து வருடங்கள் ஆனாலும் பரவையாரின் அழகு சற்றும் குறையவில்லை.

தொடர்ந்து அரண்மனைக்குள்ளே நடனமாடுவதாலும், குறைவாக உண்பதாலும், சிவபூஜை செய்வதாலும் அவருடைய உடம்பு கச்சிதமாக இருந்தது. உடுப்பதில் மிக அழகான நறுவிசு

தெரியும். தலை அலங்காரம் தனித்ததாக இருக்கும். நகைகள் அவருடைய அழகைக் கூட்டும்.

''என்ன சொன்னார் மாமன்னர்'' மறுபடியும் வீரமாதேவியார் கேட்டார்.

'குந்தவையை கொன்றுவிடலாமா' என்று மாமன்னர் ஓலை அனுப்பினார். வந்தியத் தேவர் விளம்பினார்.''

''அதையே நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொண்டிருந் தோம்.''

''என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்.'' மன்னரை விட்டு வந்தியத்தேவரை நோக்கி வீரமாதேவி திரும்பி உட்கார்ந்துக் கொண்டாள்.

''எந்த முடிவுக்கும் வரவில்லை. என்ன செய்வது என்று நாங்களும் யோசித்துக் கொண்டிருந்தோம்.''

''என்ன முடிவுக்கு வந்தீர்கள்? ஒரு முடிவுக்கு வந்ததாக வேண்டுமே'' என்று வீரமாதேவியார் வந்தியத் தேவரை மடக்க, வந்தியத்தேவர் மெல்லிய பரிதாபத்தோடு அருண்மொழியைப் பார்த்தார். அருண்மொழி சுதாரித்துக் கொண்டான்.

அரசருக்கு அருகே இருக்கின்ற பெண்களின் கர்வம் இப்படி அடிக்கடி வெளிப்படும். இதை சமாளிக்க ஒரு சேனாதிபதியோ, அமைச்சரோ கற்றுக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் பின் வாங்கினால், தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டால் அந்த பெண்களின் கர்வம் அதிகமாகிவிடும்.

எனவே சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும் என்று மூளைக்கு கட்டளையிட்டான்.

''வீரமாதேவியாரே, குந்தவையை கொன்றுவிடுவதால் எந்த பயனும் இல்லை. அது இராஜநரேந்திரனுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தும். ஒரு வேளை இராஜநரேந்திரனுக்கு குந்தவையை கொன்றது மாமன்னர்தான் என்று தெரிந்தால் மாமன்னர் மீது வெறுப்பு வரும். அப்படி வெறுப்பு வந்தால் அவர் சோழ தேசத்தை விட்டு விட்டு மேலைச் சாளுக்கியம் பக்கம் சாய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஒரு இளவரசர் தன் பக்கம் சாய்வதற்கு மேலைச்சாளுக்கியம் காத்துக் கொண் டிருக்கிறது. மேலைச்சாளுக்கியம் விரைவாக விமலாதித்தருடைய முதல் மகனான இராஜநரேந்திரனை அரசராக்கும். உன்னுடைய

தாயைக் கொன்ற உன்னுடைய மாமனை அடித்துக் கொல் என்று உசுப்பேற்றி விடும். உற்சாகப்படுத்தும்.

பெரிய படைபலத்தை திரட்டி இராஜநரேந்திரனை முன்னே அனுப்பி திருவொற்றியூரை தாக்கச் சொல்லும். தொண்டை நாடு, நடுவாடு என்று சகலமும் தாக்கி காஞ்சிபுரத்தை சூறையாடி, பிறகு சோழதேசத்தின் எல்லையில் கால் வைக்கவும் துணியும். மேலைச்சாளுக்கியம் கீழைச்சாளுக்கியத்தோடு ஒன்று சேர்ந்து கொண்டால், நம்மால் அவர்களை எதிர்ப்பது கடினம். அதேநேரம் பின்பக்கத்திலிருந்து பாண்டியர்களும், சேரர்களும் ஏன் இலங்கை கடற்படையும் நம்மை தாக்கத் துவங்கலாம். ஐந்து பக்கமும் நாம் மிக மோசமாக சிக்கிக் கொள்வோம். நம்மால் அப்பொழுது வெற்றிபெற முடியுமா என்பது கூட சந்தேகம். எனவே ஒருநாளும் இராஜநரேந்திரனுடைய மனம் கோணும்படியான செயலை செய்யக்கூடாது.

"குந்தவை நல்லவளோ, கெட்டவளோ, சரியோ, தவறோ, இராஜநரேந்திரனின் தாய், அவளை பாதுகாக்க வேண்டியது மிக முக்கியம்."

'மேலைச் சாளுக்கியத்தாலேயே குந்தவையை கொன்று விடும்படியான ஒரு ஏற்பாடு செய்தால்." மன்னர் பேசினார்.

"இல்லை மேலைச்சாளுக்கியத்தார் ஒருநாளும் அந்தச் செயலை செய்ய மாட்டார்கள். அப்படி செய்தால் குந்தவையாருடைய புருஷன் விமலாதித்தனுடைய ஆதரவுகூட கிடைக்காது. இப்பொழுது விமலாதித்தனுடைய ஆதரவால் தான் மேலைச் சாளுக்கியம் ஆடிக்கொண்டிருக்கிறது. 'குந்தவையைக் கொல்' என்று ஒருநாளும் விமலாதித்தர் சொல்லமாட்டார். அவருக்கு உங்கள் மீது பயம்."

"மேலைச்சாளுக்கியத்தை நீங்கள் என்ன தூண்டினாலும், என்ன தந்திரம் செய்தாலும் ஒருபொழுதும் குந்தவையின் மீது கைவைக்க மாட்டார்கள். குந்தவையை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறார்களே அதுவே எனக்கு மிகப்பெரிய சந்தேகம். இந்த அம்மையாரே அரண்மனைக்குள் புகுந்து கதவை தாழிட்டுக் கொண்டு என்னை வீட்டுக்-காவலில் வைத்திருக்கிறார்கள் என்று ஓலை அனுப்பி இருக்கலாம்."

"விமலாதித்தருக்கு அவளை சமாதானம் செய்யத் தெரியாது. சமாதானம் செய்யவும் விட மாட்டார்கள். அப்படியே

கிடக்கட்டும் விடு என்று சொல்வார்கள்.'' அருண்மொழிப்பட்டன் பேசியபடி எழுந்து நின்று கொண்டான்.

''நீங்கள் படை எடுத்து வருவதை எதிர்பார்ப்பார்கள். எப்பொழுது படைவரும் என்று அதற்கு ஆயத்தமாக இருப் பார்கள். மேலைச்சாளுக்கியத்தினுடைய பெரும்படை இந்நேரம் கீழைச்சாளுக்கியத்தை அடைந்து விமாலாதித்தனுக்கும், அவனது இரண்டாவது மகனுக்கும் காவலாக இருக்கும். எல்லைப் பகுதி கள் பலப்படுத்தப்படும். நீங்கள் யானைகளோடு வருவீர்கள் என்று தெரிந்து அவர்கள் குதிரைப்படையை தயார் செய்வார்கள்.''

''வில்லாளிகளை முன்னே நிறுத்தி அம்பின் நுனியில் நெருப்பு பற்ற வைத்து தீப்பந்தத்தோடு யானைகள் மீது எறி வார்கள். யானைப் படைக்குள் கலவரம் ஏற்படுத்த முயற்சி செய்வார்கள். சோழப்படையின் தற்போதைய பலம் யானைப் படை என்று அவர்களுக்குத் தெரியும். ஒருவேளை இரட்டைப் பாடி தேசத்தில் இருந்தும் ஒருபடை வரலாம். கெட்டிக்காரர் களாக இருந்தால் ஒட்டர்களை துணை சேர்த்துக் கொண்டு பெரிய பலத்தோடு உங்களை எதிர்க்கலாம். எனவே போருக் கான ஆயத்தங்கள் அங்கு நடக்கும்.''

''இப்பொழுது என்ன செய்வது?''

''என்னுடைய அபிப்ராயம் ஒன்று உண்டு. தவறாக இருந் தால் மன்னிக்க வேண்டும்.'' வீரமாதேவி உள்ளே புகுந்தாள்.

''நாடகமாடாதே வீரமாதேவி. எல்லோரும் தங்களுடைய பேச்சை எந்தவித பீடிகையும் இன்றி சொல்லிக் கொண்டிருக்க நீ மட்டும் மிக அடக்கமானவள் போல் நடிக்க வேண்டாம் சொல். உன்னுடைய எண்ணம் என்ன?''

''ஒரு சிறு படையை அனுப்பி'' வீரமாதேவி அமைதியாக இருந்தாள். எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந் தார்கள். ஒரு சிறு படையை அனுப்பி குந்தைவையையும், இராச நரேந்திரனையும் சோழ தேசத்திற்கு கடத்திக் கொண்டு வந்து விட வேண்டும்.''

''பிறகு''

''அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும். சோழ தேசத்திற்கு குந்தவையும், இராசநரேந்திரனும் வந்து விட்டால் அங்கு இரண்டாவது மகனுக்கு இளவரசு பட்டமோ அல்லது

மன்னர் பட்டமோ கட்ட விமலாதித்தன் துணிவாரல்லவா. அப்பொழுது விமலாதித்தனுக்கு துணையாக மேலைச்சாளுக்கிய படை ஈடுபடுமல்லவா. அந்த மேலைச்சாளுக்கிய படைக்கு உதவியாக இருக்கின்ற கீழைச்சாளுக்கிய தளபதி யார், அதிகாரி யார் என்று அடையாளம் காணவேண்டும். யாருக்கெல்லாம் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கிறது என்று அங்கு வேவுப்படையினர் வைத்து கவனித்துக்கொள்ள வேண்டும். இராசநரேந்திரனும், குந்தவையும் பத்திரமாக இங்கு வந்து சேர்ந்த பிறகு பெரும்படையோடு வேங்கியை நோக்கி நாம் நகர வேண்டும்.''

''மேலைச்சாளுக்கியத்தை வேங்கியிலிருந்து மட்டும் விரட்டுவது மட்டுமல்லாமல் இன்னும் நகர்ந்து போய் கலிங்கரையும் ஒட்டர் தேசத்தையும் நாம் தாக்க வேண்டும். ஒட்டருடைய துணையும் மேலைச்சாளுக்கியத்திற்கு தேவை. அவர்களுடைய ஆளுமையும் விமலாதித்தன் தலையில் இருக்கிறது. ஒன்றுக்கு இரண்டு சுமைகளை சுமந்து கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் விமலாதித்தன் விழித்துக் கொண்டிருக்கிறார். அதே நேரம் சோழ தேசத்தைப் பற்றிய மிகப்பெரிய கலவரம் அவருடைய வயிற்றில் இருக்கிறது. மூன்று விதமான தாக்குதலுக்கு ஆளாகி தூங்க முடியாமல் தவிர்த்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய வேலை இப்போதைக்கு அவர்கள் இருவரையும் கடத்திக் கொண்டு வருவதுதான்.''

''கடத்தல் எளிதல்ல. என் தங்கை குந்தவையை நம்பி நாம் எந்த காரியத்திலும் ஈடுபடமுடியாது.'' மன்னர் சற்று சந்தேகமாக சொன்னார்.

''எனக்கு புரிகிறது. ஆனால் இதை விட்டால் வேறு வழியில்லை. குந்தவையை நீங்கள் மயக்க மருந்து கொடுத்து யானை மீது கடத்திக் கொண்டு வந்துவிட வேண்டியதுதான். இராச நரேந்திரனுக்கு உற்சாகம் கொடுத்து அழைத்து வந்து விட வேண்டியதுதான். அதற்காக நம்முடைய வீரர்கள் சிலரையும் நாம் பலி கொடுக்க வேண்டியிருக்கும். நாம் உள்ளே நுழைந்து அவர்களை கடத்திக் கொண்டு போகிறோம் என்றால் கடைசிவரை திருவொற்றியூர் வரை அவர்கள் துரத்திக் கொண்டு வருவார்கள்.

எனவே, வர, வர அவர்கள் முன்னேற முன்னேற அங்கங்கே படைகள் நிறுத்தி கடும் எதிர்ப்பை நாம் காட்ட வேண்டும்.



யானைப்படை. இரண்டாவது யானைக்கு உடல் கவசம்

GKC- Musanki
733 km - NH 42
Khammam
Rajahm
Andhra Pradesh
Vijayawada
Guntur
Hubli
Nallar Forest
Route 1
Karnataka
Davanagere
Nellore
Route 2
Shravanur
Chennai
Route 3
Bangalore
Vellore
Mandavi
Mysuru
Puducherry
Kannur
Salem
Tamil Nadu
Kozhikode
Coimbatore
Tiruchchirappalli
Google

அதாவது பத்து பேர் கொண்ட படை குந்தவையினுடைய மாளிகையைச் சுற்றி கதவு உடைத்து வெளியே அவர்களை அழைத்து வர வேண்டும். அடுத்த மூன்று கல் தொலைவில் இன்னொரு நாற்பது பேர் கொண்ட படை காத்திருக்க வேண்டும். அடுத்து ஒரு பத்து கல் தொலைவில் நூறுபேர் கொண்ட நம் படை சரியாக இருக்க வேண்டும். அடுத்து ஒரு பத்துகல் தொலைவில் நானூறு பேர் கொண்ட படை இருக்க வேண்டும்.

ஆக தெற்கு நோக்கி வர வர, சோழ தேசம் நோக்கி வர வர, திருவொற்றியூர் நோக்கி வர வர, நமது படை பலமாக இருக்கும். எனவே மிகக் கவனமாக செயல்பட வேண்டும்.''

''இதில் ஒரு குறை இருக்கிறது தாயே.'' வந்தியத்தேவர் சட்டென்று பதில் சொன்னார்.

''என்ன குறை'' வீரமாதேவி அவர் பக்கம் திரும்பினார். ''நீங்கள் சொல்வது போல கிட்டத்தட்ட ஆயிரம் பேர் கொண்ட ஒரு படையை திருவொற்றியூரைத் தாண்டி மேலைச்சாளுக்கியம் நோக்கி அனுப்பினால் ஒற்றர்கள் மூலம் வெகு எளிதாக இது வேங்கி தேசத்துக்குப் போய் சேர்ந்துவிடும். எனவே நம்மை தாக்க வருகிறவர்கள் மெல்லியதாக நூறுபேர் கொண்ட படையோடு வரமாட்டார்கள். வருவது பல்லாயிரக்கணக்கான படைகளாக இருக்கும்.''

ஒருவேளை நீங்கள் அவர்களை மீட்க வரக்கூடும் என்ற எண்ணத்தையும் அவர்கள் வைத்திருக்கக் கூடும். சோழ தேசத்தினுடைய எல்லா அசைவுகளும் மேலைச் சாளுக்கியத்திற்கு அத்துப்படி. இது மிகச் சிறந்த திட்டமாக எனக்கு தோன்றவில்லை.''

''எனக்கு தோன்றுகிறது,'' வந்தியத்தேவர் பேசி முடித்த அடுத்த க்ஷணம் அருண்மொழிப் பட்டன் ஆரம்பித்தான். மாமன்னர் வாய்விட்டுச் சிரித்தார்.

''அதுதானே பார்த்தேன். நீங்கள் இருவரும் என்ன ஒற்றுமை ஆகிவிட்டீர்களா என்று. அந்த அதிசயமெல்லாம் சோழ தேசத்தில் நடைபெறாதே.'' மாமன்னர் மறுபடியும் சிரித்தார்.

மற்றவர்களும் அந்த சிரிப்பில் சேர்ந்து கொண்டார்கள். அருண்மொழிப் பட்டன் சிரிக்காது தரையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஆனால் ஒரு சிறு திருத்தம் கொண்டு வர விரும்புகின் றேன். பத்து பேர் கொண்ட படை என்று போகாது ஒரு லட்சம் பேர் கொண்ட படையை நாம் அனுப்ப வேண்டும்.''

''என்ன சொல்கிறாய் அருண்மொழி.''

''ஒரு லட்சம் பேர் கொண்ட படை திருவொற்றியூரைத் தாண்டி மேலைச்சாளுக்கியம் நோக்கி நடக்க வேண்டும். அவர்கள் பதறுவார்கள். துடிப்பார்கள். பெரிய போருக்கு தயா ராவார்கள். அதே நேரம் குந்தவை தேவியாரின் வீட்டு பூட்டை உடைத்து அவரையும், அவரது மகனையும் பத்திரமாக தேரில் ஏற்றி நமது படைகளுக்கு நடுவே கொண்டு வந்து விட வேண் டும். படைகள் எதிர்த்து வரும். நமது படை வேங்கி தேசத்து படைகளை தடுத்து நிறுத்தி, இவர் மட்டும் நம்முடைய படையை கிழித்துக் கொண்டு தஞ்சையை நோக்கி பயணப்பட வேண்டும்.''

''அவர் திருவொற்றியூர் எல்லையை கடந்துவிட்டார் என்று தெரிந்ததும் நமது படை மெல்ல மெல்ல பின்வாங்க வேண்டும். சோழர்களை வெற்றி கொண்டதான ஒரு சந்தோ ஷத்தை விமலாதித்தனுக்கும், அவனது இரண்டாவது மகனுக்கும், மேலைச் சாளுக்கியத்திற்கும் ஏன் ஒட்டர்களுக்கும் தரவேண்டும்.''

''பிறகு''

''என்ன, ஏது என்று குந்தவையையும், இராஜநரேந்திரனை யும் விசாரித்த பிறகு அவர்கள் சொன்னது போல ஒன்பது லட்சம் படைவீரர்களுடன் உள்ளே புகுந்து கீழைச்சாளுக்கியத் தின் பல்வேறு விஷயங்களை நாம் வேரறுத்து வீசி எறிந்து ஒட்டர்கள் வரை தாக்க வேண்டும். மேலைச் சாளுக்கியத்து படையை அடித்து துரத்த வேண்டும். அம்மையார் சொன்னது போல யாரெல்லாம் எதிரிகளாக செயல்படுகிறார்கள் என்று தெரிந்து களையெடுப்பு நடத்த வேண்டும்.''

வீட்டு கதவை திறந்து வாருங்கள், வாருங்கள் வெளியே என்று குந்தவையைச் சொல்லி அழைத்து வருவதுதான் நல்லது. ஏன் என்று கேட்டால் ஒன்பது லட்சம் வீரர்கள் வந்து விட்டார்கள் என்று குந்தவையாரிடம் சொன்னால் போதும். அவர் உடனே தன் வார்த்தைக்கு மிகப்பெரிய மரியாதை இருக்கிறதென்று தேர் ஏறி அவர்கள் நமது படையை கிழித்துக் கொண்டு தெற்கு நோக்கி வருவார்கள்.

''அதற்குப் பிறகு திமிறினால் மயக்க மருந்து கொடுத்து விட வேண்டியதுதான். விமலாதித்தன் மகனான இராஜ நரேந் திரனிடம் விவரத்தைச் சொல்லி அவனையும் அழைத்து வந்து விட வேண்டியதுதான்.'' என்று அருண்மொழி சொல்ல, மாமன்ன ருக்கு அந்த திட்டம் சரி என்று தோன்றியது. இது ஒரு ஏமாற்று வேலை. மிகப்பெரிய படையெடுப்பு போல ஏமாற்று வேலை. குந்தவையையும், இராஜநரேந்திரனையும் பத்திரமாக கொண்டு வந்து சேர்ப்பதே மிக முக்கியம். அவர்கள் வந்து சேர்ந்து விட்டால் சோழக் குலக்கொழுந்தை காப்பாற்றி விட்டால் பிறகு எப்பொழுது வேண்டுமானாலும் விமலாதித்தனை தாக்கி கீழைச் சாளுக்கியத்தில் நமது கொடியை பறக்க விடலாம். மேலைச் சாளுக்கியத்தை அடித்து நொறுக்கலாம். ஒட்டர்களை அடக்கி வைக்கலாம் என்று தெளிவாக அவருக்கு புரிந்தது.

வந்தியத்தேவர் அருண்மொழியை நோக்கி பிரியமான ஒரு புன்னகையை சிந்தினார். அருண்மொழிக்கு ஏன் என்று வியப்பு வந்தது.

''இவன் துடிப்பான அந்தணன். கிருஷ்ணன் ராமனுக்கு மிகச்சரியான ஒரு பிள்ளை. மூன்று பேர் சொன்ன விஷயத்தின் தலையில் கால் வைத்து நான்காவதாக ஒரு விஷயத்தை மிக எளிதாக தொட்டுவிட்டான். அதுவரை அடக்கமாகவும் இருந்திருக் கிறான். தனது இடக்கையை தூக்கி ஆதரவாக அருண்மொழிப் பட்டனின் வலது தோளில் வந்தியத்தேவர் கைவைத்தார். அருண் மொழிப்பட்டன் அவர் கையை பற்றிக் கொண்டு கன்னத்தில் வைத்துக் கொண்டான். கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''அட நீங்கள் ஒற்றுமையாகக்கூட இருப்பீர்களா'' என்று மாமன்னர் சொல்ல அவர்கள் இரண்டு பேரும் சிரித்தார்கள். வீரமாதேவியார் மட்டும் மிகத் தீவிரமாக அந்த விஷயத்தை யோசித்து கொண்டிருந்தாள் என்பது அவர் இருக்கின்ற நிலை யிலேயே புரிந்தது.

''அனுப்புவதுதான் நல்லது.'' வந்தியத் தேவர் இம்முறை அவருக்கு எதிர்புறமாக பேசினார்.

''சரி அனுப்பலாம். அதில் ஒன்றும் பெரிய தவறில்லை. வேண்டுமென்றால் நமது மெய்க்காவல் செம்புலியை இரகசிய தூதனாக அனுப்பலாம். மாறுவேடமிட்டு மாடு ஓட்டிச் செல்பவன்

போல அங்கு போய் ஓலைகளை தனித்தனியே இராஜ நரேந்திரனுக்கும், குந்தவைக்கும் கொடுத்து விடலாம். ஒன்பது லட்சம் வீரர்கள் என்று அதில் எழுதலாம்.''

சற்று தொலைவில் உள்ள செம்புலிக்கு குப்பென்று வியர்த்தது. அடடா 'ஐயன் மாட்டிவிடுகிறானே' என்று பதட்டம் எழும்பியது. கால்கள் நகர்வதிலிருந்து, கைகள் பின்னி பிணைவதிலிருந்து செம்புலி பதட்டமாகிவிட்டான் என்பது தெள்ளத் தெளிவாக தெரிந்தது.

அருண்மொழிப்பட்டன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

''ஒரு லட்சம் வீரர்களுக்கு யார் தலைமை தாங்கிப் போவது,'' வந்தியத்தேவரை நோக்கி மாமன்னர் கேட்டார். ஒரு வேளை வந்தியத்தேவருக்கு ஆசை இருக்குமோ அதை மறுத்து விடக்கூடாது என்பதற்காக கேள்வியை முதலில் அவரிடம் கேட்டார்.

''ஏன் அருண்மொழிப்பட்டனை அனுப்பலாமே.'' வந்தியத் தேவர் திசை திருப்பினார்.

அருண்மொழிப்பட்டனுக்கு லேசாக கோபம் வந்தது. நீ போ என்று மன்னர் சொல்வது எப்படி. அருண்மொழிப்பட்டனை அனுப்பலாமே என்று இவர் சொல்லி மன்னர் சொல்வது எப்படி. இது ஒரு மாற்று குறைவாகிறது அல்லவா என்று கோபம் எழுந்தது.

''நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகின்றேன்.'' வீர மாதேவி குறுக்கிட்டாள்.

''சொல் வீரமாதேவி'' மன்னர் பரவையார் மீது சாய்ந்து கொண்டு வீரமாதேவியாரை ஏறிட்டு நோக்கினார். நான் போகட்டுமா? ஒரு லட்சம் படைவீரர்களுக்கு தலைமை தாங்கி நான் போய் மேலைச்சாளுக்கியத்தை தடுத்து நிறுத்தட்டுமா. குந்தவையை மீட்டுக் கொண்டு வரட்டுமா.''

''இதைவிட அவமானம் எனக்கு வேறென்ன வேண்டும். இவன் வீட்டில் குப்புற படுத்துக் கொண்டு மனைவியை போருக்கு அனுப்புகிறான். நல்ல அரசன், நல்ல அரசாங்கம், நல்ல சோழ தேசம் என்று மேலைச்சாளுக்கியத்தில் விழித்துக் கொண்டு சிரிக்கவா.''

''நன்றாக சிரிக்கட்டும். ஆனால் அடித்து வைத்துவிட்டு

அல்லவா வருவேன். நான் எப்படி அடிப்பேன் என்று மேலைச் சாளுக்கியத்திற்குத் தெரியுமே.''

''தெரியும் தேவி, உன் உக்கிரம் தெரியும். ஆனாலும் இந்த நேரத்தில் உன்னை அனுப்புவது சரி என்று எனக்கு தோன்ற வில்லை.''

''நான் என்றால் நான் மட்டுமா. பரமன் மழபாடியாரும், பழுவேட்டையர் கண்டன் மறவரும் எனக்கு துணையாக வரலாம் அல்லவா.''

''பேசாமல் நான் கிளம்பிப் போகிறேன். என் சொல்லுக்கு குந்தவை கீழ்ப்படிவாள். ஒருமுறை முறைத்து கை ஓங்கினால் போதும், பெட்டிப்பாம்பாக அடங்கி விடுவாள். உங்கள் யாருக்கும் அவள் அடங்க மாட்டாள்.''

''இந்த பேச்சை என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள்.'' வீரமாதேவி சீறலாகப் பேசினாள்.

''என்னிடம் வாலாட்டினால் ஒட்ட நறுக்கி விடுவேன். உங்கள் தங்கை என்று பார்க்காமல் பிருஷ்டம் முழுவதும் பிரம் பால் அடிப்பேன். இராஜநரேந்திரனை கைகால் கட்டி குதிரை யில் குப்புறப் போட்டு அழைத்து வருவேன்.

முன்னூற்று அறுபது வீரர்கள் ஹொட்டூரில் விஷம் குடித்து செத்தார்களே. அந்த கோபம் எனக்கு இன்னமும் தணியவில்லை. மறுபடியும் வெட்டி எறிய வேண்டும் என்ற ஆத்திரம் எழுகிறது.''

''உன்னுடைய ஆத்திரத்தை காட்டுவதற்கான நேரம் இது வல்ல. வீரமாதேவி தலைமை தாங்க முடியாது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. எனவே தேவை இல்லாமல் பேச வேண்டாம்.'' மன்னர் கடுமையான குரலில் அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

''அப்படியானால் யார் போவது?''

''நீங்கள் இரண்டு பேரும் போவதில்லை. உங்களுக்கு இங்கே வேலை இருக்கிறது.''

''என்ன வேலை?''

''ஒன்பது லட்சம் வீரர்களை திரட்ட வேண்டிய வேலை. பாண்டிய தேசத்து வீரர்களை, சேர தேசத்து வில்லாளிகளை நடுநாடு தொண்டை நாட்டிலிருந்து படைகளை, கங்க தேசம்,

இராஷ்டிரகூடம் என்று எல்லா படைகளையும் நாம் ஒன்று திரட்ட வேண்டும்.

ஒட்டரை அடக்க வேண்டுமென்றால், நாம் அவ்வளவு தூரம் பயணப்பட வேண்டுமென்றால் நம்முடைய படைகள் சோர்வடையாமல் இருக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு லட்ச மாக மாறி மாறி இளைப்பாற வைத்து, அடுத்த லட்சத்தை தொடர்ந்து பயணம் செய்ய வைத்து மறுபடியும் அவர்களை இளைப்பாற வைத்து மூன்றாவது லட்சத்தை முன்னே அனுப்பி மாறி, மாறி படைகளை நடத்திச் சென்று மேலைச் சாளுக்கியத்து வீரர்களைத் தாக்க வேண்டும்.''

அப்படியானால் தலைமைக்கு யாரை அனுப்புவது?'' வீரமாதேவி உரத்த குரலில் கேட்டாள். அவளுக்கு தனக்கு வாய்ப் பில்லை என்பது வருத்தமாக இருந்தது.

''அரையன் இராஜராஜன், சோழ தேசத்தின் மிக முதன்மை யான சேனாதிபதி, அருண்மொழிப்பட்டனுக்கு மூத்தவர், பரமன் மழபாடிக்கு இளையவர், பரமன் மழபாடி போன்ற வயதானவர் களை இவ்வளவு தொலைவு அனுப்புவதில் லாபமில்லை. அரையன் இராஜராஜன்தான் சரி, தடுத்து நிறுத்துவதில் மட்டு மல்லாமல் கீழைச்சாளுக்கியத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் மிக திடமாக பாடி இறங்க வேண்டும். இந்தப் படையைத் தாண்டி மேலைச் சாளுக்கியம் வர முடியாதபடி செய்ய வேண்டும். அப்படி அவர்கள் வருகிறார்கள் என்றால் கூடுதலான படை திருவொற்றி யூரில் தயாராக இருக்க வேண்டும்.

ஒரு லட்சம் என்பது முன்னேறுவதற்கு, அடுத்த ஒரு லட்சம் திருவொற்றியூரில் இருக்கும். தொடர் பயணத்தில் வேங்கியை உடையறுத்துப் போக வலுவாக இருக்க வேண்டும். அத்தனையும் குதிரைப் படைகள், நடந்துப் போக எவருக்கும் அனுமதி இல்லை.

இன்னொரு லட்சமும், அடுத்த இன்னொரு லட்சமும் குதிரைப் படைகளை கொண்டிருக்கும். சில யானைகள் இருக் கும். தேர்கள் ஐம்பது இருக்கும். வில்லாளிகள் முன்னூறு பேர் இருப்பார்கள்.

சேனாபதி அரையன் இராஜராஜன் இப்போது எங்கிருக் கிறார். மன்னர் விசாரிக்க, ''தஞ்சையில் தான் இருக்கிறார். இன்று காலையில் கூட அவரை சந்தித்து விட்டு வந்தேன்.''

வாசற்பக்கம் குதிரைகள் வரும் சப்தம் கேட்டது. என்ன என்று வியக்க, வந்தியத்தேவர் படைகள் இன்னும் நெருக்கமாக அரச ருக்கு, அருகே நின்று கொண்டார்கள். உடைவாளில் கைவைத்த படி இருந்தார்கள்.

''வல்லவரையன் வந்தியத்தேவரின் மாதேவியார் குந்தவை பிராட்டியார் வருகிறார்,'' என்று குரல் எழும்பியது. முன்பக்கம் இரண்டு பட்டையாக நரைத்துப் போனாலும் முகத்தில் லேசாக தொய்வு இருந்தாலும், சிறிதுகூட அழகு குறையாத கம்பீரம் மிக்க அந்தப் பெண்மணி தேரில் இருந்து கீழே இறங்கி வந்தார். அவருடைய கையில் மெல்லிய ஊன்றுகோல் இருந்தது. அந்த ஊன்றுகோல் நடப்பதற்கு துணை என்பதைவிட அவருக்கு கம்பீரம் கொடுத்தது என்பதே உண்மை.

''குந்தவையை கைது செய்திருக்கிறார்களாமே, விமலா தித்தன் சிறை வைத்திருக்கிறானாமே'' என்று பதட்டத்தோடு குந்தவை பிராட்டியார் சொல்ல.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' கைகூப்பி மாமன்னர் வரவேற்றார்.

''ஓலை வந்தது. குந்தவை அதில் கதறி இருக்கிறாள். எப்படியேனும் என் உயிரை காப்பாற்றுங்கள், என் மகனை காப்பாற்றுங்கள் என்று கதறி இருக்கிறாள்.''

''போதும் இந்த நாடகம்'' மாமன்னர் இராஜேந்திர சோழ ருக்கு கோபம் தலைக்கேறியது. தரையில் கால் உதைத்தார். முஷ்டியை மடக்கினார். பல் கடித்தார். முகம் சிவந்தது. பரவை நாச்சியார் மெல்ல புஜம் பற்றி வேண்டாம் என்று தலையசைக்க சட்டென்று மாறிப்போனார்.

''அத்தை நாளை காலைக்குள் என் உளவுப்படை உண்மை என்ன என்று தெரிவித்துவிடும். இவள் நாடகமாடுகிறாள். இவளை இன்னும் நம்பிக்கொண்டா இருக்கிறீர்கள்,'' என்று அருகே போய் அத்தையின் கைகளை கோர்த்துக் கொண்டார்.

அத்தையும், மருமகனும் முன்னே நடந்து போக மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

''செம்புலி எதற்கும் கீழைச் சாளுக்கியம் போக தயாராக இரு.'' அருண்மொழிப்பட்டன் உத்தரவிட்டான்.

''ஆகட்டுமய்யா, நீங்கள் போகும்பொழுது நான் வராமல் இருந்துவிடுவேனா. நீங்கள் முன்னே போக நாங்கள் பின்னே வரத்தானே வேண்டும்'' என்று மறுபதில் சொன்னான்.

தான் முதலில் போகப் போவதில்லை என்று அவனுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து விட்டது.

தஞ்சையிலுள்ள ஒவ்வொரு ஆளும் சூட்சுமம் மிக்கவர்கள். சூது நிறைந்தவர்கள். எதிராளி எப்படி அசைகிறான் என்று மிக உன்னிப்பாக கவனிப்பவர்கள். தஞ்சை மண்ணில் பிறந்தவர் களை ஏமாற்றுவது எளிதாக விஷயமல்ல என்று அருண்மொழிப் பட்டனுக்குத் தெரிந்தது. சிரித்தான்.

* * *

அத்தியாயம் 8

விடியல் நேரத்தில் நான்கு குதிரை வீரர்கள் தஞ்சைக் குள்ளே நுழைந்தார்கள். காவிரி, கொள்ளிடம், அரசலாறு, குட முருட்டி என்று பல ஆறுகளைத் தாண்டி குதிரைகள் சொட்ட சொட்ட நனைந்த வண்ணம் கருந்தட்டான்குடியை நோக்கி நகர்ந்தவண்ணம் இருந்தன.

வடகிழக்கு பக்கமுள்ள கடுமையான பாடி காவலை முத்திரை மோதிரம் காட்டி அரண்மனை நோக்கி நகர்ந்தன. அரண்மனைக் கதவு தட்டப்பட்டது. அந்தப்புறத்துக்குள் அதிகாரி கள் வேகமாக நுழைந்தார்கள். மெல்ல கதவு தட்டினார்கள். மணி ஓசை எழுப்பினார்கள்.

பரவை கண்விழித்துக் கொண்டாள். மெல்ல மாமன்னரை உலுக்கி,

''யாரோ கதவு தட்டுகிறார்கள், அவசரச் செய்தியாக இருக்கும் போல் தெரிகிறது. நான் போய்ப் பார்க்கவா?''

''இல்லை நானும் வருகிறேன்,''

மன்னர் சட்டென்று புரண்டு கட்டில் விட்டு இறங்கி விரைவாக உடுத்திக் கொண்டார். பரவையும் தன் உடைகளை சீர்செய்துக் கொண்டாள். அதே வேகத்தில் படுக்கையையும் சரி செய்தாள்.

இரண்டு பேரும் கதவுக்கருகே போய் கதவு திறந்தார்கள். முத்தானப் பொன்னங்கை காத்திருந்தாள். ''கீழைச்சாளுக்கியத் திலிருந்து உங்களது மெய்க்காவல் படை அரண்மனைக்குள் வந்து விட்டது. உள்ளே வரட்டுமா என்று கேள்வி கேட்டிருக் கிறார்கள்.''

''உடனே வரச் சொல்,'' மன்னர் உத்தரவிட்டார்.

அறைக்குள் நுழைந்து வேறுபக்க வழியாகப் போய் முகம், கை, கால் கழுவிக் கொண்டார். வாய் கொப்பளித்தார். கருவேலங் குச்சியாலும், உம்மிப் பொடியாலும் பல் துலக்கினார். மறுபடியும்

வாய் கொப்பளித்து மீண்டும் முகம் கழுவி தலையை சீவி முடித்து இறுக்கக் குடுமியாக முடித்துக் கொண்டார். மேலே போர்வை போர்த்திக் கொண்டார். பரவை வேகமாக வந்து நெற்றியில் தேன் மெழுகு தேய்த்து குங்குமம் இட்டு பிறகு விபூதி குழைத்து நெற்றியில் இட்டார். புஜங்களில் தடவினாள். மேலாடையில் வாசனை திரவியங்களை தெளித்தாள்.

''பசிக்கிறது பரவை'' என்று சொல்ல,

''நீங்கள் முற்றத்துக்குப் போங்கள். பின்னாலேயே வந்து விடும்,'' என்று சொல்லி வேறு வழியே பரவை பறந்து ஓடினாள். முற்றம் நோக்கி மாமன்னர் நகர்ந்தார். முற்றத்தில் பெரிய நாற்காலி போடப்பட்டிருந்தது. உட்கார்ந்ததும் சேடிப் பெண்கள் விசிறத் துவங்கினார்கள். குதிரை வீரர்கள் வந்து விட்டார்கள் என்று வாசலில் உள்ள சப்தம் தெரிவித்தது. குதிரை வீரர்கள் உள்ளே நுழைந்தார்கள். முற்றத்தில் இறங்கி நீண்ட நெடுஞ்சாண்கிடையாய் மாமன்னர் நோக்கி வணங்கினார்கள். எழுந்து நின்று கைகட்டிக் கொண்டார்கள்.

''நான்கு பேர் வருவதாக அல்லவா செய்தி வந்தது, இரண்டு பேர் வந்திருக்கிறீர்களே,''

''ஆமாம், ஒருவருக்கு பலத்த காயம் தோளில் ஏற்பட்டு விட்டது''

''என்ன விதம்''

''வெட்டுகாயம்''

''எதனால்?''

''மேலைச் சாளுக்கியத்தினர் வழியில் மடக்கி என்ன ஓலை கொண்டு போகிறீர்கள். எங்கு போகிறீர்கள் என்று கடுமையாக விசாரித்தார்கள். தள்ளு முள்ளு ஏற்பட்டுவிட்டது. வேகமாக எதிர்ப்பு காட்டி விட்டு அங்கிருந்து தப்பித்து வரும் போது நமது வீரர்கள் தோளில் கத்தியால் வெட்டி விட்டார்கள். ரத்த சேதாரத்தோடே அவர் நெடுந்தொலைவு பயணப்பட்டார். ஈரத் துணி சுற்றி கட்டு போடப்பட்டது என்றாலும் சோர்வாக இருக்கிறார். நேற்று நள்ளிரவில் திருவொற்றியூரில் வைத்தியரை எழுப்பி தையல் போடப்பட்டது.''

''வலி அதிகம் இருக்குமே''

''இருந்தது. ஆனாலும் புளித்த காடி ஏதும் தரப்படவில்லை. புளித்த காடி கொடுத்தால் குதிரையை செலுத்த மயங்கி விழுந்து விடுவேன் என்று சொன்னதால் அவரை புளித்த காடி ஏதும் கொடுக்காமல் அப்படியே உட்கார வைத்து பதினாறு இடத்தில் தையல் போட்டார்கள். எலும்பை ஒருவாறு பொருத்தி, மடக்கி, இறுக்க கட்டு போட்டிருக்கிறார்கள். கையை அசையாதவண்ணம் இடுப்போடும், மார்போடும் கட்டியிருக்கிறார்கள்.''

''பதினாறு தையலா, காடி கொடுக்கப்படாமலா,''

''ஆமாம்,''

''வலி, கதறி இருப்பாரே''

''இல்லை. பல் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்,''

மாமன்னருக்கு அந்த வீரம் சந்தோஷத்தைக் கொடுத்தது.

''இப்போது எங்கே?''

''தஞ்சையிலுள்ள ஆதுரச் சாலையில் ஜுரம் அதிகமாகி படுத்து விட்டார். வரமுடியவில்லையே என்று ஏக்கம். நான் தான் சமாதானம் செய்து படுக்க வைத்து விட்டு வந்தேன். உடன் ஒரு வீரன் இருக்கிறார். நாங்கள் இருவரும் மட்டும் உங்களை சந்திக்க வந்தோம்''

''சரி, விஷயம் சொல்லுங்கள்,''

''குந்தவை தேவியார் உங்களுக்கு ஓலை அனுப்பினார் என்று கேள்விப்பட்டோம்,''

''ஆமாம் வந்தது,''

''ஓலையில் அவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக எழுதியிருந்ததையும் சொன்னார்கள்,''

''சரி. அது உண்மை''

''ஆனால் அவர் வீட்டக்காவலில் வைக்கப்படவில்லை. தானே கதவை பூட்டிக் கொண்டு அப்படி இருக்கிறார். ஏன் என்று கேட்டதற்கு, இப்படி வீட்டுக் காவலில் இருக்கிறேன் என்று தெரிந்தால்தான் இராஜேந்திர சோழன் உடனடியாக படை எடுத்து வருவார் என்று சொன்னார்,''

''முட்டாள்தனம், மேற்கொண்டு''

''அவர் அப்படி இருப்பது இராஜநரேந்திரனுக்கு பிடிக்க வில்லை. தாய்க்கு எதிராக சண்டையிட்டு பார்த்தார். ஆனால் அவர் தாயார் கடுமையான வார்த்தைகளால் சாடினார். அவர் மௌனமாகி விட்டார்.''

''என்ன கடுமையான வார்த்தைகள்?''

''இப்படி என்னை எதிர்த்து பேசினால், நான் உன்னை விட்டு உன் தம்பிக்கு ஆதரவாக போய் விடுவேன். அவனுக்கு பட்டம் சூட்டச் சொல்வேன். நீ தெருவில் நாய் போல அலைய வேண்டியதுதான்'' என்று சொல்ல, அவருக்கு தன் பதவி பறி போய் விடுமோ என்ற பயத்தில் இருந்து விட்டார். தாயாரை கொள்ளவும் முடியவில்லை. தள்ளவும் முடியவில்லை. தாயார் செய்வது தவறு என்று தனியாக புலம்பிக் கொண்டிருக்கிறார்.''

''பிறகு,''

''விமலாதித்தர் வந்து மூன்று முறை சமாதானம் செய்ய முயற்சி செய்தும் எதுவும் புண்ணியமில்லை. கதவு திறக்கப் படவே இல்லை. ஜன்னல் வழியே இரண்டு பேரும் பேசினார் கள். கதவை உடைத்து உள்ளே வருவேன் என்று விமலாதித்தர் எச்சரித்தபோது பெரும் கூச்சல் எழுந்தது.''

''யாரிடமிருந்து?''

''குந்தவையாரிடமிருந்து,''

''என்னவிதமான கூச்சல்,''

''மாளிகை முழுவதும் நெருப்பு வைத்து பற்றி தானும் விழுந்து இறந்து விடுவேன், இராஜநரேந்திரனும் அதில் இறப் பான் என்று சொன்னார்கள். அவர் பயந்து போய் வெளியே வந்து விட்டார்.''

''என்ன கொடுமை இது. எனக்கென்று ஏன் இப்படி சோதனைகள் வருகின்றன'' இராஜேந்திரர் மௌனமாக மனதுக்குள் அலுத்துக் கொண்டார்.

அவருக்கு அரிசி கஞ்சியில் பாலூற்றிக் கொண்டு வந்திருந் தார்கள். சூடாற்றி அருகில் வைத்தார்கள்.

''அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாமா,'' வீரர்களை சுட்டிக் காட்டினார்.

எடுத்துக் கொண்டு விட்டோம் மன்னா, தஞ்சையிலுள்ள ஆதுரச் சாலையில் மோர் கலந்த அரிசி கஞ்சி கொடுத்தார்கள். ஊறுகாய் கொடுத்தார்கள். வயிறு நிரம்பி விட்டது. முகம், கை, கால் கழுவிக் கொண்டு சாப்பிட்டோம். தெளிவாக இருக்கிறோம்,''

''மேலைச்சாளுக்கியத்தில் குறிப்பாய் வேங்கி தேசத்தில் என்ன நிலைமை?''

''அவர்கள் யுத்தத்திற்கு தயாராக இருக்கிறார்கள்.''

''எவர்கள்?''

''மேலைச் சாளுக்கியத்தினர்,''

''கீழைச் சாளுக்கியத்தில் எத்தனை பேர் மேலைச்சாளுக் கியத்துக்கு ஆதரவு,''

''சரிபாதியாக ஆதரவாகவும், சரிபாதி எதிர்ப்பாகவும் இருக்கிறார்கள்''

''ஆதரவாளர்கள் என்னவிதமான ஆதரவாக இருக்கிறார்கள்,''

''இனி மேலைச்சாளுக்கியம் தான் கீழைச்சாளுக்கியத்தை ஆட்சி செய்யும். அந்த தாயாதி உறவுதான் பலப்பட வேண்டும். சோழதேசத்தை நம்பி புண்ணியமில்லை என்று சொல்கிறார்கள்,''

''ஏன் அப்படி, அதற்கு காரணம் நானா,''

''இல்லை மன்னா, ஒருகாலும் நீங்கள் இல்லை. அதற்கு காரணம் குந்தவை தேவியார், எவ்வளவு அலம்பல் செய்ய முடியுமோ, எத்தனை அட்டகாசம் செய்ய முடியுமோ, எவ்வளவு அருவருப்பாக நடந்து கொள்ள முடியுமோ அப்படி நடந்து கொள் கிறார்.

உதாரணத்திற்கு...?

''விமலாதித்தன் அமர வேண்டிய சிம்மாசனத்தில் விமலா தித்தன் வருவதற்கு முன்பே தான் போய் உட்கார்ந்து கொண்டு சபையில் இன்று என்ன விசேஷம் என்று கேட்டிருக்கிறார். சபை தவித்துப் போய் விட்டது.''

''மயிரைப் பிடித்து தரையில் இழுத்து அடிக்க வேண்டும்,''

''ஆமாம். அப்படிப்பட்ட கோபம் அவர்களில் சிலருக்கு இருக்கிறது. அதை இப்பொழுது வேறுவிதமாக காட்டுகிறார்கள்.''

''என்ன விதமாக?''

''குந்தவையை இந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டு இராஜநரேந்திரனை துரத்திவிட்டு, இராஜநரேந்திரன் தம்பி மேலைசாளுக்கிய வம்சத்தில் இருந்து பிறந்த பிள்ளைக்கு இளவரசு பட்டம் கட்டி உடனடியாக அவனை ஆட்சிக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். குந்தவையை துரத்த வேண்டும் என்பதுதான் அவர்களுக்கு முக்கியமான குறிக்கோளாக இருக்கிறது.''

அவர்கள் இராஜேந்திரனை மறந்து விட்டார்களா:

''மறக்கவில்லை. இப்பொழுது உங்களை எதிர்க்க ஒட்டர் களும், கலிங்கர்களும், மேலைசாளுக்கியத்தினரும், இரட்டை பாடி ஏழாயிரத்திலிருந்து ஒரு படையும் வந்திருக்கின்றன. நிறைய வில்லாளிகள் வந்திருக்கிறார்கள். குறிப்பாக அந்த வில்லாளிகளுக்கு சேர தேசத்திலுள்ள அந்தணர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். ஒட்டதேசத்து வீரர்கள் குதிரையில் ஏறி இடது கையில் வில் பிடித்து வலது கையில் அம்பு தொடுத்து, ஓடிய படி குறிபார்த்து அம்பெய்தும் வித்தையை அவர்களிடம் கற்றிருக் கிறார்கள். எனவே வீதி முழுக்க குதிரை ஓட்டமும், வில்லாளி கள் சாகசமும் நடந்து கொண்டிருக்கிறது''

''எந்த மாதிரி சாகசங்கள்?''

''இரவு நேரம் அவை நடைபெறுகின்றன. உயரே தீப்பந் தத்தை அனுப்புகிறார்கள். அந்த தீப்பந்தத்தை தொடர்ந்து பல நூறு அம்புகள் எய்யப்படுகின்றன. அந்த தீப்பந்தத்தை குதறி எறிகின்றன. பெரிய தாய் நெருப்பு சிதறி விழுகின்றது. ''ஓ'' என்று மக்கள் கூவுகிறார்கள். சிலசமயம் ஏதோ தாமிரபஸ்பம் கலந்து, வேறு வெள்ளி பஸ்பம் கலந்து சிவப்பாகவும், மஞ்சளாகவும், பச்சையாகவும் நெருப்பு பொறி பறக்கிறது.

காய்ந்து போன பனைமரத்து குருத்தை பற்ற வைத்து மேலே அனுப்புகிறார்கள். அதை சிதற அடிக்கிறார்கள். நாலா புறமும் நெருப்பு தெறித்து விழுவது கண்கொள்ளாக் காட்சி யாக இருக்கிறது. ஜனங்களுக்கு வெறி மூட்டவும், மிகப்படை ஒன்று தயாராக இருக்கிறது என்று உற்சாகமூட்டவும் இவை தினசரி நடைபெறுகின்றன. வீதி முழுவதும் குதிரை வீரர்களின் அட்டகாசம்தான் அதிகமாக இருக்கிறது. சில நேரங்களில்

இது கீழைச்சாளுக்கியமா அல்லது ஒட்டர்களின் தேசமா என்று தெரியாத வண்ணம் ஒட்டர்கள் நிறைந்து காணப்படுகிறார்கள்.

கலிங்கர்கள் தனிக்குழுவாக உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள். கடுமையாக பயிற்சி செய்கிறார்கள். இம்மாதிரியான வாணவேடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை.''

''குந்தவையிடம் பேசி பார்த்தாயா, அவருடைய மனோ நிலைமை எப்படி இருக்கிறது?''

''கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்,''

''என்ன கற்பனை?''

''விமலாதித்தனை தன் கையாலேயே வெட்டிக் கொல்ல வேண்டும் என்று விருப்பப்படுகிறார்,''

''எதற்காக?''

''கன்னத்தில் அறைந்தாராம்,''

''எப்போது?''

''கழற்றி வைத்திருந்த விமலாதித்தன் கிரீடத்தை, குந்தவை யார் எட்டி உதைத்தாராம். அது தரையில் விழுந்து நசுங்கியதாம், இதற்காக கோபப்பட்டு விமலாதித்தர் அடித்திருக்கிறார்,''

''இராஜநரேந்திரன் தாயாரை காப்பாற்ற போகவில்லையா?''

''இல்லை. அதற்கு பதிலாக அந்த மணிமுடியை எடுத்து முத்துக்களையும், சிதறிய மற்ற கற்களையும் பொறுக்கி எடுத்து பொற்கொல்லரை நோக்கி போயிருக்கிறார். போவதற்கு முன்பு ''அம்மா, நீ அப்பா அணிந்து கொண்டிருந்த மணிமுடியை எட்டி உதைக்கவில்லை. நான் அணியப் போகும் மணிமுடியை எட்டி உதைக்கிறாய், இது அடாத செயல்; என்று சொல்லிவிட்டு போயிருக்கிறான்,''

''அற்புதம். அற்புதம் என் மருமகனல்லவா, மிக நிதானமாக செயல்பட்டிருக்கிறான்,'' எழுந்து நின்று இராஜேந்திரர் கை தட்டினார்.

அமர்ந்தவருக்கு பரவை நாச்சியார் அரிசி கஞ்சி கொடுத் தார். அரிசி கஞ்சியை குடித்து விட்டு கரண்டியில் கொடுக்கப் பட்ட துவையலை அப்படியே வாயில் போட்டு மறுபடியும் அரிசி கஞ்சி குடித்தார். வயிறு நிரம்பியது.

''இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று நினைக் கிறீர்கள்? சோழ தேசத்தினுடைய எதிர்ப்பு எப்படி இருக்க வேண்டும்,''

''இதை சொல்லும் அளவிற்கு எனக்கு திறமை இல்லை மன்னா,''

''பரவாயில்லை. சொல்லுங்கள். உங்கள் அபிப்பராயம் என்ன?''

''மிகப்பெரிய படையெடுப்பு நடத்தப்பட வேண்டும். அப்படி நடத்தினால் இராஜநரேந்திரனை காப்பாற்றுவது மட்டு மில்லாமல் விமலாதித்தனையும் காப்பாற்றப்பட வேண்டும். ஏனெனில் விமலாதித்தனுக்கு மேலைசாளுக்கியத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை இல்லை. வேறு வழியில்லாமல் அந்தப் பக்கம் சாய்ந்திருக்கிறார்.

கீழைச்சாளுக்கிய மக்கள் பலபேர் நம்மை நம்பி இருக் கிறார்கள். பல அதிகாரிகள் நமக்கு விசுவாசமாக இருக்கிறார் கள். மிகச் சிலரே மேலை சாளுக்கியத்தின் பிடியில் சிக்கி இருக் கிறார்கள். காசுக்கு ஆசைப்பட்டும், அங்கிருந்து வந்த பெண் டிருக்கு ஆசைப்பட்டும் இவைகள் நடக்கின்றன.

''ம்.ம்.ம்... இப்பொழுது இன்னொரு விஷயமும் உங்க ளுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்,''

''சொல்,''

''இராஜநரேந்திரனின் தம்பியார் விஷ்ணுவர்தன விமலா தித்தர் அங்கு உல்லாசமாக, சுகபோகம் அனுபவித்துக் கொண் டிருக்கிறார்: மது அருந்தியும், பெண்களோடு சல்லாபித்தும் இரவு முழுவதும் கழிக்கிறார். ஆனால் இங்கு இராஜநரேந்திரன் இடுப்பில் கோவணத்துடன், மேலே ஒற்றை ஆடையுடன் நின்று ஒற்றைக்காலில் தபஸ் செய்கிறார். விடியற்காலையில் சூரிய நமஸ்காரம் செய்கிறார். சிவபூஜை செய்கிறார். கால பைரவர் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருக்கிறார். மதுவோ, மாமிசமோ உண்பதில்லை. மங்கையரோடு பேசுவதே இல்லை, ''எனக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. அதை அடைய நான் விரதம் இருந்து தான் ஆக வேண்டும்'' என்று எங்களுக்கு நடுவே அவர் பேசுவது வழக்கம்.



இராஜேந்திரர் மேலைச்சாளுக்கியம் போன வழி –
ஒரு அனுமானம்



கங்கை கொண்ட சோழன் எழுப்பிய கோயில்

''குந்தவையாரை மீட்டுக் கொண்டு வர முடியுமா?''

''குந்தவையார் ஒத்துழைத்தால் முடியும்,''

''குந்தவையார் ஒத்துழைக்க மாட்டாரா, உம்முடைய அபிப் பிராயம் என்ன?''

''குந்தவையார் எப்போது என்ன செய்வார் என்று இறை வனாலும் அனுமானிக்க முடியாது,'' சிறிது கூட பயமின்றி, பதட்டமின்றி அந்த வீரன் பதில் சொன்னான்.

இராஜேந்திரர் அவனையே உற்றுப் பார்த்து கொண்டிருந் தார்.

''இது உன்னுடைய அபிப்ராயமா?''

''இல்லை. என்னுடைய அபிப்ராயம் மட்டும் இல்லை. இங்கு வந்த நான்கு பேருடைய அபிப்ராயமும் இதுதான். அவர் கள் என்னைவிடவும் இன்னும் கடுமையாக பேசக்கூடும். அப்படி பேசுவதும் அவசியம் இல்லை. ஆனால் 'கீழைச்சாளுக்கிய மக்கள் மிகுந்த நொந்த நிலையில் இருக்கிறார்கள்.

''இந்த பெண்குரங்கை ஏன் விமலாதித்தர் கூட்டிக் கொண்டு வந்தார்,'' என்று கேட்கிறார்கள். சோழ தேசத்தில் உள்ள எல்லாப் பெண்களுமே இப்படி குரங்குகள் தானா என்ற பேச்சும் உண்டு,''

''மந்தி என்று சொல்கிறார்களா?''

''இல்லை, அங்கு பெண் குரங்குக்கு வேறு பெயர்,''

''என்ன பெயர்''

''ஆட கோத்தி'' அவன் சொல்ல இராஜேந்திரர் சிரித்தார்.

''ஒரு இலட்சம் படைவீரர்கள் போதுமா?''

''போதாது,''

''ஏன்?''

''அங்கே மூன்று முதல் நான்கு இலட்சம் வரை படை வீரர்கள் இருக்கலாம். எனவே நாம் அதிகமான படையோடு தான் உள்ளே போக வேண்டும். உள்ளே புகுந்து வேங்கியை தாக்குவதோடு நிற்காமல் கலிங்கமும், ஒட்டதேசத்தையும், நாம் அடக்கி ஆள வேண்டும் ஒட்டர்கள் மிகுந்த அட்டகாசத்தோடு

இருக்கிறார்கள். உங்களை தாக்கி போரில் ஜெயித்து விட்டால் கீழைச்சாளுக்கியத்தை தாங்கள் தங்களுடைய ராஜ்ஜியத்துடன் இணைத்துக் கொண்டு விரிவுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கனவில் இருக்கிறார்கள்.

''மேலைச்சாளுக்கியத்தை அடித்து விரட்டி விடலாம் என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.''

''இது மேலைச்சாளுக்கியத்தாருக்கு தெரியுமா?''

''தெரியும். யார் அடித்து, யார் ஓடுவது என்பதை பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்களும் கருவியிருக்கிறார்கள்.

''ஆகவே, அவர்களுடைய ஒற்றுமை மேலோட்டமானது,''

''ஆமாம். மிக மேலோட்டமானது, ஒருவரை ஒருவர் குத்திக் கொல்ல சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்,''

''ஒற்றுமையாக கீழைச்சாளுக்கியத்தோடு இருப்பது யார்?''

''எவரும் இல்லை,''

''இராஷ்டிரகூடர் நிலைமை என்ன?''

''யானைப்படைகள் வந்திருக்கின்றன. மேலும் யானைகள் வருவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஊருக்குள்ளே ஊரின் எல்லையில் இருக்கிறார் கள். ஊருக்குள் முழுவதும் குதிரைப்படை நடமாட்டம்தான். ஒட்டர்களுடைய ஆட்சிதான்.''

''விமலாதித்தனுக்கு வெட்கமாக இல்லையா?''

''மேலைச்சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மன் கூடவே இருப் பதால் எதுவும் செய்ய முடியவில்லை.''

''என்ன, ஜெயசிம்மன் அங்கேதான் இருக்கிறானா?''

''ஆமாம். மேலைச்சாளுக்கியத்திலிருந்து ஆறு மாதத் திற்கு முன்பு கிளம்பி இங்கு வந்துவிட்டார். இந்த இடத்தை எப்படியாவது கபளீகரம் செய்து விட வேண்டுமென்று துடிதுடிக் கிறார். மேலைச்சாளுக்கியமும், கீழைச்சாளுக்கியமும் உறவு ஏற்படுத்திக் கொண்டுவிட்டால், இரண்டாவது பிள்ளைக்கு பட்டம் ஏற்படுத்தி விட்டால் அவர்களுடைய உறவு கெட்டிப் பட்டு விடும் என்றும் அந்த உறவு கெட்டிப்பட்டதோடு அவர்கள் தொண்டை நாடு நோக்கி படை எடுத்து வரமுடியும் என்றும்

தொண்டை நாடு, நடுநாடு கலந்து வெகுவிரைவாக தஞ்சையை தாக்கிவிட முடியும் என்றும் கனவு காண்கிறார்கள்.''

''இந்த இராஜேந்திர சோழனைப் பற்றி மறந்து போயிற்றா?''

''இல்லை. மறக்கவில்லை. மாறாக அடிக்கடி நினைத்துக் கொள்கிறார்கள்,''

''அப்படி?''

''புலம்புகிறார்கள்,''

''என்ன விதமாக?''

''ஒப்பாரி பாட்டுக்கள் மூலமாக,''

''என்னவிதமான ஒப்பாரி பாட்டுக்கள்''?

''ஹொட்டூர் சோகம் என்பதான ஒப்பாரிப் பாட்டு

ஹொட்டூரில், இராஜேந்திர சோழர் செய்த அட்டூழியங்கள் என்று ஒரு ஒப்பாரி பாடலாக செய்யப்பட்டு நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள். கண்கள் சிவக்க கதறுகிறார்கள். பழிக்குப்பழி. இரத்தத்துக்கு இரத்தம், வெட்டுக்கு வெட்டு. கொலைக்கு கொலை, தஞ்சையை நிர்மூலமாக்குவோம் என்று உரக்க கத்தினார்கள்,''

''சரி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். படை திரட்டிப் போக நாளாகும். எனவே அதுவரை நீங்கள் உங்கள் சொந்த ஊருக்கு போய் வரலாம். உன்னுடைய சொந்த ஊர் எது?''

''மருவூர்''

''எங்கு இருக்கிற மருவூர்?''

''திருக்காட்டு பள்ளிக்கு அருகே இருக்கிற மருவூர்,''

'' அட, அங்கு மிகப்பெரிய அக்ரஹாரம் இருக்கிறதே,''

''ஆமாம், அதைச் சுற்றிலும் நல்ல மறவர் குடியிருப்பும் இருக்கிறது. நல்ல விளைநிலங்கள் இருக்கின்றன,''

''மருவூரில் சாம்பான்கோவில் இருக்கிறதல்லவா,''

''ஆமாம். சாம்பான் கோவிலும், அந்தணர்களால் ஸ்தாபிக்கப்பட்ட எல்லைக்காளியும் இருக்கின்றன. அதற்கு மருவூர் மாயா என்று பெயர். ஸ்ரீசக்கரப்பிரதிஷ்டை நடந்திருக்கிறது,''

''நல்லது. நல்லது, ஊர் ஞாபகம் பசுமையாக இருக்கிறது போலும்,''

''ஆமாம். மன்னா, தஞ்சைக்குள் நுழைந்ததுமே ஊர் ஞாபகம் வந்துவிட்டது,''

''வரும். உங்களுக்கு ஓய்வு தருகிறேன். உடனடியாக நீங்கள் உங்களுடைய சொந்த ஊருக்கு பயணப்படலாம். நண்பருடைய ஊர் எது?''

''அதுவே, மருவூரே, அங்கு இருக்கின்ற இரண்டு நண்பர் கள் அவர்கள் இருவரும் தஞ்சையைச் சேர்ந்தவர்களே, வெட்டுப் பட்ட வீரனின் குடும்பத்திற்கு செய்தி போயிற்று, இந்நேரம் அவர்கள் அங்கு வந்திருப்பார்கள்,''

''நானும் கிளம்புகிறேன்.''

''எங்கே?'' பரவை வியப்போடு கேட்டாள்.

''வெட்டுப்பட்டு ஒரு வீரன் ஆதுரச் சாலையில் இருக் கிறான். நான் இங்கு உட்கார்ந்து கொண்டு என்ன செய்யப் போகிறேன். எனக்காக வெட்டுப்பட்டவனை நான் பார்க்க வேண் டாமா?''

''மன்னா! நான் அழைத்து வருகிறேன்,''

''அவரால் வர முடியாது. அவரால் வர முடியாவிட்டால் என்ன, இந்த இராஜேந்திர சோழன் அவர் இருக்கும் இடத்திற்குப் போவான். குதிரையை தயார் செய்.''

அருண்மொழிப்பட்டனுக்கும், வந்தியத்தேவருக்கும், அரையன் இராஜராஜனுக்கும் செய்தி அனுப்பு. ஆதுரச்சாலைக்கு வரச்சொல். வீரமாதேவியாருக்கு தகவல் சொல்லி என்னை உடனடியாக சந்திக்கச் சொல். அத்தை குந்தவை பிராட்டியா ருக்கு செய்தி அனுப்பி, ஆதுரச் சாலைக்கு ஒருமுறைச் சென்று வெட்டுப்பட்ட அந்த வீரனை பார்க்கச் சொல். குந்தவையார் வந்து பார்த்தால் அந்த வீரனுக்கு உற்சாகமாக இருக்கும். அவன் குடும்பத்திற்கு சந்தோஷமாக இருக்கும்.''

''மன்னா அவ்வளவு அவசியமில்லை,''

''இதுபற்றி நீ கவலைப்படாதே, நண்பனே, வெட்டுப்பட் டவன் எனக்காக வெட்டுப்பட்டிருக்கிறான். இந்த தேசத்திற் காக வெட்டுப்பட்டிருக்கிறான். அவரை பார்க்க வேண்டியது

என்னுடைய கடமைகளில் ஒன்று, நீ இப்பொழுது உன் ஊர் நோக்கி கிளம்பலாம்,''

''இல்லை மன்னா, உங்களோடு நானும் ஆதுரச்சாலைக்கு வருகிறேன். என் நண்பரை பார்த்து விட்டு இரவு ஊருக்குப் போகிறேன்.''

''நல்லது கிளம்பலாம்,''

வெளியே சிறு முரசு அடிக்கப்பட்டது. எக்காளம் ஊதப் பட்டது. மன்னர் வெளியே பயணப்படுகிறார் என்று கோட்டை யில் உள்ள சகலருக்கும் தெரிவிக்கப்பட்டது. கோட்டைக் கதவு கள் திறந்து வைக்கப்பட்டன. மெய்க்காவல் படைகள் விரை வாக தயார் ஆயின. முன்னே இருபது குதிரைகள், பின்னே இருபது குதிரைகள். சுற்றிலும். வளையமாக பத்து பேர், என்று தயார் ஆனார்கள். நடுவே தேர் நிறுத்தப்பட்டது.

மாமன்னர் படியிறங்கினார். தெருவில் இறங்கி தேர் ஏறி னார். திரும்பி பரவையாரை பார்த்தார். பரவையார் சிரித்து கையசைக்க,

''என்ன, அங்கே நின்று கை அசைக்கிறாய். வா, நீயும் வா, வந்து அந்த வீரனைப் பார். தலையை தடவிக் கொடு. அவருக்கு சந்தோஷமாக இருக்குமல்லவா?'' என்று சொல்ல துள்ளிக் குதித்து வந்து பரவையாரும் தேரில் ஏறிக் கொண்டார்.

வெகுநாளைக்கு பிறகு மாமன்னர் இராஜேந்திர சோழ ரோடு ஒரே தேரில் பயணப்படுகிற சந்தோஷம் அவருக்கு பெருமகிழ்ச்சியை கொடுத்தது. இந்த மாதிரி திருவாரூரில் எத்தனை முறை பயணப்பட்டிருக்கிறோம். தஞ்சையில் சில தினங்களே இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

வெகுநாளைக்குப் பிறகு எனக்கு இன்று வாய்ப்பு கிடைத் திருக்கிறது. அக்கா, வீரமாதேவி இதை நீங்கள் பார்க்கவில் லையே என்று மனதுள் சொல்ல,

வீரமாதேவி தன்னுடைய அந்தப்புறத்திலிருந்து வெளியே வந்து குதிரையில் தாவி ஏறினார். அவரை தேர் கடந்து போகும் போது பரவை நாச்சியார் கை அசைத்தார். வீரமாதேவி நாக்கை துருத்தி வேகமாக குதிரையை திருப்பி எடுத்தார். பரவை நாச்சியாருக்கு சிரிப்பு பொத்திக் கொண்டு வந்தது.

ஆனால் மாமன்னர் இராஜேந்திர சோழர் கனத்த சிந்தனை யோடு தேரின் முன்பக்கம் பிடித்துக் கொண்டு நிற்க, தேர் விரை வாக தஞ்சாவூர் ஆதுரச் சாலை நோக்கி ஓடியது. அரண்மனை சுற்றியுள்ள கடைத் தெருவில் உள்ள மக்கள் விலகி நின்றார்கள். உள்பக்கக் கடையில் உள்ளவர்கள் வெளியே வந்து கை கூப்பி னார்கள். சிலர் கைகளில் வைத்திருந்த கூடையிலுள்ள மலர்களை வீசி இராஜேந்திரர் மீது எறிந்தார்கள். பதிலுக்கு கை அசைத்த வண்ணம், எங்கோ சிந்தித்த வண்ணம் இராஜேந்திரர் ஆதுரச் சாலை நோக்கி பயணப்பட்டார்.

மொத்த தையலையும் பிரிக்க வேண்டும். சரியாக தைக்க வில்லை. அல்லது பதட்டமாக தைத்து இருக்கிறார் அல்லது நீங்கள் சரியாக ஒத்துழைக்கவில்லை. நான் முற்றிலுமாக உங்களை மயக்கப்படுத்தி விடுவேன். நிதானமாக வரி வரியாக தைக்கப் போகிறேன். எலும்பு பொறுத்தப்போகிறேன், எலும்பு உடைந்திருக்கிறது. பொறுத்திதைத்து விட்டு ரணம் ஆற மருந்து போட்டு விட்டு கை அசைக்காமல் மாவுக்கட்டு போட்டு விடுவேன். உள்ளுக்குள் இரத்த விருத்திக்கு மருந்து கொடுத்து விடுவேன். மூன்று நாட்கள், நான்கு நாட்கள் வலி தெரியாமல், தூங்கும்படியாக இருக்கும்படி வைத்துக் கொள்வேன்.

உங்கள் உறவினர்களா என்று வைத்தியர்கள் வந்தவர்களை சுட்டிக் காட்ட வீரன் ''ஆம்'' என்று தலை அசைத்தான்.

''ஒரு வாய் காடி குடியும்'' என்று சொல்ல,

''முடியாது'' என்று மறுத்தான்.

''ஏன்?''

ஒருவேளை மாமன்னர் என்னை சந்திக்க வந்தாலும் வருவார். அப்பொழுது நான் குடித்துவிட்டு உளறக்கூடாது. எனவே வலி இருந்தாலும் பரவாயில்லை. அவர் வரும் வரை காத்திருக்கிறேன். அவர் வரமாட்டார் என்று தெரிந்தால் பிறகு குடிக்கிறேன்'' என்று மெல்லிய குரலில் சொன்னான்.

அவனுடைய பேச்சு சரியாக இருந்தது. வைத்தியர்கள் தலை அசைத்தார்கள்.

''இது நல்லச் சிந்தனை'' என்று பாராட்டினார்கள்.

கைகளில் மருந்து தடவுகிறேன். மயிலிறகால் வருடித் தருகிறேன் என்று சொல்லி கைகளில் மருந்து தடவினார்கள். மயிலிறகால் மெல்ல தோளிலிருந்து, முழங்கை வரையும் வருடிக் கொடுத்தார்கள். அந்த வருடிக் கொடுத்த சுகத்தில் மெல்ல வீரன் கண்மூடி தூங்கிப் போனான். அவன் உறவுகள் கவலையோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தன. வாசலில் மெய்க்காவல்படை இறங்கியது. ஆதுரச் சாலையை சுற்றி வளைத் தது. உள்ளுக்குள் வேகமாக நுழைந்தது.

''யார் முக்கியம், யார் முக்கியம்'' என்று விசாரித்து தேவை இல்லாதவர்களை வெளியே அனுப்பியது. வைத்தியர்களை மட்டும் இருக்கச் சொன்னது. ''நண்பரே, மன்னர் வந்திருக் கிறார்'' ஒரு வைத்தியர் அவசரமாக அந்த வீரனை எழுப்ப முயற்சி செய்ய, ''தூங்குகிறான், எழுப்பாதீர்கள், தூங்குவதற்கு மருந்தும் கொடுத்து பிறகு எழுப்பவும் செய்தால் எப்படி, நான் அவனைப் பார்க்க வந்திருக்கிறேன். அவன் என்னை பார்க்க வேண்டும் என்று அவசியம் இல்லை'' என்று அருகே உட்கார்ந்து கொண்டு அவன் தலையை தடவிக் கொடுத்தார்.

வேறு எங்கெல்லாம் காயம் என்று பார்த்தார். வலதுகை விரல்களில் அடிப்பட்டிருந்தது. நெஞ்சில் கீறல் இருந்தது. கன்னத்தில் கட்டையாலோ, கத்தியாலோ அடித்து வீங்கி இருப் பது தெரிந்தது. எங்கோ வாட்டமாக மாட்டிக் கொண்டிருக் கிறான். சுற்றி சூழ்ந்து அடித்து விட்டார்கள் என்று தெரிந்தது. எழுப்பி உட்கார வைத்து முதுகு பக்கம் பார்க்க, அங்கேயும் இரண்டு பிரம்பு காயங்கள் தெரிந்தன. அந்த வீரன் வருடிக் கொடுத்த சுகத்தில் இன்னும் கண் விழிக்காமல் இருந்தான். மெல்ல அவனை படுக்க வைத்தார்கள்.

''இதற்குச் செலவு முழுவதும் அரண்மனை ஏற்கும். குந்தவை தேவியாரிடம் சொல்லி இருக்கிறேன். அவர் தானே இந்த ஆதுரச் சாலைக்கு தலைவி. அவர் அடிக்கடிவந்து கவ னித்துக் கொள்வார். எவ்வளவு சீக்கிரம் அவர் குணமாக வேண் டுமோ அப்படி குணமாக வேண்டும். இடது கை இயங்க வேண் டும். இது மிக முக்கியம். ஒரு நல்ல போர் வீரனை நாம் இழந்து விடக்கூடாது'' என்று சொல்ல,

வைத்தியர்கள் ''சரி'' என்று தலையசைத்தார்கள். ''இந்த

வீரனுக்கு துணையாக இருந்த இன்னொரு வீரன் எங்கே?'' என்று கேட்டு அவரை எதிரே வரவழைத்தார். உற்றுப் பார்த்தார்.

''நீர் தஞ்சையை சேர்ந்தவரா?''

''ஆமாம்,''

''யாருடைய மகன்,''

அவன் ஒன்றும் முக்கியமானவர் அல்ல. சாதாரண மறவர் தான். ஆனால் என்னுடைய தமையனார் நக்கன் சந்திரன். யானைப் படையின் உபதளபதி.''

''அட, சந்திரனுடைய தம்பியா நீ. எனக்கு உம்முடைய விரைவும், வேலையும் மிகவும் பிடித்திருக்கின்றன. இவரை கவனமாக நீயும் பார்த்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய ஊர் மக்கள் எங்கே?'' என்று கேட்க, ஒரு ஓரமாக நின்றிருந்த பெண்களை, வீரன் சுட்டிக் காட்டினான். அவர்களை பார்த்து இராஜேந்திரர் தலை அசைத்தார். அவர்கள் கை கூப்பினார்கள். கீழே விழுந்து வணங்கினார்கள்.

இவருடைய உறவினர்கள் யார் என்று விசாரிக்க அவர்களை யும் அவன் அடையாளம் காட்டினான். அவர்கள் முன்னே வந்து வாய்பொத்திக் கொண்டு அழுதார்கள்.

''ச்சு. அவர் தூங்குகிறார். இப்படி அழக்கூடாது. அது அச்சான்யாமாக இருக்கும். எந்தவித பிரச்சனையும் இல்லை. நோய் குணமாகிவிடும். கவலைப்பட வேண்டாம். இதற்குண்டான செலவுகளை அரசே ஏற்கும். இவர் மனைவி யார்?''

ஒருவள் முன் வந்தாள்.

''இந்தா இருவத்தைந்து கழஞ்சு'' என்று ஒரு பையை அவள் கையில் போட்டார். இன்னொரு பை இன்னொரு வீர னுக்கு கொடுக்கப்பட்டது. வந்த இரண்டு பேருக்கும் இரண்டு பைகள் தரப்பட்டன.

குந்தவையார் உள்ளே நுழைந்தார்.

''என்ன அழைத்தாயாமே இராஜேந்திரா?''

மிக முக்கியமான ஒரு நண்பருக்கு கடுமையான காயம் ஏற்பட்டு விட்டது.

கை துண்டாகி விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஆனால்

கை சரியானபடி பொறுத்தி வைக்க மறுபடியும் தீவிர சிகிச்சை நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பாக போட்ட தையலை பிரித்து விட்டு மறுபடியும் தையல் போடச் செய்கிறார்கள். இது மிகப்பெரிய வேலை. அவர்கள் சரியாக செய்ய வேண்டும். அப்படி செய்ய நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்'' என்று உத்தரவிட்டார்.

குந்தவையார் தலை அசைத்தார். ஆதுரச்சாலை விட்டு இராஜேந்திரர் வெளியே வரும்போது, வந்தியத்தேவரும், அருண்மொழிப்பட்டனும் வந்திறங்கினார்கள்.

ஆதுரச்சாலை பெரிய தோட்டத்திற்கு நடுவே இருந்தது. ஆதுரச் சாலையில் உள்ளே இருந்தவர்களை வீரர்கள் மடக்கி நிறுத்திக் கொள்ள இராஜேந்திரரும், மற்றவர்களும் தோட்டத்தில் இறங்கினார்கள். அங்கே அவர்களுக்கு ஆசனங்கள் போடப்பட்டன.

குந்தவை தேவியார் மட்டும் உள்ளே வைத்தியர்களோடு வேகமாக பேசிக் கொண்டிருந்தார். புதிய மருந்துகளுக்கு ஆட்களை வெளியே அனுப்ப வேண்டுமென்று தெரிந்து உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

''வீரமாதேவி சொன்னது சரி. குந்தவையே தாள் போட்டுக் கொண்டு அலம்பல் செய்து கொண்டிருக்கிறாள். உள்ளே இருக்கின்ற என் அத்தையை பார்க்கும்பொழுது என் தங்கையினுடைய அபத்தம் இன்னும் பெரிதாக தெரிகிறது. ஒரு சொல், கவனித்துக் கொள் என்று சொன்னதும் எவ்வளவு மும்முரமாக இறங்கி அந்த வேலையைத் தவிர எந்த நினைப்பும் இல்லாமல் இங்கே நம்மிடையே வந்து கலந்து கொள்ள வேண்டும் என்ற அக்கறைக்கூட இல்லாமல் அங்கே போராடிக் கொண்டிருக்கிறாள். அவளல்லவா பெண்மணி, மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும் என்று பிறப்பு எடுத்தவரல்லவா குந்தவை பிராட்டியார். இவரை என் அத்தையாக அடைந்தது எவ்வளவு பெரிய பாக்கியம், இது ஏன் தங்கைக்கு தெரியவில்லை. இதற்கு நேரிடையாய், சோழ தேசத்தின் சாபமாய் வந்து சேர்ந்திருக்கிறதே என்ன செய்ய, விமலாதித்தனை, தன் புருஷனை தன் கையாலேயே வெட்டிக் கொல்ல வேண்டுமாம். இவளைப் பற்றி மேலைச்சாளுக்கியத்தில் என்ன நினைப்பார்கள். சோழ தேசத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள். என்னுடைய அத்தையைப்

பற்றி எவ்வளவு கேவலமாக பேசுவார்கள். என் மனைவிகளை எப்படி இழிவாக நடத்துவார்கள். சோழ தேசத்தில் இருக்கும் அத்தனை பெண்களும் பெண் குரங்குகளா என்று கேட்கிறார் களாம். எப்படி இருக்கிறது வந்தியத்தேவரே, ''ஆட கோத்தி என்று அழைப்பார்களாம்''

''கீழைச்சாளுக்கிய மக்கள் அபிப்ராயத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும். அடுத்தது நாம் என்ன செய்ய வேண் டும்?'' வந்தியத்தேவர் இடைமறித்தார்.

இப்பொழுது நாம் அனைவரும் கிருஷ்ணன் ராமனான பிரம்மராயரின் இல்லத்திற்கு போவோம். நம் வருகையை சொல்லி விடு. நான் குளிக்கவில்லை. பரவாயில்லையா என்று அருண்மொழியை நோக்கி பேச, அருண்மொழி வாய்விட்டு சிரித்தான்.

''நான்கூட குளிக்கவில்லை, இரகசியமாக வைத்துக் கொள் ளுங்கள்'' என்று சொல்ல மாமன்னர் வாய்விட்டு சிரித்தார்.

அந்த பிரச்சனை தீவிரத்திலும் அவர்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வதை இராஜேந்திரசோழரின் மனைவி பரவைநாச்சியார் வியப்போடு பார்த்தார்.

சோழ தேசத்து பெண்களைப் பற்றி என்ன வேண்டுமா னாலும் சொல்லுங்கள். சோழ தேசத்தின் ஆண்கள் சிங்கங் களடா. அந்த சிங்கங்கள் ஊடுருவி உங்கள் ஊருக்குள் வரப் போகிறது. என்ன செய்ய முடியும், என்று மனதுக்குள் உரத்தக் குரலில் பேசினாள். இந்த படை எடுப்புக்கு தானும் வீரமாதேவி யரோடு போனால் என்ன என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

* * *

அத்தியாயம்

9

மாமன்னர் இராஜராஜ சோழனிடம் சேனாதிபதியாக இருந்த கிருஷ்ணன் ராமனுடைய மாளிகை மிகப் பெரியது. அந்த மாளிகைக்கு அடுத்தபடியாகத்தான் பரமன் மழபாடியின் பெரிய மாளிகையும் இருக்கிறது. இந்த வீதியின் கடைசியில் பழுவேட்டறையர் கண்டன் மறவன், பெரிய தோப்போடு குடியிருக்கிறார். அது கிட்டத்தட்ட கோட்டையைப் போலவே இருக்கும். இவர்கள் அத்தனை பேருக்கும் விவரம் சொல்லப்பட்டு சேனாதிபதி கிருஷ்ணன் ராமனிடம் வரச்சொல்லும்படியாய் உத்தரவு போய்விட்டது.

இராஜராஜரிடம் சேனாதிபதியாக இருந்த கிருஷ்ணன் ராமன் அந்த சேனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. அதே சமயம் அவரை ஒரு முக்கியமான நபராக இராஜேந்திரன் சேர்த்துக் கொள்ளவும் இல்லை.

''என்னிடம் ஏன் கலந்தாலோசிக்கவில்லை'' என்று இரண்டு முறை வாய்திறந்து கிருஷ்ணன் ராமன் கேட்டபோது,

''உங்கள் ஓய்வை கலைப்பானேன் என்ற கவலைதான்'' என்று பணிவாக இராஜேந்திரன் பதில் சொன்னார்.

''எனக்கு ஓய்வு யார் கொடுத்தது?''

''வயதானவர்களுக்கு தருகின்ற முதல் மரியாதையே அவருக்கு தகுந்த ஓய்வு கொடுக்க வேண்டும் என்பதுதானே.''

''அதாவது பதவியிலிருந்து வெளியே தள்ள வேண்டும் என்பதா.''

''ஒரு நாளும் இல்லை, நீங்கள் சேனாதிபதி.''

''ஆனால் ஒப்புக்கு சப்பாணி.'' வேகமா கிருஷ்ணன் ராமன் பேசினார். அந்த பேச்சில் கோபம் இருந்தது.

''இல்லை. படை எடுத்து நடத்துவதற்கும், கடும் வெய்யிலிலும், காற்றிலும், குளிரிலும் போவதற்கும் உங்கள் உடம்பு பழக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது தளர்ந்திருக்கிறது.

சேனாதிபதி என்ற பொறுப்பை கொடுத்துவிட்டு நீங்கள் வீட்டில் உட்காருங்கள் என்று சொல்வதை விட, யார் படை எடுத்து போகிறார்களோ அவர்களுக்கு முக்கிய பொறுப்புகளை தருவது உற்சாகமாக இருக்கும் அல்லவா. அதுவும் தவிர, உங்களை கலந்து கொள்ளாமல் இங்கு என்ன நடக்கும். தஞ்சையின் நிர்வாகம் முழுவதும் உங்களுடையதுதானே. வேண்டாமெனில் நானே கட்டி அழுகிறேன் இதை'', என்று சொல்ல,

''மாமன்னரே, என்னை தஞ்சை நிர்வாகத்திற்கு தள்ளி விட்டீர்கள் என்பது புரிகிறது. இதற்கு மேலும் நான் உங்களோடு விவாதம் செய்ய விரும்பவில்லை. தஞ்சை நிர்வாகத்தை ஏற்று சீரும் செம்மையாகவும் செய்கிறேன். மன்னரே என்னைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படுவதற்கு பதில் என் மகனைப் பற்றி கவலைப் படுங்கள். உங்களைப் பற்றி நான் கவலைப்படுவதற்கு பதில் என் மகன் கவலைப்படுவான். சோழ குலத்துக்கு சேவை செய் வதற்காகவே எங்கள் குலம் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. சோழ மன்னர்களுக்கு வலது கரமாக திகழ்கிறோம் என்பதில் எனக்கு மிகப் பெரிய கர்வம்.''

''அது என்னோடு முடியவில்லை, என் மகனோடு முடிய வில்லை. என் பேரனும் தொடர்வான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.'' அவர் கம்பீரமாக பின்வாங்கினார்.

அடர்த்தியான தோப்புகளுக்கு நடுவே இருந்த அந்த மாளிகை பரபரத்தது. அருண்மொழிப்பட்டன் தந்தையோடு இல்லாமல் அரசருடைய அரண்மனைக்கு பக்கத்தில் ஒரு மேல்தளத்தில் மனைவியோடும், குழந்தைகளோடும் வசித்து வந்தான். விரைவாக தந்தையினுடைய மாளிகையை அடைந்து உள்ளே போய் தந்தைக்கு அருகே உட்கார்ந்து என்ன நடந்தது, எதற்காக வருகிறார்கள் என்பதை விரைவாகச் சொன்னான்.

எந்த பதிலும் சொல்லாது, தலையைக் கூட அசைக்காது அமைதியாக கிருஷ்ணன் ராமன் கேட்டுக் கொண்டார். எழுந்து நின்று பின்பக்கம் போனார். முகம் துடைத்துக் கொண்டார். கண்ணாடியில் முகம் பார்த்து திருமண் இட்டுக் கொண்டார். கோல் ஊன்றி எழுந்து வேலை ஆட்கள் துணையோடு வாசலுக்கு வந்தார்.

மாமன்னர் இரா்ஜேந்திரர் வீரமாதேவியுடன் படியேறி யதும் கைகூப்பி குனிந்து வரவேற்றார். அந்தணர்கள் மூவரால் ஒரு பொற்குடத்தில் மாவிலையும், தேங்காயும் வைத்து அவர் முன்பு நீட்டப்பட்டது. 'மாமன்னனே, உள்ளே வர வேண்டும். உள்ளே நீங்கள் நுழைவதால் எல்லாவித மங்களங்களும் நிகழ வேண்டும். மிகுந்த சந்தோஷத்தோடு இங்கே இருப்பவர்கள் உங்களை வரவேற்கிறார்கள். உங்கள் வருகை உங்களுக்கு வெற்றியை தரட்டும். எங்களுக்கு சந்தோஷத்தை தரட்டும்'' என்ற ஸ்லோகத்தை அவர்கள் சொன்னார்கள்.

வெளிநடையை கடந்து, குறுகலான இடத்தை தாண்டி, பெரிய கூடத்திற்கு வந்ததும், கூடத்தில் கிழக்கு பக்கம் பார்த்து, குடந்தை நகரத்து ஒப்பில்லாத அப்பன் திருவுருவம் வண்ணத் தில் வரையப்பட்டிருந்தது. அதற்கு மிகப்பெரிய விருட்சி மாலை போடப்பட்டிருந்தது. அதற்கு அருகே கிட்டத்தட்ட இரண்டு முழு கை அகலத்தில் அனந்த பத்மநாபஸ்வாமி பாம்பு படுக்கையின் மீது பள்ளி கொண்டிருந்தார். அவரது வலது கை சிவலிங்கத்தின் மீது இருந்தது. அந்த நிலையிலும் விஷ்ணு சிவபூஜை செய்கிறார் என்பதாக அந்த காட்சி தெரிந்தது.

காந்தளூர் சாலை நோக்கி இராஜராஜர் போய் அந்த படை யெடுப்பை நடத்தி முடித்த பிறகு அனந்தபுரத்தில் வெகு நாளைக்கு தங்கி தினம், தினம் பத்மநாப ஸ்வாமி தரிசனத்தை செய்து வந்தார். பரசுராமருடைய க்ஷேத்திரம் அல்லவா என்று வியந்தார். அரசர்களை நடுங்க வைத்த அந்தணரல்லவா என்று கொண்டாடினார்.

''நீங்கள் தொடக்கூடாது'' என்று ஒரு நம்பூதிரி முணு முணுத்தபோது,

''ஏய்'' என்று அதட்டினார்.

''நீங்கள் வைஷ்ணவர் என்பதால் அனுமதிக்கிறோம்'' என்று இன்னொரு அந்தணர் சொன்னபோது, பிரம்பெடுத்து படீர் என்று வாசற்படியில் அடித்தார்.

நாளை இராஜராஜர் வருவார். அவரும் உள்ளே நுழைந்து இந்த பிரதிமையை தொட்டு வணங்குவார். யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது'' என்று புல் பிடுங்குவது போல ஒரு சைகை செய்தார்.

சேர தேசத்து நம்பூதிரிகள் முகம் கவிழ்ந்து கொண்டார்கள்.

''நீங்கள் அகந்தையோடு ஆசார, அனுஷ்டானங்கள் செய் கிறீர்கள் என்று நான் தெரிவித்தால் போதும். இந்த கருவறைக் குள் பல சோழ வீரர்கள் நுழைவார்கள். பத்மநாப ஸ்வாமியை தொடுவார்கள். எனவே அமைதியாக இருப்பது நல்லது என்று எச்சரிக்க, அவர்கள் 'சரி' என்று தலை அசைத்தார்கள்.

பல நூறு சோழ வீரர்கள் உள்ளே நுழையும் காட்சியை அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

கிருஷ்ணன் இராமன் இல்லத்திற்குள் செம்புலி முதலில் உள்ளே நுழைந்தான். தன்னை அறிமுகப்படுத்திக் கொண் டான். உள்ளே சோதிக்க வேண்டும் என்று கிருஷ்ணன் ராம னிடம் அனுமதி கேட்டான். அவர் 'சரி' என்று தலை அசைத்தார்.

விரைவாக கூடத்திற்கு போய் அனந்த பத்பநாப ஸ்வாமி யின் முன்பு நீண்ட நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங் கினான். கை கூப்பினான். சிரித்தான்.

''அவர் இடுப்பிலே இருக்கின்ற ஒட்டியாணத்தை கழற்றி கொடு'' என்று உள்ளே இருக்கின்ற நம்பூதிரியைக் கேட்டான்.

''அதெல்லாம் முடியாது'', என்று நம்பூதிரி சொல்ல, உருவிய வாளோடு கருவறையில் கால் வைத்தான். அவர் பதறி னார்.

''என்ன வேண்டும் உனக்கு. நில்'' என்று சொன்னார்.

''அந்த ஒட்டியாணத்தை எனக்குக் கொடு. எனக்கு வேண்டும். நான் என் வீட்டில் அதை வைத்து பூஜை செய்யப் போகிறேன் என்று சொல்லி, ஒட்டியாணத்தை கத்தி முனையில் பறித்துக் கொண்டு வந்தான்.

அந்த ஒட்டியாணம் வந்த பிறகு அவனுடைய வசதிகள் அதிகமாயின. சோழ தேசத்தில் அவனுடைய வீட்டில் இன்னும் அந்த ஒட்டியாணம் இருக்கிறது.

செம்புலி விரைவாக கிருஷ்ணன் இராமன் வீட்டின் பின் கட்டுக்கும், மேல் மாடிக்கும் போய் வந்தான்.

வந்தியத்தேவருடைய ஆட்கள் வீட்டைச் சுற்றி நின்று கொண்டார்கள். சோழப் படையின் மெய்க்காவல் படை அடுத்தப டியாக நுழைந்தது. செம்புலி அதன் தலைவருக்கு விஷயம்

சொல்ல, அவர் கட்டளை இட அந்த வீட்டின் உட்புறமாக அவர்கள் நின்று கொண்டார்கள்.

மாமன்னர் வரப்போகிறார் என்ற செய்தி தெரிந்து அந்த வீதியில் உள்ள மக்கள் விரைவாக மாளிகையின் முன்பு கூடினார்கள். வந்தியத்தேவரின் மெய்க்காவல் படையால் தடுக்கப்பட்டார்கள்.

''மாமன்னரை பார்த்துவிட்டு போகிறோம் அய்யா, ஏன் குறுக்கே நிற்கிறீர்'' என்று மக்கள் சொன்னார்கள்.

''தாராளமாக பார்க்கலாம். குறுக்கே நிற்கவில்லை. ஆனால் அருகே போய் நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் உங்களை எச்சரிக்கிறேன். இந்த இடம் விட்டு ஒரு அடி முன்னே வந்தால் கூட நான் உங்களை தாக்கக்கூடும்'' என்று ஒரு வீரர் பலமாக எச்சரித்தார்.

பரமன் மழபாடியும், பழுவேட்டரையர் கண்டன் மறவரும் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் படி ஏறியதும் அரண்மனை வளாகத்தில் குடி இருக்கின்ற அரையன் இராஜராஜன் தன்னுடைய சிறிய குதிரைப் படையுடன் மாளிகையின் வாசலுக்கு வந்திறங்கினார். குதிரைகளை காவல் வீரர்களிடம் ஒப்படைத்தார். மேலே போர்த்தி இருந்த போர்வையை விலக்கி இடுப்பில் கட்டிக் கொண்டு காலணிகளை வாசலில் வைத்துவிட்டு கைகூப்பிய வண்ணம் மரியாதையாக உள்ளே நுழைந்தார்.

கிருஷ்ணன் ராமனுக்கு அருகே போய் குனிந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

''நன்றாகத் தெரியுமே. இதென்ன புதிய அறிமுகம்'' என்று சொல்ல, நெடுஞ்சாண்கிடையாக காலில் விழுந்து வணங்கினார்.

''தீர்க்காயுஷ்மான் பவ. ஜெயதேவி உன் முகத்திலே குடியிருக்கிறாள். சாக்த உபாசகம் செய்யும் எவரும் உன் நெற்றியைப் பார்த்து நீ ஜெயிக்கவே பிறந்தவன் என்று சொல்லி விடுவார்கள்.''

''ஆனால் நீங்கள் வைஷ்ணவர் அல்லவா.''

''ஆமாம். பிறப்பால் வைஷ்ணவன். வேலை செய்வது சைவர்களிடத்தில். ஆனால் உள்ளுக்குள் சாக்த உபாசகன்.''

''எதனால் சாக்த உபாசகத்தை நீங்கள் மேற்கொண்டீர்கள்.''

''செய் அல்லது செத்துமடி என்று சொல்வது சாக்த உபாஸகம். அது எளிதல்ல. கடினமான பயிற்சிகளை உடையது. எந்நேரமும் ஜபத்தில் திளைத்திருக்க வேண்டும் என்று சொல்வது, மனைவியைப் புணரும் போது கூட ஜபம் செய்ய வேண்டும் என்று சாக்த மதம் உபதேசிக்கிறது. ஜபத்தினுடைய வலிமையால் தான் மனம் ஒருமைப்படும். மனம் ஒருமைப்பட ஜபத்திற்கு பிரயோகம் ஏற்படும். ஜபத்திற்கு பிரயோகம் ஏற்பட்டால் வெற்றி என்பது வெகு நிச்சயம். அந்த வெற்றி உலகாயத வெற்றியாகவும் இருக்கலாம். கடவுளை வெற்றி கொள்வதாகவும் இருக்கலாம்.''

''கடவுளை வெற்றி கொள்வதா முடியுமா?''

உண்மையான பக்தன் வந்து சொடுக்கினால் கடவுள் வந்து நிற்க வேண்டியதுதான். ஆனால் சொடுக்கத் தெரிந்திருக்க வேண்டுமே. அதை சாக்தம் கற்றுக் கொடுக்கும்.''

''எனது சிற்றறிவுக்கு இது பெரிய விஷயம்.''

''இல்லை. உமக்கும் ஒருநாள் புரியும். அதனால்தான் இப்போது இந்த பேச்சை எடுத்தேன். போய் அமர்ந்து கொள்ளும்.'' அடேய், குடிக்க தாகசாந்திக்கு ஏதாவது கொடு'' என்று உத்தரவிட்டார்.

அவருக்கு வலப்புறத்தில் மன்னருக்கு உண்டான நாற்காலி இருக்க, இடப்புறத்தில் அரையன் ராஜராஜன் அமர்ந்து கொண்டார். அருண்மொழிக்கும், அரையன் இராஜராஜனுக்கும் ஒரே வயது. ஆனாலும் எல்லா படைகளுக்கும் முதன்மை ஏற்கின்ற பொறுப்பை அரையன் இராஜராஜன் தன்னிடம் வைத்திருந்தார்.

''என்னோடு எப்போதும் இருப்பதற்கு அருண்மொழி, எனக்கு பதில் செயலாற்றுவதற்கு அரையன், நிதி நிர்வாகத்திற்கு வந்தியத்தேவர். ஊர் நிர்வாகத்திற்கு பல பேர், போர் பயிற்சிகளுக்கு பரமன் மழபாடி. அரசியல் சாசனங்களுக்கும், சட்டங்களுக்கும், அடுத்தபடியான போர் திட்டங்களுக்கும் முதன் மந்திரியும், சேனாதிபதியுமான கிருஷ்ணன் ராமன்.''

நடுசபையில் தெள்ளத் தெளிவாக அவரவர்க்கு உண்டான யோக்யதையை மாமன்னர் இராஜேந்திரன் விவரித்திருக்கிறார்.



நிருத்த கணபதி

சோழ தேசத்தின் அத்தனை படைகளும் அரையன் இராஜ ராஜனின் விரல் அசைவுக்கு கட்டுப்பட்டன. வந்தியத் தேவ ரிடம் பொக்கிஷ சாவி கொடுக்கப்பட்டு, மற்ற தேசத்திலிருந்து கொள்ளையடித்து கொண்டு வரப்பட்ட அத்தனை பொன், பொருள்களும் வகைப்படுத்தப்பட்டு, கணக்கிடப்பட்டு மன்ன ரிடம் தரப்பட்டது. பெரிய பொற் பாத்திரங்களை உருக்கி காசு களாக மாற்றுகின்ற அக்கச்சாலையும் வந்தியத்தேவரிட மிருந்தது. மதிப்பிடவே முடியாத மிக அற்புதமான நவரத்தினங் களெல்லாம் அந்த பொக்கிஷத்தில் இருக்கின்றன என்று கேள்வி. வந்தியத்தேவரின் வாசமும் அரண்மனை ஒட்டியே இராஜேந்திரருக்கு அடுத்தபடியாகவே இருந்தது.

பூமியிலிருந்து இரண்டு ஆள் உயரத்து ஒத்த நடைபாதை அது. இராஜேந்திரருடைய அரண்மனையையும், வந்தியத் தேவரின் அரண்மனையையும் இணைத்தது. அவ்வப்போது குந்தவையார் இடம்பெயர்ந்து இராஜேந்திரரை சந்தித்து விட்டு போவது வழக்கம்.

படைவீரர்கள் இராஜேந்திரர் கோபத்திற்கு முன்பு பிரம்படி பட்டு தவிக்கிறபொழுது வந்தியத்தேவர் முன்னேறி மன்னர் கையிலிருந்து பிரம்பை பிடுங்கி போடுவதற்கு உரிமை உள்ளவர்.

இவருக்கெல்லாம் அடுத்தபடியாகத்தான் அருண்மொழி சேனாதிபதியாக இருக்கிறான். அவனிடமும் பணம் காசு ஒரு குறிப்பிட்ட அளவு இருந்தது. அவன் சம்பாதித்த சொத்து மட்டு மல்லாமல், கொள்ளையடித்து அவன் பங்கீடுக்கு எடுத்து வந்தது மட்டுமில்லாமல் தந்தையாருடைய சொத்தின் பெரும்பகுதியும் அவனை வந்து சேர்ந்தன. தஞ்சையிலுள்ள பல மாளிகைகள் அவனுக்கு சொந்தமானவை. அதில் அரசாங்க அதிகாரிகள் குடியிருந்தார்கள். அருண்மொழிக்கு வாடகை செலுத்தினார் கள். அந்த வாடகைக் காசிலேயே ஒருவர் பல காலம் சுகமாக இருக்கலாம். அதனால் அருண்மொழிக்கு 'மாராயன்' என்ற சிறப்புப் பட்டமும் இருந்தது. பெருந்தனக்காரன், பெரிய பணக் காரன் என்ற அர்த்தம் அந்த வார்த்தைக்கு உண்டு.

அத்தனை பேரும் உள்ளே நுழைய மாமன்னர் கடைசியாக வந்திறங்கினார். பொதுமக்களுக்கு அருகே போய் நின்று ஒவ் வொரு முகமாகப் பார்த்தார். பெயர் கேட்டார், குசலம் விசா

ரித்தார். சோழ அதிகாரிகளைப் போல மாமன்னர் போவதே இல்லை. 'பொதுமக்களை புறக்கணிப்பதே இல்லை.

"எந்த தேசத்து மறவனடா நீ." ஒரு சிறுபிள்ளையை தூக்கி அருகிலுள்ள மேடையில் நிறுத்தினார். அவன் உடனே கால் அகட்டி, கைகளை கட்டிக் கொண்டான்.

"திருவிடைமருதூர் மறவனய்யா. வல்லவரையர் வந்தியத் தேவருடைய படையில் என் தகப்பனார் நல்ல பதவியில் இருக் கிறார். உங்களை பார்க்க வேண்டுமென்ற ஆவல். யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வந்துவிட்டேன்" என்று சொன்னான்.

கைகட்டி, கால் அகட்டி நிற்பது மறவர் மரபு. கால் அகட்டுதல் தயார் நிலையைச் சொல்கிறது. கை கட்டுதல் பணிவை குறிக்கிறது.

"என்ன கற்றுக்கொள்கிறாய்?"

"களரி."

"இடங்கையா, வலங்கையா."

"வலங்கை."

"என்ன ஆயுதம் பழகுகிறாய்?"

"கேடயமும், குறுவாளும்."

"இதைத் தவிர?"

"மகாராணி வீரமாதேவியார் போல ஈட்டி எறிவதில் எனக்கு உற்சாகம் உண்டு. ஈட்டியை தொலைவே எறிகின்ற அளவுக்கு எனக்கு இன்னும் வலுவு வரவில்லை."

"வந்துவிடும், வந்துவிடும். சிறுபிள்ளைதானே. வாலிபனாக வரும்" என்று உற்சாகமூட்டினார்.

அவன் குனிந்து வணங்கினான். மேடையை விட்டு கீழே குதித்து பெரிய சிரிப்புடன் மக்கள் கூட்டத்திற்கு வந்தான்.

அவன் ஆயுசுக்கு இராஜேந்திரன் சொன்ன அந்த இரண்டு வார்த்தைகள் போதும். அந்த நம்பிக்கை வைத்துக் கொண்டு அவன் மிகப்பெரிய வீரனாக வருவான்.

"கிழவி, அந்தணர் மாளிகையில் உனக்கு என்ன வேலை." இன்னொரு கிழவியை நோக்கி பிரம்பால் தோள் தொட்டார்.

பிரம்பு எடுத்து அவள் கன்னத்தில் வைத்துக் கொண்டாள். தலையில் வைத்துக் கொண்டாள்.

''அந்தணர் வீட்டுக்கு நான் போக மாட்டேன் ஐயா.''

''பிறகு இது என்ன? கிருஷ்ணன் ராமனுடைய இடம் அல்லவா.''

''அவர் அந்தணர் இல்லையே.''

''யார் சொன்னது?''

அந்தணர் போல நடிக்கிறார். உண்மையில் அவர் சரியான மறவர். இராஜராஜ சோழர் காலத்தில் ஐயனுடைய குதிரைதான் முன்னும், பின்னும் அலைந்தபடி வரும். இராஜராஜர் குதிரை நேரே கோடு கிழித்தது போல் வரும். குதிரையில் சவாரி செய்வதை பார்க்கும் பொழுது அவரை அந்தணர் என்றே சொல்ல முடியாது. அவருடைய கத்தி மிகப் பட்டையானது. பலபேரை வெட்டி இருக்கிறது. ஆயிரம் பேருக்கு மேற்பட்டு கொலை செய்தவரை அந்தணர் என்று எப்படி அழைப்பது.''

''அதனால் உள்ளே வந்துவிட்டாயாக்கும்.''

''இல்லை. இல்லை. உங்களை பார்க்க வந்தேன்.''

''இன்னும் பயிற்சி போதவில்லையம்மா. இராஜராஜ சோழர் போல நான் இன்னும் தயார் ஆகவில்லை.'' வேண்டுமென்றே அடக்கமாக இராஜேந்திரர் நடித்தார்.

நன்றாக இருக்கிறதே இந்தக் கதை. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பது எங்களுக்கு தெரியும். நீங்கள் பதினாறு அல்ல. அறுபது அடி தாண்டப் போகிறீர்கள். மொத்த பரத கண்டத்தையும், தஞ்சைக்கு கீழே கொண்டு வந்து அடிபணிய வைக்கப் போகிறீர்கள்.''

''யார் சொன்னது?''

''எங்கள் ஊர் பூசாரிகள் சொல்கிறார்கள். ஜோசியர்கள் சொல்கிறார்கள். பாண்டியர்களுக்கு போதாத காலம். சோழர்களுக்கு உன்னதமான காலம் என்று சொல்கிறார்கள்.''

''வேறு என்ன விசேஷங்கள் சொல்கிறார்கள்?''

''நான் அதிகம் கேட்டுக் கொள்ளவில்லை.''

''பரவாயில்லை சொல்.''

''வேறொரு குறத்தி மட்டும் 'கிழக்கே தளர்ந்திருக்கிறது. அதை மட்டும் உன் மன்னனிடம் 'சொல்' என்று சொன்னாள். நீங்கள் கேட்டீர்கள் சொல்லிவிட்டேன்.''

''கிழக்கே தளர்ந்திருக்கிறதா, என்ன தளர்ந்திருக்கிறது.''

''கட்டுக்காவல் தளர்ந்திருக்கிறது என்கிறாள்.''

''சரி, சரி செய்துவிடலாம்.'' அவர் வலது கையை நீட்ட மூன்று கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன அந்த கழஞ்சுகளை எடுத்து அந்த கிழவியின் கையில் வைத்தார். முகம் தடவினார். மெல்ல நெற்றியில் முத்தமிட்டார். நடந்து கிருஷ்ணன் ராமன் இல்லத்தின் படியேறினார்.

உள்ளே இருந்து கோலூன்றியபடி வெளியே வந்து கிருஷ்ணன் ராமன் கை கூப்ப, சிறிதும் தயக்கம் இல்லாமல் நீண்ட நெடுஞ்சாண்கிடையாக கிருஷ்ணன் ராமன் காலில் விழுந்து வணங்கினார்.

''இராஜேந்திரா, போதும். மறுபடியும் இதைச் செய்யாதே, நீ மன்னன். யார் காலிலும் விழக்கூடாது. உன் காலில் நான் விழலாம் இராஜேந்திரா. என் காலில் நீ விழ வேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அந்த கிழவி சொன்னது போல நான் அந்தணனும் இல்லை. மறவனும் இல்லை.

''நாம் இரகசியம் பேசினோம் என்று நினைத்துக் கொண்டிருந்தோமே.''

''என் வீட்டிற்கு நீ வரும்போது, என் அகத்தில் நீ என்ன என்ன செய்கிறாய் என்று எனக்கு தெரிய இருக்கலாமா. தெரிந்து கொள்ள ஆட்களை வைத்திருக்கிறேன்.''

''மன்னனையே வேவு பார்க்க கிருஷ்ண ராமனால் மட்டும் தான் முடியும்.''

''உன் தந்தையையே வேவு பார்த்தவன்.''

''ஆனால் என் பெரியப்பா ஆதித்த கரிகாலனை கோட்டை விட்டுவிட்டீர்கள். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் குத்தி அவரை கொல்லும்படி பரிதாபமாக இறக்கும்படி வைத்து விட்டீர்கள்.''

''அதற்கு காரணம் நானல்ல. உன் பெரிய தந்தை, யார் பேச்சையும், எதன் பொருட்டும் கேட்பதில்லை. நில் என்றால்

ஓடுவான். ஓடு என்றால் நிற்பான். அப்படி செய்வதுதான் வீர மென்று அவனுக்கு யாரோ கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அது கிரகக் கோளாறு. அதுவும் தவிர சிறு வயதிலேயே களிப்பாக்கை மென்னுகிற குணம் வந்துவிட்டது. சேர தேசத்து பாக்கை அதிகம் சாப்பிடக்கூடாது.''

''சாப்பிட்டால் என்ன ஆகும்?''

''பாக்குப் போலவே ஜாதிக்காய் என்று ஒரு காய் இருக்கிறது. அந்த ஜாதிக்காயை வாயில் அதக்கிக் கொள்ள அது மூளையில் பரபரப்பை ஏற்றும், மூளை தன்னுடைய வழக்கத்திறகு மாறாக வேலை செய்யும். அது மனிதரை பரபரப்பாக வைக்கும். ஆதிக்க கரிகாலன் அப்படி பரபரப்பாக மாறிவிட்டார். அந்த பழக்கத்திலிருந்து அவர் மீண்டு விட்டாலும் படபடப்பிலிருந்து அவர் மீளவேயில்லை. அவருடைய முடிவுக்கு அவரே காரண மானார், வேறு எவரும் காரணமல்ல.''

''அப்போது என் தந்தை இராஜராஜர் படை எடுத்து காந்தளூரை அழித்தது.''

''ஒரு சாக்கு, காந்தளூரின் முதுகை உடைக்க வேண்டும் என்பது இராஜராஜரின் நெடுநாளைய கனவு. பதினான்கு வரு டங்கள் அவர் சோழ தேசத்தை சுற்றி சுற்றி வந்தபோது சேர தேசத்திலிருந்து மலையாளிகள் கும்பல் கும்பலாக சோழ தேசத் தில் குடியிருப்பதைப் பார்த்தார். சோழ தேசம் முழுவதும் பரவி யது மட்டும் அல்லாமல் சிதம்பரத்தில், உடையார்குடியில், நாகைக்கு அருகே இருக்கின்ற ஊரில், பூம்புகாரில் என்று பல இடங்களில் அவர்கள் குடியேற்றப்படுவதைப் பார்த்தார். திட்ட மிட்டு உள்ளே நுழைகிறார்கள் என்று புலம்புவார்.

இதை பாஸ்கர இரவிவர்மன் செய்யவில்லை. சேர தேசத் தின் மன்னனின் காரியமில்லை அது. காந்தளூர்சாலை மட்டும் தான் ஒரு முக்கியமான புள்ளியாக மாற வேண்டுமென்று பேராசைப்பட்டு அதன் மூலம் சோழ தேசத்தை கபளீகரம் செய்துவிடலாம் என்று கற்பனையோடு நுழைந்த செயல். சேர தேசத்து நம்பூதிரிகளின் அதீத கர்வம்.

அதைத்தான் குறி வைத்து தாக்கினார். ஆதித்த கரிகால னின் இழப்பு ஆதித்த கரிகாலனாலேயே ஏற்பட்டது. சேர தேசம் சிதறிப் போனதற்கும் அந்த காந்தளூர் வலிய சாலைதான்

காரணம். அதை நிர்வகித்து வந்த நம்பூதிரிகள் காரணம். வாள் எடுத்த அந்த அந்தணர்குழு காரணம்.

இப்பொழுது அங்கே என்ன நடக்கிறது தெரியுமா. வாள் எடுத்த அந்தணனை ஜாதியிலிருந்து விலக்கிவிட்டார்கள். நமக்கு தேவையில்லாத தொழிலை, நமக்கு தேவை இல்லாத நேரத்திலே செய்தவர்கள் இவர்கள் என்று சேர தேசத்தின் பாழ் பட்ட நிலைக்கு இவர்களே காரணம் என்று ஒதுக்கிவைத்து விட்டார்கள். ஒதுக்கி வைத்த பிறகும் அவர்தம் ஆட்டம் அடங்க வில்லை. நீ போய்த்தான் முற்றிலுமாக அடக்கினாய். இப்பொழுது அத்தனை நம்பூதிரிகளும் மேலைச் சாளுக்கியத்தில் இருப்பதாகக் கேள்வி.''

''இருக்கட்டும் எங்கிருந்தாலும் உதை வாங்கப்போவது நிச்சயம். உங்களுக்கு ஒரு தொந்தரவு தரப்போகிறேன். இந்த இடத்தில் அரச சபையை கூட்டப் போகிறேன்.''

''இது உன்னுடைய இடம், எப்படி வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் நிகழ்த்திக் கொள்ளலாம்.

ஏன் அரண்மனையை விட்டு இங்கு வந்துவிட்டாய். நான் தெரிந்து கொள்ளலாமா.'' பணிவாகக் கேட்டார்.

என் அரண்மனை வேவு பார்க்கப்படுகிறதோ என்ற சந்தேகம் இருக்கிறது. மேலைச்சாளுக்கியம் படை எடுப்புக்கு தயாராக இருக்கிறபொழுது வெகு நிச்சயமாக ஆட்களை ஊடுருவி அரண்மனைக்குள் அனுப்பி இருப்பார்கள். அரண்மனையில் நடமாட்டம் அதிகமாகிவிட்டது. குந்தவையார் ஒரு பக்கம். மாதேவடியார் ஒரு பக்கம். சிற்றன்னைகள் ஒரு பக்கம் என்று குடியிருக்க அவர்களை தேடி வரவும், அவர்களுக்கு வைத்தியம் செய்யவும் ஆட்கள் வந்து புழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரண்மனை அவ்வளவு இரகசியமான இடமாக இல்லை. மிகத் திறந்தவெளியாக இருக்கிறது.''

''அதுவும் ஒரு காரணமோ.''

''என்ன அதுவும் ஒரு காரணமோ என்றால்..

''நீ இடம்பெயரப் போவதாக பேசிக் கொள்கிறார்கள். ஜெயங்கொண்டத்துக்கு நகரப் போவதாக சொல்கிறார்கள். அதுவும் ஒரு காரணமோ.''

''ஆமாம். அதுவும் ஒரு காரணம். யாரை வெளியேறச் சொல்ல முடியும். யாரை ஆட்களை உள்ளே அனுப்பாதே என்று சொல்ல முடியும். எனவே இந்த இடத்தை இராஜராஜ ருடைய மனைவியருக்கு கொடுத்துவிட்டு, நல்ல காவல்களை ஏற்படுத்திவிட்டு நான் இன்னும் வடக்கு நோக்கி நகரலாம் என்றிருக்கிறேன்.''

''இது மட்டும்தான் காரணமா?''

''இன்னொன்றும் இருக்கிறது ஐயன்.''

''சொல், என்ன இருக்கிறது?''

''இப்பொழுது சோழ தேசத்துக்கு ஆபத்து வடக்கேயிருந்து தான் இருக்கிறது. பாண்டியர்களின் முழங்காலை உடைத்து விட்டேன். சேரர்களை சர்வநாசம் செய்துவிட்டேன். சிங்கள வர்கள் எந்த காரணம் கொண்டும் படை எடுத்து வர மாட்டார்கள். வடக்கே கீழைச் சாளுக்கியத்தை மேலைச் சாளுக்கியம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. கீழைச் சாளுக்கியம் இன்னும் நம்மை நம்பிக் கொண்டிருக்கிறது. கீழைச் சாளுக்கியத்தை பாதுகாக்க வேண்டுமென்றால் நான் இன்னும் சற்று ஒரு நாள் தொலைவில் அவர்களுக்கு அருகே இருக்க வேண்டும்.

குதிரை ஏறினால் எசாளம், எண்ணாயிரம் வழியாக நான் திருவொற்றியூரை அடைந்து கீழைச்சாளுக்கியத்திற்கு போய் விட முடியும்.

பெரும் கோட்டையும், உள்ளுக்குள் நகரமுமாக கட்டு கிறேன். மிகச் சிறந்த கோவில் ஒன்றை நிர்மாணிக்க எண்ணம் கொண்டிருக்கிறேன். ஐயன் வந்து அங்கு குடியேற வேண்டும்.''

''ஆஹா, அவசியம் வருகிறேன்.''

சொன்ன வேகத்திலேயே அது மிகப்பெரிய மறுதலிப்பு என்று இராஜேந்திரருக்கு புரிந்தது.

அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். அவரவர் ஆசனத்தில் அமர்ந்தார்கள். வெல்லம் கலந்த கடலைப் பருப்பு பாயசம் கொடுக்கப்பட்டது. மன்னர் எதிரே சேர தேசத்து முந்திரி பருப்பு கள் வைக்கப்பட்டன. மற்றவர்களிடம் நீட்டிய போது வேண் டாம் என்று மறுதலித்து விட்டார்கள்.

இன்னும் கொஞ்சம் கடலைப் பருப்பு பாயசம் வேண்டும் என்று வந்தியத்தேவர் கேட்டு வாங்கி உண்டார்.

அரசருடைய தங்கை குந்தவையின் நிலைமை அங்கு உள்ளவர்களுக்கு அடிக்குரலில் சொல்லப்பட்டது. எல்லோரும் காது கொடுத்து கவனமாக கேட்டுக் கொண்டார்கள்.

''விமலாதித்தனுடைய நிலைமை என்ன, எண்ணம் என்ன?'' பரமன் மழபாடி அவசரமாகக் கேட்டார்.

''தெரியவில்லை.''

''இந்நேரம் தெரிந்திருக்க வேண்டுமே.''

''ஆதரவாகவும் இல்லை, எதிர்ப்பாகவும் இல்லை.''

''அப்படித்தான் இருக்க முடியும்.''

''நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்.''

''நீங்கள் சொல்லுங்கள். என்ன செய்யலாம் என்று.''

''உடனடியாக படை எடுப்பு நடத்துவோம். வெகுநாளாகவே எகிறிக் கொண்டிருக்கிறார்கள். கங்க தேசத்திலோ, இராட்டிரக்கூடத்திலோ கால் வைக்க முடியாது என்பதால் மேலைச் சாளுக்கியத்து ஆட்கள் கீழைச்சாளுக்கியத்தில் இறங்கி அங்கே இருந்து இந்தப் பக்கம் திரும்ப நினைக்கிறார்கள். இதை நிச்சயம் முறியடிப்போம்.

''உங்களுடைய எண்ணம் என்ன ஐயன்'' என்று பணிவாக இராஜேந்திரர் கிருஷ்ணன் ராமனை நோக்கிக் கேட்டார்.

''படை எடுப்பு எளிது. நம் படை அங்கு போய் சேருவதற்கு முன்பு கைது செய்தவர்களுக்கு ஏதேனும் ஆபத்து வந்துவிட்டால் அவர்களை வெட்டி எறிந்துவிட்டால் என்ன செய்வது. எனவே உடனடி படை எடுப்பு என்பதை நான் ஆதரிக்கவில்லை.''

''அரையன் இராஜராஜன் நீ என்ன சொல்கிறாய்.''

''நான் ஒரு நூறு வீரர்களோடுப் போய் இரவோடு இரவாக அவர்களுடைய மாளிகையைத் தாக்கி அவர்கள் இரண்டு பேரையும் எடுத்துக்கொண்டு நான் இந்தப் பக்கம் வந்து விடுகிறேன்.''

''வருவதற்கு குந்தவை விரும்பவில்லை எனில்,''

''கயிறு கட்டி எடுத்து வர வேண்டியதுதான்.''

''நல்ல யோசனை. ஆனால் நீர் போகக்கூடாது.''

''வேறு யார் போக வேண்டும்.''

''அதையும் யோசிக்க வேண்டும்.'' அடிக்குரலில் மன்னர் பேசினார்.

''இன்னொரு பிரச்சனையும் உங்கள் வீட்டு வாசலில் வந்து நிற்கிறது மன்னா.'' கிருஷ்ணராமன் சொல்ல, என்ன என்பது போல் பார்த்தார்.

''உங்களிடம் நேரே வர பயந்து, என்னிடம் வந்திருக் கிறார்கள்.''

''யார்?''

''சோழ தேசத்து வணிகர்கள். நானாதேசிகள்.''

''என்னவாம்?''

''ஸ்ரீ விஜயத்தில் அவர்களை கடுமையாகத் தாக்கி மிக மோசமாக தண்டித்து இருக்கிறார்கள்.''

''யார்?''

''ஸ்ரீ விஜயத்து பண்டகள்.''

''எதனால்?''

''சோழ தேசம் எங்களுக்கு அடங்கியது. எனவே நாங்கள் இல்லாது சீன தேசத்தினர் சோழ தேசத்தினரோடு வியாபாரம் செய்யக்கூடாது. நடுவே எங்களைத் தாண்டித்தான் போக வேண்டும். எங்கள் மூலமாகத்தான் போக வேண்டும் என்று சொல்ல, அவர்கள் முறைத்திருக்கிறார்கள்.''

''பிறகு.''

''சோழ தேசத்தினர் சரி என்று சொல்லி இருக்கிறார்கள்.''

''அடடே.''

''ஆக, சீன தேசத்து வணிகர்களை பயமுறுத்த, அந்த வணிகத்தை நடத்திவிட்டு சோழ மரக்கலன்கள் கிளம்பிய வுடன் அதை சுற்றிக் கொண்டு தீக்கிரையாக்கி அங்குள்ளவர் களை அடித்து இனிமேல் இந்தப் பக்கம் வராதே. நாங்கள்

சொல்கிற வரைக்கும் இங்கு வரக்கூடாது. அதுதான் சீனனுக்கு தண்டனை என்று சொல்லியிருக்கிறார்கள். அதேசமயம் சோழர் களை கடுமையாகத் தண்டித்திருக்கிறார்கள். நமது நானா தேசிகருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

''என்னவிதமான தண்டனை?''

''கொஞ்சம் கொடுமையாக இருக்கிறது.''

''சொல்லுங்கள்.''

''இரண்டு உள்ளங்கைகளையும் கத்தியால் செதுக்கி ஒன்றாக வைத்து கைகூப்பும்படி கட்டி விடுகிறார்கள். இருபது நாள் இருபத்தைந்து நாள் அப்படியே கட்டிப் போடப்படுகிறது. பிறகு கட்டைப் பிரித்துப் பார்த்தால் கைகளை விலக்க முடிய வில்லை. இரண்டு தோலும் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்டு வளர்ந்துவிடுகிறது. அப்படி வளர்ந்து விடும்படியான மருந்தும் அவர்கள் அதில் தடவி விடுகிறார்கள்.

ஆக ஆயுதம் எடுக்க முடியாமல், படகு செலுத்த முடி யாமல், மூட்டை தூக்க முடியாமல், மூட்டை இறக்க முடியாமல் அந்த வணிகர்கள் கூப்பிய கையாகவே இருக்கிறார்கள்.''

''எங்கே அந்த வணிகர்கள்?''

''என் வீட்டு வாசலில் இருக்கிறார்கள்.''

''ஏன் என்னை நேரே வந்து சந்திக்கவில்லை. எதற்கு உங்கள் மூலமாக வருகிறார்கள். நானாதேசிகருக்கு என்னை என்ன பழக்கமில்லையா.''

''பழக்கம் உண்டு. மாமன்னா, ஆனால் நாங்கள் வரும்போ தெல்லாம் நீங்கள் வேறு ஏதேனும் ஒரு தேசத்தில் மும்முரமான படை எடுப்பில் இருக்கிறீர்கள். அதனால்தான் நான் இங்குள்ள வர்களிடம் தெரிவித்தேன்.''

''கூப்பியபடியே இருக்கிறதா.''

''ஆமாம்.''

''எங்கே, துணியை விலக்கு.'' ஒரு வணிகரின் துணியை விலக்க அவர் கூப்பிய கையோடு நின்றிருந்தார்.

ஊர் சபை எழுந்து நின்று அவரைப் பார்த்தது. வந்தியத் தேவர் அருகே போய் நின்றார். மெல்ல அவர் கையை தொட்டார்.

''நீங்கள் தொட்டாலும் வலிக்கிறது வந்தியத்தேவரே,'' என்று அவர் முனகினார்.

மன்னர் அந்தக் கையை பிரிக்க முயற்சிக்க, அலறல் இன்னும் பெரிதாக இருந்தது. மன்னர் அவனை விட்டுவிட்டார்.

''இதைத் தவிர இன்னொரு கொடுமையும் நடக்கிறது.''

''என்ன அது?''

''இரண்டு கால் கட்டை விரல்களையும் வெட்டி விடுகிறார் கள்.''

''அப்படி வெட்டிவிட்டால்?''

''நிற்க முடியாது, நடக்க முடியாது, ஓட முடியாது.''

கம்பு ஊன்றி நின்ற ஒருவனை அழைத்து வந்தார்கள். அவரது இரண்டு கால்கட்டை விரல்களும் வெட்டப்பட்டு இருந்தன.

''அருண்மொழி'' மாமன்னர் கர்ஜித்தார். அவர் முகம் சிவந்து காணப்பட்டது.

''நாகை விகாரத்தில் ஸ்ரீ விஜயத்து தூதுவர் இருக்கிறா ரல்லவா.''

''ஆமாம்.''

''நமக்கு ஏதோ பரிசுப் பொருளை கொண்டு வந்தாரல்லவா.''

''ஆமாம்.''

அந்தப் பரிசுப் பொருளை சிதற அடித்துவிட்டு அவரை கைது செய்து கொண்டு வா. தஞ்சை சிறையில் அடைத்து விடு. இதை யாரேனும் தடுக்க முயன்றால்.''

''புத்த பிட்சுக்கள் முயலுவார்கள்.''

''பிரம்பால் அடி. கூசாது அடி. முன்பக்கம் தூதுவர், பின் பக்கம் கொள்ளையா. எந்த ஊர் நாகரீகம் இது. சோழன் இளிச்ச வாயனா அவனுக்கு அடங்கியவனா. என்ன நினைத்துக் கொண் டிருக்கிறான் ஸ்ரீ விஜயத்தில். ஸ்ரீ விஜயத்து மன்னனுக்கு இங்கு உள்ள புத்த பிட்சுகள் உளவு பார்க்க வந்திருக்கிறார்களா. மொத்த விகாரையும் தரைமட்டமாகிவிடும் என்று சொல்லுங்கள்.''

''அப்படி எல்லோரையும் சந்தேகப்பட முடியாது.''

''இல்லை. நான் எல்லோரையும் சந்தேகப்படுவேன். எப்போதும், எல்லோரையும் சந்தேகப்படுவேன். அது என் இயல்பு. புத்த பிட்சு என்பதால் அவனை ஒரு காலமும் சோழ தேசத்தின் நண்பன் என்று ஏற்க மாட்டேன். அவனவன் அவன் தேசத்திற்கு உண்மையாக இருக்கிறான். நாம்தான் நம் தேசத்திற்கு உண்மையாக இல்லை.''

''என்ன சொல்கிறீர்கள் மாமன்னரே.'' கிருஷ்ணன் ராமன் இரண்டு கையும் விரித்துப் பேசினார்.

''என் தங்கை இல்லையே. என் சோழ தேசத்துக்கு இல்லையே. சோழ தேசம் சரியாக இருக்க வேண்டுமென்றால் இப்படிப்பட்ட ஒரு அபத்தமான முயற்சியை செய்வாளா. சோழ தேசத்தை நாசமாக்க வேறு யாரும் வர வேண்டாம். சோழ தேசத்தில் உள்ளவர்கள் போதும். மாமன்னர் இராஜேந்திரர் கிட்டத்தட்ட பிளிறினார்.

சோழ தேசத்து வணிகர்களுடைய பரிதாபமான நிலை அவருக்கு கோபமூட்டியது. அவரை கையாலாகாதவன் என்று சொல்வது போல் இருந்தது.

''அருண்மொழி, உன்னிடம் வந்து இவர்கள் சொன்னார்களாமே நீ என்ன நடவடிக்கை எடுத்தாய்.''

அந்த மரக்கலனிடமிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்கள் ஸ்ரீ விஜய மரக்கலனில் ஏற்றப்பட்டு இங்கு வந்து சேர்ந்தது. அதாவது தாங்களே நேரடியாக விற்பது போல ஸ்ரீ விஜயம் மாலுமிகள் நடந்து கொண்டார்கள். ஆனால் இந்த செய்தி இவர்கள் மூலம் வந்துவிட நான் உள்ளேயே சோதித்தேன். உள்ளே வரக்கூடாது என்று தடுத்தார்கள். இரண்டு பேரை வெட்டிப் போட்டேன். பயந்து பின்வாங்கினேன். அதில் இருக்கின்ற அத்தனை பாய்மரங்களையும் கழற்றி தரைக்கு கொண்டு வந்துவிட்டேன்.

அதிலுள்ள பொருள்கள் அத்தனையும் கரையில் இறக்கி ஒரு பெரிய கிட்டங்கியில் இறக்கிவிட்டேன். புத்த பிட்சுக்கள் இதற்கே மறுப்பு தெரிவித்தார்கள். தலையிட வேண்டாம். இது அரசியல் என்று அவர்களை தடுத்துவிட்டேன்.''

''அந்த தூதுவர் எங்கிருக்கிறார்?''

அங்கேயேதான் இருக்கிறார். ஆனால் அவர் இதில் தலை யிட்டே இல்லை.

''நல்லது. நான் மறுபடியும் சொல்லும்வரை சோழ தேசத் திலிருந்து எந்த கப்பலும் ஸ்ரீ விஜயம் நோக்கியோ அல்லது வேறு எந்த திசை நோக்கியோ பயணப்படக் கூடாது. இந்த வருடம் நீங்கள் கடல் கடக்கவில்லை என்றால் எந்தக் குறையும் வந்துவிடாது.

எனக்கு உடனடியாக கவனிக்க வேண்டிய வேலைகள் சிறிது இருக்கின்றன. அதை முடித்துவிட்டு வெகு நிச்சயம், நான் ஸ்ரீ விஜயத்தை தண்டிப்பேன். இது என் தாய் வானமாதேவி யின் மீது ஆணை. இது தஞ்சையை காவல் காக்கும் நிசும்ப சூதனியின் மீது ஆணை. என் தந்தை இராஜராஜ பெருவேந்தர் மீது ஆணை.'' குரல் உயர்த்திச் சொன்னார்.

கூட்டத்தில் உள்ளவர்கள் 'இராஜேந்திர சோழர் வாழ்க' என்று கோஷமிட்டார்கள். 'திருமன்னி வளர' என்ற மெய்கீர்த் தியை படித்தார்கள்.

''இந்த சபை இப்போது கலையலாம். அடுத்த சபை எப்போது கூடும், எங்கு கூடும் என்று இப்பொழுது சொல்ல இயலாது.''

''உடனடியாக தஞ்சை ஆதுரச்சாலைக்குப் போங்கள். குந்தவையாருக்கு நான் செய்தி அனுப்புகிறேன். இந்தக் கையை நிச்சயம் பிரிக்க முடியும். ரண சிகிச்சை செய்து இதை எடுத்து விடுவார்கள். கவலைப்பட வேண்டாம். உங்கள் கை பழையபடி சரியான வழிக்கு வரும். அதற்கு நான் உத்தரவாதம். அந்த வணிகரை அணைத்துக் கொண்டுச் சொன்னார். அந்த வணிகர்கள் கண்கள் நீர் சொறிந்தன.

வீரமாதேவி. எழுந்திரு. உன்னுடைய தலைமையில் நூறு வீரர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு நீ வேங்கி தேசம் நோக்கிப் போ. அங்கு போய் எவரும் அறியாவண்ணம் குந்தவையை யும், இராஜ நரேந்திரனையும் மீட்டுக் கொண்டு வா. குந்தவை எகிறினால் குத்திக் கொன்றுவிடு. இராஜநரேந்திரனை மட்டும் மீட்டுக் கொண்டு வா. மற்றபடி பெரும் போர் என்று வந்தால் சரணடைந்து விடு. பிறகு நான் வருகிறேன்.''

"தேவையில்லை மன்னா. வெகு நிச்சயமாக நான் வெற்றி அடைவேன். குந்தவையை கொல்ல வேண்டிய அவசியம் கூட இருக்காது. பின் தலையில் அடித்து, இழுத்து வருவேன். அப்படி ஒருவேளை நான் சிக்கிக் கொண்டால் சரணடைய மாட்டேன் மன்னா. தற்கொலை செய்து கொள்வேன். எப்பொழுது கிளம்ப வேண்டும்?" வீரமாதேவியார் எழுந்து நின்று பேசினார்.

"ஐயன் எது சரியான நேரம்?"

"இன்று நல்ல நேரம். நாளையும் பரவாயில்லை. நாளை மறுநாள் அஷ்டமி வந்துவிடுகிறது. பயணத்துக்கு நல்லதல்ல."

"தாக்குதல் அஷ்டமியில் இருக்கலாமா?"

"அற்புதமாக இருக்கலாம். அப்பொழுது இன்றே கிளம்பி விடலாம்."

"இன்று என்றால் எந்த நேரம்?"

"உடனடியாக இப்பொழுதே, இந்த நிலையிலிருந்தே, அவர்கள் போருக்கு கிளம்புவதாக கிளம்பிவிடலாம்."

"சரி, அப்படியே ஆகட்டும். வீரமாதேவி நான் எங்கு இருக்கிறேன் என்று விசாரித்து விட்டு அங்கு வந்து என்னை சந்தித்து விட்டுப் போ" என்று விடை கொடுத்தார்.

வீரமாதேவி புயல் போல வெளியே போனார்.

மாமன்னர் மிகப்பெரிய சிந்தனையோடு கிருஷ்ணன் ராமன் வீட்டை விட்டு வெளியே வந்தார்.

ஒரு மனிதன் கையில் தூக்கு வாளி வைத்திருந்தான். அது மூடப்பட்டிருந்தது.

"என்ன அது?"

"பகல் சோறு."

"எங்கே இருந்து வருகிறாய்?"

"தஞ்சையில்தான் இருக்கிறேன்."

"தஞ்சையில் இருந்து கொண்டு பகல் சோறை கையில் கொண்டு வருகிறாயே, என்ன."

"இன்று வீட்டில் சமைக்கவில்லை."

"பிறகு."

"தஞ்சையிலுள்ள சோற்றுக்கடை வீதியில் சாப்பிட்டோம். அம்மாவிற்கு வாங்கிப் போகிறேன்."

"சோற்றுக்கடை வீதியா. எங்கிருக்கிறது அது?"

"கோவிலுக்கு மிக அருகிலேயே இருக்கிறது, அந்தணர்கள். எல்லோரும் சோற்றுக்கடை வைத்திருக்கிறார்கள்."

"அப்படியா, இது என்ன சோறு?"

"புளியஞ்சோறு."

"எடுத்து வா. பார்க்கலாம்." எடுத்து முகர்ந்தார். ஒரு பிடி வாயில் இட்டுக் கொண்டார். மணத்தது. வாயில் ருசித்தது. அடே, அற்புதமாக இருக்கிறதே."

"இதென்ன. அங்கு தனியாக ஒரு பணியாரம் செய்கிறார்கள். தேங்காய் புட்டு, வெல்லப்புட்டு என்று. அற்புதமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. ஆப்பமும், தேங்காய் பாலும் தருகிறார்கள்."

"வேறென்ன இருக்கிறது?"

"கெட்டி தயிர் சாதம், கதம்ப சாதம், அதுவும் தயார் செய்கிறார்கள். அதுவும் நன்றாக இருக்கிறது. ஆனால் ஒரு தயிர் சாதம், மூன்று மாடை. கொஞ்சம் விலை அதிகம் தான்."

"இந்த மாதிரி எத்தனை கடைகள் இருக்கின்றன?"

"பதினாறு, பதினேழு கடைகள் இருக்கின்றன. இன்னும் கடைகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்."

"அருண்மொழி உனக்குத் தெரியுமா?"

"ஒருமுறை சாப்பிட்டிருக்கிறேன்."

"என்னை இதற்கெல்லாம் கூட்டிக்கொண்டு போகாதே. பரவை என்னோடு தேர் ஏறிக் கொள். நாம் நேராக சோற்றுக்கடை வீதி போகிறோம்" என்று ஏறிக்கொண்டார். மக்களுக்கு கை அசைத்தார். அவர் குதிரை சோற்றுக்கடை வீதி நோக்கிப் போனது, அவர் சாப்பிட போகவில்லை. தனியே போய் சிந்திக்கப் போகிறார் என்பது அங்குள்ள அனைவருக்கும் புரிந்தது.

ஆனால் உண்மையில் மன்னருக்கு பசித்தது. கோபம் அதிகமாகி கத்தியதால், உணர்ச்சி பொங்கியதால், பல் கடித்ததால், ரத்த ஓட்டம் அதிகமாகியதால் அதன் விளைவாக அடி வயிற்றில் அமிலம் சுரந்து கபகபவென்று எரிந்தது. ஏதேனும் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அவருடைய தேர் வெகுவேகமாக சோற்றுக்கடை வீதி நோக்கி வந்தது.

ஒரு மாமன்னர் தனது மனைவியுடன் அந்த வீதிக்குள் நுழைவார் என்று அந்த வீதியில் உள்ள அந்தணர்கள் நினைக்கவே இல்லை.

* * *


கங்காளநாதர்

அத்தியாயம்

10

வேங்கி நகரத்து எல்லையில் சேர தேசத்துமட்ட குதிரைகள் பதினைந்து, கயிறுகளால் பிணைக்கப்பட்டு எங்கோ விற்பனைக்கு கொண்டு போவது போல நடத்தி அழைத்துப் போகப்பட்டன. ஒரு மாட்டு வண்டியில் வைக்கோல் போருக்கு கீழே சேனங்கள் இருந்தன. அதற்கு பின்னே பைராஜிகள் போல வேடமிட்டு சம்மந்தம் இல்லாமல் மாட்டு வண்டியை பின் தொடர்ந்தார்கள். அவர்களுக்குப் பின்னே கணவனும், மனைவியுமாய் இரண்டு பேர் குழந்தையை தூக்கிக் கொண்டு மாட்டு வண்டியை பின்தொடர்ந்தார்கள்.

நாலாபுறமும் உற்று பார்த்தபடியே மனைவியாக நடித்துக் கொண்டிருந்த வீரமாதேவி நடந்து போய்க் கொண்டிருந்தாள். வேங்கி தேசத்திலேயே குந்தவைக்கு காவலாக இருந்த போர்வீரன் தனது குழந்தையை அழைத்துக் கொண்டு அவளை வேங்கி தேசத்தின் எல்லையில் சந்தித்தான்.

வேங்கி தேசத்துக்குள் போய் வேலை சம்பாதிப்பவர் போல அவர்கள் மூட்டை முடிச்சுகளோடு நடந்து கொண்டிருந்தார்கள். அந்த மூட்டைக்குள் கேடயமும், கத்தியும், சுருள் வாளும், ஈட்டி முனைகளும் இருந்தன. அதற்கான கம்பு அந்த வீரன் கையில் இருந்தது. அவனுடைய தோளில் மூட்டையை சுமந்திருந்தது.

கோட்டை வாசலில் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். விவரம் சொன்னதும் உள்ளே அனுப்பப்பட்டார்கள்.

''மனைவி லட்சணமாய் இருக்கிறாளாடா. இளவரசர் விஷ்ணுவர்தரிடம் போய் வேலை கேள். நிச்சயம் கிடைத்துவிடும்'' என்று வாயிற் காவலன் உரக்கச் சொன்னான்.

''இவன் மேலைச் சாளுக்கியம். இப்பொழுதெல்லாம் வாயிற் காவல் மேலைச் சாளுக்கியத்திடம்தான் இருக்கிறது'' என்று அடிக்குரலில் கொஞ்சம் வருத்தத்தோடு சோழ வீரன் சொன்னான்.

அதை வீரமாதேவி காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. அவள் பார்வையெல்லாம் எந்த அரண்மனையில் யார் இருக்கிறார்கள் என்பதிலேயே இருந்தது. ஒவ்வொரு அரண்மனைக்கும் இடையே உள்ள தொலைவு அவள் குறித்துக் கொண்டே வந்தாள். பாதைகளை சரியாக கவனித்துக் கொண்டு வந்தாள்.

இராஜநரேந்திரனுக்கு முதலில் தகவல் தெரிவிக்கப் பட்டது. அவன் கதவு திறந்து கொண்டு வெளியே வந்தான். இவர்கள் போவதை பார்த்து திகைத்திருந்தான். பிறகு மாட்டுவண்டி வருவதை புரிந்து கொண்டான். தொலைவே வீரமாதேவி வருவதை பார்த்து விட்டு ஓடோடி வந்து அவள் காலில் விழுந்தான். தவறு. ஆனால் அந்த செய்கையில் அன்பும், நம்பிக்கையும் இருந்தன.

''என்ன இது. எதற்கு என் காலில் விழுகிறீர்கள்'' என்று பதறிய கிராமத்துப் பெண்ணாய் தொடர்ந்து நடித்தாள்.

''உள்ளே வாருங்கள்.'' அவன் வீரமாதேவியின் கையை பிடித்து இழுத்து உள்ளே அழைத்துப் போனான்.

குந்தவை கூடத்திற்கு நடுவே உள்ள நாற்காலியில் அமர்ந்திருந்தாள். 'என்ன' என்பது போல் கால் மீது கால் போட்டுக் கொண்டு வீரமாதேவியாரைப் பார்த்தாள்.

''இன்னும் பதினைந்து நொடிகளில் நீங்கள் வெளியே வரவேண்டும்'' என்று வீரமாதேவி உத்தரவு இட,

''ஏன்?'' என்று கேள்வி கேட்டாள்.

''அந்தக் கேள்விக்கும் பதில் கிடைக்காது. நான் என்ன சொல்கிறேனோ அதை செய்ய வேண்டும்.''

''அதை செய்வதற்கு நாங்கள் ஒன்றும் உங்கள் அடிமை இல்லையே.''

''இப்போதைக்கு என்னுடைய அடிமை. அடிமையாக இல்லாவிட்டால் அடி வாங்குகிற அடிமை.''

''அடிப்பாயா.''

''நிச்சயம் அடிப்பேன். கூசாமல் அடிப்பேன். சொல்லி சொல்லி அடிப்பேன்.''

''நான் யார் தெரியுமா. இராஜேந்திரனுடைய தங்கை, நீ யார்?''

''நான் யார் தெரியுமா. இராஜேந்திரனுடைய மனைவி, வீரமாதேவி. சந்தித்து நாளாகிவிட்டது அல்லவா. அதனால் உனக்கு மறந்து போயிருக்கும்.''

''உனக்கு இங்கு என்ன வேலை?''

''உனக்கு ஒரு வேலையும் இங்கு இல்லாதபோது, ஒரு வேலையும் இல்லாத உன்னை ஊருக்கு அழைத்து வருவது தான் என் வேலை.''

''நான் இங்கு பட்டத்து ராணி.''

''அப்படி தெரியவில்லையே. ஏதோ ஒரு குப்பை மேட்டில் அல்லவா உட்கார்ந்திருக்கிறாய். பட்டத்து ராணியினுடைய வீடா இது.''

''இருளில் வந்து ஏன் கலகம் செய்கிறாய். அடேய் யார் அங்கே?''

வீரமாதேவி முன்னேறி பளீர் என்று அவள் கன்னத்தில் அறைந்தாள். வாயைத் திருப்பி தலைமுடியை பிடித்து இழுத் தாள். இடுப்பிலிருந்து துணியை உருவி வாயை இறுக்கக் கட்டி னாள். குரல் எழுவதற்கு முன் பின் மண்டையில் அடித்தாள். அந்த அடி தாங்காமல் குந்தவை மயங்கி விழுந்தாள். அவள் குந்தவையை இழுத்து வேறொரு வீரனிடம் கொடுக்க இரண்டு வீரர்கள் அவளை எடுத்துப் போனார்கள்.

மடமடவென்று குதிரைகளுக்கு சேணங்கள் மாட்டப்பட் டன. அதற்கு பின்னால் வந்த ஒரு தேர் சட்டென்று நின்றது. அந்த தேரில் குந்தவையை ஏற்றினார்கள். சட்டத்தோடு வைத்து இறுக்கக் கட்டினார்கள்.

''என்னோடு குதிரையில் வா'' என்று சொல்லி இன்னொரு குதிரையை இராஜநரேந்திரனுக்கு கை காட்டினாள்.

இராஜநரேந்திரன் குதிரை ஏறினான். அதில் தெளிவு இல்லை. குதிரை ஏறி பழக்கம் இல்லை என்று தெரிந்தது.

''மாளிகையை தீக்கிரையாக்கி விடுங்கள்'' என்று சொல்ல, காவலுக்கு இருந்த சோழ வீரர்கள் மடமடவென்று மாளிகைக்கு தீ வைத்தார்கள். குதிரை ஏறினார்கள். முன்னே போன படை வீரர்களை பின்தொடர்ந்தார்கள். முன்னே போன படைவீரர் களுக்கு நடுவே, வீரமாதேவியும், நரேந்திரனும் இருந்தார்கள்.

அதற்குப் பின் தேர் ஓடியது. தேருக்குப் பின்னே குந்தவைக்கு காவல் இருந்த சோழ வீரர்கள் இருந்தார்கள். வெகு வேகமாக யார் கவனத்தை கவரும் முன்னே அந்த இடத்தை விட்டு அகன் றார்கள்.

எல்லை வாசலுக்கு வந்தபோது தடுத்து நிறுத்தப்பட் டார்கள்.

''குந்தவை தேவியாருக்கு உடல்நலம் சரியில்லை. உடனடி யாக அவர்களை எலும்பு முறிவுக்கான மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும்.'' இராஜநரேந்திரன் சொன்னான்.

''நீங்கள் மட்டும் இருக்கிறீர்கள். இந்தப் பெண்மணி யார்?''

''சேடியாக வந்திருக்கிறார். அவர்தான் வைத்தியம் செய்யப் போகிறார்.''

''அப்படியா, நகர்ந்து கொள்ளுங்கள், நகர்ந்து கொள்ளுங் கள்'' என்று சொல்ல, அவர்கள் தேருக்கு பின்னே ஓடிவந்து வீரமாதேவியை சோதித்தார்கள். ஆனால் தேர் விரைவாகப் போயிற்று.

திடீரென்று சிலபேர் விழித்துக் கொண்டார்கள்.

''எனக்கென்னவோ இது தவறாகப்படுகிறதே. பின் தொடர்ந்து மடக்குவோம் என்று சொல்லி,

''அடேய் நில். அடேய் நில்'' என்று உரக்கக் கத்தினார்கள்.

அவர்கள் வருவது தெரிந்து வீரமாதேவி நரேந்திரனை முன்னே போகும்படி உத்தரவிட்டாள். பிறகு குதிரையை திருப்பி னாள். இடுப்பிலிருந்து சுருள் வாளை எடுத்துக் கொண்டாள். அவளுக்கு பாதுகாப்பாக நான்கு வீரர்கள் நின்று கொண்டார்கள்.

நான்கு வீரர்கள் வழிமறித்து நிற்பதைக் கண்டதும் மேலைச் சாளுக்கிய வீரர்களின் குதிரைகள் சறுக்கி நின்றன. என்ன என்பது போல் பார்த்தன.

''உண்மையில் நீங்கள் யார்?'' என்று கேட்க, ஒரு ஈட்டி வீரமாதேவியின் கைக்கு மாறியது. மிக வேகமாக கேட்டவன் நெஞ்சில் செலுத்தப்பட்டது. அவன் குப்புற விழுந்தான். வீர மாதேவி முன்னேறி சுருள்வாளை வேகமாக சுழற்றினாள். அங்கு இருக்கின்ற நான்கு பேர் முகத்திலும், கையிலும், கால்களிலும்

வாளின் வீச்சு விழுந்தது. அவர்கள் அலறி விழுந்தார்கள். இரண்டு குதிரைகளுக்கு காயம் ஏற்பட்டு அவை கனைத்து மேலே உள்ள வர்களை கீழே உதறி நாலாபுறமும் ஓடிற்று. எதிரே மடக்கு வதற்கு ஆள் இல்லை என்பதால் வீரமாதேவி திரும்பினாள்.

மிக விரைவாக குதிரையை செலுத்தினாள். வழியில் நூறு வீரர் களும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். சற்று தள்ளி இன்னொரு நூறு வீரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். திருவொற்றியூரில் நானூறு வீரர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் வீரர்கள் சேர்ந்த படை திருவொற்றியூரைத் தாண்டி திருமயிலை வழியாக மாமல்லபுரத்திலுள்ள ஒரு சோழ வீர னிடம் சரியான செய்தி சொல்லி அவனை இன்னும் முன்னே அனுப்பியது.

குந்தவைக்கு வைத்தியம் செய்யப்பட்டது வீரமாதேவி மௌனமாக காயத்தின் வலியை பொறுத்துக் கொண்டாள்.

'''பெண்ணா இவள். ஆண்பிள்ளை போல் இருக்கிறாள். மார்பகம் உள்ள ஆண்களை நம்பக்கூடாது. மார்பகமே இல்லாத பெண்களை நம்பக் கூடாது என்று சாமுத்ரிகா லட்சணம் சொல் கிறது. ஆண்போல இருக்கிறாள். அலியைப் போல் இருக்கிறாள்'' என்றெல்லாம் முரட்டுத்தனமாக குந்தவை பேச, வீரமாதேவி கவசத்தை இறுக்க அணிந்து கொண்டு வெளியே வந்து அமர்ந்து கொண்டாள்.

மாமல்லபுரத்து மாளிகையில் எல்லோருக்கும் நல்ல உணவு தரப்பட்டது.

பெண்ணாக இருந்தாலும் கேலி, பெண்ணாக இல்லாது போனாலும் கேலி. அடடா. இந்த பெண்கள் வாழ்க்கை மட்டும் இந்த தேசத்தில் ஏன் இப்படி சூறையாடப்படுகிறது என்று வியந்தாள். ஆண்களுக்கு இணையாக எது செய்தாலும் அது ஏன் அதிசயமாக பார்க்கப்படுகிறது. எனக்கு புரியவில்லையே என்று வியந்தாள். இந்த நேரம் அருண்மொழிப்பட்டன் இருந் தால் ஏதேனும் பேச்சுத் துணையாக இருக்கும். இந்த வீரர்களோடு என்ன பேச, என்று தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டாள்.

வந்தியத்தேவராவது இருந்திருக்கலாம். அவரும் சரியாக விவரம் சொல்வார். உடனடியாக அவர்களை சந்திக்க வேண்டும் போல் இருக்கிறது என்று ஆசைப்பட்டாள்.

தொலைவிலிருந்து ஒரு குதிரை வீரன் வருவது தெரிந்தது. 'என்ன' என்று விசாரிக்க, மேலைச் சாளுக்கியப்படை பெரிதள வில் திருவொற்றியூர் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்றும், இன்னும் ஒரு நாளில் திருவொற்றியூரை தொட்டுவிடும் என்றும், தொண்டை மண்டலத்தை ஒரே இரவில் கபளீகரம் செய்யப்பட்டு விடும் என்றும் சொல்லப்பட்டது.

எல்லோரும் துள்ளி எழுந்தார்கள். தொடர்ந்து தஞ்சைக்கு போக வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். குந்தவையின் கை, கால்களை கட்டி யானையில் உள்ள அம்பாரியில் போட் டார்கள். பிறகு யானையை வேகமாக செலுத்திக் கொண்டு அவர்கள் தெற்கு நோக்கி விரைந்தார்கள்.

வீரமாதேவிக்கு சுரீர் என்று அடி வயிறு வலித்து இடுப்பு முறுக்கிற்று.

எண்ணாயிரம் எசாளம் வழியாக ஜெயங்கொண்டம். ஜெயங் கொண்டம் வழியாக கொள்ளிடக்கரை. கொள்ளிடக்கரை வழி யாக குடந்தை. குடந்தை வழியாக பாபநாசம். பாபநாசம் தாண்டி கபிஸ்தலம். கபிஸ்தலம் தாண்டி தஞ்சை என்று வந்திறங்கி னார்கள். அவர்கள் பயணப்படுவதற்கு ஒன்றரை நாள் பிடித்தது.

மீண்டும் ஒரு வீரன் வந்தான்.

திருவொற்றியூர் கோட்டை, கோவில் இரண்டும் மேலைச் சாளுக்கியர் வசம் பிடிபட்டு விட்டது என்று சொல்லப்பட்டது.

அவர்களுக்குள் பிளவு ஏற்பட்டு விட்டதாம். கலிங்க வீரர் கள் முன்னே போவதா, ஓட்ட வீரர்கள் முன்னே போவதா, கீழைச் சாளுக்கியம் முன்னே போவதா என்று சண்டை ஏற்பட்டு விட்டதாம். கீழைச் சாளுக்கியம்தான் முன்னே போக வேண்டும் என்று சொல்ல, ''எங்களுக்கு போர் ஆசையே இல்லையே எங்களை ஏன் முன்னே அனுப்புகிறீர்கள்'' என்று கேட்க, முன்னே போய்த்தான் ஆகவேண்டும் என்று கீழைச்சாளுக்கிய வீரர்களை பிரம்பால் அடித்திருக்கிறார்கள்.

எனவே, அந்த இடம்விட்டு அவர்களால் உடனே நகர முடியவில்லை என்ற செய்தி வந்தது.

தஞ்சை எல்லையின் வாசலில் இராஜேந்திர சோழர் குதிரை யில் அமர்ந்தபடி வீரமாதேவியை வரவேற்றார். அருகே வந்ததும் அணைத்துக் கொண்டார்.

''எங்கே அந்த நாய்?'' என்று கேட்டார்.

''யானையின் மீது படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது'' என்று வீரமாதேவி சொல்ல,

''அது கிடக்கட்டும்.

திருவொற்றியூர் வரை வந்துவிட்டதாகக் கேள்வி. அதனால் அரையன் இராஜராஜன் நேற்று படைவீரர்களோடு வேறுபக்கம் போயிருக்கிறார். மூன்று லட்சம் படை வீரர்கள் திருவொற்றி யூரை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதைப் பற்றி கவலைப்படாதே. வா. வந்து குளித்துவிட்டு படுத்து உறங்கு. வேறு எங்கேனும் காயம் உண்டா'' என்று கேட்க.

''கவசம் இறுக்கிய காயங்கள் தவிர வேறு எதுவும் இல்லை'' என்று காட்டினாள். அந்த காயத்தை மாமன்னர் தடவிக் கொடுத் தார்.

பரவை நாச்சியார் கால் பிடித்துவிட, வீரமாதேவியார் அன்று இரவு அதிகம் தவித்தபடி உறங்கினாள்.

நாகையில் அருண்மொழியால் கைது செய்யப்பட்ட ஸ்ரீ விஜயத்தின் ஒரு முக்கியமான தளபதி. தஞ்சை சபையில் கொண்டு வந்து அமர்த்தப்பட்டான். அவனுக்கு துணையாக இரண்டு புத்த பிட்சுக்கள் வந்திருந்தார்கள். அந்த புத்த பிட்சுக் கள் தமிழர்கள் அல்ல. அவர்களும் ஸ்ரீவிஜயம் சேர்ந்தவர்களே. அவர்களை மரியாதை நிமித்தம் இங்கு என்று சொல்லப்பட்டது. ஆயினும் அவர்கள் பிடிவாதமாக அந்த தூதுவனுக்கு துணை யாக வந்தார்கள். உற்று கவனிக்கையில் அவர்கள் கையில் இருந்த தழும்புகள் அவர்கள் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் என்று தெளிவாகத் தெரிந்தன.

இந்த புத்த பிட்சுக்களில் யாரேனும் ஒருவர் இடுப்பில் வாள் மறைந்திருக்கலாம் என்று பரமன் மழபாடி அனுமானித் தார். சட்டென்று வீரர்களை அனுப்பி சோதனை செய்யச் சொன் னார். நாலு வீரர்கள் பிடித்துக் கொள்ள அவ்விதமாகவே உடை கள் களையப்பட்டன. இரண்டு பேர் இடுப்பிலிருந்தும் 'டணார்' என்று வாட்கள் விழுந்தன.

''எனவே நீங்கள் புத்த பிட்சுக்கள் அல்ல. சரியா. பின் கை கட்டுங்கள்'' என்று சொல்லி, பின் கை கட்டி, அவர்களது

உடுப்பை பாதியாக கிழித்து வெறும் இடுப்பு துண்டாக வைத்து அவர்களை தரையில் அமர வைத்தார்கள்.

ஒரு புத்த பிட்சுவை தரையில் அமர வைப்பது சோழ தேசத்தில் அதுவே முதல் தடவை.

இராஜேந்திரர் அரண்மனை பரபரப்பாக இருந்தது. அந்த காலை வேளையில் எல்லா படைதளபதிகளும் வந்துவிட, குந்தவை அடித்து எழுப்பப்பட்டாள். முகம் கழுவப்பட்டாள். உடனடியாக அரண்மனைக்கு வரவேண்டும் என்று அவளுக்கு உடைகள் தரப்பட்டன.

''நான் இந்த கிழிந்த உடைகளோடே வருகிறேன்'' என்று அந்த உடைகளை வீசி எறிந்தாள்.

இராஜநரேந்திரன் முன்னதாக ஓடிவந்து மாமாவின் காலில் விழ, அவனை இறுக்கி அணைத்துக் கொண்டார். கட்டி முத்த மிட்டார்.

''இத்தனை குழப்பத்திற்கு நடுவிலும் நீ தெளிவாக இருக் கிறாய் என்று உன் உடம்பு சூடு காண்பிக்கிறது.''

''வீரமாதேவியார் வருவார் என்று நான் நினைக்கவே இல்லை. எங்கே அவர்?''

''அயர்ந்து தூங்குகிறார்கள். தூங்கட்டும் என்று விட்டு விட்டு வந்துவிட்டேன். விமலாதித்தனுடைய மனோநிலைமை என்ன?''

''மிக மோசமானதாக இருக்கிறது, சிற்றன்னையினுடைய பிடியில் சிக்கியிருக்கிறார். சிற்றன்னை மிகுந்த தந்திரசாலி. என் அம்மாவோ பைத்தியக்காரி. கெஞ்சி, கொஞ்சி தன்னுடைய வழிக்கு தகப்பனாரை மாற்றுகிறார். அவ்வப்போது நம் அன்னையை சீண்டி விடுகிறார். சிறிது சீண்டலுக்கும் எகுறு கின்ற குந்தவை தேவியார் அந்த பெண்மணியின் சீண்டலுக்கு அதிகமாக குதிக்கிறார்.

உதாரணமாக குந்தவை தேவியார் வந்தால் அந்தப் பெண் மணி எழுந்து நின்று வரவேற்பாள். காலில் விழுந்து வணங் குவார். பிறகு விமலாதித்தருக்கு அருகே போய் அமர்ந்து கொள் வார். விமலாதித்தருக்கு அருகே போய் அமர்ந்து கொண்டதும் குந்தவை தேவியாருக்கு அருகே போய் உனக்கு அங்கே உட்கார தகுதியில்லை தள்ளிப் போ. வேறிடத்தில் உட்கார்

என்று சொல்லி அவருடைய வலப்புறத்தில் வந்து உட்கார்ந்து கொள்வார்கள். இடப்புறம் காலியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். அந்த பெண்மணியும் சரி என்று கேட்டுக் கொண்டு விலகி நிற்பார்கள். விமலாதித்தருக்கு அவர் கள் விலகி நிற்பதும் இவர்கள் அலட்சியம் செய்வதும் மிகக் கோபத்தை ஏற்படுத்தும்.

ஏன் அவர்களை விலகி நிற்கச் சொல்லுகிறாய். அவளுக் கும் உரிமை உண்டல்லவா என்று ஆரம்பிப்பார். அவளுக்கு உரிமை இல்லை என்று இவர்கள் பேச, உண்டு என்று அவர்கள் பேச, அன்றைக்கு சபை முழுவதும் இந்த சண்டையாகவே முடியும். ஜனங்கள் நன்றாக சிரித்து ரசிப்பார்கள். ஆபாசமாக இருக்கும்.

குந்தவை தேவியார் திருவாதிரை அன்றைக்கு கோவி லுக்கு போகிறார் என்றால் அந்தப் பெண்மணியும் வந்துவிடு வாள். 'எனக்குத்தான் முதல் பூஜை' என்று அம்மா பரபரக்க, சரி. அவர்களுக்கே செய்யுங்கள் என்று அந்தப் பெண்மணி விலகி விடுவாள். விலகி நின்று மக்கள் கூட்டத்திற்கு நடுவே உட்கார்ந்து சிரித்து, சிரித்து பேசுவார்கள். குந்தவை தேவியாரை யாருமே சீண்ட மாட்டார்கள். அவர்கள் தனியாக பூஜை முடித்து அவர்களுடைய வீரர்களுடன் திரும்ப, பெரிய மக்கள் கூட்டத்தோடு அவர்கள் கோவிலுக்குள் நுழைவார்கள். இதை பார்ப்பதற்கே அம்மாவுக்கே எரியும், கோபம் வரும்.

''அவளை எப்படியாவது கொலை செய்ய வேண்டுமடா'' என்று என்னிடம் கிசுகிசுப்பார்கள். நான் மௌனமாக இருப்பேன்.''

''விஷ்ணுவர்தனை சண்டைக்கு இழுத்து கொன்றுவிடேன்'' என்று சொல்லுவார்கள்.

''யார் அது விஷ்ணுவர்தன்?''

''அந்தப் பெண்மணியின் புதல்வன். விமலாதித்தருடைய இரண்டாவது மகன். என்னுடைய சகோதரன்.''

''விஷ்ணுவர்தனனா. ஓஹோ. சைவம், வைணவம் என்று பிரிக்கிறார்களா.''

''பல்வேறு விதமாக பிரிக்கிறார்கள். நான் தமிழ் பேசு கிறேன், அவர்கள் தமிழ் பேசுவதில்லை. தெலுங்கு பேசுகிறார்கள்.

கன்னடம் பேசுகிறார்கள். ஒட்டர்கள் மொழியில் பேசுகிறார்கள். மறந்து போய் கூட தமிழில் பேசுவதில்லை.''

''உன் அம்மாவிற்கு ஏதோ கெட்ட பெயராமே.''

''ஆமாம். 'ஆட கோதி' என்று அழைக்கிறார்கள்.''

''ஆட கோதி என்றால்?''

''பெண் குரங்கு என்று அர்த்தம். குந்தவை என்ற பெயரே கீழை சாளுக்கியத்து மக்களுக்கு தெரியாது. ஆட கோதி என்பது தான் இவர்களுக்கு அவர்கள் வைத்த பெயர்.''

''எவ்வளவு அவமானமடா.''

''மாமா. நான் எவ்வளவு அவஸ்தைபட்டிருப்பேன் என்று உங்களுக்குத் தெரியுமா. உண்ண முடியாமல், உறங்க முடியாமல் நான் கழித்த தினங்கள் அதிகம்.''

''எனக்கு புரிகிறது. குந்தவையை வரச் சொல்லுங்கள்.'' அரசர் ஆணையிட்டார்.

குந்தவை அழுக்கடைந்த ஆடையுடன், கலைந்த தலையுடன் ஒரு சபைக்குள் அலங்கோலமாக நுழைந்தாள். உட்கார ஆசனம் தேடினாள்.

''நில்லுங்கள் என்று கண்டிக்கப்பட்டாள். அவள் அலட்சியமாக நிற்க, இராஜேந்திர சோழர் அவளை மிகுந்த வெறுப்போடு உற்றுப் பார்த்தார்.

''என்ன பார்க்கிறாய். என்னை இரவோடு இரவாக ஒரு பெண்ணை விட்டுத் தூக்கி வரச் செய்து என்னை அசிங்கப் படுத்தி விட்டாயே. எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் இது'' என்று சொல்ல, இராஜேந்திரர் பதில் சொல்லவில்லை.

இதுதான் நீ ஆட்சி நடத்துகின்ற இலட்சணமா. இதுதான் நல்ல ஆட்சியா. யார் சொன்னார்கள் நீ நல்ல ஆட்சி நடத்துவதாக. என் தகப்பனாருக்கு உறை போட காணுவாயா'' என்று சீறி முன்னே வர,

''அங்கேயே நில். ஆட கோதி'' என்று மாமன்னர் கட்டளை இட்டார்.

பெண் குரங்கு என்று மன்னர் தன் தங்கையை சபை நடுவே விளித்தது சிரிப்பொலியை வரவழைத்தது. ஒரு மன்னர்

தன் தங்கையை அப்படி அழைப்பது சிரிப்பதற்கான விஷயம் அல்ல. ஆயினும் சிரிப்பதை தவிர்க்க முடியவில்லை.

''வீட்டுக் காவலில் இருப்பதாக நடித்தாயல்லவா. இப்பொழுது நீ வீட்டுக் காவலில்தான் இருக்கப் போகிறாய். அரண்மனையின் அந்தப் பகுதியில் உனக்கு உண்ண உணவும், உடுத்த உடையும், குளிப்பதற்கு உண்டான வசதியும் செய்து தரப்படும். நீ அந்த இடத்தை விட்டு ஒருகாலும் எங்கும் போக முடியாது.

வேங்கி தேசத்தை நோக்கி படை எடுப்பு நடக்கும்போது அந்த படை எடுப்புக்கு இராஜ நரேந்திரன் தலைமை தாங்குவான், முன்னே போய் நிற்பான். வேங்கியுளுள்ள உன் புருஷனோடு போரிடுவான். தன்னுடைய பட்டாபிஷேகத்தை தானே நின்று நடத்திக் கொள்வான். யார் தயவும் இராஜ நரேந்திரனுக்கு தேவையில்லை. அவனுக்கு பின்புலமாக அவன் மாமன் இராஜேந்திரன் இருக்கிறான். இந்த ஒரு தைரியம் போதும்.''

சபை 'ஆஹா, ஆஹா' என்று அங்கீகரித்தது.

''குந்தவை இந்த இடத்தை விட்டு போய்விடு. இனிமேல் நீயும், நானும் பேச வேண்டிய அவசியம் இல்லை. போ'' என்றான்.

உள்ளே கையில் ரத்தம் ததும்பிய துணிக்கட்டுடன் அருண்மொழிப்பட்டன் உள்ளே நுழைந்தான்.

''தவறு நேர்ந்துவிட்டது மன்னா.''

''என்ன?''

''நான் ஒரு புத்த பிட்சுவை அடித்து, நெஞ்சில் கத்தி வைத்து இறக்கி கொன்றேன். அடுத்தவன் பக்கத்திலுள்ள வீரனின் ஈட்டியை பிடுங்கி தன் வயிற்றில் சொருகிக்கொண்டு இறந்து போனான். ஆக நாம் நினைத்தபடி ஸ்ரீ விஜயத்துக்கு செய்தி அனுப்ப முடியாமல் போகிறது.''

''அதனாலென்ன, நாகை விகாரத்தில் உள்ள புத்த பிட்சுகள் இரண்டு பேரைப் பிடி. முதுகில் அடி. அவர்களை படகில் ஏற்றி நேராக ஸ்ரீ விஜயம் நோக்கி போகச் சொல்.

சிறு நாவாய் கொடு. இங்கே என்ன நடக்கிறது என்று விவரம் சொல். நாகையில் காவல் இருப்பது யார்?''

''உங்கள் மகன் இராஜாதித்தன்.''

''இராஜாதித்தன் அங்கிருக்கும் வரை நாம் ஏன் கவலைப் பட வேண்டும் அருண்மொழி. இராஜிதித்தனுக்கு இங்கு நடக்கின்ற விஷயங்கள் மொத்தமும் சொல்லி அங்கு பலமான காவலை ஏற்படுத்தச் சொல். எவரையும் சந்தேகப்படச் சொல். புத்த பிட்சுக்களை நம்பக்கூடாது என்று எச்சரித்து வை. ஸ்ரீ விஜயத்தில் வணிகர்களுக்கு ஏற்பட்ட அட்டகாசத்தை அவனுக்கு விவரமாகச் சொல்.

நாகையில் கட்டுப்பாடுகள் அதிகமாகட்டும்.''

''வேங்கி நோக்கிப் போவது எப்போது?''

''அது நாளை விவாதிப்போம். நல்ல நாள் என்னவென்று ஐயன் அவர்கள் சொல்லட்டும். ஐயன் சொன்ன தேதியில் எத்தனை படைகள் திரட்ட முடியும் என்பதை பார்ப்போம். திருவொற்றியூர் வரை மட்டுமே நான் அரையன் ராஜராஜனை அனுப்பியிருக்கிறேன். அரையன் ராஜராஜன் அங்கேயே இருப் பார். எப்போது அவசியமோ அப்போது வேங்கிக்குள் நுழைய லாம்.''

''மன்னா இன்னொரு பிரச்சனை வந்திருக்கிறது.'' அரண் மனை உள்ளிருந்து பரவையார் ஓடிவந்து மன்னர் காதுக்கருகே வந்து

''ஒரு பிரச்சனை.''

''என்னது?''

''வீரமாதேவியார் கருவுற்றிருப்பார் போல் தெரிகிறது.'' கரு கலைந்துவிட்டது.

* * *

அத்தியாயம்

11

‘‘கர்ப்பம் கலைதலா, வீரமாதேவிக்கா. அப்படி ஒரு விஷயம் சொல்லப்படவே இல்லயே. அப்படி ஒரு விஷயம் உடம்பில் இருப்பதாய் அவள் வெளிக்காட்டவே இல்லையே. இவ்விஷயத்தை வேறு யாரிடமாவது சொல்லியிருந்தாளா. அவசரமாக இராஜேந்திர சோழர் வீரமாதேவியின் அறையை நோக்கி நடந்தார்.

அந்த அரண்மனையிலுள்ள மிகப் பெரிய கூடம் ஒன்று பல அறைகளாக தடுக்கப்பட்டிருந்தது. மிக உயரமான மேல் தளம் கொண்ட அந்த கூடத்திற்கு பல்வேறு இடத்தில் வெப்பக் காற்று உள்ளே போவதற்கான வட்ட சாளரங்கள் இருந்தன. அந்த வட்ட சாளரங்கள் வழியாக வெளிச்சம் வந்தது. அது தவிர ஒவ்வொரு அறைக்கும் மிகப்பெரிய கம்பி சாளரங்கள் இருந்தன.

அறைக்குள் பெரிய கட்டிலும் உட்காருவதற்குண்டான மர நாற்காலிகளும், உணவுப் பண்டங்களை வைப்பதற்குண் டான உயர்ந்த பீடமும், துணிமணிகளை அடுக்கி வைப்பதற் குண்டான மூடி போட்ட மரக் கூண்டுகளும் இருந்தன. குடிநீர் பானைகள் இருந்தன. ஒவ்வோர் அறையிலும் கதவு திறந்தால் வெளிப்பக்க கழிவறைகள் இருந்தன.

இராஜேந்திர சோழர் வீரமாதேவியை நோக்கி போகும் போது அதிகாரிகளில் சிலர் பரபரப்பாக துணிகளோடு வெளியே வந்தார்கள். அந்த துணி முழுவதும் இரத்தம் இருந்தது. இராஜேந் திர சோழர் அதிர்ந்து போனார். கிட்டத்தட்ட கையை வெட்டி னால் என்ன இரத்தம் இருக்குமோ அந்த இரத்தம் துணிகளில் இருந்தது.

‘‘என்ன இது?’’ அவர் வாங்க முற்பட, அதிகாரிச்சிகள் அவரை தொடவிடாமல் பின்னே நகர்ந்து கொண்டார்கள்.

‘‘யாருக்கு இவ்வளவு இரத்தம், வீரமாதேவிக்கா.’’ அவர்

உள்ளே போக, அவருடைய முக்கியமான மனைவியான முக்கோ கிழானடி வேண்டாம் என்று தடுத்து விட்டார்.

"ஏன்? நான் உள்ளே போனால் என்ன?"

"இப்பொழுது நீங்கள் வீரமாதேவியை பார்க்கக்கூடாது."

"ஏன் பார்த்தால் என்ன?" அவர் கொஞ்சம் கோபத்தோடு கேட்டார்.

"இப்பொழுது நீங்கள் வீரமாதேவியை பார்த்தால் பிறகு உங்களுக்கு அவளை பார்க்கவே தோன்றாது. வீரமாதேவிக்கு இந்த நிலைமையில் நீங்கள் அவளை பார்ப்பது சிறிது கூட விருப்பம் இருக்காது."

"ஒருவேளை இது அவளுக்கே தெரியவில்லையோ."

"இல்லை. அவளுக்கு தெரிந்திருக்கிறது."

"எதை வைத்து சொல்கிறாய்."

"பச்சை மாங்காய் துண்டுகள் நறுக்கி உப்பிட்டு வைத்தி ருக்கிறாள். அடிக்கடி உண்கிறாள். தினமும் விடியற் காலை யில் மூன்று, நான்கு துண்டுகள் மென்று மென்று தின்கிறாளாம். இதற்கு என்ன அர்த்தம். வாய்க்கு அவ்வளவு புளிப்பு தேவைப் படுகிறது. வயிற்றில் குழந்தை உண்டாகும் பொழுது ஏற்படும் இரசாயன மாற்றம் அது. குமட்டல் வரும். அந்த குமட்டலை நீக்கவும் இந்த புளிப்பு உதவி அவசியம்."

"எனக்கு இந்த விஷயங்களை எல்லாம் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எதற்காக இரகசியமாக, வீரமாதேவி இந்த விஷயத்தை வைத்துக் கொள்ள வேண்டும்."

"பிறபாடு சொல்லலாம் என்று நினைத்திருக்கலாம்."

"அப்படி இருக்கிறவள் எதற்காக கீழைச்சாளுக்கியம் போக வேண்டும்."

"நீங்கள் கட்டளை இட்டதால் போயிருக்கலாம்."

"இப்படி இருக்கிறாள் என்று தெரிந்தால் நான் கட்டளையிடு வேனா."

"வேறு யாரும் அந்த வேலையில் ஈடுபட்டு தவறாகச் செய்து அதனால் உங்களுக்கு அவமானம் வரக்கூடாது என்ற எண்ணமாக இருக்கலாம்."

ஆக சோழ தேசத்தில் ஒரு வேலை செய்வதற்கு வீரமா தேவியை விட்டால் வேறு ஆளே இல்லை. அப்படித்தானே. இது அதிகப்பிரசங்கித்தனமாக இல்லை. கர்வத்தினுடைய உச்ச கட்டமல்லவா இது. போரில் ஈடுபட தெரிந்து விட்டது என்றால் அதை எந்நேரமும் பிரகடனப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டுமா. என்னிடம் சொல்லக் கூடாதா. நான் அருண்மொழி யைத் தான் அனுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தேன். இவள்தான் உள்ளே புகுந்து நானே போகிறேன் என்று சொன் னாள். அதற்கு ஆயிரம் காரணங்கள் வேறு கற்பித்தாள். இப் பொழுது இந்த அவஸ்தை.

''வலி இருக்குமா?''

''இது என்ன கேள்வி.''

''அதிகம் வலி இருக்குமா.''

''போதும். நீங்கள் தயவு செய்து போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.''

''எனக்கு ஏது ஓய்வு. ஓய்வு என்றால் மல்லாக்க படுத்துக் கொள்வதா. இல்லை. ஓய்வு என்றால் உள்ளுக்குள்ளே கொதிக் கின்ற சிந்தனை இல்லாதிருத்தல். எப்போது நான் அரச பதவியை ஏற்றேனோ அன்றிலிருந்து இன்றுவரை கொதிக்கின்ற பிரச் சனைகள் தான் என்னைச் சுற்றி இருக்கின்றனவே தவிர யாராலும், எவராலும் நான் நிம்மதியாக இல்லை. இருக்க முடியவில்லை.

எனக்கு தங்கை ஒருத்தி. பிசாசாக வந்து வாய்த்திருக் கிறாள். முட்டாளாக ஒருவன் மாப்பிள்ளையாக மருமகன் இருக் கிறான். நண்பன் என்று சொல்லி என்னை ஏமாற்றுகின்ற ஸ்ரீ விஜயத்து மன்னன் இருக்கிறான். நாகையில் வந்து உளவாளி களாக செயல்படுகின்ற ஒற்றர்கள் இருக்கிறார்கள். எல்லா விதங் களிலும் ஒரு அரசன் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்க, வீட்டுக் குள்ளும் அவன் ஏமாற்றப்படுகிறான் என்றால் இதைவிடப் பெரிய வேதனை ஒரு மனிதனுக்கு என்ன இருக்க முடியும்.

என்னுடைய மனைவியே என்னிடம் விஷயங்களை மறைக் கிறாள் என்றால் நான் யாரிடம் போய் அழுவது, வீரமாதேவியை அடிக்க வேண்டும்போல் இருக்கிறது.''

"இன்று ஒருநாள் அமைதியாக இருங்கள். நாளை சரியாகி விடும். கருவிலுள்ள மொத்த திசுக்களும் வெளியே வந்து விட்டால் வயிறு சுத்தமாகிவிடும். கருப்பை சுத்தமாகி விட்டால் நன்கு தூங்க ஆரம்பித்து விடுவாள். பிறகு போஷாக்கான உணவு கள் கொடுத்து, நல்ல மருந்துகள் கொடுத்து சீர்செய்து விடலாம்."

"இங்கு வைத்தியர் வேண்டுமா?"

"அதிகாரிச்சிகள் பலபேருக்கு இந்த வைத்தியம் தெரியும். குந்தவை அத்தைக்கு நான் செய்தி அனுப்பி இருக்கிறேன். அவர் தக்க வைத்தியரை அனுப்புவார்.

வைத்தியர் வருவதற்குள் இந்த இடத்தையும், அவளையும் சுத்தப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் வேகமாக செய லாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது உள்ளே வரவே வராதீர்கள். பரவை என்ன நிற்கிறாய். கூட்டிக் கொண்டு போ." முக்கோகிழானடி பல் கடித்து கோபித்துக் கொள்ள, பரவை அவர் புஜத்தை பிடித்து இழுத்தாள். அவருக்கு பரவை மீது கோபம் வந்தது.

"ஒரு நாள் நீ அடி வாங்கப் போகிறாய். யார் மீதோ இருக் கின்ற வெறுப்பை உன்மீது காட்டப் போகிறேன். என்னை உன் வழிக்கு இழுத்துக் கொண்டு போய்விடலாம் என்று ஒரு பெரிய்ய கர்வம் உன்னிடம் இருக்கிறது. அதை என்னிடம் செலுத்தாதே. எனக்குப் பிடிக்காது."

"நீங்கள் அடிப்பதற்கெல்லாம் பயந்துவிட மாட்டேன். உங்க ளுக்கு எங்கள் மீது பிரியம் மிக அதிகம். மிக மிக அதிகம். அதுதான் கோபமாக வருகிறது. உங்கள் கொஞ்சல் எவ்வளவு வேகமாக இருக்குமோ அதேபோல உங்கள் கோபமும் வேகமாக இருக்கிறது. நீங்கள் எங்களை மட்டும் இப்படி நேசிக்கவில்லை. இந்த மொத்த சோழ தேசத்தையும் நேசிக்கிறீர்கள். உங்கள் நேசிப்பு முரட்டுத்தனமானது. அதை புரிந்தவர்கள் பாக்யசாலி கள். நான் மிகப் பெரிய பாக்யசாலி. எனக்குத் தெரியும். என்னை விட வீரமாதேவி மிகப் பெரிய பாக்யசாலி. அவருக்கும் புரியும். எனவே இப்போது வாருங்கள்."

"என்ன பாக்யசாலி என்கிறாய். இது மிகப்பெரிய தொந்தரவை ஏற்படுத்தாதா."



சண்டேஸ்வரருக்கு சிவன் மகுடம் சூட்டுவது

''ஒரு தொந்தரவும் ஏற்படுத்தாது. மூன்று மாதத்தில் முற்றிலும் குணமாகி விடுவார்கள். இப்பொழுது தேவை முரட்டுத் தனமல்ல. கோபமல்ல. ஆறுதலான வார்த்தை.''

''அதற்கும்தான் விட மாட்டேன் என்று சொல்கிறீர்களே.''

''இப்போது அந்த வார்த்தையும் சொல்ல முடியாது. அவர்கள் மொத்தமும் சுத்தப்படுத்தப்பட்ட பிறகு, அவர்கள் ஒரு முறை தூங்கி எழுந்த பிறகு, அவர்கள் தெளிவர்ன பிறகு நீங்கள் அருகே உட்கார்ந்து தலையை தடவி ஏன் இப்படி செய்தாய் கண்ணே. என்று சொன்னால் போதும். உங்களை கட்டிக் கொண்டு அழத் துவங்கிவிடுவாள்.

என்ன சொல்ல வேண்டும். எப்படி சொல்ல வேண்டும். நான் சொல்லித் தருகிறேன்.''

''சகிக்க முடியாதபடி திமிர். எனக்கு நீ சொல்லித் தருகிறாயா?''

''ஆமாம், எல்லா இடங்களிலும் உங்கள் முடிவே இறுதி முடிவாக இருக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். சில இடங்களில் உங்களுக்கு எதுவும் தெரியாது. சில விஷயங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியாது.''

''இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை.''

''சொல்ல வேண்டும் என்று வந்திருப்பார்கள். சொல்வதற்கு முன்பு பிரச்னைகள் பெரிதாக வந்திருக்கும் சொல்வதை பின்னால் சொல்லிக் கொள்ளலாம். பிரச்சனையை தீர்த்து விடலாம் என்று துணிந்திருப்பார்கள்.''

''இந்த நேரத்தில் குதிரைப் பயணம் கூடாது என்பது அவளுக்கு தெரியாதா.''

''குதிரைப் பயணம், யானைப் பயணம். பல்லக்கு பயணம் என்று பலதூரம். பலவிதமான பயணம் மேற்கொண்டு ஒழுங்காக திரும்பி வந்து குழந்தை பெற்றவர்கள் பலர் உண்டு. அப்படி அவர்களும் நினைத்திருக்கலாம். இது விதி. தலை எழுத்து. அவர்களுக்கு தங்கவில்லை. நகர்ந்துவிட்டது.''

''உன் பதில் எனக்கு சமாதானம் ஆகவில்லை.''

''நான் சமாதானப்படுத்த சொல்லவில்லை. நான் சொன்னது

மிக அழகான வார்த்தை. இது விதி. தலை எழுத்து. மௌனமாக ஏற்றுக்கொள்ளுங்கள். பிரியமாக நடந்து கொள்ளுங்கள். கர்ப்பம் கலைய வேண்டுமென்றா ஆசைப்பட்டிருப்பார்கள். யோசித்துப் பாருங்கள். தன் கர்ப்பத்தை தானே கலைத்துக் கொண்டிருப் பார்களா, அப்படி இல்லையே.

உங்களுக்கு உதவி செய்வதில் பரபரப்பாக இருந்தார்கள். உங்கள் துயரை துடைப்பதில் முக்கியமாக இருந்தார்கள். உங்களுக்கு வரும் பிரச்சனைகளை தான் முன் நின்று தீர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அதில் இந்த கோளாறு வந்துவிட்டது.

அதீத அன்பு இதுதான் அவர்களிடம் இருக்கிறது. உங்க ளிடமும் அதுதான் இருக்கிறது. இந்த அதீதமான அன்பு கோப மாக வெளியே வருகிறது. நீங்கள் கொஞ்சுவதும் வேகம். கோபப்படுவதும் வேகம். வீரமாதேவியை நீங்கள் மிகவும் நேசிக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். அதனால்தான் கோபப் படுகிறீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் அமைதியாக இருங்கள். நாளை காலை கட்டிக் கொண்டு கொஞ்சலாம். அவர்களும் அதற்கு தயார் ஆகிவிடுவார்கள். இப்பொழுது வேண்டாம்.''

''இப்பொழுது என்னதான் செய்வது?''

''ஒரு விஷயம் சொல்வேன். செய்வீர்களா.''

''சொல்லுங்கள்.''

''ஏதேனும் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்.''

''பிரார்த்தனை என்றால்.''

''தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலுக்குள்ளே தடலடி யாக நுழைந்தீர்கள் அல்லவா. கருவறையை சுற்றி வந்தீர்கள் அல்லவா.''

''ஆமாம்.''

''அது தவறோ என்று தோன்றுகிறது.''

''நான் அரசன். அரசன் புக முடியாத இடம் உண்டா.''

''ஒரு கருவறைக்குள் நுழைவதற்கு அரசனுக்கும் உரிமை இல்லை என்றுதான் ஆகம விதிகள் சொல்கின்றன. நீங்கள்

நுழைந்தது தவறோ என்று தோன்றுகிறது. அதன் விளைவோ இது என்று தோன்றுகிறது.''

இராஜேந்திரர் திடுக்கிட்டு பரவைநாச்சியாரைப் பார்த்தார்.

''நான் சொல்வதற்கு கோபித்துக் கொள்ளாதீர்கள். அப்படி எல்லாம் இல்லை என்று முரட்டுத்தனமாக என்னிடம் விவாதம் செய்யாதீர்கள்.''

''என்னோடு வந்தியத்தேவரும், அருண்மொழிப் பட்டனும் வந்தார்களே. அவர்களுக்கு ஒன்றும் நேரவில்லையே.''

''நேர வேண்டும் என்பது நம்முடைய பிரார்த்தனை அல்ல. அவர்கள் அவர்களாக நுழையவில்லை. நீங்கள் உத்தரவிட்டீர்கள். நுழைந்தார்கள். இதற்குக் காரணம் நீங்களே. உங்களுக்கு அந்த உரிமை இல்லை. நீங்கள் உரிமை மீறியதால் உங்களுக்கு ஒரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய எண்ணம். நீங்கள் ஏற்றாலும் சரி. ஏற்காது போனாலும் சரி, இந்த நிந்தனைக்கு பதிலாக ஏதேனும் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்.''

''என்ன பிரார்த்தனை?''

''அதை நீங்களே முடிவு செய்யுங்களேன். எல்லாவற்றிற்கும் நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்.''

''பரவை. மிகுந்த சாமர்த்தியத்தோடு பேசுகிறாய். நான் பலகீனமாக இருக்கும்போது காட்டுத்தனமாக தாக்குகிறாய்.''

''ஒருபோதும் இல்லை. நீங்கள் இன்னும் விவேகமாக இருக்க வேண்டும் என்பதற்காக, இந்த இடத்தில் அதிகம் பேசக்கூடாது என்பதற்காக. எங்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதற்காக நான் சில விஷயங்களை சொல்கிறேன். ஆணுக்கு எல்லாம் புரியாது. பெண்ணின் அத்தனை வேதனையும் புரியாது. பெண்ணை முற்றிலும் புரிந்து கொண்ட ஆண் மிக மிக குறைவு.''

''ஆணினுடைய பாதுகாப்பில்தான் பெண் உயிர் வாழ்கிறாள்.''

''அப்படி ஒரு கற்பனை உண்டு. யாருடைய பாதுகாப்பிலும் யாரும் உயிர் வாழவில்லை. கடவுளுடைய பாதுகாப்பில் தான் அத்தனை பேரும் உயிர் வாழ்கிறோம்.

ஆணுடைய வடிவு பெண்ணை அடங்கி இருக்க தூண்டு கிறது. ஆணினுடைய அடக்குமுறை பெண்களை பின்னடையச் செய்கிறது. இப்பொழுது உங்களுடைய மனைவி வீரமாதேவி யாருக்கு பிரச்சனை. அந்த பிரச்சனை தீர இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள். மாமன்னர் இராஜேந்திரர் மிகுந்த வலுவுடையவர்தான். ஆனால் உலகத்தை மாற்றிவிடக் கூடி யவர் அல்ல. வந்த விதியை திருப்பிவிடக் கூடியவர் அல்ல. அவருக்கும் எல்லை உண்டு. அவருக்கும் சில இடங்களில் திகைத்துப் போய் நிற்பது உண்டு.

இப்போது நீங்கள் திகைத்து நிற்கிறீர்கள். என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கிறீர்கள். இறைவனிடம் சரணடை யுங்கள். இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்ய வேண்டிய நேரத்தில் வெறும் கோபத்தை, கூச்சலை வெளிக்காட்டா தீர்கள்.''

''புரிகிறது பரவை.'' நீண்ட பெருமூச்சோடு இராஜேந் திரர் பதில் சொல்ல, பரவை அவரை தனியாக உட்கார வைத்தாள். பின்பக்கம் போய்

அரண்மனை வைத்தியர் வந்து கும்பிட்டு நிற்க இராஜேந் திர சோழர் எழுந்து கேட்டபோது,

''நான் பார்த்துக் கொள்கிறேன். சிறிதளவும் கவலைப்படா தீர்கள்'' என்று சொல்லிவிட்டு, வீரமாதேவியின் அறையை நோக்கி விரைந்தார்.

குந்தவை தேவியார் காவல் தாண்டி வீட்டிற்குள் நுழைவது தெரிந்தது.

''என்ன இராஜேந்திரா, வீரமாதேவிக்கு சிக்கலாமே'' என்று சொல்ல,

அவர் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

''நான் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று அவருடைய உத் தரவுக்குக் காத்திராமல் குந்தவை தேவியார் வேகமாக வீரமாதேவி யின் அறைக்குள் நுழைந்தார்.

இராஜேந்திரர் மறுபடியும் தனியாக விடப்பட்டார். அவருக்கு எதிரே பழங்கள் வைக்கப்பட்டன. சூடான உணவும் கதம்பக் கூட்டும் வைக்கப்பட்டன. அதைப் பிரட்டி எடுத்து அவருக்கு

பரவை ஊட்ட முயன்றபோது வேண்டாம் என்று தடுத்தார். தானே பிசைந்து வேகமாகச் சாப்பிட்டார். நீர் குடித்தார். தட்டில் கை கழுவிக் கொண்டார். துணியால் உடம்பு துடைத்துக் கொண்டார். மறுபடியும் கிழக்கு நோக்கி அமைதியாக உட்கார்ந்து கொண்டார்.

சட்டென்று உள்ளுக்குள்ளே ஒரு பாடல் தோன்றியது.

உள்ளே எண்ணங்கள் ஏதும் இல்லாதபோது சட்டென்று ஏதோ ஒரு இடம் தெளிவாகி மலர்ந்தது. அந்த மலர்ந்த இடத்திலிருந்து சில வரிகள் ஞாபகம் வந்தன. அந்த வரிகள் உள்ளுக்குள் பாட்டாகப் பொங்கின.

"மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்று உனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
உன்னடியார் உயிரைவவ்வேல் என்றவர் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே."

அவர் பாட முக்கோன கிழானடி, பஞ்சவன் மாதேவியும், பரவை நாச்சியாரும் தொலைவிலிருந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல அவர் கண்களில் நீர் திரண்டது.

பிரகதீஸ்வரா, அத்துமீறி உன் சன்னதியில் நுழைந்தது தவறு. நானும், என் மனைவியும் பரவை நாச்சியாரும் வீரமாதேவியின் நலன் பொருட்டு தோளில் நீர் சுமந்து கைகளில் பூ ஏந்தி உன்னை நோக்கி வருகிறோம். கோவில் வாசலிலிருந்து நான், என் மனைவி நீர் சுமந்து வருகிறோம். என் அன்புக்கினிய மனைவி வீரமாதேவியின் உடல்நலத்திற்கு எந்த கேடும் வராமல் காப்பாயாக. மறுபடியும் அவள் என்னோடு பயணம் செய்யும்படி உற்சாகமாக மாற்றுவாயாக என்று வேண்டினார்.

கண் திறந்தார். சரக்கென்று கண்களிலிருந்து நீர் வடிந்தது. அவர்கள் அருகே ஓடிவந்தார்கள். சுற்றி நின்றார்கள். நெஞ்சு தடவினார்கள். அணைத்துக் கொண்டார்கள். முகத்தை தங்கள் மார்பில் பதித்துக் கொண்டார்கள். முத்தமழை பொழிந்தார்கள்.

ஆனால் ஸ்ரீ இராஜேந்திரர் ஒரு துறவியைப் போல அங்கு

அமர்ந்திருந்தார். அவர் நினைவு முழுவதும் வீரமாதேவியிடம் இருந்தது.

''மிக அற்புதமான பாட்டு, மிக அற்புதமான பாட்டு, இந்த பாட்டுக்கு நான் நடனமாடி இருக்கிறேன். 'பூவொடு நீர் சுமக்கும்' என்ன அற்புதமான வரிகள். 'பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும் நின்னடியார் இடர்களையாய்'. வீரமாதேவியார் நீரும், பூவும் சுமந்தாரா தெரியவில்லை. ஆனால் அவருக்காக நாம் சுமப்போம். நாம் நான்கு பேரும் பூவும், நீரும் எடுத்துக்கொண்டு பிரகதீஸ்வரர் கோவிலுக்கு போய் அவருக்கு அபிஷேகம் செய் வோம்.''

''எந்த நீர்?''

''காவிரிதான். அரசலாறோ, குடமுறுட்டியோ. எந்த இடத் திலிருந்தும் நீர் எடுத்து வரலாம். அதுவும் காவிரிதானே. நமக்கு நீர் என்றால் காவிரி நீர் தானே இருக்கிறது'' என்று முக்கோ ணாலடி கேட்டார்.

''ஏன்? ஒருமுறை கங்கை ஜலமும் கூட நம் பிரகதீஸ் வரருக்கு அபிஷேகம் செய்யலாம்.

உள்ளே போய் சுற்றி தப்பித்துப் போய்விட்டார்கள் என்பது நிம்மதியாக இருந்தாலும் மிகப் பெரிய இழிவாக பேசப்பட்டது.

''இராஜேந்திரனே வந்தாரா, வந்திருக்க மாட்டார். யாராவது ஆளைதான் அனுப்பி இருப்பார்.''

''தேர் ஏறி வந்தானா, குதிரை ஏறி வந்தானா.''

''எப்படி வந்தால் என்ன. இரவு படுக்கும்பொழுது பதி னைந்து ஆண்களுக்கு நடுவேதானே படுக்க வேண்டும். மரத்தடி இருட்டில் இராஜேந்திரருடைய தங்கை குந்தவை தேவியார் சுற்றி பதினைந்து வீரர்களுக்கு நடுவே படுத்துக் கொண்டிருப்பது கண்கொள்ளா காட்சிதான்'' என்று சொல்ல,

விமலாதித்தன் அதட்டி மிரட்டினான்.

ஒரு பெண்ணின் கற்பை பற்றி சொல்லாதே. அவள் குரங்கு தான். ஆனால் அசிங்கம் பிடித்தவள் அல்ல. அசிங்கம் பிடித்த பெண்களெல்லாம் எங்கிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரி யும். என்னை பேசவைத்து விடாதீர்கள்'' என்று சீறலாகச் சொன் னார்.

சபை மௌனமாகியது.

ஆனால் நமட்டுச் சிரிப்பும், குசுகுசு பேச்சும் குறைய வில்லை. அவை விமலாதித்தன் நெஞ்சைக் குடைந்தன.

எவ்வளவு மோசமான நேரம் இது. எத்தனை கடினமான நேரம் இது. எவ்வளவு சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும். இப்படி சட்டியை உடைத்தது போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்கிற பெண்ணை வைத்துக் கொண்டு சொச்ச காலம் எப்படி வாழ்வது, ஒதுங்கி விடலாமா, வேண்டாம் என்று ஒதுக்கி விடலாமா.

ஆனால் இராஜநரேந்திரன் விவேகமுள்ளவன். தெளிவுடை யவன். சிவ பக்தன். இராஜேந்திர சோழருடைய சாயல் அவனிடம் அதிகம் உண்டு.

விமலாதித்தன் எனக்கு அப்பா. இராஜேந்திர சோழர் எனக்கு தெய்வம் என்று பலமுறை அவன் கைகூப்பியிருக்கிறான். அவனுக்காக இந்த அசிங்கங்களை பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்..

இந்தப் பக்கம் இருக்கின்ற விஷ்ணுவர்தன் மகா மட்ட மானவன். அந்தப்புறம் முழுவதும் சுற்றி வருகிறானாம். சேடி பெண்கள் மட்டுமல்லாது யாரைப் பார்த்தாலும் இறுக்க தழுவிக் கொள்கிறானாம். 'இப்படியே போனால் நோய் பிடித்துவிடும்' என்று வைத்தியர்கள் எச்சரித்தும் அதுபற்றி கேட்காமல் இருக்கின் றானாம்.

இப்பொழுதே கை, கால் நடுங்குகின்றன. கத்தி பிடித்து எதையும் தாக்கத் தெரியவில்லை. மணல் மூட்டையை கயிற் றில் கட்டி வேகமாக விட்டால் தடுத்து நிறுத்தத் தெரியாது கைகளால் திசை மாற்றாது, திரும்பி நின்று பின் மண்டையில் அடி வாங்குகிறான்.

''இவ்வளவு வேகமாக விடுகிறாயே'' என்று வீரனை கடிந்து கொள்கிறான்.

மேலை சாளுக்கிய அரசியார் அலங்காரப் பிரியை. எந்நேரமும் தலையை அவிழ்த்துக் கொண்டு தூபம் போடு வதும், உடம்புக்கு எண்ணெய் தடவிக் கொள்வதும், முகத்திற்கு பாலும், முட்டையும் தடவி கொண்டு பொழுதை கழிக்கிறாள்.

'நாற்பது வயதிலும் நீ அழகாய் இருப்பாய் என்று நினைக்கிறாயா' என்று கேட்டால்

''நிச்சயம் இருப்பேன்'' என்று சவால் விடுகிறாள். அதனால்தான் புருஷனுக்கு அருகே வருவதே இல்லையாம். அழகுதான் முக்கியமாம்.

மனைவி அமைவதற்கு ஒரு மனிதன் தனியாக வரம் வாங்கி வர வேண்டும். இராஜராஜர் வாங்கி வந்திருக்கிறார். வானவன்மாதேவி அற்புதமான மனைவி. பஞ்சவன் மாதேவி கொடி கட்டி பறந்தார். இராஜராஜன் கொடியும் அவளால் பறந்தது.

ஏன் இராஜேந்திர சோழனுக்கு என்ன குறை. அவனுக்கு வீரமாதேவி ஒருத்தி போதுமே. எவ்வளவு எளிதாக உள்ளே நுழைந்து குந்தவையை தூக்கி வந்துவிட்டாள். அழகுக்கு பரவை. வீரத்துக்கு வீரமாதேவி. கெட்டிக்காரத்தனத்துக்கு முக்கோக்கிழானடிகள். தாயைப் போல அன்பு செலுத்துவதற்கு பஞ்சவன் மாதேவி. இராஜேந்திர சோழன் கொடுத்து வைத்தவன்.

இதையெல்லாம் விட வியந்து போகிற ஒரு சிறப்பு வந்தியத் தேவர்தான். இராஜகம்பீரம் மிக்க குந்தவை பிராட்டி என்ற அந்த பெண்மணிக்கு புருஷனாக வர அவர் என்ன தவம் செய்திருக்க வேண்டும். அந்த அம்மையாருக்கு புருஷன் மேல் கொள்ளைப் பிரியம். வந்தியத் தேவருக்கோ குந்தவை பிராட்டி என்றால் பெரும் மதிப்பு. அரச சபையில் அவர்கள் இரண்டு பேரும் நடந்து வரும்பொழுதே 'ஆஹா ஆஹா' என்று சபை ஆரவாரிக்கும். எங்கு போனாலும் தனியாகத் தெரி கிறார்கள்.

நான் இரண்டு பக்கமும் இரண்டு எருமைகளிடம் மாட்டிக் கொண்டு அல்லாடுகிறேன்.''

''வரம் மட்டுமல்ல சாபமே வாங்கி வந்திருப்பீர் போலிருக் கிறது.''

இந்நேரம் இராஜேந்திர சோழனிடம் போய் குந்தவை சேர்ந்திருப்பாள். என்ன சொன்னாளோ, ஏது சொன்னாளோ, என்னைப் பற்றி என்ன குறையெல்லாம் சொன்னாளோ, நல்லது சொன்னாளோ, கெட்டது சொன்னாளோ அதனால் இராஜேந்திர சோழருக்கு ஒரு இரகசிய ஓலை அனுப்பிவிட வேண்டும்.

சிறு விளக்கில் அவர் ஓலை எழுத ஆரம்பித்தார்.

எனக்கு உன்னை எதிர்க்கின்ற திறனோ, திடமோ அறவே இல்லை. எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. உன் தங்கையோடு நான் குடித்தனம் செய்வது பேரவஸ்தை. அவளுடைய நடவடிக்கைகள் முற்றிலும் தவறானவை. பல்வேறு இடத்திலிருந்து செய்தி சேகரிக்க தெரிந்த உனக்கு அவள் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதை அறிந்து கொள்ள நேரமாகாது. ஆனால் இராசநரேந்திரன் உத்தமமான பையன். சீரான குணம். உன்னைப் போன்ற சாயல். உன்மீது தேவதா விசுவாசம். அவனுக்கு என்னை பிடிக்கும். ஆனால் நீதான் அவன் கும்பிடுகின்ற தெய்வம். எனக்காக இல்லாது போனாலும் அவனுக்காக வேங்கியை நோக்கி வா. நான் மறுபடியும் சொல்கிறேன். உனக்கு நான் எதிரியல்ல.

நீ வேங்கியை அழிக்க வேண்டியது அவசியம். ஒட்டர்களையும், மேலைச் சாளுக்கியரையும் அடித்து துரத்த வேண்டியது அவசியம். வேங்கியின் மக்கள் நல்லவர்கள். அவர்களுக்கு தீங்கு செய்துவிட வேண்டாம். உன் வருகையை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

விமலாதித்தன் என்று கையெழுத்திட்டார். யோசனை செய்தார். வேறு ஒன்று எழுதினார். சுருட்டினார். ஒரு நம்பிக்கையான காவல் வீரனை அழைத்தார்.

''இதைக் கொண்டு போய் இன்னாரிடம் கொடு'' என்று காதோரம் சொன்னார். நிறைய காசு கொடுத்தார். அவன் வாங்கிக் கொண்டான்.

''எனக்கு குந்தவை தேவியார் ஓய்வு கொடுத்துவிட்டார்கள். நான் சோழ தேசம் நோக்கி போகிறேன்'' என்று பாடி காவலில் சொன்னான். பாடி காவலில் அவனை ஓரமாக உட்கார வைத்தார்கள். வேகமாக சோதனை இடப்பட்டான். அவன் இடுப்பிலிருந்து ஓலை உருவப்பட்டது. ஓலையை அவர்கள் விளக்கொளியில் படித்தார்கள். உள்ளுக்குள்ளே போய் அதிகாரிகளிடம் பேசினார்கள். வேகமாக வெளியே வந்தார்கள்.

''இந்தா. உன் ஓலையில் ஒரு செய்தியும் இல்லை, நலம். நலம் அறிய அவா என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. கொண்டு

போய் இராஜேந்திரனிடம் கொடு'' என்று சொல்லி அவனிடம் வீசினார்கள்.

அவன் வாங்கி வணக்கம் செய்து விடைபெற்றான்.

மூன்றரை நாட்களில் தஞ்சையை அடைந்தான். மாமன்னர் இராஜேந்திரனை வணங்கினான். ஓலையை நீட்டினான். ஓலை படிக்கப்பட்டது.

இராஜேந்திரா, உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. நான் தான் இந்த இடத்தின் மன்னன். நான் தீர்மானிப்பது தான் இங்கு தீர்ப்பு. உன்னுடைய மருமகனான இராஜநரேந்திரனுக்கு பட்டம் அளிக்க முடியாது. அதற்கு காரணம் உன் தங்கை. அவள் குரங்கு புத்தி. என்னுடைய இன்னொரு மகன் விஷ்ணுவர் தனன் விஜயாதித்தனுக்கு நான் இளவரசு பட்டம் கட்டிவிட் டேன். அவனையே நான் மன்னனாகத் தேர்ந்தெடுப்பேன். நீ படை எடுத்து வரக்கூடும். நான் தயாராக இருக்கிறேன். அவசிய மெனில் நாம் யுத்த களத்தில் சந்திப்போம். உண்மையாகவே உனக்கு புத்தி இருந்தது எனில் நீ விலகி நில். இதற்குள் தலை யிடாதே.

விமலாதித்த மாமல்லன் என்று எழுதி இருந்தது.

மன்னர் அருண்மொழியிடம் ஓலையைக் கொடுத்தார். அருண்மொழி படித்துவிட்டு வந்தியத் தேவரிடம் நீட்டினான். வந்தியத்தேவர் அரையன் இராஜராஜனிடம் நீட்டினார். அரையன் இராஜராஜன் படித்துவிட்டு ஓலையை அலட்சியமாக ஒரு வீரனின் கையில் போட்டார்.

''இது விமலாதித்தர் எழுதிய ஓலை அல்ல. அவருடைய கையெழுத்து அல்ல. அவர் அவருக்கென்று சில வார்த்தை பிரயோகங்களை வைத்திருக்கிறார். அது இங்கு இல்லை. மேலும் கீழே கொடுக்கப்பட்ட அந்த குறிகளெல்லாம் தவறாக இருக்கின்றன.''

''ஆமாம். இது விமலாதித்தர் ஓலை அல்ல. என்ன ஆயிற்று நண்பரே.'' இராஜேந்திரர் வினவினார்.

என்னை பாடி காவலில் மடக்கி ஓலையை பிடுங்கி கொண் டார்கள். உள்ளே போய் அதிகாரிகளிடம் பேசினார்கள். வெளி யில் வந்து இந்த ஓலையில் ஒன்றும் இல்லை. கொண்டு

போய் இராஜேந்திரனிடம் கொடு. வெறும் நலம். நலமறிய அவா என்றுதான் இருக்கிறது என்று தூக்கிப் போட்டார்கள். வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்.''

''இந்த ஓலை அவருடைய ஓலை அல்லவே.''

''எனக்கும் அந்த சந்தேகம் இருந்தது. இருப்பினும் எது கொடுக்கப்பட்டதோ அதை உங்களிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். எனக்கு ஒரு ஓலை அல்ல. இரண்டு ஓலை கொடுத்தார். இது விமலாதித்தர் கொடுத்த ஓலையின் இன்னொரு பிரதி'' என்று சொல்லி வேட்டி நுனியை தடவி ஒரு நூல் பிரித்து ஒரு ஓலையை உருவி, வந்தியத் தேவரிடம் நீட்டினான்.

வந்தியத் தேவர் மன்னரிடம் நீட்ட, மன்னர் தடவி படித்தார்.

''அடேய், இது விமலாதித்தன். இதுதான் விமலாதித்தன். இந்த சொற் பிரயோகங்கள் அவருடையது. இந்த கையெழுத்து அவருடையது.

எனவே நம்முடைய வேலை எளிதாயிற்று. எப்பொழுது படை எடுக்கலாம் என்பது பற்றி உங்களுக்குள் பேசி முடிவு செய்யுங்கள். நான் போய் காவிரிக் கரையில் குளித்துவிட்டு பிரகதீஸ்வரர் கோவிலுக்கு போகப் போகிறேன். முடிந்தால் நீயும், வந்தியத்தேவரும் கலந்து கொள்ளுங்கள்.''

''என்ன?''

''பூவொடு நீர் சுமக்கும்'' என்று ஒரு வரி ஓடிற்று. கருவறைக் குள் நுழைந்தோம் அல்லவா. நமக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது. காவிரியிலிருந்து நீர் சுமந்து, பூக்கள் சுமந்து பிரகதீஸ்வரருக்கு சமர்ப்பிக்கலாம் என்று ஒரு எண்ணம் ஏற்பட்டது.''

''புரிகிறது மன்னா. ஏன் சொல்கிறீர்கள் என்று புரிகிறது. நாங்களும் வருகிறோம்.''

செய்தி பரவிற்று.

ஒன்று, இரண்டு, மூன்று என்று பல்வேறு இடங்களுக்கு போயிற்று. பொதுமக்களுக்கும் எட்டியது.

''வீரமாதேவியார் உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறார். குந்தவையை மீட்டு வரும்போது காயம் பட்டுவிட்டது. அதனால்

படுத்த படுக்கையாக இருக்கிறார். அவருக்கு நேர்ந்து கொள் வதற்காக மாமன்னர் காவிரி நீர் எடுத்து பிரகதீஸ்வரர் கோவி லுக்கு போகிறார். எனவே நாமும் போவோம்'' என்று சொன் னார்கள்.

ஒரு பெரிய கூட்டம் காவிரிக் கரையை அடைந்து குளித்து மூழ்கி சரியாக இருந்தது.

இராஜேந்திர சோழர் முங்கி எழுந்தார். நீரை தோளில் வைத்துக் கொண்டார்.

கூட்டம் ஒரு அளவுக்கு மிஞ்சி நகர முடியாமல் திணறி திணறி நின்றது.

நெஞ்சு விம்முகிறது. இடுப்பு குழைகிறது. பின்பக்கம் இறுக்கி வேதனை செய்கிறது. தொடைகளும், அடிவயிறும் பர பரக்கின்றன.

வீரமாதேவியார் நலம் பெற வேண்டும் என்று பக்தர்களும் பொதுக்கூட்டமாய் இருந்த ஆயிரம் பேர் திருக்கூட்டம் பிரகதீஸ் வரர் கோவிலை நோக்கி நடந்தது. வீரமாதேவியார் சுகம் அடைய வேண்டுமென்று ருத்ரம், சமஹம் ஓதப்பட்டது. தேவார, திருவாசகங்கள் தனியாகப் பாடப்பட்டன. 'ஓம் நமச்சிவாயா' என்று சொல்லியபடி ஈரத்துணியோடு பொதுமக்கள் மன்னரை பின்தொடர்ந்தார்கள்.

முக்கோழானடிகளும், பரவையும், பஞ்சவன் மாதேவியும் பொதுமக்களோடு நடந்து வந்தார்கள். பாதுகாவலர்களும் ஈரம் சொட்ட நடந்து வந்தார்கள். குதிரைகளின்றி, யானைகளின்றி, வெறும் ஈரத்துணியோடு மன்னரும், மன்னரின் துணைவியரும், தளபதிகளும், பொதுமக்களும் நடந்து போகும் காட்சி பரவச மூட்டியது.

''பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே''

என்று பாடப்பட்டது. காவிரி நீர் பிரகதீஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. கொண்டு வந்த பூக்களை, காட்டு மலர்களை, செம்பருத்தியை, மல்லியை, முல்லையை அவருக்கு சாத்தி னார்கள். சில குடங்களில் சந்தனம் கரைத்து சந்தனமாகவும் அபிஷேகம் செய்தார்கள். செண்பகப் பூக்களை முக்கி நீரில் கலக்கி அந்த வாசனையையும் ஊற்றினார்கள்.

அபிஷேகம் செய்தார்கள். கருவறை முழுவதும் சுரீர் என்று சுகந்தமான வாசனை பரவியது. செண்பகப்பூ கிறுகிறுக்க வைத்தது.

'என்னால் அவர் சுகப்படவேயில்லையே' என்று வீரமாதேவி வருந்தமுற்றார்.

''நன்றாக இருக்கிறது உங்கள் அழுகை. உங்களுக்காக அவர் அழுகிறார். அவருக்காக நீங்கள் அழுகிறீர்கள். நல்ல மனைவி, நல்ல கணவன். அற்புதமாக இருக்கிறது இந்தக் காட்சி'' என்று அதிகாரிச்சிகள் கேலி செய்ய அவள் முகம் சிவந்தாள்.

வீரமாதேவி குணமாகிவிட்டார் என்று கருவறைக்கு அருகே இருந்த இராஜேந்திர சோழர் மனதுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

''நன்றி ஐயனே.'' கைகூப்பினார்.

''என் அத்துமீறலை மன்னித்துக் கொள்ள வேண்டும்.'' குனிந்து வணங்கினார். திருநீறு தரப்பட்டது. ''சிவாய நமஹ'' என நெற்றியில் இட்டுக் கொண்டார். திரும்பினார். மக்களுக்கு வணக்கம் சொன்னார். நன்றி சொன்னார். சில பேர் முகத்தை தடவினார். தேர் ஏறி மனைவியரோடு அரண்மனை திரும்பினார்.

* * *

அத்தியாயம் 12

உடனடியாக தஞ்சைக்கு வந்து அரசரை சந்திக்க வேண்டும் என்ற ஓலை ஸ்ரீ விஜய தூதுவருக்கு நாகை விகாரத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. அவர் புறப்படத் தயாரானார். துணைக்கு தாங்களும் வருவோம் என்று சில புத்த பிட்சுக்கள் எழுந்தார்கள். அவர் வேகமாக மறுத்தார். அவருக்கு அறுபது வயதிருக்கும்.

''வேண்டாம். நீங்கள் இதில் தலையிடாதீர்கள். இப்பொழுது நிலைமை நன்றாக இல்லை. இராஜேந்திர சோழருக்கு நம்மீது கோபம் வந்துவிட்டது. அதை விசாரிக்கப் போகிறார். அப்படி விசாரித்தால், என்ன நிலைமை இருக்கிறதோ அதை தெள்ளத் தெளிவாக நான் அவரிடம் சொல்வேன்.

நான் ஒரு தவறும் செய்யவில்லை. ஸ்ரீ விஜய மன்னர் ஆணையின்படி இங்கு வந்து இருக்கிறேன். இராஜேந்திர சோழருக்கு நல்லவிதமாக அறிமுகம் செய்யப்பட்டேன். என்னுடைய வேலைகளை செவ்வனே செய்து கொண்டிருக்கிறேன். என் மீது எந்த தவறும் இல்லை என்று சொல்ல முயற்சிக்கிறேன். மாறாய் என்னை தண்டித்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் ஒருபோதும் இதில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.''

''ஸ்ரீ விஜயத்து மக்கள் செய்வது தவறு. அந்த மன்னரும், அதிகாரிகளும் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறார்கள். சோழ தேசத்தின் வலிமை புரியாமல் இருக்கிறார்கள். இருபது, இருபத்தைந்தாயிரம் வீரர்கள் வருவார்கள். வெட்டி வீழ்த்திவிடலாம் என்று அவர்கள் கொக்கரிக்கிறார்கள். உள்ளுக்குள்ளே இரண்டரை இலட்சம் வீரர்கள் யானைகளோடும், குதிரைகளோடும் இறங்குவார்கள் என்று அவருக்கு தெரியவில்லை.

இதை நான் போய் அங்கு சொன்னால் அங்கும் குற்றவாளி ஆவேன். சோழ தேசத்திற்கு பரிந்து பேசுகிறேன் என்று என்னை கசையால் அடிக்கலாம். அப்படி போனாலும் ஆபத்து, இப்படி போனாலும் ஆபத்து, அப்படிப் போய் அடி வாங்குவதை விட

இப்படிப் போய் சிறையில் இருக்கலாம். நிறைய புத்தர் நாமத்தை சொல்லிக் கொண்டிருக்கலாம்.'' அவர் விடை பெற்றார்.

அவர் தஞ்சை நோக்கி புறப்பட்ட அந்த பிற்பகல் நேரத்தில் ஸ்ரீ விஜயத்தில் இருட்டத் துவங்கியது. விளக்குகள் ஏற்றப்பட்டன. கடற்கரை ஓரமுள்ள சிறிய குடிசைகளில் உள்ள விலை மாதர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள தொடங்கினார்கள். அந்த அலங்கரிப்புக்கு நடுவே காமக் கூச்சல் அதிகம் இருந்தது. நடந்து போகும் ஆடவரை கவர அவர்கள் ஒருவருக்கொருவர் சீண்டிக் கொண்டும், சிரித்துக் கொண்டும், கட்டி கொஞ்சிக் கொண்டும் மற்றவருக்கு வேடிக்கை பொருளாக காட்சியளித்தார்கள். நெடுங்காலமாக அந்த இடம் விலைமாதர்களின் இடமாக இருந்தது என்பதை உற்றுப் பார்த்தவர்களுக்கு புரியும். விலை மாதர்கள் அந்த பகுதியின் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தார்கள். கும்பல் கும்பலாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். உரத்த குரலில் சண்டையிட்டார்கள். அலட்டலாய் பேசினார்கள். சிலபேர் ஒருவரை ஒருவர் தழுவி காமவெறி தாளாது முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அப்படி நடிப்பதால் மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்க முடியும் என்பதற்காக செய்து கொண்டிருந்தார்கள். பத்து, பனிரெண்டு பெண்கள் தலைமயிரை பிடித்து இழுத்து அடித்துக் கொள்ள எல்லோரும் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஆபாசமான வார்த்தைகள் வெட்கமின்றி அங்கு இறைக்கப்பட்டன. தமிழிலுள்ள கெட்ட வார்த்தைகளும் அங்கு சொல்லப்பட்டன. வந்த மாலுமிகளிடம் தமிழில் என்ன கெட்ட வார்த்தை உண்டு என்று கேட்டு தெரிந்து கொண்டு அதை திரும்பத் திரும்ப சொல்லி உரத்த குரலில் அதை சந்தோஷமாக கூவுவது அந்த விலைமாதர்களின் வழக்கம். அதில் ஒரு குரூர திருப்தி.

விலைமாதர்கள் தவிர, அவர்கள் நடமாட்டத்தால் அங்கு திண்பண்டக் கடைகள் அதிகம் இருந்தன. குறிப்பாய் மாமிச வகையான உணவுகள் மிதமிஞ்சி இருந்தன. அந்த பெண்கள் எல்லோரும் சீன தேசத்திலிருந்து துரத்தப்பட்ட நாடோடிகளாக இருந்தார்கள். சிறிய கண்கள், சிவந்த உடல், மெல்லிய தலை மயிர். உடம்பு உருவிவிட்டது போல இருந்தது. பெயருக்கு சிறு மார்பகங்கள் இருந்தன. ஆனால் அவர்கள் வேலை தெரிந்தவர்களாக இருந்தார்கள். எப்படி மயக்க வேண்டும் என்று

அவர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்கள் வெள்ளையாய் சிரித்தார் கள். ஆனால் உள்ளே விஷமம் இருந்தது.

''பாம்பு கொடு'' என்று ஒருவள் காசு நீட்ட, தண்ணீர் தொட்டிக்குள் தலையை மட்டும் நிமிர்த்திக் கொண்டிருந்த பாம்பு களில் ஒன்றை அவன் சட்டென்று எடுத்தான். ஆணியில் வைத்து தலையை அழுத்தினான். கொன்றான். மேல் தோலை சரட் டென்று உருவி கிழித்து உள்ளே இருக்கிற சதையை மட்டும் வட்டமாக உருட்டி அதன்மீது உப்பும், மிளகுத் தூள் போட்டு இலையோடு சிறிது நேரம் ஆவியில் வேகவைத்து அவளிடம் நீட்டினான். சுடச்சுட காரமும், மணமுமாக இருந்த பாம்பை அவள் விரும்பி கடித்து உண்டாள். அதில் பங்கு கேட்க பல விலைமாதர்கள் வந்தார்கள்.

பாம்பு மட்டும் இல்லாது வெட்டுக்கிளி, தென்னை மரத்து வண்டு, கடல் வகை நண்டு. பல பேர் தென்னை மரத்து வண்டு களைத்தான் நறநறவென்று சப்தத்தோடு உண்பார்கள். புரதச் சத்து எல்லாவற்றிலும் அதிகமாக இருப்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. கொஞ்சம் தென்னை மரத்து வண்டும், கொஞ்சம் சாராயமும் சாப்பிட்டால் போதும். அன்று மாலை மிக உற்சாகமாகக் கழியும் என்று அவர்களுக்குத் தெரியும். அதிகமான உஷ்ணத்தோடு காணப்பட்ட அவர்களை சுற்றி சீன தேசத்து மாலுமிகள் வந்தார்கள். போட்டி போட்டுக் கொண்டு பெண்கள் அவர்கள் முன்பு ஆடினார்கள். 'அதிகமான காசு அதிகமான சேவை' என்ற சொற்றொடர் அங்கு அடிக்கடி பேசப்பட்டது.

நடுநிசியில் இந்த கும்பல்கள் குறைந்தன. மக்கள் உறங்கப் போனார்கள். விடிந்து வெகுநேரம் கழித்தும் அந்த இடம் தூக்கம் கலையாமல் வெறுமே இருந்தது.

இரண்டு புத்த பிட்சுக்கள் அந்த தெருவின் வழியாக நடந்து கடற்கரை விளிம்பில் துறைமுகத்தின் எல்லையில் வந்து நின்று கொண்டார்கள். அங்கு மிகப் பெரிய சீனத்து நாவாய் ஒன்று கட்டப்பட்டு இருந்தது. சீன மாலுமிகள் என்ன வேண்டும் என்று கேட்க, அவர்கள் தங்களுடைய கப்பரைகளைக் காட்டினார்கள். சீன மாலுமிகள் மேலிருந்து கீழே இறங்கி வந்து தானியங்களை அந்த கப்பரைகளில் கொட்டினார்கள். விழுந்து வணங்கினார் கள். வேறு ஏதேனும் வேண்டுமா என்று கேட்டபொழுது வேண்டாம் என்று மறுத்துவிட்டு புத்த துறவிகள் நகர்ந்து போய் உட்கார்ந்து கொண்டார்கள்.



அர்த்தநாரீஸ்வரர்

தானம் வாங்கிய தானியங்களை பைகளில் கொட்டிக் கொண்டு காலி கப்பரைகளோடு போனார்கள். வேறொரு இடத்தில் அவர்களுக்கு பால் கொடுக்கப்பட்டது. அந்த பாலை வாங்கி சூடாற்றி உறிஞ்சி குடித்தார்கள். இன்னும் தொடர்ந்து நடந்து துறைமுகத்தின் வேறு பகுதிக்கு போனார்கள். அது சோழ தேசத்து கப்பல்கள் இறங்குகின்ற இடம். அது வெறுமையாய் இருந்தது. சோழக் கப்பல்கள் இங்கு வந்து வெகுநாளாகி விட்டன. அந்தத் தவறு இன்னும் அந்த துறைமுகத்தில் உள்ளவருக்கு தெரியவில்லை. இன்று வரும், நாளை வரும், நாளை மறுநாள் வரும் என்று மரக்கப்பல்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கப்பல்கள் வராது என்று அந்த துறவிகளுக்குத் தெரியும்.

அவர்கள் பார்ப்பதற்கு இலங்கையைச் சேர்ந்தவர்கள் போல் தென்பட்டார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து தான் புத்த பிட்சுகள் பல்வேறு திக்குகளுக்கு பரவினார்கள். ஸ்ரீலங்காவில் உள்ள பெரிய புத்த மடங்கள் இளம் துறவிகளை வெவ்வேறு ஊர்களுக்கு கப்பலேற்றி அனுப்புகின்றன. புத்த மதத்தை பற்றி பிரசாரம் செய்ய அனுப்புகின்றன. அப்படி வந்தவர்கள்தான் இந்த துறவிகள். ஆனால் அவர்களுக்கு தேசத்தை பற்றிய அக்கறை அதிகம் இருந்தது. ஸ்ரீ விஜயத்தின் தலை எழுத்து நன்றாக இல்லை என்று அவர்களுக்குத் தெரிந்தது.

என்ன செய்வது என்று உரக்க யோசித்தார்கள். அவர்கள் தனியே உட்கார்ந்து கொண்டு ஏதோ விவாதம் செய்வது போல தொலைவே இருப்பவர்களுக்கு தெரிந்தது. ஆனால் அதிக நேரம் அவர்கள் அரசியலைப் பற்றியே பேசினார்கள்.

''என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்.'' சுத்தமான சோழ நாட்டு தமிழில் ஒரு புத்த பிட்சு கேட்க,

''என்ன ஆகும். யுத்தம் வரும்.'' சேர தேசத்து தமிழில் இன்னொரு புத்தபிட்சு பேசினார்.

''யுத்தம் எப்போது வரும்?''

''எப்போது வேண்டுமானாலும் வரும்.''

''அப்போது ஸ்ரீ விஜயத்தினர் என்ன ஆவார்கள்''?

''உதைபடுவார்கள்.''

''சோழர்கள் ஸ்ரீ விஜயத்து படைகளை விட பலம் வாய்ந்தவர்களா.''

''வெகு நிச்சயமாக.''

''கடல் கடந்து இத்தனை தூரம் எத்தனை வீரர்கள் வந்து விட முடியும்.''

''இப்பொழுது இராஜராஜன் இல்லை. இது இராஜேந்திரன். கடும் கோபமுடையவன். அவனுடைய போர் முறை முற்றிலுமாக அழிப்பது, முடமாக்குவது. அடுத்த ஐம்பது வருடங்களுக்கு எழுந்திருக்க முடியாமல் செய்வது. இன்று மதுரையும், சேர தேசமும் அப்படித்தான் இருக்கிறது. மதுரையை எரியூட்டி விட்டான். சேர தேசத்தை சிதறடித்து விட்டான். சேர தேசத்து கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஐந்து பேர், ஆறு பேர்தான் எஞ்சியிருக்கிறார்கள். நாஞ்சில் நாடு மட்டும் தப்பிப் பிழைத்தது. ஏனெனில் நாஞ்சில் நாட்டில் உள்ளவர்களுக்கும் சேர தேசத்தவர்களை பிடிக்காது. அவர்களுடைய தாக்கம் இவர்கள் வாழ்க்கையில் அதிகம். அவர்களுடைய ஆணவம் இவர்களை பலமுறை தலைகுனியச் செய்திருக்கிறது.

ஆகவே சோழரால் சேர தேசம் தண்டிக்கப்பட்டதால் நாஞ்சில் நாட்டு மக்கள் சந்தோஷமடைந்தார்கள். இது இராஜேந்திரனுக்கு தெரிந்து போயிற்று. எனவே நாஞ்சில் நாட்டை வெறுமே வார்த்தையால் மிரட்டுவதோடு நகர்ந்து விட்டான். சேர தேசத்தில் இப்பொழுது நாஞ்சில் நாடுதான் செழிப்போடு இருக்கிறது.. சேரர்கள் தங்கள் வீட்டு ஜன்னல்களையும், வெண்கல உருளைகளையும், பாத்திர பண்டங்களையும் நாஞ்சில் நாட்டுக்கு வந்து விற்று அரிசியும், பருப்பும் வாங்கிப் போகிறார்கள்.

யானைகளுக்கும், பசுக்களுக்கும் போட்ட வாழைப்பழ தார் எல்லாம் இப்போது சேர தேசத்தில் மிகப் பெரிய விலையாக போய்க் கொண்டிருக்கிறது''

சேர தேசத்து மரக்கலன்கள் காந்தளூர்சாலையை அழித்த பிறகு என்னவாயின என்று யாருக்காவது தெரியுமா.''

''தெரியவில்லையே, காணோமே.''

''ஆம். காணோம் என்று நீங்கள் சொல்லிக் கொண்

டிருங்கள். ஆனால் அவை எங்கு போய் சேர வேண்டுமோ, எந்த இடத்தில் பதுங்கி இருக்க வேண்டுமோ அங்கு அழகாக இருக்கின்றன.

ஆனால் சேர தேசத்து நாவாய்கள் நமதை விட சிறியவை. ஆனால் விரைவானவை. இங்கே வரி வசூலித்தது கூட சரி. ஆனால் வணிகர்களின் கையை சீவி ஒட்டக் கட்டி அடித்து துரத்தினார்கள் பாருங்கள், அதுதான் மிகப் பெரிய கொடுமை. அதுதான் எல்லாவற்றுக்கும் தலையாய வம்பாக வரப்போகிறது. தன்னை அவமானப்படுத்தியதாக இராஜேந்திர சோழர் நினைக்கப் போகிறார். வணிகர்களின் கால் கட்டை விரலை வெட்டியது, கைகளை வெட்டி ஒட்டியது. இதெல்லாம் கொடூரமான செயல்கள். வணிகர்களுக்கு சண்டை போடத் தெரியாது. அவர்கள் வியாபாரம் பேச வந்தார்கள். அவர்களை சீனர்களோடு கோர்த்து விட்டு இரண்டு பேரிடமும் காசு வாங்கிக் கொண்டு அழகாக பிழைத்திருக்கலாம்.

எந்த வணிகர் வந்தாலும் இதோ இந்த பேய்ப் பெண்கள் கூட்டம் காசு சம்பாதிக்கும். இவர்களிடம் காசு புரண்டால் என்னென்ன விதமாகவோ ஊருக்குள் வரும். எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டோம்.''

''இன்னொரு விஷயம். இந்த இரண்டு பேருடைய வருகையால் இந்த ஊர் ஒழுக்கங் கெட்ட ஊராக போயிற்று.''

''என்ன செய்வது. உங்களிடம் வேறென்ன இருக்கிறது, விளை நிலங்களா. அப்படி இருந்தால் நீங்கள் உழுது பயிரிட்டு விளைச்சல் பார்த்து விடுவீர்களா. உட்கார்ந்து தூங்குவீர்கள். சாராயம் குடித்துவிட்டு சேற்றில் விழுந்து புரள்வதுதான் உங்கள் ஆண்களில் பல பேருக்கு இயல்பு.

பெண்களை வைத்து சம்பாதிப்பதுதான் அவர்களுடைய குறிக்கோள்.

இந்த தேசத்தில் வேறு என்ன வருமானம் இருக்கும். கடற்கரை பட்டிணம், தேசத்தினுடைய கிழக்கு பக்கம் சீன தேசம். தேசத்தினுடைய மேற்கு பக்கம் சோழ தேசம். இரண்டு பேரும் பெரிய நாவாய்களில் நம்மில் வந்து தங்கி பாதி தூரம் பயணம் போதும் என்று புரிந்து கொண்டு இங்கேயே வியாபாரம் செய்து போகிறார்கள்.''

''என்ன தவறு, இது என்ன ஒரு அற்புதமான வருமானம். இதை சீர்செய்ய இங்குள்ள அதிகாரிகளுக்கும், அரசருக்கும் ஏன் தெரியவில்லை. இங்கு உள்ள புத்த பிட்சுக்களுக்கே தெரியவில்லை. இங்கு உள்ள மடாலயங்களே தாங்களே ஆட்சி செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றன. மாறன் விஜயோத் துங்கவர்மனை தன் கைகளுக்குள் போட்டுக் கொண்டிருக் கின்றன. அவன் வெறும் குடிகாரனாக இருக்கிறான்.

வெண்கலச் சிலை செய்து அனுப்பிவிட்டால் சோழன் மகிழ்ந்து விடுவான் என்று நினைக்கிறான். அதற்கெல்லாம் சோழன் மசிய மாட்டான். இங்கிருந்து ஆட்கள் அங்கு போய் உட்கார்ந்து கொண்டு எல்லாம் நல்லபடியாக நடந்து கொண் டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள வணிகர்களை அப்படி அவமானப்படுத்தி அனுப்பி இருக்கிறீர்களே, சித்ரவதை செய்து துரத்தி இருக்கிறீர்களே. இது சோழனுக்கு தெரிந்தால் அது சும்மா போகுமா.''

''எப்போது யுத்தம் வரும்.''

''போர் இப்போது இல்லை. வடகிழக்கு பருவ காற்று சாதகமாக திகழ வேண்டும். இப்பொழுது தென்மேற்கு பருவக் காற்று அடித்துக் கொண்டிருக்கிறது. சேர தேசத்தில் கடும் மழை. அவ்வப்போது நமக்கும் பெய்கிறது. சோழ தேசத்தில் வறட்சியான காலகட்டம். அவர்கள் அடுத்தபடியான போருக்கு தயார் ஆவார்கள். சோழருக்கு பல்வேறு தலைவலிகள் இருக் கின்றன. பாண்டியரும், சேரரும் மறுபடியும் ஒன்று சேரக்கூடாது என்று முக்கியமாக கருதுகிறான். ஈழத்தை துவைத்து எடுத்து விட்டான். அங்கிருந்தும் ஆபத்து வரும் என்று கருதுகிறான். கங்கர்களையும், இராஷ்டிரகூடர்களையும் அவர் மிரட்டியே வைக்க வேண்டிய அவசியம். மேலைச் சாளுக்கியம் அவன் மிரட்டலுக்கு கட்டுப்படாது. குடகு மலையிலிருந்து மனிஜா அவனுக்கு துணையாக இருக்கிறான். ஆனாலும் எவ்வளவு தூரம் நம்புவது என்ற கேள்வி இருக்கிறது. மேலைச் சாளுக்கியத்து மன்னர்கள் இப்பொழுது கீழைச் சாளுக்கியம் நோக்கிப் போய் அங்கு குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஓரளவு வெற்றி பெற்று விட்டார்கள் என்று அங்கிருந்து வந்த செய்திகள் தெரி கின்றன.

பாலூர் துறைமுகத்துக்கு இப்போது அதிகமான கப்பல்கள்

கொண்டிருக்கிறது. அங்கிருந்து வடகிழக்கு நோக்கி நாவாய்கள் நகருகின்றன. தென் மேற்கு பருவக் காற்றால் தள்ளப்பட்டு கங்கை முகத்துவாரத்தை அடைகின்றன.''

''அவை யாருடைய கப்பல்கள்?''

''பல வணிகருடைய கப்பல்கள். பல்வேறு தேசத்தை சேர்ந்த கப்பல்கள். ஆனால் வணிகர் என்று வந்துவிட்டால் தேசம் முக்கியம் அல்ல. வாணிபம்தான் முக்கியம். அவர்களுக்குள் பரஸ்பரம் உதவி செய்து கொண்டு பயணப்படுகிறார்கள். மொழியோ, தேசமோ பார்ப்பதில்லை.''

''பாண்டியர்களும், சோழர்களும் இங்கு ஒற்றுமையா?''

''பெரிதும் பகைமை பாராட்டுவது இல்லை. கப்பல் ஏறி விட்டாய் அல்லவா. நாவாயில் உட்கார்ந்து விட்டாயல்லவா. நீயும், நானும் நண்பன். ஊர் போய் சேர்ந்து இறங்கும் வரைக் கும் ஒருவருக்கொருவர் உதவி என்று சொல்லிக் கொள்கிறார் கள். இறங்கிய பிறகு கட்சிப் பிரித்துக் கொள்கிறார்கள்.''

''நன்றாக இருக்கிறதே.''

''ஏனெனில் சோழ தேசத்து வணிகர்கள் கெட்டிக்காரர் கள். அவர்கள் பேச்சு இராஜேந்திரருக்கு போய் சேருவதற்குத் தான் நேரமாகிறது. போய் சேர்ந்துவிட்டால் முடிவு வந்துவிடும்.''

''நாம் என்ன செய்தால் இது சரியாக இருக்கும்.''

''மாறன் விஜயோத்துங்க வர்மனிடம் நேரடியாக நம் தலைவரை விட்டு பேச வைக்க வேண்டும். இந்த விஷயம் சரியல்ல என்று நம்முடைய விகாரத்தில் நாம் நம்முடைய தலைமை புத்த பிட்சுவிடம் சொல்ல வேண்டும். அவர் அதை புரிந்து கொள்ள வேண்டும். அவர் இதை எடுத்துக் கொண்டு போய் மாறன் விஜயோத்துங்க வர்மனிடம் சொல்லி இந்த விஷயத்தை ஒரு கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

இங்கு வந்த சோழ வீரர்களுக்கும் வரி விதித்து, சீன வீரர் களுக்கும் வரி விதிக்கும் போது சீன வீரர்கள் கட்ட மாட்டேன் என்று முரட்டுத்தனம் செய்தார்கள். அடிக்க வந்தார்கள். எனவே இவர்கள் ஒடுங்கிவிட்டார்கள். சீனர்களுக்கு வியாபாரம் ஆகாமல் இருக்க என்ன செய்வது. அவர்கள் என்ன செய்தார்கள் தெரி யுமா. சோழ வீரர்களை பண்டங்கள் மாற்ற விட்டு அவர்கள்

நாவாய்களை தீக்கிரையாக்கி அந்த வீரர்களை படகில் ஏற்றி வைத்து அனுப்பிவிட்டார்கள். வெறுமே அனுப்பி வைத்தால் கூட பரவாயில்லை. ஆறு, ஏழு வீரர்களின் கையை வெட்டி ஒட்டக்கட்டி ஒன்றாக பிணைத்து விட்டார்கள். கால்கட்டை விரல்களை தரித்துவிட்டார்கள். எனவே இதுதான் மிக முக்கிய செய்தியாக போகப் போகிறது.

சீனர்களுக்கு ஒரு மரியாதை, சோழர்களுக்கு ஒரு மரியாதை என்று இரண்டுபட்சமாக நடப்பது தவறு. இரண்டாவது இப்படி கொள்ளை அடித்தது மிகப் பெரிய பிசகு. மூன்றாவது கைகளை வெட்டி ஒட்டியதும், கால் கட்டை விரலை தறித்ததும் அபத்தம். நான்காவது இதைப் போய் சொல் சோழனிடம் எனக்கு பயமில்லை என்று சொன்னது. அதைவிட இன்னொரு கூத்து நடக்கிறது, உனக்கு தெரியுமா.''

''என்ன?''

''சோழன் எனக்கு கட்டுப்பட்டவன், எனக்கு பயந்தவன். நான் அடித்தால் வாங்கிக் கொள்கிறவன் என்று ஸ்ரீ விஜயத்து அதிகாரிகள் சீனர்களிடம் சொல்கிறார்கள். சீனர்கள் நம்புவார்களா. அப்படித்தான் அப்படித்தான் என்று தலை அசைப்பார்களே தவிர சீனர்கள் நம்ப மாட்டார்கள். ஒருவேளை நம்மை மீறி நம்முடைய கணவாய்கள் வழியாக சீனப் படைகள் வணிகர்களோடு சோழ தேசம் நேரிடையாக போய்விடலாம்.

தென்மேற்கு பருவ காலங்களில் சீனப் படைகள் அங்கு போவதற்கு வாய்ப்பிருக்கிறது.''

''போக விடுவார்களா?''

''விட மாட்டார்கள். மடக்கி எரியூட்டுவார்கள்.'' ஆனால் படகில் தப்பித்து சீனர்கள் சோழ தேசம் போய்விட்டால்.''

''பெரிய ஆபத்து.''

''அப்படி ஏதும் நடந்துவிடுமோ.''

''நடக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன். சீனர்களை சீண்டிவிட்டால் போதும். சீனர்கள் பழிவாங்க துடிப்பார்கள். எப்படியாவது பழிவாங்குவார்கள். சீனர்களும், சோழர்களும் கைகோர்த்து விட்டால் ஸ்ரீ விஜயம் தனித்து விடப்படும். மிகக் கடுமையாக இரண்டு பக்கமும் அடிவாங்கும்.''

''அப்பொழுது நம்முடைய நிலைமை.''

''புத்த பிட்சு என்று உயிரோடு விட்டாலும் விடலாம்.

கூப்பிட்டு கழுத்தை அறுத்தாலும் அறுக்கலாம். இரண்டுக்கும் தயாராக இருக்க வேண்டும்.''

''காம்போஜம் நோக்கி போய்விடுவோமா.''

''எதற்கு? அங்கு ஏதாவது பிரச்சனை இருக்கலாம். மரணம் என்று தீர்மானித்தால் அது எங்கு வேண்டுமானாலும் வரும். எனவே இங்கிருந்து வேடிக்கை பார்ப்பதே நல்லது.''

கொம்பூதும் சத்தம் கேட்டது. அந்த பகுதி பரபரத்தது. புத்த பிட்சுக்கள் விரைவாக கொம்பூதும் இடத்தை நோக்கி போனார் கள். அங்கு முரசு அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ விஜயத்தில் வியாபாரம் சரியிலலை என்று சீன நாவாய் கள் ஒன்றன் பின் ஒன்றாக ஸ்ரீ விஜயக் கணவாய்கள் வழியாக சோழ தேசம் நோக்கி கூர்மையான அம்புகளுடைய வில்லாளி களுடன் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த நாவாய்கள் சோழ தேசம் போய்விட்டால் நம்முடைய செயல்கள் வெட்ட வெளிச்ச மாகி விடும். அவைகளை போக விடக்கூடாது என்று தெரி விக்கப்பட்டிருக்கிறது. மாறன் விஜயோத்துங்கவர்மன் இது குறித்த உத்தரவை அனுப்பி வைப்பார். எனவே எல்லோரும் யுத்தத்திற்கு தயாராக இருங்கள் என்று சொல்ல,

அது யுத்தமல்ல, கடற்கொள்ளை என்று புரிந்து கொண்டு கூட்டம் ஆரவாரித்தது. மூன்று நாவாய்களை முப்பதாயிரம் பேர் மடக்கி இழுத்து 'எரியூட்டி சாமான்களை கொள்ளை அடிப்பது எளிது என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் எல் லோரும் தங்களுடைய வேலையும், வாளையும் தேடிக்கொண்டு போனார்கள்.

எங்கே வாள் என்று தேடுகிறார்களே. என்ன ஆயிற்று இவர்களுக்கு. எல்லாவற்றையும் அடகு வைத்து குடித்திருப் பான். இப்பொழுது போய் மீட்டுக் கொண்டு வருவான். வெகு நாளைக்குப் பிறகு விருந்து கிடைக்கிறதல்லவா. எனவே விட மாட்டான். எப்படியும் அந்த கப்பல்களை மடக்கி நிறுத்துவான். இது மேற்கொண்டு தொந்தரவு கொண்டு வந்து தரும். நிச்சய மாகத் தரும். ஆனால் சோழர்கள் போல் அல்ல. சீனர்கள் கடுமையாக போராடுவார்கள். சோழர்கள் இந்த எதிர்ப்பை எதிர் பார்க்கவில்லை. ஆனால் சீனர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். எனவே அவர்கள் தாக்குவது கடுமையாக இருக்கும். முப்பதாயிரம் பேரில் பத்தாயிரம் பேர்தான் திரும்பி வருவார்கள். இருபதாயிரம் பேர் கடலில் விழுந்து மீன்களுக்கு இரை ஆவார்கள்.

படகுகளில் பலபேர் ஏறி வேகமாக துடுப்பு செலுத்தி கணவாய் வழியாக போகின்ற பாம்புப் படம் போட்ட சீனப் படகுகளை மடக்கி நிறுத்தினார்கள். தீப்பந்தங்களை சுழற்றி பாய்மரத்தின் மீது வீசி எறிந்தார்கள். நாவாய்க்கு முன்பு போய் சுக்கானை அடித்து உடைத்தார்கள். மூன்று நாட்களாக தொடர்ந்து அங்கு கலவரம் நடந்தது. பல ஸ்ரீ விஜயத்து படகோட்டிகள் அடிபட்டு குற்றுயிரும், குலையுயிருமாய் திரும்பினார்கள். நாவாயிலிருந்து ஒரு பொருளும் எடுக்க முடியவில்லை என்று தெரிந்ததும், பெரிய எண்ணெய் துணிகளை வேறு படகு களில் ஏற்றி அங்கு போனார்கள். இப்போது அந்த நாவாய்கள் எறியூட்டப்படும். முதல் நாவாய் எறியூட்டப்பட்டது. கடற்கரை யிலிருந்தே தெரிந்தது. கரும்புகை படர்ந்து எழுந்தது.

பீங்கான் கிண்ணங்களும் கரை நோக்கி வந்தன. படகோட் டிகள் அவைகளை ஒட்டுமொத்தமாய் ஏலம் விட ஸ்ரீ விஜயத்து வியாபாரிகள் வாங்கி குவித்தார்கள். பெண்கள் கூச்சல் மறுபடி யும் அதிகரித்தது. படகோட்டிகள் காசு பெற்றுக் கொண்டதும் மதுக்கடைகளையும் பெண்களையும் நாடினார்கள்.

மறுபடியும் மிகச் சிறந்த முறையில் வியாபாரம் நடந்த தற்கான பெருங்கூச்சல்கள் அங்கு எழுந்தன.

புத்த பிட்சுக்கள் கவலை ஆனார்கள். அவர்கள் தலைவரிடம் போய் பணிந்து நடப்பதை தெரிவித்தார்கள். அந்த புத்த பிட்சு கவலை ஆனார்.

நாகை விகாரத்தில் உள்ள ஸ்ரீ விஜய அதிகாரிக்கு இந்த செய்தி போக வேண்டுமே. என்ன செய்வது என்று அவர்கள் யோசித்தார்கள். எந்த புத்த பிட்சுக்கள் வந்து தகவல் சொன்னார் களோ அவர்களையே நாகை விகாரத்துக்கு அனுப்பும்படி மன்னரை தலைமை பிட்சு கேட்டுக் கொண்டார்.

''அவரிடம் பேசுவது மட்டுமல்ல. அவரிடமிருந்து படை எடுப்புக்கு வாய்ப்பிருக்கிறதா. சோழன் இந்த பக்கம் வருவானா என்று தெரிந்து கொண்டு வாருங்கள்'' என்று மன்னர் பொற்காசு கள் கொடுத்தார்.

பாய்மரம் உள்ள பெரிய படகில் மூன்று வீரர்கள் உதவி

செய்ய, மண் கலயங்களுக்கு தானியங்களும் ஏற்றிக் கொண்டு மூங்கில் கழியில் பொற்காசுகள் நிரப்பிக் கொண்டு அவர்கள் பயணம் துவக்கினார்கள். மூன்று நாவாய்களும் எரிந்து பெரும் பொருள் கொள்ளை அடிக்கப்பட்டு அவை கரை நோக்கி போய் கொண்டிருப்பது தெரிந்தது.

''எங்கடா போகிறீர்கள்?'' ஒரு ஸ்ரீ விஜயத்து வீரன் இந்த படகோட்டியை நோக்கி கேட்டான்.

''சோழ தேசம் போகிறோம் வருகிறாயா?'' என்று சொல்ல அந்த வீரர்கள் திகைத்தார்கள்.

காற்று வாகாய் இருந்ததால் அந்த பெரியபடகு மிக விரைவாக சோழ தேசம் நோக்கி பயணப்பட்டது.

''மிக முக்கியமான, இரகசியமான செய்தி'' வந்தியத்தேவர் ஸ்ரீ இராஜேந்திரரிடம் காதோரம் சொன்னார்.

''என்ன விஷயம்.''

''நிதி நிலைமை பற்றிய விஷயம்.''

''சொல்லுங்கள்.''

''படை எடுப்பு என்று வந்தால் நமக்கு பொற்காசுகள் வேண்டும்.''

''ஆமாம்.''

''கையிலே சிறு பொற்கிண்ணங்கள் இருக்கின்றன, உருக்கி விடலாமா.''

''தாராளமாக செய்யலாம், இதற்கு என்னை கேட்பானேன்.''

''பொற்காசுகள் உருக்குவதற்கு அந்த கிண்ணங்கள் மட்டும் போதாது. கூடுதலாக நமக்கு அங்கே செலவழிக்க காசு வேண்டும். எனவே வேறு சில விஷயங்கள் இருக்கின்றன. அவை களை உருக்கி காசுகளாக அடிக்கலாமா?''

''என்ன விஷயங்கள்?''

''ஒரு முழ உயர புத்தர் சிலைகள் இரண்டு இருக்கின்றன. இவை இலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டன. என்ன செய்வது என்று தெரியாமல் நான் வைத்திருக்கிறேன்.''

''இதை என்ன செய்வது, புத்த பிட்சுக்களிடம் கொடுத்தால் உடனடியாக கோவில் எழுப்ப வேண்டும் என்பார்கள். கோவில் எழுப்ப நிலம் கொடு என்பார்கள், விகாரை கட்டுவார்கள். விகாரைக்குள் ஸ்ரீ விஜயத்து ஆட்களை கொண்டு வந்து வைப்பார்கள். நம்மை வேவு பார்ப்பார்கள். இதுவே என் முடிவு.''

''இவ்வளவு வேகமாக முடிவு செய்கிறீர்களே. ஒருநாள் வேண்டுமானாலும் இது இங்கிருக்கலாமே.''

''வந்தியத்தேவரே, உங்களுக்கென்ன புத்தர் மீது இத்தனை அக்கறை.''

''இல்லை. இது ஒரு சமயச் சின்னம். அதற்காகத்தான் தயங்குகிறேன்.''

''எனக்கு புத்த சமயத்தின் மீது எந்தவித ஈடுபாடும் இல்லை. இந்த தேசத்திற்கு துரோகம் செய்ய ஸ்ரீ விஜயம் தீர்மானித்துவிட்டது. இலங்கையிலிருந்து புத்த பிட்சுக்கள் தான் இந்த போரை நடத்துகிறார்கள். ஸ்ரீ விஜயத்திலும் புத்த பிட்சுக்களே இந்த போரை நடத்தக்கூடும்.

எனவே சைவ சமயத்திற்கு எதிராக புத்த சமயம் இயங்குகிறதோ என்று தோன்றுகிறது. நமக்கு வேறு சில பிரச்சனைகள் உள்ளேயே இருக்கின்றன. வெளியிலிருந்து சமயப் பிரச்சனை வர வேண்டாம். எனவே கூசாமல் உருக்குங்கள்'' என்று சொல்லி அந்த புத்தர் சிலையை மல்லாக்க கவிழ்த்து வைத்தார்.

வந்த ஆட்கள் அதை தூக்கிக் கொண்டு போனார்கள். வந்தியத்தேவர் சிரிப்போடு இராஜேந்திர சோழனை நோக்கினார்.

நீ ஒரு முடிவு செய்தால் அதிலிருந்து நெல் முனை அளவும் நகரமாட்டேன் என்கிறாய். அந்த உறுதி எனக்கு பிடித்திருக்கிறது.

சோழ தேசத்தை கல்லூரியின் மூலமாகவோ, சமயத்தின் மூலமாகவோ, கலைகளின் மூலமாகவோ, உறவின் மூலமாகவோ எதிர்த்து விடக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறாய். சோழ தேசத்தை நீ காதலிப்பது போல வேறு எந்த அரசனும் காதலிப்பானா என்று எனக்குத் தெரியவில்லை.

"இராஜேந்திரா வாழ்க நீ" என்று கை உயர்த்தினார்.

இராஜேந்திரர் குனிந்து அவர் வாழ்த்தை ஏற்றுக்கொண்டார். கீழைச்சாளுக்கியம் நோக்கி சோழப்படைகள் போவதற்கான ஆயத்தங்கள் ஒவ்வொன்றாய் ஆரம்பித்தன.

* * *

அத்தியாயம் 13

"அக்க சாலைக்கு வருகிறாயா அருண்மொழி." தன் மாளிகையின் படி இறங்கிய அருண்மொழியை நோக்கி வந்தியத் தேவர் கேட்டார்.

அருண்மொழிப்பட்டன் மாளிகை நல்ல உயரமாக இருந்தது. மாளிகையின் கீழ்புறத்தில் குதிரைகள் கட்டப்பட்டு இருந்தன. அங்கே சில வீரர்கள் தங்கி இருந்தார்கள். முன் பக்கம் பதி னெட்டு படிகள் வைத்து முதல் தளம் மெய்க்காவல்படை இருப் பிடமாக இருந்தது. தொடர்ந்து இன்னொரு பதினெட்டு படிகள் ஏற அருண்மொழியுனுடைய குடியிருப்பு வந்தது. அந்த குடி யிருப்புக்கு மேலாக போட்டு ஓட்டுக் கூரை எழுப்பி அது ஒரு சிறிய சமையற்கூடமாக, வீரர்களோடு இரகசியம் பேசும் இடமாக இருந்தது.

அந்த வீட்டை விடாதே. வந்தியத்தேவர் தான் ஏதோ ஒரு வீடு என்று இருந்தவனுக்கு சட்டென்று விழிப்பு வந்தது.

"ஏன்? என் தந்தை இங்கு இருந்தார் என்பதாலா."

"இல்லை. உன் தந்தை இருந்ததால் அதற்கு ஒரு மதிப்பு இருக்கிறது. எனினும் உன் தந்தை மிகச் சரியாக அந்த வீட்டை தேர்ந்தெடுத்தார். மனை வாஸ்து பிரகாரம் மிக அற்புதமான இடம்."

"எப்படி?"

"கிழக்கும், வடக்கும் திறந்திருக்கிறது. அதாவது இந்த மாளிகை ஈசான்ய மூலையில் இருக்கிறது. வெய்யில் வருகின்ற மேற்கு பக்கத்தில் அதாவது பின்பக்கத்தில் வேறு ஒரு இதே அளவுள்ள அரண்மனை இருக்கிறது. மனையினுடைய தெற்கு பக்கத்தில் நல்ல இடைவெளி விட்டு இன்னொரு அரண்மனை இருக்கிறது. கிழக்கும், வடக்கும் திறந்திருந்தாலே உள்ளுக்குள் காற்றோட்டம் சுழன்று வீசும். மேற்கு மறைந்திருப்பதால் வெய்யி லுடைய தாக்கம் உள்ளே வரவே வராது. மேற்கத்திய வெய்யி லின் தாக்கம் இல்லாதபோது வீடு குளுமையாக இருக்கும்.

குளுமையான வீட்டில் கோபதாபங்கள் ஏற்படாது. நன்றாக தூங்கலாம். தெளிவாக சிந்திக்கலாம்.''

''இதனால்தான் உன்னுடைய தகப்பனார் சொந்த வீடு இருந்தபோதும் இந்த இடத்திலேயே வெகுநாள் குடியிருந்தார். மன்னருக்கு அடுத்து இருக்கிறார் என்ற வசதி மட்டும் இல்லாத பல்வேறு விதத்தில் இது மிகச் சௌகரியமான இடம்.

''சில சமயம் கொசுத் தொல்லை மிக அதிகமாக இருக் கிறது. கீழே உள்ள குதிரைப் படையை வெளியே அனுப்பி விட லாமா என்றுகூட யோசிக்கிறேன்.

''அது சரியாக வராது. கொசுத் தொல்லை நீங்குவதற்கு மாலை வேளையில் புகை போடச் சொல். கொசு உற்பத்தி ஆகும் நேரத்தில் புகை போட்டால் தொண்ணூற்றி ஐந்து சதவீதம் கொசுக்கள் அழிந்துவிடும். கிழக்கு பக்கம் தலை வைத்து கால் நீட்டி தூங்கு. போர்த்திக் கொண்டு படு. கிழக்கத்திய காற்று உள்ளே நுழைந்தால் குளிரில் சுகமான தூக்கம் வரும். போர் வையை எடுக்க வேண்டி வராது. போர்வையை நீக்காது தூங்கு கிறபோது கொசுவும் கடிக்காது.''

''இதையெல்லாம் சொல்லிக் கேட்காதே. தந்தை இருந்த வீடு என்று கேள். உனக்கு கொடுத்துவிடுவார்கள். ஆனால் அப்பா பொறுமையாக அந்த விஷயத்தை நடத்தி இருந்தார். அவர் இருக்கும் பொழுதே வந்தியத் தேவரையும் அவர் மனைவி யையும் குடியேறச் செய்துவிட்டார். அவர் காலையிலிருந்து பகல் வரை பிற்பகலுக்கு மேல் தன்னுடைய இல்லத்திற்கு போய்விடுவார். அது கிருஷ்ணன் ராமன் இடமா, அருண்மொழி இடமா என்று புரியாமல் இரண்டு பேரும் இருக்கும் இடம் என்று வீரர்களுக்கு பதியும்பொழுது, தன்னுடைய பெட்டிகளை எடுத்துக்கொண்டு தன்னுடைய இல்லத்திற்கு போய்விட்டார். பிறகு அது அருண்மொழிப்பட்டனுடைய இடமாக போய் விட்டது.

அரையன் இராஜராஜன் அந்த இடம் தனக்கு வரும் என்று நினைத்திருந்தான். ஆனால் அருண்மொழி வந்து தங்கிவிடவே அதுபற்றி மெல்லிய மூச்சு கூட விடாமல் சரி என்று பின்வாங்கி விட்டான். ஆனால் அரையன் இராஜராஜன் மனைவிகள் அந்த வீட்டின் மீது பெரிய ஆசை வைத்திருந்தார்கள் போலும்.

குந்தவையின் மூலமாக இராஜேந்திர சோழனிடம் இந்த வீடு பற்றிய ஆசையை வெளிப்படுத்தினார்கள்.

சேனாபதியின் மனைவிகளுக்கு நாங்கள் வீடு ஒதுக்க வில்லையே. சேனாபதிக்கு மட்டும்தான் ஒதுக்குவோம். அப்படி சேனாபதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் அதாவது சேனாபதியின் மனைவிகள் வந்து தங்கிக் கொள்ளலாம். மற்ற படிக்கு ஒவ்வொரு சேனாபதியின் மனைவியும் தனக்கென்று பிடித்த வீடு கேட்டால் நான் என் மனைவியரோடு இருக்கின்ற இடத்தை விட்டு வெளியேற வேண்டியதுதான். அரையன் ராஜராஜன் முதிர்ந்த குணமுடையவர். அமைதியானவர். அவருக்கு கெட்ட பெயர் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டாம் என்று அவர்களிடம் சொல்'' என்று சொல்ல விஷயம் வெகுவேகமாய் அடங்கிப் போயிற்று. தண்ணீர் தெளித்த கங்கு போல மொத்த சூடும் குறைந்து போயிற்று.

அருண்மொழி கீழே வந்து வந்தியத்தேவர் குதிரையின் சேணத்தைப் பிடித்துக் கொண்டான்.

''வருமே.''

''என்ன என்று சொல்லும்.'' அருண்மொழிப்பட்டன் வினவினார்.

''உனக்கு பிடித்தமான புத்தர், மெல்ல மெல்ல கண்மூடி தன்னுள் கரைந்து காணாமல் போவதை நீ பார்க்க விரும்புகின்றாயா.''

''என்ன கேலி செய்கிறீர்கள்.''

''இல்லவே இல்லை. உன் புத்தர் தனக்குள் தானே அமிழ்ந்து போவதை பார்க்கின்ற வாய்ப்பு உனக்கு இது கிடைக்கப் போகிறது. வேறு எவருக்கும் இது கிடைக்காது. நீ மட்டுமே பார்க்கலாம். விரைவாக பதில் சொல்.''

''விரைவாகவா.''

''என்னுடைய ஆட்கள் என் கண்ணை விட்டு மறையும் முன்பு நான் அவர்களை பின்தொடர வேண்டும்.''

புத்தர் பதுமையை துணியில் சுற்றி ஒரு உறி கட்டி முன்னும், பின்னுமாக இரண்டு வந்தியத்தேவரின் ஆட்கள் அதை தூக்கிக்

கொண்டு அக்கசாலைக்கு நடந்தார்கள். அவர்களைத் தாண்டி வந்தியத்தேவரின் குதிரை போயிற்று. அக்கசாலை வாசலில் காத்திருந்தது. அந்த உறி தாண்டி அருண்மொழிப்பட்டன் வந்தடைந்தான்.

துணி சுற்றப்பட்ட பதுமையை பார்த்து புத்தராக இருக் குமோ என்று எண்ணினான். பிறகு சட்டென்று துணுக்குற்றான்.

''அக்கசாலைக்கு புத்தர் வந்திருக்கிறார் என்றால் உருக்கப் போகிறார்கள் என்று அர்த்தம். கடவுளே, எதற்காக புத்தர் சிலையை உருக்க வேண்டும். உருக்குவதற்கு வேறு பாத்திரமா இல்லை'' என்று மெல்லியதாய் படபடப்பு காட்டினான்.

ஆனால் மனம் எச்சரித்தது. சட்டென்று பின்வாங்கினான்.

நாம் அரசியலில் இருக்கிறோம். நம்முடைய சொந்த விருப்பு. வெறுப்புகளுக்கு அரசியலில் எந்த மரியாதையும் இல்லை. மேலும் இந்த அரசு சைவர்களுடைய அரசு. சிவ னுடைய சொத்து என்று தன்னை சொல்லிக் கொள்கின்ற அரசு. இங்கே வைஷ்ணவம் பேசினால் கூட பொறுத்துக் கொள்வார் கள். அதுவே இரண்டாம், மூன்றாம் பட்சம்தான். பௌத்தம் பேசினால் அது சைவத்திற்கு நேர் எதிரிடை என்று விலக்கி விடுவார்கள்.

பௌத்தர்களை அந்நியர்களாக அலட்சியப்படுத்துவார் கள். நான் எந்த சமயமும் சார்ந்தவனில்லை என்று சொன்னால் அது இன்னமும் மோசம்.

''நாத்தீகமா, கடவுளே இல்லை என்று சொல்கிறாயா'' என்று ஓரம் கட்டுவார்கள்.

அக்கசாலைக்குள் நுழைவதற்கு பெரும் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன.

''தயவு செய்து உங்கள் உடைகளை கழற்றிவிட்டு நாங்கள் தருகின்ற இடுப்பு துண்டையும், மேல் துண்டையும் கட்டிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி,

இடுப்பு துண்டையும், மேல் துண்டையும் அருண்மொழிப் பட்டனிடம் நீட்டினார்கள். அருண்மொழிப்பட்டன் தன்னுடைய வேட்டியை அவிழ்த்து மடித்து வைத்துவிட்டு அகலமான கோவணத்தோடு நின்றார். இடுப்புத் துண்டை கட்டிக்கொண் டான். அதே உடையில் வந்தியத்தேவரும் இருப்பது தெரிந்தது.

தேக்கு கட்டைகளையும், புளியங்கட்டைகளையும், காட்டு மர கட்டைகளையும் சுவர் போல உள்ளுக்குள் அடுக்கி நடுவிலேயும் பிளந்து பிளந்து போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு குழியிலிருந்து ஒரு ஆள் உயரத்திற்கு அடுப்பு சீராய் எரிந்து கொண்டிருந்தது. அந்த குழியின் மீது இரும்பு வாணலி வைக்கப் பட்டது. ஏதோ மசக்கெண்ணை விட்டு வேகமாக மேல் பக்கம் சுத்தம் செய்தார்கள். சுத்தம் செய்த வேகத்தில் நகர்ந்து கொண்டார்கள். அந்த எண்ணெயும் மேலே பற்றி எரிந்தது. வாணலி கால் அரைக்கால் நாழிகையில் சட்டென்று சிவந்தது.

''இன்னும் கட்டைகளை போடுங்கள்'' என்று சொல்ல, வாணலிக்கு அடியில் கிடைத்த சந்தின் வழியாக சிறுசிறு துண்டுகளை தள்ளினார்கள். நெருப்பு கொழுந்துவிட்டு வாணலியை சுற்றி எரிந்தது. பல கைகள் அந்த வாணலியை தாங்கிக் கொண்டிருப்பது போல தோற்றம் கொடுத்தது. வாணலி செந்நிறமாக மாறியது.

புத்தர் சிலையை கழுத்தில் சுருக்கிட்டு மூன்று பேர் தூக்கினார்கள். தூக்கிய மரம் வளைந்தது. மெல்ல எடுத்துக் கொண்டு போய் வாணலியில் வைத்தார்கள். மரத்துண்டை கீழே சாய்த்தார்கள். சுருக்குக் கயிறு தளர்ந்தது. கயிறை வெளியே எடுத்தார்கள். விலகிப் போனார்கள். புத்தர் சிலை தீயினுடைய தாக்கத்தால் செந்நிறமாக மாறியது. அடிப்பக்கம் மெல்ல உருகுவது தெரிந்தது. அடிப்பக்கம் போல தொடைகளும் உருகின. இடுப்பு நகர்ந்தது. நெஞ்சு நகர்ந்தது. தலை மெல்ல முன்பக்கம் சரிந்தது. அருண்மொழிப்பட்டன் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

புத்தர் சிலை மெல்ல உட்காரத் துவங்கியது. அமிழத் துவங்கியது. உருமாறியது. வெகு சீக்கிரத்தில் அது நீராக மாறி அந்த வாணலி முழுவதும் தங்க நீராக தகதகத்து கொப்புளத்தோடு எரிந்தது. சில சமயம் கொப்புளங்கள் வெடித்தன. தங்கத் துகள்கள் வெளியே வந்து விழுந்தன.

''தாமிரம் கலந்திருக்கிறது. அதனால்தான் வெடிக்கிறது'' என்று ஒரு பொற்கொல்லர் கூவினார்.

''தாமிரம் கலக்காமல் பொன்னால் மட்டும் இவ்வளவு உறுதியாக செய்ய முடியாதய்யா.'' இன்னொரு பொற்கொல்லர் பதில் சொன்னார்.

மிக அழகான, அமைதியான, அன்பு ததும்பும் முகத்தி னுடைய அந்த ஒரு முழ உயர புத்தர் சிலை முற்றிலும் நீராக மாற அருண்மொழிப்பட்டனை அது ஏதோ செய்தது. ஒரு துக்கத் தோடு அக்க சாலையை விட்டு வெளியே வந்தான்.

''இரும். எங்கே போகிறீர்கள். புத்தர் என்னவாக மாறு கிறார் என்று பார்க்க வேண்டாமா.''

குழி கரண்டியில் தங்கத்தை மொண்டு அச்சில் ஊற்றி னார்கள். வட்டம் வட்டமாக நிறைய குழிகள் இருந்தன. அந்த குழிகளில் தங்கம் கொட்டப்பட்டது. குழிகளில் தங்கம் கொட்டப் பட்ட உடனேயே இரண்டு பக்கமும் ஆட்கள் உட்கார்ந்து கொண்டு ஒருவர் முத்திரையை அழுத்தி வைக்க இன்னொருவர் அதை அதன்மீது சுத்தியால் ஓங்கி அடித்தார். மறுபடியும் அடுத்த குழியில் வைக்க மறுபடியும் அடி விழுந்தது. 'படோர் படோர் படோர் படோர்' என்று ஒரு தாளகதியில் முத்திரைகள் பதிக்கப் பட்டன. மொண்டு மொண்டு அச்சில் ஊற்றுவதும், அச்சில் ஊற்றியதும் முத்திரை அடிப்பதும் தொடர்ந்து விரைவாக நடந்தது.

மொத்த புத்தர் சிலையும் அச்சு பதித்த தங்க நாணயமாய் உறைந்ததும் அச்சிலிருந்து தட்டி பொற்காசுகளை வெளியே எடுத்தார்கள். பொற்காசுகளை ஒன்று திரட்டி நீர் தெளித்தார்கள். நீர் தெளித்த பொற்காசுகளை அள்ளி நீர் மிகுந்த பானையில் போட்டார்கள். சூடு முற்றிலும் தகர்ந்ததும் எடுத்து வேகமாக தேய்த்து நீட்டினார்கள்.

சரியாக பதிந்திருக்கிறதா என்று வந்தியத்தேவர் பார்த்தார்.

வெண்கலச் சிலைகளும், குத்துவிளக்குகளும் சோழம் என்ற எழுத்துக்களுமாய் பளபளத்தது.

சோழ தேசத்தில் ஒரு படைஎடுப்பு நடக்கப் போகிறது என்றால் அதற்கு முதல் வேலை காசு அடிப்பதுதான். புத்தர் சிலையை துண்டு துண்டாக நறுக்கியா கொடுக்க முடியும். முடியாது. எனவே மறவர்களுக்கு காசு கொடுப்பதற்காக இம் மாதிரி பொன் நாணயம் அடிப்பது வழக்கம்.

பொன்நாணயம் அடிக்கத் தொடங்கிவிட்டோம் என்று வெளியே தெரிந்தால் ஜனங்களுக்கு படை எடுப்பு நிச்சயம் என்று புரிந்துவிடும். இதை மெல்ல கசிய விட்டு விடுவார்கள்.

இன்னும் இரண்டு நாளில் சோழ தேசம் முழுவதும் யுத்தத்திற்கு தயார் ஆகிவிடும்.

அரிசி விலையும், பருப்பு விலையும் அதிகரிக்கும். மன்னர் இந்த முறை வேறு திட்டம் வைத்திருக்கிறார். அரிசியும், பருப்பும் தஞ்சையிலிருந்து எடுத்துக் கொண்டு போகாது, தஞ்சை யினுடைய பொருளாதாரத்தை பாழடிக்காது, இங்கிருந்து ஒரு நெல்மணி அரிசி கூட எடுக்காமல் தொண்டை தேசத்தில் போய் எடுத்துக் கொள்ளலாம் என்கிறார். நடுநாடு கூட அவ்வளவு விளைச்சல் இல்லை. தொண்டை தேசத்தில் நல்ல விளைச்சல் இருக்கிறது. அரிசி, பருப்பு, கரும்பு, வாழை, வெற்றிலை எல்லாம் தொண்டை தேசத்தில் அமோகமாக விளைகிறதாம்.

திருக்கடல் மல்லை தாண்டி உள்ளே போய்விட வேண்டும். செங்கல்பேட்டை என்ற ஊர் கட்டுமானப் பணிகளுக்கு மிகவும் பிரசித்தமானது. அங்குள்ள களிமண்ணில் சுட்டு செங்கல் அறுப்பது என்பது தொடர்ந்து நடந்து வருகிறது. அங்குள்ள வயல்கள் வளமானவை. வண்டல் மண் மிகுந்தவை. அங்கே அரிசி நல்ல விலையில் கிடைக்கிறது. எனவே வழியில் வாங்கிக் கொள்ளத்தான் நாம் தீர்மானித்திருக்கிறோம்.

முதல் இரண்டு நாட்களுக்கு நாம் அரிசி சோறு எடுத்துக் கொண்டால் போதும். அதை வெளியே போய் வாங்க வேண் டிய அவசியம் இல்லை. கோட்டையிலுள்ள தானியக் கிடங் கிலிருந்தே எடுத்துக் கொள்ளலாம்.

தொண்டை நாட்டு அரிசி சாப்பிட்டிருக்கிறாயா. தனி ருசி. அந்த வாழைப்பழம் பார்த்திருக்கிறாயா. சுளீரென்று தித்திக் கும். வெற்றிலை இளந்தளிராக இருக்கும். தஞ்சையைப் போல முரட்டு குணம் இல்லை. எல்லாமும் நாசுக்கு, 'தொண்டை நாடு சான்றோருடைத்து' என்று சொல்வார்கள். சான்றோர்கள் உள்ள இடத்தில் காரமும், உப்பதிகமாகவும் உணவு இருக்குமா, அதுவும் சாதுவாகத்தான் இருக்கும்.''

வந்தியத்தேவர் சொல்லச் சொல்ல அருண்மொழிப்பட்டன் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தான்.

''இன்னும் புத்தரிலிருந்து வெளியே வரவில்லையா.''

''இல்லை. மரணபரியந்தமும் வெளியே வரமுடியாது என்று நினைக்கிறேன். அப்படி ஒரு காட்சியை இன்று காட்டிவிட்

டீர்கள். ஏன் இதை காட்டினீர்கள் என்று கோபம் வந்தாலும், இதைப் பார்த்து ஒரு நிம்மதி, நிறைவு இருக்கிறது. இதைப் போலத்தான் ,நானும் மரணமடைய வேண்டும் என்று விரும்பு கின்றேன். புத்தருடைய இறப்பு. இப்படித்தான் இருந்திருக்கும்.''

''என்ன சொல்கிறாய் அருண்மொழி.''

''தனக்குள்ளே தான் ஒடுங்கியிருக்க வேண்டும். தன் உயிர் பிரிவதை தன் மனம் மொத்தமும் உயிருக்கு கொண்டு வந்து உயிரால் மனம் மொத்தமும் உறிஞ்சப்பட்டு மனம் காலியாகி வெறும் உயிர் மட்டுமே நின்று அதுவே வெளியே பறந்திருக்கும். அதுதான் அற்புதமான சாவு.''

''மனம் வேறு உயிர் வேறா.''

''வேண்டாம். உங்களுக்கு அது வேண்டாம். மனம் என்பது பற்றி சொன்னாலே மிகப் பெரிய பாடமாகும். ஆத்மா என்கிற உயிர் எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறது. அதுவே எல்லாவற்றையும் இயக்குகிறது. அதைவிட தாங்களே முக்கியம் என்று புலன்களும், புலன்களால் ஏற்பட்ட புத்தியும், புத்தியால் தூண்டப்பட்ட மனமும் அலைகிறது. அவைகள் அலைவதை தடுப்பதற்கு ஆத்மா எந்த முயற்சியும் செய்வதில்லை. அதே சமயத்தில் என்ன அலைந்தாலும் என்னோடுதான் வரவேண்டும் என்பதாய் ஆத்மா இருக்கும்.

மனதோடு உயிர் பிரிந்தால் மறுபிறவி உண்டு. உயிர் மனதை உறிஞ்சி தன்னுள் அடக்கிக் கொண்டு அதைக் கபளீ கரம் செய்துவிட்டால் அடுத்த பிறவி இல்லை. ஆன்மா, ஆன்மா வாகவே இருக்கும்.''

''இதையெல்லாம் எங்கு கற்றாய் அருண்மொழி.''

''நாகை விகாரத்தில். புத்த பிட்சுக்களோடு விவாதங்களில் ஈடுபட்டது.''

''இதை சொல்லால் சொல்கிறாயே. செயலால் உணர்ந்த துண்டா. ஆத்மா ஞாபகத்தை உறிஞ்சுகிறது. ஆத்மா மனதை தின்றது, கபளீகரம் செய்தது என்பதை அறிந்திருந்தாயா.''

''சில கணங்கள் உணர்ந்திருக்கிறேன். ஆனால் முழு வதுமாய் தெரியவில்லை. அறிவேன் என்ற எண்ணம் மட்டும் எனக்குள் இருக்கிறது.''

''சைவ சித்தாந்தம் இதை சொல்லித் தரவில்லையா.''

''சொல்லித்தருகிறது. பதி, பசு, பாசம் என்று மூன்றாகப் பிரித்து பசு பாசம் உடையது. பாசத்தை அறுத்தால் பசு காணாமல் போகும். பதி மட்டுமே எஞ்சும் என்று சொல்லப்படுகிறது.''

''வைணவம் வேறானதோ.''

''ஆமாம். என்ன கரணம் அடித்தாலும் ஜீவாத்மா, பரமாத்மாவோடு சேர முடியாது. கடைசி வரை ஜீவாத்மா கைகட்டி பரமாத்மாவிற்காக ஏங்கி நிற்க வேண்டியதுதான் என்பதுதான் அவர்கள் கருத்து.

''உன்னை தத்துவம் பேச மட்டும் இங்கு அழைத்து வரவில்லை. நீ விரும்புகின்ற புத்தரை உருக்குகிறேன் பார் என்ற கொடுமையை காட்டவும் உன்னை கூட்டி வரவில்லை.''

எந்த காரணம் கொண்டும் குந்தவையிடம் முறைத்துக் கொள்ளாதே. என்னதான் கடிந்து கொண்டாலும் இராஜேந்திர சோழருக்கு தன் தங்கையின் மீது மிகுந்த பாசம் இருக்கிறது, அதுவும் அதற்கு அவருடைய மருமகனும் காரணம். நீ நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்றால் குந்தவையினுடைய மகனான இராஜ நரேந்திரனை உன்பக்கம் இழுத்துக் கொள். எனக்கு வயதாகிவிட்டது. என்னால் போர் பயிற்சி சொல்லித்தர முடியாது. என்னால் ஒரு இளைஞனிடம் அமைதியாக பேசுகிற அளவுக்கு பொறுமை இல்லை. சூட்சுமம் உள்ளவர்களோடுதான் என்னால் பேச முடியும். அவன் கொஞ்சம் சரியாக வளர்க்காத பிள்ளை. ஒரு விஷயத்தை மூன்று, நான்கு முறை அவனுக்கு சொல்ல வேண்டி இருக்கிறது. அந்த பொறுமை என்னிடம் இல்லை.''

''அதேசமயம் அவனை சரியாக வளர்க்க வேண்டுமே என்ற கவலை இருக்கிறது. கீழைச் சாளுக்கியத்தில் ஒரு சரியான அரசு இல்லையெனில் நமக்கு எந்நேரமும் தொந்தரவுதான். பரதகண்டம் இருக்கும் வரை மேலை சாளுக்கியத்திற்கும், சோழ தேசத்திற்கும் சண்டை இருக்கத்தான் செய்யும். காரணம் நம்முடைய அடிப்படையான குணங்களே வேறு. தங்களைச் சிறந்த சைவர்கள் என்று அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். சிவலிங்கத்தை நெஞ்சில் கட்டிக் கொண்டால் சைவனாகி விட முடியுமா.''

பதி, பசு, பாசம் என்று சொன்னாயே. அது அற்புதமான

விஷயம். சைவ சித்தாந்தம் மனித வேரை அசைத்து பார்க்கின்ற விஷயம். அவர்கள் சிவன் என்ற விஷயத்தை விஷ்ணுவாக மாற்றி வெறும் ஆராதனை செய்வதிலேயே தங்களுடைய கவனத்தை செலுத்திவிட்டார்கள்.

சிவன் அபிஷேகப்பிரியன். அலங்காரப் பிரியன் என்று சொல்லி மும்முரமாய் பாலும், தயிரும் ஊற்றுவதிலேயே குறிக்கோளாய் இருக்கிறார்கள். சைவம் தத்துவரீதியாக அழிந்து வெறும் பக்தி பரவசமான விஷயமாக மாறும். பெரும் சோற்றுப் பட்டாளமாகப் போகும்.

மேலைச்சாளுக்கியத்தில் உணவு வகைகள் அதிகம். உணவு உண்பது அதிகம். பல போர்க்களங்களில் வேறு எதுவும் உண்ணக் கிடைக்காமல் வெறும் நீர் ஊற்றி அரிசி சோறு சாப் பிட்டு விட்டு போயிருக்கிறேன். வெறும் மாமிசம் மட்டும் சுட வைத்து சாப்பிட்டு விட்டு போயிருக்கிறேன். மேலைச் சாளுக் கியத்து படை வீரர்களுக்கு ஆறு வெஞ்சினங்களோடு சாப்பாடு போட வேண்டும். எப்படி சண்டை போடுவான். தந்திரம் தான் அதிகமாகும். அதனால்தான் மேலைச்சாளுக்கியத்திலிருந்து நேரிடையான படைஎடுப்பு இல்லாமல் சுற்றி வளைத்தே படை எடுப்பு நடக்கிறது. சற்று அசந்தபோது தாக்குதல் என்பது நடை பெறுகிறது.

சேர தேசம் அப்படி அல்ல. சாப்பாட்டுக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் சேர தேசத்து நம்பூதிரிகள் கொடுத்ததே இல்லை. நாமாவது அரிசி உணவு சாப்பிடுகிறோம். அவர்கள் அரிசி உணவை பிசைந்து கூழாக்கி அதிக நேரம் உட்காராமல் தேங்காய் சிரட்டையில் எடுத்து குடித்துவிட்டு தொட்டுக் கொள்ள ஒரு வெஞ்சினம் சாப்பிட்டுவிட்டு நகர்ந்து விடுகிறார்கள். பதினைந்து நிமிடத்தில் இரைப்பையை விட்டு குடலுக்கு போய்விடுகிறது. நிறைய பழங்கள் சாப்பிடுகிறார்கள். காய்கறி கள் சாப்பிடுகிறார்கள். மீன் நல்ல புரதச் சத்து உள்ள உணவு. அதிகம் பேர் மீன் சாப்பிடுகிறார்கள். நம்பூதிரிகள் நிறைய தேன் சாப்பிடுகிறார்கள். மருந்தே உணவு. உணவே மருந்து.

ஆனால் அருண்மொழி, சோழ தேசம் இதுவரை இல்லாத வகையில் வெறும் சாப்பாட்டு கடையாக மாறிக் கொண்டு வரு கிறது. அது கவலையாக இருக்கிறது. இவ்வளவு வகையான திண்பண்டம் ஒரு மனிதருக்கு தேவையில்லை.

''எதற்கு இவ்வளவு பேசுகிறேன் தெரியுமா. என்னுடைய கேள்வி வேறு.''

''ஸ்ரீ விஜயத்தில் பௌத்தருடைய ஆட்சி நடக்கிறது. மன்னன் பௌத்த பிட்சுக்களுக்கு அடங்கி நடக்கிறான். ஆனால் இன்னதுதான் சாப்பிட வேண்டும் என்று இல்லாது வகை வகை யாக ஏதேதோ மாமிசம் சாப்பிடுகிறார்களே இது எப்படி. கொள்கை ஒரு பக்கம். செயல்கள் ஒரு பக்கம் என்று ஜனங்கள் பிரிந்திருக் கிறார்களே இது எதனால். இந்த இடத்தில் எப்படி பௌத்தம் ஊன்றியது ஒருவேளை பிட்சுக்களும் மாமிசம் சாப்பிடுவார் களோ. அப்பொழுது புத்தருடைய கொள்கை என்னவானது. புத்தர் பன்றி மாமிசம் சாப்பிட்டுவிட்டு இறந்தார் என்று சொல்லப்படு கிறதே.

''அப்பொழுது புத்தரும் மாமிசம் சாப்பிடுகிறவர்தானா. ஆடுகளை பலியிடக்கூடாது என்று தடுத்தது நாடகம்தானா. உணவில் கவனம் செலுத்தாத ஒரு சமூகம் ஜெயிக்காது.''

''ஏன் மௌனமாக இருக்கிறாய் அருண்மொழி?'' வந்தியத் தேவர் கேட்டார்.

''பசிக்கு உணவு. இவ்வளவுதான் பௌத்தருடைய எண்ணம். அது இலையாக இருக்கலாம். கனியாக இருக்கலாம். சோறாக இருக்கலாம். சிறிய துண்டு மாமிசமாக இருக்கலாம். பசிக்கு உணவு. அதோடு முடிந்து போயிற்று.''

''உணவை உல்லாசமாக விவரிக்கிறபொழுது பல்வகைப் பட்ட விஷயங்கள் உல்லாசமாகி விடுகின்றன. உலகம் முழு வதும் உல்லாசமாகிறது. உல்லாசமான உலகத்தில் கடவுள் இல்லை.''

''கடவுள் என்கிற விஷயம் மிகத் தெளிவானது. எந்தவித விருப்போ, வெறுப்போ இல்லாதது. அதனால் மிகவும் வெறுமை யானது. அந்த வெறுமைக்குள் இருக்கின்ற அமைதி அலாதி யானது. கடும் வெப்பத்தில் புத்தர் சிலை உருகி, தன்னுள் ஆழ்ந்து, அமிழ்ந்து, கரைந்து நீராவது நிச்சயம் கண்கொள்ளாக் காட்சி. உங்களுக்கு நன்றி சொல்கிறேன்.''

''எனக்குள்ளும் அந்த நான் என்ற அகந்தை, என் திமிர். உள்ளே குழைந்து காணாமல் போக வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். வேண்டுவது கூட ஒரு தவறான விஷயம்தான்.

இடையறாது இந்த விஷயத்தை சிந்தித்துக் கொண்டிருந்தால் நானும் அவ்விதமே மாறிவிடுவேன். தேனி புழுவை கொட்டி கொட்டி கொளவி ஆக்குவது போல என் மனம் திரும்பத் திரும்ப இந்த விஷயத்தை சிந்தித்து அதுவாகவே மாறிவிடும்.''

''அருண்மொழி, கிருஷ்ணன் ராமனுக்கு நீ எப்படி மகனாக பிறந்தாய். அவர் தத்துவம் எல்லாம் பேசுவார். ஆனால் அநியா யத்துக்கு தந்திரக்காரர். ஒரு வாய்ப்பு இருப்பின் அந்தணனர் அரசாளலாம் என்று ஒரு விதி இருப்பின் வெகு நிச்சயம் அவர் இராஜராஜரை கவிழ்த்துவிட்டு தானே அரசராகி இருப்பார். அவ்வாறு செயல் வேகம் உடையவர். நீயோ உள்ளுக்குள் மூழ்கி தவிக்கிறாய். எப்படி இது என்று ஆச்சரியமாக இருக்கிறது.''

''உங்களுக்கு என் தந்தையைப் பற்றி தெரிந்தது அவ்வளவு தான். தட்டில் வைத்து கொடுத்தால் கூட அவர் அரச பதவியை ஏற்க மாட்டார். ஏனெனில் இராஜராஜர் தலைக்கு மேல் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்பது அவருக்கு தெள்ளத் தெளிவாகத் தெரியும். அம்மாதிரி இராஜேந்திரர் தலையில் உட்கார முடியவில்லை. உடனே நகர்ந்து விலகிவிட்டார். இராஜேந்திரரை மடக்கி நிறுத்த முடியவில்லை. அதனால் வெறும் சேனாதிபதியாக வீட்டிற்குள் வெற்றிலை, பாக்கோடு உட்கார்ந்து விட்டார். என்னை முன்னே தள்ளிவிட்டார். இப்பொழுது அவ ருடைய இடத்தை நான் பிடிக்க வேண்டும் என்றால் இராஜேந் திரர் தலையில் உட்கார வேண்டும். எனக்கு அதில் விருப்பம் இல்லை.''

''உன் விருப்பம் என்ன, அருண்மொழி.''

''சொல்லட்டுமா. வெளியே சொல்லக்கூடாது.''

''சொல் அருண்மொழி. நாம் பகைவர்கள் அல்ல. நண்பர் கள். தைரியமாகச் சொல்.''

''புத்த பிட்சுவாவது என் இலட்சியம். பரத கண்டத்தை விட்டு கிழக்கே போய் குடியேறி அங்கு மொழியற்ற உலகத் தில் வாழ்ந்து புத்தம், சங்கம், தம்மம் என்று உட்கார்ந்து விடுவது தான் என் ஆசை.''

''எது உன்னை தடுக்கிறது அருண்மொழி.''

''இந்த ஆசை வருவதற்கு காரணமே என் தந்தை. என் படிப்பு, என் அனுபவம், இந்த சோழ தேசம். அதற்கு நன்றி

செலுத்தாமல் இதுவரை எதனால் ஊட்டி வளர்க்கப்பட்டேனோ, அதற்கு காணிக்கை தராமல் நான் வெளியூர் போவதில் அர்த்த மில்லை என்று தோன்றியது. வாழ்ந்த இடத்திற்கு நன்றி செலுத்திவிட்டு கொஞ்சம் வயதான பிறகு நான் கடல் கடந்து போய்விடுவேன்.''

''அருண்மொழி, துண்டை மெல்லியதாக உதறு.''

அவன் அவிழ்த்து துண்டை மெல்லியதாக உதறினான். தங்கத் தகடுகள் கீழ் உள்ள கருப்புத் துணியில் படர்ந்தன. அவைகளை நீர் தொட்டு எற்றி எடுத்தார்கள்.

அவன் நகர்ந்து போய் தன்னுடைய துணிகளை எடுத்துக் கொண்டான். அக்கசாலை தாண்டி வாசலுக்கு வந்து குதிரை ஏறினான்.

''எப்பொழுது படை வடக்கு நோக்கி நகரும்.''

''இன்னும் ஒரு வாரம் ஆகும் என்று தோன்றுகிறது. வில் லாளிகளுக்கு பரமன் மழபாடியார் தனித்த பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். அரையன் இராஜராஜன் குதிரைகளை எப்படி பிரிந்து ஒன்றாக தாக்க வேண்டும் என்று பயிற்சி கொடுத்து கொண்டிருக்கிறார். யானைகளை வெகுதூரம் ஓட்டிக் கொண்டு போகிறார்கள். ஓட வைக்கிறார்கள். யானைகள் ஓடு வதற்கு மட்டும் பழக்கமல்ல. அம்பாரியில் உள்ளவர்களுக்கும் பழக்கம் வர வேண்டும்.''

''அரையன் இராஜராஜன்தான் தலைமை தாங்குகிறாரா?''

''ஆமாம். இராஜேந்திரனுடைய மூன்றாவது மகன் வீர இராஜேந்திரனும் வருவான். ஆனால் தலைமை தாங்குவது அரையன் இராஜராஜன்தான். வீர இராஜேந்திரன் உப சேனாதிபதி மட்டுமே.

''ஆக நமக்கென்ன வேலை.''

''கீழைச் சாளுக்கியம் பெரிய படை எடுப்பு அல்ல அருண் மொழி. இந்த படை வருகிறது என்றதுமே அவன் காணாமல் போவான். ஓடி ஒளிந்து கொள்வான். விஷ்ணுவர்த்தன் விஜயா தித்தன் கைது செய்யப்படுவான். விமலாதித்தன் மகனான இராஜ நரேந்திரனுக்கு பட்டாபிஷேகம் நிச்சயம் நடக்கும். அதற்குப் பிறகுதான் போர் நடக்கும்.

கலிங்க தேசம், ஒட்ட தேசம் என்று நகர வேண்டும். பால வம்சத்து மகிபாலன் இருக்கிறான். கங்கைக் கரையில் அவனைக் கொல்ல வேண்டும்.''

''கங்கை வரை போவோம் என்று நினைக்கிறீர்களா.''

''உள்ளுக்குள்ளே இராஜேந்திர சோழனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறது''

''என்ன எதனால் அந்த எண்ணம்.''

''தன் தந்தை என்ன செய்யவில்லையோ, அதை தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டு. அதனால் தான் வெறும் கோவில் மட்டும் கட்டாமல் கோவிலைச் சுற்றி கோட்டை கட்டி கோட்டைக்குள் அரண்மனை கட்டி, ஒரு நகரமே கோட்டைக்குள் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார். அதற்கு மிகச் சரியான இடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார்.

கொள்ளிடத்தில் வெள்ளம் வரும்போது அவை கால்வாய் களின் வழியாக ஊருக்குள் திருப்பி விடப்படும். ஊருக்குள் திருப்பி விடப்பட்ட நீர் குளங்களாகவும், ஏரிகளாகவும் கிணற்றுப் பாசனமாகவும் மாறும். அடுத்த பருவமழை வரும் வரை இந்த நீர் போதும். அதேசமயம் கட்டுப்பாடற்ற வெள்ளம் வரும்போது அதை வேறு திசைக்கு திருப்பி விட முடியும். நகரை அழிவி லிருந்து பாதுகாக்க முடியும்.

ஜெயங்கொண்டத்தில் ஸ்தாபிக்கப்படும் நகரம் மேடானது. அதேசமயம் மிகவும் நீரோட்டமுடையது. ஈசான்ய மூலையில் கணபதியை நிறுத்தியாகிவிட்டது. மிக அழகான கணபதி.''

''எப்போது நடந்தது இதெல்லாம்?''

''நீ நாகை விகாரத்தில் இருந்தபோது.''

''ஆனால் அங்கு எனக்குச் சொல்லப்படவில்லை.''

''புத்த பிட்சுக்களுக்கு தெரியும். சொல்ல மாட்டார்கள். புத்த பிட்சுக்கள் உங்களைப் போன்றவர்களை மூளைச் சலவை செய்வதிலேயே குறியாக இருப்பார்கள்.

எதற்காக போர், எதற்காக சோழ தேசம், நீ யார் என்று சொல்லி உட்கார வைத்துவிடுவார்கள். அங்கு மாட்டிக் கொள்ளாதே அருண்மொழி. நீ சொல்வதைப் போல புத்த பிட்சுவாய் மாறி சோழ தேசம் விட்டு வெளியேறி விடு. சோழ தேசத்தில் இருக்கும்

வரை சோழ தேசத்திற்கு விசுவாசமுள்ளவனாய் இரு. புத்த பிட்சுவை நெருங்க விடாதே. அவனை பிரம்பால் அடிப்பதற்குத் தயங்காதே.''

''ஏன் அவ்வளவு துவேஷம் உங்களுக்கு.''

''எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த துவேஷமும் இல்லை. ஆனால், ஸ்ரீ விஜயத்து பௌத்த பிட்சுக்களால்தான் இந்த வணிக வீரர்கள் பேரவஸ்தைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அந்த அஹிம்சாவாதிகளால் தான் இத்தனை கொடுமை எளிதாக நடை பெறுகிறது. எனவே ஸ்ரீ விஜயத்தை கடுமையாக தண்டிக்க முதலில் நாகை விகாரத்தை தண்டிக்க வேண்டும் என்று ஞாபகம் வைத்துக் கொள். கிழக்கு பக்கம் தளர்ந்திருக்கிறது என்று ஏற் கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. கிழக்கு பக்கம் சோழ தேசம் தாக்கப்படும் என்று நிசும்பசூதனி சொல்லி இருக்கிறாள். எனவே அந்த இடத்தை உறுதியாக வைத்துக் கொள்வது உன் பொறுப் பாக மாறுகிறது.''

''புத்திமதிக்கு நன்றி வந்தியத்தேவரே. நான் வெகுநிச்சய மாக புத்த பிட்சுக்களோடு கைகோர்த்துக் கொள்ளவில்லை. சோழ தேசத்திற்கு விசுவாசமாகத்தான் இருக்கிறேன். சமயம் என்று வருகிறபொழுது பிரிவினை வருகிறதே தவிர, தேசம் என்று வருகிறபொழுது நான் சோழ தேசத்துக்காரன்.''

''இல்லை. சமயம் தேசத்தை ஒதுக்கிவிடும். சமயம்தான் முக்கியம் தேசம் பிறகு என்று வந்துவிடும். அங்கேயும் கவன மாக இரு.''

அக்கசாலையிலேயே வந்தியத்தேவர் நின்று கொள்ள அருண்மொழிப்பட்டன் குதிரை ஏறி புறப்பட்டான்.

எங்கேனும் போய் தனிமையில் சிந்திப்பது நல்லது என்று தோன்றியது. இரண்டு லட்சம் வீரர்களுக்கு சோறு வேண்டும் என்றால் எவ்வளவு அரிசி வேண்டும். எத்தனை நாள் தங்கப் போகிறார்கள். அத்தனை பேருக்கும் அரிசிக்கு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டும். போகலாமா தொண்டை நாடு, போகலாமா ஏற்பாடு செய்யலாமா அல்லது ஸ்ரீ விஜயத்து தூதுவனை கைது செய்து வரலாமா. ஸ்ரீ விஜயத்து தூதுவனை கைது செய்ய தன் ஆட்கள் போதும். நான் போக வேண்டியது இல்லை. தொண்டை மண்டலம் போனால் அரிசி வாங்குவது

பற்றியும், அரிசியை பத்திரமாக பாதுகாப்பது பற்றியும், சமைப்பதற்கு உண்டான பாத்திர பண்டங்கள் பற்றியும், அங்கே உள்ள கிராம அதிகாரிகளுக்கு உற்சாகமூட்டுவது பற்றியும் செய்யலாம்.

எந்த வழியாகப் போகிறோம். ஜெயங்கொண்டம் வழியாகவா அல்லது கடற்கரை ஓரமாக பயணப்பட்டு திருகடற்மல்லையா.

திருக்கடற்மல்லை எளிது. ஆனால் உணவு பற்றி அத்தனை தெளிவாக இருக்க முடியாது.

சொல்லிவிட்டுப் போகலாமா அல்லது நாமாக கிளம்பி விடலாமா. திருக்கடற்மல்லை தாண்டி மருந்தீஸ்வரர் கோவில் இருக்கிறது. அங்கு தந்தைக்கு நேர்ந்து கொள்ளலாம். மருந்தீஸ்வரர் தாண்டி மயிலையில் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி என்று ஒரு அழகிய விண்ணகரம் இருக்கிறது. அங்கே போய் அங்கேயும் தந்தைக்கு வேண்டிக் கொள்ளலாம். பிறகு திருவொற்றியூர் போய் பாடி இறங்கலாம்.

அரிசி எங்கே வாங்க முடியும்.

திருமயிலையில்தான் வணிகர்கள் அதிகம் இருக்கிறார்கள். அங்கே போவது உசிதம் தானே. ஒரு வார்த்தை மன்னரிடம் பேசி விட்டு போகலாமா. அவ்ன் அரண்மனை நோக்கி திரும்பினான்.

அடுத்த வாரம் படைஎடுப்பு எனில் இப்பொழுது இன்று எவரேனும் வடதிசை நோக்கி கிளம்ப வேண்டும் என்று கணக்கு போட்டான். அவன் அரண்மனை நோக்கி போகும்பொழுது திருமயிலையில் உள்ள அந்தணர்கள் சீறி எழுந்தார்கள்.

''தஞ்சையிலுள்ள அந்தணர்களின் நிலங்களை பறித்து வேளாண் வகை நிலம் ஆக்கிவிட்டால், அதேபோல் இங்கேயும் நடக்குமா, நடக்காது. நடக்க விடமாட்டோம். எங்கள் நிலங்கள் எங்களுக்குத்தான் சொந்தம். அது பரம்பரை உரிமை.''

வேளாளர்களை நோக்கி அந்தணர்கள் சீறினார்கள்.

''நாங்கள் கொடுப்பதை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். எவ்வளவு கொடுப்பது என்பதை விளைச்சல் பொறுத்து நாங்கள் தீர்மானம் செய்வோம்'' என்று அந்தணர்கள் அடித்துச் சொல்ல,

''முடியாது'' என்று வேளாளர்கள் தலை அசைத்தார்கள்.

''முடியாது என்றால் போங்கள்.''

''அறுப்பு அறுக்க முடியாது என்று சொல்கிறோம். இன்னும் மூன்று நாட்களில் அறுத்தாக வேண்டும். இது முதல் போகம். இதற்குப் பிறகு நீர் விட்டு மறுபடியும் உழுது விதைத்தால் தை மாதம் நமக்கு நெல் கிடைக்கும். இந்த நெல் உங்களுக்கு வேண்டுமென்றால் நாங்கள் அறுத்தால்தான் முடியும். நாங்கள் சொல்கிற அளவுக்கு நீங்கள் வந்தாலொழிய இது நடக்காது.''

''என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்.''

''ஐம்பதுக்கு ஐம்பது.''

''முடியவே முடியாது. என்ன திமிர், எப்படி கேட்கிறாய், என்னுடைய நிலத்தில் நீ ஐம்பது பகுதியா. எப்படி.''

''விதைத்தது நான். உழுதது நான். அறுக்கப்போவது நான். எனக்கு ஐம்பது இல்லாமல் வேறு எதற்காக உழுவது, வேறு எதற்காக விதைப்பது. எங்களுக்கு தேவையில்லை. எங்கள் வீட்டு உணவுக்கு எங்களுடைய தானியம் போதும். எங்களால் உழுது கொள்ள முடியும். உங்கள் வீட்டு உணவிற்கு உங்களால் உழுது கொள்ள முடியாது.''

வெளியூரிலிருந்து ஆட்கள் கொண்டு வந்து நாங்கள் விதைப்போம், அறுப்போம்.''

''வெளியூரிலிருந்து வேளாளர்கள்தானே வர வேண்டும். அந்தணர்களா வந்து விதைப்பார்கள். அவர்களா அறுப்பார்கள். அந்த வேளாளர்களை வேண்டாம் என்று நாங்கள் வேண்டிக் கொண்டால் சேர் விட்டு எழுந்து வெளியே போய்விடுவார்கள்.''

அவன் கை கட்டி நின்றிருந்தான். பெயர் சீராளன்.

நாயன்மார் கதைகளில் அதிக ஈடுபாடு உடைய அவனுடைய தகப்பனார் சீராளன் என்று அவனுக்குப் பெயர் வைத்தார். இறைவனே வாய் நிறைய சீராளனே வா. செல்லக் குழந்தையே வா என்று அழைத்தார் அல்லவா. எனவே, சீராளன் என்ற பெயர் அவருக்கு மிகவும் பிடிக்கும். அவனை அழைப்பவர்களுக்கும் அந்தப் பெயர் பிடித்திருந்தது. மற்றவர்களுக்கு பிடிக்கும்படியாக அவனும் நடந்து கொண்டான்.

ஆனால் இந்த கூட்டத்தில் அப்படி நடந்து கொள்ள முடியாது என்று அவனுக்கு தோன்றியது.

''வேளாளர்கள் கேட்டது தவறு.'' அவன் சொல்ல, அந்தணர் கள் சட்டென்று அமைதியானார்கள்.

''ஐம்பதுக்கு ஐம்பது என்பது தவறு'', என்று சொல்ல வேளாளர்கள் திகைத்தார்கள்.

''வேளாளர்களுக்கு அறுபது, வேலை செய்யாத உங்க ளுக்கு நாற்பது என்று அவன் சொல்ல, மறுபடியும் 'ஓ'வென்று கூச்சல் எழுந்தது. வேளாளர்கள் கைதட்டி சிரித்தார்கள். வேளாளர் கள், வேலை செய்யாதவர்கள் என்று அவன் பிரித்தது அவர் களுக்கு சந்தோஷமாக இருந்தது.

''என்ன... மறுபடியும் அவன் பேச, வேளாளர்கள் திரும் பவும் வாய்விட்டு சிரித்தார்கள். அந்தணர்களுக்கு கோபம் மிகவும் வேகமாக பொங்கியது.

''உன்னுடைய வாய் அதிகம் பேசுகிறது. திமிர் தலை விரித்து ஆடுகிறது. இங்குள்ளவர்களை தூண்டிவிட்டு பின்னா லிருந்து நீதான் இயக்குகிறாய் என்று தெரியும். நான் சொல் வதைக் கேள். மரியாதையாக இந்த இடத்தை விட்டு போய் விடு. இது நீ பேசக்கூடிய இடம் அல்ல. உன் தந்தையும், உன் மாமனும், மற்றும் பெரியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.''

''ஐம்பதுக்கு ஐம்பது எடுத்துக் கொள்ளவே முடியாது. அறுபதுக்கு நாற்பது. எங்களுக்கு அறுபது உங்களுக்கு நாற்பது.''

''தர முடியாது.''

''முடியவே முடியாது.'' அவன் வேகமாக மறுத்தான்.

''சரி அறுக்காதே போ. நான் மாடு மேயவிட்டு விடுகிறேன்'' என்று அந்தணர்கள் சொல்ல, வேளாளர்கள் பின்வாங்கினார்கள். அந்தணர்கள் கலவரப்பட்டார்கள்.

புலிக்கொடியோடு கூடிய ஈட்டிகள் எடுத்து வந்து ஆறு போர்வீரர்கள் மயிலாப்பூரில் உள்ளே நுழைந்தார்கள்.

''வணிகர் தலைவன் யார்?'' என்று விசாரித்தார்கள்.

''என்ன விஷயம்.''

''இராஜேந்திர சோழர் தூதுவனாக வருகிறோம்'' என்று சொல்லி ஒரு மூங்கில் குழலை நீட்டினார்கள்.

மூங்கில் குழல் மீது அரக்கு பதிந்திருந்தது. அரக்கு பதிந் திருந்ததின் மீது ஒரு தலைமயிர் ஒட்டி இருந்தது. அரசு முத்திரை

மோதிரம் தெளிவாகத் தெரிந்தது. வணிகர் தலைவர் வாங்கி நெற்றியில் ஒற்றிக் கொண்டார். அந்தணர்களை பார்த்தார். வேளாளர்களை பார்த்தார்.

''வெகு முக்கியமாக ராஜ காரியம் வந்திருக்கிறது. கலைந்து விடாதீர்கள். இருங்கள்'' என்று சொல்லிக் கொண்டார். மெல்ல எல்லோரையும் மூங்கில் குழலில் உள்ள முத்திரையைப் பார்க்க சுவடிகள் இருந்தன. ஓலை வணிகர்களுக்கு எழுதப்பட்டிருந்தன.

''கிழக்கு நோக்கி திருமயிலை வழியாக அரசுப் படைகள் வரும். அவைகளுக்கு திருமயிலையிலும், திருவொற்றியூரிலும் தங்க வைத்து மூன்று நாட்கள் உணவு போட வேண்டிய பொறுப்பு வணிகர்களை சேர்ந்தது. அதற்கு உண்டான காசு கொடுக்கப்படும். தங்கக் கழஞ்சுகளாக இருக்கும் என்று சொல்லப் பட்டது.

இன்னொரு ஓலையில். பாதைகள் சீரமைக்கவும், வீரர்கள் தங்க கொட்டகைகள் போடவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இன்னொரு ஓலையில். ஊருக்குள் ஏதேனும் பிணக்கு இருப்பின் அதை பேசி தீர்த்துக் கொண்டு வரவேற்பு நல்லபடி யாக தர வேண்டும். இல்லையெனில் கடுமையாக தண்டனை கிடைக்கும்'' என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.

இராஜேந்திரர் சொல்லச் சொல்ல ஓலைநாயகம் அதை எழுத இரண்டு சேனாதிபதிகள் அதில் கையெழுத்திட்டிருந் தார்கள்.

''முடிந்ததா உங்கள் பிரச்சனையெல்லாம். வேளாளர்களே நீங்களே நெல் அறுத்தே ஆக வேண்டும். நெல் அறுத்தால் தான் அரிசி ஆக்க முடியும். அந்த அரிசி மொத்தமும் நமது படைகளுக்குத் தேவை. நீங்கள் அந்தணர்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அரிசி மொத்த மும் வணிகர்களாகிய நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்.''

''நீங்களே கொடுத்துவிடுங்களய்யா. என்ன விலை இருக்கிறதோ அதில் ஐம்பது சதவீதம் எங்களுக்கு கொடுத்து விடுங்கள்.''

இப்பொழுது அந்தணர்கள் முன் வந்தார்கள்.

''ஐம்பதுக்கு ஐம்பது ஒத்துக்கொள்கிறோம். ஆனால்

ஐம்பதுக்கு உண்டான அரிசியை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம். மீது ஐம்பதுக்கான அரிசியை அரசரிடம் கொடுத்து விடுங்கள்.''

சாமர்த்தியமாக பேசுவது போல் பேசினார்கள்.

''ஒரு குண்டுமணி அரிசிகூட இருவருக்குமே கிடைக்காது. அத்தனையும் வணிகர் வீட்டுக்கு வந்து விடும். அவர் தீர்மானிப் பார். எத்தனை படைகள் வருகிறதோ, எத்தனை நாட்கள் இருக்கிற தோ அதுபோக மிஞ்சி இருப்பதை.''

''அறுபதுக்கு நாற்பது'' மறுபடியும் அந்தணர் கூவினார்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''மிஞ்சியதை அறுபதுக்கு நாற்பதாக பிரித்து நாற்பதை அவர்களுக்கும், அறுபதை எங்களுக்கும் தர வேண்டும்.''

''ஒன்றும் மிஞ்சவில்லை என்றால் என்ன செய்வது. இப்பொழுது அவன் ஏக்கமாக கூறினான்.

''அறுபதுக்கு நாற்பது. மிஞ்சாத அறுபது அவருக்கு. மிஞ்சாத நாற்பது எங்களுக்கு'' என்று சொல்ல, வேளாளர்கள் விழுந்து, புரண்டு சிரித்தார்கள்.

அந்தணர்கள் முகம் இருண்டது.

''அவனை அடித்து மிதிக்க வேண்டுமய்யா. ஆள் வைத்து கொன்று போட வேண்டும். மிகவும் அதிகப்பிரசங்கித்தனமாக பேசுகிறான்.'' இரண்டு மூன்று அந்தணர்கள் அடிக்குரலில் பேசி பல் கடித்தார்கள்.

பார்வைக்குத்தான் அந்தணர்களாக இருந்தார்களே தவிர அவர்கள் எல்லோரிடமும் தடிமனான கோல் இருந்தது. ஊன்றி நடப்பது போல அவர்கள் அதை உபயோகப்படுத்தினார்களே தவிர உண்மையில் அவர்கள் அதை பிரயோகப்படுத்தவும் தெரிந்தவர்கள் என்பது அதை வைத்துக் கொண்டிருந்த சேஷ்டை யில் தெரிந்தது.

வேளாளர்கள் பலர் இடுப்பில் உடைவாள் சொருகி இருந் தார்கள். வணிகர்கள் மட்டுமே ஆயுதங்கள் இல்லாமல் மௌன மாய், அமைதியாய் உட்கார்ந்திருந்தார்கள்.

இடுப்பில் துணிகட்டி அந்த துணிக்கு நடுவே நீண்ட வாள் சொருகி இருந்தான்.

''சீராளா, கொஞ்சம் யோசனை செய். கேலி செய்கின்ற நேரமல்ல, மூன்று லட்சம் வீரர்கள் வருவார்கள் என்பது என் கணக்கு. திருவொற்றியூருக்கு நெல் அனுப்ப வேண்டும். இங்கும் வைத்துக் கொள்ள வேண்டும். திருமல்லையில் கூட கேட்கலாம். நாம் என்ன செய்வது.

அறுக்க முடியாது என்று மட்டும் சொல்லிவிடாதே. மன்ன ருடைய கோபத்திற்கு தேவையில்லாமல் இந்த தொண்டை மண்டலம் ஆளாகும். நம்மை நம்பித்தான் அவர்கள் படை நடத்துகிறார்கள். இன்னும் தொலைதூரம் போவதற்குக் கூட அவர்கள் அரிசி வேண்டும் என்று கேட்பார்கள். நாம் கூடைக் கூடையாக அரிசியை மாட்டு வண்டிகளில் ஏற்றி அவர்களை பின்தொடர வேண்டியிருக்கும்.''

''எதற்காகப் போர்?'' ஒரு வணிகர் ஒரு அந்தணரை கேட்டார்.

''மேலைச்சாளுக்கியம் மறுபடியும் எகிறிக் கொண்டிருக் கிறது. சோழ சாம்ராஜ்யத்து இளவலா அல்லது மேலைச்சாளுக் கியத்து இளவலா யாருக்கும் பட்டம் என்று சூதாடிக் கொண் டிருக்கிறார்கள். இந்த நேரம் நாம் உதவிக்கு போகவில்லை என்றால் நமக்கு பல தீங்குகள் வரக்கூடும்.''

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

அறுபதுக்கு நாற்பதோ, தொண்ணூறுக்கு பத்தோ, எண்ப துக்கு இருபதோ எனக்கு கவலை இல்லை. இனிமேல் நம் முடைய வேலை இங்கு உட்கார்ந்து பேசுவது அல்ல. களத்தில் இறங்குவது, அறுவடை செய்வது. கதிர் அடிப்பது, நெல்மணியை சேகரிப்பது. கூடை கூடையாய் கொண்டு போய் பத்திரப் படுத்துவது இதுதான் முக்கியம். நம்முடைய சண்டையை நம்மால் தீர்த்துக் கொள்ள முடியாவிட்டால் வேறு யாராவது தீர்த்து வைப்பார்கள்'' என்று சொல்லிவிட்டு அவன் திண்ணையை விட்டு கீழிறங்கினான். வெளியே நடந்தான்.

''யார் தீர்த்து வைப்பார்கள்.'' ஒரு அந்தணர் கோபமாகக் கேட்டார்.

''மாமன்னர் இராஜேந்திரரே தீர்த்து வைக்கலாம். அவரிடம் நீங்கள் அறுபதுக்கு நாற்பது கேட்கிறீர்கள். உழவனுடைய வயிற் றில் அடிக்கிறீர்கள் என்று சொல்லப் போகிறேன்'' என்று சொல்லி

விட்டு திடமாக நடந்தான். அவனை மற்றவர்கள் பின்தொடர்ந்தார்கள்.

வேளாளர்கள் எல்லோரும் அவனுக்குக் கீழ் ஒன்று திரள்வதை அந்தக் கூட்டம் உணர்ந்தது. வணிகர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவன் சொல்வது தெள்ளத் தெளிவான விஷயம். இராஜேந்திரருக்கு இந்த செய்தி போய் நீங்கள் அதட்டுகிறீர்கள், அட்டகாசம் செய்கிறீர்கள் என்று சொன்னால் உங்களுக்கு எதிராகத்தான் கிளம்புவார். ஏற்கனவே இராஜேந்திர சோழர் உங்களைப் பற்றி நல்ல அபிப்ராயம் கொண்டவர் அல்ல. போர் நேரத்தில் உதவி செய்யாமல் நீங்கள் பேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்தால் அது தவறாக முடியும். உங்களுக்கு தவறு நேர்ந்தால் அது எங்களுக்கு நேர்ந்தது போலத்தான். எனவே குறை சொல்லும்படி வைத்துக் கொள்ளாதீர்கள்.

ஓலை கொண்டு வந்த வீரர்கள் வெறும் வீரர்கள் அல்ல. உளவாளிகள் அங்கு என்ன நடந்தது என்று வாயைக் கிண்டி தெரிந்து கொண்டார்கள். வரும் படைகளுக்காக திருமல்லையில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு அரசாங்கம் செயல்படும் விதம் எப்படி என்று பொது மக்களுக்கு தெரிவதேயில்லை. அரசாங்கத்தை வெகு சுலபமாக எதிர்த்து விடலாம் என்று நினைக்கிறவர்கள் அத்தனை பேரும் முட்டாள்கள். அரசாங்கம் மிக உயரமானது. மிக அகலமானது. மிக பலமானது. அதற்கு கூர்மையான கண்களும், கூர்மையான காதுகளும் உண்டு.

ஒரு அரசாங்கத்தை முறைத்துக் கொள்வது என்பது முட்டாள்தனமான வேலை. அரசாங்கத்தை முறைத்துக் கொள்ள ஒற்றுமையாக பல லட்சம் பேர் ஒன்று திரள வேண்டும். அப்போது வேறு அரசாங்கம் அமையும்.

* * *

அத்தியாயம்

14

ஆனால் ஓலை எடுத்து வந்தவர்கள் கெட்டிக்காரர்கள். அவர்கள் வெறும் தூதுவர்கள் மட்டுமல்ல. உளவாளிகள்.

அந்த சபையில் என்ன பேச்சு நடந்தது. யார் யார் என்ன பேசினார்கள் என்று மெல்ல மெல்ல வாயை நோண்டி தெரிந்து கொண்டார்கள். தள்ளி நின்று வேடிக்கை பார்த்த பொதுமக்க ளிடம் அதை கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டார்கள்.

அரசாங்கம் என்பது மிக உயரமானது. அகலமானது, இரும்புக் கரம் கொண்டது. அதற்கு செவிகளும், கண்களும் பல்லாயிரக்கணக்காக உள்ளன. ஒரு அரசாங்கம் பொதுமக்களை எப்பொழுதுமே கவனமாக பார்த்துக் கொண்டிருக்கும். ஒரு அரசாங்கத்தை எதிர்ப்பது என்பது எளிதான காரியமே அல்ல. சோழ தேசத்து அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்ததால் அங்கு பேசிய அந்தணர்களுடைய இலட்சணங்கள் தெளிவாக இராஜேந்திர சோழருக்கு சொல்லப்படுவதற்காக திருமல்லைக்கு அந்தக் குழு போய் உட்கார்ந்து கொண்டது.

தொண்டை மண்டலத்தில் தான் அரிசி வாங்க வேண்டும் என்பது தெளிவாகிவிட்டது. அரிசி வாங்குவதில் ஏதேனும் சிக்கல் உண்டா என்று தெரிந்து கொள்வதற்காக கிருஷ்ணன் இராமன் ஒரு ஆளையும் பரமன் மழபாடி ஒரு ஆளையும் அனுப்பி வைத்திருந்தார்கள். இராஜேந்திர சோழர் தன்னுடைய ஆளை எந்த விசாரணையும் செய்யாமல் இவர்கள் விசாரிப்பதை இவர் களிடமே கேட்டு வைத்துக் கொள்ளும்படி இன்னொரு ஆளை அனுப்பி வைத்திருந்தார். ஒருவருக்கு தெரியாமல் ஒருவர் இரகசிய உள்வாளிகளாக அந்தக் குழுவில் இருந்தார்கள். திருமல்லை யில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

அவன் வயலுக்கு போனான். தன்னுடைய ஆட்களை பல பக்கமும் ஏவினான்.

''என்ன வயல் என்று பார்க்காதீர்கள். நெல் முற்றி இருந்தால் அறுத்து களத்துக்கு கொண்டு வாருங்கள். போரடித்து நெல்லை

காய வையுங்கள். காய வைத்த நெல்லை அவித்து பிரியுங்கள். சாணி போட்டு மெழுகிய உயர் கூடுகளில் அரிசி கொட்டப் படட்டும். பெரிய கல்யாண விருந்துக்கு தயார் ஆவது போல இங்குள்ள அத்தனை தானியங்களும் உணவுக்கு தயாராக வேண்டும்'' என்று உத்தரவிட்டான்.

போன மாதம்தான் அவனுக்கு திருமணம் ஆகி இருந்தது. அது ஆனி மாதம் கடைசி முகூர்த்தம். இரண்டு நாட்கள் அவர் களை தனியாக தூங்குவதற்கு அனுப்பினார்கள். அவள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். அவன் பயமுறுத்தவில்லை. மாறாக நிறையப் பேசினான். தேவார, திருவாசக பாடல்களை பாடிக் காட்டினான். பயணப்பட்ட இடங்களின் விசித்திரங்களைச் சொன்னான்.

கீழைச்சாளுக்கிய வயலுக்கும், மயிலை வயலுக்கும், நடு நாட்டு வயலுக்கும், தஞ்சை வயலுக்கும் என்ன வித்தியாசம் என்று சொன்னான். காவிரி நீரின் வேகத்தை, வெள்ளப் பெருக்கை விவரித்தான். அவள் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு மயிலையை தவிர வேறு ஊர் தெரியாது. போனதே இல்லை.

நான் அழைத்துப் போகிறேன். பல்வேறு ஊர்களுக்கு போவோம் என்று சொல்லி தூக்கம் வர, அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு தூங்கினார்கள்.

''இத்தனை அழகா என் மனைவி'' என்று அவன் கன்னத்தை ஏந்திக் கொஞ்சினான்.

''இவ்வளவு நல்லவரா நீங்கள்'' என்று அவள் தலைவருடி கன்னங்களில் முத்தமிட்டாள்.

அவர்கள் கூடலில் ஈடுபடவில்லை. நிதானமாக ஈடுபட்டுக் கொள்ளலாம் என்று இருந்தார்கள். ஆனால், ஆடிமாதம் வந்து விட்டது. இனிமேல் கூடுவது நன்றாக இருக்காது என்று அவர் களைப் பிரித்து அழைத்துப் போனார்கள்.

''எங்கே போகிறாய். இதே மயிலையின் மறுகோடிக்குத் தானே. நான் கடற்கரை பக்கம் இருக்கிறேன். நீ மாடுகள் மேயும் புல்வெளி பக்கம் இருக்கிறாய், அவ்வளவுதானே.'' சீராளன் தன் மனைவியை முத்தமிட்டு வழி அனுப்பி வைத்தான்.

போனதும் அவன் ஊரார் அவனை சூழ்ந்து கொண்டார்கள்.

''இந்த வேலை இருக்கிறதப்பா. அதற்கென்ன முடிவு என்று தெரியவில்லை. யோசனை செய்ய வேண்டுமப்பா. இது என்ன, அது என்ன, இது எப்படி, அது எப்படி'' என்று ஆயிரம் கேள்விகள் கேட்டார்கள்.

அவன் அந்த ஊருக்கு தலைவன் அல்ல. வேளாளர்களுக்கு முதன்மையாக நின்றான். நன்றாகப் பேசினான். விஷயத்தை தெளிவாகப் புரிந்து கொண்டான். இளைஞனாக இருந்தாலும் விவேகியாக இருந்தான். அவன் தந்தை அவனைப் பற்றி மிகப் பெருமையோடு பேசுவார். அவனுடைய ஊர் மக்கள், அவனுடைய இனத்து மக்கள் அவனை தங்கள் தலைவன் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உண்மையில் அவனுடைய தகப்பன் தான் தலைவன். அவருடைய வம்சம் என்பதால், அவருடைய வழித் தோன்றல் என்பதால் அவன் பேச்சுக்கு அங்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது.

ஆடிப்பெருக்கு வர நாள் இருந்தது. மேற்கே நல்ல மழை பெய்கிறது என்றும், ஆற்றில் நீர் வரத்து அதிகரித்திருக்கிறது என்றும், கல்லணையை திறந்திருக்கிறார்கள் என்றும் அவனுக்கு ஊர் விட்டு ஊர் செய்தி வந்தது. தென்மேற்கு பருவக் காற்று சில சமயம் திசை தவறி மேகங்களை அனுப்ப இந்த பக்கமும் மழை பெய்தது. கூவம் ஆற்றில் நீர் வேகமாகப் போனது. அப்படிப் போன நீர் திசை திரும்பி செழுங்கழநீர் ஓடை வழியாக மயிலாப்பூருக்கு வந்தது. அந்த ஓடையில் நீர் ஓட்டம் குறைந்து போனால் பளிச்சென்று மூன்றாம் நாளே பூக்கள் மலரத் துவங்கும். ஓடாத நீரில் உள்ள அந்த மலர்கள் ஆடி அசைவது அழகாக இருக்கும். கோவிலுக்கு அதை பறித்துப் போவார்கள். சத்திரக்காரர்கள் இலைகளை அறுத்து எடுத்துக் கொண்டு போவார்கள். உணவு பரிமாற உபயோகப்படுத்திக் கொள்வார்கள்.

அந்த ஓடைக்கு அருகே ஒரு சிறிய பிள்ளையார் கோவிலை வேளாளர்கள் கட்டினார்கள். வெறுமே மரத்தடியில் இருந்த அந்த வினாயகர் கோவில் யார் யாரோ உதவி செய்ய சட்டென்று ஒரு சிறிய கற்றளியாகி கலகலப்பான வியாபாரப் பகுதியானது.

அந்த கோவில் விமானம் எழும்பி சீரானதும் அந்தணர்கள் இதில் நாங்கள்தான் நுழையலாம் என்று சொல்லி நுழைந்து விட்டார்கள். மயிலை அந்தணர்கள் நேரத்திற்கு வந்து கதவு

திறக்காது போக அவர்களிடமிருந்து வேளாளர்கள் சாவியை பிடுங்கி வேறு ஊரிலிருந்து அந்தணர்களை அழைத்து வந்து அவர்களை நியமித்தார்கள். அப்பொழுதிலிருந்தே மயிலை அந்தணர்களுக்கும், மயிலை வேளாளர்களுக்கும் சண்டை. எதற்கெடுத்தாலும் நடக்கத் துவங்கியது.

''வேளாளர்கள் என்றால் என்ன பெரிய கொம்பா'' என்று அந்தணர் கேட்டதற்கு,

''ஆமாம் கொம்புதான். நாங்கள் இல்லாது இந்த உலகம் நடைபெறாது. எங்களுக்குப் பின்னே தான் உலகம் நடந்து கொண்டிருக்கிறது'' என்று காவிய நயத்தோடும், கவிதை உவமானத்தோடும் சொன்னார்கள்.

அந்தணர்களுக்கு ரசிக்கவில்லை.'' அந்தணர்களை எவன் இழித்து பேசுகிறானோ, எவன் பழித்துப் பேசுகிறானோ அவன் குடும்பம் நசுங்கும்'' என்று உரத்த குரலில் முழங்கினார்கள்.

''யார் நசுங்குகிறார்கள். நீயா, நானா பார்த்துக் கொள்ளலாம்'' என்று வேளாளர்கள் முறைத்தார்கள்.

இருவருக்கும் நடுவே வணிகர்கள் நின்று சமாதானம் செய்தார்கள். மயிலை என்கிற அந்த ஊர் வணிகர்கள் அதிகம் உள்ள ஊராக, பித்தளை பாத்திரங்கள் அதிகம் செய்யும் ஊராக, தானியங்கள் வாங்கி விற்கின்ற ஊராக, அவைகளை நாலாபுறமும் கொண்டு போகும் ஊராக இருந்தது. அவர்களுக்கு அடுத்தபடி திருமல்லை இருந்ததால் மருந்தீஸ்வரர் கோவில் தாண்டி, கோவேறுக் கழுதைகளில், பெண் குதிரைகளில் சிறிய வேகமான மாட்டுவண்டிகளில் வெற்றிலைகளையும், எடுத்துக் கொண்டு போய் கடற்மல்லையில் விற்றார்கள்.

ஒன்றுக்கு இரண்டாக அங்கு லாபம் சம்பாதித்தார்கள். ஒரு மாடைக்கு ஒரு கவுளி அங்கு கொண்டு போய் விற்றால் இரண்டு மாடைக்கு ஒரு கவுளி போக மூன்று மாடை, வர மூன்று மாடை ஆறுமாடை போனால் ஒரு நடைக்கு அறுபது மாடை, எழுபது மாடை சம்பாதித்து விடலாம். ஒரு நடையில் அறுபது மாடை என்றால். ஒரு மாதத்திற்கு இருபது நடை எளிதாக போய் வரலாம். சில சமயம் முப்பது நடையும் மூன்று மாட்டு வண்டிகள் வைத்து போய் வரலாம். அப்படி போனால் மிகப் பெரிய லாபம் கிடைக்கும். ஏற்றுமதியாகும் பாத்திரங்கள் போவ

துண்டு. அவை பெரிய மாட்டு வண்டிகளில் போகும். பெரிய பித்தளை குடங்களில் நாவாய்களில் தண்ணீர் பிடித்துவைத்துக் கொள்வார்கள். அவைகளை அங்கு கொண்டு போய் விற்று விட்டு வருவார்கள். கரண்டிகள், தட்டுகள், சிறிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள் என்று பலவகையான பித்தளை பாத்தி ரங்கள் அங்கு ஓடும். ஒன்றுக்கு மூன்று பங்கு லாபம் கிடைக் கும். நாவாய் வருவது லாபம் கிடைக்கும். நாவாய் வருவது தாமதித்தால் வெற்றிலை வியாபாரம் சுணங்குமே தவிர பாத்திர வியாபாரம் ஒன்றும் ஆகாது. அது பாட்டுக்கு மூலையில் இருக் கும். நாவாய்கள் வந்தால் உடனடியாக தீர்ந்து போகும்.

ஸ்ரீ விஜயத்திலிருந்து நாவாய்கள் வரும். சோழ நாவாய்கள் ஸ்ரீ விஜயம் போகும். இது ஒரு அற்புதமான விஷயம்.

காசு வளம் இந்த நாவாய் வியாபாரத்தில் நன்கு இருந்தது. திருமல்லையிலேயே ஊர் அமைத்து அங்கேயே இருக்கலாம் என்று சில வணிகர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் மயிலை யின் செழிப்பு எங்கும் இல்லை.

தோட்டங்கள் அமைக்க முடியுமே தவிர காற்றினுடைய வேகத்திற்கு நன்செய் விவசாயம் அமைக்க முடியாது.

எதனாலேயோ மயிலை மேடாக இருந்தது. அதனால் காற்றின் தாக்கம் மேட்டில் அடித்து மேலே உயர்ந்தது. மிகப் பெரிய புல்வெளி இருந்தது. புல்வெளியில் அதிகம் பசுக்கள் மேய்ந்தன. கெட்டி தயிரும், நெய்யும் கூட விற்பதற்கு அனுப்பப் பட்டன. ஆனால் நெய் வேண்டும் என்று கேட்டால்தான் அனுப்புவார்கள். ஒரே நாளில் நெய் அங்கு போய் சேர்ந்து விடும். மிக உயரமான ஜாடிகளில் நாவாய்களில் வைப்பதற்கு தனித்த முறையில் அவை வைக்கோல் பிரியால் சுற்றப்பட்டு மிகக் கவனமாக உள்ளுக்குள் கொண்டு போகப்படும்.

எந்த இடத்தில் விளைபொருள்கள் இருக்கின்றனவோ அந்த இடத்தில் வியாபாரி இருப்பதுதான் நல்லது. மற்றபடிக்கு விற்கின்றன இடத்திற்கு வியாபாரி நடந்து போய் விற்பனை செய்துவிட்டு மறுபடியும் எங்கு விளைகிறதோ அங்கு வந்து விழுவதுதான் சிறப்பு என்று தீர்மானித்து மயிலையையே தங்களுடைய இடமாக மயிலாப்பூர் வியாபாரிகள் கொண்டு வந்தார்கள்.

மாயிலட்டிகள் என்பது அவர்களுக்குப் பெயர். மாயிலட்டி என்றால் வியாபாரி. எண்ணைப் மாயிலட்டி, பித்தளை மாயிலட்டி, நெல் மாயிலட்டி என்று தனித்தனியாக இருந்தார்கள். இந்த மாயிலட்டிகளால் வேளாளர்கள் சுகமாக இருந்தார்கள். விவசாயம் செய்த பொருளுக்கு உடனடியாக அவர்களுக்கு காசு கொடுக்கப் பட்டது. அல்லது துணி கொடுக்கப்பட்டது.

வந்து இறங்கிய மரச்சாமான்கள், ஆயுதங்கள் விற்பனைக்கு வந்தன. பீங்கான் பானைகளை வாங்கி வைத்தார்கள். அங்கிருந்து புளித்த திராட்சை ரசம் கூட விற்பனைக்கு வந்தது. ரசம் குடிக்க பலர் வீட்டில் பீங்கான் கிண்ணங்கள் இருந்தன. உடைந்த பீங்கான் துண்டுகளை, களிமண் தரையில் அழுத்தி பெண்கள் கோலமாக போட்டார்கள். அதை பலபேர் வியந்து பார்த்தார்கள். அலங்காரமான விளக்குகள் வந்தன. அந்த வெண்கல விளக் குகள் பலபேர் வீடுகளில் மாட்டி வைக்கப்பட்டன. முகம் பார்க்கும் கண்ணாடி, விளக்கு எரிகின்ற கண்ணாடிக் கூண்டு போன்றவைகள் கவனமாக வந்தன. அவைகளும் மிருதுவாக கையாளப்பட்டு மயிலையில் விற்கப்பட்டன.

தொலைதூரத்திலிருந்து வந்து மயிலையில் இந்த பொருள் களை வாங்கிப் போகின்ற வணிகர்களும் உண்டு. மயிலை ஒரு முக்கியமான இடமாக இருந்தது. அதை மாயிலட்டில் மிகக் கவனமாக பார்த்து வந்தார்கள். வேளாளர்கள் கடுமையாக உழைத்து வந்தார்கள். அந்தணர்களுக்கு இவர்கள் இரண்டு பேரையும் தாண்டி அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. கோவிலை மையமாக வைத்து 'கோவிலுக்கு கொடு கோவிலுக்கு கொடு' என்று சொல்லியும் கோவிலில் 'இந்த பூஜை, அந்த பூஜை' என்று சொல்லியும் அவர்கள் வணிகர்களை தொந்தரவு செய்தார்கள்.

வைதீகமான அந்தணர்களுக்கு வரவேற்பு இல்லை. வெறுமே கணக்கு எழுதுகிற அந்தணர்களுக்குத்தான் மதிப்பு. தங்களுக்கு உண்டான பிரிவை சொன்னார்கள். ஹோமம், யாகம் விடாது செய்வதால்தான் மயிலை சுபிட்சமாக இருக்கிறது என்று உரத்த குரலில் அறிவித்தார்கள். மக்களும் நம்பினார்கள். அந்த குழுவில் தெளிவான, நல்ல, அமைதியான அந்தணர்கள் இருந் தார்கள்.

இது வேளாளர்கள் தேசம். இங்கு ஆட்சி செய்வது வணிகர் கள். அண்டி பிழைக்கத்தான் நாம் வந்திருக்கிறோம். ஒன்று

அமைதியாக இருந்து அண்டிப் பிழைக்க வேண்டும். இல்லை எல்லாமும் எனக்குத் தெரியும் என்று திடமாக இறங்க வேண்டும். அவர்களை வேலை செய்ய விட்டு, ஆட்சி மட்டும் நான் செய்கிறேன் என்றால் அது எப்படி சரியாக இருக்கும். எதற்கு ஆட்சிப் பொறுப்பு நமக்கு. நாம் பாட்டுக்கு வேதம் ஓதிக்கொண்டு போகலாம். அவர்கள் கொடுப்பதை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழலாம். தேவை இல்லாமல் அவர்களுக்கு நான்தான் தலைமை ஏற்பேன் என்று ஏன் எகிறுகிறீர்கள். தலைமை ஏற்கின்ற அளவுக்கு உங்களுக்கு தகுதி இருக்கிறதா. நாளை பெரும்படையோடு, மேலைச் சாளுக்கியமோ, கீழைச் சாளுக்கியமோ வந்தால் தடுத்து நிறுத்துகின்ற யோக்யதை உண்டா. போய் வெண்கலப் பானையோடு எதிரே நின்று 'வருக வருக' என்று கூப்பிடுவீர்கள். அது அவமானம் இல்லையா. நம்மை இந்த ஊர் இழிவாக கவனிக்காதா. அப்படி செய்ய வேண்டாம்'' என்று சொல்ல,

அதில் பாதிபேர் சரி என்று தலை அசைத்தார்கள்.

''இல்லை. நமக்கு உண்டான மூளை, அவர்களுக்கு இல்லை'' என்று எகிறியவர்களும் பாதி பேர் இருந்தார்கள்.

ஆடி மாதம் இரண்டாம் வெள்ளிக்கிழமை. அவள் அவனை பார்ப்பதற்காக வந்திருந்தாள். பகல் பொழுது மட்டுமே வந்து பார்க்க வேண்டும் என்று கட்டளை இருந்ததால், விடியற்காலையில் வந்து அவனை எழுப்பி, அவனை குளிப்பாட்டி, சோறு போட்டு அவனோடு பேசி கொஞ்சிவிட்டு போனாள்.

அடுத்த வெள்ளிக்கிழமை வந்து வீட்டை சுத்தம் செய்து கொடுத்தாள். வீட்டின் கொல்லைப்புறத்தில் பத்து, பதினைந்து அரச மரங்கள் ஒன்றாக இருக்கின்ற ஒரு திடல் இருந்தது. அதற்கு நடுவே கற்பலகைகள் போட்டிருந்தார்கள். எப்போதேனும் பிற்பகலில் அயர்ந்து தூங்குவதற்கு பெரியவர்கள் அதை பயன்படுத்திக் கொண்டார்கள். எப்போதும் ஒரு சலசலப்பு இருந்து கொண்டே இருந்த அந்த இடத்திற்கு வர குழந்தைகள் பயப்படுவார்கள். ஆகவே அந்த இடத்திற்கு இவர்கள் இரண்டு பேரும் போய் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்கில் பேசுவார்கள்.

அந்த அரச மரத்துக்கு அருகே பெரிய கேணி ஒன்று இருந்தது. வெகுநாளைக்கு முன்பு தோண்டப்பட்ட கேணி. விவசாயம் செய்வதற்கு என்று உண்டான கேணி. ஏற்றம் இறைப்

பதற்கான வசதிகள் அதில் இருந்தன. அந்த கேணியிலிருந்து சற்றுத் தள்ளி இன்னும் இரண்டு கேணிகள் இருந்தன.

''என்ன இந்த ஆடி மாதம். இரவு நீ இல்லை என்றதும் எனக்கு மிகுந்த வேதனையாகி விட்டது. செத்துப் போய் விட லாமா என்று நினைத்தேன்'' என்று சொல்ல, அவள் வாயைப் பொத்தினாள்.

''தயவு செய்து அப்படியெல்லாம் பேசாதீர்கள். என்ன இது விளையாட்டு. இந்த ஆடிமாதம் முடிந்தால் ஓடிவரப் போகி றேன்'' என்று சொன்னாள்.

''இல்லை. எனக்கு மனம் ஒடிந்து விட்டது. நீ இரவு நேரம் வர வேண்டும். வராவிட்டால் நான் இறந்துவிடுவேன்'' என்றான்.

''எப்படி வருவது. வீட்டில் உள்ளவர்கள் அசிங்கமாக நினைக்க மாட்டார்களா. அது தவறல்லவா. எனக்கு மரியாதை குறைவல்லவா.''

''நீ வரப் போகிறாயா இல்லையா.''

''தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வரவே முடியாது'' என்று சொல்ல,

''சரி. எனக்கு நீ வேண்டாம்'' என்று சொல்லி வேட்டியை உருவி கழற்றி போட்டுவிட்டு சட்டையை வீசி எறிந்துவிட்டு, சடேல் என்று கோமணத்தோடு அந்த கிணற்றில் குதித்தான்.

''எனக்கு நீச்சல் தெரியாது.'' அவன் கீழிருந்தபடி சொன் னான். அவள் பயந்து போய் அணிந்த ஆடையுடன், நகை களுடன் நீரில் குதித்தாள். அவளை அள்ளிக் கொண்டாள். அவனும் அவளை தழுவிக் கொண்டான். மெல்ல இரண்டு பேரும் அந்த கிணற்றை சுற்றி வந்து ஒரு வாசலில் நின்றார்கள். அந்த பிறை ஒரு ஆள் உயரம் இருந்தது. கழுத்தளவு ஜலம் இருந்தது.

''என்னோடு வா'' என்று சொல்லி அவன் அவள் கையை பிடித்துக் கொண்டே போக, அவள் அவன் பின்னே போனாள். மூச்சு விட்டுக் கொண்டே அவர்கள் இருவரும் அந்த கிணற்றை தாண்டி அடுத்த கிணற்றுக்கு போனார்கள். அடுத்த கிணற்றில் இதே மாதிரி வேறு ஒரு பிறை காட்டினான். அதற்குள்ளும் நுழைந் தார்கள். அதில் இடுப்பளவு ஆழம்தான் இருந்தது. அதைத் தாண்டி மூன்றாம் கிணறுக்கு போய் அங்கிருந்து படிக்கட்டில்

மேலேறினார்கள். மேலேறி வந்து ஈரம் சொட்டச் சொட்ட ஆடிக் கொண்டே போய் உடைகளை எடுத்து உடுத்திக் கொண்டார்கள். சிரித்தாள், கோபித்துக் கொண்டாள். சந்தோஷமானாள்.

''நன்றாக இருக்கிறது இந்த கிணறு'' என்று ஆவலோடு எட்டிப் பார்த்தாள்.

அவர்கள் இருவரும் அப்படி ஜலக்கிரீடை செய்வதை அந்த வீடு கவனித்துக் கொண்டது. மறுநாள் அவளிடம்,

''நீ இங்கு அடிக்கடி வர வேண்டாம். ஆடி மாதம் முடிந்து வந்தால் போதும்'' என்று எச்சரித்தது.

அவர்கள் இரண்டு பேரும் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வலம் வந்தார்கள். ஆனால் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவருக்கு உண்டான அன்பு, அக்கறை குறையவே இல்லை.

அவர்களுடைய வீட்டைச் சுற்றி வெற்றிலை தோட்டம் இருந்தது. இன்னொரு பக்கம் பெரிய வயல்வெளி இருந்தது. அரசங்காடு பக்கம் உட்கார்ந்து கவிதை எழுதி, வெற்றிலை களுக்கு நடுவே அதை அனுப்பி வைத்தான். அனுப்பும்போது அதிலும் ஓலை சொருகி வைத்தான். ஒருவர் மீது ஒருவர் அளவு கடந்த காதலோடு இருந்தார்கள். ஆடி மாதம் முடிந்து ஆவணி துவங்குகின்ற நேரம்தான் இராஜேந்திர சோழன் படை எடுத்து இந்தப் பக்கம் வரப்போகிறார் என்ற செய்தி அவனுக்கு கிடைத்தது.

ஆவணி இரண்டாம் தேதி அவள் இந்த வீட்டிற்கு வருவ தற்கு ஏற்பாடு செய்திருந்தபொழுது, சோழ தேசத்திலிருந்து ஒரே ஒரு வீரன் வந்து நின்றான். முத்திரை மோதிரம் காண்பித்தான்.

''உங்களை உடனடியாக தஞ்சைக்கு வரச்சொல்லி ஸ்ரீ இராஜேந்திரர் உத்தரவிட்டிருக்கிறார்.''

''என்னை என்றால் என் பெயர் எப்படி அவருக்குத் தெரி யும். நான் சாதாரண ஆள்தானே.''

''உங்களை என்றால் உங்கள் பெயரை அல்ல. வேளாளர் தலைவர் யார் என்று கேட்டார். நாங்கள் விசாரித்தோம். உங்களைத் தான் சொன்னார்கள். நீங்கள் தான் வரவேண்டும்.''

''எதற்காக வர வேண்டும்?''

''உணவு விஷயம் பேசுவதற்காக அவர் இங்கு வருவதாக இருக்கிறார். என்ன உணவு தயார் செய்ய முடியும். எவ்வளவு அனுப்ப முடியும். தானியங்களை எவ்வளவு தொலைவு அனுப்புவதற்கு வசதி இருக்கிறது என்பதெல்லாம் கேட்பார் என்று நினைக்கிறேன். அந்த விஷயங்களை உங்கள் மக்களோடு பேசிக் கொண்டு நீங்கள் வருவதற்கு தயாராக இருங்கள். நாளை நாம் கிளம்புகிறோம்'' என்று சொன்னான்.

அவன் வீடு வந்து சேர்ந்ததும் அவர்கள் இருவரும் எல்லோரையும் நமஸ்கரித்தார்கள்.

''நாளை சோழதேசம் போக வேண்டும்'' என்றதும் அவள் இருண்டு போனாள். அவனுக்கும் துக்கமாகத்தான் இருந்தது. அந்த இரவு அவன் பயணத்திற்கு வேண்டிய விஷயங்களை பேசுவதற்காக மற்ற வேளாளர்களை பார்ப்பதற்குப் போனான். விடியற்காலையில் குதிரை ஏறி சோழதேசம் நோக்கிப் போனான். போகும்பொழுது ''சீக்கிரம் வந்துவிடுவேன்'' என்று சொல்லிவிட்டு போனான். எவ்வளவு சீக்கிரம் என்பது இரண்டு பேருக்குமே தெரியவில்லை.

''சீராளன் என்பது பெயரா. மயிலையில் எந்த இடம்?''

அரண்மனை வாசலில் மடக்கி ஆயிரம் கேள்விகள் கேட்டார்கள். நிற்க வைத்தே பேசினார்கள். எல்லா கேள்விகள் கேட்டு திருப்தியான பிறகு உட்காரச் சொல்லி,

''மது வேண்டுமா'', என்று கேட்டார்கள்.

அவன் மறுத்துவிடவே, பழரசமும், மோரும் கொடுத்தார்கள்.

''சிறிது நேரம் காத்திரும். சுடச்சுட உணவு வந்துவிடும்'' என்று சொன்னார்கள். உணவு வந்தது. உணவு வந்த அரை நாழிகையில் அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது.

இராஜேந்திர சோழரை நேரிடையாக அவன் சந்திக்க வேண்டும் என்று இருந்தது. அவன் மல்லாக்க படுத்து ஓய்வெடுத்தான். சிறிது நேரத்தில் தூங்கிப் போனான்.

மிகக் கவனமாக அவனது உடைகள் சோதனையிடப்பட்டன. சோழ தேசத்து முத்திரையோடு கூடிய சேனாதிபதிகளின் ஓலைகள் அவனிடம் இருப்பதை பார்த்து அவர்கள் சந்தோஷமானார்கள்.

''சரியான ஆள்தான் வந்திருக்கிறான். இந்த ஓலை இவனிடம் இருக்கிறது என்றால், இவன்தானே அங்கு தலைவன். ஆனால் சிறு வயதாக இருக்கிறானே என்று சந்தேகப்பட்டேன். ஆனால் பையன் கெட்டிக்காரனாக இருக்கிறான்'' என்று ஒரு உபதளபதி சொல்ல,

அவனை பிற்பகல் நேரத்தில் எழுப்பி, முகம் கழுவக் கொடுத்து, சூடான கஞ்சி கொடுத்து அவனை அரண்மனைக்கு அழைத்துப் போனார்கள். இராஜேந்திர சோழரின் மாளிகையில் படியேற்றினார்கள். வாசலில் நிற்க வைத்தார்கள்.

இராஜேந்திர சோழர் அவனை உள்ளே அழைப்பதாக செய்தி வந்தது. உள்ளே சபை கூடி இருந்தது. அவன் போய் நீண்ட நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான். கைகூப்பினான். கண்களில் நீர் கொப்பளித்தது. அருகே நின்று மறுபடியும் அவர் கால்களில் நெற்றிபட வணங்கி,

''உங்களை என் வாழ்க்கையில் முதன் முதலில் சந்திக்கிறேன். நீங்கள் நீடூழி வாழ வேண்டும் என்று மயிலை கபாலீஸ்வரரை கற்பகத்தாயை வேண்டுகின்றேன்.

அவர்கள் இருவரும் சக்தி வாய்ந்தவர்கள். உங்களுக்கு எல்லா வெற்றிகளையும் கொடுப்பார்கள். உங்களுடைய அரசாட்சியில் சோழ தேசமும், தொண்டை தேசமும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. தொண்டை தேசத்து அந்தணர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எங்கள் ஊருக்கு வரும்பொழுது உங்களைப் பற்றி கதை கதையாக சொல்கிறார்கள்.

சோழ தேசத்தினுடைய பெருமை எல்லாம் அந்த அந்தணர்கள் சொல்வதால் எங்களுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருக்கிறது'' என்று விவரித்தான்.

அவன் பேசி முடிக்கும் வரை சபை அமைதியாக இருந்தது. அவன் கோர்வையாகவும், செம்மையாகவும் பேசுவதை வியப்போடு கவனித்தது.

''சரி, சோழ தேசம் பற்றி நிறைய தெரிந்து கொண்டிருக்கிறாய் இல்லையா.''

''ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேன்.''

''இந்த சபையில் இருப்பவர்கள் யார் யார் என்று உங்களால் சொல்ல முடியுமா.'' ஒரு சிரிப்போடு ஸ்ரீ இராஜேந்திரர் கேட்டார். அந்த சபையும் சிரித்தது.

''முயற்சி செய்கிறேன். யார் யார் எப்படி இருப்பார்கள் என்று எங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதோ பெரிய மீசையோடு இருப்பவர் உத்தம சோழ மிலாடுடையார். இதோ வயதாகி தளர்ந்து, கண்ணில் சுருக்கம் விழுந்தும் அதை இழுத்துக் கட்டிக் கொண்டிருப்பவர் பரமன் மழபாடி. அதோ பருமனாக நெற்றியில் இருப்பவை பார்த்த உடனேயே கிருஷ்ணன்ராமன் என்று தெரிகிறது. அவருக்கு என் வணக்கங்கள்.'' ஒவ்வொருவரையும் விழுந்து வணங்கினான்.

''தீர்காயுஷ்மான் பவஹ'', ''தீர்காயுஷ்மான்பவஹ'' ''தீர்காயுஷ்மான்பவஹ'', என்று எல்லோரும் வாழ்த்தினார்கள்.

''இவர் சுந்தர புருஷனாக இருக்கிறார். இவர் வந்தியத் தேவராக இருக்க வேண்டும். இது யார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இவர் உட்கார்ந்திருக்கும் தோரணமும், இவர் கையில் இருக்கும் முத்திரை மோதிரமும் இவர் பெரிய சேனாதிபதி என்று தெரிகிறது. அவர் அருண்மொழி என்றால் இவர் அரையன் இராஜராஜனாக இருக்க வேண்டும்.

அருண்மொழி என்பவர் கிருஷ்ணன் ராமருடைய சாயலில் இருக்கிறார். அவருடைய மகனாக இருக்க வேண்டும். ஆனால் அரையன் இராஜராஜன் இந்த ஊர்பகுதி மக்கள் முகமாக இல்லை. வேறு முகமாக இருக்கிறது. எனவே அரையன் இராஜராஜன் அவர்களுக்கு என் நமஸ்காரங்கள்.'' மறுபடியும் விழுந்து வணங்கினான்.

அரையன் இராஜராஜன் அருகே அழைத்து அவன் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

''இவர் அருண்மொழி, எனக்கு நன்றாகத் தெரியும். சரிதானே'' என்று கேட்டுக் கொண்டான்.

''சரி'' என்று அருண்மொழி தலை அசைத்தான். அந்த இளைஞனுடைய துடிப்பை, ஆவலை, எல்லோரையும் விழுங்குவது போல் பார்ப்பதை அந்த சபை சுவாரஸ்யமாக கவனித்தது.

''அருண்மொழி எங்களுக்கெல்லாம் காதலர்.''

''என்ன?''

''அருண்மொழி எங்களுக்கெல்லாம் காதலர். நான் சிறு வயதில் இடுப்பில் வேட்டி கட்டிக் கொண்டு, மேலே மூன்றாம் துண்டு அணிந்து கொண்டு அதற்கு மேல் பூணூல் போட்டுக் கொண்டு, மூன்றாம் துண்டில் உடைவாள் சொருகிக் கொண்டு, தலைப்பாகை கட்டிக் கொண்டு நான் அருண்மொழி என்று கைகட்டிக் கொண்டிருப்பேன். காதுகளில் தொங்கட்டான் போட்டுக் கொள்வேன். நெற்றியில் ஒரே ஒரு ஸ்ரீ சூர்ணம் இட்டுக் கொள்வேன். நாங்கள் நிறைய பேர் அருண்மொழி வேடம்தான் போட்டுக் கொள்வோம்.

அருண்மொழி மிகப்பெரிய வீரர் என்றும், அதே சமயத்தில் அந்தணர் என்றும் எங்களுக்குப் பெயர். அவர் சாகசங்கள் பலதும் நாங்கள் அந்தணர்கள் மூலமாக கேள்விப்பட்டிருக்கிறோம்'' என்று சொல்ல சபை ஆரவாரித்து சிரித்தது. கை தட்டியது.

அருண்மொழி வெட்கப்பட்டான்.

''அருண்மொழியாருக்கு என்னுடைய நமஸ்காரங்கள்.'' அவன் தலையை அருண்மொழி காலில் வைத்து தேய்த்தான். முகத்தை தேய்த்தான். பாதங்களில் முத்தமிட்டான். அவன் கால்களை கட்டிக் கொண்டான்.

''என்னை உங்கள் சீடனாக ஏற்பீர்களா?'' என்று கட்டிய காலை இன்னும் நெஞ்சில் இறுக்கிக் கொண்டு அவனைக் கேட்டான்.

தர்மசங்கடத்தோடு அருண்மொழி ஸ்ரீ இராஜேந்திரரை பார்க்க, இராஜேந்திரர் ''சரி, சரி'' என்று சைகையில் சொல்ல,

''நீ சீடன் அல்ல'' என்று சொன்னான். அவன் திகைத்துப் போக,

''நீ என் நண்பன்'' என்று கை நீட்ட, அவர்கள் இருவரும் இறுக்க கை பற்றிக் கொண்டார்கள்.

''என்ன பாக்கியம். என்னை விட முப்பது வயது பெரியவ ரான நீங்கள் என்னை நண்பன் என்று கூப்பிடுகிறீர்களே, எவ்வளவு பெரிய பாக்கியம். நான் போன ஜென்மத்தில் ஏதோ நல்லது செய்திருக்க வேண்டும். உங்களுக்கு நண்பனாக மாறிவிட்டேன்'' என்று சொல்லி முகம் பொத்திக் கொண்டு அழத் துவங்கினான்.

சபை அவனுடைய உணர்வு கூத்துகளை கவனமாக கேட்டது. பிறகு கேள்வி கேட்கத் துவங்கியது.

தானிய சேமிப்பு பற்றிய எல்லா கேள்விகளுக்கும் அவன் பதில் சொன்னான்.

நெல்மணிகளை அரிசியாக மாற்றி விட்டதும், அவைகள் கூடையில் இருப்பதும், அவைகளை மிக ஜாக்கிரதையாக கோவில் மண்டபங்களில் சேர்த்து வைத்திருப்பதையும், எலிகள் வராமல் இருக்க பூனைகள் வளர்ப்பதையும், பூனைகளுக்கு பால் கொடுப்பதையும் தடுப்பு போட்டு கூடைகளை தடுத்திருப் பதையும் அவன் சொன்னான்.

''அந்தணர்களோடு பிணக்காமே. என்ன காரணம்.'' கிருஷ் ணன் ராமன் கேட்டார்.

''பெரிய பிணக்கு ஒன்றும் இல்லை ஐயா. விவாதங்கள் நடைபெற்றன. அவ்வளவுதான்.''

''பெரிய பிணக்கு என்று கேள்விப்பட்டேனே. ஏன் மறைக் கிறீர்கள்.''

''எதையும் மறைக்கவில்லை ஐயா. அவர்கள் ஒருவிதமாக கேட்கிறார்கள். நாங்கள் ஒருவிதமாகச் சொல்கிறோம்.''

''என்ன கேட்கிறார்கள்?''

''அறுபதுக்கு நாற்பது.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.''

''ஐம்பதுக்கு ஐம்பது.''

''அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள்?''

''ஒப்புக்கொள்ள முடியாது. அறுபதுக்கு நாற்பது கொடுத்தே ஆக வேண்டும் என்று சொல்கிறார்கள்.''

''நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்?''

''வேலை பளு அதிகம். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, இரவு முடியும் வரை செய்தால்தான் முடியும். படுத்து தூங்கு வதற்குத்தான் வீட்டிலுள்ள பெண்களுக்கும், ஆண்களுக்கும் நேரம் இருக்கிறதே தவிர வேறு எந்த வேலையும் செய்ய முடிய வில்லை. வணிகர்கள் நாலா பக்கமும் பயணப்பட்டுக் கொண் டிருக்கிறார்கள்.

'நீங்கள் எந்த வேலையிலும் ஈடுபட மாட்டேன் என்கிறீர்களே' என்று கேட்டதற்கு,

'எங்களுடைய வேலை எல்லா வேலையிலும் ஈடுபடுவதல்ல.' மந்திரங்கள் ஓதுவதுதான் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு கூலி அதிகம் வேண்டும் என்பதைத்தான் ஐம்பதுக்கு ஐம்பது என்று சொன்னேன். ஆனால் அவர்கள் அறுபதுக்கு நாற்பது என்பதிலேயே உறுதியாக இருக்கிறார்கள்.''

''கடைசியில் பேச்சு எப்படி முடிந்தது.''

''பத்துக்கு தொண்ணூறு கொடுத்தாலும், இருபதுக்கு எண்பது கொடுத்தாலும் அதுபற்றி அக்கறை எதுவும் இல்லை. இந்தப் பக்கம் சோழப்படை வரப்போகிறது. எனவே எங்கள் வேலையில் நாங்கள் ஈடுபடுகிறோம் என்று சொல்லி, அந்த விஷயத்தை அப்படியே விட்டுவிட்டு நாங்கள் அறுவடைக்கு இறங்கி, போரடித்து, கதிர் பிரித்து, தூது தட்டி, நெல்லை வேக வைத்து, உரலில் இடித்து, உமி நீக்கி அரிசியாக்கி வைத்திருக்கிறோம்.

உங்களுக்கு சரியான தானியம், மிக உயர்ந்த தானியம் தயாராக இருக்கிறது. நீங்கள் எப்பொழுது வருகிறீர்கள். எத்தனை பேர் வருகிறீர்கள் என்று முன்கூட்டியே தகவல் தெரிவித்தால் அதற்கேற்றபடி எல்லாம் தயாராக இருக்கும்.''

''காய்கறிகள் இருக்கின்றனவா.'' பரமன் மழபாடி கேட்டார்.

''ஏகத்துக்கும் காய்கறிகள் இருக்கின்றன. சுற்றி உள்ள எல்லா ஊர்களிலும் காய்கறிகள் போடச் சொல்லி இருக்கிறேன். அவர்கள் காய்கறிகளோடு தயாராக இருக்கிறார்கள்.

பீர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய், கொத்தவரங்காய் இவை தயாராக இருக்கின்றன.''

''அதைத் தவிர வேறு என்ன தயார் செய்திருக்கிறீர்கள்.''

''பூண்டு வகைகள், மருந்துக்கென்று உபயோகப்படுத்துகின்ற சில மூலிகைகள், குப்பைமேனி கீரைகள், என்று தனியாக வளர்க்கிறோம். கடுக்காய், திப்பிலி போன்றவைகளை இடித்து, பொடித்து, சூரணமாக்கி சிறிய குளிகைகளாக உருட்டிப் போட்டிருக்கிறார்கள். வெய்யிலில் காய்ந்திருக்கிறது.''

''அவை எதற்கு உபயோகம்..?''

''வயிறு சரியாகும். போகிற வழியில் எதையாவது சாப்பிட்டு வயிறு சரியில்லை எனில் அதைப் போட்டால் செரிமானம் சீராக இருக்கும். உடம்புக்கு உற்சாகத்தை கொடுக்கும். சூரணம் என்று பெயர்.

''ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். எவ்வளவு தயாராக இருக்கும்.''

''கிட்டத்தட்ட மூன்று இலட்சம் பேருக்கு சூரணம் பெரிய பெரிய ஜாடிகளில் வைத்திருக்கிறார்கள்.''

''ஜாடிகள் ஏது?''

''அவை இலங்கையில் இருந்து இறங்கியவை. அவைகளை விலை கொடுத்து வைத்தியர்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள்.'''

''கீழைச்சாளுக்கியத்திலிருந்து ஏதேனும் தொந்தரவு வருகிறதா.''

''இல்லை எந்த தொந்தரவும் வருவதில்லை.''

''தொண்டை நாட்டை தாக்குவதுதானே எளிது. திருவொற்றியூரை எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குவார்களே ஏன் இல்லை.''

''ஒரு காரணம் இருக்கிறது. திருவொற்றியூரை தாக்கிவிடலாம். மயிலையை தாக்க முடியாது. திருவொற்றியூருக்கும், மயிலைக்கும் நடுவே கூவம் ஆறுனுடைய கடை மடை இருக்கிறது. அந்த கடை மடையில் கடற்கரையின் மணல் உள்ளே வந்து நின்று சேறாக தங்கி இருக்கிறது. அந்த சேற்றுக்கு நடுவே கல்வேலி மரங்கள் தானாக வளர்ந்திருக்கின்றன. அடர்த்தியான காடாக இருக்கிறது. கருவேலி மரங்களை கைபிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தால் ஆள் ஆழச் சேறு உங்களை சிதைத்துவிடும். அதை ஒருகாலும், எந்தவிதமாகவும் மனிதர்கள் தாண்டிவர முடியாது.''

''என்ன தொந்தரவு ஓநாய்களால்.''

''ஆடுகளை அடித்து கொன்றுவிடும். அசந்தால் மனிதர்களையும் கொன்றுவிடும். அவை நூறு, இருநூறு என்று கூட்டமாக வரும். அவற்றை தீப்பந்தங்கள் எரித்து நாங்கள் விரட்டுவதும் உண்டு. அந்த ஒரு தொந்தரவுதான் மயிலையை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் அந்த மிரட்டலுக்கு அஞ்சாமல் அது இருக்கட்டும் என்று விட்டு விடுகிறோம். வடக்கே முழுவதும் அந்த சேறு எங்களை பாதுகாக்கிறது. ஓநாய்கள் காவலாக இருக்கின்றன. அந்த ஓநாய்களைத் தாண்டி, கருவேல முட்களைத் தாண்டி, சேறு தாண்டி எந்த படையும் உள்ளே வர முடியாது. மேற்கே மிகச் சிறந்த ஒரு பாடி காவல் இருக்கிறது. அந்த பாடி என்ற நகரத்தில் உள்ள வீரர்களை தாண்டி, மயிலை நோக்கி எவரும் வர முடியாது.

தெற்கே நீங்கள் இருக்கிறீர்கள். எங்களுக்கு எந்த கவலையும் இல்லை. கிழக்கே கடல் இருக்கிறது. கடல் அன்னை எங்களை காப்பாற்றுகிறாள். மீனவர்கள் வலுவுள்ளவர்களாக இருக்கிறார்கள். நல்ல மீன் வியாபாரம் நடக்கிறது. மீனவர்கள் வருடத்திற்கு ஒரு காசு போட்டு கூட்டாக சதய நட்சத்திரம் அன்று மாமன்னர் இராஜராஜர் பிறந்த நாளை இன்றளவும் கொண்டாடி வருகிறார்கள்.

திருமல்லையில் ஆரம்பித்த இந்த பழக்கம் இப்பொழுது திருமயிலை வரை நிற்கிறது. அவருடைய நட்சத்திரத்திற்கு மட்டுமே பூஜை செய்வார்கள். இப்பொழுது ஒவ்வொரு சதயத்திற்குமே அவர்கள் பொங்கலிடுகிறார்கள்.''

சபை அவனை விவரமாக கேட்டுக் கொண்டிருந்தது.

''போர் செய்வீரா.'' பரமன் மழபாடி கேட்டார்.

''இல்லை. நான் இதுவரை போர் செய்ததில்லை. எவரையும் வெட்டி கொன்றதில்லை.''

''இடுப்பில் இவ்வளவு பெரிய கத்தி வைத்திருக்கிறீரே.''

''ஒரு தற்காப்புக்காகத்தான். என்னை யாரும் வெட்டி விடக் கூடாது என்பதற்காகத்தான் கத்தி வைத்திருக்கிறேனே தவிர எனக்கு போரில் பழக்கம் இல்லை. பயிற்சி இல்லை. நான் உழவன்.''

மன்னர் இராஜேந்திரர் மிகச் சந்தோஷமாக அவனைப் பார்த்தார்.

''இன்னும் சில தினங்களில் தொண்டை நாட்டை நோக்கி போவோம். அங்கே சில தினங்கள் இருந்து வேங்கியைத் தாக்கப் போகிறோம். எனவே எப்பொழுது வரப் போகிறோம் என்பதை

சொல்லி அனுப்புகிறேன். நீங்கள் வந்து சிரம பரிகாரம் செய்து கொண்டு, அருண்மொழியோடு தங்கி இந்த ஊரை சுற்றி பார்த்து விட்டு போங்கள்.

உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா.''

''ஆகிவிட்டது.''

''எப்போது திருமணம் ஆனது. கையில் மஞ்சள் கயிறு இருக்கிறதே'' என்று கிருஷ்ணன் ராமன் கேட்க,

''எனக்கு போன மாதம்தான் திருமணம் ஆனது.''

''அடேய். நடுவே ஆடிமாதம் அல்லவா.''

''ஆமாம், பிரித்து வைத்தார்கள். ஆயினும் நாங்கள் பேசிக் கொள்வது வழக்கம்.''

''பேசுவது மட்டும்தானா.''

''ஆமாம். வேறு எதுவும் செய்ய அனுமதிக்க மாட்டார்கள்.''

''இப்பொழுது ஆவணி வந்துவிட்டதே. இங்கு வந்துவிட் டீர்களே.''

''ஆமாம். அரசாங்க காரியம் என்று சொல்லி விரைவாக இங்கு வந்துவிட்டேன்.''

''சரி. விரைவாக தஞ்சையை சுற்றி பார்த்துவிட்டு நீங்கள் ஊர் போய் சேரலாம். தஞ்சைக்கு வருவது இதுதான் முதல் முறை அல்லவா.''

''ஆமாம். இதுதான் முதல் முறை.''

''போய் பிரகதீஸ்வரர் கோவிலை பாருங்கள். அருண்மொழி அவரை அழைத்துக் கொண்டு போ. இன்னும் என்ன தகவல் பெற முடியும் என்று பார்.''

''மயிலையின் தலைவர் யார்.''

ஒரு அந்தணர் பெயரை பரமன் மழபாடி சொன்னார்.

ஸ்ரீ இராஜேந்திரர் தலைகுனிந்து யோசித்தார்.

''மாற்ற வேண்டும்.'' ஒற்றை வார்த்தையில் சொன்னார். அது சிலருக்கு மட்டுமே கேட்டது.

* * *

அத்தியாயம் 15

''தாமரைச்செல்வி, என் இனிய தாமரைச்செல்வி உன்னை இந்த தஞ்சைக்கு அழைத்து வந்திருக்க வேண்டுமடி. இங்கு வந்து இதை காட்டியிருக்க வேண்டும்.''

அவன் இராஜராஜேஸ்வரத்தை பார்த்துவிட்டு திகைத்துப் போய் மனதுக்குள் பெரிதாய் அரற்றினான்.

''விட்டுவிட்டேனே, உன்னை விட்டுவிட்டேனே. உன்னை விட்டுவிட்டு நான் மட்டும் தனியாக இங்கு ஏதோ மிகப் பெரிய காரியம் சாதிப்பது போல் வந்திருக்கிறேனே. தஞ்சையின் நெடிய பசும் வயல்களை கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் தலை ஆடும் நெற்கதிர்களை, சலசலத்து ஓடும் காவிரியை, ஓடைகளை உனக்கு காட்டியிருக்க வேண்டும்.

கொழுத்த பசுக்களையும், துள்ளுகின்ற ஆடுகளையும், கணுக்கால் அளவு கால்வாயில் நீந்தி ஓடுகின்ற வாளை மீன் களையும் காட்டி இருக்க வேண்டும். வாளை மீன்கள் ஒரு கை நீளம் இருக்கின்றன. பிடிக்கப் போனால் சடேர் என்று எகிறுகின் றன. மறுபடியும் தண்ணீரில் துள்ளி குதித்து ஓடுகின்றன. எங்கும் ஒரு வைக்கோல் மணம். எங்கும் நெல் அவிக்கும் மணம். கரும்பு ஆலையின் மணம். நீ படித்திருக்கிறாயா.

'உழவர் ஓதை மதகோதை
உடைநீர் ஓதை தன்பதன் கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி.'

நான் இதை அனுபவித்தேன். தொலைதூரம் உழவர்கள் மாடுகள் ஓட்டிப் போகின்ற சப்தங்கள் கேட்கின்றன. ஆறு பேர் கள், பத்து பேர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏர் அழுத்தி, மாடு களை ஓட்டி வளைத்து வளைத்து உழுகிறார்கள். ஆழ உழுகிறார் கள் என்று அவர்கள் ஏறி நின்று அழுத்துவதிலேயே தெரிகிறது.

உழுகலப்பை பாதி மூழ்கி இருக்கிறது. மண் புரண்டு

ததத்தளிக்கிறது. சிறிய மதகுகளிலெல்லாம் தண்ணீர் பொங்கு கிறது. தபதபவென்று சத்தம் கேட்கிறது. குழந்தைகள் குதித்து நீராடுகிறார்கள். பெரிய கூச்சல் போடுகிறார்கள். நதிநீர் சல சலத்து ஓடுகிறது. அந்த சப்தமும் கேட்கிறது. காது கொடுத்து கேட்டால் குளிரக் குளிர கேட்டுக் கொண்டிருக்கலாம்.

பூமியின் இந்த பகுதி மிகச் செழிப்பாக, மிகச் சுத்தமாக, மிகக் கம்பீரமாக, செல்வ வளம் மிக்கதாக இருப்பதை நான் கண் குளிர, காது குளிர, உடம்பு குளிர அனுபவித்தேன்.

நீ அருகில் இருப்பின் நாம் இரண்டு பேரும் ஓயாது பேசிப் பேசி அனுபவிப்போம். ஏன் உன்னை விட்டுவிட்டேன் என்று எனக்குத் தெரியவே இல்லை.'' அவன் புலம்பினான்.

கேரளாந்தகன் வாயிலும், இராஜராஜன் வாயிலும் கடந்து போகும்போது குபீர் என்று எழுந்த விமானம் பார்த்து அவன் திகைத்துப் போனான். அவன் திகைப்பை அருண்மொழிப்பட்டன் அனுபவித்தான்.

இராஜேந்திரருக்கு பதிலாக அங்கு வந்து அந்த கோவிலின் நிலைமையை சீர் செய்ய வேண்டிய அவசியம் அவனுக்கு இருந்தது. இது இரோஜந்திரசோழன் உத்தரவாக இருந்தது. அதை மேற்கொள்ளும்போது இந்த இளைஞனையும் அழைத்துப் போகலாமே என்று சீராளனை அழைத்து வந்தான். சீராளன் திகைப்பதை ஆவலோடு பார்த்தான்.

கிராமத்து பக்கத்திலிருந்து வந்தவன் நகரத்தைப் பார்த்து வியப்பது போல, அவன் பல இடங்களில் வியந்து வியந்து இருப்பதை அவன் முகத்தில் உள்ள வெள்ளைத்தனத்தை, ஆனால் கண்களில் உள்ள குறுகுறுப்பை மிகவும் கவனமாக குறித்துக் கொண்டான்.

இவன் நல்லவன், கெட்டிக்காரன். நல்லவர்கள் கெட்டிக் காரர்களாக இருப்பது என்பது மிகவும் அரிது. இவனை இப்படியே பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண் டார். ஆட்களை அனுப்பி கோவில் நிர்வாகிகளை கூட்டினார்.

என்ன வருமானம், என்ன செலவு என்ற கணக்கை முதலில் பார்த்தார். வருமானம் அதிகமாகவே இருந்தது. கிராமத்து ஜனங்கள் கூடை கூடையாக நெல் கொண்டு வந்து குவித்துக் கொண்டுதான் இருந்தார்கள். அரச குடும்பத்தினர் கொடுத்த

நகைகளெல்லாம் மிகச் சரியாக இருந்தன. பதுமைகள் எல்லாம் புளி போட்டு தேய்க்கப்பட்டு பளபளப்பாக இருந்தன. கோவிலிலுள்ள எல்லா மூலைகளும் ஒற்றடை அடிக்கப்பட்டு, தரை மெழுகப்பட்டு, கோலமிடப்பட்டு இருந்தது.

கோவிலிலுள்ள பாகசாலை செவ்வனே நிர்வகிக்கப்பட்டு இருந்தது. அவ்வப்போது சமையலுக்கு உண்டான சாமான்கள் வாங்கப்பட்டு இருந்தன. நெற்குதிர் முக்கால்வாசி நிரம்பி இருந்தது. கேட்டபோதெல்லாம் அரசிடமிருந்தும், மக்களிடமிருந்தும் தானியங்கள் வருகின்றன என்று சமையற்காரர் சொன்னார்.

சிவனுக்கு வெறும் அன்னமும், நெய்யும் தினசரி படைப்பதாகவும் அதை மக்களுக்கு வினியோகிப்பதாகவும் விவரித்தார். கோவிலுக்குள் நிதிநிலைமை மிக சௌகரியமாக இருந்தது. பல கிராமங்கள் கோவிலுக்கென்று உள்ள நிதியிலிருந்து கடன் வாங்கி அதற்கு வட்டி செலுத்திக் கொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லா கிராமங்களும் நீர்நிலைகளை சரி செய்வதற்காகவும், வரப்புகளை உயர்த்துவதற்காகவும் கடன் வாங்கி இருந்தார்கள்.

தஞ்சையிலுள்ள விவசாயிகள் காய்கறிகள் அனுப்பினார்கள். பசுவின் பால் அபிஷேகத்திற்காகவும், தயிருக்காகவும் காசு கொடுத்து வாங்கப்பட்டது. ஆடுகள் பல குழுக்களாக நிவந்தங்கள் அளிக்கப்பட்டு அந்த ஆட்டின் பாலிலிருந்து நெய் எடுக்கப்பட்டு அந்த நெய் விளக்கு ஏற்ற பயன்பட்டது. நன்றாக கடும் கொழுப்பாக இருக்கின்ற அந்த நெய் விளக்குகள் எரிப்பதற்கு உன்னதமாக இருந்தது.

உள்ளே கருவறைக்குள்ளே ஆறேழு தீபங்கள் பெரிதாக எரிந்து கொண்டிருந்தன. நாலு பானை நெய் கைவசம் இருந்தது.

ஒரு மேடையில் உட்கார்ந்து எல்லா கணக்குகளையும் சரிபார்த்த அருண்மொழி கிளம்பலாம் என்று முயற்சித்தபோது அவனை நோக்கி தேவரடியார்கள் வந்தார்கள். எல்லோரும் எழுந்து நின்று கை, கால்கள் தட்டி அவருக்கு நடனமாக வணக்கம் சொன்னார்கள்.

''என்ன விஷயம், ஏதோ கேட்க விரும்புகிறீர்கள் போலிருக்கிறதே.''

''ஆம் ஐயன். நாங்கள் மட்டும் அல்ல. இங்குள்ள அத்தனை கோவில் பணியாளர்களும் ஒன்று கேட்க வேண்டும்.''

''என்ன சொல்லுங்கள்.''

''இந்த இடத்தை புறக்கணித்துவிட்டு மாமன்னர் இராஜேந்திர சோழர் ஜெயங்கொண்டத்தில் தனியாக அரண்மனையும், கோவிலும் கட்டுவதாகக் கேள்விப்பட்டோம். இதற்கென்று இங்கு வாழ்க்கைப்பட்ட எங்களுடைய நிலைமை என்ன ஆகும். இதை இராஜேந்திரரோ, நீங்களோ யோசித்து பார்த்திருப்பீர்களா. என்னுடைய ஊர் வேறு. அவளுடைய ஊர் வேறு, இவளுடைய ஊர் வேறு. இப்படி ஒவ்வொரு ஊரையும் விட்டுவிட்டு நாங்கள் இங்கே இந்த இடத்தில் நடனமாட வேண்டும் என்ற அரசருடைய கோரிக்கையை ஏற்று இங்கு வந்தோம். எங்களுக்கு வீடுகள் தரப்பட்டன. நாங்கள் இருந்தது மாளிகையில். கொடுத்த வீட்டில் நாங்கள் சந்தோஷமாக இருந்தோம். சிவன் பணி என்று இருந்தோம். நிறைய பாடல்கள் பாடினோம். நிறைய நடனங்கள் ஆடினோம். ஜனங்களை மகிழ்வித்தோம். இறைவனுக்கு தொண்டு செய்தோம். இந்த இடத்தை சுத்தமாக வைத்திருக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டோம். ஆனால் இப்பொழுது திடீர் என்று இந்தக் கோவிலை புறக்கணித்து விட்டு வேறு இடத்திற்கு மன்னர் போனால் என் மகள் என்ன ஆவாள். அவளுக்கு பிறக்கும் ம்கள் என்ன ஆவாள் எங்கு போய் நடனம் செய்வது.

நான் ஊரைவிட்டு தஞ்சைக்கு வந்தபோது எப்படி திக்கு முக்காடி இருந்தேனோ அதேபோல என் மகள் இங்கிருந்து கிளம்பி ஜெயங்கொண்டத்திற்கு போய் அங்கு விழித்துக் கொண்டு நிற்க வேண்டுமா. எங்களுக்கு ஊர் என்று ஒன்றுமே கிடையாதா. தஞ்சை மண் எங்கள் சொந்த மண் அல்லவா. இந்த மண்ணில் நாங்கள் வேரூன்றிய பிறகு இப்பொழுது வேரோடு பிடுங்குகிறீர்களே இது சரியா. தேவரடியார்களாகிய நாங்கள் மட்டும் இல்லை.

சமையற்காரர், வீணை வாசிப்பவர், குழல் வாசிப்பவர், ஓதுவார், மத்தளங் கொட்டுவார், முரசு அறிவிப்பார் என்று பலருக்கும் இந்த பிரச்சனைதான்.

எங்களுக்கு எது ஊர். அரசர் போகின்ற ஊரெல்லாம் எங்கள் ஊராக நாங்கள் கொள்ள வேண்டுமா. எங்கள் ஊர் ஜெயங்

கொண்டம் என்று நாங்கள் நினைத்துக் கொள்ள வேண்டுமா. ஜெயங்கொண்டத்தில் போய் நாங்கள் எங்கு தங்குவது. மரத்தடியிலா, மன்னருடைய அரண்மனை போல் எங்களுக்கு இன்னொரு அரண்மனை வேண்டும் என்று கேட்டால் மரியாதையா. இப்பொழுதுதான் பல்வேறு இன்னல்களுக்கு பிறகு தஞ்சை மண்ணில் நாங்கள் நிரந்தரமாயிருக்கிறோம். இப்பொழுது கிளம்பு, கிளம்பு என்று சொன்னால் என்ன செய்வது. எங்களுக்குத் தெரியும், எங்களுக்கு வயதாகிவிட்டது. இதோ நான் நாற்பத்தி ஏழு அகவை. அவள் ஐம்பத்திரண்டு. அவள் அறுபது, அவள் அறுபத்தி ஒன்று. இளம் பெண்ணாக இங்கு வந்து நடனம் ஆடி எல்லோரையும் மகிழ்வித்து இப்போது வயதான காலத்தில் எவ்வளவு தொலைவு மாட்டு வண்டியில் பயணப்பட்டு அல்லது குதிரை ஏறி நாங்கள் ஜெயங்கொண்டம் வருவது. அங்கு வேரூன்ற முடியுமா. எங்கள் குழந்தைகள் அங்கு கற்றுக் கொள்ள முடியுமா. இப்பொழுது மிகப் பெரிய நடனசாலை இருக்கிறது. நாங்கள் இந்த கோவில் வளாகத்திலேயே நடனம் கற்றுக் கொள்கிறோம்.

அங்கு கோவில் உருவாகி, அங்கு வளாகம் ஏற்பட்டு அங்கு நடனம் கற்றுக் கொள்வதற்கு எத்தனை நாளாகும். எனவே எங்களை நிர்க்கதியாக விட்டு விட்டு மன்னர் கிளம்புகிறார் என்பது மிகுந்த துக்கத்தை கொடுக்கிறது. அழுது புலம்பினாலும் யாரும் கேட்பார் இல்லை. எங்களைப் பற்றி யாரும் எதுவுமே நினைக்காமல் திடீரென்று கைகழுவி விட்டு போனது போல் இருக்கிறது. என் இளமையை முழுக்க நான் இங்குதான் செலவழித்தேன். இந்த சிவனுக்காகத்தான் நடனமாடினேன். இப்போது இரண்டு காலும் குடைச்சல் வலி. இந்த வலியோடு நான் எவ்வளவு தொலைவு நடக்க. என் மகளுக்கு இன்னும் நாட்டியம் முழுமையாக கற்றுத் தரவில்லை. அவள் எங்கு போய் கற்றுக் கொள்வாள்.

என் மகன் மத்தளம் வாசிக்கிறான். அவன் பயிற்சி பெற இன்னும் ஐந்து வருடங்கள் ஆகும். அவன் யாரிடம் போய் கற்றுக் கொள்வான். ஜெயங்கொண்டம் எப்படிப்பட்ட ஊர். அங்கு மத்தளம் கற்றுக் கொடுக்கவோ, நிருத்தம் கற்றுக் கொடுக்கவோ, சமையல் கற்றுக் கொடுக்கவோ, முரசு இழுத்து அடிக்க

கற்றுக் கொடுக்கவோ ஆட்கள் உண்டா. புதிய ஊரில் நாங்கள் போய் என்ன செய்வது.

இப்படி ஒவ்வொரு அரசரும் இடம்பெயர்ந்தால் மக்களுடைய நிலைமை என்ன. இதைப் பற்றி மாமன்னருக்கு அருகே உள்ள நீங்களெல்லாம் சிந்திக்கவே மாட்டீர்களா.

தலைநகரை இடம் பெயர வைப்பது என்பது சரியான செயல் அல்லவே. அது அரசாங்கத்திற்கு மிகப்பெரிய இடைஞ்சல் அல்லவா. மக்களுக்கு மிகப் பெரிய தொந்தரவல்லவா. எங்களை புறக்கணிப்பதாக நாங்கள் நினைக்கிறோம். எங்களை இழிவுபடுத்துவதாக நினைக்கிறோம்.

நான் என் மனக்குமுறலை, இத்தனை பேர் மனக்குமுறலை நான் என் வாயால் சொல்லிவிட்டேன். நீங்கள் இதை இராஜேந்திரரிடம் சொன்னாலும் சரி, சொல்லாது போனாலும் சரி.

நீங்கள் எல்லோரும் தஞ்சையை விட்டு படைக்கலன்களோடு நகரும்பொழுது நாங்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவோம். ஐயா, அருண்மொழிப்பட்டரே என் நெஞ்சில் உள்ளதை, இதோ இங்கு சுற்றி உள்ளோர் நெஞ்சில் உள்ளதை என்னால் வார்த்தையாக்க முடிந்தது. என்னால் வார்த்தையாக்கி உங்களிடம் சொல்ல முடிந்தது. அதுவே சிவனுடைய செயல். இதை நீங்கள் சீர்தூக்கி பார்த்து, நான் தவறு என்றால் என்னை பிரம்பால் அடியுங்கள். சரி என்றால் இதில் உள்ள உண்மையை தயவுசெய்து மன்னரிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

நீங்கள் எல்லோரும் தஞ்சையை விட்டு நீங்கும்பொழுது நாங்கள் எல்லாம் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. இந்த வயதான காலத்தில் வேறு ஊருக்கு குடிவர தயவு செய்து எங்களுக்கு கட்டளை இடாதீர்கள். எங்களால் வர இயலாது. தஞ்சையை விட்டு வர முடியாது. இந்த கோவிலை விட்டு நகர முடியாது. பிரகதீஸ்வரரை தினந்தோறும் நமஸ்கரிக்காவிட்டால் எங்களுக்கு பொழுது போகாது. எல்லா நாட்களிலும் பெண்கள் உள்ளே வர முடியாது. பெண்கள் வர முடியாத நாட்களில் நாங்கள் வாசலில் நின்று கோவில் விமானத்தை நமஸ்கரித்து விட்டுப் போவோம். அவ்வளவு பிரேமை. எங்களுக்கு பிரகதீஸ்வரர் மீது உயிர். அவரை விட்டு வரச சொல்லாதீர்கள்.

இப்படி ஒவ்வொரு அரசனும் தங்கள் தலைநகரை மாற்றிக் கொண்டிருந்தால் அது மக்களுக்கு எவ்வளவு பெரிய கேடு. எத்தனை பெரிய அவஸ்தை. இதை ஏன் நீங்கள் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். உங்களுக்கு ஆயிரம் காரணம் இருக் கலாம். ஆனால் வேரோடு குடிபெயரும்படி நீங்கள் சொன்னால் எங்களால் எப்படி கேட்க முடியும்.

உங்களோடு மறவர்கள் வந்துவிடுவார்கள். உங்களோடு அந்தணர்கள் வந்துவிடுவார்கள். இங்கு இருக்கின்ற உழவு மக்கள் விவசாயிகள் என்ன செய்வார்கள். இந்த நிலத்தை விட்டு எங்கே வருவார்கள். அவர்களை விட்டுவிட்டு போகப் போகிறீர் களா. இங்குள்ள கம்மாளர்களும், இங்குள்ள கருந்தச்சர்களும், இங்குள்ள மரத்தச்சர்களும் என்ன செய்வார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு போனால் அவர்கள் வீடுகளிலெல்லாம் யார் குடியிருப்பார்கள்.

எங்களை எல்லாம் இங்கேயே விட்டுவிட்டு போகப் போகி றீர்களா. அல்லது அங்கே அழைத்துக் கொண்டு போய் அந்த கூடத்தில் நடனமாடு என்று சொல்லப் போகிறீர்களா. என் மகளுக்கு நடனம் முழுவதும் கற்றுக் கொடுக்கும் வரை, இந்த இடத்தை விட்டு நான் நகருவதாக இல்லை.

இனி உங்கள் உத்தரவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.''

சீராளன் திகைத்துப் போனான்.

''என்ன தைரியமாக பேசுகிறாள் இந்தப் பெண்மணி. சோழ தேசத்தில் இவ்வளவு எளிதாக ஒரு அரசு அதிகாரியிடம், அதுவும் கிட்டத்தட்ட அரசருக்கு நிகரான ஒரு அதிகாரியிடம் ஒரு பெண்மணி இப்படி பேச முடியும் என்றால் என்ன அற்புதம் இது. இம்மாதிரி பேசுவதற்குத்தானே மயிலையில் முயற்சி செய்தோம்.

வாயை மூடு. வாயை மூடு என்றல்லவா அந்தணர்கள் சொல்கிறார்கள்.'' இந்த ஒரு கேள்விக்கு, இவளுடைய ஆதங் கத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் அருண்மொழிப்பட்டர்.

ஆவலாக காத்திருந்தான்.

''குடந்தையிலிருந்து இடம்பெயர்ந்து தஞ்சை வந்தோமே. குடந்தை அழிந்தா போயிற்று. பழையாறை கோட்டையை அப்படியே விட்டு விட்டு தஞ்சைக்கு வந்து புதிதாக அரண்மனை கட்டிக் கொண்டோமே சோழர்குலம் அழிந்தா போயிற்று.

ஒரு தேசம் பெரிதாக எல்லைகள் விவரிக்கப்படுகிற பொழுது அதனுடைய தலைநகரம் அதன் எல்லைகளுக்கேற்ப நடுநாயகமாக இருக்க வேண்டும். சோழ தேசத்தில் வடக்கு எல்லை விரிவடைந்து விட்டது. கீழைச்சாளுக்கியம் வரை நம் முடைய கொடி பறக்கிறது. மேலைச் சாளுக்கியத்தில் எதிர்ப்பு இருக்கிறது. கங்க தேசமும், இராஷ்டிரகூடமும் நமக்கு அடி பணிந்து இருக்கின்றன. குடகுமலை நம்முடைய சாம்ராஜ்ய மாக இருக்கிறது. சேரர்கள் காணாது போனார்கள். மதுரை மண்ணோடு மண்ணாயிற்று. இலங்கையை எரியூட்டி பாண்டிய ருடைய மணிமுடியும், செங்கோலையும் பறித்துக் கொண்டு வந்தாகிவிட்டது.

தஞ்சைதான் என்னுடைய மண் என்று உட்கார்ந்து கொண் டிருந்தால் வடக்கே இருந்து மேலைச்சாளுக்கியம் கீழை சாளுக் கியத்தின் வழியாக திருவொற்றியூரை தாக்குவான். திருவொற் றியூர்தான் நம் எல்லை இப்போதைக்கு. அது இன்னும் விரி வாக்கப்படும். மயிலையும், திருவல்லிக்கேணியும் அடிபடும். திருமல்லை அவர்கள் வசப்படும். காஞ்சிபுரம் நோக்கியும் அவர்கள் வரலாம். காஞ்சிபுரம் தாண்டி எசாளம், எண்ணாயிரம் என்றும் பரவலாம். அங்கிருந்து நடுநாட்டுக்கு வரலாம். அங்கிருந்து தஞ்சை ஒரு நாள் பயணம். எனவே மூன்று நாளில் தஞ்சையை எதிரிகள் எட்டிவிடலாம். அதற்காக தலைநகரை மாற்றி வடக்கிலேயே எதிரிகளை தடுத்து நிறுத்தும் வண்ணம் ஒரு புதிய அரண்மனையை, மிக வலுவான கோட்டையை இராஜேந்திரர் கட்டிக் கொண்டிருக்கிறார்.

வெறும் அரண்மனை கட்டினால் அது உவப்பாக இருக் காது என்று, தன் தந்தையைப் போலவே மிகச் சிறப்பான ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று நினைத்து அதற்கான செயலில் ஈடுபடுகிறார்.

தஞ்சையைப் பற்றி இவ்வளவு பெருமையாக நீங்கள் பேசுவது சந்தோஷமாக இருக்கிறது. உடையார்குடி வந்து பார்த் திருக்கிறீர்களா, வாருங்கள். மிகப்பெரிய ஏரி, கடல் போல ஏரி. மூன்று போகம். அங்கு வந்து இதைவிட அதிகமான சந்தோஷ மாகவும், சௌகரியமாகவும் நீங்கள் இருக்க முடியும். ஆரம்ப நாட்களில் வீடு அமைவதும், வீட்டிற்குள் சௌகரியங்கள் அமை வதும் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும். இதோ நான் புழங்கிய

இந்த தஞ்சையை விட்டு, என் அரண்மனையை விட்டு நான் நகர்ந்து போகப் போகிறேன். என் தகப்பன் இங்கு இருக்கிறார். எடுத்தவுடன் தந்தையையும், தாயையும் பிரிந்துவிட்டு நான் என் மனைவியோடு போகலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். ஒருவேளை மனைவியும் வர மறுக்கலாம். அப்பொழுது நான் தனியாகப் போவேன். இதற்கு அழ முடியுமா.

அரசுப் பணி என்று வந்தாகிவிட்டது. அரசுப்பணி என்று வந்தால் அப்பொழுது இடம்பெயர்தல் என்பது அரசுப் பணி யாளர்களுக்கு விதித்த முதல் சட்டம். அரசு எங்கு இருக்கிறதோ அங்குதான் அரசுப் பணியாளர்கள் இருக்க வேண்டும். நீங்கள் அரசு பணியாளர்கள், மாதாமாதம் நெல்லும், காசும் உங்களுக்கு கூலியாக கொடுக்கப்படுகின்றன. உங்களுக்கு சௌகரியமாக இருப்பதற்காக எல்லா வசதியும் செய்து தரப்பட்டு இருக்கின்றன. நீங்கள் இந்த இடம் விட்டு பெயர மறுத்தால், வர முடியாது என்று சொன்னால் உங்கள் மீது அரசர் தண்டனைக்குரிய குற்றம் சாட்டலாம். தண்டனையும் தரலாம்.

அரசர் என்ன தண்டனை தருவார் என்று சொல்வதற் கில்லை. ஆனால் இதை நான் கொண்டு போய் அரசரிடம் சொன்னால் அரசர் சில விநாடிகள் யோசிப்பார். பிறகு,

இவர்கள் யாரும் வர வேண்டாம். நான் வேறிடத்திலிருந்து நடன மாதர்களை, முரசொலிப்பவர்களை, மத்தளம் வாசிப்பவர் களை, ஓதுவார்களை கூட்டிக் கொண்டு வருகிறேன். எல்லாமே புதிதாக இருக்கட்டும். அரண்மனை புதிதாக இருக்கட்டும், கோட்டை புதிதாக இருக்கட்டும். கோவில் புதிதாக இருக்கட்டும். கோவில் பணியாளர்களும் புதிதாக இருக்கட்டும் என்று சொல்லி விடுவார்.

பிறகு மாதாந்திர நெல்லும், பொற்கழஞ்சும் எப்படி கிடைக் கும் என்பது கேள்விக்குறிதான். ஆனால் அரசர் குரூரமானவர் அல்ல. அதற்குண்டான ஏற்பாடுகள் செய்யத்தான் வந்திருக் கிறேன். இங்கு கணக்கு வழக்குகள் சுத்தமாக இருக்கின்றன. தொடர்ந்து இந்த கோவில் பராமரிப்பதற்கு உண்டான, எல்லா வேலைகளையும் செய்து உத்தரவாதம் தருவதற்காக நான் வந்திருக்கிறேன்.

தலைநகரம் மாறப்போவது உறுதி. அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். இந்த கோவில் மீது அன்பு வைத்து இதை விட்டு

வர மாட்டேன் என்று சொல்வது மிகச் சரியான வாதம். எனக்கு வயதாகி விட்டது என்று சொல்வதும் ஏற்பதற்குடையதே. நான் என் இளமைக் காலம் முழுவதும் செலவழித்தேனே இதை விட்டு இப்போது எப்படி வருவேன் என்று நீங்கள் கேட்பது உணர்ச்சி மயமானது. அந்த உணர்ச்சியை நான் மதிக்கிறேன்.

தலைநகரை மாற்றக்கூடாது என்ற வார்த்தை எல்லாம் தயவு செய்து நீங்கள் வாயைத் திறந்து சொல்லிவிடாதீர்கள். இராஜேந் திரர் கோபத்துக்கு ஆளாகாதீர்கள்.

சோழதேசம் வரை மேலைச் சாளுக்கியம் படை எடுத்து வந்துவிட்டால் அப்போது நெல்லும் போயிற்று, கழஞ்சும் போயிற்று, ஆடல் பாடலும் போயிற்று. இந்த கோவில் இருக் குமா என்பதுகூட சந்தேகமே. எனவே எதிரி யார், அவனுடைய வலிவு என்ன, மன்னர் என்ன செய்தால் எதிரி தயங்கி நிற்பான் என்று புரிந்து கொண்டு பேச வேண்டும். மேலைச்சாளுக்கியத் திற்கும், நமக்கும் உண்டான பகைமை ஊர் அறிந்தது. கீழைச் சாளுக்கியத்தை ஏதாவது ஒரு வகையில் கபளீகரம் செய்து மேலைசாளுக்கியத்தினர் உள்ளே வர முயற்சிக்கிறார்கள். பல்வேறு விதமான ராஜதந்திரங்கள் நடைபெறுகின்றன.

இவை எல்லாவற்றையும் மாமன்னர் இராஜேந்திரர் முறி யடித்துக் கொண்டிருக்கிறார்.

எனவே, அது பற்றியெல்லாம் கவலைப்படாது நீங்கள் இந்தக் கோவிலை சரியாக பராமரியுங்கள். உங்களுக்கு உண் டான இந்த சலுகைகள், உதவிகள் நிச்சயம் கிடைக்கும். அதற் குண்டான ஏற்பாட்டை இங்கு தலைமை வகித்து என் தகப்ப னான கிருஷ்ணன் ராமன் செய்வார். பரமன் மழபாடியார் இந்த தேசத்தின் பாதுகாப்பை கவனித்துக் கொள்வார். தெற்கே உள்ள பாடிக் காவல்கள் பலப்படுத்தப்படும். எவரிடமிருந்தும், எந்த விதமான தொந்தரவும் வராது. இப்பொழுது இருக்கிறபடியே சந்தோஷமாக, கம்பீரமாக நீங்கள் வாழ்க்கை நடத்தலாம்.

கோவில் என்கிற விஷயத்தை எவ்வளவு பெரிய கொடுங் கோல் மன்னனும் எந்த தொந்தரவும் செய்ய மாட்டான்.

எனவே நீங்கள் அங்கே வருவது உசிதமல்ல என்பதே என் எண்ணம். உங்கள் வயதான காலத்தில் இந்தக் கோவிலை பராமரித்து இருங்கள். உங்களுடைய குழந்தைகளை இங்கேயே

வளருங்கள். அவர்கள் விருப்பப்பட்டால் அங்கே அனுப்பி வையுங்கள். ஆனால் அந்த கோவிலிலும் நடனமாதர்கள் இருப்பார்கள். மற்ற எல்லா கலைஞர்களும் இருப்பார்கள் என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்.

எனவே அங்கே பாடுகிற வாய்ப்பு போயிற்றே, ஆடுகிற வாய்ப்பு போயிற்றே என்று எண்ணாதீர்கள்.

தலைநகரம் மாறினால் தஞ்சை காலியாகி விடுமே. எப்படி காலி ஆகும். தஞ்சையில் உள்ளவர்கள் தஞ்சையில் தானே இருப்பார்கள். நீங்கள் சொன்னது போல உழவர்கள் எல்லாம் நிலத்தை விட்டு போய்விடுவார்களா. இங்கிருந்து மறவர்கள் இடம் பெயர்வார்கள். இங்கிருந்து அதிகாரிகள் நகருவார்கள். இங்கு உள்ள சில வணிகர்கள் இடம்பெயரலாம். ஆனால் அடிப்படையில் இங்கு என்ன வசதிகள் உண்டோ அந்த வசதிகளை நீங்கள் அனுபவிக்க யார் யார் அவசியமோ அவர்களை நியமித்து விட்டுத்தான் போவோம்.''

''அப்படி சொல்ல முடியாதய்யா.''

''என்ன?''

''சோற்றுக்கடை வீதி என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது.''

''சரி.''

''அதில் உள்ள அந்தணர்கள் எல்லாம் எப்போது ஜெயங்கொண்டம் போலாம் என்றுதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாட்டு வண்டி வாங்கி அதில் எல்லா சாமான்களையும் ஏற்றி, இருந்த வீட்டை விட்டுவிட்டு ஜெயங்கொண்டத்துக்கு சோறு சமைக்க போய்விடுவார்கள்.''

''அதனால் என்ன, இங்கு வேறு யாரேனும் சமைத்து விட்டு போவார்கள். வேறு யாரேனும் வந்து வாடகைக்கு இருப்பார்கள். இந்த ஆட்கள் நகர்ந்து விட்டால் இங்கு ஆட்களே இல்லையா.

தலைநகரம் மாறுவதால் உங்கள் வாழ்வு ஆதாரம் ஒரு காலும் பாதிக்காது. நீங்கள் சொன்னது போல உழவர்கள் இங்கு உழுது கொண்டுதான் இருப்பார்கள். நெற்பயிர் வளர்ப்பார்கள். வாழை மரம் வளரும். வாழைத்தார் சாயும். மாடுகள் பால் கறக்கும். ஆடுகள் குட்டிகள் போடும். எல்லாம் ஒழுங்காக நடக்கும். இது ஒரு ஊர். முன்பு மன்னர் ஆண்ட ஊர் என்ற அமைப்போடு இருக்கும்.

அதைத் தவிர ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இந்த இடத்திற்கு வருபவர்கள் யார், தஞ்சையில் உள்ள வர்களா. இல்லை. வெளியூரிலிருந்து கும்பல் கும்பலாக மாட்டுவண்டி கட்டிக்கொண்டு இங்கு வந்து பிரகதீஸ்வரரை வணங்கிய வண்ணம் இருக்கிறார்கள். இப்படி இன்னும் பல ஆயிரம் வருடங்களுக்கு இப்படி வியக்கின்ற மனிதர்கள் பல்வேறு திசையிலிருந்து வருவார்கள். அத்தனைச் சிறப்பாக இந்த கோவில் இருக்கும்பொழுது உங்கள் வாழ்வு பற்றி என்ன பயம். ஒருகாலும் பயப்பட வேண்டாம்.''

''தஞ்சை பாழ்பட்டு போகுமே.''

''போகாது. குடந்தை பாழ்பட்டா போயிற்று. முன்னை விட ஜொலிப்பாக இல்லையா. தஞ்சைக்கு வெளியூர் ஆட்கள் வருவார்கள். இங்கு தங்க முற்படுவார்கள். அவர்களால் தஞ்சை இன்னும் ஜொலிப்பாக மாறும்.''

''மன்னரை சந்திப்பது அரிதாகப் போகுமே.''

''மன்னரை சந்திக்க வேண்டிய அவசியம் என்ன. இங்கு நிர்வாகம் செய்ய கிருஷ்ணன் ராமன் இருக்கிறார். பரமன் மழபாடி இருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக அதிகாரிகள் இருக் கிறார்கள்.

எனவே அதுபற்றி எந்தக் கவலையும் வேண்டாம். தெற்கு பக்கம் பாண்டியர்களுடைய தொந்தரவு எதுவும் வராமல் இருப் பதற்கு மிகப் பலமான பாடிகாவல் செய்யப்பட்டு இருக்கிறது. தஞ்சை மிகப் பாதுகாப்பாக இருக்கிறது. எனவே எது பற்றியும் கவலைப்படாது இங்கு இருங்கள்.''

''ஆனால் நீங்கள் எல்லாம் இல்லாது போகிறீர்களே என்ற வருத்தம் இருக்கத்தானே செய்யும்.''

''ஆரம்பத்தில் இருக்கும். பிறகு ஒரு நிம்மதியே வந்துவிடும். மன்னர் வருகிறார் என்று பரபரக்காமல், மன்னருக்காக என்று ஓடி, ஆடி செய்யாமல் நீங்கள் விட்டேத்தியாக இருக்கலாம்.

மன்னர் வடக்கே ஜெயங்கொண்டத்தில் கூட அல்ல. இன்னும் வடக்கே போரிட்டு கொண்டிருப்பார். அவருக்காக இங்கு பிரகதீஸ்வரருக்கு இடையறாது நாமம் சொல்லி, தேவார, திருவாசக பதிகங்கள் ஓதி நடனமாடிக் கொண்டிருக்கலாம்.

வேத விற்பன்னர்களை கொண்டு வேதம் ஓத வைக்கலாம். எல்லா சதய நாளிலும் செய்வது போல திருவாதிரை திருநாளிலும் நீங்கள் சிவனுக்கு அபிஷேகம் செய்யலாம். திருவாதிரை நம்முடைய மன்னனின் நட்சத்திரம். அவர் சிவ சொரூபம். மன்மத ரூபன்.''

ஒரு அதிகாரி அமைதியாகவும், பணிவாகவும், வாயை மூடு என்று சீறாமலும், நிதானமாக விளக்க மக்கள் அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்கிற மெல்லிய அழுத்தமும் இருப்பதை சீராளன் உணர்ந்து கொண்டான்.

இப்படித்தானே பேச வேண்டும் ஒரு அதிகாரி. நீ என்னடா பேசுவது என்றல்லவா அந்த அந்தணர்கள் குதிக்கிறார்கள். உனக்கு என்னடா தெரியும் என்றல்லவா பேசுகிறார்கள். ஆனால் இவரும் அந்தணர்தான். என்ன சிறப்பாக இருக்கிறது அந்தப் பேச்சு. மயிலை அந்தணர்களை நிச்சயம் கண்டிக்க வேண்டும். இதுபற்றி அருண்மொழியிடம் பேச வேண்டும் என்று சீராளன் நினைத்துக் கொண்டான்.

''தலைநகரம் மாறப்போகிறதா.''

''ஆமாம்.''

''எதற்கு ஜெயங்கொண்டம். இன்னும் வடக்கே வந்துவிடலாமா.''

''இன்னும் வடக்கே என்றால்.''

''மயிலை, திருவல்லிக்கேணியில் தலைநகராகக் கொள்ளலாமே. மிக அற்புதமான புல்வெளி. மேடான இடமாக இருக்கிறது. நல்ல ஆறுகள் இருக்கின்றன. அந்த இடத்தில் வந்து நின்றுவிடலாமே.''

''என்ன ஆறு.''

''கூவம் என்ற ஆறு இருக்கிறதே.''

''அது போதாது. அது மெல்லிய ஓடை போன்றது. மழைக் காலத்தில் மட்டும் நீர் வருகிறது. இது கொள்ளிடம். மிகப் பெரிய ஆறு. பல கிளை நதிகள் இருக்கிறது, பல கிளை நதிகளை மேலும் ஏற்படுத்தி தூர் வாறி, ஊருக்குள்ளே கொண்டு வந்திருக்கிறார். கால்வாய்கள் மூலம் எல்லா இடமும் இணைக்கப்பட்டு இருக்கின்றன.

இங்கு நல்ல நீர்வரத்து இருக்கிறது என்பதால் இந்த இடத்தை தேர்ந்தெடுக்கிறார். அதுமட்டுமல்ல அங்கிருந்து ஒரு நாழிகை பயணத்தில் 'உடையார்குடி' என்ற ஊரை அடைந்து விடலாம். வீரநாராயணபுரம் என்ற ஏரி இருக்கிறது, கடல் போல பெரியது. மூன்று போகம் விளைகிறது. எனவே அங்கிருந்து தானியங்களும், அரிசியும் வந்துவிடுகின்றன. நல்ல பசுக்கள் அங்கு வளர்க்கப்படுகின்றன. அங்கிருந்து பாலும், வெண்ணை யும், நெய்யும் இந்தப் பக்கம் வந்துவிடும். அதுவும் தவிர கோட்டைக்குள்ளேயே உழுது பயிரிடவும், காய்கறிகள் விதைக் கவும் மன்னர் வழி செய்திருக்கிறார்.

இப்போதே அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் தங்கி இருக் கிறார்கள். உறுதியான வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கானவர் வந்தால் அவர்களுக்கும் உறுதி யான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

கூவகத்தின் கரையிலுள்ள மயிலை மாமன்னர் இராஜேந் திரரை தாங்காது, அது போகும் வழி. இப்பொழுது உன்னை கூப்பிட்டு அனுப்பியது ஒரு முக்கியமான செயலுக்காக.''

''சொல்லுங்கள்.''

''போகும் வழியில்தான் நாங்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும். இங்கிருந்து சிறிதளவு எடுத்துப் போவோம். உள்ளுக்குள்ளே கீழைச் சாளுக்கியம் போகும்பொழுது லட்சோப லட்சம் படைவீரர்களுக்கு உண்டான அரிசியை நீ அங்கு வணிகர் களிடமிருந்து வாங்கித் தர வேண்டும்.

காய்கறிகள், ஆடுகள் என்று பல்வேறு வகையான உணவு களை நீங்கள் வண்டியில் ஏற்றி அனுப்ப வேண்டும். அதற்கு உண்டான வண்டிகளை நீங்கள் தயார் செய்து கொள்ள வேண் டும். ஒரு கூடை அரிசி இவ்வளவு என்று தீர்மானம் செய்து காசு வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு ஆடு இத்தனை என்று சொல்லி காசு வாங்கிக் கொள்ள வேண்டும். காய்கறிகளுக்குத் தனி விலை. நெய், எண்ணெய் மற்றும் மருந்து சாமான்கள், காயம் பட்டால் கட்டுவதற்கு உண்டான துணிகள், மாற்று உடை கள், பழசு, உடைவாள் உடைய தோல்வார் போன்றவை பிய்ந்து விட்டால் தைத்துக் கொள்வதற்கு உண்டான தோல் விற்பன் னர்கள், தொழிலாளிகள், ஈட்டிகளையும், வாட்களையும் சரி செய்து

கொடுக்கும் கம்மாளர்கள், மரச்சக்கரங்கள் உடைந்துவிட்டால் உடனடியாக சரி செய்கின்ற மரத்தச்சர்கள் என்று பலரும் அந்த இடத்தில் தயாராக இருக்க வேண்டும்.

நாங்கள் ஒரு குறிப்பிட்ட கம்மாளர்களோடும், மரத்தச்சர் களோடும், நெசவாளிகளோடும், தோல் விற்பன்னர்களோடும், மருத்துவர்களோடும் வருவோம். ஆனால் அது போதாது. என்னென்ன விதமான மருந்துகள் வேண்டுமென்று உனக்கு ஆதுரச்சாலையில் இருந்து பட்டியல் தருகிறேன். அந்த மருந்து களை தயார் செய்து வை. மூன்று லட்சம் வீரர்களுக்கு உண் டான அரிசியை சேமித்து வை. எப்பொழுது கேட்டாலும் உடனடி யாக அரிசி கொண்டு வந்து சோறாக்கி பரிமாறுவதற்கு உண் டான சமையல்காரர்களையும் ஏற்பாடு செய்.

உன்னால் செய்ய முடியும் அல்லவா.''

''நிச்சயமாக செய்ய முடியும். ஆனால், மயிலை, திருவல்லிக் கேணியில் அந்தணர்கள்தான் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதுதான் சட்டமாக இருக்கிறது. அவர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை. சொன்னால் வேகமாக பேசுகிறார்கள், ஏசுகிறார்கள். சும்மா இரு என்று அதட்டுகிறார்கள். நாங்கள் பார்க்காத அரசியலா, அரசாங்கமா, எங்களுக்குத் தெரி யாதா என்று ஏகடியம் பேசுகிறார்கள்.

அவர்களுடைய பேச்சு முரட்டுத்தனமாக இருக்கிறது. என்னால் வாள் உருவி தாக்கிவிட முடியும். கோல் எடுத்து அடித்துவிட முடியும். அப்படி செய்வது தவறு என்று நமக்கு சட்டம் சொல்லுகிறது. அந்தணர்களை கொல்வது பாவம் என்கி றார்கள். அதே நேரத்தில் அந்தணர்கள் என்ன சொன்னாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற தலைஎழுத்தும் நமக்கு இருக்கிறது.''

''ஒருநாளும் இல்லை. அந்தணர் சொல்வதே கடைசி எண்ணம் என்பது இராஜேந்திரருக்கு பிடிக்காது. இங்கு யார் வேளாளரோ அவரே தானியத்துக்கு பொறுப்பானவர். யார் கம்மாளரோ அவரே ஆயுதங்களுக்கு பொறுப்பானவர். யார் மரத்தச்சரோ அவரே வாகனங்களுக்குப் பொறுப்பானவர். யார் தோல் விற்பன்னரோ அவரே மற்ற விஷயங்களுக்கும் பொறுப் பானவர் என்று தெள்ளத் தெளிவாக அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

வெறுமே பிராமணர்களை அவர் மதிப்பதே இல்லை. நீ சொன்னதை அப்படியே சொன்னால் போதும் கூசாமல் அறை விழும். சொல்கிற பழக்கமெல்லாம் இராஜேந்திரருக்கு இல்லை. நாளையிலிருந்து உங்கள் அக்ரஹாரங்களை காலி செய்துவிட்டு நீங்கள் வெளியேற வேண்டும். அங்கு முழுவதும் வேளாளர்கள் நுழைவார்கள் என்று ஒரே ஒரு வரியில் உத்தரவிட்டு விடுவார். அது உடனே செயல்படுத்தப்படும்.''

''இராஜராஜர் வந்ததும் பிராமணர்களைத்தான் முதலில் நாடுவிட்டு துரத்தினாராமே. அதுபோலவா.''

''அதைவிடவும் மோசமாகவும் இருக்கும். அவர்கள் வேறு தேசத்தினர். இங்கு வந்து உளவு பார்த்தார்கள். உளவு பார்த்து அதற்கு உண்டான வெற்றிகளை பெற்றார்கள். அவர்களை வெற்றி பெற விட்டது நம்முடைய தவறு. அதனால் திருப்பி அனுப்பினார். இந்த ஊரிலே உட்கார்ந்து கொண்டு இந்த அர சாங்கத்தையே கேலி செய்து கொண்டிருந்தால் முதுகு விரிந்து போகும்.''

''இராஜேந்திரர் அடிப்பாரா.''

''அவர் பிரம்பு பற்றி கேள்விப்பட்டதில்லையா.''

''கேள்விப்பட்டிருக்கிறேன். முகத்தில் கூட அடி விழும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''ஆமாம். கோபம் வந்துவிட்டால் தலை, கால் புரியாது. அன்பு மிகுந்துவிட்டால் அவரை விட நல்ல நண்பர் கிடையாது. நீ அவரிடம் நல்ல பெயர் சம்பாதிக்க வேண்டுமென்றால் எது சொன்னாலும் சரி என்று சொல்லிவிடு.''

''எதிர்த்து பேசவே கூடாதா.''

''குறை இருந்தால் மிக பக்குவமாக எடுத்துச் சொல்.''

''அந்தப் பக்குவம் எப்படி என்ன.''

''நீர் கிடைப்பது மிகவும் கடினம். சோறு கிடைப்பது அத னினும் கடினம். ஆனால் கடற்கரை ஓரமாகப் போனால் தென்னை மரங்கள் உண்டு. விளைநிலங்கள் உண்டு. எனவே சோறு கிடைக்கும். அதுவும் தவிர குளிர் காற்று நன்றாக இருக்கும். கடற்காற்று அனுபவித்தபடியே போகலாம்.

கீழைச்சாளுக்கியம் நடுவே வரை உள்ளே போய்விட்டு பிறகு மேற்குப் பக்கம் திசை திரும்பலாம்.

இதுதான் இதுதான் அவர் கேட்பது. இப்படி காரண காரியத் திற்கு நீ பதில் சொல்வாய் என்றால், அப்படியா என்று சிந்திப் பார். அந்த சிந்திப்பில் நீ சொல்வது சரி என்று தெரிந்துவிட்டால் நீ ராஜா. மன்னருக்கு உவப்பானவன்.''

''நான் சொல்வது தவறு என்றால்.''

''அடேய் முட்டாள் சும்மா இரு என்று ஒரு வார்த்தை யில் அடக்கிவிடுவார். நீ பங்கு பெற்றாய் அல்லவா அதுவே அவருக்கு சந்தோஷம். பங்கும் பெறாமல், குறை சொல்வது தான் அவருக்கு பிடிக்காத விஷயம்.''

''இதைத்தானய்யா அந்த மயிலை அந்தணர்கள் செய்கிறார் கள். நேரடியாக பிரச்சனைகள் சொல்கிறபொழுது பிரச்சனை யும் தீர்க்க மாட்டேன் என்கிறார்கள். அதேசமயத்தில் பிரச்சனை கள் தீர்க்க நான் பார்த்துக் கொள்கிறேன் என்றால் அதற்கும் வழி விட மாட்டேன் என்கிறார்கள்.''

''நான் வந்து அதைப் பார்த்துக் கொள்கிறேன். கவலைப் படாதே. அப்பொழுது மன்னரிடம் நீ இதற்கான பொறுப்பை ஏற்கிறாய் என்று சொல்லவா.''

''சொல்லி விடுங்கள்.''

''மன்னரை மறுபடி சந்திக்க ஆசையில்லையா.''

''பெருத்த ஆசை உண்டு. தந்தை கிருஷ்ணன் ராமன் அவர்களையும் சந்திக்க ஆசை உண்டு.''

''வா. முதலில் என் வீட்டிற்கு போகலாம். என் தந்தையை பார்த்துவிட்டு மாமன்னரை பார்க்கலாம்.''

தொண்டை தேசத்திலிருந்து வந்த அந்த சாதாரண வேளாள இளைஞன், அந்த சோழ சாம்ராஜ்யத்தின் அரசியலுக்குள் அவன் அறியாமல் நுழைந்தான்.

அவன் மனைவி தாமரைச்செல்வி தன் புருஷன் எப்போது வருவான், எப்போது கூடலாம் என்று காத்துக் கொண்டிருந் தாள். அவளுடைய கனவு இப்போதைக்கு நிறைவேறப் போவ தில்லை என்பதை அவளுடைய விதி ஏற்கனவே தீர்மானம் செய்து வைத்திருந்தது.

* * *

அத்தியாயம்

16

பரமன் மழபாடியார் மாளிகை வாசலில் அவர்கள் ஒன்றாக கூடியிருந்தார்கள். நாற்பது, ஐம்பது பேர் கையில் பறைகளோடும், சிறு முரசுகளோடும் அங்கங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இடுப்பில் துண்டு கட்டி அதை அடியே வழித்து பின்பக்கம் சொருகி இருந்தார்கள். தலைப்பாகை கட்டி இருந்தார்கள். எல்லோருக்கும் குடுமி இருந்தது. கருத்த மேனியராய், கூரிய கண்கள் உடையவர்களாய் மெல்லிய உடம்பினராய் இருந்தார்கள். அதில் அதிகம் பேர் தாம்பூலம் தரித்தார்கள். பசித்தது. இருந்தாலும் பசி அடக்க தாம்பூலம் போட்டுக் கொண்டார்கள்.

விடியலில் வந்துவிடுங்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் விடிந்து வெகுநேரமாகியும் பரமன் மழபாடியார் வெளியே வரவில்லை. உறங்குகிறாரா என்று கேட்டதற்கு இல்லை, உள்ளே ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அவர்கள் காத்திருந்தார்கள். வெய்யில் வெளியேறி பளீர் என்று எல்லா திசையும் தெரியும்போது பரமன் மழபாடியார் வெளியே வந்தார்.

''வந்துவிட்டீர்களா, அவர்களுக்கு உண்டானதை கொடுத்து விடு'' என்று கட்டளை இட்டார்.

ஒரு மூங்கில் தட்டில் வெற்றிலை பாக்கும், பொற்கழஞ்சுகளும் வைத்து அவர்களிடம் நீட்டப்பட்டன. மூன்று கூடை அரிசி கொடுக்கப்பட்டது. அவர்கள் மிக ஆவலோடு வாங்கிக் கொண்டார்கள். நல்ல பெரிய கூடை. கூடைக்கு பிடி இருந்தது. கூடையின் மீது அரிசி சிந்தாமல் இருக்க ஓலைப்பாய் போட்டு தைக்கப்பட்டிருந்தது. அரிசி மணம் மூக்கை துளைத்தது. அவர்கள் மிகுந்த சந்தோஷத்திற்கு ஆளானார்கள்.

''அய்யா'' என்று கை எடுத்து கும்பிட்டார்கள். விழுந்து வணங்கினார்கள்.

''யுத்தம் வரப்போகிறதுடா. கீழைச்சாளுக்கியம் நோக்கி போகிறோம். இராஜேந்திரருடைய மருமகன் இராஜராஜ நரேந்திரன் அங்கு பதவியில் அமர்வதற்கு வம்பு செய்கிறார்களாம். நாம்தான் போய் அடக்க வேண்டும். வழக்கம் போல் பறை அடித்துக் கொண்டு முன்னே போங்கள். சோழதேசம் தாண்டுகிற வரையில் ஒரு தொந்திரவும் இருக்காது. பிறகு காட்டு வழி ஆரம்பமாகிவிடும். காட்டு மிருகங்களைக் கண்டால் ஓடிப்போய் வம்புக்கு இழுக்காதீர்கள். நின்று பறை அடித்து விரட்டுங்கள். அங்குள்ள மக்கள் கேள்வி கேட்டால் நான் சொன்ன இதே விஷயத்தை சொல்லுங்கள். கீழைச் சாளுக்கியம் நோக்கி மிகப் பெரிய படை வரப்போகிறது என்று சொல்லுங்கள். நீங்கள் போன மூன்றாம் நாள் நமது படை பின்தொடரும். இரண்டாம் நாள் காடுவெட்டிகளும், காரை வெட்டிகளும், கள்ளி வெட்டிகளும் பின்தொடர்வார்கள். சாலை போடுபவர்கள் வருவார்கள்.

உங்களுக்கு மாட்டு வண்டி இருக்கின்றனவா, கூடைகளை அதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் புறப்படலாம். நீங்கள் வழக்கமான இடத்தில் சாமி கும்பிட்டு விட்டு வடக்கு நோக்கி கிளம்புங்கள். இன்று நாள் நன்றாக இருக்கிறது என்று கிருஷ்ணன் ராமன் சொல்லியிருக்கிறார். எந்த நேரம் வேண்டுமானாலும் கிளம்பலாம். நீங்கள் போய் வரலாம். ஒவ்வொரு நாளும் உங்களை சோழ வீரர்கள் வந்து சந்திப்பார்கள். நமது திட்டம் பற்றி சொல்வார்கள்'' என்று சொல்ல, அவர்கள் மறுபடியும் விழுந்து வணங்கினார்கள்.

அரை வட்டமாக நின்று கொண்டார்கள். பறைகளை எடுத்து கைகளில் வைத்துக்கொண்டார்கள்.

''ஆரம்பிக்கிறோமய்யா'' என்று உத்தரவு கேட்டான்.

''சரி'' என்று அவர் தலை அசைத்தார்.

''பறை முழங்கத் துவங்கியது. ஒரே நேரத்தில் முப்பது பறைகள், ஒன்றாக ஒரேவிதமாக தாளகதியில் இயங்கின. அவர்கள் மெல்ல அசைந்தார்கள். அரைவட்டமாக ஆடினார்கள். அந்த ஆட்டத்திற்கும், அந்த தாளத்திற்கும் மிக அழகாக இருந்தது. அவர்கள் போகலாம் என்று தன்னுடைய மேல் துணியை உதறி பரமன் மழபாடியார் காட்டினார்.

அவர்கள் அப்படியே அவரை நோக்கி வந்து விழுந்து வணங்கிவிட்டு பின்னடைந்தார்கள். அவர் மாளிகையை விட்டு வெளியே வந்தார்கள். தெருவில் பறை அடித்துக் கொண்டு போனார்கள். பறை ஒலி இராஜேந்திர சோழருக்கு கேட்டது.

''நல்லது. முதல்-அங்கம் நகர ஆரம்பித்து விட்டதா. அற்புதம். பரமன் மழபாடியார் துடிப்பாக இருக்கிறார் என்று அர்த்தம். அடுத்தது யார்.''

''காடுவெட்டிகள். நமது வீட்டு வாசலில் குழுமி இருக்கி றார்கள். யானைகள் உண்டா. அம்பாரி என்ன உயரம் என்று கேட்டிருக்கிறார்கள்.''

''எத்தனை யானைகள் அரையரே'' என்று அரையன் இராஜ ராஜரை பார்த்து இராஜேந்திரர் கேட்டார்.

''அறுபது யானைகள். கூடாரமான அம்பாரி ஆறுதான். மற்றதெல்லாம் ஆயுதங்கள் சுமக்கவும், அரிசி சுமக்கவும் தான் பயன்படுகின்றன. கூடாரங்களை எடுத்துப் போக பதினைந்து யானைகளை அழைத்துப் போகிறோம். ஆக ஒரு யானை அதற்கு மேல் ஒரு கூம்பு அம்பாரி என்று சொன்னால் ஒன்றரை கோல் உயரம் இருக்கும்.''

''அவர்களுக்கு அள்வு சொல்லிவிடு'' என்று உத்தரவு இட, அரையன் இராஜராஜன் வெளியே வந்தார்.

கோடாரிகளுடன், நீண்ட வாட்களுடன் இராஜேந்திரர் மாளிகைக்கு வெளியே உட்கார்ந்திருந்த அந்த அறுபது பேர் கூட்டம் எழுந்து நின்றது.

''பட்டத்து யானை ஒன்றரை கோல் உயரம். மன்னர் யானை மீது வருவார்.'' ஓலை நாயகம் என்கிற அதிகாரி அறிவித்தார்.

அவர்கள் ஒரு மூங்கில் கழியை எடுத்து உயர்த்தினார்கள். அது ஒன்றரை கோல் உயரத்தை விட நாலு முழங்கை அதிகமாக இருந்தது.

''மிகச்சரி இதுதான் அளவு'' என்று அரையர் சொல்ல, அவர் கள் குனிந்து வணங்கினார்கள்.

''நாங்கள் கிளம்ப உத்தரவு தர வேண்டும்'' என்றார்கள். அவர்களுக்கும் ஒரு மூங்கில் தட்டு கொண்டு வந்து கொடுக்கப்

பட்டது. அந்த தட்டில் வெற்றிலைப் பாக்கும், வாழைப்பழங் களும், பொற்கழஞ்சுகள் இருந்த பையும் இருந்தது. அவைகளை கொண்டு போய் ஒரு வீரன் அவர்களிடம் நீட்டினான்.

''அரிசி ஆறு கூடை'' என்று சொல்ல,

ஆறுகூடை அரிசி மூங்கில் பிரம்பால் பின்னப்பட்டது. மேலே ஓலை தடுக்கால் மூடப்பட்டது அவர்களிடம் கொடுக்கப் பட்டது. அவர்கள் வலுவானவர்கள். அதை தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

''கீழைச் சாளுக்கியம் நோக்கிப் போகிறோம். வேங்கிதான் நமது எல்லை. இராஜேந்திரருடைய மருமகன் இராஜராஜ நரேந் திரனுக்கு அங்கு பட்டம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். மேலைச்சாளுக்கியம் தொந்தரவு செய்கிறார்கள். எனவே மிகக் கவனமாக நடந்து கொள்ளுங்கள். சந்தேகப்படும்படியாக யாராவது இருந்தால் மடக்கி நின்று தலையில் போட்டு கட்டிப் போடுங்கள். மரங்கள் அகற்றி செப்பனிடுங்கள். பள்ளம் நிரப் பவும், மேடுகள் சரி செய்யவும், புற்றுகள் நீக்கவும், குதிரைப் படை நடந்து போவதற்கு உண்டான வசதிகள் ஏற்படுத்தவும் அங்கங்கே புல்வெளியில் கூடாரங்கள் அமைக்கவும் நீங்கள் உதவி செய்ய வேண்டும். படைகள் தங்குவதற்கு வழக்கம் போல நீர் உள்ள கரையில் இடம் போடுங்கள். நீர் கரையை ஆட்கள் வந்து காவல் காக்கும்படி தகவல் அனுப்புங்கள். நீங்களும் ஒரு கண் வைத்திருங்கள்'' என்று அரையன் கட்டளை இட, அவர்கள்

''சரி, சரி'' என்று தலை அசைத்தார்கள். தட்டுகளை வாங்கிக் கொண்டார்கள். விழுந்து வணங்கினார்கள்.

கையிலுள்ள கோடாரியையும், வாளையும் உயர்த்திப் பிடித்தார்கள்.

''சோழம், சோழம், சோழம்'' என்று கத்தினார்கள்.

''மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க'' என்று கத்தினார்கள். மன்னருக்கு காதுகுளிர அந்த சப்தம் வந்து விழுந்தது. அவர் புன்னகை செய்தார்.

அடுத்தபடி சாலை செப்பனிடுபவர் போக வேண்டும். ஒரு வகையினர் இதற்கு மிகச் சரியான ஆட்களாக இருப்பார்கள். அவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நினைக்கிறேன் என்று மனதுக்குள் நினைத்துக் கொள்ள,

அரையன் இராஜராஜன் வந்து நின்றார்.

"கல் தச்சர்களை அனுப்பிவிடலாமா."

"நிச்சயம். உடனடியாக அனுப்புங்கள்" என்று மறுமொழி சொல்ல, அவரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு அரையன் இராஜராஜன் மறுபடியும் வாசலுக்கு வந்தார்.

இந்த முறை நூற்றுக்கும் அதிகமான ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் தட்டுசுட்டாக வேட்டி கட்டியிருந்தார் கள். கால்களில் செருப்பு அணிந்திருந்தார்கள். தோளில் துண்டு போட்டிருந்தார்கள். தலைப்பாகை இறுகக் கட்டியிருந்தார்கள். அரையனைப் பார்த்தவுடன் வேட்டியை அவிழ்த்துவிட்டு கைகட்டி நின்றார்கள்.

அவர்களிடம் விதம் விதமான கருவிகள் இருந்தன. மண் வெட்டிகளும், பல் பல்லாக இருக்கின்ற மண்ணை சுரண்டி எடுக்கின்ற விஷயங்களும், திமிசு கட்டைகளும் இருந்தன. நீண்ட கடப்பாறையை பலபேர் தோளில் சார்த்தி இருந்தார்கள்.

"ஒரு லட்சம் குதிரை வீரர்கள் வருவார்கள். அடர்த்தியாகத் தான் வருவார்கள். எனவே சாலை அகலமாக இருக்க வேண்டும். உறுதியாக இருக்க வேண்டும். நீர் நிறைந்த இடத்தை தாண்டு வதற்கும் நீங்கள் உதவி செய்ய வேண்டும். நீர் நிறைந்த இடங் களில் பள்ளங்களில் குதிரைகள் நொடிக்காமல் இருப்பதற்கு மிகச் சரியாக கும்பலாகப் போய் அந்த இடத்தை சோதனை செய்யுங்கள். பள்ளங்களை நிரப்புங்கள். நிரப்ப முடியாவிட்டால் குதிரைகள் போவதற்கு உண்டான மாற்றுப்பாதையை தேர்ந் தெடுங்கள்.

நீங்கள் வேலை செய்த மறுநாள் குதிரைப்படை உள்ளே நகர்ந்துவிடும். மேலைச்சாளுக்கியம் நோக்கி நகருகிறோம். இராஜராஜ நரேந்திரனுக்காக இந்தப் போர் நடைபெறுகிறது. மற்றவற்றை சோழ வீரர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்" என்று சொல்ல, அவர்கள் கூலிப்பணமும், ஒரு வண்டி அரிசியும் வாங்கிக் கொண்டு நகர்ந்தார்கள்.

மாட்டு வண்டி முழுக்க பல கூடைகள் அடுக்கப்பட்டிருந் தன. மாட்டு வண்டி அவர்கள் பக்கம் திரும்பி அவர்களோடு வெளியே போயிற்று.

தோல் உரித்து, ரோமம் நீக்கி, உலர்த்தி முரசு செய்பவர்களும், எருமைத் தோலில் நீண்ட வார்கள் செய்பவர்களும் சேணம், கடிவாளக் கயிறு ஆகியவற்றை செப்பனிடுகிறவர்களும் வீரர்களுடைய காலணிகளை பழுது பார்த்துத் தருபவர்களும் புதிய காலணிகளைச் செய்து தயாராக வைத்திருப்பவர்களுமான தோல்வார் ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள்.

அவர்கள் இருபது பேர் இருந்தார்கள்.

''போதுமா. ஆட்கள் குறைவாக இருக்கிறார்களே.''

''இதுவே அதிகம் அய்யா. கிளம்புவதற்கு முன்னதாகவே நாங்கள் போய் எல்லா சேணங்களையும் சரிபார்த்து விட்டோம். இப்பொழுது கூட போய் சேணங்களையும், கடிவாளங்களையும் சரி செய்யப் போகிறோம். எனவே, குதிரைப்படை கிளம்புவதற்கு முன்பு நாங்கள் போய் நின்று விடுவோம். எந்த கவலையும் வேண்டாம். இருபது பேர் போதும்'' என்று சொல்ல,

அவர்களுக்கும் மூங்கில் தட்டில் பொன் கழஞ்சு தரப்பட்டது. ஆறு கூடை அரிசி தரப்பட்டது.

அவர்கள் ஆடுகள் வேண்டுமென்று கேட்டபோது, வாங்கிக் கொள்ளச் சொல்லி இன்னும் கூடுதலாக காசு தரப்பட்டது.

''கொழுத்த ஆடுகள் உணவுக்காகவும் ஆகும். தோல் வாருக்காகவும் ஆகும். அதுதவிர பொதி சுமந்தபடி எருமைகளும், எருதுகளும், கழுதைகளும் வரும். அவைகளில் ஏதேனும் நொடித்துப் போனால் உடனே அறுத்துவிடலாம்'' என்று பேசிக் கொண்டார்கள்.

பொற்காசுகளும், அரிசியும் வாங்கிக் கொண்டு வெளியேறினார்கள்.

''டேய் தம்பி, எல்லோருக்கும் வண்டி வண்டியாக அரிசி போகிறது. அரிசி கூடையை எடுத்து உள்ளே வை. மட்ட ரக அரிசியை முன்னே வை. நல்ல அரிசி கேட்டால், இல்லை அரசர் வாங்கிவிட்டார் என்று சொல்'' என்று தஞ்சை வணிகர் சொல்ல, உடனே அந்த கடை ஆட்கள் தங்களுடைய பணியை செவ்வனே நிறைவேற்றினார்கள்.

பழுப்பாய், குண்டாய் இருக்கிற அரிசிதான் முன்னே

கடையில் இருந்தது. வாங்க பொதுமக்கள் வந்தபோது அவர்கள் இதைத்தான் காட்டினார்கள். பொதுமக்கள் சீறத் துவங்கினார்கள்.

''நேற்று இருந்தது இங்கே அரிசி. இப்போது இல்லை என்கிறாரே. உன்னிடம் வந்து அரசர் அரிசி வாங்கினாரா. பொய் சொல்லாதே. ஏமாற்றாதே. பொதுமக்களை ஏமாற்றி எப்படி வாழப் போகிறாய்'' என்றெல்லாம் வேகமாய் பேசினார்கள். வணிகர்கள் அசரவில்லை.''

''இருந்தால் தர மாட்டேனா'' என்று பவ்யமான குரலில் சொன்னார்கள்.

மக்கள் நொந்து கொண்டார்கள்.

பாண்டியன் ஸ்ரீ வல்லபன் குதிரை ஏறி போர் பயிற்சி நடக்கும் இடத்திற்கு போனார். வீரர்கள் மிக வேகமாக கத்தியை சுழற்றிக் கொண்டு, உரக்க கத்திக் கொண்டு குவித்து வைத்திருந்த மண்மேட்டின் மீது ஏறி அங்கு நிற்க வைக்கப்பட்டிருந்த வாழை மரங்களை வெட்டி சாய்த்தார்கள். அந்த இடத்திலேயே உலைக்களம் அமைக்கப்பட்டிருந்தது. துருத்தி வேகமாக அசைய நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. கம்மாளர்கள் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு வீரருடைய வாளையும், ஈட்டியையும் கூர் பார்த்துக் கொடுத்தார்கள். மிடிகளை உறுதி செய்தார்கள். வளைந்த கத்திகளை அடித்து நிமிர்த்தினார்கள்.

''மரம் வெட்டினால் உடைந்து போகிறது. இன்னும் கெட்டியாக செய்து கொடு'' என்று ஒரு வீரன் சொல்ல,

அந்த வாளை அடுப்பில் போட்டு ஒரு கம்மாளர் பழுக்க காய்ச்சினார். அவருக்கு அருகே ஒரு கல் தொட்டியில் எண்ணெய் இருந்தது. அந்த எண்ணெயில் மேலும் எண்ணெய் கொட்டினார். பழுக்க காய்ச்சிய வாளை கிடுக்கியில் பிடித்துக் கொண்டு வேகமாக ஓடி அந்த எண்ணெயில் முக்கினார். 'படேர் படேர்' என்று எண்ணெய் சூடு தாங்காமல் வெடித்தது. அவர் நகர்ந்து கொண்டார். இரண்டு, மூன்று துளிகள் அவர் கையில் விழுந்தன. அவர் அதை பொருட்படுத்தவில்லை.

சிறிது நேரம் உள்ளே கத்தி இருந்தது. அதை வெளியே

எடுத்து எண்ணெயை துடைத்து சம்பந்தப்பட்ட வீரரிடம் கொடுத்தார்.

''இப்பொழுது பார். கத்தியே கனமாக இருக்கும். என்ன செய்தாலும் உடையாது. இதில் அடித்துப் பார்'' என்று ஒரு கேடயத்தை தாங்கிக் கொண்டார். அவன் வேகமாக அந்த கேடயத்தை வெட்ட அந்த வெட்டை கேடயம் தடுத்தது. கத்தி அடித்து பின்வாங்கியது.

''ஆஹா, அருமையாக இருக்கிறது உங்கள் வேலை. கெட்டி யாக இருக்கிறது என்பது கைக்கு தெரிகிறது'' என்று சொல்லி அவன் உடைவாளை தன்னுடைய உறையில் சொருகிக் கொண்டு இடுப்பில் கட்டிக் கொண்டான்.

''மிக்க நன்றி அண்ணா.''

''போய் வா. வெற்றியோடு திரும்பி வா'' என்று அவனை கம்மாளர் ஆசீர்வதித்தார்.

முனை முறிந்த ஈட்டிகள் சரிசெய்யப்பட்டன. அம்பில் பொருத்துவதற்கு மெல்லிய கூரான அம்புகளை அவர்கள் அதிகம் வைத்திருந்தார்கள். அதையும் காய்ச்சி அடித்து மூங்கிலில் பொறுத்தி சுத்தியால் அடித்துக் கொடுத்தார்கள். மூங்கில் பிரம்பு நுனியில் அந்த அம்புகள் மிகச் சரியாக பொருந்தின.

சில வீரர்களுக்கு மார்புக்கு நடுவே இரும்புச் சங்கிலிகள் இருந்தன. அந்த இரும்பு சங்கிலிகளை இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையால் கத்தி வீசுவது வழக்கம். மார் மீது வேறு வாள் தாக்காது இருக்க அந்த இரும்புச் சங்கிலி உதவும். இடதும், வலதுமாக அசைக்கிறபொழுது மார் முழுதும் அந்த இரும்புச் சங்கிலி காப்பாற்றும். அவர்கள் அதை வேகமாக அசைத்து காட்டியபோது அதனுடைய நுனிகள் உடம்பில் கீறாமல் இருப்பதற்காக அரம் போட்டு கம்மாளர் அதை சரி செய்து கொடுத்தார்.

அதையும் நெருப்பில் பழுக்கக் காய்ச்சி எண்ணெயில் முக்கி திடம் செய்து கொடுத்தார்.

ஒரு பையன் ஓடி வந்தான்.

''அரையன் இராஜராஜரிடமிருந்து அழைப்பு வந்துவிட்டது.

நம்மை உடனே வரச் சொல்லுகிறார்'' என்று சொல்ல, கம்மாளர் கள் அத்தனை பேரும் வேலையாக இருக்கிறார்கள் என்று அரை யருக்கு சொல்லப்பட்டது.

வந்து நின்ற கிழவரிடம் அவர் வெற்றிலைப் பாக்கோடு பொற்கழஞ்சுகள் நிரம்பிய பையை வைத்தார்.

''ஒரு மாட்டு வண்டி நெல் உங்களுக்குத் தரப்படும். எப்போது வேண்டுமானாலும் வந்து வாங்கிப் போகலாம்'' என்று சொன்னார்.

''குதிரைப்படை கிளம்புவதற்கு முன்பு கிளம்பிவிட வேண்டும். சிறிய குதிரைகளையும், கோவேறு கழுதைகளை யும், அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள். வெளி யில் இருந்தும் வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவை யானவற்றை அதன்மீது வைத்துக் கொள்ளுங்கள். போர் கடுமை யாக இருக்கும். நிறைய கருவிகள் சேதமாகும். அது தவிர அங்கிருந்தும் கருவிகள் கொண்டு வர வேண்டியிருக்கும். அப்போது உங்களுக்கு தனித்த மாட்டு வண்டிகள் தரப்படும்.

வெற்றி பெற்ற தேசத்திலிருந்து கொண்டு வந்து சரி செய் வதோ அல்லது உருக்கி வேறு செய்வதோ உங்கள் விருப்பம். உங்களுக்கு இந்த வருடம் முழுவதும் வேலை அதிகம் இருக்கும். அதுக்கேற்றபடி சன்மானம் தரப்படும். கவலை வேண்டாம்.

மேலைச்சாளுக்கியத்தின் வெற்றி நமக்கெல்லாம் நல்ல வாழ்க்கை தரப்போகிறது, என்று சொல்ல, அந்தக் கிழவர் சந்தோஷமாக தலை அசைத்தார்.

அந்த செய்தியை அங்கங்கே வேலை செய்து கொண் டிருந்த கம்மாளர் குழுவிடம் தெரிவித்தார். அவர்கள் சந்தோஷ மானார்கள். வேகமாக உலையிலிருந்து இரும்பு எடுத்து கடுமை யாக தாக்கினார்கள். தீட்டி கூர் செய்தார்கள்.

''குதிரைக்கு லாபம் அடிக்க வேண்டுமே, எங்கு அடிப்பது'' பாண்டியன் ஸ்ரீவல்லபன் கேட்டார்.

''அது தஞ்சை பிரம்படியில் செய்கிறோமய்யா. இந்த இடத்தில் செய்தால் பல பேருக்கு அதனுடைய விஷயம் புரிய வில்லை. பொதுமக்கள் பார்த்துவிட்டு குதிரையை சித்ரவதை செய்கிறீர்களே சண்டாளர்களா, பாபிகளா' என்றெல்லாம் ஏசு கிறார்கள்.

எனவே நாங்கள் பெரிய தட்டி கட்டி மறைப்பு ஏற்படுத்தி அதற்கு நடுவே குதிரைகளை அழைத்துக் கொண்டு போய் படுக்க போட்டு, கால்களை கட்டி அதற்குண்டான அளவு எடுத்து லாடம் செய்து அங்கேயே அடித்துவிடுகிறோம்.

குதிரை இரண்டு நாள் தவிக்கிறது, பிறகு சரியாகிவிடு கிறது. குதிரை கொடுத்துவிட்டு போங்கள். நாங்கள் லாடம் கட்ட ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்ல, அவர் சந்தோஷமாக குதிரையிலிருந்து கீழே இறங்கினார்.

அவருக்கு வேறு குதிரை கொடுக்கபபட்டது.

அவருடைய குதிரையை பிடித்துக் கொண்டு ஒரு கம்மாளர் முன்னே நடந்தார்.

எங்கோ தவறான இடத்திற்கு அழைத்துப் போகிறார்கள் என்று குதிரைக்கு உணர்ந்துவிட்டது போலும். மிரள, மிரள எகிறி, எகிறி அந்த குதிரை அவருக்கு பின்னே நடந்தது.

இராஜேந்திரருடைய மகன் வீர இராஜேந்திரன் தேர் களுக்கு நடுவே நின்றான். ஒவ்வொரு தேரையும் சாய்த்து, சக்க ரத்தை சுழற்றி பார்த்தான். உறுதியை சோதித்தான். அவன் சோதித்த பிறகு, அவன் சொன்னதற்கேற்ப மசக்கெண்ணெயை அந்த அச்சிலே ஊற்றினார்கள். மறுபடியும் சுழற்றினார்கள். அந்த சக்கரம் எண்ணெயால் வேகமாக சுழன்றது. ஒரு சக்கரம் இடதும், வலதும் ஆடாது இருக்க வேண்டும். உறுதியாக இருக்க வேண்டும்.

''மரத்தச்சர்களை கூப்பிடு. இந்த சக்கரம் நாலா திசை யிலும் அலைகிறது பார்'' என்று சொல்ல, மரத்தச்சர் ஓடி வந்தார்.

''ஒரே ஒரு ஆப்பு சரி செய்து விடலாம்'' என்று சொல்லி சக்கரத்தை கூர்மையாக பார்த்தார். எந்த இடத்தில் ஆப்பு அடிக்க வேண்டும் என்று முன்னும், பின்னும் சுழற்றினார். ஒரு இடத் தில் கை வைத்து, கையிலுள்ள சுண்ணாம்பு கட்டியால் அந்த இடத்தை குறித்துக் கொண்டார்.

முன் பக்க ஆரங்கள், சட்டங்கள் தோல், கால் வைத்து ஏறும் இடம் எல்லாம் மிகச் சரியாக இருந்தன. ஒரு வில் வண்டி குப்புறப் போடப்பட்டு அதன் அச்சு சோதிக்கப்பட்டது. மெல்லியதாக வும், அதேசமயம் உறுதியாகவும் அந்த அச்சு இருந்தது. கடை

யாணிகள் கழற்றப்பட்டு மறுபடியும் சொருகப்பட்டன. குதிரை கள் சில தேர்களில் பூட்டப்பட்டன. அவைகளை ஓட்டச் சொல்லி வீர இராஜேந்திரர் வேடிக்கைப் பார்த்தார். மண் தரை யில் குதிரைகள் சொகுசாக வலம் வந்தன. ஏர் கால் இணைப்பை சரி செய்யவும், வெறுமே பிருஷ்டத்தை வைத்து உட்கார்ந்து கொள்ளவும் உண்டான வசதியும் சில தேரில் இருந்தன. மேலே உள்ள கொடிக் கம்புகள் மறுபடியும் இணைக்கப்பட்டு புலிக் கொடி பறக்க விடப்பட்டது.

எக்காளம் ஊதியதும் சட்டென்று அந்த தேர்களிளெல்லாம் குதிரைகள் பூட்டப்பட்டன. மறுபடியும் எக்காளம் ஊதியதும் ஒன்றன் பின் ஒன்றாக வலம் வரத் துவங்கின. பிறகு அணி வகுத்து நின்றன.

வீர இராஜேந்திரர் முன்னூறுக்கும் மேலான தேர்கள் அப்படி அசைந்து, அசைந்து வரிசை வரிசையாக நிற்பதைக் கண்டு பூரித்துப் போனார்.

வேங்கியை துவம்சம் செய்துவிட வேண்டும் என்று மனதுக் குள் கருவிக் கொண்டார். அவர் சந்தோஷமாக இருக்கிறார் என்று, வீரர்களுக்கு தெரிந்து, தேரோட்டிகளும் சந்தோஷமானார்கள்.

ஒவ்வொரு தேரோட்டிக்கும் தனித்தனியே பொற்கழஞ்சு கள் கொடுக்கப்பட்டன. வெற்றிலைப் பாக்கு வைத்து பொது வாக ஒரு தட்டு தரப்பட்டது. தேரோட்டிகள் எல்லோரும் அம்பு மேலே தைக்காமல் இருப்பதற்கு தோளில் கவசம் அணிந்திருந் தார்கள். கவசத்தில் புலிச் சின்னம் வரைந்திருந்தார்கள். அதே நேரத்தில் ஒரே வடிவத்தில், மஞ்சள் நிற புலிக்கொடியோடு தேர்கள் அசைந்து நிற்பது ஆனந்தமான காட்சியாக இருந்தது.

போர் நிச்சயம் வந்துவிட்டது என்பதை அந்த சிறு தேர்கள் மக்களுக்கு எடுத்துரைத்தன.

தஞ்சை புறம்படியில் தட்டி கட்டி நூற்றுக்கணக்கான குதிரை களை அடைத்திருந்தார்கள். பாண்டியன் ஸ்ரீவல்லபன் தன் னுடைய புதிய குதிரையோடு அந்த குதிரை வீரர்கள் இருக்கும் இடத்திற்குப் போனார். எல்லோர் கையிலும் ஈட்டி இருந்தது. ஒவ்வொரு குதிரையாக சவுக்கால் சொடுக்கி இழுத்து, சேணம் மாட்டி, அதற்கு மீது ஆசனம் வைத்து அழுத்தி, வாய்க்குள் கம்பி வளையம் சொருகி, பிறகு கடிவாளத்தை எடுத்து பிடித்துக்

கொண்டார்கள். வீரர்கள் தாவி ஏறி கடிவாளத்தை வாங்கிக் கொண்டார்கள். சேணத்தில் கால் வைத்து அழுத்திக் கொண்டார் கள். எழுந்து நின்று பார்த்துக் கொண்டார்கள். குதிரைகள் முன்னும் பின்னும் அலைந்தன. மிரண்டன. சிறுநீர் கழித்தன. அந்த இடம் சேறாக மாறியது. முதுகில் அம்பாரத் துணியும், கையில் வில்லும் உள்ள வீரர்களுக்கு மிகச் சிறந்த குதிரைகள் தரப்பட்டன. குதிரை மீது தாவி ஏறி வேகமாக குதிரை ஓட்டியும், சட்டென்று நின்றும், எழுந்து நின்று கொண்டு வில்லால் அம்பு தொடுத்து குறி பார்த்து அடித்தும் சில பயிற்சிகளை மேற்கொண் டார்கள். அவர்கள் தனித்த படையாக நின்றார்கள்.

வீர இராஜேந்திரன் சந்தோஷமானார்.

இந்தப் படையைத் தாங்குவானா. மேலைச்சாளுக்கியத் துக்குப் போராத காலம். அடிபடப் போகிறான். நம் விமலாதித்தன் மாட்டிக் கொண்டு முழிக்கிறார். ஊருக்குள் புகுந்தால் போதும் சர்வநாசம் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

சற்று குள்ளமான பெண் குதிரைகளில் ஈட்டியோடு கூடிய வீரர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். வில் வீரர்களுக்கு பின் னால் போய் நின்று கொண்டார்கள். முன்னூறு பேர் கொண்ட அந்த குதிரைப்படை முன்னும், பின்னும் அலையத் துவங்கியது.

''தஞ்சை நகரை சுற்றி வாருங்கள்'' என்று பாண்டியன் ஸ்ரீ வல்லபன் உத்தரவு இட, தேர்கள் போன வழியே குதிரைகள் போயின. தஞ்சை நகரம் பரபரப்பாகியது.

சேனாதிபதியை தனியே அழைத்து ஆளுக்கு ஐந்து கழஞ்சு பொன் என்று கணக்குச் சொல்லி ஒரு பெரிய மூட்டையை ஸ்ரீ வல்லபர் கொடுத்தார். வெற்றிலை பாக்கு பரிமாறப்பட்டது.

உணவு பற்றி கவலைப்படாதே. உனக்கு பின்னால் வரும். நீ போய் இறங்கும் இடத்தில் சமையல் ஆகி இருக்கும். போய் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொள். அடுத்தபடி எப்பொழுது எழுந்து போக வேண்டும் என்று எண்ணத்திலேயே இரு என்று சொல்ல, அந்த சேனாதிபதி தலை அசைத்தான். பல் தெரிய சிரித்தான்.

வெற்றிலை, பாக்கு ஒரு மரியாதை. பொன்கழஞ்சு சம்பளம். தேர்ப்படையும், குதிரைப் படையும் தஞ்சை நகரை ஊடறுத்துப்

போய் பிரகதீஸ்வரர் கோவிலை ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்து நின்றது.

''ஓய் இனி சோற்றுக்கடை எல்லாம் சேற்றுக்கடையாகி விடும். எல்லா வீரர்களும் இந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட்டால் யாருக்கு விற்பீர். இன்னும் இரண்டு நாளில் தஞ்சாவூர் பாழடைந்த பட்டிணம் போல் ஆகப் போகிறது.''

''பறை அடிப்பவர்கள் நகர்ந்து விட்டார்கள். காடு வெட்டிகள் நகர்ந்து விட்டார்கள். இன்னும் தேர்ப்படையும், குதிரைப் படையும் தான் பாக்கி. அவைகளுக்கு முன் யானைகள் போய் விடும் என்று நினைக்கிறேன்.'' உணவு உண்டு கொண்டே ஒருவர் அலுத்துக் கொள்ள அங்குள்ள அந்தணர்கள் என்ன செய்வதென்று வருத்தத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கடையை தூக்க வேண்டியதுதான் என்று ஒரு வணிகர் சொல்ல, பலர் அதை ஆமோதித்தார்கள். கோயில் பணியாளர்கள் வந்தார்கள்.

வீணை வாசிப்பவரும், தாளம் தட்டுபவரும் சாப்பிட வந்து விட்டு திகைத்துப் போனார்கள்.

எல்லோரும் போய் இந்த கடைகளும் போனால் எங்கு நல்ல உணவு கிடைக்கும் என்று யோசித்தார்கள்.

''பாழடைந்த ஊராக தஞ்சை போய்விடுமோ'' என்று வருத்தப்பட்டார்கள். அவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பல்வேறு விதமான உணர்ச்சி கொந்தளிப்பில் தஞ்சை நகரம் மூழ்கி இருந்தது.

''சீராளா, என்னோடு வா.'' அருண்மொழி குதிரை ஏறி உட்கார்ந்து கொண்டான். சீராளன் தாவி ஏறினான். இரண்டு பேரும் புறம்படி தாண்டி கரைந்தை சாலை நோக்கிப் போனார்கள். கரைந்தை சாலையில் ஒரு மேடு ஏறினார்கள். மூங்கில் தட்டிகளால் இறுக்கமாக கட்டப்பட்ட மறைவிடங்கள் இருந்தன. உள்ளிருந்து குதிரைகள் கனைப்பது கேட்டது. ஒரு குதிரை துள்ளி குதித்தபடியே ஓடி வந்தது. அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அருண்மொழிப்பட்டன் குதிரையை அந்த தட்டி மறைப்புக்குள் அழைத்துப் போனான். குதிரை முன்னும், பின்னுமாக அலைந்தது. அடக்கி முன்னே கொண்டு போனான். பின்னால் சீராளன் வந்தான். இரண்டு பேரும் ஒரு திடலுக்கு வர சுற்றி தட்டி கட்டி இருப்பது தெரிந்தது.

கம்மாளர்கள் எழுந்து நின்று வரவேற்றார்கள்.

''இந்த இரண்டு குதிரைகளுக்கும் லாடம் அடிக்க வேண்டும். எவ்வளவு விரைவாக செய்கிறாயோ அவ்வளவு விரைவாக செய்'' என்று சொன்னார்கள்.

உடனடியாக அந்த குதிரையின் கால்கள் இறுக்க கட்டப்பட்டன. குதிரைகள் முன்னும் பின்னும் தவிக்க சட்டென்று ஒருவன் முதுகில் கை வைத்து தள்ள ஒருவன் கயிறை பிடித்து இழுக்க குதிரை தடேரென்று இடப்பக்கமாக விழுந்தது.

சீராளன் திகைத்துப் போனான்.

அவர்கள் குதிரையின் காலை இறுக நடப்பட்ட இரும்பு கம்பியோடு கட்டினார்கள். குதிரையை அசையாமல் அழுத்தி வைத்துக் கொண்டார்கள். குதிரையின் கால் அளவெடுக்கப் பட்டது. முன்னால் செய்திருந்த வளையம் வேகமாக இன்னும் குதிரைக்கால் அளவிற்கேற்ப சுருக்கப்பட்டது. சிலது நீட்டப் பட்டது. பழுக்க காய்ச்சப்பட்டது. தண்ணீரில் நனைக்கப்பட்டது. அது சூடு ஆறிய பிறகு குதிரையின் காலில் பொருத்தினார்கள். ஆணிகளால் குதிரையின் கால் குளம்புகளில் வேகமாக அடித்தார்கள்.

சீராளன் தவித்துப் போனான்.

''வலிக்காதா, வலிக்காதா'' என்று கேட்டான்.

''வலிக்காது. உன்னுடைய நகத்தை வெட்டினால் வலிக்குமா. அதுபோல குளம்பு வெட்டினால் ஒருபோதும் வலிக்காது. மாறாக குதிரைக்கு சந்தோஷமாகிவிடும். கவலைப்படாதே. முதலில் கொஞ்சம் மிரளும். பிறகு லாடம் இல்லாமல் அதற்கு நடமாட முடியாது.''

''லாடம் எதற்கு?''

கல்லிலும், முள்ளிலும் நாம் போகும்போது காலில் செருப்பு போட்டுக் கொண்டு போவதில்லையா. அதுபோல நல்ல

குதிரைக்கு லாடம் கட்டினால் குதிரை அடிபடாமல் இருக்கும். குளம்பில் இரத்தம் வராமல் இருக்கும். குளம்பு சிதைந்தால் குதிரை நொண்டத் துவங்கும். நொண்டும் குதிரையை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது. ‘லாடம் கட்டிப்பார்’ என்று சொல்ல அவன் குதிரைக்கும் லாடம் கட்டப்பட்டது.

கொஞ்சம் பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

குதிரைகள் துள்ளி எழுந்தன. ஒரு வழியாக குதிரையை வெளியே கொண்டு வந்தார்கள். மெல்ல முன்னும், பின்னும் ஓடவிட்டார்கள். பிறகு தாவி ஏறிக் கொண்டார்கள்.

அருண்மொழி செய்யும் உதவிகளுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியாமல் சீராளன் திகைத்தான்.

* * *

அத்தியாயம்

17

பறை அடிப்பவர்கள் தஞ்சை புறம்படியைத் தாண்டி கருத்தட்டான் குடிக்குள் நுழைந்தார்கள். தத்தகம், தடுமம் என்ற சப்தத்தில் பறையொலி எழுந்து கொண்டிருந்தது. இருபது பறைகள் ஒன்றாக முழங்க அவர்கள் நடந்து போவதை பார்த்து பொதுமக்கள் வியந்தார்கள். ஓடிப்போய் உள்ளிருந்தவர்களை எழுப்பி அழைத்து வந்தார்கள். தெரு முழுவதும் கூட்டம் திரண்டது.

அவர்கள் தொலைவில் வருவது தெரிந்து வீட்டிலுள்ள பெண்கள் சட்டென்று கேணிக்குப் போய் நீர் இறைத்து ஒரு குடம் நீர் கொண்டு வந்து வாசலில் தெளித்தார்கள். தெரு முழுவதும் நீர் தெளித்து தூசு பறக்காமல் மணல் பரப்பை மெத்மெத்தென்று ஆக்கினார்கள். இப்படி நீர் ஊற்றியவரின் வீட்டுக்கு எதிரே பறை அடிப்பவர்கள் சற்று நேரம் நின்று வேறு தாளகதியில் தங்களுடைய பறையை இயக்கினார்கள். நன்றி தெரிவிப்பதாக அந்த தாளம் இருந்தது. தாங்குடுதத்தம் தாங்குடுதத்தம் தைதை தாங்குடு தத்தம்.

மிகப் பெரிய படை ஒன்று தஞ்சையிலிருந்து கீழைச் சாளுக்கியம் நோக்கி கிளம்பிவிட்டது என்று பறை அறிவிப்பவர் மூலமாகவே தெரிந்து கொண்டார்கள்.

''படை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது'' என்று விசாரித் தார்கள்.

''இரண்டு நாள் தூரத்தில் இருக்கிறது'' என்று பறை அறி விப்பவர்கள் பதில் சொன்னார்கள். ஆக, ஏற்கனவே மக்களுக்கு அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்துதான் இருந்தது. இப்பொழுது படை எடுப்பு என்று சொன்னதும், யார், என்ன, எங்கே, எப்பொழுது என்ற விவரமெல்லாம் இன்னும் வேகமாக அலசப்பட்டது.

''அந்த பொம்பள என்னப்பா. பொசுக், பொசுக்கென்று புகுந்த வீட்டை விட்டு ஓடி வருகிறாள்'' என்று ஒருவர் பேச,

''ச்சூ. வாயை மூடு. யாராவது கேட்கப் போகிறார்கள்'' என்று அவன் மனைவி அதட்டினாள்.

அவன் என்ன என்று திரும்பிப் பார்த்தான்.

''என்ன இருந்தாலும் ராஜாங்கத்துப் பெண்மணி. மரியாதை யாகப் பேசு. ஏகவசனமாக பேசாதே'' என்று எச்சரித்தாள்.

அவன் வாய் பொத்திக் கொண்டான்.

அரசாங்கத்தைப் பற்றி பேசுவதற்கு அவளுக்கு துணிவு இருந்தது. ஆனால் லேசான பயமும் இருந்தது.

''அந்தப் பெண்மணி என்ன செய்வாள். ஆண் சரியாக இல்லை, மிகுந்த திமிர் பிடித்திருந்தால் எப்படி அடக்க வேண்டு மோ அப்படி அடக்கி இருக்க வேண்டும். ஒரு நன்றியில் தானே அந்தப் பெண்ணை கட்டிக் கொண்டாய். அந்த நன்றிக்கு விசுவாசமாக இருக்க வேண்டாமா. அப்புறம் அந்த பக்கம் ஒருத்தி, இந்தப் பக்கம் ஒருத்தி என்றால் இவள் எகிறத்தானே செய்வாள்.''

''ஆமாம், உங்களில் யார் மூன்று கட்டாமல் இருக்கிறார் கள்'' என்று பேசியவன் மனைவி எகிற, அங்கு மெல்லியதாய் சிரிப்பு எழுந்தது.

''ஒரு வருடமாக வீட்டோடு இருந்து தினசரி என் கை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதோ வீட்டை விட்டு கிளம்பி ஐந்து நாள் ஆகிவிட்டது. எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. இந்தப் பக்கமாகத்தான் போய் ஆக வேண்டும். போகும்போது நின்று பேசுவார் என்று நினைக்கிறேன்'' என்று ஆதங்கமாய் ஒரு பெண்மணி சொல்ல, மறவர் வீட்டு வேதனை வெளிச்சத்திற்கு வந்தது.

''பேசாமல் போகமாட்டார் கண்ணே. எல்லாருக்கும் வீடு என்றால் ஆசை இருக்கத்தான் செய்யும். ராஜா கூப்பிட்டு விட்டார் என்றால் குதிரை ஏறி போய்த்தானே ஆக வேண்டும். தேசம் நன்றாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள்தானே முக்கியம்.''

காடுவெட்டிகளும், காரை வெட்டிகளும் பின்தொடர்ந்து வருவது தெரிந்தது. அவர்கள் கோல் உயரத் தூக்கி அளந்து கிராமத்து மரங்களின் கிளைகளை தறித்தார்கள். ஒரு வீட்டு

வாசலிலிருந்து நான்கு தப்படி தள்ளி ஒரு மாங்கன்று நடப் பட்டு இருந்தது. அதைச் சுற்றி நின்று பேசிக் கொண்டிருந் தார்கள்.

''எடுத்து விடு'' என்று சொல்ல,

ஒரு பெண் ஓடி வந்து,

''வேண்டாங்கய்யா, நான் ஆசையாக நட்டது'' என்று கெஞ்சினாள். வீரர்கள் திகைத்தார்கள்.

''இல்லம்மா. கிளை விட்டுருக்கு. நாலு பக்கமும் பரவி இருக்கு. யானை போகலாம். குதிரைக்கு கஷ்டமாக இருக்கும். அதனால் நாங்கள் இடுப்பு வரைக்கும் அறுத்து விடுகிறோம். மேலே சாணம் கொண்டு வந்து தண்ணீர் ஊற்றி வை. பச்சென்று மறுபடியும் வந்துவிடும். நாங்கள் திரும்புவதற்குள் பெரும் மரமாக பார்ப்போம்'' என்று சொன்னான்.

அவர்கள் திரும்புவதற்கு குறைந்தபட்சம் ஒன்றரை வருட மாவது ஆகும் என்று அந்த பேச்சில் தெரிந்தது.

மக்கள் நெட்டுயிர்த்தார்கள். ஒருவரை ஒருவர் ஏக்கமாக பார்த்துக் கொண்டார்கள்.

திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தவன் சட்டென்று எழுந்தான். வீட்டிற்குள் போய் மெல்லிய மூங்கிலோடு வெளியே வந்தான். அவன் மனைவி அவனை பார்த்து திகைத்தாள்.

''வேண்டாம், வேண்டாம்'' என்றாள். ஆனால் அவன் முடியாது என்று சொல்லி, அவளை விலக்கிவிட்டு வீட்டு வாசலில் அந்த மூங்கிலை அழுத்தி நட்டான். அவன் நவ கண்டம் கொடுக்கப் போகிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. எல்லோரும் அவனை, ''யோசித்து செய்யப்பா, யோசித்து செய்யப்பா'' என்று வேண்டினார்கள்.

அவன் உறுதியாக அந்த நவகண்டம் கொடுக்கும் இடத் தில் வாள் ஊன்றி கம்பீரமாக உட்கார்ந்திருந்தான். ஊர்மக்கள் அவனையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மாமரம் இடுப்பு வரை வேகமாக தறிக்கப்பட்டது.

''இழுத்து பின்பக்கம் போடுங்கள்'' என்று சொல்லப் பட்டது. கிளை, படர்ந்து நிழலாய் இருந்த அந்த இடம் சட்டென்று வெளிச்சமாகியது. வீதி அகலமானது போல் தோன்றியது.

''அடுத்தபடி பெருவீதியில் உள்ளவர்கள் மரம் நடும்போது யோசித்து நட வேண்டும்'' என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

வேங்கியின் அரண்மனையில் விமலாதித்தர் காலை உணவு எடுத்துக் கொண்டிருந்தார். மூன்றாவது கவளம் கதம்ப சோறு சாப்பிடும் போது சட்டென்று நெஞ்சில் கத்தியால் குத்தியது போல வலி ஏற்பட்டது. உணவை வாயில் வைத்துக் கொண்டே விழுங்க முடியாமல் அவஸ்தைப்பட்டார். கழுத்து நரம்புகள் புடைத்தன. தலை சுளீர் என்று வலித்தது. என்ன செய்வது என்று தெரியாமல் மெல்ல எழுந்து கை அலம்பும் இடத்திற்குப் போய் வாயில் உள்ள உணவைத் துப்பினார். வாய் கொப்பளித்தார். முகம் துடைத்துக் கொண்டார். நிமிர்ந்து இழுத்து மூச்சுவிட்டார். இப்பொழுது தேவலாம் என்பது போல் இருந்தது. ஆனால் வந்து உட்கார்ந்ததும் மறுபடியும் நெஞ்சு வலித்தது. என்னால் இங்கே நடக்கக்கூடியது ஒன்றுமே இல்லை என்று வேதனையாக இருந்தது.

ஏன் துப்பிவிட்டீர்கள் என்று கேட்பதற்குக்கூட இங்கு ஆள் இல்லை. உணவை வைத்துவிட்டு போய்விடுகிறார்கள். குடிக்க நீர் கேட்டால் கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள்.

மற்றபடிக்கு யாரும் எந்தவிதமான உபசரனையும் செய்வதில்லை. அவர்தான் இந்த தேசத்து மன்னர். இராஜேந்திர சோழர் இளவரசு பட்டம் கட்டி தஞ்சை அரண்மனையில் இருந்த பொழுது அவருக்கு மக்கள் செய்கின்ற சிஷ்ருஷ்ஷை பார்த்து வியந்து போனார்.

அடைப்பைக்காரன் ஒரு பக்கம் வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்து பாக்குகள் மிகச்சிறிய துண்டுகளாகச் செய்து தேனில் ஊறிய தேங்காய் துண்டுகளை உள்ளே வைத்து கிளி போலவும், வளையம் போலவும் மடித்துக் கொடுப்பான். அதை சாப்பிட்டுக் கொண்டே ஓலை நாயகத்திற்கு கட்டளைகள் சொல்வார். உண்டதற்கு ஏற்ப பாத்திரம் நீட்டப்படும். வாய் கொப்பளிக்க இன்னொரு பாத்திரம் எடுத்து வரப்படும். சூடாக குடிக்க வேறு யாரோ எடுத்து வருவார்கள்.

வணிகர் வரச் சொன்னதும் உள்ளே நுழைந்து விதம் விதமான ஆடைகளை விரிப்பார்கள்.

''எத்தனை காழகம் (கறை போட்ட வேட்டி) இருக்கிறது?''

''பதினாறு இருக்கிறது.''

காழகம் கொடுத்தவருக்கு ஒரு பெட்டி நிறைய முத்துக் களை இராஜேந்திரர் பரிசளித்தார். உறுதியான பெரிய வெண் முத்துக்கள் அவை. பல தலைமுறையை பார்த்தது என்று அதை தொடும்போதே தெரிந்தது.

மன்னனாக உட்கார்ந்து இருக்கிறோமே தவிர எந்த மரியாதையும் இல்லை. மரியாதையின்மைக்குக் காரணம் குந்தவை. அவள் அனுசரித்து இருந்திருந்தால், அவள் சரியாக இருந்திருந்தால் இந்த இடத்தை கம்பீரமாக ஆட்சி செய்திருக் கலாம். நாலு பேருக்கு முன்பு அவமானப்படுத்தவே அவள் திரும்பத் திரும்ப முயற்சி செய்தாள். என்ன அவமானப்படுத்து வாளோ என்ற பயத்திலேயே இருக்கும்படியாகிவிட்டது. குந்தவை யின் மீது பயமில்லை. அடித்து இறக்கிவிடலாம். ஆனால் இராஜேந்திர சோழன் அமைதியாய் இருக்க மாட்டான்.

மறுபடியும் நெஞ்சு வலித்தது. அவர் அப்படியே அந்த ஆசனத்தில் சுருண்டு படுத்துக் கொண்டார். யாராவது துணியை மேலே போர்த்திவிட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் அதற்கும் யாரும் வருவதாக தெரியவில்லை.

காடுவெட்டிகள், காரைவெட்டிகள் போனதும் தரையை சமனப்படுத்த கொத்தனார்கள் வந்தார்கள். ஓரத்தில் இருந்த மண்ணை எடுத்து வந்து பள்ளங்கள் நிரப்பினார்கள். மணல் கொட்டி அதன் மீது கெட்டிப்படுத்தினார்கள். திமிசால் ஓங்கி அடித்தார்கள். முன்னால் நீட்டிக் கொண்டிருந்த வீட்டுப் பந்தலை கால்களை தூக்கி கழற்றி விட்டார்கள்.

''எடுத்து ஓரமாக வைத்துக் கொள்ளுங்கள். பிற்பாடு போட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்கள்.

தெரு அகலமாகியது. ஒருசேர நாற்பது குதிரைகள் அந்த தெருவில் போகலாம். அவர்களோடு பேசுவதற்கு பொது மக்களுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைத்தது. குடிப்பதற்கு நீரும், மோரும் கொடுத்தார்கள்.

''எவ்வளவு நாள் போர் இருக்கும்.''

''யாருக்குத் தெரியும்.''

''நேரே வேங்கிக்கா. இல்லை வேறு எங்கேயாவதா.''

''எங்களை வேங்கிக்கு போகச் சொல்லித்தான் உத்தரவு.''

''உங்களை வேங்கிக்கு என்றால் வேறு யாரோ வேறு எங்கோ போகிறார்கள் என்று அர்த்தமா.''

''அப்படியும் இருக்கக்கூடும்.''

''எங்கே? எப்படி?''

''யாருக்குத் தெரியும்.''

''இதற்குமேல் சாமி சத்தியமாக ஒன்றும் தெரியாதா.''

'எதற்கு இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் கேட்கிறீர்கள். எனக்கு சாமி சத்தியமாக இதற்கு மேல் ஒன்றும் தெரியாது. ஆனால் யூகமாக உங்களிடம் பேச முடியும்.''

''யூகமாகத்தான் பேசுங்களேன்.''

''படை திருவொற்றியூர் போய் சேர்ந்து இரண்டாக பிரியும்.''

''அடடே.''

''ஒன்று வடமேற்காக போகும். ஒன்று கிழக்குப் பக்கமாக கடற்கரை ஓரமாகப் போகும். இரண்டு விதங்களாக வளைந்து போய் மேலைச் சாளுக்கியத்தை தாக்கி பிறகு, வேங்கிக்கு ஒரு படை போகும். நேரிடையாக வேங்கியைப் போய் கைப்பற்றி அங்கு உள்ள இப்போதைய இளவரசனை விரட்டி விட்டு நமது இராஜராஜ நரேந்திரனை அரச பதவியில் வைக்கக்கூடும். இதுதான் நடக்கும் என்று நான் நினைக்கிறேன். உண்மை என்ன வென்று தெரியவில்லை'' என்று பட்டும்படாமல் ஒரு கொத்த னார் பதில் சொன்னார்.

மக்களுக்கு அது போதுமானதாக இருந்தது.

கால் நீட்டி படுக்கவும் முடியவில்லை. வயிறு மிரட்டுகிறது. நெஞ்சை ஏதோ அடைக்கிறது. இடது கை முறுக்கினால் போல் வலிக்கிறது. கண்களுக்கு நடுவே வலி இருக்கிறது. சுவாசம் சரியாக விட முடியவில்லை. இழுத்து இழுத்து விட வேண்டியிருக்கிறது. ஏதோ உடம்பில் தப்பு நடந்துவிட்டது. என்ன தவறு. வைத்தியரை அழைத்து வரச் சொல்லலாமா. அவர் மணியை அடித்தார்.

வாசலில் உள்ளவன் உள்ளே ஓடி வந்தான்.

''வைத்தியரை அழைத்து வா. உடல்நலம் நன்றாக இல்லை.'' என்று சொல்ல, அவன் உற்றுப் பார்த்தான்.

''என்ன செய்கிறது'' என்று கேட்டான்.

''வைத்தியரை அழைத்து வாய்யா. இது என்ன கேள்வி.''

''இல்லை. என்ன செய்கிறது என்று தெரிந்தால் அதற்கேற்ற படி வைத்தியரை அழைத்து வரலாம். எலும்பு முறிவா, வயிற்று வலியா, ஜுரமா அதுக்கேற்றபடி ஆட்களை அழைத்து வருவேனே.''

''நெஞ்சு வலிக்கிறதய்யா.'' அவர் உரத்த குரலில் சொல்ல, அவன் நின்று பார்த்தான். நெற்றியில் கை வைத்தான். திரும்பி தடதடவென்று படிகளில் இறங்கி வெளியே ஓடினான்.

இராஜ நரேந்திரன் அற்புதமான பையன். மிக நிதானமான பையன். ஆனால் அவனுக்கு சரியான போஷாக்கு அளிக்கப் படவில்லை. தாயின் பக்கம்தான் இருக்க வேண்டும் என்று அவனுக்கு யாரோ சொல்லிவிட்டார்கள். தாயை எதிர்த்தால் இராஜேந்திரர் உதவி கிடைக்காது என்று அவனும் பயந்திருக்கக் கூடும். இராஜேந்திரன் உதவிதான் மிக முக்கியம் என்று கணக்குப் போட்டிருக்கக்கூடும்.

மேலைச்சாளுக்கியத்தின் பக்கம் விஷ்ணுவர்த்தன் விஜயாதித்தன் இருப்பதால் இராஜராஜ நரேந்திரன் வேறு வழியின்றி தன்னுடைய தாய்மாமன் இராஜேந்திரரை சரணடைந்திருக்கிறான். அவனை இன்னும் நிதானமாக வைத்திருக்கலாம். நீயே முறைத்துக் கொள். நீயே போர் செய். நீயே வலுச்சண்டைக்கு கூப்பிடு. நீயே விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை அடித்துத் துரத்து என்று சொல்லி இருக்கலாம். ஆனால் அதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை.

விரிவாக பேசுவதற்குள் குந்தவை ஓடிப்போய் அரண்மனைக் கதவை தாழ்ப்போட்டுக் கொண்டாள். அவனையும் அழைத்துக் கொண்டான். அவனோடும் பேச முடியவில்லை. அவளோடும் பேச முடியவில்லை. அவளோடும் பேச முடியவில்லை. ஊர் வழித்துக் கொண்டு சிரித்தது. அவமானமாகப் போயிற்று. எல்லா அதிகாரிகளும் பார்க்கும்பொழுதே நமட்டுச்

சிரிப்பு சிரித்தார்கள். அந்த சிரிப்பு மனதை குடைந்தது, நெஞ்சை அறுத்தது.

"உடனடியாக விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு, என் மகனுக்கு பட்டம் கட்டப் போகிறீர்களா, இல்லையா" என்று இரண்டாம் மனைவி கேட்க,

"யோசித்து சொல்கிறேன்" என்று அவர் பதில் சொன்னார். ஆனால் "நீர் என்ன யோசிப்பது, யோசிப்பதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்" என்று அவள் நகர்ந்து விட்டாள்.

ஜெயசிம்மன் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக் கிறானாம். மேலைசாளுக்கிய மன்னன் சத்யாசிரியனுக்கு பிறந்த ஜெயசிம்மன் இரண்டாம் ஜெயசிம்மன்.

"மூத்தவன் இருக்க இளையவனுக்கு பட்டம் கட்ட வேண்டும் என்று ஏன் துடிக்கிறீர்கள்." ஜெயசிம்மனை முறைப் பாக விமலாதித்தர் கேட்டார்.

"விஷ்ணுவர்தன விஜயாதித்தன் எங்களுக்கு ஒன்றும் செல்லப்பிள்ளை இல்லை. அவன் ஒரு பகடைக்காய். இந்த கீழைச்சாளுக்கியத்தை மேலைச்சாளுக்கியம் ஆட்சி செய்ய வேண்டும். நாங்கள் இந்த இடத்தில் அரசாங்கம் நடத்த வேண் டும். இங்கு அரசாங்கம் நடத்துவதற்கு பொதுமக்கள் பார்வைக்கு விஜயாதித்தனை ஏற்படுத்திவிட்டு மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்வோம்."

"அப்பொழுது என்னுடைய நிலைமை."

"மெல்ல விலகிக் கொள்ளுங்கள். வழக்கம் போல நீங்கள் குதிரை ஏறி திருவாரூருக்கு போய்விடுங்கள். திருவாரூரில் வேறு ஏதேனும் ஒரு கணிகை கிடைப்பாள். அந்த கணிகையோடு ஒழுங்காக குடித்தனம் செய்யுங்கள். எதற்கு குந்தவை எல்லாம்" என்று சொல்லி இடிபோல சிரித்தார்.

அவருக்கு வெட்கமாகியது.

போனமுறை சத்யாசிரியனிடம் விமலாதித்தன் தோற்றுப் போய் அவரது தமையனாரும், அவரும் தஞ்சைக்கு வந்து திருவாரூரில் தங்கி காத்திருந்த போதுதான் குந்தவை ஓடிவந்து காதலித்தாள்.

நான் பார்த்துக் கொள்கிறேன் கவலைப்படாதே என்று இராஜேந்திரர் உறுதி சொன்ன பிறகுதான் அங்கே தங்கி இருந்தார். அவருடைய உதவியால் மறுபடியும் வேங்கியை மீட்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதைத்தான் ஜெயசிம்மன் சுட்டிக்காட்டுகிறான்.

என் தந்தை விரட்டி ஓடினாயே. இப்பொழுது நான் விரட்டு கிறேன் ஓடு என்று சொல்லாமல் சொல்கிறான்.

அவர் திருதிருவென்று முழிப்பதை பார்த்துவிட்டு,

''கவலைப்படாதீர்கள், உங்களை நாங்கள் துரத்தப் போவதில்லை. உங்கள் மனைவி குந்தவையை துரத்த வேண்டும் என்று நினைத்தோம். இராஜராஜ நரேந்திரனை துரத்த வேண்டும் என்று நினைத்தோம். அவர்கள் இரண்டு பேரும் தானாக ஓடிப் போய் விட்டார்கள். வெறுமே ஒரு போக்குக்கு படைகளை எல்லைப்புறம் அனுப்பி இருக்கிறோம். வெகு நிச்சயம் இராஜேந் திரர் வருவாரல்லவா. வழியிலேயே மடக்கி தாக்குவதாக எண்ணம்.''

சாலையை சமன் செய்த கொத்தனார்கள் போன பிறகு யானைகள் வந்தன. யானைகள் வரும் நேரம் உச்சி வெயிலாயிற்று. யானைகள் பொதுமக்களை நோக்கி கைகளை நீட்டிய வண்ணம் இருந்தன. ஏதாவது கொடு, ஏதாவது கொடு என்று கேட்டன. மக்கள் வாழைப்பழங்களையும், பூசணிக்காய்களையும், புடலங்காய்களையும் வைத்தார்கள். அவைகள் ஆசையாக உண்டன. அறுபது யானைகள் புலிக்கொடியோடு நடந்து போவதைப் பார்க்க கம்பீரமாக இருந்தது.

''சோழம் சோழம்'' என்று மக்கள் கத்தினார்கள்.

ஓரமாக இருந்த ஒரு மரக்கிளையை யானை இழுத்தது. யானைப் பாகன் அதை அடித்து திருப்பினான்.

''அய்யா, போனால் போகிறது. வெறும் மாங்கிளைதான் யானை எடுத்துக் கொள்ளட்டும்'' என்று அந்த ஊர் பெரியவர் சொல்ல, அவன் யானையை நிறுத்தினான். மரக்கிளையை நிதானமாக ஒடித்து யானை மென்று தின்றது. எல்லா யானைகளும் நகர்ந்த பிறகு அந்த யானையும் நகர்ந்தது.

வைத்தியர் விமலாதித்தன் நெஞ்சில் கை வைத்து பார்த்து விட்டு, ''மிகப் பலவீனமாக இருக்கிறார். உணவு சரியாக சாப்பிடு வதில்லையா. உள்ளே ஏதேனும் குமைச்சலா. உள்ளே தெளி வாக இருங்கள். உங்களுக்கு பலவீனம்தான். அதை பெரிது படுத்திக் கொள்ளாதீர்கள்'' என்று சொன்னார்.

உற்சாகமாக இருப்பதற்கு குளிகைகள் கொடுத்தார். ஆனால் அந்த குளிகைகள் போட்டவுடன் பொங்கி சீறலாக வாந்தி வந்தது. வைத்தியர் திகைத்தார். ஜெயசிம்மனிடமும், விஷ்ணு வர்தன விஜயாதித்தனனிடமும் சொல்லும்படி பணித்தார்.

அமைதியாக தூங்குங்கள். எல்லாம் சரியாகிவிடும். நீங்கள் மனதை உழப்பிக் கொள்கிறீர்கள். அதுதான் படபடப்பு அதிக மாக இருக்கிறது. இரத்தக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இரத்தக் கொதிப்பிற்குத்தான் குளிகை கொடுத்தேன். அதை துப்பிவிட் டீர்கள். மறுபடியும் சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்த குளிகை யை கொடுக்கிறேன். எப்பாடுபட்டாவது அதை உள்ளே செலுத் துங்கள். அது உங்களை சுத்தப்படுத்தும்'' என்று சொன்னார்.

விமலாதித்தன் அதை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ஏன் இவ்வளவு கேவலமான நிலையை அடைந்து விட்டோம் என்ற வேதனை அவர் நெஞ்சை அறுத்துக் கொண் டிருந்தது.

இத்தனை வேதனை தெரிந்த பிறகும் அவளுக்கு சொல்லி யிருக்க கூடாது. இளையாள் வந்து பார்த்திருக்க வேண்டாமா. குந்தவை மோசமானவள்தான். ஆனால் இந்நேரம் ஓடிவந்திருப் பாள். இராஜராஜ நரேந்திரன் அருகில் வந்து தோளைத் தொட் டிருப்பான். இங்கு யாரும் வரவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக சாகப்போகிறேன் என்ற ஒரு எண்ணம் தோன் றியது.

'மரணமா.' அவர் யோசித்தார்.

'ஆமாம்' என்று அடிமனது சொல்லிற்று. மறுபடியும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார். தாறுமாறாக உள்ளிருந்து ஒரு அசைவு இருப்பதை அவர் உணர்ந்தார். மரணம்தான் என்று அவருக்குப் புரிந்துபோயிற்று. மெல்ல கண்களில் நீர் கோர்த்தது. அழத் துவங்கினார்.

மனிதருக்கு மரணம் வரும் அது இயல்புதான். மரண மில்லா பெருவாழ்வு எவருக்கும் இல்லை. ஆனால் யாரும் துக்கப் பட்டு சாகக்கூடாது. தன்னைப் போல் வேதனைப்பட்டு சாகக் கூடாது. யாருமின்றி, எவர் உதவியும் இன்றி மரணத்தோடு மட்டும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. யாரிடமாவது பேசினால் மனம் சாந்தமாகும். ஆனால் யாரிடம் பேசுவது. வாயிற்காப் பாளனோடா, வைத்தியரோடா. அவர் மனம் வெறுத்தார். யாரிடம் பேச வேண்டுமோ அவர்கள் அருகில் இல்லை என்று உள்ளே நொந்துக் கொண்டார். மௌனமானார். மன உளைச்சல் அதிக மாகியது.

இரண்டே இரண்டு தேர்கள் மட்டும் வேகமாக கருந் தட்டான்குடியைத் தாண்டி அந்த ஊரின் கடைசி பக்கம் போய் நின்றன. அங்கிருந்து இரண்டு சகோதரர்கள் இறங்கினார்கள். அவர்கள் முதுகில் அம்பாரத் துணிகள் இருந்தன. வில்லை வண்டி யிலேயே வைத்துவிட்டு அவர்கள் வீடு நோக்கி உள்ளே நுழைந் தார்கள். தட்டிக் கதவை திறந்தார்கள். சிறிய தோட்டம் தாண்டி னார்கள். திண்ணையில் போய் உட்கார்ந்து கொள்ள வீட்டி லிருந்து அவர்களுடைய மனைவிமார் ஓடிவந்தார்கள்.

''வந்துவிட்டீர்களா நீங்கள் வரவேண்டும் என்று பிரார்த் தனை செய்து கொண்டே இருந்தேன். இப்பொழுதுதான் உள்ளே விளக்கேற்றினேன். நெய் விளக்கு. வாருங்கள். காலணியை கழற்றிவிட்டு வாருங்கள். உள்ளே வந்து சாமி கும்பிடுங்கள் என்று சொல்ல, அவர்கள் காலில் உயரமாக கட்டப்பட்டிருந்த தோல் வாரை அவிழ்த்து காலணிகளை கழற்றினார்கள். உள்ளே போனார்கள். வீடு அவர்களை எழுந்து நின்று வரவேற்றது. குழந்தைகள் ஓடி வந்து கட்டின. வயதான ஒரு வாலிபன் அவரது மகன் ஓடி வந்து அவரை ஆரத் தழுவிக் கொண்டான். அவரும் அவனை இறுக்கிக் கொண்டார்.

வீட்டின் மத்திய கூடத்தில் சுவரில் பெரிதாய் வட்டமாய் மஞ்சள் எழுதி மஞ்சளின் மீது குங்குமம் வைத்து, குங்குமத் திற்கு எதிரே பெரிய அகல் விளக்கு வைத்து, அகல் விளக்கு நிறைய பசுநெய் ஊற்றி பெரிதாய் திரி இருந்தது. அதுதான் கடவுள். தீபம்தான் தெய்வம்.

''ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாயா''
ஓம் நமச்சிவாய ஓம் ஓம் நமச்சிவாயா''

அந்த வீடு முழுவதும் கைகூப்பி கடவுளை வேண்டிற்று. அண்ணனும், தம்பியும் ஊத்தை அடையா வண்ணம் மறுபடியும் வரவேண்டும் என்று பெண்கள் அழுது புலம்பி விளக்கை நமஸ்கரித்தார்கள். குழந்தைகள் விழுந்து வணங்கினார்கள். அவர்கள் இரண்டு பேரும் கைகூப்பி விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுபடியும் கொண்டு வந்து சேர். இது எதுவும் என் கையில் இல்லை. உன் கையில் இருக்கிறது. என்னை கவனமாக மீட்டுக் கொண்டு வந்துவிடு. என் மனைவி மக்களை பார்க்க வேண்டும். இந்த வீட்டில் நூறாண்டு காலம் வசிக்க வேண்டும் என்று ஆசை இருக்கிறது. அதை நிறைவேற்றுவாயாக. நிறைவேற்றினால் அணையாத தீபத்தை, என்றும் நெய் இருக்கின்ற தீபத்தை இங்கு ஏற்றுகின்றேன் என்று வேண்டிக்கொண்டார்.

பையை பிரித்து, இரண்டு கழஞ்சு காசு எடுத்து மனைவியிடம் கொடுத்தார். ''இதற்கு நெய் வாங்கிக் கொள். இடையறாது தீபம் எரியட்டும்'' என்று சொல்ல அவள் சரி என்று சொன்னாள். அவ்விதமே இரண்டு கழஞ்சு காசு எடுத்து அவருடைய சகோதரர் தன் மனைவியிடம் நீட்டினார்.

''அக்கா தீபம் ஏற்றட்டும். நீ தினசரி படையல் போடு. ஏதேனும் ஒன்று நைவேத்யம் செய். குறைந்தபட்சம் அவலாவது வை. நீ நைவேத்யம் செய்ய முடியாது என்ற நாள் இருப்பின் நீ உன்னுடைய மகனை வைத்து செய் அல்லது அவருடைய மகன் செய்யட்டும். தினசரி நெய் விட்டு விளக்கு எரிய வேண்டும். நைவேத்யம் நடக்க வேண்டும். அது எங்களுக்கு உதவி செய்யும்'' என்று சொல்ல,

வீடு சத்தியமாக செய்வதாக உணர்ச்சிப்பூர்வமாக சொன்னார்கள். எல்லோரும் ஆரத்தழுவிக் கொண்டார்கள்.

மறுபடி மூத்த மகனை இறுக தழுவிக் கொண்டார்.

''உன்னை நம்பித்தான் போகிறேனே. அம்மாவையும், சின்னம்மாவையும் மிகக் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்ல அவன் ''சரி'' என்று தலையசைத்தான்.

''வெறுமே உட்கார்ந்து கொண்டு ஊர் சுற்றாதே. மாந்தோப்புகளில் அலையாதே. உடற்பயிற்சி செய். புஜங்களை உறுதி

செய். கைகளை கரடுமுரடாக்கு. ஒரு மறவன் மெல்லிய உருவத்தினனாய் இருக்கக்கூடாது. நன்றாக சாப்பிடு'' என்று சொன்னார்.

பையிலுள்ள மொத்த கழஞ்சுகளையும் எடுத்து மனைவியிடம் நீட்டினார். அதேபோல சகோதரரும் செய்தார். இரண்டு பேரும்,

''எங்களிடம் சுத்தமாகக் காசு இல்லை. அது எங்களுக்கு தேவையும் இல்லை. நீங்கள் நலமாக இருக்க வேண்டும். அதுதான் எங்கள் பிரார்த்தனை. விரைவில் வந்துவிடுவோம.''

''விரைவில் என்றால்..

''ஒரு வருடமாவது ஆகும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.''

''எவ்வளவு தொலைவு பயணம்.''

''வேங்கியை நோக்கி பயணம். ஆனால் வேங்கியோடு மட்டும் நிற்காது.''

''பிறகு.''

''கலிங்க தேசம் பிறகு வங்காளம் எனப் போக வேண்டி இருக்கும்.''

''அதாவது வங்காளம் வரையிலா.'' அந்த பையன் புரிந்து கொண்டது போலக் கேட்டான்.

''ஆமாம், கங்கை நதிக்கரை வரையும் இருக்கும்.''

''யார் சொன்னார்கள்.''

''வேறு வழியில்லை. அவ்வளவு தொலைவு போனால் தான் எதிரிகளை அடக்க முடியும். இல்லையெனில் கீழைச் சாளுக்கியம் இவருடைய ஆதரவில் எகிறிக் கொண்டிருக்கும். மேலைச் சாளுக்கியத்தை நிர்மூலம் செய்துவிட்டு, கீழைச் சாளுக்கியத்திற்கு தொந்தரவு செய்கின்ற அத்தனை பேரையும் அடக்கி விட்டுத்தான் திரும்புவோம். அது ஒரு வருடமாவது ஆகாதா'' என்று சொல்ல, வீடு ''ஆமாம்'' என்று சோகமாக தலை அசைத்தது.

அவர்கள் வீட்டிற்கு வெளியே வந்தார்கள். திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். கிராமம் அவர்களை சூழ்ந்து

கொண்டது. அவர்கள் செருப்பணிந்து வாரை இடதும், வலது மாகப் போட்டு இறுக்கிக் கொண்டார்கள். எழுந்து நின்றார்கள். கூட்டத்தை விலக்கி தேர் ஏறினார்கள். தொலைவே பெரிய தேர் கூட்டம் வருவது தெரிந்தது.

அந்த இரண்டு வீரர்களை விட்டு விட்டு ஜனங்கள் வரிசை யானார்கள். தேரை வரவேற்க தெளிவானார்கள். மறுபடியும் நீர் தெளித்தார்கள். தூசு எழுப்பாமல் இருக்க தரையை சமனம் செய் தார்கள்.

''என்னய்யா ஆயிற்று உமக்கு.'' சத்யாசிரியன் மகன் ஜயசிம்மன் மேலைச்சாளுக்கியத்து மன்னன் கம்பீரமாக உள்ளே நுழைந்தான். அவனைச் சுற்றி மெய்க்காவல் வீரர்கள் இருந் தார்கள்.

ஓலை நாயகமும், மந்திரிகளும் உடன் வந்தார்கள்.

திடீரென்று அந்த அறைக்குள் இருபது, முப்பது பேர் வர அதுவும் அவருக்கு சிரமமாக இருந்தது. வெளிச்சம் குறைந்து, காற்று குறைந்து மூச்சுத் திணறுவது போல் ஏற்பட்டது.

''நெஞ்சு வலிக்கிறது'' ஒரே வரியில் பதில் சொன்னார்.

''நெஞ்சு என்று ஒன்று உமக்கு இருக்கிறதா. கட்டிய மனைவியும், பெற்ற பிள்ளையும் ஓடிவிட்டார்கள். அமைதி யாகத்தான் உட்கார்ந்து கொண்டு உணவு உண்டு கொண்டிருக் கிறீர். அப்புறம் வலிக்கிறது என்று சொன்னால் யார் நம்புவார்கள். அவர்களை சுத்தமாக மறந்துவிடும். ஓடிப்போன மனைவியை நினைத்து தினந்தோறும் ஏங்காதீர். பிள்ளை நீ வேண்டாம் என்று போய்விட்டான். பிறகு அவன் எதற்காக இங்கு வர வேண்டும். தயவு செய்து நான் சொல்வதைக் கேள்.

இளைய ராணியை முழு மனதாக ஏற்றுக்கொள். வெறுமே சிங்காரத்துக்கென்று வைத்துக் கொள்ளாதே. அவளிடம் நீ எந்தவிதமாகவும் மரியாதையாக பேசுவதில்லை. வெறும் படுக்கை சுகத்திற்காகத்தான் அவளை வைத்துக் கொண்டிருக்கிறாய். அது எவ்வளவு பெரிய வேதனையை அவளுக்கு கொடுக்கிறது தெரியுமா. அவளை பட்டமகிஷி என்று அறிவி. பிள்ளைக்கு இளவரசு பட்டம் கட்டு. விஷ்ணுவர்தன விஜயாதித்தன் இங்கு இளவரசனாக நியமிக்கப்படட்டு. நாளை காலை அதற்குண்டான

வேலையை நான் துவங்கப் போகிறேன். நாளை மறுநாள் விஷ்ணு வர்தன விஜயாதித்தன் இளவரசனாவான். அதற்குண்டான ஓலை களை தருகிறேன். கையெழுத்திடும்.''

அவன் ஓலைகளை நீட்டினான்.

அவர் ஓலைகளைப் படித்து பார்த்தார். வலது பக்கம் படுக்கையில் வைத்தார்.

''இப்போதைக்கு வேண்டாம். என் உடல்நிலை சரியாகட் டும். பிறகு பேசலாம்.''

''உன் உடல்நிலைக்கு என்ன கேடு.''

''நெஞ்சு வலிக்கிறதய்யா.''

''இந்த இடத்திலா.'' ஜெயசிம்மன் முஷ்டியை மடக்கி நச் சென்று இடதுபக்கம் குத்தினான்.

வலி சுளீர் என்று உடம்பு முழுவதும் பரவியது. தலையில் அடித்தான்.

''அம்மா'' என்று விமலாதித்தன் அலறினார்.

''வைத்தியரே என்ன விஷயம்'' என்று கேட்க, வைத்தியர் மெல்ல காதில் ஏதோ ஓதினார்.

ஜெயசிம்மன் திகைத்தான்.

''சரி, உமது உடம்பு சரியாகட்டும். பிறகு பார்த்துக் கொள்ள லாம். வாருங்கள் போகலாம். ஒரு வைத்தியரும், ஒரு வீரரும் இங்கு காவல் இருக்கட்டும். விஷ்ணுவர்தன விஜயாதித்தனை நான் அழைத்ததாக உடனே அழைத்து வா. அவனுக்கு வேலை கள் இருக்கின்றன'' என்று சொல்லி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

சட்டென்று அந்த இடம் வெளிச்சமாகியது.

அவருக்கு வலி அதிகமாகியது. மூச்சு திணற ஆரம்பித்தது. நாக்கு இழுக்க ஆரம்பித்தது. நெஞ்சில் குத்தியதால் ஏற்பட்ட விளைவு கழுத்து புடைக்க ஆரம்பித்தது. வயிறு குழைந்தது. சிறிதளவு மலம் வெளியே வந்தது. இறுதி நேரம் என்று விமலா தித்தர் புரிந்து கொண்டார். கை, கால்களை அசைக்க முயற்சித் தார். கையை தூக்கி வைத்தியரை அழைத்தார்.

''மிகவும் வலிக்கிறதே'' என்றார்.

''இந்த இடத்தில் குத்தலாமா. முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்களே. நீங்களும் மௌனமாக பொறுத்துக் கொள் கிறீர்களே. வாள் உருவி தாக்கி இருக்க வேண்டாமா'' என்று சொல்ல, விமலாதித்தர் சிரித்தார்.

கையே தூக்க முடியவில்லை. வாளை எப்படி பிடிப்பது. எப்படி வீசுவது. மனம் செத்துவிட்டது. உடம்பு எப்படி ஒத்துழைக் கும் என்று யோசித்தார்.

''வலி நீக்க மருந்தில்லையா.''

''இருக்கிறது. முகர்ந்து பாரும்.''

பீங்கான் ஜாடியிலிருந்து திரவம் எடுத்து துணியில் நனைத்து மூக்கருகே நீட்டினார். மெல்ல அந்த வாசனை மூக்கில் ஏறி தலைக்கு ஏறியது. விமலாதித்தர் கண் சொருகினார். இன்னும் சரிந்து படுத்துக் கொண்டார். அமைதியானார். உடம்பு மீது பிடிப்பு விட்டார்.

அடுத்த கால் நாழிகையில் அமைதியாய் விமலாதித்தர் உயிர் நீத்தார்.

அவருடைய அண்ணன் இறந்து போனவர் வாசலுக்கு வந்து வரவேற்பது தெரிந்தது. தாவிப்போய் அண்ணனை தழுவிக் கொண்டார்.

''கவலைப்படாதே. எல்லாம் சரியாகும். இராஜேந்திரன் வருவான். இந்த இடத்தில் உன் மகன் முடி சூடுவான். கவலைப் படாதே'' என்று அழைத்தார்.

அண்ணனும், தம்பியும் கைகோர்த்துக் கொண்டு வானுலகம் நோக்கி போனார்கள்.

இது கீழைச்சாளுக்கியம். இந்த கீழைச்சாளுக்கியம் அவர் கள் தேசம். கோதாவரி என்கிற மிகப்பெரிய நதியும், துங்கபத்ரை என்கிற நல்ல ஆறும் ஓடுகின்றன. அதன் மூலம் பலரும், பல்லா யிரக்கணக்கான நிலங்கள் சமன் செய்யப்பட்டு, உழவு செய்யப் பட்டு நல்ல நெல் விளைச்சல் இருக்கிறது. கரும்பு விளைகிறது. துவரை விளைகிறது. மிகச் செழிப்பான தேசம். இங்குள்ள கறவை கள் மிக முரடாகவும், தடிமனாகவும் இருக்கும். நிறைய பால் கறக்கும்.

இப்படிப்பட்ட தேசத்தை வேறு யாருக்கோ தாரை வார்ப்பது அவர்களுடைய எண்ணம் அல்ல. வெகுநிச்சயம் இராஜேந்திர சோழன் வருவான். இங்கு வந்து இராஜராஜ நரேந்திரனை சிம்மா சனத்தில் அமர்விப்பான். அதற்கு உண்டான காரியங்களை வானுலகத்தில் இருந்தபடி விமலாதித்தனும், அவரது தமைய னாரும் நிச்சயம் செய்வார்கள்.

வானுலகத்தில் இருந்தாலும் கீழைச் சாளுக்கியத்தை அவர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

மூன்னூறு தேர்கள் கொண்ட அந்தப்படை கருந்தட்டான் குடியைத் தாண்டியது. பள்ளி அக்ரஹாரத்தை சேர்ந்த அந்தண மாணவர்கள் கை உயர்த்தி தேரை வேடிக்கை பார்த்தார்கள். மேல்துண்டை விசிறி எறிந்தார்கள். சிலர் ஓடிப்போய் தேரின் பின்பக்கம் ஏறிக்கொண்டார்கள். அவர்களை,

''வேண்டாம் போய் விடு'' என்று வீரர்கள் அதட்ட அவர்கள் இறங்கி வலப்பக்கம் ஒதுங்கிக் கொண்டார்கள். ஒரு பையன் இறங்கத் தெரியாமல் தேருக்கு நடுவே மாட்டிக் கொள்ள தேர் வேகமாக நின்றது. அவனை விலக்கி ஓடச் சொன்னது. பிறகு மெல்ல நகர்ந்தது. தேர் வேகமாக ஓடுவதும் சட்டென்று நிற்பதும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''செத்துப் போயிருப்பாயடா. நல்லவேளை. சோழ வீரர்கள் காப்பாற்றினார்கள்'' என்று அந்தண சிறுவர்கள் சொல்ல வானத் தில் இருந்த அண்ணனும், தம்பியும்.

''ஆமாம். இந்த சோழவீரர்கள் கீழைச்சாளுக்கியத்தை காப்பாற்றுவார்கள். அதை சாவிலிருந்து மீட்பார்கள்'' என்று பதில் சொன்னார்கள். அந்த பதில் யார் காதிலும் விழவில்லை.

தேரின் சக்கரத்தடம் வரிவரியாக மணற்பூமியில் படர்ந் திருந்தது. மறுபடியும் தண்ணீர் தெளிக்கப்பட்டது.

ஒற்றைக் குதிரைகளோடும், கோவேறு கழுதைகளோடும் குதிரையை பராமரிக்கிறவர்கள் வந்தார்கள். அந்த கழுதை களின் மீதும் அந்தணச் சிறுவர்கள் ஏறி உட்கார்ந்துக் கொண் டார்கள்.

''நான் கீழைச் சாளுக்கியம் போகிறேன். போய் வரவா'' என்று கை அசைத்தார்கள்.

மெல்ல ஆட்கள் அதட்டி அவர்களை விலக்கினார்கள். அந்தணச் சிறுவர்கள் ஒரு சிறு அதட்டலுக்கும் பயந்து ஓரமாக ஒதுங்கிக் கொண்டார்கள். அவர்கள் குறும்பு செய்கிறவர்களாகவும் இருந்தார்கள். பயந்த சுபாவமாகவும் இருந்தார்கள்.

பெரிய மாட்டுவண்டிகளில் அரிசி மூட்டைகள் போயின. இன்னொரு மாட்டு வண்டிகளில் ஆடுகள் போயின.

''போய் இந்த வண்டியில் ஆடோட ஆடா ஏறிக்கோடா கீழைச்சாளுக்கியம் போய்விடலாம்'' என்று ஒருவன் சொல்ல,

அவன் ஏறுவதற்கு முயற்சித்தான். 'சொடேர்' என்று சவுக்கு சொடுக்குவது கேட்டு அதே வேகத்தில் திரும்பி வந்தான். பையன்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

''என்னடா இது. சவுக்கு சொடுக்கினால் இவன் பயந்து ஓடி வந்துவிடுகிறான். அந்த கோவேறுக் கழுதையைப் பார். ஒரு பயமும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது'' என்று சொல்ல மீண்டும் சிரித்தார்கள்.

மறவருடைய குழந்தைகள் இந்த நடவடிக்கைகளை சோகத்தோடும், ஒருவித வேதனையோடும் பார்த்துக் கொண்டிருக்க, அந்தண சிறுவர்கள் கும்மாளமாய் இந்த ஊர்கோலத்தை ரசித்தார்கள்.

பள்ளி அக்ரஹாரத்தில் மிகப் பெரிய வேத பாடசாலைகள் மூன்று இருந்தன. அங்கு படிக்கின்ற அத்தனை மாணவர்களும் கரந்தை தெருவில்தான் இருந்தார்கள். கோமணமும், இடுப்பில் துண்டும், வெறும் மார்பும், மழித்த தலையும், பின்னால் குடுமியும், கழுத்தில் துளசி மாலையுமாய் இருந்த அந்த அந்தணச் சிறுவர்களை மறவர்கள் வினோதமாகப் பார்த்தார்கள்.

''தாண்டிப் போகிறவர்கள் எவர் உயிரோடு வருவார்கள் என்று தெரியவில்லை. நீங்கள் எல்லாம் ஆட்டமா ஆடிக்கொண்டிருக்கிறீர்கள்'' என்று சில மறவர் இளைஞர்கள் வாய்விட்டுக் கருவினார்கள்.

''இப்படி ஆடிக்கொண்டிருக்கக்கூடாது. மறவர்கள் முறைக்கிறார்கள். எனவே கைகூப்பி ருத்ரம், சமகம் சொல்லு'' என்று ஒரு பெரிய பையன் கட்டளை இட அத்தனை பேரும் கைகூப்பி தேர்கள் தாண்டும்போது ருத்ரமும், சமகமும் சொன்னார்கள். சிவனுடைய நாமத்தை துதித்தார்கள்.

அவர்களுக்கு ஒரு கழஞ்சு பொன் ஒரு போர் வீரனால் தானமாகக் கொடுக்கப்பட்டது. தான் ஊத்தை அடையாமல் வந்தால் மறுபடி இதே இடத்தில் ஒரு அந்தணனுக்கு ஒரு பொன் கழஞ்சு கொடுப்பதாக அவன் உள்ளுக்குள் நினைத்துக் கொண்டான்.

கீழைச்சாளுக்கியம் அற்புதமான தேசம். அதை ஆட்சி செய்ய கொடுத்து வைத்திருக்க வேண்டும். நாங்கள் இருவருமே அதை முழுவதுமாக செய்யவில்லை. ஆனால் இராஜராஜ நரேந்திரன் இதை நிச்சயம் செய்வான். மேலைச்சாளுக்கியத்தை சுத்தமாக விரட்டி விட்டு கீழைச்சாளுக்கியத்தை ஸ்தாபிப்பான். மாமன் உதவியோடு அவன் பெரும் புகழ் பெறுவான். அவன் பெரும்புகழ் பெற வேண்டும் என்று அண்ணனும் தம்பியும் ஆசீர்வதித்தார்கள். அவர்கள் காதிலும் ருத்ரம், சமகம் விழுந்தது.

* * *

அத்தியாயம்

18

விமலாதித்தனோடு தனியே விடப்பட்ட வைத்தியர் கடைசியாக ஒருமுறை முயற்சி செய்யலாம் என்று பார்த்து தன்னுடைய வாயை விமலாதித்தனுடைய வாயில் பொறுத்தி முழுவதுமாக காற்று ஊதினார். நுரையீரலை நிரப்பினார். இருதயம் சில நொடிகள் துடித்தது. ஆனால் மறுபடியும் அடங்கிற்று. மறுபடியும் அழுத்தி ஊதினார். மறுபடியும் இரண்டு முறை துடித்து அடங்கிற்று. வாய் முழுவதும் ஒரு அமில வாசனை வந்தது.

இவருக்கு வயிறு சரியில்லை. வயிறு சரியில்லாததற்கு காரணம் மன உளைச்சல். மன உளைச்சலுக்கு காரணம் மனைவியும், மகனும். பாவம். இது பரிதாபமான ஒரு சாவு. ஒரு மன்னர் இப்படி சாகக்கூடாது என்று வைத்தியர் நினைத்துக் கொண்டார்.

வானில் உள்ள விமலாதித்தருக்கு அந்த வைத்தியருக்கு ஏதேனும் காசு தர வேண்டும் என்று தோன்றியது. அவர் இடுப்பு பக்கம் உள்ள வேட்டி மெல்ல நெகிழ்ந்தது. அதிலிருந்து ஆறு கழஞ்சுகள் படுக்கையில் விழுந்தன. வைத்தியர் வாசற்பக்கம் பார்த்தார். வாசல் பக்கம் உள்ள காவல்காரன் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆறு கழஞ்சுகளையும் எடுத்து பெட்டியில் இருந்த சூரணத்திற்கு நடுவே போட்டுக் கொண்டார். குலுக்கி சமன் செய்தார். சூரணத்திற்கு அடியில் இந்த ஆறு கழஞ்சுகளும் அடங்கின. வேறு என்ன இருக்கிறது என்று பார்த்தார். கட்டிலின் ஓரத்தில் தடித்த ஒரு முத்திரை மோதிரம் கழட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த மோதிரத்தில் ஒரு பகுதி முட்களால் ஆனது போன்று தெரிந்தது.

ஒரு ஓலையில் அந்த மோதிரத்தை வைத்து அழுத்தினால் அந்த முட்கள் ஒரு சித்திரமாக கீறலை ஏற்படுத்தும். மை தடவினால் அந்த சித்திரம் தெரியும். வேங்கி என்ற எழுத்தோடு சில உருவங்கள் அதில் இருந்தன. அந்த முத்திரை மோதிரத்தையும் பத்திரப்படுத்திக் கொண்டார். மெல்ல வெளியேறினார். வாயிற்

காப்போனை நோக்கி விமலாதித்தர் இறந்துவிட்டார் என்று சொல்ல, வாயில்காப்போன் வெளியே ஓடினான்.

அவர் வாசல்பக்கம் நின்று கொண்டிருந்தார். உள்ளுக் குள்ளே ஆட்கள் புயலாக நுழைந்தார்கள். இப்பொழுது வேறு வைத்தியரை அழைத்து வந்திருந்தார்கள். அந்த வைத்தியர் பார்த்துவிட்டு உதடு பிதுக்கினார்.

''கால் நாழிகை ஆயிருக்கும் போல. என்ன ஏதாவது சொன் னாரா'' என்று இந்த வைத்தியரை நோக்கி விசாரித்தார்கள்.

''ஒன்றுமில்லை. மயக்கமாகிவிட்டார். மயக்கத்திலேயே உயிர் பிரிந்துவிட்டது'' என்று முன்னால் இருந்த வைத்தியர் பதில் சொன்னார்.

''என்ன உதவிகள் செய்தீர்'' என்று பெரிய வைத்தியர் கேட்க,

''வாய் வைத்து ஊதினேன். நெஞ்சில் தட்டினேன். எதுவும் சரியாக வரவில்லை'' என்று சொல்ல,

''வேறு என்ன செய்வது. விதி முடிந்துவிட்டது'' என்று பெரிய வைத்தியர் சொன்னார்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு தகவல் போயிற்று. அவன் வேகமாக வந்து தந்தையினுடைய கட்டிலுக்கு அருகே நின்றான். என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. யாரேனும், ஏதேனும் சொல்லிக் கொடுத்தால் செய்யலாம் என்பது போல காத்திருந்தான்.

பதினைந்தாயிரம் குதிரை வீரர்கள் கருந்தட்டான்குடியை கடந்தார்கள். அந்த படையினுடைய வேகத்தை பார்த்து ஊர் அதிர்ந்து போயிற்று. அந்தண சிறுவர்கள் பின்னடைந்து வீட்டி னுடைய திண்ணையில் ஏறி நின்றார்கள். குதிரைகள் எப்படி வேண்டுமானாலும் திரும்பும். எந்த பக்கம் வேண்டுமானாலும் வந்து மோதும் என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

''இடதுபக்கச் சேணம் நீளமாகவும், வலது பக்கம் குட்டை யாகவும் இருக்கிறது. சமமாக இல்லை'' என்று ஒரு குதிரை வீரர் சொல்ல,

தோல் தைப்பார் அந்த இடத்திற்கு விரைந்தார். சேணத்தை பரிசோதித்தார். குதிரை வீரரை இறங்கச் சொல்லி ஆசனத்தை

எடுத்துவிட்டு சேணத்தை சரிசமமாக்கி வேகமாக நூல் குத்தி இறுக்கத் தைத்தார். சேணத்தில் பொறுத்தினார். மேலே ஆச னத்தை வைத்தார்.

''இப்போது உட்கார்ந்து கொள்ளுங்கள்'' என்று சொல்ல, அவர் உட்கார்ந்து பார்த்து,

''இப்பொழுது மிகச் சரியாக இருக்கிறது'' என்று சொன் னார். அந்த நேரத்தில் அவர்கள் வேலையை ஊர் மிக உன்னிப் பாகக் கவனித்தது.

அரிசி வண்டிகள் கடந்தன. ஆட்டுக்குட்டிகள் ஏறிய வண்டி களும் கடந்தன.

''ஒரு போர் என்றால் எத்தனை வேண்டியிருக்கிறது'' என்று ஒரு வயதான மறவர் சொல்ல, பெண்கள் ''ஆமாம், ஆமாம்'' என்றார்கள். அவர்களுக்கு போர் பற்றிய கவலையும், உணவு பற்றிய கவலையும், தேசம் பற்றிய கவலையும், எதிர்காலம் பற்றிய கவலையும் ஒருசேர எழுந்தன.

இரவு நெருங்கும் நேரம் பறை அறிவிப்பாளர்கள் ஒரு பெரிய புளிய மரத்தடியில் தங்கினார்கள். சிறிய குழியை தோண்டினார்கள். கட்டையை உடைத்துப் போட்டார்கள். நெருப்பு பற்ற வைத்தார்கள்.

''மாமிசம் இருக்குமா'' என்று கிராமத் தலைவரை கேட் டார்கள்.

''இருக்கிறது'' என்று சொல்லி, அன்று அறுத்த ஆட்டி னுடைய ஒரு பகுதியை கொடுத்தார். அதில் தொடைகளும் இருந்தன. மிக வேகமாக அதை நறுக்கினார்கள். சுத்தம் செய் தார்கள். களைந்து அரிசியோடு போட்டார்கள். உப்பிட்டார் கள். மிளகு தூவினார்கள். காய்கறிகளை நறுக்கி போட்டார்கள். அகப்பை விட்டு கிளறினார்கள். மாமிசமும், அரிசியும் ஒருசேர வெந்து கமகமவென்ற வாசனையை உண்டுபண்ணிற்று. அரிசி சீக்கிரம் குழைந்தது. மாமிசம் வேக நேரமாயிற்று. காய்கறிகள் வெந்து மென்மை ஆயின. மாமிசம் முக்கால் திட்டம் வேகும் வரை காத்திருந்தார்கள். பிறகு இறக்கி வைத்தார்கள். சூடு ஆற காத்திருந்தார்கள். எல்லோருக்கும் குளத்திலிருந்து தாமரை இலை பறித்துக் கொண்டு வந்து தரப்பட்டது.

பானையிலிருந்து அகப்பையில் மொண்டு சுடச்சுட கறியும், சோறும் கலந்த உணவை ஒருவன் வைத்தான். தாமரை

இலையில் வைத்தவுடன் சூடு ஆறியது. அவர்கள் இளஞ்சூட்டோடு அந்த உணவை உண்டார்கள். கறி சோறு மிக அற்புதமாக இருந்தது.

''முதல் சோறு நன்றாக வந்துவிட்டது. அதனால் வெற்றி நமக்கே.'' ஒரு பறை அறிவிப்பவன் உற்சாகமாகச் சொன்னான்.

எதிர்காலம் பற்றிய அனுமானங்கள் பலநூறு வகைகள் உள்ளன. அதில் இதுவும் ஒன்று. நன்றாக கறி சோறு அமைந்ததால் வெற்றி நிச்சயம் என்று பறை அறிவிப்பவன் கூறியது அங்குள்ளவர்களுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. அள்ளி அள்ளி உண்டார்கள். தள்ளிப் போய் வாய் கொப்பளித்தார்கள். பிறகு துண்டு விரித்து தலைக்கு கல் வைத்து மெல்ல படுத்தார்கள். வானத்து நட்சத்திரங்கள் மின்னத் துவங்கின.

காடுவெட்டிகளும், காரை வெட்டிகளும் பாடி இறங்கி சமையலுக்கு ஆயத்தம் செய்வது தொலைவிலிருந்து தெரிந்தது. பறை அறிவிப்பாளர்கள் கண் அயரும் நேரம் அவர்களைத் தாண்டி நான்கு குதிரைகள் போயின. அந்த குதிரையின் நடுநாயகமாக உள்ள ஈட்டியில் கறுப்புத் துணி கட்டப்பட்டு இருந்தது.

''ஏதோ துக்கச் செய்தி போகிறது.''

''எங்கிருந்து, கீழைச்சாளுக்கியமா.'' திகைத்தார்கள். ஆனால் அந்த குதிரைகள் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. எந்த தகவலும் சொல்லவில்லை.

தேர்களை கிழித்துக்கொண்டு, குதிரைப் படைகளை கிழித்துக் கொண்டு நடுநிசிக்கு சற்று முன்னதாக தஞ்சை அரண்மனையில் போய் நின்று கதவு தட்டியது. திட்டி வாசல் திறக்கப்பட்டது. அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள். குசுகுசுவென்று பேசினார்கள். உடனடியாக தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. அரண்மனை பிரகாசமாயிற்று. இராஜேந்திர சோழர் எழுப்பப்பட்டார்.

நாளை அவர் பயணப்படுவதான ஒரு எண்ணம் அவருக்கு இருந்தது. ஆனால் நாளை பயணப்பட முடியாது. ஒரு நாள் விட்டு பயணப்பட வேண்டியிருக்கும் என்று அதிகாரிச்சிகள் பேசிக் கொண்டார்கள்.

மெய்க்காவல் வீரர்கள் பல அரண்மனை கதவுகளை தட்டி உள்ளே தூங்குகிறவர்களை எழுப்பி அழைத்து வந்தார்கள்.

பதினெட்டு படி கொண்ட அரண்மனை வாசலில் இராஜேந்திர சோழர் உட்கார்ந்து கொள்ள சேனாதிபதிகளும், முதல் மந்திரியும் அருகே வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணன் ராமனும் பல்லக்கில் ஏறி வந்து சேர்ந்தார்.

''இராஜேந்திரா, என்ன சோதனை இது. என்ன சோதனை இது. அரற்றியபடியே கிருஷ்ணன் இராமன் அருகே வந்து இராஜேந்திர சோழனின் தோளில் கை வைத்தார்.

இராஜேந்திர சோழருக்கு முதன் முதலாக கண்ணில் ஜலம் கிளம்பிற்று.

''நல்லவன், இனிமையானவன், இதமானவன். அவன் வாழ்க்கையை அவனே பாழ் செய்து கொண்டான்'' என்று மெல்ல முணுமுணுத்தார்.

''இப்போது படை எடுப்பின் நிலை என்ன.'' வந்தியத் தேவரை கேட்டார்.

''ஒன்றுமில்லை. முன்னிலும் கடுமையாக தாக்க வேண்டியதுதான். விமலாதித்தன் அங்கு இருந்தால் நிதானமாக செயல்பட வேண்டியிருக்கும். இனி முரட்டுத்தனம்தான். அடித்து வீழ்த்த வேண்டியதுதான்.''

''படை எடுப்பின் இறுதி அமைப்பு எப்படி என்பது முடிவாயிற்றா.'' பரமன் மழபாடி கேட்டார்.

அருண்மொழி மௌனமாக மன்னரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''திருவொற்றியூர் வரையில் எல்லோரும் ஒன்றாகப் போவோம். அங்கு போய் படைகள் இரண்டாகப் பிரியும். ஒன்று வடமேற்காக நடந்து மேலைச்சாளுக்கியம் போகும். மனிஜாவிற்கும் ஓலை அனுப்பியிருக்கிறேன். மனிஜாவும் குடகு மலையிலிருந்து பெரிய படையோடு நான் இருக்கும் இடம் வந்து சேருவான். நாங்கள் இருவரும் மானிய கேடயத்தை தரைமட்டமாக்கி, தீக்கிரையாக்கி அங்கிருந்து வேங்கி நோக்கி வருவோம். அரையன் ராஜராஜனை திருவொற்றியூரிலிருந்து கிழக்கு கடற்கரை ஓரமாகவே வேங்கிக்கு போய் அந்த இடத்தை கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தனை அடித்து துரத்த வேண்டும்.

அல்லது வெட்டி எறிய வேண்டும். ஜெயசிம்மனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு துரத்த வேண்டும். ஆனால் வேங்கியை கைப்பற்றுவதுதான் முக்கியமே தவிர ஜெயசிம்மனை துரத்துவது முக்கியம் அல்ல. நாம் வருகிறோம் என்று தெரிந்தாலே ஜெயசிம்மன் ஓடிவிடுவான் என்பது என் அபிப்பிராயம்.''

''எப்போது ஊர் திரும்புவதாக உத்தேசம்.'' கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

''இப்போதைக்கு இல்லை. ஒரு வருடத்திற்கு நான் அங்குதான் இருப்பேன். அதற்குமுன் ஜெயங்கொண்டத்திற்குப் போய் அரண்மனை வேலைகள், கோவில் வேலைகள் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்த்துவிட்டு அங்கிருந்து எண்ணாயிரம், எசாளம் போய் அங்கே என்னுடைய குரு ஈசான சிவ பண்டிதரை பார்த்துவிட்டு அவரிடம் ஆசி வாங்கி, அந்த வேத பாடசாலைக்கு ஏதேனும் தானம் கொடுத்துவிட்டு அங்கிருந்து வடமேற்காக கிளம்பி விடுவேன்.''

''உங்களோடு யார் வருகிறார்கள்.''

''என்னோடு வந்தியத்தேவரும், அருண்மொழிப்பட்டனும் வருகிறார்கள். என் மகன் வீர இராஜேந்திரன் அரையரோடு சேர்ந்து கொள்வான். நம்முடைய போர்முறையை வீர இராஜேந்திரன் கற்க வேண்டியது அவசியம்.

என்னால் வீர இராஜேந்திரனை கடுமையாக கோபித்துக் கொள்ள முடியாது. அரையன் போர் முனையில் வேகமாக செயலாற்றுபவன். அந்த வேகத்தை வீர இராஜேந்திரன் கற்றுக் கொள்ள வேண்டும். குடகு மலையிலிருந்து மனிஜா வந்து விட்டால் நமக்கு பெரும் பலம். வெகு சீக்கிரத்தில் மானிய கேடயத்தை நாசம் செய்துவிடலாம். இது கிடுக்கித் தாக்குதல்.

இரண்டு பக்கமாக வந்து மேலைச்சாளுக்கியத்தை அழித்து வேங்கியை கைப்பற்றுதல்.

வேங்கியிலிருந்து தப்பித்து மானியகேடம் வர முடியாது. மானியகேடம் தரைமட்டமாகி இருக்கும். வேறு எங்காவது ஓடிப் போய் தலைநகரை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் அவன் திருடன். எங்கு போவான் என்பது எனக்குத் தெரியும்.''

''எங்கு போவான்.''

''கல்யாணியை நோக்கிப் போவான். அங்கு போய் உட்கார்ந்து கொள்ளுவான். அது ஒரு பெரிய நகரமல்லவா. அதுதான் தன்னுடைய கோட்டை என்று சொல்லிக் கொள்வான். நாம் கைப்பற்றிய இடங்களில் அவன் உள்ளே நுழைந்திருக்கிறான். வடக்கே பல கிராமங்கள் அவனால் கபளீகரம் செய்யப்பட்டு இருக்கின்றன. அதை துடைக்கத்தான் போகிறேன். அதை நீக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் வடமேற்காக பயணம் செய்து பிறகு வடகிழக்காகத் திரும்புகிறேன்.

சித்ரதுர்கா வழியாக மானியகேடம் நோக்கிப் போகிறோம். சித்ரதுர்காவையும் நாசம் செய்கிறோம். ஒரு பட்டணம் கூட மேலைச்சாளுக்கியத்தில் இருக்கக்கூடாது. கிராமங்களை மட்டும் விட்டுவிடலாம்.''

''எதற்கு கிராமங்களை விடுவது?''

''அங்கிருந்து நல்ல விளைபொருள்கள் வரும். அவைகளுக்கு நாம் தடை செய்துவிடக்கூடாது. நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அந்த இடங்கள் வந்த பிறகு கிராமங்களை உற்சாகப் படுத்தி விளைபொருள்களை பிடுங்கிக் கொள்ள வேண்டியது நம்முடைய வேலை. கிராமங்களை அழிக்கக்கூடாது. நகரங்களை அழித்துவிடுங்கள்.''

''விமலாதித்தனுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்.'' இராஜேந்திரர் எதிர் கேள்வி கேட்டார்.

''நிச்சயமாக நாளைக்கு கிளம்ப முடியாது. உங்கள் தங்கையை கொண்டவன். உங்கள் வீட்டு மாப்பிள்ளை. அவனுக்கு நீத்தார் கடன் அனுசரிக்க வேண்டியது அவசியம். எனவே நாளை தலை முழுகிவிட்டு ஒருபொழுது உணவை துறந்து விட்டு அமைதியாக உட்காருங்கள். நாளை மறுநாள் போகலாம். நாளை மறுநாளும் கிளம்புவதற்கு உண்டான நேரம் மிக நன்றாக இருக்கிறது.''

''படைகள் நகர வேண்டுமே.''

''அவை நகரட்டும். அவைகளுக்கும், விமலாதித்தனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீங்கள்தான் உறவு. உங்கள் படைகள் அல்ல. அவைகள் தொடர்ந்து போய் கொண்டிருக்கட்டும்.''

பளிச்சென்று வெளிச்சம் வந்த பிறகுதான் இராஜேந்திர சோழர் எழுந்தார். அவர் மனம் கனத்திருந்தது.

''சரி, எதுவரை போயிருக்கிறது.'' மெய்க்காவல் படையை விசாரித்தார்.

மெய்க்காவல் வெளியே ஓடிப்போய் அங்கிருக்கின்ற ஓலை நாயகத்தை உள்ளே அழைத்து வந்தார்கள்.

நேற்று இரவு கிளம்பி இருக்க வேண்டிய மருத்துவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரவு நேரப் பயணம் வேண்டாம் என்பது ஒன்று. நீங்கள் வேறு ஏதேனும் கேட்பீர் களோ என்ற நினைப்பு இன்னொன்று. எனவே நீங்கள் உத்தரவு இட்டால் இப்பொழுதும் அவர்கள் கிளம்பத் தயாராக இருக் கிறார்கள்.''

''மருத்துவர்கள் போகட்டும். திருவொற்றியூர் போய் நிற்கட் டும். எத்தனை பேர் மருத்துவர்கள்.''

''மொத்தம் எழுபது பேர் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ரண சிகிச்சை தெரிந்தவர்கள் பதினைந்து பேர்கள் இருக்கிறார் கள். ஆறு வண்டிகளில் அவர்களுக்கு உணவும், மருந்தும் தயா ராக இருக்கின்றன.''

''எனக்கு வலது கால் வலிக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை'' என்று சொல்ல,

உள்ளே சிறிது நேரத்தில் ஒரு வைத்தியர் நுழைந்தார். வயிறு தட்டிப் பார்த்தார்.

''கொந்தளிப்பாக இருக்கிறீர்கள். அமிலச் சுரப்பிகள் அதிகம் வேலை செய்கின்றன. உணவு செரிமானம் சரியாக இல்லை. எனவே காலையில் குதிரை ஏற்றமோ அல்லது நடைபயிற்சியோ செய்வது நல்லது. ஒருபொழுது என்று கேள்விப்பட்டோம். அதுவும் நல்லது. அடிவயிற்றிலிருந்து வெளியேற வேண்டி யவை வெளியேறி விட்டால் வாயு உபத்திரவம் குறையும். வாயு உபத்திரவம் குறைந்தால் தொடை வலியும், மூட்டு வலியும் இருக்காது. உடம்பினுடைய கணைச் சூடு வைத்துப் பார்த்தால் மலக்கட்டு இருக்குமோ என்று தோன்றுகிறது. எனவே மலம் இறங்குவதற்கு ஒரு மாத்திரை தருகிறேன். அதுமட்டுமல்ல காலுக்கு தைலமும் தருகிறேன். இந்தக் கால்வலி காலால் அல்ல.

இடுப்பினால், பிருஷ்டத்தினால் என்று தோன்றுகிறது'' என்று சொல்லி,

அவரை கோமணத்தோடு குப்புற படுக்கவைத்து முதுகிலும், இடுப்பிலும், பிருஷ்டத்திலும் தைலங்கள் வேகமாகத் தடவினார். தொடையை உருவிவிட்டார். வலி குறைந்தது போல் இருந்தது. மாத்திரை உடனடியாக வேலை செய்தது.

மாமன்னர் இராஜேந்திரர் பின்பக்கம் போய் வந்தார். முகம் துடைத்துக் கொண்டார்.

''நீங்கள் தலைக்கு குளிக்க வேண்டும். வெந்நீர் தயாராக இருக்கிறது'' என்று முற்றத்தில் உட்கார வைத்து மனைவியர் தலைக்கு நீர் ஊற்றினார்கள். சிகைக்காய் தடவினார்கள். உடம்பு முழுவதும் தடவினார்கள். மாறி மாறி நீர் கொட்டி சகலமும் அலசி அவரை பூப்போல எழுப்பி வைத்தார்கள்.

அவர்கள் சந்தனம் தடவினார்கள். நெற்றிக்கு திருநீறு கொடுத்தார்கள்.

வயிறு இளகியதுமே வலி சரியாகிவிட்டது. பசித்தது. ஆனால் உணவு உண்ணாமல் வெறுமே அவர் கிழக்கு பார்த்து உட்கார்ந்திருந்தார். பஞ்சாட்சர ஜபம் செய்தார்.

''நமச்சிவாய, நமச்சிவாய, நமச்சிவாய'' என்று இடைவிடாது ஜபம் செய்தார்.

''குந்தவையை பார்க்கப் போக வேண்டாமா.''

''வேண்டாம்'' என்று சொல்ல,

''இல்லை, அது முறையில்லை. போய் குந்தவையை பார்த்துவிட்டு வாருங்கள்'' என்று சொல்ல,

மேல்துண்டை போட்டுக் கொண்டு நிதானமாக குந்தவையை நோக்கி நடந்தார்.

குந்தவை வெளியே வந்தாள்.

''மோசம் போய்விட்டேன் அண்ணா. மோசம் போய் விட்டேன்'' என்று சொல்ல,

குந்தவையை உற்றுப் பார்த்தார்.

''மோசம் போகவில்லை. மோசம் செய்து கொண்டாய். அவனை கொன்றது நீ. மனம் நொந்து இறந்திருக்கிறான்.

வைத்தியத்திற்கு ஆளின்றி இறந்திருக்கிறான். சரியாக கவனிப் பார் இன்றி இறந்திருக்கிறான். ஒரு மனைவியாக நீ செய்ய வேண்டிய கடமையை செய்யவில்லை. இதற்குண்டான பலனை இந்த வாழ்க்கையில் நீ நிச்சயம் அனுபவிப்பாய். உன்னை துக்கம் விசாரிக்க வந்துவிட்டு இவ்வளவு கடுமையாகப் பேசு கிறேன் என்று நினைக்காதே. என் தங்கை என்று நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது. சாதாரண மனுஷத்துவம் கூட இல்லாத பேயாக நீ இருக்கிறாய். விமலாதித்தனுடைய கோபம் உன்னை சும்மா விடாது. அது நிச்சயம் உனக்கு தொந்தரவு தரும்'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

''நன்றாக இருக்கிறது நீங்கள் துக்கம் கேட்ட லட்சணம்.'' பரவையார் கடிந்து கொள்ள, அவளுக்கு பதில் சொல்லாமல் அந்த அரண்மனையை விட்டு வெளியே வந்தார். தன் அரண் மனைக்குள் நுழைந்தார்.

மறுபடியும் கிழக்குமுகமாக உட்கார்ந்து நமச்சிவாய ஜபம் சொல்ல ஆரம்பித்தார்.

மதியத்திற்கு மேல் கஞ்சியும், துவையலும் சாப்பிட்டார். மாமிசம் எடுத்துக் கொண்டார். அதில் ஒரு அலுப்பு இருந்தது. மனதில் ஒரு சோர்வு இருந்தது. போருக்கு கிளம்புவதற்கு உண் டான உத்வேகம் இல்லாது இருந்தது. என்ன செய்வது என்று திகைத்தார். யாரோடு பேசினால் சரியாக வரும் என்று நினைக்க, அவருக்கு வீர இராஜேந்திரன் ஞாபகம் வந்தது. தன்னுடைய மூன்றாவது பிள்ளையான வீர இராஜேந்திரனை ஆள் அனுப்பி வரவழைத்தார்.

வாசல் பக்கம் பதினெட்டு வயது இளைஞன் நெஞ்சில் லேசான முடியும், முகத்தில் மெல்லிய அரும்பு மீசையுமாய் சிரித்தபடி அவர் எதிரே வந்து நின்றான். விழுந்து வணங்கினான். கால்களை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''அழைத்தீர்களாமே அப்பா. என்ன விஷயம் சொல்லுங் கள்.'' கைகட்டி நின்று கொண்டான்.

அவர் எதிரே உள்ள ஆசனத்தை காட்டினார்.

''வேண்டாமப்பா நிற்கிறேன்.''

''பரவாயில்லை உட்கார். உன்னோடு மனம் விட்டு பேச வேண்டும் போல் தோன்றியது. அதனால்தான் அழைத்தேன்.''

''சொல்லுங்கள் அப்பா. கேட்க தயாராக இருக்கிறேன்.''

''கிட்டத்தட்ட விமலாதித்தனுடைய மகன் விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கும், நம்முடைய குந்தவைக்கு பிறந்த இராஜ ராஜ நரேந்திரனுக்கும் உன்னுடைய வயதுதான். ஆனால் உன் முகத்தில் இருக்கின்ற பொலிவு, களை, உன் உடம்பில் இருக்கின்ற கம்பீரம் அவர்களிடம் இல்லை. இராஜராஜ நரேந்திரனிடம் சுத்தமாக இல்லை. அவன் சோர்வாக இருக்கிறான். நீதான் அவனை அழைத்துக் கொள்ள வேண்டும். நீதான் அவனை உற்சாகப்படுத்த வேண்டும். நீதான் அவனுக்கு தந்திரங்கள் சொல்லித் தர வேண்டும். நீதான் அவனுக்கு உற்ற தோழனாக இருக்க வேண்டும். இன்றோடு முடிந்து போகிற கதையல்ல.

நான் அவனை அரியணையில் வைத்துவிட்டாலும் மறுபடியும் மேலைச்சாளுக்கியத்தின் தொந்தரவு இருக்கத்தான் செய்யும். அதைத் துடைக்க உன் தமையன் இராஜ இராஜித்தனும் உன்னுடைய அண்ணன் இளவல் இராஜேந்திரனும் நீயும் ஒன்றாக முயற்சி செய்து தொடர்ந்து உதவிகள் செய்ய வேண்டும். அவனுக்கு மற்றவர்களைக் கண்டால் கொஞ்சம் பயம். வயதானவர்கள் என்று மரியாதை. உன்னோடு இயல்பாக இருப்பான் என்று நினைக்கிறேன். எனவே இராஜராஜ நரேந்திரனை அரவணைத்துக் கொண்டு அவனுக்கு உற்சாகமூட்டி அவனோடு படைக்கு போவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யலாம். இன்றே கிளம்ப வேண்டி இருந்தது. ஒருநாள் தள்ளிப் போடப்பட்டு நாளை கிளம்புகிறது. இந்த தகவலை நீயே போய் இராஜ நரேந்திரனிடம் சொல்லி அவனை தயார் செய்.

எப்படி குதிரை ஓட்டுகிறான் என்று கவனி. நெடுந்தூரம் தாங்குவானா என்று பார். தேரில் வந்திருக்கிறான். தேரில் போகலாம் என்று நினைத்திருப்பான். இல்லை. தேரில் அவன் ஏறக் கூடாது. தனி குதிரையில் அதுவும் ஆண் குதிரையில் அவன் ஏற வேண்டும். அதை அடக்கி ஆள பழக வேண்டும். மிகக் கம்பீரமான குதிரை அவனுக்கு தரப்படும்.

எனவே அதை ஓட்டுகின்ற தெளிவும், திடமும், பயமற்ற தன்மையும் இருக்க வேண்டும். இதை அவனிடம் சொல்லிவிடு.

இன்று ஒரு நாளில் அவன் அந்த குதிரையோடு நல்ல சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளட்டும். பிறகு தொடர்ந்து அந்த குதிரை ஓட்டி வர வேங்கி தேசம் போவதற்குள் அந்த குதிரை

நன்கு பழக்கப்பட்டு விடும். கம்பீரமான குதிரையில் அவன் வந்தால் கீழைச்சாளுக்கிய மக்கள் சந்தோஷமடைவார்கள். அரசனுக்கு தோற்றம் முக்கியம். அந்த தோற்றத்தை தயவு செய்து நீ அவனுக்கு ஏற்படுத்து'' என்று சொல்ல,

''என்ன இது, தயவுசெய்து என்று சொல்லிக்கொண்டு... கட்டளை இடுங்கள்.''

''இது கட்டளை இட்டு வராது. ஒரு சகோதரனைப் போன்றவனை, மருமகனை நாம் அரவணைத்துப் போக வேண்டும். நான் விமலாதித்தனை அப்படித்தான் அரவணைத்தேன். அது போல இந்த வேலையை உன்னிடம் தருகிறேன். இதுதவிர உன்னிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்.''

''என்ன.''

''இராஜராஜ நரேந்திரனுக்கு திருமணம் செய்ய வேண்டும்.''

''ஆஹா. செய்துவிடலாமே.

''யார் மனைவி என்று நினைக்கிறாய்.''

''என்னையா கேட்கிறீர்கள், எனக்கு யாரைத் தெரியும்.''

''உனக்கு ஆள் தெரியும் என்றா கேட்டேன். இந்த நேரம் உனக்கு தெரிந்திருக்க வேண்டும். யார் அவனுக்கு மனைவியாக இருப்பது நல்லது.''

''என்னுடைய அக்காள், அம்மங்கா தேவி என்று நீங்கள் மனதில் நினைத்திருக்கிறீர்கள். அது எனக்கு புரிகிறது, எனக்கும் அது சம்மந்தமே.''

''இந்த உறவு ஏற்படுத்திக் கொண்டால்தான் நமது தேசம் பாதுகாப்பாக இருக்கும்.''

''அம்மங்காதேவிக்கு அவனைப் பிடிக்குமா.''

''சோழ ராஜ்ய வம்சத்தில் பிறந்துவிட்டால், பிடித்த கணவன் என்று எந்த இளவரசியும் நினைத்துக் கொள்ள முடியாது. தான் விரும்புகின்ற இளவரசன் என்று எந்த இளவரசியும் கற்பனை செய்துவிட முடியாது. அரசியல் காரணமாக நடக்கின்ற திருமணங்கள் சிலசமயம் நரபலியாகவும் நடந்துவிடும். குந்தவையினுடைய திருமணம் நரபலி. ஆனால் பலி ஆனது விமலாதித்தன்.

இந்தத் திருமணம் அவ்விதம் இருக்காது. அம்மங்கை மிகவும் கெட்டிக்காரி. என்னுடைய அத்தை குந்தவையால் வளர்க்கப்பட்டவள். வீரமாதேவியால் போற்றப்பட்டவள். அவளுக்கு நெளிவு, சுளிவுகள் பலதும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பரவைநாச்சியார் உடுத்த கற்றுக் கொடுத்திருக்கிறார். திருபுவனமாதேவி பாடவும், பேசவும் கற்றுக் கொடுத்திருக்கிறார். வீரமாதேவி குதிரை ஓட்டக் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

எனவே அம்மங்கை பொருத்தமுடையவள். அம்மங்கைக்கு இராஜராஜ நரேந்திரன் கொஞ்சம் குறைவோ என்று தோன்றுகிறது. அவனுக்கு அம்மங்கையை வைத்து சீராட்ட முடியுமா என்ற பயம் இருக்கிறது.''

ஆனால் அவன் நல்லவன். என்ன சொல்கிறாய்.

இது அரசியல் எனில் சரி. என் சகோதரி என்னும் போது கொஞ்சம் வருத்தம். அத்தை குந்தவையாருக்கு வந்தியத்தேவர் கிடைத்தது போல, நம் வீட்டு பெண்களுக்கு கிடைக்கவில்லை.

* * *

அத்தியாயம்

19

பிராம்மியம் கடும்பூரி ஆறுபடி, வாசா ஹரிதகி ஆறுபடி, கோமுத்ர ஹரிதகி ஐந்துபடி, தசமூலா ஹரிதியி பத்துபடி பல்லாதக ஏழுபடி, கந்தீரம் பதினைந்துபடி.

மரப்பட்டைகளால் செய்யப்பட்ட இறுக்கமாக வைத்து சிறிய ஆணிகளால் அடிக்கப்பட்ட திருகு மூடிகள் உடைய வட்ட வடிவமான மரப் பீப்பாய்களுக்குள் இருந்த மருந்துகள் சொல்ல சொல்ல ஓரமாக எடுத்து வைக்கப்பட்டன.

பால கோரண்ட தைலம் ஆறு தூணி.

''இந்த தைலம் எதற்கப்பா.'' ஒரு பதினைந்து வயது சிறுவன் தனது தந்தையைப் பார்த்து கேட்க, தைலத்தை தொட்டு அவன் மூக்கருகே நீட்டுகிறார். நெடி மண்டையில் ஏறுகிறது. அவன் பின்வாங்கினான்.

''உட்கார்ந்து காலை நீட்டு'' என்று சொல்ல,

அவன் உட்கார்ந்து அப்பாவின் எதிரே காலை நீட்டினான். உள்ளங்காலில் வைத்து வேகமாக தடவி கணுக்காலிலும் தடவி னார்.

''மனுஷனாகப் பிறந்த அத்தனை பேருக்கும் கால் வலி இருக்கத்தான் செய்யும். உடம்பில் இருக்கும் எல்லா அவயத் திலும் காலுக்குத்தான் வேலைஅதிகம். ஒன்று நிற்க வேண்டும். இல்லை நடக்க வேண்டும். எந்நேரமும் உட்கார்ந்திருப்பது கிழவர்களுக்குத்தான் முடியும். நமக்கு முடியாது. கால் வலிக்கு மருந்து வேண்டாமா. உனக்கு கால் வலிக்குது இல்லையா. கணுக்காலில் வலி இருக்குது இல்லையா. பார். அரை நாழிகை யில் வலி ஓடிப் போய்விடும்.''

''ஆனால் தைலம் எல்லாம் கல்சட்டியாக இருக்கிறதே. எல்லாவற்றையும் எப்படி ஜாக்கிரதையாக கொண்டு போவது.''

''வைக்கோல் சுத்தணும்டா. அதுக்குத்தான் உன்னை அழைத்து வந்தது.''

கயிறுபோல உறுதியாக திரிக்கப்பட்ட வைக்கோல் பிரியில் மெல்ல அந்த கல்சட்டிகள் சுற்றப்பட்டது. அந்த கல்சட்டி களுக்கும் மரத்தாலான மூடி இருந்தது. அந்த மூடியிலிருந்து எண்ணெய் சிந்தாமல் இருக்க அதற்கு மேல் இன்னொரு மூடி இருந்தது. அந்த மூடியும் அசையாது இருக்க துணி வைத்து கட்டப்பட்டிருந்தது.

பெரிய கூடம்போல் அமைந்துள்ள அந்த வீட்டின் வாசலில் ஒரு சிறு தேர் வந்து நின்றது. தேரோட்டி முன்னே அமர்ந்திருக்க பின்னே நின்றபடி வந்த உத்தமசோழ மிலாடுடையார் கீழே இறங்கினார். அவருக்கு அறுபது வயது இருக்கும். இராஜராஜன் காலத்திய படை தளபதி. பல போர்கள் கண்டவர். உடம்பு முழுவதும் விழுப்புண் கொண்டவர். அவருடைய விழுப்புண் களாலேயே அவருக்கு இரவுத் தூக்கம் இல்லாது போயிற்று. வெட்டுப்பட்ட இடங்களெல்லாம் தழும்பாக மாறியிருந்தும் உள்ளே வலி இருந்தது. கை, கால் குடைச்சல் இருந்தது. எனவே அடிக்கடி மருத்துவர்களுடைய உதவியை அவர் நாட வேண்டி இருந்தது. மருத்துவர்களோடு பழகிப் பழகி மருந்துகள் பற்றிய தெளிவும் அவருக்கு இருந்தது. யாருக்கேனும் உடம்பு சரி யில்லை என்றால் உத்தம சோழ மிலாடுடையாரை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்வார்கள்.

சோழ சேனாதிபதிகள் எப்பொழுதுமே தனித்து செயலாற்ற மாட்டார்கள். வந்தியத்தேவரும், அருண்மொழியும் இணைந்து செயலாற்றுவது போல, பரமன் மழபாடியாருக்கு துணையாக அரையன் இராஜராஜன் இருப்பது போல, உத்தம சோழமிலா டுடையாருக்கு துணையாக இராஜராஜ பிரம்மராயன் என்கிற தளபதியும் இருந்தான்.

இராஜராஜ பிரம்மராயன் திருவெண்காடை சேர்ந்தவன். கடலோடிகளுடன் மிகச் சிறந்த தொடர்புடையவன். மிகச் சிறந்த நிர்வாகி. அந்தணராக பதினாறு வயது வரை நான்கு வேதமும் படித்து வளர்ந்து பதினாறு வயதுக்கு மேல் போருக்கு போக வேண்டும் என்று ஆசைப்பட்டு 'அடிப்படை பயிற்சிகளை கற்றுக் கொள்' என்று தகப்பனார் சொன்னதால் பூம்புகாருக்கு அருகே உள்ள கடிகையில் வாள் பயிற்சியும், வேல் எறிதலும் கற்றுக் கொண்டான். வில் வளைத்து அம்பு தொடுப்பது அவனுக்கு எளிதாக வரவில்லை. எதை முக்கிய பாடமாக கற்றுக் வைத்துக்

கொள்வது என்று மூன்றாவது வருடம் அவன் தீர்மானிக்க வேண்டி இருந்தது. அப்பொழுது யாரைப் போல கற்று வைத்துக் கொள்ள லாம் என்று விவாதித்தபொழுது உத்தமசோழமிலாடுடையார் மிக நீண்ட கத்தியை இடுப்பில் வைக்காமல் முதுகின் பின்பக்கம் சொருகி வைத்துக் கொள்வார் என்றும், இரண்டு கைகளாலும் ஒரே வீச்சில் கத்தியை எடுத்து நாலாபுறமும் வீசுவார் என்றும் சொல்லப்பட்டது.

சீனர்கள் அப்படிப்பட்ட கத்தியை உபயோகிப்பார்கள் என்று தெரிந்து நாகை புத்த விகாரத்தில் புத்த பிட்சுக்களால் அப்படிப் பட்ட கத்தி ஒன்று செய்யச் சொல்லி அவர்கள் உருவாக்கி கொடுத்த கத்தியை முதுகில் தரித்தான்.

நாகை புத்த பிட்சுக்கள் எல்லா விஷயங்களிலும் மிக கெட் டிக்காரர்களாக இருந்தார்கள். மருத்துவம் செய்வதிலும், சிலைகள் செய்வதிலும், ஆயுதங்கள் செய்வதிலும், படகுகள் விடுவதிலும், உணவு சமைப்பதிலும் மிக உத்தமமானவர்களாக இருந்தார் கள். அவர்களை அண்டி மரியாதையாகக் கேட்டால் செய்து கொடுப்பார்கள். விகாரத்துக்கு ஏதேனும் நன்கொடை வேண்டும் என்று கேட்பார்கள். நன்கொடை கொடுத்துவிட்டால் அந்த நன்கொடைக்கு ஏற்ப மிகச் சிறந்த விஷயங்கள் அவர்களிட மிருந்து வரும். தன் விளைநிலத்தை விற்று பெரும் பொருள் திரட்டி நாகை விகாரத்துக்குப் போய் இவ்வளவுதான் என்னிடம் இருக்கிறது என்று சொன்னவுடன், அவர்கள் ஒரு குறுவாளும், ஒரு நீண்டவாளும் செய்து கொடுத்தார்கள்.

நான்காவது வருட படிப்பு முடித்து இராஜராஜ பிரம்மராயன் உத்தமசோழமிலாடுடையார் அருகே வந்து வணங்கினான். அவன் முதுகிலும் நீண்ட கத்தி இருப்பது பார்த்து அவர் வியந்தார்.

''என்ன இது எங்கே செய்தாய்'' என்று கேட்டார்.

''உங்களை பின்பற்றினேன். உங்களை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு இந்த கத்தியை நாகை விகாரத்தில் செய்தேன்'' என்று சொல்ல,

''சுழட்டிக்காட்டு'' என்று அவர் உத்தரவிட்டார். அவன் சட்டென்று பின்னடைந்து கத்தியை முதுகிலிருந்து வேகமாக உருவி, உருவிய வேகத்திலேயே எதிரே இருப்பவன் தலையை கொய்வது போல கத்தியை வீசி நாலாபுறமும் சுழட்டி மறுபடியும்

அதே வேகத்தில் உறைக்குள் வாளை சொருகினான். குனிந்து வணங்கினான்.

''அற்புதம், மிகச் சரியாக இருக்கிறாய். அந்தணனாக இருந்து கொண்டு இவ்வளவு வேகமாக வேலை செய்வது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. உனக்கு இது என்ன தெரியுமா.'' ஒரு மரக்கட்டையை தூக்கிப் போட்டார்.

பட்டையாக இருந்த மரக்கட்டையில் ஒரு வளைவு இருந்தது.

''தெரியும். இதுபற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''என்ன அது?''

''இது வளை எறி. இந்த வளை எறியில் நீங்கள் மிகவும் சாகசங்கள் செய்வீர்கள். உயரே இருக்கின்ற பருந்துகளைக் கூட அடித்து கொன்றுவிடுவீர்கள் என்று கேள்விப்பட்டிருக் கிறேன்.''

''நல்லது. இதிலேயும் பயிற்சி எடுத்துக் கொள். உனக்கு மூன்று வளை எறிகள் தருகிறேன். அவற்றை எங்கேனும் புல்வெளிப் பக்கம் போய் வீசி வீசி பழகு. முதலில் வானத்தை நோக்கி வீசு. எவ்வளவு தூரம் வீச முடிகிறது என்று கைகளுக்கு பயிற்சி கொடு. பிறகு, 'குறிபார்த்து வீசக் கற்றுக்கொள்'' என்று சொன்னார்.

''நான் உங்களோடு இருக்க விரும்புகின்றேன்'' என்று கேட்க அவர் யோசித்து சொல்வதாக பதில் சொன்னார்.

அவன் மிக மரியாதையாக வணங்கினான்.

உத்தமசோழமிலாடுடையார் கிருஷ்ணன் ராமனை சந்தித்து அந்தப் பையனைப் பற்றி கேட்க,

''நானும் அந்தப் பையனைப் பற்றி கேள்விப்பட்டிருக் கிறேன். வா வா என்று அழைத்தால் அந்த அந்தணன் சரியாக வரமாட்டான். தானாக வருகின்ற அந்தணன்தான் தெளிவாக இருப்பான். எனவே அந்தப் பையனை நீங்கள் ஊக்குவிக்கலாம். எந்த கெடுதலும் வராது.''

''சில சமயம் அந்தணர்கள் அத்துமீறுவார்கள். இவன் மீறி விடுவானோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. அதுவும் அந்தண னாக இருப்பதால் இருக்கிறது.''

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள். அவனை என்னிடம் அனுப்புங்கள். நான் ஒரு வாக்கு வாங்கிக் கொண்டு உங்களிடம் அனுப்புகிறேன்.''

கிருஷ்ணன் ராமனை இராஜராஜ பிரம்மராயன் சந்தித்தான்.

''மன்னர் இராஜராஜர் மீது உண்டான அன்பினால் உன் தகப்பன் உனக்கு அந்த பெயர் வைத்துவிட்டார் போலிருக் கிறது. அந்த பெயர் வைத்ததாலேயே நீ வாள்பிடித்து விட்டாய். நல்லது. உத்தமசோழமிலாடுடையார் மிக அற்புதமான மனிதர். எப்பொழுதும் உண்மை பேசுபவர். மறவர்களுக்கு ஒரு குணம் உண்டு. ஒரு சின்ன சந்தேகம் வந்தால் கூட அதை பெரிதாக்கி பயப்படுவார்கள். அதற்கு சத்தியம் செய்து கொடு. ஒருகாலும் உம்மை மீறமாட்டேன், உங்களுக்கு கீழ்ப்படிந்து இருப்பேன் என்று சத்தியம் செய்து கொடு. உத்தமசோழமிலாடுடையார் சகலமும் கற்றுத் தருவார்.

உனக்கு முப்பது வயது. அவருக்கு அறுபது வயது. கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது. வளை எறிதல் மட்டுமல்ல. நீர் கண்டுபிடிப்பதிலும் அவர் வல்லவர். எந்த இடத்தில் நீர் இருக் கிறது என்று அவர் குச்சியை வைத்துக் கொண்டு எளிதாக கண்டுபிடிப்பார். அவருக்கு விசுவாசமாக இருந்து பிழைத்துக் கொள். இப்பொழுது மன்னனாக இருக்கின்ற இராஜேந்திர ருக்கு வைதீகமான அந்தணர்கள் பிடிப்பதில்லை. அதைவிட தொண்டை தேசத்து அந்தணர்களை மிகவும் விரும்புகிறார். இப்படி போருக்கு தயாராக இருக்கிற அந்தணன் என்றால் இழுத்து அணைத்துக் கொள்வார். எனவே உத்தம சோழமிலா டுடையாரை சேர்ந்து கொள்.''

அவன் கீழ் இறங்க,

''நில்'' என்று உத்தரவிட்டார்.

''இதுவரை கொலை செய்திருக்கிறாயா.''

''இல்லை'' என்று அவன் சொன்னான்.

''விரைவில் கொலை செய்யப் பழகு. வெட்டிக் கொல்ல பழகு. முதல் கொலை மிகவும் கஷ்டமாக இருக்கும். பிறகு மெல்ல மெல்ல அது பழக்கமாகிவிடும். அவனுடைய முதல் போரே இராஜேந்திரருடைய மகன் இராஜாதிராஜன் தலைமையில் கேரளத்தை நோக்கி போவதாக இருந்தது.''

கேரளத்தில் காந்தளூர்*சாலைப் பற்றி அவன் கேள்விப் பட்டிருந்தான். காவிரிபூம்பட்டினத்தில் உள்ள கீழ்ச்சாலை யில் கேரளச்சாலைப் பற்றி மிக பெரிதாக பேசுவார்கள். அந்த நம்பூதிரிகள் எப்படி எல்லாம் அலட்டுவார்கள் என்று சொல் வார்கள். காலில் விழுந்து வணங்கத்தான் வேண்டும். எழுந்திரு என்று சொன்னால்தான் எழுந்திருக்க வேண்டும். சுடுமணலில் படுக்க வைப்பார்கள் என்றெல்லாம் சொல்லி இருக்க, அவனுக்கு அந்த சாலையின் மீது ஒரு வெறுப்பு இருந்தது.

இரவு நேரம் உத்தமசோழமிலாடுடையார் ஒரு கூடாரம் கட்டி ஒரு மரத்தடியில் படுத்திருந்தபொழுது, காந்தளூர்சாலை யில் இருந்து அந்த கூடாரத்திற்கு அறுபது இளைஞர்கள் வந்து நெருப்பு அடித்தார்கள். எல்லோரும் சுற்றி சுற்றி வந்து தாக்கி னார்கள்.

சரட்டென்று படுக்கையோடு மிலாடுடையாரை வெளியே எடுத்து கூடாரத்தை தரையில் சாய்த்தான். மெல்ல அவரை அணைத்துக் கொண்டு புதர் பக்கம் போனான். இரண்டு பேரும் வேகமாக ஆயுதங்களை அணிந்து கொண்டார்கள். கவசம் தரித்துக் கொண்டார்கள். என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள். அவர்கள் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் 'இந்த இரண்டு இடத்தை அறுத்துவிடுவோம்' என்று அவர்களுக்கு பின்புறம் உள்ள இடத்தை'காட்டினார்கள். பதுங்கி நடந்தார்கள்.

அரைக்கால் நாழிகையில் அந்த சக்கரத்தை உடைத்தார் கள். எழுந்து நின்று எகிறி மேலே விழுந்து கைகளால் முகத் தில் குத்த முற்பட்ட ஒரு நம்பூதிரியை பளிச்சென்று விலக் கினான். நம்பூதிரியின் கத்தியை உருவி கூசாமல் கீழே கிடந்த நம்பூதிரியின் நெஞ்சுக்குள் இறக்கினான். திருகினான். இரத்தம் முகத்தில் அடித்தது. காலை முகத்தில் ஊன்றி கத்தியை உருவி னான். அடுத்தபடியாக பின்பக்கம் வந்தவனை அடித்து வீழ்த்தி னான். ஓங்கி, ஓங்கி, ஓங்கி வீசி, வீசி பல நம்பூதிரிகளின் வாளை யும், கைகளையும், கால்களையும் வெட்டினான். வெறிபிடித் தவன் போல தாக்கினான். வெட்ட, வெட்ட இன்னும் வெட்ட வேண்டும் போல ஆசை இருந்தது.

அவனுடைய வேகம் கண்டு உத்தமசோழமிலாடுடையார் திகைத்தார்.

---

* சாலை : போர்ப் பயிற்சிக் கல்லூரி.

''அடப்பாவி. அந்தணனா நீ. ஆடு அறுப்பது போல அறுக்கி றாயடா'' என்று பாராட்டினார். இறுகத் தழுவினார்.

விடியற்காலையில் இராஜராஜன் தலைமையில் மொத்த படையும் காந்தளூர்சாலை நோக்கி ஓடிப்போய் அதை அங்கே ஒரு மூங்கில்கூட நிற்கவொட்டாது எரியூட்டியது. நம்பூதிரிகளை வரிசையாக நிற்க வைத்து விஷ அம்பு தொடுத்து கொன்றார்கள். இரண்டு நாட்கள் தங்கி இருந்தார்கள். மெல்ல பின்வாங்கி னார்கள். அங்கங்கே ஆள் வைத்து வந்தார்கள். பின்வாங்கிய மறுநாளே மறுபடியும் அங்கு ஓடி ஒளிந்த நம்பூதிரி கூட்டம் வந்து சேர்ந்தது என்று தெரிந்ததும் மீண்டும் ஒரே வேகத்தில் படை எடுத்தார்கள்.

அவர்களது வருகையை நம்பூதிரிகள் எதிர்பார்க்கவில்லை. அடித்து நொறுக்கினார்கள்.

''எங்கே ஒளிந்து கொள்வாய், ஒளிந்து கொண்டால் விடு வோமா'' என்று பிரம்பால் அடித்தார்கள். பலபேரை கழுத்தில் சுருக்கிட்டு கொன்றார்கள். எல்லோரையும் பின் கையை கட்டி கழுத்தை வெட்டி கொன்றார்கள்.

இராஜாதிராஜன் அவரை மெச்சி புதிய கேயூரம் அளித் தான். உபதளபதியிடமிருந்து தளபதி என்று மாற்றினான். இராஜேந் திர சோழனுக்கும் அவனைப் பற்றிச் சொன்னான்.

வலங்கை வீரர்கள் ஆயிரம் பேரை தேர்ந்தெடுத்து அவர் களுக்கு குதிரை ஏற்றம் சொல்லிக் கொடுத்து அவன் வைத்தி ருப்பது போலவே நீண்ட வாளை முதுகிற்கு பின் கட்டச் சொல்லி எல்லோர் கையிலும் வளைஎறி கொடுத்து தனித்த ஒரு படையை அவன் உருவாக்கினான். பல்வேறு சாகசங்களை இராஜேந் திரர் முன்பு அவர்கள் செய்து காட்டினார்கள்.

''பரமன் மழபாடி, வந்தியத்தேவர் போன்றவர்களை எல்லாம் விரட்டி விடு என்னைச் சுற்றி பிரம்மராயர்கள் உட்கார்ந்தால் மிகவும் சந்தோஷமடைவேன்'' என்று இராஜேந்திரர் வேடிக்கை யாகச் சொல்ல, எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''அவ்வளவுதானே நான் இனிமேல் மழபாடி பிரம்மராயன்'' என்று அந்த கிழவர் வாய்திறந்து சொல்ல, மறுபடியும் எல்லோரும் எகிறிச் சிரித்தார்கள்.

"பூணூல் போட்டுக் கொள்ளலாம் என்று கம்மாளர்களுக்கு கொடுத்துவிட்டீர்கள். எனவே நான் பூணூல் போட்டுக் கொள்ளக் கூடாதா. நானும் போட்டுக் கொள்ளப் போகிறேன்" என்று அவர் எழுந்து நின்றார்.

எல்லோரும் அவர் தோள் பிடித்து உட்கார வைத்தார்கள். உயர்வு பூணூல் அணிந்து கொள்வதில் இல்லை. ஒரு படையில் புதியதாக ஒரு ஆயுதம் கொணர்ந்து அந்த ஆயுதம் தான் மட்டும் உபயோகப்படுத்தாமல் ஆயிரம் பேருக்கு கற்றுக் கொடுத்து அந்த ஆயிரம் பேரையும் ஒரு படை ஆக்கி வளைஎறி கொடுத்து ஒரு புதிய வேகத்தை நம்முடைய சேனைக்கு இராஜராஜ பிரம்மராயன் செய்திருக்கிறான். இதுதான் சாமர்த்தியம். இதுதான் புதிய முயற்சி. இதுதான் விவேகம். இந்த விவேகத்திற்குத்தான் நான் பிரம்மராயர்கள் வேண்டும் என்று சொல்கிறேன்."

"நான் சீற்றம் அடைந்தாலும் நமது அருண்மொழி பதறுவ தில்லை. என்னை எதிர்த்து திடமாக நிற்பான். அப்படி இருப் பவரை நான் விரும்புகின்றேன். இராஜராஜ பிரம்மராயனுக்கு தனித்த வீடும், மெய்க்காவல் படையும், தங்கக் கேயுரங்களும், முத்திரை மோதிரமும், பிரம்பினால் அடித்து தண்டனை கொடுக் கக்கூடிய உரிமையும், அரசாங்க பணத்தில் இருந்து ஐம்பது கழஞ்சுகள் வரை எடுத்து அவசரத்திற்கு செலவு செய்து கொள்ள வும், அனுமதி இன்றி புதிய குதிரைகள் நூறு வாங்கவும் நான் உரிமை அளிக்கிறேன்."

"என் தந்தையின் பெயர் கொண்டிருப்பதால் இராஜராஜா இங்கு வா என்று அழைப்பது எனக்கு சிரமமாக இருக்கும். எனவே திருவெண்காட்டு நம்பி என அழைப்பேன். நம்பி என்னை நம்பி வரவேண்டும்" என்று சொல்ல, மறுபடியும் சபை சிரித்தது.

"திருவெண்காட்டு நம்பி வாழ்க" என்று உரக்க குரல் கொடுத்தது. அவன் இராஜேந்திரருக்கு மட்டும் திருவெண் காட்டு நம்பி ஆனான். மற்றபடிக்கு எல்லோரும் அவனை இராஜ ராஜ பிரம்மராயன் என்றுதான் அழைத்தார்கள்.

உத்தமசோழமிலாடுடையாருக்கு மருத்துவம் செய்ய முயற்சி செய்து அவனும் பல மருந்துகள் பெயரை கற்றான். உடல் வலிக்காமல் இருப்பதற்கு என்ன உட்கொள்ள வேண் டும். என்ன தடவ வேண்டும் என்று தெரிந்து கொண்டான்.

மிலாடுடையாரை கோமணம் மட்டும் கட்டச் சொல்லி கால்களில் தைலம் தடவி, வேகமாக உருவிவிட அவர் அயர்ந்து தூங்குவார். மிலாடுடையாரின் கால் வலி பாதிக்கும் மேல் குறைந்ததற்கு இராஜராஜ பிரம்மராயனே காரணம்.

அந்த அன்பு மிலாடுடையாரின் ஒவ்வொரு பேச்சிலும் தெறிக்கும். ''தற்கொலை செய்து கொள்ளலாமா என்ற அளவுக்கு கால்வலி இருந்தது. நல்லவேளை. இந்த பிள்ளையாண்டான் காப்பாற்றிவிட்டான். அந்தணன் காலைத் தொடுகிறானே என்று கூச்சம் இருந்தது. கண்மூடி படுத்திருக்கும் போது காலைத் தொடுவது அந்தணன் அல்ல. என் பிள்ளை. என் பிள்ளை என்று ஒரு பாசமே இவன்மீது வந்துவிட்டது'' என்று கண்களில் நீர் துளிக்கச் சொல்வார்.

இராஜராஜ பிரம்மராயன் கைகட்டி அமைதியாக நிற்பான்.

''நான் செத்துப்போன பிறகு என்னுடைய இடத்திற்கு இவன்தான் வர வேண்டும். அந்த பதவியை இவன்தான் வகிக்க வேண்டும். இது என்னுடைய ஆசை. இதை நான் இராஜேந்திரரிடம் சொல்லப் போகிறேன்'' என்று ஒருமுறைச் சொல்ல,

''வேண்டாமய்யா. நாம் இரண்டு பேரும் ஒன்றாக செத்துப் போவோம்'' என்று இராஜராஜ பிரம்மராயன் சொல்ல, சுற்றி இருந்தவர்கள் திகைத்தார்கள்.

''என்னடா முப்பது அகவைதானே. சாவு பற்றி இப்போது என்ன பேச்சு.'' அவர் ஆதுரத்தோடு குமுறினார்.

''நீங்கள் பிள்ளை என்று என்னை சொன்னீர்கள் அல்லவா. அந்த க்ஷணம் முதற்கொண்டு உங்களை தகப்பனாக நான் வரித்துவிட்டேன். என் தகப்பனாரின் முகமே எனக்கு மறந்து போயிற்று. அவரும் என்னை தண்ணீர் தெளித்து விட்டு விட்டார். என் மனைவி என்னோடு வர மாட்டேன். என் பிள்ளை வைதீகத்திற்குத் தான் என்று சொல்லி விட்டாள். தஞ்சையில் வந்து குடித்தனம் செய்வது அவளுக்கு பயமாக இருக்கிறதாம். ஒரு கிராமத்தின் அமைதி தஞ்சையில் கிடையாதாம். எனவே வர மறுக்கிறான். இது எனக்கும் நிம்மதியாகப் போயிற்று.''

இராஜராஜ பிரம்மராயன் கொஞ்சம் கவலை தோய்ந்த குரலில் பேசினான்.

''அதனால் என்ன, இப்போதுதான் கிளி மாதிரி கிடைத்திருக்கிறாளேடா'' என்று வாய் திறந்து அவன் மனைவியை பாராட்டினார்.

பிரகதீஸ்வரர் கோவிலில் நடனமாடிக் கொண்டிருந்த சோழர்குல சுந்தரியை அவன் திருமணம் செய்து கொண்டான். சோழர்குல சுந்தரி அதற்குப் பிறகு நடனமாடுவதை விட்டு விட்டாள். அவளுக்கு கிடைக்க வேண்டிய ஒரு பங்கை புதிதாக வந்த ஒரு நடனப் பெண்மணிக்கு மாற்றிவிட்டாள். வெறும் பதிகம் மட்டும் பாடுகின்ற உரிமை பெற்றாள். அந்த பதிகத்திற்கும் அவள் காசு வாங்குவதில்லை.

''கைநிறைய புருஷன் காசு சம்பாதிக்கும்போது எனக்கெதற்கு இந்த காசு. ஆனால் பெருவுடையாரின் மாலை மட்டும் எனக்கு மாதத்திற்கு ஒருமுறை என்னுடைய பிறந்த நட்சத்திரத்தின்போது தர வேண்டும்'' என்று கேட்டு வாங்கிக் கொண்டாள்.

அவள் பதிகம் பாடும் அழகில் பலபேர் சொக்கினார்கள். சோழகுல சுந்தரிக்கும், இராஜராஜ பிரம்மராயனுக்கும் ஒரு மகன் பிறந்தான். உருவிய பிரம்பு போல மெல்லியதாக இருந்தான்.

''என்னவாக வேண்டும். போர் பயிற்சி எடுத்துக் கொள்கிறாயா'' என்று இராஜராஜ பிரம்மராயன் கேட்டபோது அவன் வேண்டாம் என்று மறுத்துவிட்டான்.

''நீங்கள் மருந்து அறைப்பதையும், மிலாடுடையாருக்கு கால் பிடித்து விடுவதையும், எண்ணெய் தேய்ப்பதையும் பார்த்திருக்கிறேன். எனக்கு மருத்துவனாக வரவேண்டும் என்று ஆசை. நீங்கள் படை எடுத்து போகும்பொழுது நானும் வரவேண்டும் என்பது ஆசை'' என்று உற்சாகமாகச் சொன்னான்.

அப்பனும், அம்மையும் திகைத்தார்கள்.

''நன்றாக இருக்கிறதே இவன் பேசுவது'' என்று இராஜராஜ பிரம்மராயன் வியந்தான். கிருஷ்ணன் ராமனிடம் போய் கேட்டான்.

''நல்ல விஷயம். அவனுக்கு பிடித்த விஷயத்திலேயே விடு. ஒரு அந்தணன் வைத்தியனாகவும் வர வேண்டும். அது எல்லா நேரமும் சோழ தேசத்திற்கு செய்கிற தொண்டு. வெறும் போர்வீரனாக மட்டும் இருந்தால் யுத்தத்தில் மட்டுமே தன்

தலையை காட்ட வேண்டும். ஆனால் இங்கே எல்லோருக்கும், எல்லா மக்களுக்கும் அவன் உதவியாக இருப்பான். நீ கொடுத்து வைத்தவன். நல்ல பிள்ளையை பெற்றிருக்கிறாய்'' என்று வாழ்த்தினார்.

தஞ்சையிலுள்ள தலைசிறந்த மருத்துவருக்கு ஓலை அனுப்பினார். அந்த ஓலையை அவரிடம் கொடுத்து காலில் விழுந்து வணங்கினார்.

''மெத்த மகிழ்ச்சி. நீ அந்தணப் பிள்ளை. உனக்கென்று சில விஷயங்கள் இருக்கின்றன. அதைத் தவறாது செய்து வா. மூச்சு பயிற்சியும், காயத்ரி ஜபமும், அக்னி ஹோத்ரமும் தினம் நீ செய்த பிறகுதான் இந்த இடத்திற்குள் படியேற வேண்டும். ஒருநாளும் தவறக்கூடாது'' என்று அவனுக்கு கட்டளை இட்டார்.

அவன் 'சரி' என்று ஏற்றுக்கொண்டான்.

விடியற்காலையில் இந்த மூன்று வேலையையும் முடித்து விட்டு அவன் அவரிடம் வந்து உட்கார்ந்து கொள்ள கலுவத்தில் மருந்தை பொடித்து போட்டு நீர்விட்டு அரைக்கச் சொல்லிக் கொடுத்தார். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் அவன் அரைத்த படியே இருந்தான். அவனுடைய கைகளும், கழுத்தும், இடுப்பும், முதுகும் விரிவடைந்தன. தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினமும் அவருக்குக் கொடுத்தார். அது அவனை சுறுசுறுப்பாக்கிற்று. அவன் நுரையீரலை வளமாக்கிற்று. இரத்த ஓட்டத்தை அதிகமாக்கிற்று.

''கை கட்டை விரல் நகத்தை வளர்த்துக் கொள். அந்த நகத்தால் உடம்பின் சில இடங்களில் அழுத்தி நரம்பை நசுக்கி இரத்த ஓட்டத்தை நிறுத்தி பிறகு விட்டால் வேகமாக இரத்த ஓட்டம் பாயும். அந்த இரத்த ஓட்டம் பல விஷயங்களை சீர் செய்யும். அதை கற்றுக் கொள்'' என்று சொல்லி உடம்பில் நரம்புகள் ஓடும் பாகங்களை அவனுக்கு சொல்லி கொடுத்தார்.

ஒரு வருடத்தில் அந்த விஷயத்தை அற்புதமாக அவன் கற்றுக் கொண்டான்.

கர்ப்பிணி பெண்களின் நாடி பிடித்துப் பார்க்க அவள் உள்ளுக்குள்ளே இருக்கின்ற குழந்தையின் அமைப்பை சொல்லி விடுவான். பட்டு போட்டு பெண்களுக்கு நாடி வைத்தியம் செய் என்று அவன் குருநாதர் சொன்னார்.

''எதற்கு பட்டு போட வேண்டும்'' என்று அவன் கேட்டான்.

''சிலரை நாம் தொடக்கூடாதல்லவா'' என்று அவர் பதில் சொல்ல,

''அப்படி ஒன்றும் இல்லை. தீண்டத்தகாதவர் என்று யாருமே இல்லை. எல்லோரும் மனிதர்கள். எனக்கு உடம்புதான் முக்கியமே தவிர மனிதனுடைய குணங்களோ, மற்ற ஆசாபாசங் களோ முக்கியம் இல்லை. என்னிடம் வருகின்ற நோயுற்றவரின் உடம்பு மட்டுமே என் கண்ணில் தெரிகிறது. அவர் பதவியும், அவர் ஜாதியும் என் கண்ணுக்குத் தென்படாது'' என்று அவன் தீர்மானமாகச் சொன்னான்.

''மிகச் சரியான ஒரு சீடனை எனக்கு கிருஷ்ணன் ராமன் கொடுத்திருக்கிறார்'' என்று அந்த தலைமை வைத்தியர் குதூ கலித்தார்.

ஞானசம்பந்தன் மிகச் சிறந்த மருத்துவனாக விளங் கினான். அவன் நல்ல இடத்தில் இருக்கும் காலம் அதிகம் இல்லை என்று பலருக்குத் தோன்றியது. மிலாடுடையாருக்கு வைத்தியம் செய்ய அப்பனும், பிள்ளையும் எப்பொழுதும் தயாராக இருந் தார்கள்.

''சோழ தேசத்திற்காக அடிபட்டீர்கள் ஐயா. அதற்காக வாங்கிய வெட்டு உள்ளே வரை பரவி இருக்கும். வெட்டு காயம் வெளியே ஆறினாலும் உள்ளுக்குள் நொய்மையாகத்தான் இருக் கிறது. மெல்ல மெல்ல இரத்த ஓட்டத்தை அதிகரித்துத்தான் உங்களை சரி செய்ய முடியும். எனினும் பாதிதான் செய்ய முடியும். மீதி அவஸ்தையை நீங்கள் பட்டுதான் ஆக வேண்டும். நீங்கள் மட்டும் அல்ல. எல்லா மறவருக்கும் இதுதான் கதி'' என்று மிகப்பெரிய மருத்துவராக ஞானசம்பந்தன் பேசும்பொழுது தந்தையும், மிலாடுடையாரும் வாய்பிளந்து கேட்டார்கள்.

அதனாலேயே இராஜராஜ பிரம்மராயரின் மீது மிலாடுடை யாருக்கு காதல் அதிகரித்தது. இன்னும் உறுதியாயிற்று.

அவர்கள் யுத்தத்திற்கு போய் எதிரியை சூறையாடுகின்ற விஷயமட்டுமல்லாது ஒரு யுத்தத்திற்கு போகும்பொழுது என்ன மருந்துகள் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற விஷ யத்தை கவனித்துக் கொள்ள நியமிக்கப்பட்டார்கள்.

''வேலை தெரிந்தவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பது எனக்கு நிம்மதி. வெறும் வைத்தியரை மட்டும் நம்பிக் கொண்டு இல்லாது நம்மோடு படை நடத்துகிறவர்களுக்கு இந்த விஷயம் தெரியும். வைத்தியரை என்ன செய்ய வேண்டும் என்று சொல்லத் தெரியும் என்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது'' என்று இராஜராஜித்தன் மிகவும் சிலாகித்தான்.

இளவல் *இராஜேந்திரனுக்கு ஒரு அம்பு குத்தி காது கிழிந்து போயிற்று. அதை ஞானசம்பந்தன் சீர்செய்து கொடுத்தான்.

காயம் காதில் பட்டதால் தலைவலி இருந்தது. அதையும் தைலம் தடவி கயிறு போட்டு முறுக்கி இறுக்கி இரத்த ஓட்டத்தை அதிகரித்து அங்கேயும் சரி செய்தான். கண்களுக்கு மருந்து இட்டு நாசியை சுத்தம் செய்தான். 'நாலைந்து நாள் அலையாது இருங்கள்' என்று கட்டிலில் படுக்க வைத்து வைத்தியம் செய்து பூரண குணத்தோடு அனுப்பினான்.

சோழகுல சுந்தரிக்கும், இராஜராஜ பிரம்மராயனுக்கும் மிகப் பெரிய மரியாதை தஞ்சையில் இருந்தது.

முழு நெல்லிக்காயை தேனில் ஊறவைத்து சாப்பிடுவது என்பதை தஞ்சையில் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். எல்லா இனத்தாரும் அதை நிச்சயம் உண்ண வேண்டும். தங்களை நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ள அது உதவும் என்று சொன்னார்கள். பெரிய நெல்லி தோட்டங்கள் வளர்க்க பணஉதவி செய்தார்கள்.

''தலைமை வைத்தியரே, ஒரு வண்டி போதாது. இரண்டு வண்டிகள் வேண்டும். இரண்டு வண்டிகளும் இரண்டு திக்கில் பிரியப் போகிறது. ஒன்று அரையன் இராஜராஜனை பின் தொடரும். இன்னொன்று சக்கரவர்த்தி இராஜேந்திர சோழரை பின்தொடரும். இப்பொழுது இருப்பது போல இன்னொரு மடங்கு மருந்துகள் வேண்டும். வழியில் எங்கே மருந்துகள் சம்பாதித்துக் கொள்ளலாம்'' என்று கேட்க,

அவர்கள் பல இடங்களைச் சொன்னார்கள்.

வெட்டு காயத்திற்கு உண்டான மருந்துகளை அதிகம் எடுத்துக் கொள்ள மிலாடுடையார் கட்டளை இட்டார். ஒவ்வொரு

* இரண்டாம் இராஜேந்திரன், இராஜேந்திரருடைய இரண்டாம் மகன். அவரையே இளவல் என்கிறோம்.

மருந்தையும் இராஜராஜ பிரம்மராயன் சோதித்தான். எல்லாம் மிகத் தரமாக இருந்தன.

''தனியாக ஒரு அனுமதி நீங்கள் தர வேண்டும்.'' தலைமை வைத்தியர் கேட்டார்.

''என்ன?''

''உங்கள் பிள்ளையை நான் காடுகளுக்கு அழைத்துப் போகப் போகிறேன்.''

''எதற்கு?''

''அங்கிருந்துதான் மூலிகைகள் கொண்டுவர முடியும். உலர்ந்த காய்களை, விதைகளை, மரப்பட்டைகளை நாம் அங்கிருந்துதான் எடுத்து வர வேண்டும். அப்படி அங்கு போய் அவைகளை இனம் காணுவதற்கு இவர் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே காடுகளுக்கு ஊடே போய் வேடர்களோடு கலந்து பேசி, அங்கிருந்து நமக்கென்று மருந்துகள் வாங்கி வர வேண்டும். யுத்தத்திற்கு போகும் வழியில் பல இடங்களில் நாங்கள் பிரிந்து காடுகளுக்கு போய் அங்குள்ள வேடர்களை சந்தித்து இன்னின்ன விஷயங்கள் வேண்டுமென்று கேட்கப் போகிறோம். அப்படி கேட்கும்பொழுது அவர்கள் பதிலுக்கு ஏதேனும் வேண்டும் என்று கேட்பார்கள். பொறி கழஞ்சுகளை அவர்கள் வாங்குவதில்லை.

சோளமோ, கம்போ, கேழ்வரகோ, அரிசியோ அவர்களுக்கு மிகப் பிடித்தமான விஷயம். அரிசியை மிகவும் விரும்புவார்கள். ஒரு கலம் அரிசிக்கு உயிரையே கொடுப்பார்கள். ஒரு கலம் அரிசிக்கு ஒரு ஜாடி நிறைய தேன் வாங்கிவிடலாம்.

எனவே, அவர்களுக்கென்று கொடுப்பதற்கென்று தனியாக அரிசி வேண்டும். இதற்கு தலைமையாக உங்கள் பிள்ளையை அனுப்பப் போகிறேன்'' என்று சொல்ல,

இராஜராஜ பிரம்மராயன் தன் பிள்ளையை அருகே அழைத்து தழுவிக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான்.

''எந்த வேலை செய்தாலும் சோழ தேசத்திற்காக செய்கிறாய் என்பது மிகப் பெரிய பெருமையாக இருக்கிறது. என் வாழ்க்கை வீணாகப் போயிற்றோ, சரியான பரம்பரையை நான் உருவாக்கவில்லையோ என்று வருத்தப்பட்டேன். இப்போது இல்லை.

இந்த முப்பத்தைந்து வயதில் எனக்கு நீ துணையாக இருக்கிறாய் என்பது சந்தோஷமாக இருக்கிறது. நீயும் அரச சேவையில் இருக்கிறாய் என்பது ஆனந்தமாக இருக்கிறது. சமயம் நேரும் போது இராஜேந்திரருக்கு நான் அறிமுகப்படுத்துவேன்'' என்று சொல்ல அவன் சரி என்று தலை அசைத்தான்.

பேசாதவனாகவே அவன் இருந்தான்.

வண்டி நிறைய விதம் விதமான மருந்துகள் ஏறின. எங்கெல்லாம் மருத்துவர்கள் இருப்பார்கள் என்பதையும் மிலாடுடையாரை கேட்டு ஞானசம்பந்தன் தெரிந்து கொண்டான்.

யுத்தம் என்பது வெறும் வாளும், வேலும் மட்டுமல்ல. அது அரிசியும், பருப்பும் நிறைந்தது. அது வலியை நீக்குகின்ற எண்ணெயும், காயத்திற்கு போடுகின்ற மருந்தும் கொண்டது. கல் தச்சர்களையும், கம்மாளர்களையும் கொண்டது.

போருக்கு போய் அங்கு கோட்டை கதவுகளை இடித்து உடைத்த பிறகு அதை சரி செய்ய கொத்தனார்களையும் கொண்டது.

புரவிக்கு முதுகு தேய்த்துவிட்டு புல் புடுங்கி போடுகின்ற பஞ்சமர்களை கொண்டது. யானை மீது ஏறி நின்று எக்காளம் ஊதுவார், முரசு அறிவிப்பார் என்று பல்வேறு வேலை ஆட்களைக் கொண்டது.

இந்த முறை ஞாபகமாக பொற்கொல்லரையும் கூட்டிக் கொள்ள வேண்டும் என்று இராஜராஜ பிரம்மராயன் நினைத்துக் கொண்டான். மிலாடுடையாரின் காதில் சொன்னான்.

''ஆமாம். போன தடவை தவித்துப் போனோம். வெண்கலத்தை தங்கம் என்று நினைத்து எடுத்து வந்தோம். இந்த முறை நிச்சயம் நாம் சரியாக அதை செயல்படுத்த வேண்டும்'' என்று சொல்லி தேர் ஏறினார்கள்.

அவர்கள் பொற்கொல்லர் இருக்கும் இடம் நோக்கிப் போனார்கள். கூடைகூடையாய் மருந்துகள் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டன. ஞானசம்பந்தன் தலைமை வைத்தியரை விழுந்து வணங்கினான்.

''நான் தொலைதூரம் போகப் போகிறேன். உங்கள் ஆசீர்வாதம் வேண்டும். இன்னும் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும்

என்று ஆசீர்வாதம் செய்யுங்கள். இன்னும் புதிய மருந்துகள் கொண்டு வர வேண்டும் என்று செய்யுங்கள்.

அரசர் கங்கை நீர் கொண்டு வருவதற்காக போகிறாராம். அப்படி ஒரு எண்ணம் அவருக்கு இருக்கிறதாம். எனக்கு புதிய மருந்துகள் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. நல்ல மருந்துகளோடு சோழ தேசம் வருவேன்'' என்று அவன் உற்சாகமாகச் சொன்னான்.

அவனை எல்லா வைத்தியர்களும் தலைதொட்டு ஆசீர்வதித்தார்கள். ஜாதி மாறாமல் திருமணம் செய்து கொள்வது ஒரு விஷயம். ஜாதி மாறி திருமணம் செய்து கொள்வது ஒரு விஷயம். வெவ்வேறு ஜாதியினரிடையே கலப்பாக பிறந்த பிள்ளை மிகச் செழிப்பாகவும், சிறப்பாகவும், திடமாகவும் இருக்கிறது என்று நம்பினார்கள்.

கலப்பின பிள்ளைகளுக்கு மரியாதை இருந்தது.

ஞானசம்பந்தன் கலப்பின பிள்ளை. சீராகவும், செழிப்பாகவும், திடமாகவும் வளர்ந்த பிள்ளை. அவன் வைத்தியத்தின் புதிய முறைகளை கற்று வருவான். சோழ குலத்தை இன்னும் சுகமாக இருக்க வைப்பான் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது.

* * *

அத்தியாயம் 20

தஞ்சாவூர் தெற்கு புறம்படியின் பக்கம் பாடி காவல் செய்திருந்த வீரர்களால் மடக்கப்பட்டார்கள். தஞ்சையைச் சுற்றி மிகப்பெரிய மதில் எழுப்பப்பட்டு ஆழமான அகழி தோண்டப் பட்டு அதை கடப்பதற்கு முன் யாராயினும் தங்களை பற்றி சொல்லிவிட்டுத் தான் போக வேண்டும் என்ற நிரந்தர கட்டளை இருந்தது. சில சமயம் வீரர்கள் கடுமையாக சோதித்த பிறகே மக்களை உள்ளே அனுமதித்தார்கள். தினசரி உள்ளே போய் விட்டு வருகின்ற கிராமத்து மக்களும் இருந்தார்கள்.

குதிரையில் வந்து இறங்கிய நன்கு உடுத்திய இடையில் வாளும், பட்டுத் தலைப்பாகையும், கைகளில் தங்க வளை யமும் நெஞ்சில் ஆரமும் கொண்டு பிரபுக்கள் போல் இறங்கிய அவர்களை சோழ வீரர்கள் வரவேற்றார்கள்.

''உள்ளே போக வேண்டுமா'' என்று கேட்டார்கள்.

''ஆமாம்'' என்று அவர்கள் பதில் சொல்ல,

''நீங்கள் யார். உங்களைப் பற்றி விவரம் என்ன, உங்கள் அடையாளம் என்ன சொல்லுங்கள்'' என்று மரியாதையாக விசா ரித்தார்கள்.

''என் பெயர் நிமலன் அகதீஸ்வரன். ஸ்ரீ விஜயத்து மன்னர் ஸ்ரீமாறன் விஜயோத்துங்கவர்மனின் மகனான சங்கிராம விஜயோத் துங்கவர்மனின் கன்மி. அதாவது தூதரக அதிகாரி. இது என் முத்திரை மோதிரம். இது எனக்கு என் அரசர் கொடுத்த அடை யாள ஓலை.''

''வணக்கம் ஐயா, உங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக் கிறோம். என்ன விஷயமாக தஞ்சைக்கு வருகிறீர்கள்.''

''சோழ தேசத்திற்கும், ஸ்ரீ விஜயத்திற்கும் நல்ல உறவுகள் இருக்கின்றன. அதை மேலும் வலுப்படுத்த நான் அரசரை சந்திக்க விரும்புகின்றேன்.''

சட்டென்று வீரர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள்.

''நல்ல உறவு இருக்கிறது என்று இன்னும் சொல்லுகிறீர் களா.''

''சிற்சில குழப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். சில முரடர்கள் முட்டாள்தனமாக செய்திருக்கலாம். அதற்கும் ஸ்ரீ விஜய மன்ன ருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இப்பொழுது அந்தப் பகுதி கடற்கொள்ளையரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அதை தடுக்க தீவிர நடவடிக்கைகள் எங்கள் மன்னர் எடுத்துக் கொண் டிருக்கிறார். கடற்படையை பெருக்கிக் கொண்டிருக்கிறார்.

இடையே சோழ தேசத்து வணிகர்கள் சில சிரமங்களுக்கு உள்ளாயினர் என்று கேள்விப்பட்டு எங்களை இராஜேந்திர சோழர் அழைத்திருக்கிறார். இது அழைப்பு ஓலை.'' அவர் இராஜேந்திர சோழர் முத்திரையிடப்பட்ட ஓலையை காட்ட, சட்டென்று அவர்கள் நிமிர்ந்தார்கள். அந்த ஓலையை கண்ணில் ஒற்றிக்கொண்டார்கள். தலையில் வைத்துக் கொண்டார்கள்.

''முதலிலேயே சொல்லக்கூடாதா, இராஜேந்திரர் அழைக் கிறார் என்றால் உடனடியாக அனுப்பி இருப்போமே. நீங்கள் யார் ஐயா.''

அடுத்தவரை நோக்கி திரும்பினார்கள்.

''நான் கடாரத்து அரசரின் கன்மி. தூதுவ அதிகாரி. என் பெயர் குருத்தன் கேசவன் அக்கரலோகை.

கடாரத்திலும் அரசியல் குழப்பங்கள் இருக்கின்றன. அவை சோழ வணிகர்களுக்கு எதிராகவும் சில விஷயங்களில் ஈடுபட்டு விட்டன. எனவே அதைப் பற்றி விளக்கம் அளிப்பதற்காகவும் நான் நண்பரோடு சென்று கொண்டிருக்கிறேன். எனக்கு தனி யாக அழைப்பு இல்லை. ஆனாலும் எனக்கு அழைப்பு விடுவதற்கு முன்பு நானாகவே இராஜேந்திரரை பார்த்துவிடலாம் என்று நினைத்து வந்திருக்கிறேன். நீங்கள் அனுமதித்தால் உள்ளே போகிறேன்.''

''அனுமதிக்க மறுப்போம் என்று நாங்கள் சொல்லவே இல்லையே. ஏன் தேவை இல்லாத ஒரு வார்த்தையை பேசு கிறீர்கள்.''

குருத்தன் கேசவன் அக்கரலோகை இந்த பெயரை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒருமுறை நாகப்பட்டினம் வந்தபோது நீங்கள் சீனக் கழஞ்சுகள் கோவிலுக்கு கொடுத்ததாகச் சொல்லி

அந்த கழஞ்சுகளை காட்டினார்கள். சொக்கத்தங்கமாக இருந்தது. அர்த்தநாரீஸ்வரருக்கு நீங்கள் மாலை அணிவித்தீர்களாம். தனியாக மரகத மாலை செய்து கொடுத்தீர்களாம். நீங்கள் அளித்த அந்த அர்த்தநாரீஸ்வரர் சிலையை நாங்கள் விழுந்து வணங்கினோம். உங்கள் பெயர் அப்போது சொல்லப்பட்டது. உங்களைப் பற்றி அங்கும் குறிப்பு இருக்கிறது.''

''ஆமாம். அது நான் நிர்மாணித்ததுதான். இராஜேந்திர சோழர் மிகவும் சந்தோஷப்பட்டார்.''

''ஆனால் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறதே.''

''அப்படித்தான் தோன்றுகிறது. அதை சீர் செய்ய வேண்டும். இராஜேந்திரரால் தான் முடியும்.''

''செய்தது நீங்கள், சீர்செய்ய வேண்டியது இராஜேந்திரா. என்ன அபத்தம் இது'' ஒரு அதிகாரி வாய் நிறைய வெற்றிலையுடன் பேசினார்.

அவர் மௌனமாக இருந்தார்.

''சரி, உள்ளே போய் வாருங்கள். எப்பொழுது திரும்புவதாக உத்தேசம்.''

''தெரியவில்லை.''

''இதை என்ன பதிலாக நாங்கள் எடுத்துக் கொள்வது.''

''ஒருவேளை நாங்கள் திரும்பாமலேயே போகலாம்.''

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்.''

''இராஜேந்திரர் எங்களை சிறை பிடித்து காராக்ரஹத்தில் அடைத்துவிடலாம். சோழ வணிகர்கள் மீது உண்டான பரிதாபத்தால் எங்களை தண்டிக்க முயற்சிக்கலாம்.

எனவே திரும்பி வரும் நேரம் பற்றி நான் என்ன ஐயா சொல்வது.''

சோழ வீரர்கள் துணுக்குற்றார்கள். அவர் பேச்சில் உண்மை இருக்கிறது என்று புரிந்து கொண்டார்கள்.

''சரி. இருவரையும் அனுமதிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு நாள் இரவிலும் நீங்கள் தஞ்சையில் உள்ள தொண்டை அந்தண அதிகாரிகள் இருக்கும் இடம் வந்து நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று தெரிவித்தல் வேண்டும். யாருக்கும் தெரிவிக்காமல் எங்கே

யும் போகக்கூடாது. சந்தேகப்படும்படி நீங்கள் நடமாடினால் அதற் காகவும் சிறையில் தள்ளப்படுவீர்கள்.''

அவர்கள் மௌனமாக தலை அசைத்தார்கள்.

''நீங்கள் உள்ளே போகலாம்.'' அகழிமேல் பலகை எடுக்கப் பட்டது. அவர்கள் குதிரையில் தாவி ஏறினர்.

''சீனக் கழஞ்சு ஒன்று இருக்குமா. இவர்களெல்லாம் பார்க்க வில்லை'' என்று சொன்னார்கள்.

''தருகிறேன்.'' அவர் இடுப்பில் கை வைக்க,

''வேண்டாம் ஐயா, வேண்டாம். நான் இந்த நண்பர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் ஆசைப்பட்டேன். மற்ற படி இப்பொழுது வாங்கினால் அதை லஞ்சம் என்று நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள். சோழ தேசத்தில் லஞ்சம் வாங்கினால் கையை வெட்டி விடுவார்கள். எங்களுக்கு பொன் ஒன்றும் பார்க்க வேண்டாம். நீங்கள் போய் வாருங்கள்.'' அவர் மறுபடி யும் கீழே இறங்கினார்.

இடுப்பிலிருந்து பொன் உருவி அந்த உருண்டை பொன்னை சோழ வீரர்களிடம் காட்டினார். சோழ வீரர்கள் கையில் அதை தூக்கி எடை போட்டார்கள். கண்ணுக்கு அருகே வைத்துப் பார்த்தார்கள். கன்னத்தில் வைத்துக் கொண்டார்கள்.

''சுத்தப் பொன். எப்படி சில்லென்று இருக்கிறது பார்'' என்று சொன்னார்கள். அவரிடமே பொன்னை மிக மரியாதை யாக கொடுத்தார்கள்.

''நல்லபடியாக போய் வாருங்கள். நம்முடைய உறவுகள் பலப்பட வேண்டும். அதற்குண்டான முயற்சியை செய்யுங்கள். சீன தேசத்திலிருந்து வருகின்ற பொருள்கள் தஞ்சையை நிறைய அலங்கரிக்கட்டும்'' என்று சொல்ல,

அவர்கள் வணங்கி விடை பெற்றார்கள்.

'அந்தப் பொன்னை வாங்கிக் கொண்டிருக்கலாமோ' என்று முதலில் கேட்டவனுக்குத் தோன்றியது. ஆனால் தன் கை தன் னிடம் இருக்க வேண்டும் என்ற ஆசையில் அவன் மௌனமாக இருந்தான்.

''விமலன் அகதீஸ்வரன். ஸ்ரீ விஜய தேசத்து கன்மி.

அழைத்தவுடன் வந்துவிட்டாரா. சவுக்கு எங்கே எடுத்து வா.''

''மன்னா அவசரப்படாதீர்கள். அவர் தூதுவ அதிகாரி. அவருக்கும் ஸ்ரீ விஜயத்து விஷயத்திற்கும் அதிகம் சம்பந்தம் இருக்காது, முரட்டுத்தனமாக நடப்பதில் எந்த லாபமும் இல்லை.''

''முரட்டுத்தனமாக நான் நடக்கப்போகிறேன் என்று யார் உன்னிடம் சொன்னது.'' வழிமறித்த பரமன் மழபாடியை எகத்தாளமாக இராஜேந்திரர் வினவினார்.

''சவுக்கு எடுத்து வா என்று சொன்னேன். அடிப்பேன் என்றா சொன்னேன். சவுக்கு அவரை அடிப்பதற்கு அல்ல. வேறு ஒருவரை அடிப்பதற்கு.

அடேய் இங்கு வா. அலறுவாயா.'' அருகிலுள்ள காவலனைக் கூப்பிட்டார். விழித்தான்.

''அடித்தால் அலறுவாயா.''

''அடித்தால் அலறத்தானே வேண்டும்.''

''ஆக, அடிக்காமல் அலறுவாயா.''

''அடிக்காமல் நான் எதற்கு அலற வேண்டும்.''

''அட அலறடா.''

''அலறாவிட்டால்.''

''நிஜமாக அடிப்பேன், நன்றாக அடிப்பேன். அப்பொழுது நிஜமாகவே அலறுவாய். ஆனால் உன்னை அடிக்க எனக்கு இஷ்டமில்லை. நீ அலறுவதில்தான் இங்கு பல முக்கியமான விஷயங்கள் நடைபெறப் போகின்றன. என்ன, அடிக்காமல் அலறுவாயா.''

''முயற்சிக்கிறேன் மன்னா.''

''சரியாக அலறாவிட்டால் அடி முதுகில் விழும்.'' சவுக்கை கையில் வாங்கி படேர் என்று சொடுக்கினார்.

இராஜேந்திரர் என்ன செய்யப் போகிறார் என்று சபையில் உள்ளவர்களுக்கு தெரிந்துவிட்டது. பரமன் மழபாடி வாய்விட்டுச் சிரித்தார்.

சரி ஒரு நாடகம் நடக்கப் போகிறது.

''அடேய். வெற்றிலைப் பாக்கு கொண்டு வாருங்களடா'' என்று சொல்லி இளந்தளிர் வெற்றிலையை தொடையில் வைத்து துடைக்க ஆரம்பித்தார்.

குருத்தன் கேசவனும், விமலன் அகதீஸ்வரனும் உள்ளே நுழைந்தார்கள். இருவர் முகத்திலும் பயத்தின் களை கொட்டிக் கிடந்தது.

தங்களை பரமன் மழபாடியாரிடம் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். பரமன் மழபாடியார் சரி என்று தலை அசைத் தார்.

''அது, கிருஷ்ணன் ராமன் பிரம்மராயர். இது அருண்மொழிப் பட்டர். அவருடைய மகன். இது வந்தியத்தேவர். இது உத்தம சோழ மிலாடுடையார். இது அரையன் இராஜராஜன்'' என்று சபை யில் உள்ளோர்களை அறிமுகப்படுத்த,

''மன்னர் வரச்சொன்னார் வந்திருக்கிறோம். மன்னர் ஊரில் இருக்கிறாரா.''

''தாராளமாக இருக்கிறார். உட்காருங்கள்.'' அடுத்து பெரும் குரல் கேட்டது.

''அடித்து பிய்த்து விடுவேன். உளவா பார்க்கிறாய். சோழ தேசத்தின் உப்பை தின்றுவிட்டு சோழ தேசத்திற்கு எதிராகவா வேலை செய்கிறாய்.'' 'சொடேர் சொடேர்' என்று சவுக்கு வீசப் பட்டன. அடி விழுவது பலமாகக் கேட்டது. அவன் அலறினான். மிக பயங்கரமாக அலறினார்.

''இது போதாது, இன்னும் பயங்கரமாக அலற வேண்டும்'' என்று அடிக்குரலில் கட்டளை இட்டார்.

''முயற்சிக்கிறேன் அய்யா.''

''முயற்சிக்கிறாயா. இப்பொழுது அலறுகிறாய் பார்.'' இரண்டடி அவன் முதுகில் விழுந்தது.

அவன் முதுகை பிடித்துக் கொண்டு மீண்டும் பெரிதாக அலறினான்.

''விட்டுவிடுங்கள், விட்டுவிடுங்கள். இனிமேல் செய்யா தன செய்யேன். விட்டு விடுங்கள். விட்டு விடுங்கள்'' என்று கத்தினான்.

பரமன் மழபாடியார் வாய் கொள்ளாமல் சிரித்தார். கிருஷ் ணன் ராமன் பிரம்மராயர் அமைதியாக எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் இருந்தார். வந்தியத்தேவர் மெல்ல மீசையை தடவிக் கொண்டு எதிரே இருந்த இருவரையும் உற்றுப் பார்த்தார். அருண்

மொழிப்பட்டன், இளவரசன் இராஜராஜித்தனோடு குசுகுசு என்று பேசிக் கொண்டிருந்தார்.

இராஜேந்திரர் முணுமுணுப்பாக ஏதோ பேசும் குரல் கேட்டது.

குருத்தன் கேசவனை எனக்குத் தெரியும். அவர் ஒரு அர்த்த நாரீஸ்வரர் சிலையை கொடுத்திருக்கிறார். அதை நான் பார்த் திருக்கிறேன். மிக அழகான சிலை. அதனுடைய இடது கையில் கண்ணாடி இருக்கும் அல்லவா. அது வித்தியாசமாக இருக் கிறது'' என்று பரமன் மழபாடியார் சொல்ல,

பரிதாபமாக 'ஆம்' என்று குருத்தன் கேசவன் தலையாட்டி னான்.

'அகதீஸ்வரன் கூட நிறைய பொன் நகைகளை தானம் செய்திருக்கிறார். அவர் பற்றியும் நாகையிலிருந்து செய்திகள் வருவதுண்டு. நாகையை வளமாக வைத்திருக்கிறீர்கள். ஆனால் ஸ்ரீ விஜயம் சரியாக இல்லை போலிருக்கிறதே.''

''ஆமாம் சரியாக இல்லை.''

''என்ன சரியாக இல்லை.'' சீற்றத்தோடு அருண்மொழிப் பட்டன் கேட்டான்.

''அங்கு ஸ்ரீமாரன் விஜயோத்துங்கவர்மன் ஆட்சி செய்து வந்தார். அவர் நோய்வாய்ப்பட்டு காலமாகிவிட்டார்.''

''ஆமாம். கேள்விப்பட்டேன்.''

''அவருடைய மகன் சாங்கிராம விஜயோத்துங்கவர்மன் இப்பொழுது ஆட்சி செய்கிறார். அவருக்கு எதிராக வடக்குப் பக்கத்திலிருந்து கலகம் ஏற்பட்டிருக்கிறது.''

''யார் கலகம் செய்வது?''

''பொதுமக்கள் தான் கலகம் செய்கிறார்கள். ஆனால் அந்த கலகத்திற்கு ஒரு பின்னணி இருக்கிறது.''

''என்ன பின்னணி.''

''ஸ்ரீ விஜயம் இந்துக்களுடைய தேசம். இந்துக் கோவில் கள் அங்கு அதிகம் இருக்கின்றன. இந்து வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. அநேக மக்கள் இந்துக்களாக இருக்கிறார்கள். அங்கு வந்து குடியேறிய பௌத்த மதத்தினர்,

புத்த பிட்சுக்கள் அதை பௌத்த நாடாக மாற்ற வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். ஜனங்களை பௌத்த மதத்திற்கு இழுக்கிறார்கள். அது மட்டுமல்லாது இந்துக்களை நோக்கி படை எடுக்க வேண்டுமென்று அவர்களை தூண்டுகிறார்கள். கடற் கொள்ளைக்காரர்களை எல்லாம் பௌத்தர்களாக மாற்றி வணிகத்தை தடுத்து நிறுத்த முயற்சிக்கிறார்கள். ஸ்ரீ விஜயத்தை பட்டினி போட முயற்சிக்கிறார்கள்.

சாங்கிராம விஜயோத்துங்க வர்மனால் இதை தடுக்க முடியவில்லை. அவர் புத்த பிட்சுக்களுக்கு பயப்படுகிறார். இந்துவாகவும் இருக்க ஆசைப்படுகிறார்.''

''ஆக, மதக்கலவரம் சார்ந்த அரசியல். அரசியலுக்குள் மதக் கலவரம். அப்படியா.''

''ஆமாம்.''

''இதை எப்படி தீர்க்கப் போகிறார், புத்த பிட்சுக்களை எப்படி அடக்கப் போகிறார்.''

''புத்த பிட்சுக்களை வாள்முனையில் அடக்க முடியாது. அப்படி அடக்குவது பாபம் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் புத்த பிட்சுக்கள் அவ்விதம் நினைப்பது இல்லை. அதிகாரிகள் தளரவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்துக்களின் பாடுதான் மிக மோசமாக இருக்கிறது. இந்துக் கோவில்கள் இடிபட்டு விடுமோ என்ற அச்சம் கூட இருக்கிறது.''

''இவ்வளவு மோசமான நிலையில் என்ன ஆட்டம் நீங்கள் போடுகிறீர்கள்.''

''நாங்கள் எந்த ஆட்டமும் போடவில்லையே.''

''நன்றாக இருக்கிறதே. உங்கள் கணவாய் வழியாக கப்பல் போனால் நீங்கள் வரி விதிக்கிறீர்களாமே. சீனக் கப்பல் வந்தால் அதற்கும் வரி உண்டாமே. இந்த இரண்டு பேரிடமும் வரி வாங்கிக் கொள்கிறீர்களாம். அதுதவிர மரக்கலத்துக்கு உள்ளே ஏறி உங்கள் கண்ணுக்குபட்ட பொருள்களை நீங்கள் முதலில் எடுத்துக் கொள்கிறீர்களாம். சரக்கு இறக்குபவர்களுக்கு சோறு போடு என்று சொல்கிறீர்களாம். எல்லாம் நீங்கள் வைத்தது தான் சட்டமாம். சகலத்திற்கும் சோழ வணிகர்கள் தலை ஆட்ட வேண்டுமாம்.

சீனர்கள் எதிர்த்தால் அவர்களை வேறு விதமாக சமாளிக் கிறீர்களாம். எப்படி என்று சொல்லட்டுமா.''

''நானும் கேள்விப்பட்டேன். சீனர்கள் காலத்திலிருந்து சோழர் காலத்திற்கு மாறிய பிறகு அந்த சோழர் காலத்தை கொள்ளையடித்து எரியூட்டி, சீனர்கள் மறுபடியும் இங்கு வந்தால் யாரிடமும் வியாபாரம் செய்ய முடியாத ஒரு நிலையை உரு வாக்கி விட்டார்கள்.''

''அப்பொழுது உங்களுடைய தேசம் என்னவாகும்.''

''வறுமையில் தத்தளிக்கும். அது யாருக்கும் தெரிய வில்லை. பயந்து கொண்டு சோழ வீரர்கள், சோழ வணிகர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள் என்று சரணடைவார் கள். இன்னும் அதிகமாக வரி விதிக்கலாம் என்ற யோசனை யில் இருக்கிறார்கள்.''

''இராஜேந்திர சோழரை பற்றி அவர்களுக்குத் தெரியாதா.''

''எனக்குத் தெரியும். அவர்களுக்கு அதிகம் தெரியவில்லை. நான் தெரியப்படுத்த முயற்சித்தும் நடக்கவில்லை. புத்த பிட்சுக்கள் இராஜேந்திர சோழருக்கு எதிராக பிரச்சாரம் செய் கிறார்கள். அவன் இவ்வளவு தூரம் வந்துவிடுவானா. வந்தாலும் உங்களால் சமாளிக்க முடியாதா. இருபதாயிரம் வீரர்களோடு வருவான். இறங்கியவுடன் உதை வாங்குவான். காணாமல் போவான் என்று சொல்கிறார்கள்.''

''உங்களுடைய எண்ணம் என்ன.''

''இரண்டு லட்சம் வீரர்களோடு இராஜேந்திரர் வருவார் என்று நான் ஓலை அனுப்பியிருக்கிறேன்.''

''என்ன ஆயிற்று?''

''கிழித்து போட்டுவிட்டார்கள்.''

''எதை?''

''ஓலையை.''

''அப்பொழுது போய் இறங்கினாலொழிய புத்தி வராது. அப்படித்தானே.'' பரமன் மழபாடியார் சீறினார்.

''ஆமாம். நீங்கள் போய் இறங்கினாலொழிய புத்தி வராது.''

''ஆக, நீங்கள் இங்கு தூதுவராக கன்மியாக இருப்பது

ஸ்ரீ விஜயத்தின் மீது இராஜேந்திர சோழரை படை எடுத்து வா என்று சொல்வதற்காகவா. நல்ல தூதுவரய்யா நீங்கள்.''

''நான் ஸ்ரீ விஜயத்தின் மீது படை எடுத்து வரச் சொல்ல வில்லை. ஸ்ரீ விஜயத்திலுள்ள இந்துக்களை காப்பாற்ற இராஜேந் திரர் உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேன். புத்த பிட்சுக்களின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று விரும்பு கின்றேன். புத்த பிட்சுக்கள் அடுத்தபடி நம்முடைய படை எடுப்பு நாகைக்கு என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். நாகையை நோக்கி புத்த பிட்சுக்கள் வருகிறார்கள். அதிகம் பேர் வருவதற் காக கூடுதலாக மாடமாளிகைகள் கட்டப்பட்டு வருகின்றன. நாகை விகாரை பெரிதாகிக் கொண்டிருக்கிறது.''

''இங்குள்ள புத்த பிட்சுக்கள் என்ன நினைக்கிறார்கள்.''

''அவர்கள் எதைப் பற்றியும் வாய் திறப்பதில்லை. ஆனால் ஸ்ரீ விஜயத்திலிருந்து புத்த பிட்சுக்கள் வந்தால் வரவேற்று உபசரிக்க தயாராக இருக்கிறார்கள். வரவேண்டும் என்று ஆசைப் படுகிறார்கள்.''

''என்ன காரணம்.''

''சோழ தேசத்திலும் புத்த மதத்தை பரப்ப வேண்டும் என்று காரணம்.''

''என்ன?'' அத்தனை பேரும் எழுந்து நின்றார்கள்.

''இதுதான் உண்மையான காரணம். இதைப்பற்றி எனக்கு கவலை இருக்கிறது. இந்த கவலையை நான் புத்த பிட்சுக்களின் தலைமை புத்த பிட்சுவிடம் செலுத்தினேன்.

''என்ன நடக்குமோ அது நடந்தே தீரும். நீர் ஏன் கவலைப் படுகிறீர். உம்முடைய வேலையை பார்த்துக் கொண்டிரும்'' என்று என்னை ஒதுக்கிவிட்டார்.

''நீ ஸ்ரீ விஜயத்து கன்மியா. அல்லது சோழ தேசத்திற்கான உளவாளியாக இங்கு செயல்படுகிறாயா.''

''நான் உண்மைக்கு ஆதரவாக நிற்கிறேன். இராஜேந்திர சோழரின் வலிமையைப் பற்றி சிறிதளவும் தெரியாதவர்களாக ஸ்ரீ விஜயத்து மக்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அவ்வளவு தொலைவு இராஜேந்திர சோழர் போவாரா என்ற சந்தேகம் அவருக்கு மட்டுமல்ல எனக்கும் இருக்கிறது. கடாரத்து

மக்களுக்கு இராஜேந்திரர் வருவார் என்ற நம்பிக்கை அறவே கிடையாது.''

''எதனால் அந்த எண்ணம்?''

''ஏனெனில் சோழ தேசத்து மரக்கலன்கள் பலவீனமானவை. அவைகள் காற்றை நம்பி மட்டுமே பயணப்படுகின்றன. காற்று சரியில்லை எனில் நடுவழியில் உடைந்துவிடுகின்றன. எனவே ஒரு நல்ல மரக்கலத்தை சோழ தேசத்திலிருந்து நாங்கள் பார்த்ததே இல்லை. படை எடுத்து வர வேண்டுமென்றால் மிகச் சிறந்த மரக்கலன்கள் வேண்டும். உங்களிடம் இருக்கின்ற மரக்கலன்கள் வெறும் மூட்டை ஏற்றவும், பாத்திரங்கள் ஏற்றவுமே சரியாக இருக்கின்றன. நல்ல மரக்கலன்கள் இல்லாதபோது எப்படி படை எடுத்து வர முடியும் என்ற கேள்விதான் எல்லோர் மனதிலும் இருக்கிறது.''

''உங்கள் மனதிலும் இருக்கிறதா.''

அவர் மெளனமாக இருந்தார்.

''கேட்கிறேன். உங்கள் மனதிலும் இருக்கிறதா,'' வந்தியத் தேவர் அதட்டினார்.

''ஆமாம். என் மனதிலும் இருக்கிறது, உங்கள் மரக்கலன்கள் நொய்மையானவை. வெறும் படகுகள், பாய்மரம் விரித்த படகுகள். நாவாய்கள் என்று அவைகளை சொல்லவே முடியாது.

சீனத்துக் கப்பல்களை பார்த்திருக்கிறீர்களா. மிகச் சிறந்த நாவாய்கள். உள்ளே தனித்தனியாக அறைகளும் படுக்கைகளும், மதுபானக் கூடங்களும் இருக்கின்றன. யானைகளும், குதிரைகளும் அதில் வருவதற்கு வசதி செய்யப்பட்டு இருக்கிறது. பருவக்காற்றை மட்டும் நம்பி இராமல் முப்பது முப்பது துடுப்பு போடுகின்ற வீரர்கள் உள்ளே இருக்கிறார்கள். அவர்களாலும் படகு செலுத்தப்படுகிறது. மிக வேகமாக சீனத்திலிருந்து மூன்று நாள் பயணத்தில் ஸ்ரீ விஜயம் வந்துவிடுகிறது.

நீங்கள் ஸ்ரீ விஜயத்திற்கு வர கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் ஆகின்றன. அதற்குள் உங்களுடைய வியாபாரிகள் சோர்வடைந்து விடுகிறார்கள். சீனத்துத் தெம்பு உங்களிடம் இல்லை.''

''ஆக, நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்.''

''அதை இராஜேந்திரர் தீர்மானிக்கட்டும். இங்கு கன்மியாக இருக்க வேண்டுமென்றால் இருக்கிறேன். இல்லையென்றால் நான் உடனடியாக ஸ்ரீ விஜயம் திரும்புகிறேன்.''

''திரும்பி...?''

''அங்கு போய் இராஜேந்திர சோழரின் வலிமையைச் சொல்கிறேன்.''

''என்னவென்று சொல்வீர்கள்.''

''நல்ல மரக்கலன்கள் கட்டப்படும் என்று; சொல்கிறேன்.''

''எதை வைத்துக் கொண்டு அப்படி சொல்கிறீர்கள்.'' அருண்மொழிப்பட்டன் கேட்டான்.

''இராஜேந்திர சோழரால் இயலாதது என்று எதுவுமே இல்லை. வேங்கிவரை படை எடுப்பவர் அதைத் தாண்டி இன்னும் கடற்கரை ஓரமாகப் போனால் பல பெரிய மரக்கலன்கள் இருப்பதை பார்த்துவிடலாம். அப்படி மரக்கலன்களை பார்த்துவிட்டால் அம்மாதிரியான மரக்கலன்கள் நமக்குத் தேவை என்பதை உணரலாம்.

சேர தேசத்திலிருந்து சமீபத்தில் இராஜராஜாதித்தன் இராஜேந்திர சோழரின் மகன் கொள்ளையடித்து பல கப்பல்களை நாம் இருக்கின்ற மேல் பட்டிணத்திற்கு அனுப்பி இருக்கிறார். அந்த நாவாய்கள் உங்களுடைய நாவாய்களை விட சிறந்தவை. அதில் பல வீரர்கள் பயணிக்கலாம். குதிரைகள் போக முடியமா என்று தெரியவில்லை. இப்படி பல்வேறு விஷயங்கள் ஒன்று சேர்ந்தால் ஸ்ரீ விஜயத்தை நோக்கி படை எடுப்பது என்பது இராஜேந்திர சோழருக்கு எளிது. ஆனால்...

''என்ன ஆனால்.''

''இங்கேயே இராஜேந்திர சோழருக்கு நாலாபுறமும் ஏகப்பட்ட தொந்தரவுகள் இருக்கின்றன. எனவே இராஜேந்திர சோழர் ஸ்ரீ விஜயம் நோக்கி கடற்படை எடுப்பு நடத்துவாரா என்ற கேள்வி எனக்கும் என் நண்பருக்கும் இருக்கிறது.''

''மிகச் சரியான நினைப்பு.'' இராஜேந்திர சோழர் சவுக்கோடு உள்ளே நுழைந்தார். சிங்காசனத்தில் ஏறி அமர்ந்தார்.

இரண்டு கன்மிகளும் எழுந்து நின்றார்கள். அவரின் பாதம் தொட்டு வணங்கினார்கள்.

''இது எங்கள் தேசத்தின் சார்பாக'' என்று சொல்லி நிமலன் ஒரு பொற்கிண்ணத்தை நீட்டினார்.

அதை பணிப்பெண் வாங்கிக் கொண்டாள்.

ஒரு கற்சிலையை நீட்டினான். அது நடராஜர் உருவத்தை மிக அழகாக செதுக்கி இருந்தது. அதையும் பணிப்பெண் வாங்கிக் கொண்டாள்.

''இவையெல்லாம் சரி, சந்தோஷம். உங்களை சிறை பிடிக்கப் போகிறேன் என்றோ, சவுக்கால் அடிக்கப் போகிறேன் என்றோ நினைக்க வேண்டாம். நீங்கள் பேசியது எனக்கு திருப்தி கரமாக இருந்தது. ஆனால் இராஜேந்திர சோழன் கடல் கடந்து வரமாட்டான் என்ற ஸ்ரீ விஜயத்தின் நினைப்பை அறுத்து எறிய உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை எனக்கு உடனடி யாக விளக்குங்கள்.''

''தாங்கள் ஓலை அனுப்பலாம்.''

''கிழித்துப் போடப் படுமே.'' பரமன் மழபாடியார் சொன் னார்.

''ஆமாம். செவியில் ஏறாது, கிழித்துப் போடப்படும்.''

''வேறு என்ன செய்யலாம்.''

''இன்னொரு வணிகக் குழுவை அனுப்பலாம்.''

''எதற்கு, கை வெட்டி ஒன்றாகக் கட்டவா.''

''இல்லை. அந்த வணிகர்கள் போய் சீனர்களிடத்தில் இந்த விஷயத்தை சொன்னால் சீனர்கள் இந்த விஷயத்தை இன்னும் பக்குவமாக கையாளுவார்கள். சோழர்கள் இல்லாமல் சீனர் களுக்கு வியாபாரம் செத்துவிட்டது போல் இருக்கிறது. சீனர் களுடைய துணையோடு சோழ தேசத்து வணிகர்கள் சங்கிராம விஜயோத்துங்கவர்மனை சந்தித்தால் நல்லது நடக்க வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் அதை புத்த பிட்சுக்கள் தடுக்காது இருக்க வேண்டும். புத்த பிட்சுக்கள் தடுக்காமல் இருக்க.''

''சொல்லுங்கள் தடுக்காது இருக்க.''

''இன்னொரு புத்த பிட்சுவை நீங்கள் அனுப்ப வேண்டும். அவர் பேச்சு அவர்களை சமாதானம் செய்ய வேண்டும். நல்ல

உறவு வேண்டும் என்று அந்த புத்த பிட்சுவுக்கு நீங்கள் அறி வுறுத்த வேண்டும். அவர் தலைமையில் சோழ தேசத்து வணிகர் கள் போய் சீனர்களுடன் கலந்து ஒட்டுமொத்தமாக எங்கள் வியாபாரத்தை குலைக்காதீர்கள் என்று சாங்கிராம விஜயோத்துங்க வர்மனிடம் சொல்ல வேண்டும்.''

''நல்லது உங்கள் யோசனை நன்றாக இருக்கிறது. இப்போது தலைமை புத்த பிட்சு யார்.''

அவர்கள் குசுகுசுப்பாய் ஒரு செய்தியை சொன்னார்கள்.

''ஸ்ரீ விஜயத்திலிருந்து இது குறித்து ஆட்கள் யாரேனும் வருவார்களா.''

''வருவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை. ஆனால் அங்கேயும் தெளிவான புத்த பிட்சுக்கள் இருக்கிறார்கள். ஸ்ரீ விஜயம் வறுமை யில் வாடும் என்று தெரிந்து கொண்டு, இது அரசியல் தீர்வு நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படுகின்ற இளம் புத்த துறவிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் எதுவும் செய்ய இயலாது.''

''நல்லது. இதுபற்றி யோசிக்கிறோம். உங்களுடைய பரிசுக்கு நன்றி. அமைதியாக எங்களுடைய தொண்டை மண்டல அந்தணர்கள் இருக்கின்ற அலுவலகத்தில் தங்கி உணவு உண்டு இளைப்பாறுங்கள். ஒவ்வொரு நாளும் அவர்களிடம் உங்கள் இருப்பைச் சொல்லுங்கள். தஞ்சையைக் கூட நீங்கள் சுற்றிப் பார்க்கலாம். எங்கள் படை பலத்தை கூட நீங்கள் கணக்கிட்டுக் கொள்ளலாம். வேண்டுமென்ற தகவல்கள் உங்களுக்கு கிடைக் கும். கொடுக்க வேண்டும் என்று நான் ஓலை தருகிறேன்.

பரமன் மழபாடியாரே அவருக்கு வேண்டுமென்ற உதவியை செய்யுங்கள். அவர்கள் கேட்கின்ற தகவலை கொடுக்க வேண் டும் என்று அதிகாரிகளுக்கு கட்டளை இடுங்கள்.

அவர்களை இப்போது நான் விடுவிக்கிறேன்'' என்று சொல்ல

அவர்கள் இருவரும் எழுந்து நின்று கை கூப்பினார்கள். ''உங்கள் கருணையான மனதுக்கு எங்கள் அன்பான வணக்கங் கள். நான் சிறைச் செல்ல வேண்டி இருக்குமோ என்ற பயத்தோடு வந்தேன்.''

''அவ்வளவு பெரிய முட்டாள் அல்ல. ஒரு கன்மியை ஒரு தூதரக அதிகாரியை நான் எதற்காக சிறை செய்ய வேண்டும்.

சிறை வைத்து என்ன காணப் போகிறேன். எனக்கு பிரச்சனை தீர வேண்டும். இந்த பிரச்சனை தீர நீங்கள் உதவி செய்தால் இன்னும் மரியாதையாக நடத்தப்படுவீர்கள். உங்களுக்கு இந்த ஊரில் நில புலன்கள் ஒதுக்கவும் நான் ஏற்பாடு செய்வேன். ஸ்ரீ விஜயத்தை அழிப்பதோ, கடாரத்தை அழிப்பதோ என் நோக்கம் அல்ல. என் வணிகர்கள் மீது கை வைத்தால் நொறுக்கப் படுவீர்கள். இது மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சொல்வது போல இப்போது போகின்ற படைக்கு ஏதேனும் ஒரு சிறு கீறல் விழுந்தால் கூட ஸ்ரீ விஜயம் தரை மட்டமாக்கப்படும். கடாரம் எரியூட்டப்படும். அங்குள்ள அத்தனை பட்டணங்களையும் நான் பாழடிப்பேன். இது சத்தியம். என் தாய் நிசும்பசூதனியின் ஆணையாக சத்தியம். இராஜராஜரின் ஆணை யாக சத்தியம். என் தாய் வானமாதேவியின் ஆணையாக சத்தியம். இந்த சத்தியத்தை இரண்டாம் முறையாக செய்கிறேன். இதி லிருந்து ஒரு நாளும் நான் மாற மாட்டேன்.

நீங்கள் போய் வரலாம்.'' அவர் விடை கொடுத்தார்.

அவர்கள் குனிந்து அவசர அவசரமாக வெளியே போனார் கள். அந்த ஓட்டத்தில் தப்பித்தோம், பிழைத்தோம் என்ற உணர்வு இருந்தது.

இராஜேந்திர சோழர் கவலையோடு உட்கார்ந்திருந்தார். ''ஆக, நம்முடைய வாழ்க்கை வேறுபக்கம் திரும்பப் போகிறது இல்லையா, மருமகனே.'' வந்தியத்தேவர் எழுந்து நின்று மன்ன ருக்கு அருகே போய் கேட்டார்.

''ஆமாம். நான் வேங்கியோடு பல விஷயங்கள் முடிந்து விடும் என்று நினைத்தேன். கலிங்கர்களையும், ஒட்டர்களையும் அடித்து நொறுக்கிவிட்டு வரலாம் என்று நினைத்தேன். இப்போது நீங்கள் சொல்வது போல, கிழக்கு திசை நோக்கியும் நாம் போயாக வேண்டும். என்னுடைய கேள்வி அத்தனை தூரம் போக நம்முடைய வீரர்கள் தயாராக இருப்பார்களா. வேங்கிக்கு பிறகு இன்னொரு யுத்தம் என்றால் தயாராக இருப்பார்களா.''

''வேங்கியை யுத்தம் என்று எப்படி நினைக்கிறீர்கள்.'' அருண் மொழிப்பட்டன் கேட்டான்.

''என்ன உளறுகிறாய் அருண்மொழி. வேங்கி, வந்தவுடன் உங்களை வரவேற்கும் என்று நினைக்கிறாயா.''

''ஆமாம், வரவேற்கும்.''

''என்ன சொல்லுகிறீர்கள் அரையன் இராஜராஜரே.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. படை எடுத்து அங்கு போகப் போகிறோம் என்று தெரிந்தவுடன், ஜெயசிம்மனும் விஷ்ணுவர்தன விஜயாதித்தனும் அந்த இடத்தை விட்டு ஓடி விடுவார்கள். நாம் உடனடியாக அந்த இடத்தில் இராஜராஜ நரேந்திரனுக்கு பட்டம் சூட்டலாம்.

இதற்கிடையில் நீங்கள் சொன்னதாக ஒரு விஷயத்தை அருண்மொழி பட்டன் தெரிவித்தான். அம்மங்காதேவியை விமலாதித்தன் மகனான இராஜராஜ நரேந்திரனுக்கு நீங்கள் மணமுடிக்க தீர்மானிப்பதாகச் சொன்னான். மிக அருமையான முடிவு.

மேலைச்சாளுக்கியர்கள் எந்த விஷயத்தை செய்ய வேண்டும் என்று நினைத்தார்களோ. அதே விஷயத்தை நாம் செய்யப் போகிறோம். உங்களுடைய மகளை இராஜராஜ நரேந்திரனுக்கு மணமுடிப்பதால் உறவுமுறை இறுக்கமாகிறது. அப்பொழுது மகளை காப்பாற்ற இராஜேந்திரர் எதுவும் செய்வார் என்ற ஒரு பயம் அவர்களுக்கு ஏற்படும்.

உடனடியாக அவர்கள் அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். ஒட்டர்களையும், கலிங்கர்களையும் தான் நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.''

''ஒட்டர்களுக்கு என்ன அவ்வளவு அக்கரை.''

''ஒன்றுமில்லை. தேசம் பிடிப்பு. ஒட்டர்களுடைய தேசம் ஒன்றும் அவ்வளவு வளமானது அல்ல. கீழைச்சாளுக்கியம் பலமானது. கோதாவரியும், துங்கபத்ரைக்கும் நடுவே இருக்கின்ற மிகப் பெரிய வயல்வெளி அது, அடர்ந்த காடுகள் உள்ளது. எனவே அந்த வளத்தை கொள்ளை அடிக்க வேண்டும் என்ற ஆசை. அரிசி சோறு திங்க வேண்டும் என்ற ஆசை ஒட்டர்களுக்கு வந்துவிட்டது. அந்த அரிசியும், அந்த எருமையும், அந்த பசுவும், அந்த கன்றும் அவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும். ஆடுகளை அடித்து வர வேண்டும் என்ற ஆசையில் இந்தப் போர் நடக்கிறது.

தின்ன வேண்டும் என்றுதான் ஒட்டர்கள் படை எடுத்து வருகிறார்கள். அடித்து நொறுக்கினால் காணாது போவார்கள்.''

''கடுமையான போர் இருக்கும் என்று நினைக்கிறீர்களா.''

''ஆமாம், கடுமையான எதிர்ப்பு இருக்கும். அவர்களுடைய இடம். சட்டென்று பரவி காணாமல் போய் மறுபடியும் ஒன்று கூடி அடிப்பார்கள். நமக்கு அந்த இடத்தினுடைய தடம், மேடு, பள்ளம் எதுவும் தெரியாது. எனவே ஒற்றர்கள் துணையோடு தான் நாம் அங்கு முன்னேற முடியும்.''

''நன்றாக சொன்னீர்கள். ஒற்றர்களின் துணையோடுதான் நாம் அங்கு போக முடியும். ஒற்றர்களை இப்போதே அனுப் பினால் என்ன.''

''நன்றாக அனுப்பலாம். யார் ஒற்றர்கள் என்பதுதான் முக்கியம். சோழ தேசத்து வீரர்களை அவர்கள் எளிதாக இனம் கண்டு கொள்கிறார்கள்.

ஒட்ட தேசத்து முகங்கள் வேறு, கலிங்க தேசத்து முகங்கள் வேறு. ஏன் கீழைச்சாளுக்கியர்கள் முகங்களே வேறு. அந்த முகங்களோடு பார்க்கிறபொழுது சோழ தேசத்து கூர்மையான மூக்கும், மெல்லிய உதடும் அவர்களுக்கு மிக எளிதாக இவன் நம்முடைய ஆள் இல்லை என்று தெரிவித்து விடுகிறது.

எனவே, உளவாளியாக ஒருவன் அவ்வளவு தொலைவு போவது என்பது எளிதல்ல. கீழைச்சாளுக்கியம் வரை போக லாம். உருவ ஒற்றுமை பெரிதாக பாதிக்காது. கீழைச் சாளுக் கியத்தின் மொழியை பேசினால் போதும் அவர்கள் சமாதானம் ஆகிவிடுவார்கள்.

கீழைச் சாளுக்கியம் தாண்டி ஒட்டதேசம் போகும்போது யார் போவது. நம்முடைய சோழ வீரர்களா? பரமன் மழபாடி கேட்டார்.

''அந்தணர்களை அனுப்பினால் என்ன?'' இராஜேந்திரர் கேட்க சபை மௌனமாய் இருந்தது.

* * *

அத்தியாயம்

21

தருமபாலர், விசாரதத்தர் என்ற அந்த இரண்டு புத்த பிட்சுக்களும் அலண்டு போய் கிடந்தார்கள். கடல் பயணம் இவ்வளவு கடினமாக இருக்கும் என்று அவர்கள் நினைக்கவே இல்லை. படகோட்டிகள் தைரியமாக இருந்தாலும் கரை சேருமா என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. ஓயாது புத்த நாமம் சொன்னார்கள். சில சமயம் வாய்விட்டு அலறினார்கள். கரை தொட்டதும் விக்கி, விக்கி அழுதார்கள்.

நேரே போய் ஸ்ரீ விஜயத்து கன்மியிடம் தங்களை ஒப்படைக்க வேண்டும் என்று பரபரத்தார்கள். ஆனால் ஸ்ரீ விஜயத்து கன்மியும் இல்லை. கடாரத்து கன்மியும் இல்லை. இரண்டு தூதுவ அதிகாரிகளும் இராஜேந்திர சோழர் உத்தரவின் பேரில் தஞ்சாவூர் போய்விட்டார்கள். திருவாரூர் வழியாக, அம்மன் பேட்டை வழியாக மேற்கே நடக்கின்ற நேர் சாலையில் நடந்தால் தஞ்சாவூர் போய்விடலாம் என்று சொல்ல, அவர்கள் விரைவான நடையாய் தஞ்சாவூர் நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

மழிக்கப்பட்ட தலையும், சவரம் செய்யப்படாத முகமுமாய் அவர்கள் பார்ப்பதற்கு விநோதமாக இருந்தார்கள். அவர்களுடைய துறவு ஆடை மிக அழுக்கடைந்ததாய் இருந்தது. எப்பொழுதும் போலஅவர்களும் தஞ்சையின் தென் புறம்படியில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். அகழிக்கு அந்தப் பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டார்கள்.

''எங்கிருந்து வருகிறீர்கள்?''

அவர்களுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. தயங்கினார்கள். அந்த தயக்கம் அபத்தமாக இருந்தது. ஆனால் ஒரு புத்த பிட்சு பொய் சொல்வதற்கில்லை என்பதால் உண்மையை சொல்ல வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

''நாங்கள் ஸ்ரீ விஜயத்திலிருந்து வருகிறோம்.''

சோழ வீரர்கள் சரட்டென்று துணுக்குற்றார்கள்.

''என்ன எங்கிருந்து.''

''ஸ்ரீ விஜயத்திலிருந்து.''

''எதற்காக வந்திருக்கிறீர்கள்.''

''இராஜேந்திர சோழரை பார்த்து சில செய்திகள் சொல்ல வேண்டும் என்று.''

''என்ன செய்திகள்.''

''இராஜேந்திர சோழனிடம்தான் சொல்ல வேண்டும்.''

''முடியாது. இப்பொழுது இங்கே சொல்லப்பட வேண்டும். இல்லாவிட்டால் உங்களை நான் என்ன செய்வேன் என்று தெரியாது.''

''ஸ்ரீ விஜயத்தில் நிலைமை நன்றாக இல்லை.''

''என்ன நிலைமை.''

''அரசியல் நிலைமை.''

''எதனால் நன்றாக இல்லை.''

'''தந்தை இறந்த பிறகு மகன் ஆட்சிக்கு வந்தார். மகனுக்கு சாமர்த்தியம் இல்லை. எனவே உள்ளுக்குள் கலவரங்கள் துவங்கி அவர் மீது படை எடுப்பு நடந்து, அந்த படை எடுப்பை ஓரளவு எதிர்கொண்டிருக்கிறார். ஆனால் அந்த படை எடுப்பு தாண்டி வேறு சில விஷயங்கள் நடந்துவிட்டன்.''

''என்ன.''

''சோழ தேசத்து வணிகர்கள் சித்ரவதை செய்யப்பட்டார்கள்.''

''எப்படி?''

''சவுக்கால் அடித்தும், பிரம்பால் அடித்தும் கொடூர முறையில் நடத்தப்பட்டார்கள்.''

''வேறென்ன கொடூரம்.''

''கைகளை செதுக்கி ஒன்றாக கட்டினார்கள்.''

''பிறகு.''

''கால் கட்டை விரலை தரித்தார்கள்.''

''இப்படிப்பட்ட செயல்களை செய்துவிட்டு அவர்களை நோக்கி வந்திருக்கிறீர்களே. அந்த தேசம் நோக்கி வந்திருக்கிறீர்களே, என்ன துணிச்சல்.''

''எங்களிடம் பொய் சொல்லுவதற்கோ, மறைப்பதற்கோ எதுவும் இல்லை. இரண்டு தேசத்திற்கும் நல் உறவு நீடிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். ஸ்ரீ விஜயத்து கன்மிகளையும், கடாரத்து கன்மிகளையும் சந்திக்க வேண்டும் என்று தான் நாங்கள் விருப்பப்பட்டோம். எங்களுக்கு முன்னே அவர்கள் போய் விட்டார்கள் என்பதால் நாங்கள் பின்தொடர்ந்து வந்தோம்.''

''உங்களை இந்த விதமாக நாங்கள் அனுப்ப முடியாது. இப்பொழுதே உங்களை கைது செய்கிறோம். 'புத்த பிட்சு என்பதால் பின் கை கட்டி, கண்களைக் கட்டி உங்களை இழுத்துப் போவப் போவதில்லை. மாறாக ஒரு சிறு தேரில் ஏற்றி வீரர்கள் புடைசூழ உங்களை அனுப்புவோம். நீங்கள் அங்கு போய் யாரை சந்திக்க வேண்டுமோ, அதற்குண்டான விஷயத்தை சொல்லி சந்திக்க முயற்சி செய்யுங்கள்'' என்று தலைவன் உத்தரவிட்டான்.

''இவர்கள் கையை தேரோடு பிணைக்க வேண்டுமா'' என்று வீரன் கேட்க,

''வேண்டாம், பிணைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாய் தப்பித்துப் போக முயற்சித்தால், இறங்கி கத்தி இறக்கி கொன்றுவிடு. புத்த பிட்சு என்று பார்க்காதே'' என்று கட்டளை இட்டான்.

அந்த புத்த பிட்சுக்களுக்கு தூக்கி வாரிப் போட்டது.

ஸ்ரீ விஜயத்தில் இப்படிப்பட்ட அவமரியாதை கிடையாது. சோழ தேசத்தில் புத்த பிட்சுக்களுக்கு மதிப்பு இல்லை என்பதை பலவிதமாக தெரிந்து கொண்டார்கள். வழியில் ஒரு உற்சவ சிலை வந்து கொண்டிருக்க அதற்கு எதிரே முரசுகள் முழங்க, தாள வாத்தியங்கள் முழங்க இரண்டு பெண்மணிகள் துள்ளி குதித்து நடனமாடிக் கொண்டிருந்தார்கள். சுற்றி பெரிய கூட்டம் இருந்தது, அவர்களை ஒதுக்கிக் கொண்டு இவர்கள் போக,

''மொட்டை போகிறதடா, மொட்டை போகிறதடா'' என்று பல குழந்தைகளும், பெரியவர்களும் கூவினார்கள்.

புத்த பிட்சுக்களை மொட்டைகள் என்று ஸ்ரீ விஜயத்தில் சொல்வது இல்லை. ஆனால் சோழ தேசத்தில் சொல்கிறார்கள். புத்த பிட்சுக்களுக்கு மரியாதை இல்லை என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

''என்ன முட்டாள்தனம் இது. உங்களை யார் வரச் சொன்னது.'' குருத்தன் கேசவன் தலையில் அடித்துக் கொண்டான்.

நிமலன் சுழண்டு போய் நாற்காலியில் உட்கார்ந்தார்.

''தேவை இல்லாத வம்பு. நாங்கள் தப்பித்து எப்படி வெளியே போகப் போகிறோம் என்று பயந்திருக்க, இப்படி வந்து நிற்கிறீர்களே. நீங்கள் என்ன ஸ்ரீ விஜயத்து தூதுவர்களா, அதற்குண்டான முத்திரை மோதிரமும், அதற்குண்டான அடையாளங்களும் இருக்கின்றனவா. நீங்களாக வந்து ஒரு விஷயத்தைச் சொன்னால் இராஜேந்திரச் சோழர் கேட்டுவிடுவாரா. இராஜேந்திர சோழரை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். யாரும் அணுக முடியாத இடத்தில் இருக்கிறார். அதற்கு முன்பு நீங்கள் ஆறு அதிகாரிகளை சந்தித்தாக வேண்டும். அந்த அதிகாரியும் உங்களை இராஜேந்திர சோழரிடம் அழைத்துப் போக மாட்டார்கள்.

ஒன்று புரிந்து கொள்ளுங்கள். இது சோழ தேசம். ஸ்ரீ விஜயம் அல்ல. புத்த பிட்சு வந்தால் எழுந்து நிற்க மாட்டார்கள். மாறாக உங்களை பிரம்பால் அடித்துக் குப்புறப் படுக்க வைப்பார்கள். மிக மோசமான காலத்தில், மிகக் கேவலமான முறையில் வந்து நிற்கிறீர்கள்.

உடையை சரி செய்து கொள்ளுங்கள்'' என்று வேகமாக உத்தரவுகள் கொடுக்க, அவருக்காக பணி அமர்த்தப்பட்ட வேலை ஆட்கள் அந்த புத்த பிட்சுக்களுக்கு உதவி செய்தார்கள்.

தொண்டை மண்டல அந்தணரிடம் போய் யார் வந்திருக்கிறது என்று விரிவாக தெரிவிக்க, தொண்டை மண்டலத்து அந்தணர்கள் அவர்களை, அருகே நின்று குறிப்பெடுத்துக் கொண்டார்கள். அங்க அடையாளங்களை எடுத்துக் கொண்டார்கள்.

''உங்கள் கைகளில் ஒரு ஓலையைக் கட்டப் போகிறோம். அந்த ஓலையை நீங்கள் கவனமாக வைத்திருக்க வேண்டும். நீங்கள் இப்போதைக்கு சோழ தேசத்தின் கைதி. எந்தவித அடையாளமும் இல்லாமல் கடல் மார்க்கமாக வந்திருக்கிறீர்கள். உங்களை உளவாளிகள் என்று நாங்கள் தீர்மானிக்கலாம். ஆனால் புத்த பிட்சுவாக இருப்பதால் அப்படி தீர்மானிக்கவில்லை. ஒருவேளை அரசாங்கம் அப்படி தீர்மானித்தால் உங்களுக்கு சிறை தண்டனை நிச்சயம்.

இப்போதைக்கு சந்தேகப்படும்படியான நபர் என்று ஒரு ஓலை உங்கள் கையில் இருக்கும். அதை கழட்டக்கூடாது. அதை கழற்றினாலும் மிகப்பெரிய தண்டனை உண்டு'' என்று சொல்ல,

புத்த பிட்சு 'சரி' என்று தலை அசைத்தார்.

உடம்பு அசதி தீர அவர்கள் வெந்நீரில் குளித்தார்கள். வேறு காவி உடை கேட்டு வாங்கி அவர்களுக்கு போர்த்தி விட்டார். சவரம் செய்த முகத்தோடு மிகச் சுத்தமாக இருந்தார் கள். தியானம் செய்தார்கள். உணவு உண்டார்கள். படுத்து தூங்கி னார்கள்.

அவர்கள் வருகை அருண்மொழிப்பட்டனுக்கு சொல்லப் பட்டது.

அருண்மொழிப்பட்டன் கிருஷ்ணன் ராமனிடமும், பரமன் மழபாடியிடமும் சொல்ல, அவர்களை நாமே சந்திக்கலாம். அரசர் சந்திக்க வேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் செய் தார்கள்.

''ஆனால் அரசரிடம் தெரிவிப்பது நல்லதல்லவா.''

''ஆமாம். தெரிவிக்காமல் இருப்பது சரியல்ல. புத்த பிட்சுக் கள் வந்திருக்கிறார்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லுங்கள். செ்ால்லிப் பாருங்கள்.'' அருண்மொழி அலுப்போடு பேசினான்.

''என்ன.''

''உடனே பாய்ந்து ஓடி வந்துவிடுவார். அவருக்கு புத்த பிட்சுக்கள் மீது மிகப்பெரிய கோபமும், சந்தேகமும் உண்டு.''

''எங்களுக்கும் தெரியும். சமாதானப்படுத்தி பார்க்கலாம்.''

ஆனால் சமாதானம் ஆகவில்லை.

''உடனே இங்கு இழுத்து வா'' என்று சொல்லப்பட்டது. அவர்களை தூக்கத்திலிருந்து எழுப்பி மாலை நேரம் இராஜேந்திர சோழர் முன்பு நிறுத்தி வைத்தார்கள். கன்மிகளையும் வரவழைத்து வேறொரு அறையில் வைத்தார்கள்.

''என்ன சமாச்சாரம், எங்கிருந்து வருகிறீர்கள்.''

புத்த பிட்சுக்கள், தாங்கள் வந்த நோக்கத்தையும், தாங்கள் கண்ட காட்சியையும், அதனால் மனம் பாதிக்கப்பட்டதையும்

அதற்கு நிவாரணமாக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்ததையும், அதனால் தனியாக, துணிச்சலாக ஒற்றைப் பாய்மரம் போன்ற நாவாய் ஏறி வந்ததையும், இங்குள்ள கன்மி களிடம் விஷயம் சொல்லி இன்னும் தெளிவாக, யோசித்து உங்களிடம் வரலாம் என்று இருந்தோம். ஆனால் நடுவழியில் கைது செய்யப்பட்டோம்.

''உங்கள் கன்மிகள் என்ன சொன்னார்கள்.''

''அவர்களுக்கு இன்னும் அதிக விஷயம் தெரிந்திருக் கிறது. அவர்கள் இதற்கெல்லாம் காரணம் தலைமை பிட்சு என்று சொல்கிறார்கள். எங்களுக்கு தலைமை பிட்சு அப்படி இருப்பார் என்று நோக்கம் இல்லை. அவர் சமாதானப்படுத்தக் கூடும்.

கடாரத்து மக்கள் ஸ்ரீ விஜயத்தின் மீது கோபமாக இருக் கிறார்கள். ஸ்ரீ விஜயம் என்பது கடாரம் சேர்ந்ததுதான். நடுவே கணவாய் இருக்கிறது. அந்த கணவாய் இருப்பதால் கடாரத்து மக்கள் தாங்கள் தனி ராஜ்ஜியம் என்றும், ஸ்ரீ விஜயம் தனி ராஜ்யம் என்றும் பேசிக்கொள்கிறார்கள். அப்படியே நடந்து கொள் கிறார்கள்.''

''உண்மையில் அப்படி இல்லை அல்லவா.''

''உண்மையில் அப்படி இல்லை.''

''ஏன் அப்படி ஆயிற்று.''

''ஸ்ரீமாரன் விஜயோத்துங்க வர்மன் இருந்தபொழுது கடாரத் தின் மீது அவருடைய ஆளுமை பலமாக இருந்தது. அவர் திடீரென்று இறந்து போனார்.''

''என்ன காரணம்.''

''உடல்நலம் சரியில்லை.''

''ஏன் உடல்நலம் சரியில்லை.''

''தெரியவில்லை.''

''கொல்லப்பட்டிருக்கலாமா.''

''இல்லை. அதற்குண்டான வாய்ப்பு இல்லை. புத்த பிட்சுக் கள் தான் உதவி செய்தார்கள். அவர்கள் தான் சிகிச்சை செய்தார் கள்.''

"புத்த பிட்சுக்களே கொன்றிருக்கலாமா."

"அப்படியும் வாய்ப்பு இல்லை."

"ஏன் வாய்ப்பு இல்லை. புத்த மதமாக ஸ்ரீ விஜயத்தை மாற்ற வேண்டும். இந்து தேசமாக இருக்கின்ற ஸ்ரீ விஜயத்தை புத்த மதத்திற்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் புத்த பிட்சுக்களுக்கு உண்டல்லவா."

"உண்டு."

"அவர்கள் இதை நடத்தி இருக்கலாமா." இராஜேந்திரர் கேள்வி மீது கேள்வி போட அவர்கள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

"அப்படியும் நடந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆனால் நடந்தது அப்படி அல்ல."

கடாரத்து மக்கள் படை எடுத்து கணவாய் தாண்டி ஸ்ரீ விஜயத்துக்குள் நுழைந்தார்கள். சங்கராம விஜயோத்துங்க வர்மன் அதை எதிர்த்தார். கடுமையாக போரிட்டார். கடார மக்கள் பின் வாங்கினார்கள். ஆனால் கடார மக்களுக்கும் ஸ்ரீ விஜய மக்களுக்கும் இடையே தீராத பகை மூண்டுவிட்டது. இந்தப் பகையை தீர்த்துக் கொள்ள கருதியே, ஸ்ரீ விஜயத்துக்கு வருகின்ற சோழ தேசத்து கப்பல்களை எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கடாரத்து கப்பல் கொள்ளைக்காரர்களால் நடந்தது.

கடாரத்து போர்வீரர்கள் அந்த கப்பல் கொள்ளைக்காரர்களுக்கு காசு கொடுத்து, சோழ தேசத்து கலன்களை உடைக்கச் சொன்னார்கள்."

"ஏன் சீன தேசத்து கலன்களை உடைக்க வேண்டாமா."

"முடியாது."

"ஏன்"

"அதில் வில் எறிகின்ற வீரர்கள் உண்டு. சீன தேசத்து கப்பல்கள் விரைவானவை. மிகப்பெரியவை. சோழ தேசத்து கப்பல்கள் சுக்கானை உடைத்தால் போதும். உட்கார்ந்துவிடும். எனவே அவர்கள் எளிதாக உடைக்கக்கூடிய சோழ தேசத்து நாவாய்களை கைப்பற்றினார்கள். உள்ளுக்குள் இருந்த பொருள்களை கொள்ளை அடித்தார்கள். சுக்கானை உடைத்து பாய்மரத்திற்கு தீயிட்டு கடலில் மூழ்கடித்தார்கள்."

''இப்பொழுது இதனால் என்ன லாபம்?''

''சீனதேசம் பண்டங்களை ஏற்றிக்கொண்டு ஸ்ரீ விஜயத்திற்கு வருவதற்குக் காரணம் சோழ தேசம்தான். இப்படி நாலு நாவாய்களை உடைத்தால் சோழ தேசம் வராது என்பது அவர்களுடைய எண்ணம்.''

''இதற்கு என்ன வழி.''

''நீங்கள் மிகச் சிறந்த தளபதிகளை அங்கு அனுப்பி விஜயோத்துங்க வர்மனிடம் பேச வேண்டும்.''

''அவனிடம் பேச வேண்டுமா. தலைமை புத்த பிட்சுவிடம் பேச வேண்டுமா.''

''இரண்டு பேரிடமும் பேசலாம்.''

''எதற்காக புத்த பிட்சுவிடம் பேசுவது. புத்த பிட்சுவுக்கும், அரசியலுக்கும் என்ன சம்பந்தம். ஆக, சங்கிராம் விஜயோத்துங்க வர்மனை ஆட்டி வைப்பது உங்கள் தலைமை பிட்சு. சரியா?''

''அப்படி நேரடியாக சொல்ல முடியாது. ஆனால் கடாரம் படை எடுத்துவரும் என்ற எச்சரிக்கையை எங்கள் தலைமை பிட்சு சொன்னார்.''

''அவருக்கு எப்படித் தெரிந்தது.''

''அங்குள்ள புத்த பிட்சுக்கள் இங்கு செய்தி சொல்கிறார்கள்.''

''ஆக, புத்த பிட்சுக்கள் எல்லா இடத்திலும் உளவாளிகளாக இருக்கிறார்கள். நீங்கள் வந்ததும் சோழ தேசத்தின் நிலைமை என்ன என்று உளவு பார்க்கத்தான் என்று நான் கருதக்கூடாதா.''

''உண்மையில் அப்படி இல்லை. புத்தர் மீது ஆணையாக அப்படி இல்லை.''

''இந்த ஆணையை சொல்லிவிட்டால் நான் பயந்து விடுவேனா. உங்கள் இரண்டு பேரையும் சிறையில் அடைக்கிறேன். உங்களுக்கு பின்னாலேயே இந்த புத்த பிட்சுக்கள் வந்திருக்கிறார்கள். உங்கள் மீதும் எனக்கு சந்தேகம் இருக்கிறது.'' கன்மிகளை நோக்கி இராஜேந்திரர் பேச,

அவர்கள் தலைகுனிந்து நின்றார்கள்.

''நாங்கள் ஒரு தர்மசங்கடமான நிலையில் நிற்கிறோம்.

எங்களுடைய அனுமதி இல்லாமல்தான் இவர்கள் வந்திருக் கிறார்கள்.''

''அது தெரிகிறது. ஆனால் ஒரு புத்த பிட்சு நினைத்தால் ஒரு அரசியலில் எப்படி வேண்டுமானாலும் நுழைந்துவிட லாம் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கிறீர்களே. அதுதான் ஆத்திரமாக இருக்கிறது.

சோழ தேசத்தில் பல சைவ மடங்கள் இருக்கின்றன. பல வைணவ மடங்கள் இருக்கின்றன. எவையும் அதனதன் வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறதே தவிர, அரசியலில் நுழையவில்லை. நாங்கள் அழைத்தாலும் வருவதில்லை. அப்படி இருக்க புத்த பிட்சுக்கள் அரசியலில் நுழைகிறார்களே இது என்ன அயோக்கியத்தனம். நாளை நான் வேங்கியை நோக்கி கிளம்பு கின்றேன். எப்படியும் வருவதற்கு ஆறுமாதம் ஆகலாம். மேலும் தொடரலாம். அதுவரை நீங்கள் எங்களுடைய தேசத்தில் அதிதி யாக இருங்கள். நீங்கள் மிகக் கவனமாக கண்காணிக்கப்படு வீர்கள். ஒரு மாளிகையிலேயே இருக்கும்படி வற்புறுத்தப்படு வீர்கள். அதாவது உங்கள் நால்வருக்குமே நான் வீட்டுக்காவல் வைக்கிறேன்.

யாரேனும் தப்பிக்க முயற்சி செய்தால் சிரச்சேதம் செய்வது என்னுடைய ஆணை.

கிருஷ்ணன் ராமன் அவர்களே, இவர்களை சிறைக் கைதி களாக ஒரு மாளிகையில் அடைத்து வையுங்கள். வேண்டும் மட்டும் உணவு கொடுங்கள். எங்கேயும் போகக்கூடாது என்று சொல்லுங்கள்.''

''மன்னா, எங்களை அப்படி அடைத்துவிட வேண்டாம். எங்களுக்கு விடுதலை கொடுங்கள். நாங்கள் உடனடியாக ஊர் திரும்புகின்றோம்.'' புத்த பிட்சுக்கள் கெஞ்சினார்கள்.

''ஊர் திரும்பி என்ன செய்வீர்கள்.''

''இராஜேந்திர சோழர் நினைத்தால் எதையும் சாதிப்பார். அவர் வேங்கி நோக்கி போய்க்கொண்டிருக்கிறார். மறுபடியும் இந்தப் பக்கம் திரும்பும்போது ஸ்ரீ விஜயத்தின் மீது படை எடுப் பார் என்று சொல்கிறோம்.''

''எந்த நம்பிக்கையில் சொல்கிறீர்கள்.''

"உங்களுடைய வணிகர்கள் பட்ட வேதனையை நான் கண்ணால் பார்த்தேன். முடிந்த அளவு தடை செய்தேன். அந்த முரடர்கள் கேட்கவில்லை."

"ஆக, எங்கள் சோழ வீரர்களுக்காக நீங்கள் பரிந்து வந்தீர்களா."

"ஆமாம் மன்னா, சத்தியமாக பரிந்து வந்தேன். விசாரதத்தர் பேசினார்.

"எங்களுடைய வணிகர்கள் இதை உங்களிடம் சொல்வார்களா."

"நிச்சயமாக, உங்கள் வணிகத் தலைவரை எங்களுக்குத் தெரியும். எங்களுடைய பெயரும் அவருக்குத் தெரியும். அவரை வரவழையுங்கள். அவரைக் கேளுங்கள். நாங்கள் தடுத்து நிறுத்தியதும், இதைச் செய்வது மகாபாபம் என்று சொன்னதும் அவருக்குத் தெரியும்."

வணிகர் அரை நாழிகையில் வரவழைக்கப்பட்டார். உள்ளே படி ஏறினார்.

"அடே, விசாரதத்தர், தருமபாலர்" என்று கூவினார். வணக்கம் சொன்னார்.

"வணிகத் தலைவரே, இவர் சொல்வது உண்மையா. உங்களை சித்ரவதை செய்யக்கூடாது என்று தடுத்தார்களாமே."

"ஆமாம், வெகுவாக முயற்சித்தார்கள். அவர்களுடைய கையில் இருக்கின்ற கத்தியை பிடுங்கி கீழே போட்டார்கள். ஆனால் இவர்களை புறம் தள்ளிவிட்டு, அவர்கள் முன்னேறி மறுபடியும் எங்கள் கைகளை சிதைத்தார்கள். இவர்கள் மறுபடியும் முன்னேற இவர்களை நோக்கி வாட்கள் நீண்டன. பொதுவாக புத்த பிட்சுக்களுக்கு எதிராக வாள் நீட்டப்படாது. ஆனால் கடாரத்தைச் சேர்ந்த அவர்கள் வாளை நீட்டி புத்த பிட்சுவை ஓரமாக உட்கார வைத்து விட்டார்கள்."

"ஆக, இவர்களுடைய எண்ணம் நல்ல எண்ணம் என்கிறீர்களா."

"நிச்சயமாக இவர்கள் நல்லவர்கள். இவர்களுக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. ஆனால் ஸ்ரீ விஜயம் அமைதியாக இருக்க வேண்டும், அதுதான் எண்ணம். இவர்கள் அமைதியான ஒரு

தேசத்தில் தான் புத்த மதத்தை பரப்ப முடியும் என்று நினைக்கிறார்கள். புத்த மதத்தை பரப்புவது இவர்களுடைய எண்ணம்.''

''இவர்களை கை செய்து அடைக்கவா, திருப்பி அனுப்பி விடவா.''

வியாபாரி தலைகுனிந்து யோசித்தார்.

இவர்களால் நமக்கு எந்தக் கெடுதலும் இல்லை. இவர்களை கைது செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இவர்களுக்கு நம்மை பற்றிய பல விவரங்கள் கொடுத்து, நம்முடைய படைகளை பற்றிய விஷயங்களை கொடுத்து ஸ்ரீ விஜயம் நோக்கி அனுப்புவார். மிகச் சிறந்த நாவாய்கள் நம்மிடம் இருக்கிறது என்று சொல்லலாம். சேர தேசத்திலிருந்து வந்த நாவாய்களை காட்டலாம்.

சோழ தேசத்து நகருக்குள் ஸ்ரீ விஜய கன்மிகளாக, கடாரக் கன்மிகளாக வந்திருக்கின்ற இந்த இருவரும் இன்னும் சிறந்தவர்கள். இவர்களுடைய நம்முடைய வணிகக் குழு மீது நல்ல அன்பு உண்டு. உண்மையில் இவர்கள் இருவரும் இந்துக்கள். புத்தர்கள் அல்ல. புத்த விகாரையில் தங்கி இருந்தாலும், இறை வழிபாடு செய்கிறார்கள். நாகை பட்டிணத்து கோவிலுக்கு அடிக்கடி தானம் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டாயிரம் கழஞ்சு. சீனக் கழஞ்சுகள் இவர் கோவிலுக்கு கொடுத்திருக்கிறார்'' என்று குருதத்தன் நோக்கி வணிகர் கை காட்டினார்.

''நல்லது, வணிகரின் வாக்கை எடுத்துக் கொள்கிறேன். உங்களை சிறை பிடிக்கவில்லை. நீங்கள் தாராளமாக ஊர் திரும்பி போகலாம். அதற்கேற்ற பருவம் வரும் வரை நாகையில் தங்கி இருக்கலாம். நாகை விகாரம் தாண்டி வேறு எங்கேயும் நீங்கள் நால்வரும் போகக்கூடாது. அங்கேயே இருக்க வேண்டும்.

ஆனால் இந்த இரண்டு புத்த பிட்சுக்களும், சங்கராம விஜயோத்துங்க வர்மனை நேரில் சந்தித்து வெகுநிச்சயம் உள்ளே நுழைந்து ஸ்ரீ விஜயத்தை அழிப்பேன் என்று சொல்லுங்கள். இதை ஆணையிட்டு இருக்கிறேன் என்று சொல்லுங்கள். இதை சபதம் செய்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்.

நீங்கள் போய் வரலாம். என்னுடைய அன்பளிப்பாக சோழ தேசத்து புதிய கழஞ்சுகள்'' என்று சொல்லி, சமீபத்தில் புத்தர் சிலையை உருக்கி கொடுக்கப்பட்ட கழஞ்சுகளை கொடுத்தார்.

''இந்த கழஞ்சுகள் புத்தம் புதியவை.''

''ஆமாம், பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது.''

'முழங்கை உயர புத்தர் சிலை இலங்கையிலிருந்து கொண்டு வந்தோம்.''

''ஆமாம். நீங்கள் எடுத்துப் போனதாக கேள்விப்பட்டோம்.''

''அந்த சிலையை உருக்கி, அதில் அடித்த காசு இது. போய் சங்கிரராம விஜயோத்துங்க வர்மனிடம் சொல்லுங்கள்.'' ஆளாளுக்கு இருபத்தைந்து கழஞ்சுகள் கொடுக்கப்பட்டது. அவர்கள் குனிந்து வணங்கினார்கள். விடை பெற்றார்கள்.

''சிறையில் அடைக்க தேவையில்லை என்கிறீர்களா மன்னா.''

''இல்லை. இவை வெறும் பசுக்கள். பசுக்களை சிறையிலிட்டு என்ன செய்வது, நம் எண்ணம் ஸ்ரீ விஜயம் நோக்கி இருக்க வேண்டும். அதற்கு முன்னால் வேங்கியில் நமது குழந்தையை பட்டமளிப்பு விழா செய்ய வேண்டும். வேங்கிக்கு எப்படி போவது என்பது பற்றி இனி யோசிக்க வேண்டும். நாளை காலையில் வேங்கி நோக்கி போக வேண்டும். எனவே இப்பொழுது போய்விட்டு மறுபடியும் இரவு நேரம் வந்து சேருங்கள். அப்பொழுது வேங்கி தேசத்து படை எடுப்பை பற்றி விரிவாக பேசுவோம். எப்படி படை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தெளிவாக இருக்கிறது. உங்களிடம் சொல்வது மட்டும் தான் இருக்கிறது.''

சபை மௌனமாக இருந்தது.

''அருண்மொழி என்ன நினைக்கிறாய்.''

''எது பற்றி மன்னா.''

''இந்த நால்வரையும் விடுவித்தது உனக்கு ஒப்புமையானதா.''

''நிச்சயம் ஒப்புமையானது. இவர்களை வைத்துக் கொண்டு நாம் எதையும் சாதிக்க முடியாது. சிறையில் உண்டு பொழுதை கழித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களை சிறை வைத்ததே நாம் செய்த பெரிய குற்றமாக இருக்கும். எனவே இவர்களை சந்தித்தோம், விடுவித்தோம் என்பதுதான் நல்ல மதிப்பு.

நீங்கள் சொன்னது போல நாகை விகாரத்தில் இவர்கள் சிறை வைக்கப்படட்டும். இவர்கள் எங்கும் போகக்கூடாது என்று

நம்முடைய ஆட்கள் இரகசியமாக காவல் காக்கட்டும். மீறி நகர்ந்தால் மடக்கி உள்ளே இழுத்து போடட்டும்.''

''கிருஷ்ணன் ராமன் அவர்களே இந்த வேலையை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்ல,

சபை கலைந்தது.

அவசர அவசரமாக எல்லா தளபதிகளும் அவர்கள் வீடு நோக்கிப் போனார்கள்.

அரண்மனைக்குள் நுழைந்து பரவையின் அறைக்குள் நுழைந்தபொழுது கட்டிலில் உட்கார்ந்திருந்த வீரமாதேவி எழுந்து வந்து அவரை வழிமறித்தார்.

''என்ன வீரமாதேவி, என்ன கோபம்.''

''நான் கோபமாக இருக்கிறேன் என்று யார் சொன்னது.''

''நீ வழி மறிக்கின்ற விதத்திலேயே இருக்கிறது.''

''என்னை அழைத்துக் கொண்டு போகப் போவதில்லையா.''

''எங்கே.''

''போருக்கு.''

''எதற்காக.''

''ஏன்? எத்தனை போர்களில் நான் கலந்து கொண்டு இருக்கிறேன். இந்த போரில் மட்டும் என்ன குறைவு.''

''குறை இருக்கிறது. உடல்நலம் சரியில்லை. எனவே நீ வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறேன்.''

''உங்கள் அருமை தங்கையை நோகாமல் கூட்டி வந்தேனே அதற்கு உண்டான பரிசா.''

''இல்லையே, நோகாமல் கூட்டி வரவில்லை. கூட்டி வந்த பிறகு நொந்து நூலாகிப் போனாய். உன்னை உயிரோடு பார்ப்போமா என்று பதறிவிட்டேன். என்னை விட அதிகம் பதறியது பரவையும், முக்கோண கிழாரடிகளும்.''

''நான் கர்ப்பிணியோ என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் நான் கர்ப்பிணி என்று எனக்குத் தெரியாது. இது கலைந்து போனதற்கு இப்படிப்பட்ட தண்டனையை கொடுக்காதீர்கள். நான் ஏற்கனவே துக்கத்தில் இருக்கிறேன். நீங்களும் அருகில் இல்லையென்றால் எனக்கு பைத்தியம் பிடித்துவிடும்.''

''நிச்சயமாக உன்னை வேங்கி தேசத்திற்கு அழைத்துப் போகப் பேரவது இல்லை.''

வீரமாதேவி முகத்தை பொத்திக் கொண்டு அழ ஆரம்பித் தாள்.

''குந்தவையைப் போல நீயும் நாடகமாடாதே வீரமாதேவி. உன்னை அழைத்துப் போக விரும்புபவன் நான் என்று உனக்குத் தெரியும். பல போர்களில் உன்னை தயார் செய்து அழைத்துப் போயிருக்கிறேன். இப்பொழுது உன் உடல்நலம் சரியில்லை. உனக்கு வேறு சில வேலைகள் இருக்கின்றன. உன் உடல்நலம் தேறியதும் இடையறாது இடையறாது தஞ்சை பக்கம் சுற்றி வர வேண்டும். பாண்டிய தேசத்தை கவனிக்க வேண்டும். இலங்கையிலிருந்து படைகள் வருகின்றனவா என்று கவனிக்க வேண்டும். அம்மாதிரியான இடங்களுக்கு நீ பயணப்பட வேண்டும். நீ பயணப்படுவதற்கு துணையாக.''

''பரமன் மழபாடியார் இருப்பார். அப்படித்தானே.''

''ஆமாம்.''

''வயதானவர்களுக்கு துணையாக நான். எனக்கு துணை யாக வயதானவர்கள். போருக்கு மட்டும் நீங்கள் கிளம்பி போய் விடுவீர்கள்.''

''உன்னால் போர்முனைக்கு வர முடியாது. மறுபடியும் தொந்தரவு வந்து சேரும். உன்னை இடைஞ்சலில் மாட்டிவிட்டு என்னால் நிம்மதியாக போர் செய்ய முடியாது.''

''அப்படியானால் யாரை அழைத்துப் போகப் போகி றீர்கள்.''

''இதுவரை அப்படி எண்ணம் இல்லை. ஆனால் நீ கேட்ட பிறகு ஒரு எண்ணம் வருகிறது.''

''என்ன?''

''பரவையை அழைத்துப் போனால் என்ன.''

''ஹா, எனக்குத் தெரியும். இந்த மாயக்கள்ளி மயக்கி வைத்தி ருக்கிறாள் என்று தெரியும்.''

''அப்படியா. அப்படி மயக்கி வைத்திருக்கிறேன் என்று அவள் சொன்னாளா. பரவை நீ என்னை மயக்கி வைத்திருக்

கிறாயா, என்னோடு போர்முனைக்கு வருவதற்கு ஆயத்தங்கள் செய்திருக்கிறாயா.''

''நான் ஒரு பாவமும் அறியாதவள். போர்முனைக்கு என்னை அழைத்துப் போவீர்கள் என்று கற்பனை கூட நாம் செய்த தில்லை. இப்போதும் கூட வேண்டாம் என்றால் நிம்மதியாக இருப்பேன். வரவேண்டும் என்றால் உங்களை கட்டளைக்கு கீழ்ப்படிந்து வருவேன்.''

''வர வேண்டும் பரவை, நிச்சயம் வர வேண்டும். சோழ தேசத்து மகாராணிகள் உண்டு, உறங்கி கழிப்பவர்கள் அல்ல. அவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறதென்று தெரிய வேண்டும். உன்னை வெறும் நடனமணியாக நான் கருத வில்லை. போர்முனையின் கோரத்தை, போர்முனையின் வேகத்தை, ஆத்திரத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டும். உனக்கு துணையாக வீரர்களோடு வைத்தியர்கள் வருவார்கள். அந்த வைத்தியர்களை பார்த்து பேசி, அந்த வைத்திய முறை யைப் பற்றி மெல்லியதாகக் கற்றுக் கொண்டு, அந்த வைத்தியர் களை படைகளின் எல்லா பக்கத்திற்கும் அனுப்ப வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு உனக்கு இருக்கிறது.

இதை எல்லாம் நான் கவனிக்க முடியாது. எனக்கு நேர மில்லை. எனவே, என்னோடு நீ பயணப்படாது, வைத்தியர் குழு வோடு நீ பயணப்படுவாய். அதாவது எனக்கு முன்பே நீ போய் விடுவாய். உனக்கும் எனக்கும் மூன்று காத இடைவெளி இருக்கும்.''

''நான் எதன்மீது சவாரி செய்ய வேண்டும், குதிரையிலா.''

''இல்லை. யானையில். அம்பாரி போட்டு திரைச்சீலை போட்ட யானையில் நீ வர வேண்டும். அதற்குள் நீ படுத்து உறங்கலாம். வைத்தியம் சம்பந்தப்பட்ட ஓலைகளை படித்து வரலாம். கீழே இறங்கி வைத்தியர்களோடு பேசலாம். என்ன விதமான வேதனைகள் மற்றவர்களுக்கு உண்டாகும் என்பதை கேட்டு தெரிந்து கொள்ளலாம். நீ வர வேண்டும் என்பது முக்கியம். இது என் கட்டளை.'' இராஜேந்திர சோழர் பரவையை விட்டுவிட்டு வீரமாதேவியிடம் வந்தார்.

தோளை அணைத்துக் கொண்டார்.

''உன்னை வெறுப்பேற்றுவதற்காக நான் பரவையை அழைத்துப் போகவில்லை. நீ செய்ய வேண்டிய காரியத்தை

அவளை செய்யச் சொல்லி இருக்கிறேன். இந்த முறை பெரும் படை வரப்போகிறது. அதற்கு எதிர்ப்பும் கடினமாக இருக்கும்.''

''எதிர்ப்பு இருக்காது என்று சொன்னார்களே.''

''யார் சொன்னது.''

''போர் வீரர்கள் சொன்னார்கள்.''

''எப்படி சொன்னார்கள். வேங்கி இந்நேரத்தில் காலியாக இருக்கும் என்றா?''

''விஷ்ணுவர்த்த விஜயாதித்தன் ஓடிப்போயிருப்பான். ஜெயசிம்மன் பதுங்கி இருப்பான் என்றெல்லாம் சொல்கிறார்கள்.''

''அப்படி நடக்கவும் வாய்ப்பு இருக்கிறது, இல்லாது போக வும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் விஷ்ணுவர்தன விஜயாதித் தனோடு நின்றுவிடவில்லை. இராஜராஜ நரேந்திரனின் பட்டாபி ஷேகத்தோடு முடிந்து விடவில்லை. அதைத் தொடர்ந்தும் போர் இருக்கும்.''

''யாரோடு.''

''ஒட்டர்களோடு.''

''பிறகு''

''வங்கம்.''

''பிறகு''

''கங்கைக் கரை.''

''அத்தனை தொலைவு ஏன் போக வேண்டும்.''

''அவர்களெல்லாம் கீழைச் சாளுக்கியத்தை விழுங்க முயற் சிக்கிறார்கள். மேலைச் சாளுக்கியத்தின் தூண்டுதலுக்கு ஏற்ப உள்ளே வந்து கலவரம் செய்கிறார்கள். தூங்கவொட்டாது செய் கிறார்கள். கீழைச்சாளுக்கிய மக்களை பயமுறுத்துகிறார்கள். எனவே, மேலைச் சாளுக்கியத்தை அடக்கியது போல அவர்களை யும் அடக்க வேண்டும்.''

''உடனே மேலைச்சாளுக்கியம் நோக்கி திரும்ப வேண்டியது தானே.''

''மேலைச்சாளுக்கியம் நோக்கி வேங்கியிலிருந்து திரும்பு வதில்லை. நேரே நான் வேங்கிக்கு போகப்போவதில்லை.''

''பிறகு.''

''அரையன் இராஜராஜனோ அல்லது உத்தமசோழமிலாடுடையாரோ, இராஜராஜ பிரம்மராயனோ அதை நோக்கி போவார்கள். நான் அருண்மொழி வந்தியத் தேவரோடு திரும்பி வேறுபக்கமாக நகர்ந்து திருவள்ளூர் வழியாக மேலைச்சாளுக்கியத்தின் உள்ளே நுழைந்து இரட்டைபாடியை தாக்கி, மானிய கேடயத்தை தாக்கி எரியூட்டிவிட்டு, மேலைச்சாளுக்கியத்தின் முதுகெலும்பை உடைத்துவிட்டு, மேலைச்சாளுக்கிய மன்னன் இருக்கின்ற இடத்திற்கு நான் கீழைச்சாளுக்கியம் போய் சேர்ந்து விடுவேன்.''

''ஆக இரண்டு முனை தாக்குதல்.''

''ஆமாம், இரண்டு முனைக் கூட அல்ல. மூன்று முனை. குடகிலிருந்து மனிஜா நமக்காக படை எடுத்து வருவான். அவன் கல்யாணி வரையில் போவான். வழியில் தெரிகின்ற அத்தனை மேலைச்சாளுக்கிய ஊர்களையும் சூறையாடுவான். தீக்கிரையாக்குவான். இந்த முறை மிகக் கடுமையான போர் இருக்கும். மேலைச்சாளுக்கியம் தலைதூக்கவொட்டாது செய்ய வேண்டும். ஜெயசிம்மன் எங்கு தப்பி ஓடினாலும், இழுத்து வந்து சிரம் கொய்ய வேண்டும். இதையெல்லாம் முடித்த பிறகுதான் பட்டாபிஷேகம் நடக்கும். இராஜராஜ நரேந்திரனுக்கு பட்டாபிஷேகம் நடக்கும்போது, வேறு சில விஷயங்களும் நடக்கும்.''

''தெரியும், என்னவென்று தெரியும்.'' வீரமாதேவி பதில் சொன்னாள்.

''என்ன தெரியும்.''

''உங்கள் மகள் அம்மங்காதேவியை அவனுக்கு திருமணம் செய்து முடிக்க போகிறீர்கள். மிகச் சிறந்த அரசியல் உறவை ஏற்படுத்தப் போகிறீர்கள். கீழைச்சாளுக்கியத்து மக்களுக்கு அந்த திருமணத்தின் மூலம் நம்பிக்கை ஏற்படுத்தப் போகிறீர்கள். தன் மகளை காப்பாற்ற இராஜேந்திர சோழர் எப்போதும் வருவார், அவர்களை காப்பாற்ற தாங்களும் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் அவர்கள் இருப்பார்கள். எனவே திருமணத்திற்கு அவளை இப்போதே அழைத்துப் போகப் போகிறீர்களா.''

''இல்லை. அங்கு போய் வெற்றி பெற்ற பிறகு ஓலை

அனுப்புவேன். அப்போது அம்மங்காதேவியுடன் நீயும் வரலாம்.'' நிதானமாக அவர் சொல்லி முடிக்க, வீரமாதேவி துள்ளி குதித்தாள்.

உடனே ஓடிப்போய் அவரை இறுக்க கட்டிக் கொண்டாள். உதடுகளில் முத்தமிட்டாள்.

''அது மட்டுமல்ல, அம்மங்காதேவியுடைய அன்னையார் முக்கோணகிழானடியும் வருகிறாள். வீர இராஜேந்திரனும், இராஜ ராஜதித்தனும் வரலாம். அதுதவிர மற்ற சகோதரிகளும் வரலாம். எனவே நமது குடும்பத்தில் பெரும்பகுதி அங்கு இருக்கும். தஞ்சையை கிருஷ்ணன் ராமனும், பரமன் மழபாடியாரும் கவ னித்துக் கொள்வார்கள்.

ஜடாவர்ம சுந்தர பாண்டியன் என்ற என்னுடைய இரண்டா வது இளவல் மதுரையை கவனித்துக் கொள்வான். அவன் அங்கு நின்று சோழதேசத்தின் எல்லையை பலப்படுத்துவான். எந்த கவலையும் இல்லாமல் வேங்கி தேசத்தை வென்றுவிட்டு வரலாம்.''

''அதற்குப் பிறகு ஒட்டதேசம் போவீர்களே, நானும் வர லாமா.''

''தெரியவில்லை. ஒட்டதேசம் நான் போகவா, வேறு யாரை யேனும் அனுப்பவா அல்லது ஒட்டர்கள் நம்மீது படை எடுத்து வருவார்களா எதுவும் தெரியவில்லை. வேங்கி தேசம் வரையில் நான் போகிறேன். அது உறுதி.

வேங்கி தேசம் போன பிறகு அம்மங்கையோடு நீயும் வந்து சேர். ஒரு வார கால பயணம். அருமையாக வந்துவிடலாம்.'' அவர் சொல்ல எல்லோரும் சந்தோஷமானார்கள்.

அந்த செய்தி அந்தப்புரத்து முழுவதும் பரவியது.

அவர்கள் அம்மங்காதேவியை அழைத்து வந்து இராஜராஜ நரேந்திரனை சந்திக்க வைத்தார்கள். இராஜராஜ நரேந்திரன் மண்டியிட்டு அம்மங்காதேவியை வணங்கினான்.

''சோழகுல இளவரசிக்கு என் தாழ்மையான வணக்கங்கள். நான் வெறும் ஆளாய் உங்களை திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. வெற்றி பெற்ற பிறகு உங்களை கைப்பிடிக்க விரும்புகின்றேன். என் வெற்றிக்கு தயவுசெய்து நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். நான் ஒரு நல்ல புருஷனாக உங்க ளுக்கு இருப்பேன். சோழ தேசத்தின் மீது விசுவாசத்துடன் இருப்பேன்.

தாயாரைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். என் தாயாரை இனி ஒருபொழுதும் நான் வேங்கிக்கு அழைத்துப் போகப் போவதில்லை'' என்று உறுதிபடத் தெரிவிக்க, அம் மங்கையின் முகம் மலர்ந்தது.

குந்தவைக்கு செய்தி போயிற்று.

''அப்படியா, திருமணமா. சரி, அதற்கு முன்னால் செத்துப் போகிறேன். திருமணத்தை இன்னும் விமரிசையாகச் செய்யுங் கள்'' என்று உரக்க கத்தினாள்.

இந்த முறை முக்கோணகிழானடி போய் முன் நின்று கொண்டாள்.

''மிகக் கவனமாகப் பேசவும், இல்லையெனில் நடப்பதே வேறு'' என்று பயமுறுத்தினாள்.

''ஆள்ஆளுக்கு எகிறுகிறீர்களே, நான் யாரென்று உங்க ளுக்குத் தெரியாதா.''

''உன் காலை உடைத்தாகி விட்டது. வாயை மூடிக்கொண்டு இரு. உன் வாழ்க்கையை நீயே உன் தலையில் மண் அள்ளி போட்டுக் கொள்ளாதே'' என்று முக்கோணகிழானடி சீற, அவள் மௌனமானாள்.

அவளுக்குள் வேறு ஒரு சீற்றம் பொங்கி எழுந்தது. அம் மங்கையை கொன்றுவிட்டால். புத்தி பேதலித்துப் போனவர்கள் யாரையாவது கொல்ல வேண்டும். கொன்றால் பிரச்சனை தீர்ந்து போகும் என்று நினைத்து கொள்வார்கள்.

ஆனால் சோழ தேசத்து மகாராணிகள் மிகக் கெட்டிக்காரர் கள். குந்தவை இருக்கும் இடத்திலிருந்து வெகுதூரம் தள்ளி வேறு ஒரு இடத்தில் அம்மங்கையை குடிவைத்தார்கள். அரண் மனையில் அம்மங்கை இருப்பதாக ஒரு பேச்சு இருந்ததே தவிர அம்மங்கை அந்த அரண்மனையிலேயே இல்லை. அவள் குடந்தைக்கு அருகே உள்ள பழையாரை அரண்மனைக்கு பாட்டி யுடனும், தன் சித்தியுடனும் இருந்துவிட்டாள்.

ஆனால் கொல்லுகின்ற வாய்ப்பு சிங்கத்திற்கு மட்டுமா கிடைக்கும். சில சமயம் நரிக்கும் கிடைத்துவிடும். அதற்குண் டான சந்தர்ப்பங்களை நரி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்.

* * *

அத்தியாயம்

22

"நமது அரசன் நம்மை நிம்மதியாக இருக்க விடமாட்டான் என்று நினைக்கிறேன்."

திண்ணையில் நாற்பது அந்தணர்கள் உட்கார்ந்திருக்க எதிர்பக்க திண்ணையில் திண்டில் சாய்ந்து கொண்டு கால் நீட்டிக் கொண்டிருந்த விஸ்வநாத ஸ்ரௌதிகள் கண்மூடிக் கொண்டு பேசினார். மிக முக்கியமான விஷயங்களை பேசும் போது அவர் கண்களை மூடிக்கொள்வது வழக்கம்.

"என்ன விஷயம். காலையில் தூதுவர்கள் வந்தார்களே."

"ஆமாம். ஓலை வந்திருக்கிறது. ஓலையில் செய்தி வந்திருக்கிறது."

"என்ன செய்தி."

"நாமெல்லாம் காசிக்கு போக வேண்டுமாம்."

"எதற்காக? அப்படி ஒரு சங்கல்பம் இல்லையே."

"செய்து கொள்ள வேண்டுமாம்."

"சங்கல்பமா."

"ஆமாம்."

"எதற்காக."

உங்கள் பித்ருக்களுக்கு நீர் கடன் செய்ய வேண்டாமா. இங்கேயே காவிரிக் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்தால் நல்லதா. எனவே நீங்கள் கடற்கரை ஓரமாகவே நடந்து வேங்கி தேசம் போய் அங்கிருந்து வேறு பக்கமாக திரும்பி காசி தேசம் போக வேண்டும். காசியில் குளித்து நீராடி பித்ருக்களுக்கு எள்ளும், தண்ணீரும் வார்த்து, அதே போல இராஜராஜ சோழருக்கும் பித்ரு காரியம் நிறைவேற்றி கங்கை நீரோடு திரும்பி வர வேண்டும்."

"இஷ்டம் இருந்தால்தானே போவேன்."

''உங்களுடைய இஷ்டத்தை யாரும் இங்கு கவனிக்க வில்லை. அரசருடைய கட்டளை நீ போக வேண்டும் என்பது.

''இராஜராஜருக்காகவா.''

''இல்லை. உன் தந்தையாருக்காகவும் தான்.''

''என் தந்தை கேட்கவில்லையே.''

''இராஜராஜ சோழர் கேட்பாராக இருக்கும். அவர் கேட்கும் பொழுது இராஜேந்திர சோழர் சொல்லி இருப்பாராக இருக்கும். இராஜேந்திர சோழர் உனக்கு கட்டளை இடுகிறார். மாட்டேன் என்றா சொல்லப் போகிறாய்.''

''எப்படி முடியும் என்று கேட்கப் போகிறேன்.''

''ஏன் முடியாது என்று கேட்பார்.''

''அவ்வளவு தொலைவு பயணப்படுவதற்கு நான் என்ன மறவனா. குதிரை வீரனா. நடந்து நடந்து காசிவரை எப்படிப் போவது.''

''உன்னை யாரும் நடந்து போகச் சொல்லவில்லையே.''

''பிறகு.''

''நல்ல மாட்டு வண்டிகள் வைத்துக் கொள்ளலாம். தேர் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.''

''குறுந்தேரில் நின்ற வண்ணம் காசி வரை போக வேண்டுமா.''

''வேண்டாம், குதிரையில் போ.''

''குதிரை ஓட்டத் தெரியாதே.''

''பழக்கப்படுத்திக் கொள்.''

''போய்த்தான் ஆக வேண்டுமா.''

''உத்தரவு. கட்டளை.''

''எல்லோருமா.''

''நூறு பேர் போக வேண்டும். மற்ற கிராமங்களிலிருந்தும் அந்தணர்களை சேர்க்க வேண்டும்.''

''என்னய்யா இது. எதற்கு காசிக்கு நூறு பேர் போவது அங்கு போய் எதற்கு நீத்தார் கடன் செய்வது. நீத்தார் கடன்

இங்கு செய்தாலும் இந்த திண்ணையில் செய்தாலும் என் தகப்பன் வாங்கிக் கொள்வார். காசிக்கு போக வேண்டும் என்று ஒரு கட்டாயமும் இல்லையே.''

''உன்னைப் போகச் சொன்னது இராஜேந்திரர். முடிந்தால் மறுத்துப் பார்.''

''என்ன காரணம் உண்மையில். நம்மீது என்ன கோபம்.''

''உங்கள் மீது ஒரு கோவமும் இல்லை.''

''பிறகு.''

''அவருக்கு சில காரியங்கள் ஆக வேண்டும்.''

''என்ன''

''வேங்கிவரை போவது அவருக்கு எளிது. வேங்கி தாண்டி ஒட்ட தேசம் போவதும், கோசல தேசம் போவதும் அவருக்கு சிரமமான காரியம். அங்கு நிலைமை எப்படி இருக்கிறது. மக்கள் என்னவாக இருக்கிறார்கள். யுத்தம் அங்கு நடைபெறுமா. நடை பெற்றால் வெற்றி பெறுவோமா என்று அவருக்கு பல கேள்வி கள் இருக்கின்றன. அந்த கேள்விகளுக்கு யாத்ரீகர்களாக நீங்கள் போய் சுற்றிப் பார்த்து விவரங்கள் சேகரித்து பதில் சொல்ல வேண்டும்.''

''கோசல தேசத்திற்கு உளவு பார்க்க போக வேண்டுமா.''

''ஆமாம்.''

''இதுவா நம் வேலை. இதற்காகவா வேதம் படித்தோம்.''

''நீ எதற்கு வேதம் படித்தாய் என்பது பற்றி அக்கறை இல்லை. ஆனால் இது அரசாங்க கட்டளை. நிறைவேற்றியாக வேண்டும். நிறைவேற்றினால் இங்கு இரு.''

''இல்லையெனில்?''

''வேறு எங்காவது போ.''

''எங்கு போவது?''

''மேலைச்சாளுக்கியம் போய் இரு. அங்கு அந்தணர் களுக்கு பெரிய மதிப்பு. அல்லது பாண்டிய தேசம் போய்விடு. அங்கேயும் வரவேற்பார்கள்.''

''பாண்டிய தேசம் சுடுகாடாக இருக்கிறதாமே.''

''போ. உயிரோடு இருக்க வேண்டுமென்றால் சுடுகாடு தான் போயாக வேண்டும். வேறு வழியில்லை. சோழ தேசத் தில் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்க உன்னை விடப் போவ தில்லை. நூறு அந்தணர்கள், யாரெல்லாம் வருகிறீர்கள். வர மாட்டேன் என்றால் எனக்கு சரியான காரணம் சொல்லுங்கள். நான் கிளம்ப தயாராகி விட்டேன், உங்களில் யார் யார் எப்போது வருவீர்கள் என்று சொல்லுங்கள்.''

சபை ஆடிப்போய் மௌனமாய் உட்கார்ந்திருந்தது.

''மறுத்தால் என்ன ஆகும்?''

''என்ன வேண்டுமானாலும் ஆகும்.''

''சிரச்சேதம் செய்துவிடுவாரா.'

''அது செய்தால் நிம்மதி ஆயிற்று. முடிந்து போயிற்று. வேறு ஏதேனும் தண்டனை இருக்கலாம்.''

''என்ன தண்டனை.''

''உங்கள் நிலங்கள் அத்தனையும் அபகரிக்கப்படலாம். பிச்சை எடுத்து நீங்கள் உண்ணும்படி ஆகலாம். ஏற்கனவே பல பழைய பிரம்மதேயங்களை எல்லாம் வேளாண்வகை நிலங் களாக மாற்றிக் கொண்டிருக்கிறார். இன்னும் தொடரும். இன்னும் வேகமாகத் தொடரும். ஒரு கிராமத்திலும் ஒரு அந்தணருக்கும் நிலம் இருக்கக்கூடாது என்ற கட்டளை வந்தாலும் வரும். நிலம் நீச்சு இல்லாத பரதேசியாக நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டி யிருக்கும்.''

''அவ்வளவு கொடுமைக்காரனா இராஜேந்திரன்.''

''மரியாதையாகப் பேசு. உளவாளிகள் இருக்கின்ற இடம் இது. ஒவ்வொரு அசைவும் இராஜேந்திர சோழனுக்குப் போய் சேருகிறது. நீங்கள் மறுத்தால் அதுவும் நீங்கள் சொல்வதற்கு முன்பு போய் சேர்ந்துவிடும். எனவே முட்டாள்தனமாக உள றாமல் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து ஒரு நாழிகை யில் பதில் சொல்லுங்கள்.''

''எப்போது கிளம்ப வேண்டும்.''

''நாளை மறுநாள்.''

''அங்கே உணவுக்கெல்லாம் என்ன வழி.''

மாட்டுவண்டி கொடுப்பார்கள். மாட்டு வண்டியில் அரிசியும், காய்கறியும் வைப்பார்கள். போகிற வழியிலுள்ள ஊர்களில் நெய் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். அதற்கு கழஞ்சுகள் கொடுப்பார்கள். எந்த கவலையும் இல்லாமல் போய் வரலாம். உணவு பற்றிய கவலை உங்களுக்கு வேண்டியதில்லை. ஆனால் அவ்வளவு தொலைவு நீங்கள் பயணப்பட வேண்டும். முடியுமா என்று யோசனை செய்யுங்கள். முடியாதவர்கள் விலகி விடுங்கள். சரியான காரணம் சொல்லுங்கள்.''

''என் தாயாருக்கு உடல்நலமில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் போய்விடுவார்.''

''நீ இருந்து என்ன செய்யப் போகிறாய். உன்னுடைய மகன் கவனித்துக் கொள்வான். இது காரணம் இல்லை. நீ கிளம்ப தயாராக இரு.''

''என் குழந்தைக்கு இரண்டு வயதாகிறது. அவனுக்கு ஏதேனும் சொல்லிவிட்டு வருகிறேனய்யா.''

''ஏதேனும் சொல்லிக் கொடுக்க எத்தனை வருடமாகும்.''

''குறைந்தது ஐந்து வருடங்கள் ஆகும்.''

''இதுவும் காரணம் இல்லை. உன் குழந்தைக்கு வேறு யாரேனும் சொல்லித் தருவார்கள். எனவே கிளம்பத் தயாராக இரு.''

''எப்போது கிளம்பியாக வேண்டும்.'' பின்னாலிருந்து மீண்டும் ஒரு குரல் வந்தது.

''நாளை மறுநாள்.'' அவர் பதில் சொன்னார். சட்டென்று கண்விழித்தார். ''யாரது கேட்டது. எழுந்து நில்லுங்கள்'' என்றார்.

கேட்டவன் எழுந்து நின்றான்.

''எந்த ஊர் நீங்கள், உங்களை இதற்கு முன்பு பார்த்ததில்லையே.''

''எனக்கு மருவூர்.''

''எந்த மருவூர்.''

''திருக்காட்டுப்பள்ளி மருவூர்.''

''அங்கிருந்து தஞ்சை நோக்கி இவ்வளவு தூரம் வருவானேன்.''

''விதை நெல்லும், உழு கலப்பையும் வாங்குவதற்காக வந்தேன். அப்பொழுது இங்கே கூட்டம் நடக்கிறது என்று சொன்னார்கள். ஏதோ சத்சங்கம் போல இருக்கிறது என்று வந்தேன். இப்படி அரசியல் விஷயம் நடக்கும் என்று தெரியவில்லை.''

''உங்கள் கிராமத்தில் எத்தனை அந்தணர்கள் இருக்கிறார்கள்.''

''நாற்பது பேர் இருக்கிறார்கள்.''

''மருவூர் அந்தணர்கள் மிகக் கெட்டிக்காரர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த நாற்பது பேரும் வந்து சேர வேண்டும். எங்களிடத்தில் நாற்பது அந்தணர்கள் இருக்கிறார்கள். இன்னும் இருபது பேரை தயார் செய்ய வேண்டும். அரசர் நூறு அந்தணர்கள் கேட்கிறார். நூற்றி எட்டு அந்தணராக கிளம்ப வேண்டும். உங்களுடைய பெயர் என்ன?''

''எனக்கு மருவூர் சரபன் என்று பெயர். சரப சாஸ்திரிகள் என்றும் சொல்வார்கள்.''

''என்ன படித்திருக்கிறாய்.''

''யஜுர் வேதம்.''

''என்ன கோத்ரம்.''

''கௌஸிக கோத்ரம்.''

''என்ன தொழில் நடக்கிறது.''

''வேத பாடசாலைதான். அதற்கு கிராம மக்கள் காசு கொடுத்து உதவுகிறார்கள். பிரபுக்கள் வீட்டிற்கு அழைத்து வேதம் ஓதச்சொல்லி தங்கமாகவும், உடையாகவும், நெல்லாகவும் தருகிறார்கள். அதைத் தவிர என்னிடம் நல்ல நிலம் இருக்கிறது. காவிரியும், கொள்ளிடமும் பாய்கின்ற இடம். அதனால் வாய்க்கால்களுக்கு கவலையே இல்லை. எல்லா இடத்திலும் நீர் பாய்கிறது. நெல் நன்கு விளைகிறது. அதுதான் அடிப்படையான வேலை. வேதம் ஓதுதல் உபரி.''

''ஆக, அடிப்படையில் விவசாயி என்று சொல்லுங்கள்.''

''அப்படித்தான் வாழ்க்கை இருக்கிறது.''

''கிளம்பத் தயாராக இருங்கள். இப்பொழுதே போய் நாற்பது பேரை கூட்டிக் கொண்டு வாருங்கள்.''

''நிச்சயம் செய்கிறேன்.'' அவன் கீழே இறங்கிப் போனான்.

''இராஜேந்திரர் இப்படி சொல்லிவிட்டாரே என்று வருத்த மில்லையா.'' வேறொருவர் மடக்கி கேட்டார்.

''வருத்தப்பட்டு என்ன பயன். வந்தது வந்துவிட்டது. வந்ததை செவ்வனே செய்ய வேண்டும். அதைத்தவிர இவர் சொல்வதைப் போல நாம் போரிடப் போகவில்லை. வெறுமே யாத்திரை போகப் போகிறோம். காசி தேசத்துக்கு போக வேண் டும் என்று ஆசைப்பட்டால் போக முடியுமா. இப்பொழுது அந்த வாய்ப்பு வந்திருக்கிறதே. தாராளமாகப் போகலாம். போய் நீத்தார் கடன் செய்யலாம்.

அதுதவிர அங்குள்ள கலாசாலைகளில் புதிய பாடங்கள் கற்கலாம். சந்தோஷமாக வரலாம். ஏன் கவலைப்பட வேண்டும். காசிக்குப் போனால் உயிர் போய்விடுமா. இங்கிருந்தாலும் உயிர் போகும். எங்கிருந்தாலும் சாவு வரும். காசிக்கு போனால் செத்துப் போய்விடுவோம் என்று ஏன் பயப்பட வேண்டும்'' என்று அவன் சொல்ல,

அந்த அந்தணர் முகம் சுருக்கி அவனையே பார்த்தார்.

''என் பெயர் விஸ்வநாத ஸ்ரௌதிகள்.''

''நன்கு தெரியும். உங்களுடைய வேத கானத்தை காது குளிர கேட்டிருக்கிறேன். நீங்கள் பாடம் சொல்லும் அழகை வியந்திருக்கிறேன். என்னை உங்களுக்குத் தெரியாது'' என்று பவ்யமாக பணிந்தான்.

''சரி, போய் வாரும். விதை நெல் வாங்கிவிட்டீரா.''

''அனுப்பி ஆயிற்று.'' சரபன் பணிவாக பேசினார்.

''உழுகலன்.''

''எடுத்துப் போகச் சொல்லி இருக்கிறேன். நானும் பின் னாலேயே போய்விடுவேன்.''

''நல்லது போய்வாரும். நாளை மறுநாள் காலையில் இந்த இடத்தில் நீங்கள் இருக்க வேண்டும்.''

''நிச்சயம் வருகிறேன்.'' அவன் சொல்லிவிட்டு வேகமாக நகர்ந்தான்.

''மருவூர். மருவூர் சரபன். இவருக்கு மருவூர்தானா என்று சந்தேகமாக இருக்கிறது.''

''ஏன்?''

''இவன் இராஜேந்திர சோழனின் உளவாளி. நீங்களெல்லாம் முணுமுணுத்தது இன்று இரவு இராஜேந்திர சோழருக்கு போய்விடும். எனவே மேற்கொண்டு உளறாமல் என்ன செய்ய வேண்டும் என்று யோசனை செய்யுங்கள். இதற்கு மேலும் உளவாளிகள் இங்கு இருக்கலாம்'' என்று சொல்ல, அவர்கள் ஒருவரை ஒருவர் பரிதாபமாக பார்த்துக் கொண்டார்கள்.

உட்கார்ந்திருந்த அத்தனை பேருமே உளவாளிகளாய் அவருக்கு தெரிந்தது.

அரையன் இராஜராஜன் திருவொற்றியூர் வந்து அடைந்து விட்டதாக அவர்களுக்கு செய்தி வந்தது. திருவொற்றியூரை கைப்பற்றி விட வேண்டும் என்று அவர்கள் துடிதுடிக்க, அரையன் இராஜராஜன் திருவொற்றியூருக்கு முன்பு பாடியில் மிக அழகாக தன் படைகளை நிற்க வைத்து திருவொற்றியூர் கோவிலில் தன் அலுவலகத்தை திறந்துவிட்டான். அங்கிருந்தபடி மக்களோடு பேசிக் கொண்டிருக்கிறான். படைகள் எல்லா இடங்களிலும் பரவி இருக்கின்றன. ஒரு ஊதுகுழல் ஓசையில் படைகள் ஒன்று திரண்டுவிடும் என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலைச்சாளுக்கியர்கள் மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். இவ்வளவு விரைவாக எப்படி வர முடியும். நாம் வருவோம் என்று தீர்மானித்து முன்னதாக அனுப்பி இருக்கிறார்கள். அப்படி வந்த அரையன் இராஜராஜன் ஏன் உள்ளே வரவில்லை. ஏன் தாக்கவில்லை. தாக்குவதற்கு பயமா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்று யோசித்தார்கள்.

சிறு தேர்கள் பல நூறு இருப்பதை தெரிந்து கொண்டார்கள்.

இரண்டு நாளில் வேங்கியை அடைந்துவிட முடியும் என்று அவர்களுக்கு கணக்கு புரிந்தது. அரையன் இராஜராஜன் காத்திருக்கிறான் என்றால் அப்பொழுது இன்னும் அதிகமான படைகள் வரப்போகிறது என்று அர்த்தம். அரையன் ராஜராஜன் அங்கு காத்திருந்து விட்டு, மற்ற படைகளோடு சேர்ந்து கொண்டு உள்ளே நுழையப் போகிறான் என்று அர்த்தம் என்பது புரிந்து விட்டது. எனவே, அவர்கள் கீழைச்சாளுக்கியத்தின் எல்லையில் இருந்தார்கள். பிறகு மெல்ல பின்வாங்கினார்கள்.

இன்னும் முன்னேறி வரட்டும். வேங்கிக்குள் நுழையாமல்

அடிப்போம் என்று சொல்லி வேங்கியின் வழியை மறித்துக் கொண்டார்கள்.

உள்ளே எல்லா வீரர்களுக்கும் அவரவர் உயிர் பற்றிய கவலை அதிகம் இருந்தது.

ஆறாவது முறையாக வில் வளைத்து அம்பு தொடுத்து விடுகிறபொழுது கட்டை விரலில் நச்சென்று அடிவாங்கிக் கொண்டான். வில்லை கீழே போட்டு துடித்தான்.

''வில்லை உறுதியாக பிடித்தால்தான் அடிவாங்காமல் இருக்கலாம். உங்கள் கை நடுங்குகின்றது. வில்லை நீங்கள் உறுதியாகப் பிடிக்கவில்லை. வில்லை அசைக்கிறீர்கள். அதனால் தான் அடி வாங்குகிறீர்கள்.''

''கைக்கு உறை போட்டுக் கொள்ளலாமா.'' அந்த இளை ஞன் கேட்டான்.

''உறை போட்டுக் கொண்டாலும் அடி விழும். இப்பொழுது வெறும் கையை வைத்துக் கொண்டு கதறுகிறீர்கள். அப்பொழுது உறையை கழட்டிவிட்டு கதறுவீர்கள். உறுதியாகப் பிடியுங்கள்.''

அந்த தலைமைத் தளபதி சொல்லிக் கொடுக்க, விஷ்ணு வர்தன விஜயாதித்தன் என்கிற அந்த பதினெட்டு வயது இளை ஞன் வேண்டா வெறுப்போடு வில்லை எடுத்தான். விரலில் அடிபடக் கூடாது என்று விரலை மடித்து வைத்துக் கொண் டான். காதுவரை நாண் இழுக்கச் சொன்னார்கள். காதுவரை நாண் இழுத்தான், விட்டான். விடும்பொழுது கை மேலே தூக்கிற்று. நேரே போக வேண்டிய அம்பு கிட்டத்தட்ட வானம் நோக்கிப் பறந்தது.

வீரர்கள் நொந்து போனார்கள்.

''உங்களுக்கு கற்றுக் கொள்வதில் விருப்பம் இல்லை. கையில் அடிபடாமல் இருக்க வில்லை தூக்கிவிட்டீர்கள். அம்பு எங்கோ இரண்டு பனைமர உயரத்திற்கு போகிறது. எதிரியை எப்படி சமாளிப்பீர்கள். எதிரிமீது எப்படி அம்பெய்வீர்கள். உங்களுக்கு கைகளுக்கு பலம் தர வேண்டும். எனவே தினசரி இரும்பு எடையை தூக்குங்கள். மணல் மூட்டையை குத்துங்கள். அப்பொழுது சரியாக வரும்.

இந்த பயிற்சி நாங்கள் தருவதற்கில்லை. கைகளுக்குண் டான பயிற்சியை மல்யுத்த வீரர்களிடம் கற்றுக்கொள்ளுங்கள்.''

அவர்கள் மெல்ல வணங்கி விடைபெற்றார்கள்.

''இப்படிப்பட்ட இளைஞனா நமக்கு மன்னன்'' என்று அந்த கீழைசாளுக்கிய வீரர்களுக்கு துக்கமாக இருந்தது.

''வில் வித்தை முடிந்ததா.'' தாய் கேட்டாள்.

''அற்புதமாக முடிந்தது. எல்லா உருவ பொம்மைகளையும் தகர்த்துவிட்டேன். எனக்கு பெரிய மரியாதை.'' அவன் கூசாது பொய் சொன்னான்.

அவன் தாய்க்கு அவன் மீது நம்பிக்கை இல்லை.

''இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்.''

''ஓய்வு எடுக்க வேண்டும். ஓய்வு எடுக்கும் முன்பு மந்திரி யிடம் பேசவேண்டும்'' என்று சொன்னான்.

அவனுக்கு தாய் உணவு பரிமாறினாள். கீழைச்சாளுக்கி யத்து மந்திரி ஒருவர் வாசலில் வந்து நின்றார். அவரை வர வழைத்தான். அருகே உட்காரச் சொன்னான். குனிந்து இரகசியம் பேசினான்.

''கீழைச்சாளுக்கியத்திலிருந்து தப்பித்து போக வேண்டு மென்றால் எங்கு போக வேண்டும்'' என்று கேட்டான்.

அவர் வியப்போடு அவனை பார்த்தார்.

''கண்களை அதிகம் விரிக்காதீர்கள். மௌனமாக உங்க ளுக்கு தெரிந்ததை சொல்லிக் கொடுங்கள். இராஜேந்திர சோழர் படை எடுத்து வரப்போவது உறுதியாகிவிட்டது. கீழைச்சாளுக் கியத்திலிருந்து தப்பித்து போக வேண்டுமென்றால் எங்கு போக வேண்டும்.''

''மானியகேடயம் போகலாம். மானியகேடயம் மேலைச் சாளுக்கியத்தின் தலைநகரம். அது மிக பலமான இடம். கட்டுக் காவல் அதிகம். கோட்டைகள் அதிகம். அங்கு போய்விடலாம்.''

''மானிய கேடயத்தில் நம்மை மதிப்பார்களா.''

''நீங்கள் கீழைச்சாளுக்கியத்து மன்னர். உங்களுக்கு மதிப்பு இல்லாமல் இருக்குமா. உங்களோடு உறவு கொள்ள வேண்டும் என்றுதானே பல நேரம் விரும்பியிருக்கிறார்கள்.''

''அப்படி மானிய கேடயம் போகாமல் வேறு எங்காவது போக வேண்டுமென்றால் எங்கே போக வேண்டும்.''

இன்னும் நகர்ந்து கல்யாணியிடம் போய் விடலாம். கோசலை தேசத்தின் எல்லையில் இருக்கிறது.''

''கல்யாணி வரை இராஜேந்திரன் வரமாட்டான் அல்லவா.''

''வருவதற்கு வாய்ப்பே இல்லை.''

''வங்காளம் பக்கம் போனால் என்ன. ஒட்டர்கள் நமக்கு சிநேகம்தானே. அவர்கள் துணையோடு வங்காளத்திற்குள் நுழைந்தால் என்ன.''

''மகிபாலன் உங்களை எப்படி வரவேற்பான் என்று தெரியவில்லை. வங்காளத்தின் பக்கம் போவதற்கு இராஜேந்திர முயற்சி செய்து கொண்டிருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது.''

''ஏன் வங்காளத்திற்கு வர வேண்டும்.''

''கங்கையில் குளிக்க வேண்டுமாம். அதற்காக வருகிறானா.''

''சரியான ஆண்டியாக இருப்பார் போலிருக்கிறதே.''

''ஆமாம். அரசரும், ஆண்டியும் கலந்தவன். அவன் அரசனாக இருந்தால் கொடுமையாக இருப்பான். ஆண்டியாக இருந்தால் மிக அன்பானவனாக இருக்கிறான். இரண்டும் கலந்தவன் அவன். அவனை நாம் பகைத்துக் கொண்டது தவறு.''

''என்ன பழைய பல்லவியையே பாடுகிறீர்கள்.''

''என்ன செய்ய. நீங்கள் மேலைச்சாளுக்கியர் ஜெயசிம்மனை நம்பி உங்கள் தந்தையை புறக்கணித்துவிட்டு, இராஜராஜ நரேந்திரனை துரத்தி விட்டீர்கள்.''

''நான் எங்கே துரத்தினேன். அவனல்லவா ஓடிப்போனான்.''

''அவனை ஒரு மாதிரியான நிர்க்கதியில் வைத்தீர்கள், நீங்கள்தான். பட்டம் கொள்ளப் போகிறேன் என்று ஊருக்கு சொன்னீர்கள். அப்பொழுது இராஜராஜ நரேந்திரன் இங்கிருந்து என்ன செய்வான். எனவே இங்கிருந்து கிளம்பி தன்னுடைய மாமனிடம் போய்விட்டான். மாமனோடு மறுபடியும் வருவான்.''

''அவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று நினைக்கிறீர்களா.''

நாம் போர் செய்யும் முறையை பார்த்தால் அப்படி சொல்லலாம். மேலைச்சாளுக்கியம் பலமான படைதான். ஒட்டர்படையும் இன்னும் வேகமாக இருக்கிறது.''

''கீழைச்சாளுக்கியப் படை எப்படி இருக்கிறது.''

''கேவலமாக அல்லவா இருக்கிறது. மற்றவர்கள் நமக்காக சண்டை போடுவார்கள். அப்படி சண்டை போட்டால் வெறுமே போவார்களா. நம் தேசத்தை சூறையாடி விட்டுத் தானே போவார்கள். நம்முடைய அரிசியும், பருப்பும் வருடாவருடம் கொடு என்று கப்பம் கட்டத்தானே சொல்வார்கள். நாம் அவர்களுக்கு கொடுத்துவிட்டு ஈரத்துணியை மேலே போட்டுக் கொள்வதா.''

''வேறு என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள்.''

''இராஜேந்திரனிடம் சரணடைந்து விடுங்கள்.''

''பிரம்பால் அடிப்பாராமே.''

''அடித்தால் வாங்கிக் கொள்ளுங்கள்.''

''உன்னைப் போய் கேட்கிறேனே. அறிவிருக்கிறதா. என்னை பிரம்பால் அடி வாங்கு என்று சொல்லுகிறாயே.''

''உங்களை பிரம்பால் அடிக்க மாட்டார். நீங்களாக பயப்படுகிறீர்கள். உங்கள் தந்தை விமலாதித்தன் குந்தவையின் புருஷன். அதனால் விமலாதித்தருக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை உங்களுக்கு கொடுப்பார். நீங்கள் ஆட்சியை இராஜராஜ நரேந்திரனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும்.''

''அப்படி விட்டுக் கொடுத்துவிட்டால் என்ன நிச்சயமாக விட்டு விடுவார்களா.''

''நிச்சயமாக விட்டு விடுவார்கள். ஆமாம், நீங்கள் ஏன் ஆட்சியை விட்டுக் கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்.''

''எதற்கய்யா ஆட்சியும், அடியும். வில் எடுத்து அம்பு தொடுத்து அடிக்கச் சொல்லுகிறார்கள். கட்டை விரலில் சுளீர், சுளீர் என்று அடி விழுகிறது. நான் பாட்டுக்கு உட்கார்ந்து கொண்டு மது அருந்திவிட்டு மெல்ல மங்கையரோடு பேசிக் கொண்டிருப்பேன். இப்போது எவளைத் தொட்டாலும் கட்டை விரல் வலிக்கிறது.''

''நீங்கள் போக பாக்கியசாலி ஆகிவிட்டீர்கள்.''

''என் ஜாதகம் அப்படித்தான். இடையறாத போகம் என்னுடைய வாழ்க்கை. இதைத்தான் என்னுடைய ஜாதகம் சொல்கிறது.''

"சரி என்ன செய்யப் போகிறீர்கள்."

"அதற்குத்தான் உன்னிடம் ஆலோசனை கேட்டேன். நீ இராஜேந்திரனிடம் சரணடைந்து விடு என்று சொல்கிறாய். இப்பொழுது மேலைசாளுக்கிய மந்திரியிடம் ஆலோசனை கேட்பேன். அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்பேன்."

"எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். என்னை காட்டிக் கொடுக்காதீர்கள்."

"உன்னை ஏன் காட்டிக் கொடுப்பேன். உன்னையும் அழைத்துக் கொண்டல்லவா போகப் போகிறேன்."

"எங்கே?"

"மேலைச்சாளுக்கியம்."

"நிச்சயம் வருகிறேன்." அந்த அதிகாரி தலை வணங்கி விட்டு நகர்ந்தார்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன் சரியாக இல்லை என்று சுருக்கமாக அவன் குறைகளைச் சொல்லி, சோழ தேசம் நோக்கி ஒரு ஓலை போயிற்று.

"கேள்வியே அபத்தம். இராஜேந்திர சோழன் வந்தால் எங்கு போவது என்று கேட்கிறீர்கள். இது தவறு. இராஜேந்திர சோழன் வந்தால் எதிர்த்து சண்டையிட வேண்டும். நீங்களா சண்டையிடப் போகிறீர்கள். நீங்கள் யானையின் மீது உட்கார்ந்து கொண்டு சண்டையை வேடிக்கை பாருங்கள். மேலைச் சாளுக்கிய வீரர்கள்தான் முதலில் வருவார்கள். பிறகு ஒட்டர்கள் வருவார்கள். பிறகு வங்க வீரர்கள் வருவார்கள். இத்தனைப் பேரை தாண்டித்தான் கீழைச்சாளுக்கிய வீரர்களை, உங்களை தொட முடியும். அதற்கு முன்பு அவனை பஸ்பமாக்கி விடுவோம்."

"இராஜேந்திரன் மிகப் பெரிய படையோடு வருகிறானாமே."

எவ்வளவு பெரிய படை வந்தால் என்ன. அவ்வளவு தூரம் ஆடி, அசைந்து வந்து எல்லோரும் ஓய்ந்து இருப்பார்கள். நாம் புத்தம் புது ஆட்களாக மின்னிக் கொண்டிருப்போம். நம்முடைய தாக்குதலை ஒருநாளும் அவர்களால் சமாளிக்க முடியாது.

நம்முடைய பக்கம் மிகப் பெரிய வில் வீரர்கள் இருக்கிறார்கள். ஒரே நேரத்தில் மூன்று அம்புகள் பறக்கும்."

''ஒரே நேரத்தில் மூன்று அம்புகளா, கட்டை விரலில் அடிபடாது.''

''பலர் கட்டை விரலில் அடிபடும் என்று கட்டைவிரலில் பாதி துண்டித்து எடுத்து விட்டார்கள்.''

''அய்யோ, எப்படி துண்டித்தார்கள்.''

''தாங்களாகவே கத்தியை சுழற்றி ஓங்கி அடித்திருக்கிறார் கள். விரல் துண்டாகிப் போய்விட்டது.''

''பைத்தியக்காரர்களா.''

''இல்லை, வீரர்கள். வெற்றி பெறுவதற்கு எதையும் தியாகம் செய்ய துச்சமாக இருக்கிறவர்கள்.''

''மேலைச்சாளுக்கியத்தில் எல்லோருக்குமே கட்டை விரல் இருக்காதா.''

''வில் வீரர்களுக்கு இருக்காது. ஈட்டி எறிபவர்களுக்கு கட்டை விரல்தான் முக்கியம்.''

''ஆமாம். நாளைக்கு அந்த பாடம் வேறு இருக்கிறது. ஈட்டியை எறிய வேண்டுமாம். கழுத்து, தோள்பட்டை, முதுகு எல்லாம் வலிக்கிறது.''

''எறிந்து, எறிந்து பழகினால் வலி போய்விடும்.''

''புரண்டு படுக்க முடியவில்லை. எங்கு வலி போகிறது. இன்னும் அதிகமாகிறது.''

''ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும்.''

''சரி. இராஜேந்திரன் வந்தால் தப்பித்துப் போக எது சரியான மார்க்கம். கல்யாணியா, மானிய கேடயமா.''

''வங்காளம் நோக்கி. மகிபாலனை நோக்கி போய்விடுங் கள். மகிபாலன் உங்களை காப்பாற்றுவார். கோசலை தேசத் திற்கு உள்ளே போய்விடுங்கள்.''

''என்னை தப்பித்து போகவா சொல்கிறீர்கள். அது கோழைத் தனம் என்கிறார்களே.''

''ஆமாம். அது கோழைத்தனம் தான். தப்பித்துப் போக வழிகேட்டால் சொல்லித் தர வேண்டுமல்லவா. நாங்கள் இங்கே பார்த்துக் கொள்கிறோம்.''

''ஒருவேளை நீங்கள் ஜெயித்துவிட்டால் அப்பொழுது நான் மறுபடியும் வரலாமா.''

''யோசித்துதான் சொல்ல வேண்டும்.''

''ஏன் யோசிக்க வேண்டும்.''

''இங்கு அரசராக வேறு யாரையேனும் நியமிக்கலாம்.''

''வேறு யாரை.''

''மேலைச்சாளுக்கியத்திலிருந்து ஜெயசிம்மருடைய மகனை இங்கு நியமிக்கலாம்.''

''ஜெயசிம்மருடைய மகன் என்னுடைய நாட்டை ஆள்வதா.''

''உங்களுடைய நாட்டை நீங்கள் காப்பாற்றவில்லை. அப் பொழுது யார் ஆண்டால் என்ன.''

''என்னய்யா இது, கொடுமையாக இருக்கிறது. ஆட்சியில் நிம்மதியாக அமர யாருமே யோசனை செய்ய மாட்டேன் என்கி றீர்களே.''

''போர் ஒன்றுதான் வழி. நீங்கள் முன்னேறி நம் வீரர்க ளோடு சேர்ந்து கொண்டு இராஜேந்திரரை எதிர்க்க தயாராகுங்கள்.''

''ஆஹா, நிச்சயம் செய்கிறேன். நாளைக்கே நான் எல் லைக்கு போகிறேன்.'' அவன் வீறுகொண்டு எழுந்தான். அவனை அவர் வியப்பாகப் பார்த்தார்.

''போங்கடா சோம்பேறிகளா. நான் ஏன் இங்கு இருக் கிறேன். நாளையே கிளம்பி போய் விடுகிறேன்'' என்று அவன் தீர்மானித்துக் கொண்டான்.

முகத்தில் வீரம் இருந்தது. உள்ளே நடுக்கம் இருந்தது. பொய் யானவர்கள் நன்றாக நடிப்பார்கள். அவன் திறம்பட நடித்தான். மேலைச்சாளுக்கிய அதிகாரி சற்று குழம்பினார்.

''அந்த இளவரசன் உறுதியாக இருக்கிறான். நிச்சயம் போரில் கலந்து கொள்வதாக வாக்கு கொடுத்திருக்கிறான். வீரமாக பேசுகிறான். கட்டை விரலையும் துண்டித்துக் கொள்ள தயாராக இருக்கிறான்'' என்று ஜெயசிம்மனிடம் சொன்னார்.

ஜெயசிம்மன் ஆழ்ந்து யோசனை செய்தான்.

'சரி' என்று தலை அசைத்தான்.

மேலைச்சாளுக்கிய மன்னனான ஜெயசிம்மனுக்கு விஷ்ணு வர்தன விஜயாதித்தன் மன்னனாக வருவது விருப்பமில்லை. கீழைச்சாளுக்கியத்திற்கு தானே மன்னனாக வேண்டும் என்று ஆசைப்பட்டான். மேலைச்சாளுக்கியத்தில் தன் மகனை உட்கார வைத்துவிட்டு, கீழைச்சாளுக்கிய போரில் ஜெயித்தவுடன் இங்கேயே தன்னுடைய அரசாங்கத்தை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த இடத்திலிருந்து பண்டங்களை மேலைச்சாளுக் கியம் அனுப்ப வேண்டும்.

கீழைச்சாளுக்கியம் போல வளமை மிக்க, நதி தீரம் மிக்க, நாகரீகம் மிக்க, அழகிய பெண்கள் மிக்க, உறுதியான எருதுகள் மிக்க, பெருத்த பசுக்கள் மிக்க, பண்டிதர் மிக்க ஒரு தேசம் இல்லவே இல்லை. ஆனால் இராஜேந்திர சோழனை எப்படி தடுத்து நிறுத்துவது. ஒட்டர்களோடு பேச வேண்டும் என்று தீர்மானித்தான்.

எனக்கென்ன தருவாய் என்று ஒட்டர்கள் கேட்பார்கள். கீழைச்சாளுக்கியத்தை இரண்டாகப் பிரித்து மேல்பகுதியை தருகிறேன். கீழ்ப்பகுதியை நான் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்ல வேண்டும். ஒட்டதேசம் சற்று விரிவாகும். விரிவான ஒட்டதேசத்தை முதலில் கொடுத்துவிட்டு, அவர்கள் பலம் குன்றியபோது அடித்து அந்த இடத்தையும் பிடித்துக் கொள்ள வேண்டும். சோழர்களின் பல இடங்களை அப்படித்தான் பிடித்துக் கொண்டாயிற்று.

மானியகேடயம் அடிபட்டது. மிகவும் சிரமமாயிற்று. அந்த இடத்தையெல்லாம் மறுபடியும் உள்ளே புகுந்து தக்கவைத்துக் கொள்ளவில்லையா. சோழ வீரர்கள் போன பிறகு மறுபடியும் ஜெயித்து விடலையா. அதேபோல ஒட்டர்கள் நகர்ந்த பிறகு அவர்களை ஓட ஓட விரட்டலாம். இப்போதைக்கு ஒட்டர்களோடு பேச்சுவார்த்தை வைத்துக் கொள்ள வேண்டும். நல்லபடியாக வைத்துக் கொள்ள வேண்டும். ஒட்டர்களைத்தான் முதலில் அனுப்ப வேண்டும்.

''முதலில் போவதா, நாங்கள் மட்டுமா. என்னை என்ன பைத்தியக்காரன் என்று நினைக்கிறாயா.'' ஒட்ட தேசத்து அரசன் உரக்கக் கத்தினான்.

''அப்படி நடக்காது. ஐம்பது ஐம்பது வீரர்களாக முதல் ஐம்பது மேலைச்சாளுக்கிய வீரர்கள். அடுத்த ஐம்பது ஒட்டர்கள். பிறகு மேலைச்சாளுக்கியம். பிறகு ஒட்டர்கள் அப்படி ஐம்பது ஐம்பது பேராக கலந்து அனுப்பலாம். ஒற்றுமையாக உழைத்தால் வெற்றி நிச்சயம். இல்லையேல் இரண்டு பேரும் அடிபட்டுச் சாக வேண்டியதுதான்.''

''உங்களைப் போல ஒரு ஆள் முன்னே போய் நீ பின்னால் வா. இந்தக் கதையெல்லாம் நடக்காது. இப்படித்தான் நடக்கும்'' என்று சொல்ல,

வேறு வழியில்லாமல் ஜெயசிம்மன் என்கிற மேலைச் சாளுக்கிய மன்னன் அதேவிதமாக உடன்படிக்கை செய்து கொண்டான்.

ஆனால் அன்று மாலை அவனுக்கு உளவாளிகளிடமிருந்து செய்தி வந்தது.

ஒன்பது லட்சம் வீரர்களோடு கிடுக்கித் தாக்குதலாக மான்ய கேடயத்தையும், வேங்கியையும் ஒருசேர இராஜேந்திரன் தாக்குவான். குடகிலிருந்து மனிஜா கிளம்பிவிட்டான் என்ற செய்தியும் வந்தது.

அவன் திகைத்துப் போனான்.

வேறு வழியில்லை. ஒட்டனை அனுப்புவது போல் அனுப்பிவிட்டு கீழைச் சாளுக்கியத்தை அடுத்த வரிசையில் நிற்க வைத்து விட்டு தன்னுடைய குழுக்களோடு இந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட வேண்டியதுதான். போகும்போது விஷ்ணுவர்தன விமலாதித்தனையும் அழைத்துக் கொண்டு போய் விட வேண்டும். அது ஒரு பகடைக்காய்.

ஒருவேளை நம்மை ஆட்சியில் உட்கார கீழைச்சாளுக்கிய மக்கள் மறுத்தாலும் அவனை மறுக்க மாட்டார்கள். அவனை முன் நிறுத்தி நாம் ஆட்சி செய்யலாம். ஆக அந்த பகடைக்காயை இழப்பது நல்லதல்ல.

ஒன்பது லட்சம் வீரர்கள் மான்யகேடயம் நோக்கி வருவார்கள். என்ன செய்வது, என்ன செய்வது. தவித்தான்.

அன்று இரவு விஷ்ணுவர்தன விஜயாதித்தனை அழைத்தான்.

''நான் சொன்னதும் கிளம்ப தயாராக இருக்க வேண்டும். உன் தாயைப் பற்றி கவலைப்படாதே. என்னோடு பயணப்பட வேண்டும்.

''எங்கே.''

''கல்யாணிக்கு கிள்ம்பி விட வேண்டும்.''

''அப்போது இங்கு போர் இல்லையா.''

''நிச்சயம் போர் இருக்கும்.''

''அதில் நான் இல்லையா.''

''நீ எதற்காக போர் செய்ய வேண்டும். அதை நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''நீங்கள் எப்படி கவனித்து கொள்வீர்கள்.''

''கீழைச் சாளுக்கிய வீரர்களையும், ஒட்ட வீரர்களையும் அனுப்புவேன். இந்த வேங்கியை நான் காவல் காப்பேன்.''

''அப்பொழுது நான் மட்டும் போய்விடலாமா.''

''நிச்சயம் போய்விடலாம். நீ முக்கியம். உன் உயிர் முக்கியம். உன்னைப் பார்த்தால் விமலாதித்தரின் இன்னொரு மகன் இராஜராஜ நரேந்திரன் வெட்டிக் கொல்வான். இராஜேந்திரன் பார்த்தால் தூக்கில் தொங்குவது நிச்சயம். எனவே இவர்கள் கண்ணில் படாமல் நீ போய்விடு. உன்னை நான் காப்பாற்றுகிறேன். இந்த வேங்கியை என்னிடம் விட்டுவிடு. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று சொல்ல,

அவன் துள்ளி குதித்தான்.

மேலைச்சாளுக்கிய மன்னனை கட்டிக்கொண்டு முத்த மழை பொழிந்தான். ஓடிப்போய் அந்தப்புரத்து கதவுகளை சாத்திக் கொண்டான்.

''வாருங்களடி. வாருங்கள். கொண்டாடுவோம்'' என்று கூத்தடித்தான்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன், விமலாதித்தனுடைய இரண்டாவது பிள்ளை. மறுநாள் காலையில் தட்டி எழுப்பப் பட்டு குதிரையில் அமர்த்தப்பட்டு அரை தூக்கத்தோடு நாடு கடத்தப்பட்டான்.

அவன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்று அவனுக்கு மூன்று நாட்களுக்கு பிறகுதான் தெரிந்தது.

* * *

அத்தியாயம்

23

நூற்றி எட்டு அந்தணர்கள் நான்கு நான்கு பேராக வரிசையாக நின்றார்கள். குங்குமம் கலந்த பூசணிக்காய் வெட்டப் பட்டது. ஒரு வீட்டின் கொல்லையில் இருந்த வாழை மரத்தை அடியோடு வெட்டி குலையோடு கொண்டு வந்து வெளியே போட்டார்கள். பலிகள் முடிந்துவிட்டன.

ஆடோ, கோழியோ பலியிடப்படுவதில்லை. உயிர்வதை கூடாது என்பது அவர்கள் கொள்கை. இதற்கு முன்னர் யாகத்தில் பசுக்களையும், கன்றுகளையும் குதிரைகளையும் வெட்டி பலி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதெல்லாம் இல்லை. பௌத்த மதம் தென் இந்தியாவில் பரவிய பிறகு பிராமணர்களுக்கும் அந்த அஹிம்சை உணர்வு அதிகரித்து விட்டது.

அவர்கள் சொல்வது சரிதான். எதற்காக இந்த உயிர்பலி என்று கைவிட்டு விட்டார்கள்.

மரூவூரிலிருந்து வந்த அந்தணர்கள் பெண் குதிரைகளோடே வந்திருந்தார்கள். தஞ்சையிலுள்ள அந்தணர்கள் யாருக்கும் குதிரைகள் இல்லை. அவர்களுக்கு குதிரைகள் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

''இராஜேந்திர சோழரை பார்க்க முடியமா.'' என்று கேட்டதற்கு.

''இப்பொழுது முடியாது. பிறகு எப்போதேனும் பார்த்துக் கொள்ளலாம்.'' என்று பதில் வந்தது.

''பிறகு எப்போதேனும் என்றால்,''

''ஒருவேளை திருவொற்றியூரில் உங்களை சந்திக்கலாம்'' என்று சொல்லப்பட்டது.

''திருவொற்றியூரா, எங்கிருக்கிறது.''

''திருக்கடல் மல்லை தாண்டி திருமயிலை வரும். திருமயிலை, திருவல்லிக்கேணி கடந்து திருவொற்றியூர் வரும். அந்த

இடத்தில் இராஜேந்திர சோழர் பாடி இறங்குவார். அதற்குப் பிறகு கீழைச் சாளுக்கியம் எல்லை வந்துவிடும். அந்த எல்லைக்கு போகும் முன்பு ஒருவேளை சந்திக்கக் கூடும்.''

''இராஜேந்திர சோழர் எப்போது கிளம்பு வார்.''

''இன்னும் இரண்டு நாள் ஆகும்.''

''அப்படியானால் நாங்கள் போய்க் கொண்டே இருக்க வேண்டுமா. அங்கே தங்க வேண்டுமா.''

''நீங்கள் திருவொற்றியூரை தாண்டுவதற்குள் உங்களை அவர் தாண்டி விடுவார். அவருடைய குதிரைகள் வேகமானவை.''

''வேறு எந்த அதிகாரியும் சந்திக்க மாட்டார்களா.''

''ஒருவேளை அரையன் இராஜராஜன் சந்திக்கலாம்.''

''அருண்மொழிப்பட்டர் சந்திக்க மாட்டாரா. அவர் அந்தணர் ஆயிற்றே.''

''அந்தணர், அந்தணர் அல்லாதார் என்ற பிரிவினை எல்லாம் முக்கியம் இல்லை. அந்த காலங்களெல்லாம் மலையேறிவிட்டது. சோழ தேசத்தில் உள்ள அத்தனை பேரும் சோழ தேசத்திற்கு விசுவாசத்தை காண்பிக்க வேண்டும். உங்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக சந்தோஷப்படுங்கள். வாய்ப்புகளை வரவே ஏற்காமலும், வந்த வாய்ப்புகளை ஏற்காமலும் நீங்கள் பன்னெடுங்காலம் தள்ளி இருந்துவிட்டீர்கள். அதனால் தான் இராஜேந்திரசோழருக்கு உங்கள் மீது வெறுப்பு. இது ஒரு நல்ல வாய்ப்பு. காசிக்கு போனது போலும் ஆயிற்று. அரசாங்க காரியம் செய்தது போலவும் ஆயிற்று.''

''என்ன விசாரிக்க வேண்டும். என்ன தகவல் அனுப்பி வைக்க வேண்டும்.''

''நீங்கள் நடந்து போகும்போதே மடக்கப்பட்டு கேள்வி கேட்கப்படுவீர்கள். காசிக்கு நீங்கள் யாத்திரை போகிறீர்கள் என்று சொன்னால் உங்களை ஒன்றும் சொல்லமாட்டார்கள். அந்தணர்களா என்று ஒருவேளை அங்குள்ள அந்தணர்கள் சோதிக்கலாம். அப்படி சோதித்தால் உங்களுக்கு பதில் சொல்ல முடியும் அல்லவா.''

''அய்யா ஓர் அளவுக்கு மேல் இழிவாக நடத்தாதீர்கள்.'' தலைமை அந்தணர் சொல்ல,

''சரி, சரி, மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் எல்லா இடங்களிலும் ஜாக்கிரதையாகப் போய்வர வேண்டுமே என்ற எண்ணத்திலே கேட்டேன். இது தாண்டி நீங்கள் காசிக்கு போகும்போது வழியில் ஊரினுடைய நிலைமை என்ன, மக்களினுடைய நிலைமை என்ன என்பதை பேச்சுக் கொடுத்துப் பாருங்கள்.''

''அதுதவிர கீழைச்சாளுக்கியத்தில் பல்வேறு இடத்தில் நம்முடைய ஒற்றர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உங்களை சந்திப்பார்கள். உங்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து ஓலை நறுக்குகள் கொடுப்பார்கள். உங்களுடைய வேத ஓலைச்சுவடிகள் இருக்குமல்லவா அவைகளுக்கு நடுவே இதை பொறுத்தி வைத்துக் கொண்டு அரசர் எங்கிருக்கிறார் என்று விசாரித்து வந்துவிடுங்கள்.

''உங்களுக்கு அறுபது குதிரைகள் தயாராக இருக்கின்றன. கயிறு சேணம் உடையவை. கயிறு கடிவாளம் உடையவை. அவைகளை ஓட்டுவது மிக எளிது. மர ஆசனம் போட்டு ஏறி நின்று பிறகு காலை தூககி குதிரையின் மீது போட்டுக் கொள்ளுங்கள். சரியாக உட்கார்ந்து கொண்டால் குதிரை சரியாக நடந்து கொள்ளும். எப்படி உட்காருவது என்று ஒரு அரைநாழிகையில் உங்களுக்கு தெரிந்துவிடும். சரியாக உட்கார்ந்தால் குதிரைக்கும் நோவு இருக்காது, உங்களுக்கும் நோவு இருக்காது. நீங்கள் சரியாக உட்காரவில்லை என்றால் நீங்கள் இறங்கிய பிறகு குதிரை தரையில் படுத்துப் புரளும். அப்படி உங்கள் குதிரை தரையில் படுத்துப் புரண்டால் அந்த குதிரைக்கு முதுகு வலி இருக்கிறது என்று அர்த்தம். மறுபடியும் உங்கள் இருக்கையை சரி செய்து கொண்டு நீங்கள் சரியாக உட்காரப் பழகுங்கள். உதாரணமாக குதிரையினுடைய நடைக்கு ஏற்ப உங்கள் உடம்பு அசைய வேண்டும். குதிரையினுடைய அசைவுக்கு எதிர்பதமாக அசைந்தால் அது குதிரைக்கு தொந்தரவாக இருக்கும். குதிரைக்கு அது பிடிக்காது.''

''நாங்கள் பாட்டுக்கு வேத பாடங்கள் படித்துக் கொண்டிருந்தோம். ஏதேதோ கற்க வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது.''

''பிரச்சனை என்று வந்த பிறகு அலுத்துக் கொள்ளாதீர்கள். பழைய விஷயங்களை பேசாதீர்கள். காசிக்கு போவது என்பது நாம் நினைத்துப் பார்த்தோமா. அரசாங்க செலவில் போகிறோம். இன்னொரு விஷயம் நாம் மறந்துவிட்டோம். நாம் வேத விஷயங்

களையே பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர வேதங்களை சொல்லிக் கொண்டிருக்கிறாமே தவிர வேறெதுவும் செய்வதில்லை.

கால பைரவர் உபாசனை நாம் செய்திருக்க வேண்டும். அது நம்மிடம் இருந்து நழுவிப் போய்விட்டது. சோழ தேசம் முழுவதும் கால பைரவர் உபாசனை நடக்கிறது. எல்லா கோவில்களிலும் கால பைரவர் மிக முக்கியமாக இருக்கிறார். இப்போது அதைவிட சாக்த உபாசகம் அங்கங்கே வரத் துவங்கிவிட்டது. மகாகாளி, துர்கை என்று பல பெயரில் வணங்குகிறார்கள். விஜயாலய சோழன் காலத்தில் தூமாவதியை நிசும்பசூதனி என்று நிறுத்திவிட்டான். அப்படி பல்வேறு விஷயங்களை உபாசனை செய்வதால் தான் சோழர்கள் பலம்மிக்கவர்களாக, வீரமிக்கவர்களாக, எப்போதும் வெற்றி பெறுபவர்களாக இருக்கிறார்கள்.

இது நமக்கு ஒரு நல்ல அனுபவம், அரசாங்கத்துக்கு ஒத்துப்போனது போலவும் ஆயிற்று, காசிக்கு போனது போலவும் ஆயிற்று.''

''அய்யா. நடுவழியில் நாம் உளவு பார்க்க வந்திருக்கிறோம் என்று தெரிந்து, நம்மை நையப் புடைத்தால் என்ன செய்வது.''

''உளவுக்காக வந்திருக்கிறோம் என்று எழுதியா ஒட்டிக் கொண்டிருக்கிறோம். நாம் காசியாத்திரை போகிறோம். நடுவிலே தென்படுபவற்றை அங்குள்ள உளவுக்காரர்கள் சொன்னால் நம்மில் ஒருவர் அங்கிருந்து பிரிந்து மீண்டும் அரசரை நோக்கி பயணப்பட வேண்டும். நாம் எடுத்துப் போகும். செய்திகளை அங்குள்ள உளவுக்காரர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.''

''யார் உளவுக்காரன் என்று எப்படித் தெரியும்?''

''அதற்கென்று சில சமிக்ஞைகள் இருக்கின்றன.''

''என்னென்ன?''

''உங்களிடம் சொல்லக்கூடாது. உங்களிடம் என்னைப் பற்றி விசாரித்தால் அவர்களை என்னிடம் அனுப்புங்கள். நான் பார்த்துக் கொள்கிறோன்.''

''அப்படியானால் இந்த யாத்திரைக்கு நீங்கள் மட்டும் போதாதா. உங்களைப் போல் அந்தணர்கள் பத்துபேர் போதாதா. நூற்றி எட்டு பேர் எதற்கு?''

''பத்துபேர் போனால் சந்தேகம் வரும். நூற்றி எட்டு பேர் அந்தணர்கள் போனால் எந்த சந்தேகமும் வராது. நம்மை சோழ தேசம் என்று கூட சொல்லாமல் தொண்டைநாடு என்று சொல் வதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆக இந்தக்கணம் முதல் நாம் எல்லோரும் தொண்டைநாட்டு அந்தணர்கள். சோழ தேசம் பற்றியும் நமக்குத் தெரியும்.''

''இப்போது எதிரி அரசர்கள் நம்மை மடக்கி சோழ தேசம் பற்றி சொல் என்று சொன்னால்?''

''என்ன விவரம் வேண்டுமோ அத்தனையும் சொல்லலாம். ஒரு தவறும் இல்லை. என்ன விவரங்கள் நமக்குத் தெரியும். நன்றாக நெல் விளைகிறது. நதி நீர் நன்றாக பொங்குகிறது. காவிரியில் வெள்ளம் சுழித்து ஓடுகிறது. காற்று நன்றாக வீசு கிறது. வாணிபம் நன்றாக நடைபெறுகிறது. என்று சொல்வோமே தவிர வேறு என்ன இருக்கிறது.''

''யானைப்படை என்றால் தெரியாது. குதிரைப்படை என்றால் தெரியாது. காலாட்படை என்றால் தெரியாது. ஆனால் படைகள் எல்லாம் இருக்கின்றன. முன்னும், பின்னும் நகருகின் றன. எப்பொழுதும் தஞ்சை பரபரப்பாக இருக்கிறது. தொண்டை நாட்டிலும் அந்த பரபரப்பு இருக்கிறது. என்று சொல்லி கொள் ளலாமே தவிர வேறு எதுவும் சொல்லுவதற்கு நம்மிடம் விஷயம் இல்லை.''

''ஆக, மிகவும் பயந்து சாகவேண்டாம். ஓரளவு தெம்பா கவே, கம்பீரமாகவே நடப்போம்.''

அவர்கள் கிளம்பத் தயாரானதும் அவர்கள் வீட்டுப் பெண் கள் எல்லாம் கதறி அழுதார்கள். அந்த அந்தணர்களுக்கும் அழுகை வந்தது. எல்லாப் பெண்மணிகளும் கையில் அரிசி எடுத்து வந்து அந்த கூட்டத்தை சுற்றினார்கள். தங்களுடைய அந்தணர்களைத் தேடி அவர்கள் தோளுக்கருகே தொங்கவிடப்பட் டிருக்கின்ற பாத்திரத்தில் அந்த அரிசியைப் போட்டார்கள்.

இது வாய்க்கரிசி. கடைசிபிடி, போய் வரும் வரைக்கும் வருவாரா, இல்லையா என்று தெரியாது. ஆக நன்றாகப் பார்த்துக் கொள். நன்றாக விழுந்து வணங்கிக் கொள். என்று எல்லோரும் சொல்ல அந்ததந்த பெண்மணிகள் மிகவும் கதறலுடன், விழுந்து வணங்கி வாயைப் பொத்திக் கொண்டு வீட்டுக்குள் ஓடினார்கள்.

அந்த கிராமமே வாய்விட்டு அழுதது. அந்தணர்கள் பைரவ உபாசனையை இப்போதே ஆரம்பிக்க வேண்டும் என்று பேசி அந்த பைரவ உபாசனைக்கு உண்டான மந்திரத்தை ஜெபிக்க ஆரம்பித்தார்கள்.

முதலில் கணபதி மந்திரம் சொன்னார்கள். கணபதி மந்திரம் சொன்ன பிறகு வேதத்திலிருந்து சில வரிகள் சொன்னார்கள். பிறகு கால பைரவர் மந்திரம். என்று ஒருவர் உரத்த குரலில் சொல்ல,

''ஓம் நமோ பகவதே.
காலாய கோராய வஜ்ர தனுஷ்டாய சத்ரு நாசனாய
சர்வ பூதாத்மனே ஹூம்பட் ஸ்வாஹா''

என்று உரத்த குரலில் மந்திரம் சென்னார்கள்.

சத்ரு நாசமடைய வேண்டும் என்று வேண்டினார்கள். சத்ரு நாசமடைய வேண்டும் என்பதற்காக பயணப்படுகிறோம் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்களுக்கு துக்க மாகவும் இருந்தது. சந்தோஷமாகவும் இருந்தது.

அவர்கள் குதிரை ஏறுவதற்கு சிரமப்பட்டார்கள். கால் வீசி ஏறி மறுபக்கம் பொத்தென்று விழுந்தார்கள்.

கீழே விழுந்து குதிரையின் வயிற்றுக்கு நேராக ஒருவர் படுத்துக் கொண்டு ஐயய்யோ என்று கத்தினார். குதிரை சிறிதும் கவலைப்படாமல் பக்குவமாக நகர்ந்து கொண்டது.

''உங்களை குதிரை மிதிக்காதய்யா. மிதிக்கக்கூடாது என்று குதிரைக்கு தெரியும். ஏன் பயப்படுகிறீர்கள். இவ்வளவு உரக்க குதிரையிடம் பேசாதீர்கள். மிருதுவாக, நிதானமாக பேசுங்கள்.''

''குதிரையிடம் பேசுவதா, என்ன பேசுவது.''

''அடேய் நன்றாக இருக்கிறாயா'' என்று கேட்க வேண்டும்.

''யாரை?''

''குதிரையை.''

''தலை எழுத்து. யாரிடமும் பேசக்கூடாது என்று கடந்த பத்து நாட்களாக மௌன விரதம் இருந்தேன். எல்லாம் போயிற்று. கடைசியில் குதிரையிடம் வந்து பேச வேண்டும் என்று முடிந் திருக்கிறது.

ஏ. கழுதை நீ என்னை ஒழுங்காக சுமக்க வேண்டும்.''

''இந்த பேச்சு வேண்டாம். குதிரையை கழுதை என்று சொன்னால் குதிரைக்குத் தெரிந்து போகும்.''

''நிச்சயமாக வா.''

''சர்வ நிச்சயமாக.''

''அடேய். குதிரை மன்னித்து கொள்ளப்பா. நான் இனிமேல் உன்னை கழுதை என்று சொல்ல மாட்டேன்'' என்று சொல்ல மறவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

''யுத்தம் என்று சொன்னால் என்ன பயம் இருக்கிறது உங்க ளுக்கு. எவ்வளவு மிரள்கிறீர்கள். அதே நேரம் கோவிலுக்கு வந்தால் நீங்கள் நெஞ்சு நிமிர்வதும், கைவீசி நடப்பதும், உரத்த குரலில் பேசுவதும் என்ன அட்டகாசமாக இருக்கிறது. அமைதி யான வாழ்க்கை காலத்தில் தான் நீங்கள் அம்மாதிரி பேச முடியும். நீங்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்றால் நாங்கள் போர் முனையில் அடிபட்டு குத்துயிரும், குலையுயிருமாய் இருக்க வேண்டும்.''

''தம்பி, இவ்வளவு வேகமாக பேசுகிறாயே. ஒன்று புரிந்து கொள். அந்தணர்க்கு எதிராக ஒரு அரசாங்கம் இயங்கினால் அந்த அரசாங்கம் ரணப்படும் என்று ஞாபகம் வைத்துக் கொள்.''

''போதும் நிறுத்துங்கள். யாரிடம் என்ன பேசவேண்டும் என்று தெரிய வேண்டாமா. சாபம் இடுவதற்கு இதுவா நேரம். யாரை நோக்கி சாபம் இடுகிறீர்கள். ஓங்கி ஒரு அறைவிட்டால் அந்த சாபம் விடுகின்ற வாய் என்னவாகும்.''

''எந்த நேரத்தில் பேச வேண்டும், எவ்வளவு பேச வேண் டும், எப்படி பேசவேண்டும் என்று தெரியாவிட்டால் நீங்கள் அந்தணரே இல்லை. வெறும் ஆவேசம் மட்டும் இருந்து பய னில்லை. வீட்டை விட்டு பிரிகிறோமே என்ற துக்கத்தில் கண்ட படி உளறாதீர்கள். கத்தி கழுத்துக்கு வந்து விட்டது. எதிர்கொள்ள பழகுங்கள். சமாதானமாக, அமைதியாக போங்கள். இது நல்ல விஷயம். நான் மறுபடியும் சொல்கிறேன். இது நல்ல விஷயம்.''

''காசிக்கு போவது என்பது எப்பேர்பட்ட கொடுப்பினை, காசிக்கு போய் திரும்புகிறோம் என்றால் எப்படி இருக்கும் வர வேற்பு. ஜனங்கள் எப்படி சூழ்ந்து கொள்வார்கள். எத்தனை

விதமான கதைகள் சொல்லலாம். உதாரணத்திற்கு கங்கை எப்படி இருக்கிறது என்று கேட்டால் நாம் என்ன பதில் சொல்வோம்.''

''ஆறு பொங்கி ஓடுகிறது. நான் இக்கரைக்கும் அக்கரைக்கு மாக போய் வந்தேன். என்று சொல்லாம்.''

''இக்கரைக்கு அக்கரைக்கு என்றால்?''

''ஒரு பதினைந்து துடுப்பு போடவேண்டியிருக்கும்.''

''இல்லை. கங்கைக்கு, எதிர்கரையே தெரியாது. அவ்வளவு அகலம்.''

''உங்களுக்கு யார் சொன்னது.?''

''என் தகப்பனார் சொன்னார்.''

''ஆமாம். ஆமாம், இவர் தகப்பனார் போய் வந்திருக்கிறார்.''

''அதனால்தான் நீங்கள் ஆவலாக இருக்கிறீர்களா.''

கங்கைக்கு போக வேண்டும் என்ற ஆவல் யாருக்கு இல்லை யென்று சொல்லுங்கள். வடக்கே இருக்கிறவர்களுக்கு இராமேஸ் வரம் வரவேண்டும் என்ற ஆவல், தெற்கே இருக்கின்ற நமக்கோ கங்கையை பார்க்க வேண்டும் என்ற ஆவல்.

எதனால் அந்த ஆவல், தொலைதூரம் என்பது மட்டுமல்ல. நம்முடைய புராணங்களிலெல்லாம் கங்கை முக்கியமான இடம் வகிக்கிறது.''

''அப்படி இராமேஸ்வரம் இருக்கிறதா?''

''மிக நிச்சயமாக வடக்கே இருப்பவர்கள் ராமன் நடந்த வழி எது என்று பார்க்கிறார்கள். அவர்களாக ஒரு வழி அமைத்துக் கொண்டு மலையாள தேசத்தைச் சுற்றி பிறகு அங்கிருந்து தெற்கே பாண்டிய தேசத்தின் ஊடாகப் போய் மதுரையை பார்த்து விட்டு மதுரையிலிருந்து இராமேஸ்வரம் போகிறார்கள்.''

''இராமேஸ்வரத்தில் உட்கார்ந்து பித்ருக்களுக்கு நீர்வார்க் கிறார்கள். ஒவ்வொரு வடஇந்திய வணிகனும் கொண்டு வந்து காசு கொட்டுகிறார்கள்.''

''இராமேஸ்வரம் அந்தணர்கள் மிகச் செழிப்பாக இருக் கிறார்கள்.''

''என்ன... தினம் தினம் பிண்ட சோறு சாப்பிட வேண்டும். ஒரு வாரத்திற்கு ஒரு சிரார்தம் தான் என்று நாம் வகைப்படுத்திக்

கொண்டிருக்கிற மாதிரி அவர்களால் வகைப்படுத்திக் கொள்ள முடியாது.''

''கழஞ்சுகள் வருகிறதல்லவா. எப்படி வகைப்படுத்திக் கொள்ள முடியும்.''

''இன்னொரு விஷயமும் உங்களுக்கு சொல்ல விரும்பு கின்றேன்.'' மருவூர் தேசத்து அந்தணருக்கு தலைமை வகித்தவர் தஞ்சாவூர் வைதீகரை நோக்கி பேசினார்.

''எங்கள் வீட்டில் நல்ல சகுனங்கள் ஆகியது. குங்குமம் சிதறியது. வாசலில் கழுதை கத்தியது. பசுமாடு உள்ளேறி வந்து மூத்திரம் போயிற்று. இன்று காலை எங்களுக்கெல்லாம் கருட தரிசனம் ஆயிற்று.'' என்று சொல்ல,

எல்லோருமே கருடனை பார்த்தது போல கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

''அப்புறம் என்ன பயம். தாராளமாக போய் வரலாம். ஒரே ஒரு செய்தியை என்னால் மறக்க முடியவில்லை.''

''என்ன அது?''

''இராஜராஜசோழன் காலத்தில் ஒரு அந்தண சேனாதிபதி பிரம்பால் அடிபட்டு இறந்தான். அதை என்னால் மறக்கவே முடிய வில்லை. அவன் மனைவி அழுததும், குழந்தைகள் தவித் ததும், இராஜராஜர் நேரே வந்து ஆறுதல் சொன்னதும் இன்னும் என் மனதில் நிற்கின்றன. அதே போல யாரும் அடிப்பார்களோ என்ற பயம் இருக்கிறது.''

''அவர் சேனாதிபதி, இடுப்பில் வாள் தரித்தவர். நெஞ்சில் கவசம் உள்ளவர். போர் முனைக்கு போய் வெட்டி எறிந்தவர். நாம் அப்படி இல்லை நம்மை யாரும் அடிக்கமாட்டார்கள். பயப் படாதீர்கள்.''

''இப்படி எதிரிகள் நம்மை தாக்காமல் இருப்பதற்கு இன் னொரு மந்திரம் இருக்கிறது.'' இப்பொழுது வேறொரு மருவூர் அந்தணர் பேசினார்.

''என்ன மந்திரம் அது?''

''ப்ரத்யங்கிரா தேவி,
ஓம் ஷம் பக்ஷஸ் ஜ்வாலா ஜிக்வே கராள
த்ரம்ஷ்ட்ரே ப்ரித்யங்கரே ஹூம் பட்ஸ்வாஹா.''

அந்தணர் கூட்டம் மெல்ல தஞ்சாவூர் அரண்மனையை அடைந்தது. இராஜேந்திர சோழரை தரிசித்து விட்டு போக வேண்டும் என்று விண்ணப்பித்தது.

''இருங்கள்.'' என்று வாயிற்காவலர்கள் கை உயர்த்தினார்கள். சட்டென்று பின்னால் எக்காளம் கேட்டது. அந்தணர்கள் குதிரைகளை பின்னால் இழுத்து வழிவிட்டார்கள். முன்னே மெய்க்காவல் வீரர்கள் போக இடதும், வலதும் மெய்க்காவல் வீரர்கள் வர நடுவில் கம்பீரமாய் தன் கருப்பு குதிரையில் பிடறி பறக்க மாமன்னர் இராஜேந்திரர் வேகமாகப் போனார்.

தங்களை கண்டு நிற்பார் என அந்தணர்கள் நினைத்தார்கள். ஆனால் குதிரைப் படை மின்னலெனத் தாண்டியது.

அந்தணர்கள் ஏமாற்றமானார்கள். சட்டென்று மெய்க்காவல் படையை கலைத்துவிட்டு இராஜேந்திர சோழர் தன் குதிரையை மட்டும் திருப்பிக் கொண்டு வந்தார். அவருக்கருகே ஒரே ஒரு மெய்க்காவல் படை வீரன் மட்டும் வந்தான். அவர்கள் இருவரும் அந்தணர்களுக்கு நடுவே வந்து நின்று கொண்டார்கள்.

இராஜேந்திர சோழர் கை கூப்பினார்.

''இந்த மஹா சதஸுக்கு என்னுடைய வணக்கம்.

சோழ தேசம் செழித்திட நீங்கள் செய்யும் பிரார்த்தனைகள் எங்களை உற்சாகமடையச் செய்கின்றன. இந்த க்ஷணம் கூட உங்களை போக வேண்டாம் என்று சொல்லிவிடலாமா என்ற எண்ணம் எனக்குள் இருக்கிறது. ஆனால் நீங்கள் கிளம்பி நிற்கின்ற உற்சாகத்தைப் பார்த்தால் போய்விட்டு வாருங்களேன் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.''

''நெடுந்தூரம் பயணப்படுவது பற்றி உங்களில் சிலருக்கு கலவரம் இருக்கலாம். ஒரே ஒருவேளை உணவு எடுத்துக் கொள்ளுங்கள். நன்றாக சாப்பிடுங்கள். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இரவு நேரம் பாலோ, அல்லது அரிசி கஞ்சியோ குடித்துவிடுங்கள். மூன்று வேளைகள் சாப்பிட்டால்தான் பயணம் களைப்பாக இருக்கும். வழியில் உள்ள காய்கறிகளை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள். இனாமாக ஒருபொழுதும் யாத்திரையின் போது வாங்காதீர்கள். உங்களுக்கு தேவையான காசு அருண்மொழிப்பட்டன் கொண்டு வந்து கொடுப்பார். நீங்கள் செய்ய வேண்டியது எதுவும் இல்லை. காசிக்கு பயணப்படுவது. நீங்கள் தீர்த்த யாத்திரை செய்வதே எனக்கு பெரிய பலம்.''

''நீங்கள் தீர்த்த யாத்திரை செய்து இராஜராஜ சோழருக்கும், அவரது மனைவியருக்கும், என்னுடைய தாத்தாவிற்கும் நீங்கள் நீர் வார்த்தீர்கள் என்றால், சோழ தேசம் செழிப்புறும்.''

உங்களின் முன்னோர்களுக்கும், சோழதேச வாசிகளுக்கும் நீர் வார்த்தீர்கள் என்றால் அதுவே எங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சொல்லும். உண்மையாக, மிக உண்மையாக, மிகமிக உண்மையாக இதை நீங்கள் செய்ய வேண்டும். கங்கைக் கரையில் நின்று இராஜராஜருக்காக மூன்று கைகள் நீர் உயரத் தூக்கி ஒரே சமயத்தில் நீங்கள் இறைத்தீர்கள் என்றால் இராஜராஜர் மிகவும் மகிழ்வார். இந்த தேசம் வெற்றி பெறும். நமக்கு எந்த தொல்லைகளும் இருக்காது.''

''நான் மிகப் பெரிய மன்னனாக வர வேண்டும் என்ற பேராசையில் இந்த படை எடுப்பு நடக்கவில்லை. இடையறாது இடையறாது நம்மை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறார்கள். மேலைசாளுக்கியத்திலிருந்து வருகின்ற சாளுக்கிய வீரர்கள், கீழைச் சாளுக்கியத்திலிருந்து வருகின்ற சாளுக்கிய வீரர்கள் ஆகியோர் மிக மோசமாக நடந்து கொள்கிறார்கள். அதை தடுப்பதற்காகவே இதை செய்யப் போகிறேன். வேங்கி வரை எந்த தொந்தரவும் இருக்காது, பிறகு இருக்கலாம். ஆனால் எனக்குதான் இருக்குமே தவிர உங்களுக்கு இருக்காது, உங்களுக்கும், எனக்கும் நான்கு நாட்கள் இடைவெளி இருக்கும்.''

''கண்ணில்பட்ட எல்லா காட்சிகளையும் நீங்கள் ஓலையில் எழுதி எங்களுக்கு அனுப்பலாம். நாங்கள் அதை புரிந்து கொள்ள முயற்சிக்கிறோம். உடல் தளர்ந்தவர்களை ஊர் சேர விரும்புகிறவர்களை நீங்கள் திருப்பியும் அனுப்பலாம். அவர்கள் மூலமாகவும் நாங்கள் தெரிந்து கொள்கிறோம்.

ஒரு வண்டி அரிசி, நூறு கழஞ்சு பொன் உங்களுக்கு கொடுக்கிறேன். நூற்றி எட்டு பேர் வந்துவிட்டீர்கள் என்பது எனக்கு மிகவும் நெகிழ்ச்சியை தருகிறது. அந்தணர்களைப் பற்றி எனக்கு ஒரு கசப்பான எண்ணம் இருந்தது உண்மைதான். ஆனால் இப்போது இல்லை. அறவே இல்லை. உங்களை எல்லாம் மறுபடி வணங்குகின்றேன். இந்த மாகா சதஸ்ஸிற்கு எனது வணக்கம். இங்கு குழுமி இருக்கின்ற அறிஞர்களுக்கு என் வணக்கம். தேவர்களுக்கு ஒப்பான பிராமணர்களுக்கு என் வணக்கம்'' என்று கைகூப்பினார்.

அந்தணர் கூட்டம் சிலிர்த்தது.

இராஜேந்திர சோழர் பல்லாண்டு காலம் வாழ வேண்டும். மிக நீண்ட தீர்க்காயுசாக இருக்க வேண்டும். அவர் நூறுவயதை தாண்டி வாழ்ந்து அவர் பிறந்த நட்சத்திரத்து சந்திரனை தரிசிக்க வேண்டும் என்றெல்லாம் வாழ்த்தினார்கள். ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். குழந்தைச் செல்வங்கள் பெருக வேண்டும் என்றார்கள்.

சட்டென்று இராஜேந்திர சோழர் விஸ்வநாத ஸ்ரௌதிகளை நோக்கித் திரும்பினார்.

''உங்களை எனக்குத் தெரியும், நாம் சந்தித்திருக்கிறோம். கிருஷ்ணன் ராமனின் இல்லத்தில் இல்லையா'' என்று கேட்க விஸ்வநாத ஸ்ரௌதிகள் முகம் மாறினார். மெல்லிய குரலில் ''ஆமாம்'' என்றார்.

''என்னுடைய பட்டாபிஷேகத்தை நீங்கள் கணித்தீர்கள் அல்லவா. சேனாதிபதி கிருஷ்ணன் இராமன் கணிக்கச் சொல்லி உங்களை அழைத்தாரல்லவா. நீங்கள் அவரிடம் காதோரம் என்னவோ சொன்னீர்கள். அது என்ன என்று நான் கேட்டபோது சொல்ல மறுத்துவிட்டீர்கள். ஆனால் அது என்ன என்பதை கிருஷ்ணன் இராமன் எனக்கு சொல்லிவிட்டார். நீங்கள் சொன்ன செய்தி நான் பட்டம் ஏற்ற ஆறாம் வருடம் எனக்கு மிகப் பெரிய பிரச்சனை வரும். அதைத் தாண்டிவிட்டால் எனக்கு எண்பது வயதுக்கு மேல் ஆயுசு என்றீர்கள். சரிதானே.''

''எப்படி ஞாபகம் வைத்திருக்கிறீர்கள்.'' விஸ்வநாத ஸ்ரௌதி வியந்தார்.

''அந்த ஆறாம் வருடம் இப்பொழுதுதானே. இதுதானே என் ஆறாம் வருடம்.''

''ஆமாம். இதுதான் உங்கள் ஆறாம் வருடம். இந்த வருடத்தில் இன்னும் ஆறு மாதத்திற்கு கடுமையான சோதனைகள் ஏற்படப் போகின்றன. மனதாலும், உடம்பாலும் அதிகம் சிரமங்களை அனுபவிப்பீர். நோய்களும் உண்டாகும். உடன் பிறந்தவர்கள். நெருங்கிய உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் உயிரிழப்பார்கள். அந்த சோகம் உங்களை பற்றிக் கொள்ளும். பல நாட்கள் தூக்கம் இல்லாது இருக்கும். இந்த ஒரு காலகட்டத்தை கோபம் இல்லாமல், பொறுமையாக இறைவழிபாட்டில் மனம்

செலுத்தி தாண்டினீர்கள் என்றால் வெகுநிச்சயம் நீங்கள் எண்பது வயதுக்கு மேல் வாழ்வீர்கள்.'' இருவரும் நகர்ந்து தனியானார்கள்.

''இப்பொழுது சொல்லுங்கள். எண்பது வயது வாழ்வேனா. அல்லது இந்த வருடமே முடிவேனா.''

''வெகு நிச்சயமாக எண்பது வயது வரை வாழ்வீர்கள். நான் நீங்கள் வாழ்வீர்கள் என்பதற்கு அத்தாட்சிகள் சொல்ல முடியும். அதற்கு பிரசன்ன குறிகள் இருக்கின்றன. நீங்கள் எங்களிடமிருந்து விடைபெற்று உங்கள் அரண்மனைக்கு படியேறும் முன்பு உங்களுடைய தோளில் காக்கை எச்சம் விழுந்தால் அல்லது ஏதாவதொரு பறவை எச்சம் விழுந்தால் உங்களுக்கு தீர்க்காயுசு என்பதை என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.''

''வலதா, இடதா.''

''எந்த தோளில் விழுந்தாலும் தீர்க்காயுசு. எச்சம் மேலே பட்டாலே தீர்க்காயுசு. பறவை எச்சம் உங்களுக்கு நல்லது.''

''உறவுகள், நண்பர்கள் இழப்பது சொன்னீர்கள். என்னுடைய முக்கியமான உறவு இப்போதைக்கு இராஜராஜ நரேந்திரன். என்னுடைய தங்கையின் மகன். மருமகன். அவன் இறந்தால், அவன் ஊத்தை அடைந்தால் சோழ தேசம் பாழ்படும். வாரிசு சண்டை அதிகமாகி விமலாதித்தனுடைய இன்னொரு மகனான விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு பட்டம் சூட்டப்படும். பிறகு நமக்கு நிரந்தர தொல்லைகள்தான்.

எனவே இராஜநரேந்திரன் இறக்கக்கூடாது என்று பிரார்த்தனை செய்யுங்கள்.''

''என்ன நட்சத்திரம்.'' அவர் குனிந்து நட்சத்திரத்தைச் சொன்னார்.

கவலையே படாதீர்கள். இந்த நட்சத்திரக்காரர்கள் தீர்க்காயுசாக இருப்பார்கள். இவர்களுக்கு அல்பாயுசு என்பதே இல்லை. ஆனி மாதம் என்றால் குரு நல்ல இடத்தில் இருக்கிறார். குரு நல்ல இடத்தில் இருந்தால் சனியும் வன்மையாகத்தான் இருப்பார். சனியும், குருவும் நன்றாக இருக்கிறார்கள் என்றால் அவருக்கு ஆயுசு பற்றின கவலை இல்லை. ஆனால் அல்லாட்டங்கள் இருக்கும்.''

''மிகவும் வேகமாக கணிக்கிறீர்கள் அய்யா.''

''இது குலப்பாடம். குடும்பப் பாடம்.''

''இன்னொன்று சொல்லட்டுமா. என்னுடைய விஷயம் ஒன்று உங்களை கோபப்படுத்தி இருக்கிறது. நான் அந்தணர் களுடைய நிலங்களை பிடுங்கி வேளாண்வகை நிலமாக செய்து விட்டேன் என்ற வருத்தம் இருக்கிறது. நான் இந்தப் போரில் ஊத்தை அடையாமல் திரும்பி வந்தால் ஐம்பத்தி யோரு கிராமங்களை அந்தணர்களுக்கு நிவந்தங்களாக கொடுக் கிறேன்.

இதை இப்போதே நீங்கள் சொல்ல வேண்டாம். வரி இல் லாமல் செய்கிறேன். இதையும் போய் சொல்ல வேண்டாம். இதை உங்களுக்குள் மௌனமாக வைத்துக் கொள்ளுங்கள்.

நான் திரும்பி வந்தும் உங்களை சந்தித்து எந்தெந்த கிராமங்கள் உங்களுக்கு வேண்டுமென்று நீங்கள் கைகாட்டு கிறீர்ளோ அவைகளை உங்களுக்கு தருகிறேன். இராஜராஜ நரேந் திரனுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்.''

''மிகவும் நல்லது, நிச்சயம் செய்கிறேன். இப்பொழுது எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. உங்களுக்காக சோழ தேசமும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறது. இன்னொரு செய்தி சொல் கிறேன். தயவுசெய்து யோசித்து முடிவு எடுங்கள்.''

''என்ன?''

''உங்களுக்காக யாரும் நவகண்டம் கொடுக்கக்கூடாது.

நவகண்டம் கொடுத்தால் அந்த வீட்டு பெண்மணிகள் அழுதால் அது உங்களுக்கு ஆகாது. அரசருக்காக உயிரை மாய்த்துக் கொண்டாயே என்று ஒரு பெண்மணியும், குழந்தை களும் கதறுவார்கள். அது உங்களை சும்மாவிடாது. எனவே நவகண்டம் யாரும் கொடுக்கப் போகிறேன் என்றால் உடனே ஆட்களை விட்டு அடித்து எறியுங்கள். கூடாது என்று சொல் லுங்கள்.''

''நிச்சயம் செய்கிறேன்.'' அவர்கள் மறுபடியும் ஒருவரை ஒருவர் நோக்கி கை கூப்பினார்கள்.

இராஜேந்திர சோழர் வந்து குதிரையில் தாவி ஏறினார். பிறகு விஸ்வநாதர் ஏறினார். விஸ்வநாதர் மறுபடியும் கைகூப்ப, இராஜேந்திர சோழர் கை உயர்த்தி விடை கொடுத்தார்.

அந்தணர்கள் மெல்ல திரும்பினார்கள்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் அவர்கள் போவதை பார்த்துக் கொண்டே மன்னரையும் கவனித்துக் கொண்டிருந்தார். மன்னர் குதிரை திரும்பிற்று. சிறிது தூரம் எகிறி நடந்தது. சட்டென்று மன்னரின் முதுகில் ஒரு பறவை எச்சம் விழுந்தது.

மன்னர் வேகமாக விஸ்வநாத ஸ்ரௌதிகளை நோக்கி திரும்பினார்.

உங்கள் குலதெய்வத்தின் அருளால், இது உங்கள் தந்தை நிலைநிறுத்திய பெருவுடையாரின் அருளால் இது உங்கள் மூத்தோரின் ஆசீர்வாதம். நீங்கள் தீர்க்காயுசாக இருப்பீர்கள். அதைப் பற்றி கவலையே வேண்டாம். பறவை எச்சம் விழுந்த இடம் வலது பக்கம் முதுகில். மிகச் சிறப்பு. ஆனால் கழுத்திலும் தெறித் திருக்கிறது. அதனால் இடையறாது பயணங்கள் இருக்குமே தவிர உங்களுக்கு வெற்றி என்பது உறுதி'' என்று சொல்லி விஸ்வநாத ஸ்ரௌதிகள் தன்னுடைய குதிரையை திருப்பினார்.

அந்த அந்தணர் குழு மிக உற்சாகமாக கோட்டையை விட்டு கிளம்பியது.

''எங்கு பயணம்?'' என்று ஊர் மக்கள் கேட்க,

''காசிக்கு போகிறோம்'' என்று அந்தணர்கள் சொன்னார்கள்.

''நல்ல நேரம் பார்த்தீர்களாய்யா காசிக்கு போவதற்கு, வழி முழுக்க சண்டையாம். நீங்கள் எப்படி போகப் போறீர்கள்.''

''எங்களுக்கும் சண்டைக்கும் என்ன சம்மந்தம். யாரும் எங்களை ஒன்றும் சொல்லமாட்டார்கள். நல்லபடியா போவோம். போய் வந்து உனக்கு ஒரு கங்கை சொம்பு தருகிறேன்'' என்று சொல்ல, அந்த விவசாயி கை கூப்பினான். விழுந்து குதிரை மண்ணை நெற்றியில் இட்டுக் கொண்டான்.

யார் யாரிடம் என்னென்ன தரவேண்டும். எப்படி பேச வேண்டும் என்று அந்த சோழ தேசத்து அந்தணர்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்திருந்தது.

சோழ தேசத்தின் பசுமையான வயல்கள் அவர்களை வரவேற் றன. சோழ தேசத்தில் கிளைகளாக பிரிந்து போகும் காவிரியை அவர்கள் சந்தோஷமாக பார்த்தார்கள். எல்லா ஆற்றிலும் குதிரையை இறக்கி நீரில் நனைந்தபடி நீரை தலையில் தெளித்த படி வந்தார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஊர் கோவிலுக்கு கங்கை நீர் அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கொண்டார்கள். அப்படி சொன்ன இடத்தை குறித்துக் கொண்டார்கள். மன்னர் வருவார் என்று எதிர்பார்த்த மக்களுக்கு அந்தணருடைய வருகை ஆச்சரியத்தை கொடுத்தது.

''அந்தணர்கள் இப்போது போய் ஏன் காசிக்கு போகிறார்கள்'' என்ன சொல்ல,

''இது உளவுப்படை'' என்று விவரம் தெரிந்த மறவர் சொல்ல, ஜனங்கள் அப்படியா என்று வியந்தார்கள்.

அந்தணர்கள் உளவுப்படையாக வருகிறார்கள் என்று மேலைச்சாளுக்கிய ஒற்றர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் செய்தி அனுப்ப துடிதுடித்தார்கள். செய்தியை அனுப்ப உடன்டியாக ஏற்பாடுகள் செய்தார்கள்.

வாள்முதுகு குதிரைப்படை கிளம்பத் தயாராக இருந்தது உத்தமசோழ மிலாடுடையாரும், இராஜராஜ பிரம்மராயரும். அரண்மனை வாசலில் நின்றார்கள். இராஜேந்திர சோழர் இறங்கி வந்தார். அவர்களும் குதிரை விட்டு இறங்கினார்கள்.

இருவரையும் ஆரத் தழுவிக் கொண்டார்.

''உங்களோடு மருத்துவ வண்டியும் வருகிறதா.''

''ஆமாம்.''

''இரண்டாக பிரிந்து விட்டீர்களா.''

''ஆமாம், என்னுடன் ஒன்று. அரையன் இராஜராஜனுடன் ஒன்று என்று பிரிய வேண்டும்.''

''அப்படியே பிரியும்.''

நீங்கள் வெற்றியோடு திரும்ப என்னுடைய வாழ்த்துக்கள். உங்களை எல்லாம் பார்க்க எனக்கு சந்தோஷம் அதிகமாகிறது. நீங்கள் மட்டும் போனால் போதும், நான் வரவேண்டிய அவசியமே இல்லை என்று தோன்றுகிறது. நீங்கள் வருகிறீர்கள் என்று தெரிந்தவுடனேயே வேங்கிதேசம் கலகலத்துப் போகும். ஜெயசிம்மனும், விஷ்ணுவர்தன விஜயாதித்தனும் இடம் தெரியாமல் ஓடி விடுவார்கள். நீங்கள்தான் தாக்குதலுக்கு உண்டான முதல் படை, மற்ற எல்லா வீரர்களையும் பின் தள்ளி நீங்கள்தான் முன்னேற வேண்டும். உங்களுக்கு பின்னே மருத்துவ வசதி வர வேண்டும். ஒரு

மருத்துவ வசதியை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு நீங்கள் வேங்கிக்குள் புகுந்து துவம்சம் செய்யுங்கள். கீழைச்சாளுக்கிய வீரர்களுக்கு தனியான தலைப்பாகை இருக்கும்.

எனவே, அவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். மேலைச் சாளுக்கிய வீரர்களுக்கு தனியான தலைக் கவசம் இருக்கும். அவர்களை அடித்து நொறுக்குங்கள். ஜெயசிம்மன் கிடைத்தால் கொல்ல வேண்டாம். உயிரோடு பிடித்து வாருங்கள். நான் விசாரிக்க வேண்டும்.

விஷ்ணுவர்தன விஜயாத்தித்தனை மடக்கிப் பாருங்கள். எகிறினால் கத்தியை இறக்கி விடுங்கள். அமைதியாக இருந்தால் அழைத்து வாருங்கள். ஆனால் விஷ்ணுவர்தன விஜயாதித்தன் உங்களிடம் சிக்கமாட்டான்.''

''ஏன் அப்படி சொல்கிறீர்கள்?''

''தந்திரக்காரன் நரி. கேவலபுத்தி உடையவன். அவனுக்கு சண்டை இடுகின்ற தைரியம் இல்லை. வெறும் பெண் மோகத்தில் திளைக்கிறவன். அவனால் எதிர்த்து சண்டையிட முடியாது. எனவே உங்களிடம் சிக்கவே மாட்டான். விமலாதித்தன் என்னிடம் வந்து சரணடைந்தது போல அவன் வேறு யாரிடமாவது சரணடைவான். அனேகமாக வடக்கு பக்கம்தான் ஓடுவான். ஒட்டர்களிடம்தான் சரணடைவான். அப்படி இருப்பினும் நான் அவனை விடாது துரத்துவேன். எனவே விஷ்ணுவர்தன விஜயாதித்தனைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஜெயசிம்மன் முக்கியம். அவன்தான் இங்குள்ள எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம்'' என்று சொன்னார்.

அவர்கள் புரிந்து கொண்டார்கள். தங்களுடைய தாக்குதல் திட்டத்தை பற்றி விவரித்தார்கள். மன்னரை பத்துபடி ஏறச் சொன்னார்கள். அரண்மனை வாசலில் பத்துபடி ஏற இராஜராஜ பிரம்மராயன் உரத்த குரலில் அந்த குதிரை வீரர்களுக்கு கட்டளை இட்டான். முதுகில் இருந்த வாளை சரேல் என்று உயர்த்தி உயரத் தூக்கினார்கள்.

''சோழம் சோழம் சோழம்'' என்று அதை ஆட்டினார்கள். பளபளத்த கத்திகள் வெய்யிலில் மின்னி அந்த இடத்தை பிரகாசமடையச் செய்தன. இராஜேந்திர சோழருக்கு மிகப் பெரிய சந்தோஷம் ஏற்பட்டது.

''நீங்கள் இருக்கின்ற ஒரு விஷயம் போதும், எனக்கு கவலையே வேண்டாம்'' என்று அவர்கள் இருவரையும் இறுக்கமாக அணைத்துக் கொண்டார்.

தங்களுடைய தளபதிகளை மன்னர் தழுவிக் கொள்வது தங்களையே தழுவிக்கொள்வது போல என்று அந்த வீரர்களுக்கு புரிந்தது. மறுபடியும் சோழம் சோழம் சோழம் என்று கத்தினார் கள். அந்த நீண்ட கத்திகள் இந்தமுறை இன்னும் பிரகாசமாக சூரிய ஒளியில் மிளிர்ந்தன.

* * *

அத்தியாயம் 24

"அரிசியா, யாரிடம் இருக்கிறது அரிசி. எங்கே இருக்கிறது அரிசி. எதற்காக அரிசி. ஊரில் எல்லோரையும் விட்டு விட்டு என்னிடம் வந்து காசு தருகிறேன். அரிசி கொடு. இது இராஜேந் திரர் கட்டளை என்று சொல்லுகிறாயே எத்தனை திமிர் உனக்கு. வேளாளன் என்றால் என்ன வேண்டுமானாலும் ஆடலாம் என்று நினைக்கிறாயா. அந்தணர்களுக்கு இழிவு காலம் என்றால் நீங்கள் உயர்ந்துவிடுவீர்களா. எங்கள் தலையில் உட்கார்ந்து விடுவீர்களா. ஜாக்கிரதை. இங்கு உங்களால் வாழ்க்கை நடத்த முடியாது. அப்படி என்னால் செய்துவிட முடியும். என் சாபத்தை பெற்றுக் கொள்ளாதே" என்று உரத்த குரலில் அந்த அந்தணர் சொல்ல,

தெருவில் நடந்து போகின்றவர்கள் நின்று கவனித்தார்கள். சீராளன் அவர் எதிரே கைகட்டி நின்றான்.

"நீங்கள் உரத்த குரலில் பேசுவதாலேயே நீங்கள் பேசுவது சத்தியமாகி விடாது. நீங்கள் யாரிடம் மறுக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்."

"உன்னிடம்தான் மறுக்கிறேன்."

"இல்லை, நான் அரிசி கேட்கவில்லை. அரிசி கேட்பது சோழ தேசத்து மாமன்னர் இராஜேந்திர சோழர். இந்த தொண்டை நாடும், நடு நாடும் அவருக்கு கட்டுப்பட்டது. அவருக்கு கப்பம் செலுத்துவது. இங்குள்ள சிற்றரசர்கள் அவருக்காக எதுவும் செய்ய தயாராக இருக்கிறார்கள். நீங்கள் அரிசி தர மறுத்தால் அதுபற்றி இராஜேந்திர சோழனிடம் முறையீடு செய்யப்படும். அதுமட்டுமல்ல. ஏகவசனத்தில் பேசினீர்கள் என்றும் சொல்லப் படும்."

"இராஜேந்திர சோழரை ஏகவசனத்தில் நான் பேசவில் லையே."

"இராஜேந்திர சோழரின் பிரதிநிதியாக வந்திருக்கிற என் னிடம் ஏக வசனத்தில் பேசினீர்கள். அது இராஜேந்திர சோழரை எதிர்த்துப் பேசியது போல."

''அடடா. உங்கள் முன்பு கைகட்டி நிற்க வேண்டுமா. வாருங்கள் வாருங்கள் என்று பணிய வேண்டுமா.''

''ஆமாம். நான் அரசரின் பிரதிநிதி. அவரிடமிருந்து கழஞ்சுகள் பெற்றுக் கொண்டு வந்து உங்களிடம் அரிசி வாங்குவதற்காக வந்தேன்.''

''வேறு எங்காவது போய் கேள். என்னால் தர முடியாது.''

''இல்லை. அரசர் திருக்கடல்மல்லையிலிருந்து நேரே திருமயிலை வருகிறார். இங்கு அவருக்கு உணவு போட அரிசி வேண்டும். உங்களிடம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஐந்து குதிர் அரிசி வைத்திருக்கிறீர்கள். அதில் ஒரு குதிரை உங்களுக்கென்று வைத்துக் கொண்டு. மிச்சத்தை எங்களுக்குத் தர வேண்டும். இது அரச கட்டளை.''

''மீறினால் என்ன செய்வாய்?''

''இராஜேந்திர சோழருடைய ஆட்சி காலத்தில் அந்தணர்களுடைய வாழ்க்கை சுபீட்சமாக இல்லை என்பதை அறிவீர்கள். இப்படி பேசினீர்கள் என்று தெரிந்தால் அவர் எதுவும் செய்யக் கூடும். ஏன் நீங்கள் பிரம்பாலும் அடிவாங்கக் கூடும். இராஜேந்திர சோழர் பிரம்படிக்காரர் என்பது உங்களுக்கு தெரியும் தானே.''

''என்னடா மிரட்டுகிறாய்.''

''மறுபடியும் ஏக வசனம். இது கடைசி முறை, இன்னொரு முறை ஏகவசனத்தில் பேசினால்.''

''என்ன செய்வாய்?''

''நானும் ஏகவசனத்தில் பேசுவேன்.''

''என்னையா, என்னையா. உன்னைவிட எவ்வளவு வயசு அதிகம் தெரியுமா.''

''அறிவில்லையே, வயது அதிகமானால் என்ன யாரிடம் பேசுகிறோம் என்ற தெளிவில்லையே. முழு முட்டாளாக அல்லவா இருக்கிறீர்கள்.'' சீராளான் வேகமாகச் சீறினான். அவனுக்கு சீறும்படி அருண்மொழி சொல்லிக் கொடுத்தது ஞாபகம் வந்தது.

''சீராளா, என்ன ஆயிற்று உனக்கு பெட்டிப் பாம்பாக இருந்தாய், ஒருமுறை சோழ தேசம் போய்விட்டு வந்தால் நீயே மன்னனாகி விட்டதாக நினைப்பா. இந்தப் பகுதிக்கு நீதான் சிற்றரசனா.''

''அப்படி ஒரு நிலைமை வந்தாலும் வரும்.''

''ஏன் எழுதிக் கொடுத்து விட்டார்களா.''

''இல்லை. எழுதிக் கொடுத்தது உங்களிடமிருந்து அரிசி வாங்கச் சொல்லி ஓலை.''

''என்னிடம் அரிசி வாங்கச் சொல்லி அரசர் ஓலை கொடுத் தாரா.''

''ஆமாம், தொண்டை மண்டல நில உடைமையாளர் அனை வருக்கும் பொதுவாக இராஜேந்திர சோழர் யுத்தத்திற்காக அரிசி யும், பருப்பும் விலைக்கு தரவேண்டும். இது அரச கட்டளை. என்று எழுதி கொடுத்திருக்கிறார். இந்த ஓலையை படித்துப் பாரும்.'' எடுத்து நீட்டினான்.

அவர் படித்துவிட்டு முகம் சிவந்தார்.

''இது மூல ஓலையல்ல. இது பிரதி ஓலை. மூல ஓலை தனியாக வைத்திருக்கிறேன். இதை கிழித்துவிட்டு கொக்கரிக் காதீர். அதற்கும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.''

''என்ன நடக்கும்.''

''பிரம்படி வாங்கலாம். இராஜேந்திர சோழர் பிரம்படி உலக மெல்லாம் பிரசித்தம், ஒருமுறை வாங்கிப் பாருங்கள்.''

''சீராளா. அமைதியாக இரு.'' அடுத்த அந்தணர் உள்ளே புகுந்தார். அவர் நிலைகொள்ளாமல் பேசுகிறார். இதுவரை அவர் அரிசி விற்றதே இல்லை என்பதாகச் சொல்லுகிறார். ஆனால் அது பொய், அவருக்கும் ஒரு குதிர் அரிசியே அதிகம். மிச்சம் இருக்கின்ற நான்கு குதிர் அரிசியும் அவர் விற்பதற்குத்தான் வைத்திருக்கிறார். ஏன் இப்படி பேசுகிறார் என்று தெரியவில்லை. அவருக்கு அரசாங்கத்தின் நிலைமையும், அரசருடைய கோபமும் புரியவில்லை.''

''ஏற்கனவே அந்தணர்கள் அரச கோபத்திற்கு ஆட்பட்டு ஒரு ஓரமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். வேளாளர்கள் தான் முக்கியம் என்று தெள்ளத் தெளிவாக அரசர் சொல்லி இருக்கிறார். வேளாளருக்கு மேலாக கம்மாளர்களும், மரத்தச்சர்களும் அரச ருக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள்.'' அவர் மூச்சு வாங்கினார்.

''ஆக, இவர் சொல்வது முட்டாள்தனம். எனவே கொஞ்சம்

அமைதியாக இரு, நான் வாங்கித் தருகிறேன். அப்படி உட்கார்ந்து கொள்.''

அவன் திண்ணையில் ஒரு ஓரமாக உட்கார்ந்துகொள்ள, தெருவை வேடிக்கை பார்த்தான். தெருவில் உள்ளோர் அவனை பார்த்துக் கும்பிட்டார்கள்..அவனும் பதிலுக்குக் கும்பிட்டான்.

''பார்த்தீர்களா. மயிலாப்பூருக்கு தெரிந்துவிட்டது. யார் முக்கியம் என்று, சீராளனுக்கு, ஒரு இளைஞனுக்கு மயிலாப்பூர் மக்கள் பெரிய கும்பிடு போடுகிறார்கள். உங்களை கும்பிட வில்லை. உங்கள் கூச்சலை வேடிக்கை பார்க்கிறார்கள். பின்னால் போய் குரங்கு ஏன் குதிக்கிறது என்றும் பேசுவார்கள். அமைதியாக யோசனை செய். இது வேளாளர்களுக்கு உண்டான காலம். இந்த இடத்தில் ஏற்கனவே மக்கள் ஆதரவு நமக்கு இல்லை. எல்லோரும் வேறு வழியில்லாமல் நம்மை சகித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாக ஆடாதே.''

''நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். நான் ஒரு மணி அரிசிகூட தரமாட்டேன்.''

''நல்லது, அப்பொழுது நான் உனக்கு ஆதரவாக இருக்க முடியாது. சீராளா, வா, என் வீட்டில் இருக்கின்ற அரிசியை உனக்கு தருகிறேன். எனக்கு உண்டான அரிசி எவ்வளவு என்று நீயே தீர்மானம் செய்து கொள்.'' அவர் கிளம்பினார்.

மயிலையில் பல பக்கங்களிலிருந்து அரிசி வாங்கப்பட்டன.

அவைகள் எல்லாம் வெற்றிலை தோட்டங்கள் தாண்டி செங்கழுநீர் ஓடையில் இறங்கி மேலேறி அவனுடைய வீட்டுக்கு கொண்டு போகப்பட்டன. அவனுடைய வீட்டு வாசலில் மிக அழகாக வீரபத்திரர் சிலை இருந்தது. அந்த வீரபத்திரர் உருவம் சிவலிங்கமாக இல்லாமல் உருவமாக இருந்தது. வீரபத்திரருக்கு அருகே தனியாக அம்மன் சன்னதி இருந்தது. அந்த அம்மன் பெரிய உருவமாக இருந்தாலும் கையில் வில் ஊன்றி ஒயிலாக ஆறுகைகள் பல்வேறு ஆயுதங்கள் தாங்கி கம்பீரமாக இருந்தது. யுத்தத்திற்கு தயாராகும் புருஷலட்சணமாக அந்த அம்மன் இருந்தாள். அவன் குலத்து பெண்களும் வீரர்கள். அவர்களால் ஆயுதம் ஏந்த முடியும். அவர்களால் அரசாட்சி செய்ய முடியும். அவர்களால் நியாய தர்மம் வழங்க முடியும் என்று பெயர் பெற்றவர்கள். ஆனால் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள அந்தணர்

களுக்கு அடங்கித்தான் இருந்தார்கள். அவர்கள் கற்றவர்கள். தெளிவானவர்கள் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.

ஆனால் இந்த தலைமுறையில் உள்ள அந்தணர்களுக்கு அந்த தெளிவு இல்லை. அவர்கள் தேவை இல்லாமல் வேளாளர் களை இழிவு செய்தார்கள். வேளாளர்கள் சீறுகின்ற காலம் மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தது.

பொதுமக்கள் வேளாளர்களை நோக்கி நகர்ந்தார்கள். அவர் கள் அன்புக்கு பாத்திரமானார்கள். அவர்களை ஆதரிப்பதாகச் சொன்னார்கள். அந்தணர்களுடைய கர்வத்தால் மயிலாப்பூர் சாதாரண பிரஜைகளும் பாதிக்கப்பட்டார்கள்.

அரிசி எல்லாம் மாட்டு வண்டிகளில் ஏற்றி செங்கழுநீர் ஓடையில் இறக்கி, பிறகு ஆட்களை வைத்து மேலேற்றி அவ னுடைய அரண்மனைக்கு எடுத்துக் கொண்டு போனான். மாளிகை முற்றத்தையும், கீழ் உள்ள கூடத்தையும் சுத்தமாக் கினான். வேப்பிலைகளை பொடி செய்து அரைத்து தரை முழு வதும் மொழுகினார்கள். அது காய்ந்ததும் அரிசியை கொண்டு வந்து கொட்டினார்கள். மாடியில் உள்ள கூடத்திலும் அம்மாதிரி நடந்தது. வீட்டில் இரண்டு அறைகள் தவிர மற்ற எல்லா இடத் திலும் அரிசிகள் குவிக்கப்பட்டு இருந்தன.

அவன் அரசாங்க கணக்கு சரிபார்த்துக் கொண்டிருந்தான். ஒரு கழஞ்சு குறைகிறதே என்று முட்டிக் கொண்டான். அவன் மனைவி கவலையானாள். ''வீரபத்திரர் கோவிலுக்கு ஒரு தூக்கு நெய் கொண்டு வந்தீர்களே எப்படி வந்தது. யார் கொண்டு வந்தார்கள்.'' அவன் சட்டென்று மிரண்டான். அவள் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் இருந்தான்.

''ஆமாம், நான்தான் காசு கொடுத்து வாங்கினேன். நானே நேரிடையாக வாங்கியதால் குறித்து வைத்துக் கொள்ள மறந்து விட்டேன். மிக்க நன்றி.'' அவள் கைகளைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

''நன்றாக இருக்கிறது கதை. நாலுபேர் நடமாடும் இடத் தில் கையை பிடிக்கிறீர்களா.'' அவள் செல்லமாக கோபித்துக் கொண்டாள்.

''இல்லை. நான் நம்முடைய அறைக்கு வந்து தனியாக உன்னை கட்டிப் பிடித்துக் கொள்கிறேன்.'' என்று பதில் சொன் னான்.

''அய்யோ. அத்தையிடம் கேட்க வேண்டும். அவள் பதறினாள்.

''எதற்காக இதை அத்தையிடம் கேட்க வேண்டும்.''

''அத்தையிடம் கேட்டுவிட்டுத்தான் உங்களிடம் நெருக்கமாக இருக்க விரும்புகின்றேன். அத்தை ஆசீர்வதிப்பதுதான் நல்லது.'' அவள் ஓடிப் போய் அத்தையிடம் கேட்டாள்.

''தாரளமாகச் செய். என் பிள்ளை ஏங்கிக் கொண்டிருக்கிறான் என்று தெரியும். ஏகப்பட்ட பொறுப்புகள் அவனுக்கு. இத்தனைக்கும் நடுவில் உன்னோடு அவன் சந்தோஷமாக இருக்கிறானென்றால் எனக்கு அதுபோதும்'' என்று ஆசீர்வதித்தாள். அவள் ஓடிப் போய் குளித்து விட்டு சீராக உடுத்திக்கொண்டு, நெற்றிக்குபொட்டிட்டு, பூச்சூடி புருஷனுடைய இடம் தேடி ஓடினாள். அரைக் கதவு திறந்து பழத்தட்டோடு உள்ளே நுழைந்தாள். உள்ளே அவள் புருஷன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மெல்லப்போய் முதுகு தடவி எழுப்பினாள். அவன் எழுந்து உட்கார்ந்தான்.

''அந்த ஒரு கழஞ்சு எங்கே இருக்கிறது கண்டுபிடித்தாயா'' என்று கேட்டான். அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''தூக்கக் கலக்கத்திலும் அரசாங்க பொறுப்புதானா. தூங்கு, தூங்கு, நாளை பார்த்துக் கொள்ளலாம்.'' அவள் மெல்ல அவனை படுக்கையில் சாய்த்தாள். அவனை அணைத்துக் கொண்டு படுத்தாள், கன்னங்களில் முத்தமிட்டாள். அவன் அசையாது கிடந்தான். அவன் உடம்பில் சூடு இருப்பது தெரிந்தது. அத்தனை களைப்பு, அத்தனை மூளைக் கொதிப்பு. என்ன செய்வது பாவம். என்று அவன் தலையை தடவிக் கொடுத்தாள். உறங்கிப் போனாள்.

திருமணம் ஆகி இத்தனை நாளில் ஒருமுறைக் கூட அவனை ஆரத்தழுவியது இல்லை. வாயாற முத்தமிட்டது இல்லை. என்ன செய்வது என்று ஏங்கினாள். கபாலீஸ்வரர் கோவிலுக்கு போக வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள். அங்கு போய் முறையிடுவதுதான் நல்லது என்று அவளுக்குத் தோன்றியது.

மறுநாள் காலை பழத்தட்டோடு கபாலீஸ்வரர் கோவிலுக்குப் போனாள். புதிய வகை பூக்களெல்லாம் அவள் கூடையில் நிரம்பி இருந்தன. கபாலி கோவிலின் மதில் சுவற்றின் மீது வங்கக்கடல் மோதி உயரமாக எழுந்தது. அலைகள் சிறுதுளிகளாக

மாறி கோவில் முழுவதும் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அவள் போர்த்திக் கொண்டு உள்ளே போனாள். கூடற் காற்று பிய்த்து அடித்தது.

கருவறைக்குள் போனதும் சட்டென்று வெப்பமாயிற்று. உள்ளே மிகத் தெளிவாக ஒரு அதிர்வு உணர முடிந்தது.

எல்லாம் வல்ல சிவனே, மங்கள ரூபனே, மாங்கல்யம் காப் பவனே என் புருஷனை எனக்கென்று சில மணி நேரம் ஒதுக்கிக் கொடு என்று மனமுருக வேண்டினாள்.

''உன் பொருள் உனக்குத்தான்.'' யாரோ கருவறையில் உரக்க பேசிக்கொண்டு போனார்கள். அவளுக்கு உத்தரவு கிடைத் தது போல் சந்தோஷமானாள். அர்ச்சகர் கொடுத்த பழங்களோடு வீடு திரும்பினாள். அவளைத் தாண்டிப்போன சிவாச்சாரியார் சட்டென்று திரும்பி பார்த்தார்.

''அய்யா அழைத்தீர்களா.''

''இல்லை அம்மா. உன்னை தாண்டி போகும்பொழுது ஒரு தெய்வீக வாசனை வீசுகிறது. உடம்பு அதிருகிறது. நீ அற்புத மான பெண்பிள்ளை. கற்புக்கரசி என்பது இந்த அதிரலில் தெரி கிறது. நீ வாழ்வாங்கு வாழவேண்டும். தீர்க்க சுமங்கலி பவ. தீர்க்க சுமங்கலி பவ, தீர்க்க சுமங்கலி பவ என்று ஆசீர்வதித்தார்.'' அவள் மேலும் சந்தோஷமானாள்.

துள்ளிக் குதித்து வீட்டிற்கு வந்தாள். அவன் வெளியே போய் இருப்பதாகச் செய்தி சொன்னார்கள்.

இந்த முறை திருவல்லிக்கேணி கடற்கரை ஓரம் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே பெரிய சதுப்பு நிலம் இருந்தது. சதுப்பு நிலத்துக்கு நடுவே கருவேலி மரங்கள் வளர்ந் திருந்தன. அங்கிருந்த ஓநாய்கள் கூட்டம் கூட்டமாக ஊருக் குள் புகுந்து விடுவதாகவும், திருவல்லிக்கேணியை தாக்குவ தாகவும், இன்னொரு கூட்டம் மயிலையைத் தாக்குவதாகவும் அவனுக்கு செய்தி வந்தது.

''நீ கோட்டை கட்டிக் கொண்டு பிரமாதமாக கதவை தாழ் போட்டுக் கொள்கிறாய். எங்களுடைய வாழ்க்கை எல்லாம் என்ன ஆவது. தெருவில் நூறு ஓநாய்கள் ஓடுகிறதய்யா. காவல் காக்கிறவன் வந்து என்வீட்டு கூரை மீது உட்கார்ந்து கொண்டிருக்

கிறான். நான் மேலே இருப்பது ஓநாயா, ஆளா என்று தெரியாமல் பதறிக் கொண்டிருக்கிறேன்.''

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள். நாம்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''எப்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வீட்டிலே தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளலாம். திண்ணையில் படுத்து வேலிப்படலை தாண்டி ஓநாய் வருகிறதய்யா.''

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்.''

இந்த சதுப்பு கூட்டத்தை அழிக்க வேண்டும். இந்த கருவேலி மரங்களை வெட்ட வேண்டும். இந்த ஓநாய்கள் அத்தனையும் அடித்து கொல்லப்பட வேண்டும்.

''கூடாது.'' அவன் மறுத்தான்.

''என்ன?''

''இது ஒரு பாதுகாப்பு, ஒரு அரண், கோட்டை மட்டுமே அரண் ஆகிவிடாது. இந்த மாதிரி கருவேலஞ் செடிகளும், சதுப்பு நிலமும் எதிரிகள் உள்ளே வராமல் இருக்க பாதுகாப்பாக அமை கின்றன. இது இயற்கை கொடுத்த வரம். இதை நாம் அழிக்கக் கூடாது.''

''அப்போது ஓநாய்கள் என்ன வரம். அல்லது யாருக்கு உண்டான சாபம், உனக்கில்லை, எனக்கு மட்டும்தானா, நான் மட்டும் அவஸ்தைப்பட வேண்டுமா. இந்த ஓநாய்கள் அழிந்தாக வேண்டும்.'' அந்தணர் கத்தினார்.

அவன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். ஓநாய்களை தானே நின்று காவல் காப்பதாய்ச் சொன்னான். அடுத்த சில நாட்கள் இரவெல்லாம் குதிரை ஏறி ஓநாய்களை ஊருக்குள் வராமல் தீப்பந்தம் எரிந்து உள்ளே துரத்தினான்.

ஓநாய்கள் அவன் ஈட்டிக்கும், அம்புக்கும் பயந்தன. சதுப்பு நில காட்டுக்குள்ளேயே ஊளையிட்டுக் கிடந்தன. அவள் அவ னுக்காக ஏங்கியபடி காத்திருந்தாள்.

ஒருநாள் விடியலில் கொம்பூதும் சத்தம் கேட்டது, உறங்கிக் கிடந்தவனை உலுக்கி எழுப்பினார்கள். அவன் இறங்கி ஓடிப் போய்ப் பார்த்தான். திருக்கடல் மல்லையில் பறை அடிப்பவர்கள் வந்துவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு அன்று மதியம் கறி

உணவு சமைத்து வைக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அவன் அதற்கு தயாரானான்.

சோழர்களுடைய படை எடுப்பு உறுதி செய்யப்பட்டு விட்டது. அருண்மொழித்தேவரை வீட்டிற்கு அழைத்து வர வேண்டும் என்று அவன் விரும்பினான். தன் மனைவியிடம் தெரிவித்தான். அவள் சந்தோஷமாக 'சரி' என்று சொன்னாள். அவள் கண்ணில் இருந்த ஏக்கம் அவனுக்குத் தெரியவில்லை. அவன் மனம் முழுவதும் இராஜேந்திர சோழனும், வந்தியத்தேவரும், அருண்மொழிப்பட்டனும், பரமன் மழபாடியும் தான் நின்றிருந்தார்கள். மனைவி பற்றிய அக்கறை அவனுக்குச் சற்று குறைவாகவே இருந்தது.

சிறிது நேரத்தில் வேறொரு எக்காளம் கேட்டது. என்ன என்று பார்த்தபோது பறை அறிப்பவர்கள் தாண்டி இராஜராஜ பிரம்மராயரும், உத்தம சோழமிலாடுடையாரும், உத்தம சோழ கோனும் வருகிறார்கள் என்ற செய்தி அவனுக்கு வந்தது. அந்தப் படைகளை அவன் முன்னமே அறிந்திருந்தான். வாள்முதுகு வீரர்கள் என்பது அவர்களுக்கு பெயர் என்றும் தெரிந்திருந்தது.

பூரண கும்பத்தோடு அவர்களை வரவேற்க அந்தணர்களை நாடினான். அந்த அந்தணர் மறுத்தார். மற்ற அந்தணர்கள் ஒப்புக் கொண்டார்கள். பூரணகும்பம் தயார் செய்தார்கள். வேளாளர்கள் ஒன்று கூடினார்கள். மறவர்கள் வந்து நின்றார்கள். ஊர் மொத்தமும் கூட, திருமல்லையின் எல்லையில் மந்தைகள் மேயும் புல்வெளித் தாண்டி அந்த குதிரைப்படை துரிதமாக வந்தது. இவன் எதிரே வ்ந்ததும் நின்றது. குதிரை வீரர்கள் கிழக்கு நோக்கி திரும்பினார்கள். வரிசையானார்கள்.

உத்தமசோழ மிலாடுடையார் கீழே இறங்கினார். இராஜராஜ பிரம்மராயர் கீழிறங்கினார்.

''ஆ, இந்த இளைஞனை எனக்குத் தெரியும். அருண்மொழித் தேவரோடு பார்த்திருக்கிறேன்.''

''ஆமாம். நானும் பேசி இருக்கிறேன்.''

''இதுதான் உங்கள் ஊரா. இதுதான் திருமயிலையா, இப்போதுதான் முதன்முதலில் வருகிறேன். கபாலீஸ்வரர் கோவில் எங்கே இருக்கிறது'' என்று ஆவலாகக் கேட்டார்.

அவர்கள் பொற்குடத்தை தொட்டு தங்கள் வருகையை வெளிப்படுத்தினார்கள். அவர்களை வரவேற்க ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. எக்காளங்கள் ஊதப்பட்டன. சங்கு முழங்கப் பட்டது. அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அவர்களை வரிசையாக தன்னுடைய இடத்திற்கு செழுங்கழுநீர் ஓடை தாண்டி அவன் அழைத்துப் போனான்.

பிரம்மாண்டமான வீட்டில், கொல்லைப்புறத்தில் உணவு தயாராகி இருந்தது. வீரர்கள் வரிசை ஆனார்கள். குதிரைகளுக்கு புல்லும், தண்ணீரும் காட்ட அந்த ஊர் பஞ்சமர்களுக்கு உத்தர விடப்பட்டது. குதிரைகளின் முதுகை அவர்கள் தேய்த்து விட்டார் கள். குதிரைகளை தட்டிக் கொடுத்தார்கள். கொள்ளும், புல்லும் குதிரை ஆவலாக தின்ன அவர்கள் நீர் காட்டினார்கள்.

மிகப்பெரிய மந்தாரை இலையில் சுடச்சுட பொங்கல் உணவும், காய்கறிசோறும் பரிமாறப்பட்டன. எல்லோருக்கும் தொன்னையில் பாயஸம் தரப்பட்டது. ''ஆட்டு மாமிசம் இல் லையா.'' மிலாடுடையார் கேட்டார்.

''முதன்முதலில் வருகிறீர்கள். மாமிச உணவு வேண்டாம். கோவில் பிரசாதம் போல இவைகளைத் தருகிறேன்.'' என்று சொல்ல, அவர் அந்த உணவை கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

வழித்து வழித்து சக்கரைப்பொங்கல் சாப்பிட்டார். இன்னும் கேட்டார். எல்லா வீரர்களும் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். அங்கங்கே படுத்துக்கொண்டார்கள். குடிப்பதற்கு நீரும், மோரும் அவர்களுக்கு வினியோகிக்கப்பட்டன. அயர்ந்து உறங்கினார்கள்.

மிலாடுடையாரையும், இராஜராஜ பிரம்மராயரையும் உத்தம சோழ கோனையும் அவன் வீட்டிற்குள் அழைத்துப்போனான். மனைவியை அறிமுகப்படுத்தினான்.

''என்ன நிறம். மறவர்களுக்கு இப்படி ஒரு நிறம் இல் லையே. நீ மறவனா, வேளாளனா.''

''நான் வேளாளன்.''

''ஆஹா. அப்படியும் நான் இப்படியொரு நிறத்தை பார்த்த தில்லையே. உன் மனைவி தங்க நிறமாக அல்லவா இருக்கிறாள்.'' உத்தம சோழ மிலாடுடையார் வியக்க அவள் வெட்கப்பட்டாள்.

''பெரிய பெரிய கண்கள். மிக அழகு மிக அழகு, உன் பெயர் என்னம்மா.''

''என் பெயர் தாமரைச்செல்வி.'' அவள் மிருதுவான குரலில் சொன்னாள்.

''குரலில் வீணையின் நாதம் போல் இருக்கிறது. வாழ்க, வாழ்க, நல்ல குழந்தைகளை பெற்றெடுத்துக் கொண்டு சந்தோஷ மாக வாழவேண்டும்.'' மிலாடுடையார் ஆசீர்வதித்தார். அவள் மறுபடியும் ஏங்கினாள்.

வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு படைவீரர்களை அறிமுகப் படுத்தினான். பிற்பகல் அலைகடல் மோதும் மதில் சுவருடைய கபாலீஸ்வரர் கோவிலுக்கு போனார்கள். தனித்த பூஜை, அலங் காரங்கள் நடைபெற்றன. இராஜராஜ பிரம்மராயர் கபாலி கோவி லுக்கு தன் சார்பாக விளக்கெரிப்பதற்கு மூன்று பொன் கழஞ் சுகள் கொடுத்தார். உத்தம சோழ கோன் வெள்ளிக் காசுகள் கொடுத்து மாதம் ஒருநாள் இராஜேந்திரன் திருவாதிரை நட்சத் திரத்தின்போது வருகின்ற அத்தனை பக்தர்களுக்கும் சக்கரைப் பொங்கல் பரிமாரச் சொன்னார்.

''சாதங்கள் சுவையாக இருந்தன. ஆனால் அடுத்து வரும் படை வீரர்கள் கறிசோறு எதிர்பார்ப்பார்கள். பறை அடிப்பவருக்கு கறிசோறு நிச்சயம் வேண்டும், இருக்கிறதா.''

''இருக்கிறது. அதற்குண்டான ஏற்பாடுகள் செய்துவிட் டேன். உங்களுக்கு பிரசாதமாகத்தான்.''

''புரிகிறது, புரிகிறது, அது பரவாயில்லை'' என்று பிரம்ம ராயர் சமாதானம் செய்தார்.

படைவீரர்களுக்கு என்ன உணவு என்று கேட்க, அவன் தன் வீட்டிலுள்ள அரிசிக்குவியலை காண்பித்தான். அவர்கள் திருப்தியானார்கள்.

''வேறு ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா.''

அவன் மௌனமாக இருந்தான்.

அவர்கள் அதை கண்டுகொள்ளாமல் நகர்ந்தார்கள். ஆனால் இராஜராஜ பிரம்மராயர் சட்டென்று நின்றார்.

''உன்னைதான் கேட்கிறேன். வேறு ஏதேனும் பிரச்சனை இருக்கிறதா.''

''பிரச்சனை ஒன்றும் பெரிதாக இல்லை.''

''சரி, சிறிதாக என்ன பிரச்சனை.''

''சில அந்தணர்கள் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்.''

''ஏன்?''

''அரிசியை விற்பதற்கு முடியாது என்கிறார்கள்.''

''யாருக்கு விற்க முடியாது என்கிறார்கள்.''

''இராஜேந்திர சோழருக்கு விற்பதற்கு இல்லை என்கிறார் கள்.''

''என்ன?'' சீறினார்.

''நாலு குதிர் அரிசி இருக்கிறது. நாலு குதிரும் எனக்கு வேண்டும். நான் வேண்டுமானால் எந்த விலைக்கும் விற்பேன். எதற்காக நான் இராஜேந்திரசோழருக்கு விற்க வேண்டும் என்று கொஞ்சம் எகத்தாளமாகப் பேசுகிறார்.''

''அப்படியா. இங்கு தலைமை ஏற்பது யார்.''

''அந்தணர்கள் தான். அந்தணர் சபைதான் இங்கு எல்லா முடிவும் செய்கிறது.''

''அந்தணர் சபையை கூட்டச்சொல். இன்றிரவு அந்தணர் சபையில் பேசுகிறேன்.''

அன்று அவன் அந்தணர் சபையை கூட்டச் சொன்னான்.

''யார் கூட்டச் சொன்னது?''

''இராஜராஜ பிரம்மராயர்.''

''அட, அந்தணரா. அருண்மொழிப்பட்டனுடைய சகோதர னல்லவா.''

''இல்லை. அப்படியெல்லாம் இல்லை. இவர் பிராமணர் தான். ஆனால் அருண்மொழி பட்டரோடு சம்பந்தப்பட்டவர் இல்லை.''

''அருண்மொழிதான் கொஞ்சம் அட்டகாசமான ஆள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இவர் அந்தணர்தானே. ஒரு அந்தணர் குறையை அறிந்துகொள்வார்.'' என்று அந்த கோப மான அந்தணர் வேகமாகப் பேசினார். அன்று மாலை அந்தணர் களுடைய சபை கூடியது.

சபைக்கு மக்கள் எழுந்து வணக்கம் செலுத்தினார்கள். சபை மக்களை ஆசீர்வதித்தது. அதற்குப் பிறகு, இராஜராஜ

பிரம்மராயரும், உத்தம சோழ மிலாடுடையாரும், உத்தம சோழ சோனும் உள்ளே நுழைந்தார்கள். பொதுமக்கள் எழுந்து நிற்க அவர்கள் பொதுமக்களை தனித்தனியாக குசலம் விசாரித்தார்கள். உள்ளே ஏறினார்கள். அந்தணர்கள் உட்கார்ந்திருந்த திண் ணைக்கு முன்பு நாற்காலி போட்டுக் கொண்டு அந்தணர்களுக்கு முதுகு காண்பித்தார்கள்.

அந்தணர்கள் முகம் மாறியது.

நாங்கள் உங்களை சந்திக்கத்தான் வந்திருக்கிறோம். இன்று மதியம் நீங்கள் போட்ட உணவு அற்புதம். மயிலாப்பூர் அரிசி யும், பருப்பும் இன்னும் சுவையாக இருக்கின்றன. இப்படிப்பட்ட உணவை நாங்கள் சாப்பிட்டதே இல்லை. யார் சக்கரைப் பொங்கல் செய்தது. அவருக்கு தங்கக்காப்பு போட வேண்டும் என்று சொல்லி, சக்கரைப் பொங்கல் செய்தவருக்கு சிகப்பு பட்டுத்துணியை போர்த்தினார்.

கோவிலுக்காக உத்தம கோன் மூன்று கழஞ்சு நெய் வார்ப் பதற்காகக் கொடுத்தார். மக்கள் தங்கள் கோவிலை கொண் டாடுவது குறித்துச் சந்தோஷமானார்கள்.

''உங்களுக்கு என்ன குறை.'' என்று இராஜராஜ பிரம்மராயர் கேட்க, மக்கள் மௌனமாக இருந்தார்கள்.

''உங்கள் குறை என்ன. என்று இராஜேந்திரர் கேட்டு வரச் சொன்னார். உங்களுக்கு என்ன குறை.''

''ஊர் இரண்டுபட்டு கிடக்கிறது அய்யா.'' ஒரு வேளாளர் எழுந்து நின்று சொன்னார்.

''என்ன இரண்டுபட்டு, நன்றாகத்தானே இருக்கிறீர்கள். ஒன்றும் சண்டை சச்சரவு காணோமே.''

''இல்லை, அந்தணர்கள் ஒரு பக்கமும், வேளாளர்கள் ஒரு பக்கமாக இருக்கிறார்கள். அதற்கு நடுவிலே நாங்கள் மாட்டிக் கொண்டு முழிக்கிறோம். நான் கம்மாளன் கருந்தட்டான் வேலை செய்கிறவன். என் வேலையை முடித்துக்கொடு. உன் வேலையை முடித்துக்கொடு என்று இருவரும் மாற்றி மாற்றிபேச, யாருக்கு நான் சலுகை செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். அந்தணர் கள் மிக வேகமாகப் பேசுகிறார்கள்.''

''அந்தணர்கள் என்ன வேலை கேட்கிறார்கள்.''

''உழுகலப்பை தட்டிக் கொடு என்று கேட்கிறார்கள்.''

''வேளாளர்கள் என்ன வேலை கேட்கிறார்கள்.''

''வேளாளர்களும் உழுகலப்பை கேட்பதோடு, ஆயுதங்களும் கேட்கிறார்கள்.''

''எதற்காக ஆயுதம்?''

''இரவு இங்கு காவல் காப்பது மறவர்கள் அல்ல. மறவர்கள் இங்கு மிகக் குறைவு. வேளாளர்கள் தான் காவல் காக்கிறார்கள்.''

''அப்படியானால் அவர்களுக்குத்தானே முன்னுரிமை தர வேண்டும். ஒரு தேசத்தின் பாதுகாப்பு முக்கியமல்லவா. அதை விடவா உழுகலப்பை முக்கியம். உழுகலப்பை எப்படி உருப்படி யாக செய்ய முடியும், தேசத்தை காவல் காக்கின்ற வேலை செய்தால்தான் செய்ய முடியும். எனவே வேளாளர்களுக்கு முன் னுரிமை கொடுங்கள்.'' என்று சொல்ல பின் பக்கத்திலிருந்து கனைப்புச் சத்தம் கேட்டது.

''யார் கனைத்தது, எதற்காக கனைக்கிறீர்கள்.'' இராஜராஜ பிரம்மராயர் வெடுக்கென்று கேட்டார்.''

கனைத்தவர் எழுந்து வந்தார்.

''எங்களுக்கென்று சிலகுறைகள் இருக்கின்றன.''

''கேட்கிறபொழுது சொன்னால் போதும், அதுவரை போய் உட்கார்ந்து கொள்ளுங்கள்.'' என்று பணிந்து பேசியவரை விரட்டி அனுப்பினார்.

''வேறு என்ன குறைகள் இருக்கிறது.''

''அந்தணர்கள் மற்றவர்களை இழிவாக நடத்துகிறார்கள் அய்யா. தங்கள் எதிரே உட்காரக்கூடாது என்று சொல்கிறார்கள். இங்கே சீராளன் என்பவர்தான் வேளாளத் தலைவனாக இருக் கிறார். அந்த சீராளனை அவர்கள் உட்கார விடுவதில்லை. அவர்கள் எதிரே கைகட்டி நிற்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்து பேசுகிறார்கள்.

''இது நன்றாகவா இருக்கிறது. அந்தணர்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மற்றவர்களும், மற்றவர்கள் முக்கியம் என்று இவர்கள் நினைப்பதே இல்லை. இவர்களுக்கு எதிரே தொலைதூரத்தில் கைகட்டி நிற்க வேண்டும் என்று

விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட காட்சியெல்லாம் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சோழ தேசத்தில் அவ்விதம் இல்லை. எல்லோரும் சமமாக நடத்தப்படுகிறார்கள். கருந்தட்டார்களுக்கு பெரிய மரியாதை இருக்கிறது என்று நான் கேள்விப் படுகிறேன். ஆனால் இவர்கள் அவ்விதம் செய்வதே இல்லை.''

''அய்யா, நான் மரவேலை செய்கிறவன். குறிப்பாக ஏற்றம் செய்வது என்னுடைய வேலை, இங்கு செழுங்கழிநீர் ஓடை என்று அருமையான ஓடை இருந்தாலும் அந்தநீர் பல வழி களில் பிரிந்து கேணிகளில் பாய்கிறது. கேணிகளில் உள்ள நீரைத்தான் நாங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்துகிறோம். ஆக, எல்லா வயல்களிலும் ஏற்றம் இருக்கிறது. ஏற்றத்தில் முன்னும், பின்னும் நடந்து அவர்கள் நீர் இறைக்கிறார்கள். ஏற்றம் எண்ணெய் வார்க்கப்பட வேண்டும். அடிக்கடி சரி செய்யப்பட வேண்டும். அப்படிசெய்வதற்கு பல பலத்த போட்டி இருக்கிறது. தங்களுடைய ஏற்றங்கள் சரி செய்யாவிட்டால் மிகக் கடுமை யாகச் சபிக்கிறார்கள்.''

''என்னவென்று?''

''நீ நாசமாகப் போவாய், உன்னுடைய தேசம் நாசமடைந்து போகும். என்னை எந்த தேசமும் ஏற்கும், உன்னை உன் வீடு தவிர வேறு எதுவும் ஏற்காது என்றெல்லாம் பேசுகிறார்கள்.''

''பேசியவர் யார்?''

''ஒரு அந்தணர்.''

''எந்த அந்தணர் என்று தெரியுமா?''

''தெரியும்.'' அவன் சுட்டிக் காட்டினான்.

''தயவுசெய்து இப்படிவாரும்.'' இராஜராஜ பிரம்மராயர் அவரை அழைக்க அவர் வந்து நின்றார்.

''தவறு செய்கிறவர்களை பிரம்பால் அடிக்கும் உரிமை இராஜேந்திர சோழர் எனக்கு கொடுத்திருக்கிறார். வாள் முதுகு குதிரைப்படையின் தளபதி நான், கீழைச் சாளுக்கியம் நோக்கி யுத்தத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன். இங்கு அமைதி ஏற் பட்டால்தான் யுத்தம் சரிவர நடக்கும். இங்கு அரிசி கொடுக்க மறுத்தால், அரிசி கொடுப்பவரை தடுத்தால் மிகக் கடுமையாக நான் நடந்து கொள்வேன். இது முதல் எச்சரிக்கை. அடுத்தமுறை எச்சரிக்க மாட்டேன். பிரம்பால் உடம்பு முழுவதும் அடிப்பேன்.''

''நான் அந்தணன்.'' அவர் சீறினார்.

''அப்படியா, அந்தணரை அடிக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா. யார் சொன்னது.?''

''மனுதர்மத்தில் சொல்லி இருக்கிறது. அந்தணனை அடித்தால் அது மிகப் பெரிய பாவம், காறாம் பசுவை கொன்ற பாவம்.''

''இதோ, அந்த காறாம்பசுவை கொன்ற பாவும் எனக்கு வரட்டும்.''

இராஜராஜ பிரம்மராயர் கையிலிருந்த பிரம்பை உருவினார். அவர் முதுகை குறி வைத்தார். ஓங்கி ஒரு அடி வைத்தார்.

'சொடேர்' என்ற சத்தம் அங்கு கேட்டது.

* * *

அத்தியாயம் 25

''திருபுவனமாதேவி அத்தையிடம் போய் விடைபெற்று வர வேண்டும். அத்தனைபேரையும் வரச் சொல். அத்தைக்கு கொடுப்பதற்கு பழங்களும், புஷ்பங்களும் எடுத்துக்கொள். அத்தைக்கு மேலே போர்த்திக் கொள்ள சீனத்துப் பட்டில் சால்வை ஒன்றை எடுத்துக் கொள்.

குந்தவையை வரச் சொல்ல வேண்டாம். என்னுடைய மனைவியர் மட்டும் வந்தால் போதும், அதிகாரிச்சிகளை முன்னே அனுப்பி என் வருகையை தெரிவித்து விடு. அ்த்தை தயாராக இருக்கட்டும். அவருடைய அந்தப்புரத்தில் திடும்மென்று நுழைவது நன்றாக இருக்காது.'' இராஜேந்திர சோழர் கட்டளை இட அவர்கள் எல்லோரும் பரபரப்பானார்கள்.

சீக்கிரமே கையுறைகளோடு தயார் ஆனார்கள். திருபுவன மாதேவி கிளம்பலாம் என்று சொன்னதும், மன்னர் சால்வையை மேலே போர்த்திக் கொண்டு உடைவாளை இடுப்பில் தரித்துக் கொண்டு தன்னுடைய அந்தப்புரத்திலிருந்து குந்தவையாரின் அந்தப்புரத்திற்கு நடுவே' உள்ள சிறிய பாலத்தைக் கடந்தார். அது ஒரு திறந்தவெளிப் பாலம். அங்கிருந்து பார்த்தால் அரண்ம மனை வாசல் தெரியும். அரண்மனை வாசலில் போர்வீரர்கள் கூட்டம் அதிகம் இருந்தது. சற்று நேரம் அதைக் கவனித்துவிட்டு அவர் தொடர்ந்து நடந்தார்.

அவர் வந்ததும் வாசற்கதவு பளிச்சென்று திறக்கப்பட்டது. அதிகாரிச்சிகள் கவனித்து திறக்கிறார்கள் என்று தெரிந்தது. முன்னே ஒரு அதிகாரிச்சி வணங்கி வழிகாட்ட கொஞ்சம் இருளான அந்த இடத்தில் விளக்கொளியைக் காட்டியபடி இன்னொரு பெண்மணி நடந்து வந்தாள். திரும்ப மறுபடியும் வெளிச்சம் வந்தது. நீண்ட மேற்கத்திய நடையில் நடந்து போய் குந்தவை யாரின் அறைக்குள் நுழைந்தார்.

ஆசனத்தில் அமர்ந்திருந்த குந்தவையார் எழுந்து நின்று ''வருக வருக, மன்னர் மன்னரே வருக'' என்று கைநீட்டி வரவேற் றார்.

''நான் இராஜேந்திரன். உங்களுடைய மருமகன். உங்களை காண வந்திருக்கிறேன்'' என்று பணிவோடு மன்னர் கைகூப்பி னார்.

''என்னதான் நீ எனக்கு உறவானாலும், என்னதான் என் னுடைய தம்பியின் பிள்ளையானாலும், இந்த சோழ சாம்ராஜ்யத் தின் சக்கரவர்த்தி, முடிசூடிய மன்னன். பண்டிதச் சோழன். வீரச் சோழன். உன்னை நான் எழுந்து நின்று வரவேற்காமல், வருக. வருக மாமன்னா, என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது. உள்ளே வா.

ஏன் அங்கேயே நிற்கிறீர்கள் உள்ளே வாருங்கள்'' என்று இராஜேந்திர சோழரின் மனைவியருக்கு கட்டளை இட, அவர்கள் உள்ளே வந்தார்கள். இரண்டு பேரும் மிக நீண்ட ஒற்றை ஆசனத்தில் மூலைக்கொருவராய் உட்கார்ந்து கொண்டார்கள். நடுவில் உள்ள ஆசனத்தில் தட்டுகள் வைக்கப்பட்டன.

''என்ன சம்பிரதாயமடா இது, ஒரே வீட்டிற்குள் மாறி மாறி தட்டுகள் கொடுத்துக்கொள்ள வேண்டுமா. அவன்தான் சொல்லுகிறான் என்றால் நீங்கள் அதற்கு மேல்.'' குந்தவை அத்தை அலுத்துக் கொண்டாள்.

''முக்கியமான காரியமாக கிளம்புகின்றேன். ஆகவே சொல்லிவிட்டு போகலாம் என்பது என் எண்ணம். அப்படி சொல்லும்பொழுது வெறும் கையோடு போக வேண்டாம் என்பதும் என் எண்ணம்.''

''தெரியும் இராஜேந்திரா. நீ என்ன சொல்ல வருகிறாய் என்று யூகிக்க முடிகிறது. ஆனாலும் உன் வாயால் சொல். என்ன விசேஷம்.''

''அத்தை தஞ்சையை விட்டு இடம் பெயர்ந்து ஜெயங் கொண்டத்தில் நான் கட்டி இருக்கின்ற அரண்மனைக்கு குடிப் பெயரப் போகிறேன். முக்கால் வாசி வேலைகள் முடிந்துவிட்டன. இன்னும் சிறிது வேலைகள் இருக்கின்றன. சுண்ணம் அடிப்பது போன்ற விஷயங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். மர நாற்காலி கள், கட்டில்கள், பஞ்சு மெத்தைகள், பரணைகள் போன்றவை போக வேண்டும். சமையல் அறைக்கு உண்டான விஷயங்கள் போக வேண்டும். குளிப்பதற்காக மேல்நிலைத் தொட்டி கட்டி கயிறுகள் மூலம் தண்ணீர் ஏற்றி, அங்கிருந்து குளியல் அறைக்கு

அருவி போல் தண்ணீர் கொட்டுவதற்கு ஏற்பாடு ஆகி இருக்கிறது. நீர் ஊற்றுபோல சில விஷயங்களை செய்திருக்கிறார்கள். ஆச்சரியமாக இருக்கிறது.

நித்த வினோதப் பெருந்தச்சன் அற்புதம் செய்கிறார். குளியல் அறையை பார்த்ததும் அப்போதே குளிக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் தயாராகவில்லை என்று கை விரித்து விட்டான்.''

''ஆமாம். நீரில் நீ கூத்தடிக்க ஆரம்பித்தால் ஒரு நாள் போதாதே'' என்று அத்தை சொல்ல,

அங்குள்ள அவன் மனைவிகள் வெட்கப்பட்டு சிரித்தார்கள்.

''வீரமாதேவி எப்படி இருக்கிறாய்?'' அத்தை திரும்பி வீரமா தேவியைக் கனிவுடன் பார்த்தாள்.

''சரியாகிவிட்டது. நலமாகி விட்டேன். ஆனால் இவர் என்னை அழைத்துக் கொண்டு போகமாட்டேன். பரவையாரை அழைத்துப் போகிறேன் என்று சொல்கிறார்.''

''பரவையா. போருக்கா என்ன இது விளையாட்டு, அவள் கொஞ்சம் நொய்மையான பெண் அல்லவா.''

''எத்தனை நாள் நொய்மையாக இருப்பது, கொஞ்சம் வலு வரவேண்டும் என்பதற்காகத்தான் போர் பார்க்க அவளை அழைத்துப் போகிறேன். அதுவும் தவிர, என் உணவுகளுக்கு என்னுடைய அதிகாரிகளை மட்டும் நம்பாமல், சற்று சரியாக உணவு கொடுக்க தெரியும் என்பது என்னுடைய எண்ணம்.''

''வீரமா தேவி வேண்டாமா.''

''இல்லை. பிற்பாடு அழைத்துக் கொள்கிறேன். அதைத் தவிர வேறு ஒருவேளை வீரமாதேவிக்கு இருக்கிறது.''

''என்ன வேலை?''

''நான் இந்த இடம் விட்டு நகர்ந்ததும் ஒரு நல்ல நாள் பார்த்து இவர்களையெல்லாம் நீங்கள் ஜெயங்கொண்டத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். என்ன தேதி என்பதை கிருஷ்ணன் ராமன் குறித்துத் தருவார். அப்படி நேரம் குறித்து தந்த பிறகு இவர்கள் அத்தனை பேரும் அந்த இடத்திற்கு குடிபெயர வேண்டும். அந்த குடிபெயர்தலை வீரமாதேவியின் தலைமையில் செய்யப்பட வேண்டும். அவர்களை அன்போடும், ஆசியோடும் நீங்கள் வழி அனுப்பி வைக்க வேண்டும்.

என்னுடைய இடம் இப்போது உங்களுக்குச் சொந்தம். நான் குடியிருந்த அறையில் நீங்கள் வந்து குடியேறலாம்.''

''இல்லை. இந்த இடம் விட்டு நான் நகரப் போவதில்லை. நீ குடியிருந்த இடத்தில் உன்னுடைய மைந்தர்கள் யாரையாவது குடிவை.''

''சரி. உங்களுக்கு வேண்டாமென்றால் என்னுடைய இடத்தை என் மகன் இராஜராஜதித்தன் எடுத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் வரமாட்டீர்கள் என்று தெரியும். இருந்தாலும் உங்களுக்குத் தான் முதல் உரிமை என்று சொல்வதற்காக நான் இந்த வார்த்தையைச் சொன்னேன்.'' ''இராஜராஜதித்தன் எப்பொழுது இந்த இடத்திற்கு குடிபெயரலாம் என்ற ஆவலோடு இருக்கிறான்.''

''உன்னுடைய தகப்பனாருக்கு பதினாறு மனைவிகள். இப்பொழுது சிலர் தான் உயிரோடு இருக்கிறார்கள். அவர்களையும் சந்தித்து விட்டு வா. நான் ஆள் ஆனுப்பி இருக்கிறேன். வந்துவிடுவார்கள். எல்லோருமே நோன்பு நோற்று துறவுக்கோலம் பூண்டிருப்பதால் அதிகம் பேசமாட்டார்கள். ஆனால் அவர்கள் ஆசிகள் உனக்கு உண்டு.''

பெண்கள் பலர்வர இராஜேந்திர சோழர் எழுந்து நின்றார். கைகூப்பினார். ஒவ்வொரு பெண்ணாக போய் பணிந்து நின்றார். யார் யார் என்று முகம் பார்க்கவில்லை. தகப்பனுடைய மனைவியர் என்பது நன்கு தெரிந்தது. எல்லோரும் அவன் தலையை தொட்டு ஆசீர்வதித்தார்கள்.

''வெற்றி உனதே.'' என்று சொன்னார்கள். மெல்ல பின்னடைந்தார்கள்,

மறுபடியும் ஆசனத்தில் குந்தவைக்கு அருகே இராஜேந்திரர் அமர்ந்து கொண்டார்.

''சரி, என் புருஷன் எங்கே. நீ வந்து சொல்லுவது போல அவர் சொல்லிக் கொள்வாரா அல்லது ஒன்றும் சொல்லாமல் உன்னோடு ஓடிப்போய் விடுவாரா.''

''அம்மா அவர் வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார். இராஜேந்திர சோழர் போன பிறகு தான் வரலாம் என்றிருக்கிறார்.''

''என்ன கொடுமையடா இது. இராஜேந்திரா ஏன் இப்படி என் புருஷனை ஓரம் கட்டி வைத்திருக்கிறாய்'' என்று சொல்ல எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''வரச்சொல் அவரை, நான் இருக்கும்போது வருவதற்கு என்ன தயக்கம்.''' இராஜேந்திரர் கட்டளையிட்டார்.

''இருக்கலாம், தயக்கம் இருக்கலாம்,'' வீரமாதேவி பேசினாள்.

''எதற்கு தயக்கம், ஏன் அப்படி சொல்கிறாய்.'' இராஜேந்திரர் கேட்டார்.

''அவர் கட்டிக் கொண்டு அத்தையின் கன்னங்களில் முத்தமிட்டு விடைபெறலாம் என்று ஆசைப்படலாம். அத்தைக்கு சரியாக வருமா. அல்லது அவருக்குத்தான் நன்றாக இருக்குமா. நீங்கள் இருக்கும்போது இதையெல்லாம் செய்ய முடியாது.''

''புரிந்துவிட்டதடி புரிந்துவிட்டது.'' குந்தவையார் உரக்கக் கத்தினார். உன் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு இராஜேந்திரன் போகவேண்டும் என்று சூசகமாகச் சொல்கிறாய். இல்லையா.'' என்று சொல்ல, மீண்டும் சிரிப்பொலி எழுந்தது,

வந்தியத்தேவர் உள்ளே நுழைந்தார்.

''வாழ்க மருமகனே,'' என்று கை உயர்த்தினார்.

''வாருங்கள் மாமா.'' அவர் எழுந்து கை கூப்பினார்.

''அத்தையிடம் விடை பெறுவதற்காக வந்தேன். ஜெயங்கொண்டத்தில் இடம்பெயர்வதற்காக உத்தரவு கேட்டேன். அவர்கள் ஆசீர்வாதம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு நல்ல நாள் பார்த்து என் மனைவியரை அனுப்பி வைக்கச் சொன்னேன். மற்றபடி கீழைச் சாளுக்கியத்தின் நிலைமைகளை நீங்கள் அத்தையிடம் பேசி இருப்பீர்கள்.''

''அத்தைக்கு தெரியாத ஒரு விஷயமும் இங்கு நடக்காது.''

''அத்தை உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும். அந்த வணிகர்கள் எப்படி இருக்கிறார்கள்.''

''அவர்களின் மூன்று பேருக்கு கை பிரித்தாகி விட்டது. இன்னும் மூன்று பேருக்கு கை பிரிபடவில்லை. அப்படி பிரித்தாலும் ஒரு கை நன்றாக இயங்காது. அவ்வளவு ஒட்டிப் போய் இருக்கிறது. என்றாலும் நிச்சயம் பிரித்துவிடலாம். ஒரு கையாவது இயங்கட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.''

''வலி அதிகம் இருக்கிறதா?''

''இல்லை. வலியே இல்லாது நன்றாக செய்கிறார்கள். ஒருநாளைக்கு சில விரற்கடைதான் அறுக்கிறார்கள். மருந்து போட்டு மறுபடியும் ஒட்டி விடுகிறார்கள். மறுபடியும் அறுக்கிறார்கள். நிதானமாக வேலை செய்து கையைப் பிரித்து எடுக்கிறார்கள். இரண்டு கையுமே இயங்க வேண்டும் என்பதுதான் ஆசை. சிலருக்கு அது முடியாது என்றதும் அவர்களுக்கு கவலை.''

''தொடர்ந்து கைகளுக்குப் பயிற்சி செய்து கொண்டிருந்தால் இரண்டு கைகளுமே வேலை செய்யும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்ன கோரமடா. அந்தக் கை இரத்த விளாறாகக் கிடக்கிறது.''

''அள்ளி அள்ளி சாப்பிட்டவன் அம்மா. எல்லோருக்கும் அள்ளி அள்ளி கொடுத்தவன். எனக்கே ஏன் இந்த கதி என்று அந்த வணிகர்கள் அழும்பொழுது மிக வேதனையாக இருக்கிறது.''

''கொள்ளை அடிக்கலாம், கொலை செய்யலாம், வணிகர்களை அடித்து விரட்டலாம், கை அறுத்து கொடுமை செய்கிற பொழுது இது சாதாரண விஷயமாக எனக்குத் தெரியவில்லை. சோழ தேசத்தின் மீது காழ்ப்பாக எனக்குத் தெரியவில்லை. வேறு என்னமோ இருக்கிறது.'' குந்தவை குமுறினார்.

''என்ன என்று நினைக்கிறீர்கள் அத்தையே.''

''இது மத சம்பந்தமான விஷயமாக இருக்கிறது. நீ என்ன சாமி கும்பிடுவாயா. இப்படித்தான் கும்பிடுவாயா. சிவனை கும்பிடுவாயா, விஷ்ணுவைக் கும்பிடுவாயா. இப்படியே கும்பிட்டுக் கொண்டே இரு என்று சொல்லி இருக்கிறார்கள். சொல்லியே அறுத்து இருக்கிறார்கள்.''

''எனவே இது மத துவேஷம். புத்தர் என்கிற பெயரில் அமைதி என்கிற பெயரில் அன்பு என்கிற பெயரில் ஒரு குழு செய்கிற அட்டகாசம். புத்த பிட்சுக்கள் சொல்லாமல் ஒரு குழுவிற்கு இப்படி ஒரு எண்ணம் வராது.''

''அரசியல் ரீதியான சண்டையாக இருந்தால்கூட பொறுத்துக் கொள்ளலாம். சைவ சமயத்திற்கு எதிராக, வைணவ சமயத்திற்கு எதிராக, பரத கண்டத்திற்கு எதிராக சண்டை என்றால் இது அடித்து நொறுக்கப்பட வேண்டும். மறுபடி குந்தவையரிடமிருந்து சீறல் எழுந்தது.

"மனதில் அந்த எண்ணம் இருக்கிறது அத்தையே, நான் வெகு நிச்சயம் செய்வேன். கடாரத்திற்கும், காம்போஜத்திற்கும் போக வேண்டிய காரணங்கள் அதிகப்பட்டுக் கொண்டே இருக் கின்றன. சேர தேசத்து போர்க்கலன்கள் வந்து நாகையில் தங்கி இருக்கின்றன. அந்த போர்க்கலன்கள் மிகப் பெரிதாக இருக்கின் றன. மிகப் பாதுகாப்பாக இருக்கின்றன. அந்த நாவாய்களை நாம் வைத்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால் அது போதாது என்று சொல்லிவிட்டார்கள்.

எனவே அந்த நாவாய்களை வணிகர்களுக்கு வாரித் தரப் போகிறேன். கிட்டத்தட்ட பதினாறு நாவாய்கள் அங்கு தயாராக இருக்கின்றன. அந்த மரக்கலன்கள் அத்தனையும் அவர்களுக்கே, அவர்கள் பட்ட கஷ்டங்களுக்காக இந்த பரிசைத் தரப்போகிறேன்."

"அற்புதம், வேறு என்ன விஷயம்?"

"குந்தவை, உன்னுடைய மருமகள். இராஜேந்திர சோழனின் தங்கை. அவளைப் பற்றியும் நீ கவனம் கொள்ள வேண்டும். அந்தப் பெண் பித்து பிடித்தது போல இப்பொழுது தனக்குத் தானே பேசிக்கொண்டிருக்கிறாள். அவளை பேசி மனப்பக்குவம் செய்ய வேண்டும். இது மிக முக்கியமான காரியம்." வந்தியத் தேவர் பேசினார்.

'ஒரு மனநிலை பிழன்றவரை அரண்மனையில் வைத்தி ருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவளுடைய ஜாதகத்தில் இது மிக மோசமான நேரம். குலதெய்வ வழிபாடு செய்யப்பட வேண்டுமென்று கிருஷ்ணன்ராமன் இன்று காலை சொன்னார். அதை உன்னிடம் சொல்வதற்காக வந்திருக்கிறேன்."

"நல்லவேளை எனக்கு மறந்து போயிற்று. குல தெய்வ வழிபாடு மட்டுமல்ல. வேறு ஒரு விஷயமும் செய்ய வேண்டும் இராஜேந்திரா."

"என்ன அத்தையே."

"நாம் சில விஷயங்களை எளிதாக மறந்துவிடுகிறோம்."

"நான் எதையும் மறக்கவில்லையே."

"மறந்துவிட்டாய் இராஜேந்திரா. ஒரு பள்ளிப்படை கோவில் எழுப்பினாயே ஞாபகம் இருக்கிறதா."

"ஆமாம். என்னுடைய சிறிய தாயார் பஞ்சவன் மாதேவிக்கு பள்ளிப்படை எழுப்பினேன்."

''பஞ்சவன் மாதேவி யார்?''

''நடனப் பெண்மணி.''

''அனுக்கி. மனைவி கூட இல்லை. ஆனால் அவளுக்கு பள்ளிப்படை எழுப்பினாய் ஏன்.

பஞ்சவன்மாதேவி ஒரு உத்தமமான பெண்மணி. இராஜ ராஜரை உருவாக்கியவர். இராஜராஜர் மீது மிகுந்த காதல் உடையவர். உன் தந்தைக்கு மிகப் பிரியமானவர். அவளுடைய தோளில் சாய்ந்து கொண்டுதான் அவர் இராஜாங்கத்தை செவ் வனே நடத்தினார். அவளும் அவருக்கு ஆதரவாக இருந்தாள். அந்த காரணங்களினால் தானே நம் எல்லோராலேயும் கொண் டாடப்பட்டு சிவகதி அடைந்தார். அவளுக்குப் பள்ளிப்படையும் எழுப்பினாய்.''

''பழவேட்டரையர் வம்சமான அந்த அழகிய பெண் மணிக்கு அவ்வளவு பெரிய கோவில் எழுப்பினாயே, அதை பாது காக்க ஏதாவது ஏற்பாடு செய்தாயா. உள்ளுக்குள்ளே காராமணி தோட்டம் போட்டு வாழைமரங்கள் வளர்த்திருக்கிறார்கள். கோவி லுக்குள்ளே உழுது பயிரிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பயிரிட நிலமா இல்லை. அந்த கோவிலைக் கவனித்துக் கொள்கிறவர் அங்கிருந்தபடியே பாசனம் செய்யலாம், கேணி இருக்கிறதே, இறைத்துக் கொள்ளலாம் என்று இம்மாதிரி செய்கிறாராம்.

முதலில் காய் போட்டாராம். இப்பொழுதுகாராமணித் தோட்டம் போட்டிருக்கிறாராம். சரியானபடி நாம் காவல் போட வில்லை. அங்குள்ள அந்தணர்களை வேளாளர்கள் மிரட்டி உங்கள் வேலை பூஜை செய்வது, அதை மட்டும் பார்த்துக் கொண் டிருங்கள் என்று சொல்லிவிட, அந்தணர்கள் எதுவும் தெரியாது என்று கைவிரிக்கிறார்கள். ஆனால் பூஜை ஒழுங்காக நடந்து கொண்டிருக்கிறது.

பூஜை மட்டும் ஒழுங்காக நடந்தால் போதுமா. கோவிலைச் சுற்றிக் காராமணித் தோட்டமும், வாழைத் தோட்டமும் இருந்தால் பாம்புகள் நகராதா. பாம்புகள் நகர்ந்தால் சிவாச்சாரியார்கள் உள்ளுக்குள்ளே போவதற்கு பயப்படுகிறார்கள். மடமடவென்று பூஜை செய்து விட்டு வருகிறார்கள். அரைகுறையாக பூஜை நடக்கிறது. சிறிய வௌவால்கள் மேலே தொங்குகின்றன. புகை போடக்கூட நேரம் இல்லை என்கிறார்கள்.''

''இது தவறாகப்படுகிறது எனக்கு. இதுவும் குந்தவையி னுடைய மனோநிலைமைக்கு காரணமாக இருக்குமோ. மூத்தோர் சாபமோ, என்ற பயம் வந்தது எனக்கு. எனவே அதை உன் னிடம் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தேன்.''

யாரை இதற்குத் தலைமையாகப் போட்டு இந்த பள்ளிப் படைகளை சரி செய்ய ஏற்பாடு செய்வது. இராஜராஜரின் பள்ளிப் படை இருக்கிறது. பஞ்சவன்மாதேவியின் பள்ளிப்படை இருக் கிறது.

பட்டமகிஷியின் பள்ளிப்படை இருக்கிறது. இன்னும் அதற்கு முன் உண்டான சுந்தர சோழர், பராந்தகர் பள்ளிப்படை களெல்லாம் இருக்கின்றன. இவைகளைஎல்லாம் பாதுகாக்க ஒரு சரியான நபரை நியமிக்க வேண்டும். திரும்ப திரும்ப கிருஷ்ணன் ராமனையா தொந்தரவு செய்வது, இந்த வயதில் எவ்வளவு வேலைகள் செய்வார்.

இல்லை, எனக்கு யார் ஆள் என்று தெரிந்து விட்டது. இராஜேந்திர சோழர் கை உயர்த்தினார்.

எல்லோரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் யோசித்தார்.

நேற்று கூட அவர் கனவில் வந்தார். என்ன வேண்டும் இராஜேந்திரா என்று கேட்டார். உங்கள் ஆசிகள் வேண்டும் என்று சொன்னேன். கை உயர்த்தி ஆசீர்வதித்தார். இப்பொழுது தான் அந்த கனவே ஞாபகம் வருகிறது. லகுலீசப் பண்டிதர். அவர் தஞ்சைக்கு வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதனால் தான் கனவு வந்திருக்கிறது.''

''வந்தியத்தேவர் அவர்களே, லகுலீசப் பண்டிதர் எங்கு இருக்கிறார் என்று விசாரிக்கச் சொல்லுங்கள். அத்தை நான் விடை பெறுகிறேன்.''

''இங்கிருந்து உன்னுடைய பொருள்கள் எது வேண்டும்?'' அத்தை எழுந்து கொண்டே கேட்டாள்.

''அதெல்லாம் வீரமாதேவி முடிவு செய்யட்டும். வீரமாதேவி இங்குள்ள பொருள்கள் ஏதாவது எடுத்துப் போக வேண்டுமா.''

''புதுவீடு. புதிய பொருள்களை உபயோகப்படுத்துவோமே, இதையெல்லாம் இராஜராஜதித்தன் அனுபவிக்கட்டுமே'' என்று

சொல்ல, எல்லோரும் 'சரி சரி' என்று சொன்னார்கள். இராஜேந்திரர் அந்த அந்தப்புரம் விட்டு கை கூப்பியபடி நீங்கினார்.

அந்தப்புர வாசலுக்கு வந்து நெடுஞ்சாண்கிடையாக அத்தையின் கால்களில் விழுந்து வணங்கினார். வாளை எடுத்து அத்தையின் கையில் கொடுத்தார். அத்தை அந்த வாளை கையில் வைத்துக்கொண்டு,

''ஜெய விஜயீபவ, சோழம் சோழம் சோழம் என்றும் உனதாகட்டும்'' என்று அவர் நெஞ்சில் அந்த வாளை அழுத்தினார். நெஞ்சில் அழுத்தப்பட்ட வாளை அப்படியே இரண்டு கைகளாலும் பொத்திக்கொண்டு இராஜேந்திரர் பின்னடைந்தார். பிறகு இடுப்பில் சொருகிக் கொண்டார்.

மனைவிகள் புடைசூழ இராஜேந்திரர் போவதையே அத்தை குந்தவை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''மன்மதன், இத்தனை பெண்களுக்கு நடுவில் வாட்டசாட்டமாய் பீமசேனன் போல உடைவாளோடு நடந்து போய்க் கொண்டிருக்கிறான். அந்த பெண்டுகளுக்குத்தான் இவன் மீது என்ன காதல். என்ன வெறி. ஒவ்வொருத்தியும் பார்க்கிற பார்வை இருக்கிறதே அப்பா என்னோடு இரு, என்று கெஞ்சுகிறார்கள். அவன் ஆனந்தமாக இருக்கிறான்'' என்று சந்தோஷப்பட்டாள்.

ஒரு தாய் போல் தன் மகனுடைய காதலைப் பார்த்து படுகின்ற சந்தோஷம் அது.

இராஜேந்திரர் தன் அரண்மனை வந்தபோது இராஜராஜ தித்தன் வந்துவிட்டதாக தகவல் வந்தது. அவனை உள்ளே வரச் சொன்னார்.

இருபத்திநான்கு இராஜராஜதித்தன் துள்ளிக் குதித்துக் கொண்டு உள்ளே வந்தான். மீசை இப்போது கறுப்பாகி இருந்தது. முகத்தில் இரண்டு நாள் தாடி இருந்தது. தோள்கள் அகலமாக இருந்தன. தலைமயிர் சிலும்பி இருந்தது. மஞ்சள் நிற சட்டை அணிந்திருந்தான். கரை போட்ட காழகத்தை பஞ்சகச்சம் போட்டு அணிந்திருந்தான். இடுப்பில் உடைவாள், முதுகில் கேடயம் என்று ஆயுதபாணியாக இருந்தான். இரண்டு கைகளிலும் கேயுரம் மினுமினுத்தது. உள்ளே ஓடிவந்து அப்பாவின் காலில் விழுந்து வணங்கினான். வாளை எடுத்து அப்பாவிடம் கொடுத்தான்.

''நான் வெற்றி பெற்ற தேசங்கள் அனைத்தும் உங்களுக்குச் சொந்தம்'' என்று கை உயர்த்தி வாளின் மீது கைவைத்து சத்தியம் செய்தான். அந்த வாளை இராஜேந்திர சோழர் கண்ணில் ஒற்றிக் கொண்டார். எடுத்து அவன் நெஞ்சில் பதிய வைத்தார். பதிய வைத்த வாளை அவன் இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டான். பிறகு எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டான்.

''சேர தேசத்திலிருந்து இனி ஒரு சிறு துரும்பு கூட நமக்கு எதிராக பேசாது. அடித்து நொறுக்கி விட்டேன். அங்கிருந்து மதுரை வழியாக நாகை பயணப்பட்டேன். மதுரையிலும் எதிர்ப்புகள் எதுவும் இல்லை. நான் தென்பக்கம் போனேன். இராமேஸ்வரம் போய் அங்கிருந்து கடற்கரை ஓரமாக பயணப்பட்டு நாகை வந்து அடைந்தேன். நாகையிலிருந்து தெற்கும், வடக்குமாக புத்த பிட்சுக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது.

நாகையில் இராஜேந்திரசோழர் விகாரை கட்டுகிறபொழுது எனக்குத் தெரிந்து பதினைந்து புத்த பிட்சுக்கள்தான் இருந்ததாகச் சொன்னார்கள். இப்பொழுது முன்னூறு, நானூறு பேர்கள் இருக்கிறார்கள். அத்தனை புத்த பிட்சுகள் ஒரு விகாரைக்கு தேவையா என்ற கேள்வி வந்தது, ஆனாலும் அங்கு விசாரிக்காமல் நேரே இதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று வந்துவிட்டேன். அவை எனக்கு கவலைக்கிடமான விஷயமாகத் தோன்றுகிறது.

அந்த பிட்சுக்கள் மக்களிடம் பழகுகிறார்கள். அவர்களிடம் பிட்சைக்கு கையேந்துகிறார்கள். அவர்களோடு உட்கார்ந்து பேசுகிறார்கள். சிவன் என்றால் என்ன? என்று கேள்வி கேட்கிறார்கள். மதமாற்றம் செய்வார்களோ என்ற எண்ணம் எனக்குள் தோன்றுகிறது. சிலரை மதமாற்றமும் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.'' நிச்சயமாகத் தெரியவில்லை.''

''கவனிக்கப்பட வேண்டிய விஷயம், இதை நான் கவனிக்க வேண்டுமா. அல்லது நீ கவனித்துக் கொள்கிறாயா.''

''நீங்கள் உத்தரவிட்டால் நான் கவனித்துக் கொள்கிறேன். யார் கவனிக்க வேண்டுமென்று நீங்கள்தான் தீர்மானம் செய்ய வேண்டும்.''

''அங்கு இன்னும் என்ன கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.''

கடல் நடமாட்டத்தை கவனிக்கப்பட வேண்டும். தொடர்ந்து அங்கிருந்து மரக்கலன்கள் வருகின்றன.''

''எங்கிருந்து ?''

''ஸ்ரீ விஜயத்திலிருந்து,''

''எதற்காக ?''

''சீனத்துக் கப்பல்களிலிருந்து பொருள்கள் வாங்கி ஸ்ரீவிஜயமே நேரடியாக சோழத்தில் விற்கலாம் என்று வந்திருக்கிறது.''

''உள்ளே ஒரு மரக்கலமும் வரக்கூடாது. ஒரு விற்பனையும் நடக்கக் கூடாது. ஒரு பானை கூட விற்கக்கூடாது. ஒரு முழம் துணி கூட உள்ளே வரக்கூடாது. சொல்லிவிடு.''

நாம் சொன்னால் கேட்க மாட்டார்கள். அந்த காழகங்களைப் பார்த்தால், அந்த பானைகளை பார்த்தால் நம் ஆட்களுக்கு ஆசை வருகிறது. எனவே தொலைவில் நிறுத்தி, படகுகளில் ஏற்றி திருட்டுத் தனமாக கொண்டுவருகிறார்கள். கள்ளக் கடத்தல் அதிகமாகிறது.''

''எனவே என்ன செய்யச் சொல்கிறாய்.''

''அந்த மரக்கலன்களை பாதி வழியிலேயே மடக்கி எரியூட்டி விட வேண்டும். நாலு மரக்கலன்களை எரித்தால் ஸ்ரீவிஜயத்திலிருந்து யாரும் வரமாட்டார்கள்.''

''நல்லது, சரியான யோசனை. சீனத்துப் பண்டங்களை சீனத்துக் கப்பல்களிலிருந்து வந்தால் மட்டுமே நாம் ஏற்போம் என்று சொல்லி விடுங்கள்.''

''உங்கள் பேச்சில் ஒரு தவறு இருக்கிறது.'' வந்தியத்தேவர் வேகமாக பேசினார்.

''என்ன தவறு ?''

''ஸ்ரீ விஜயத்து மரக்கலன்களை, சீனப் பொருள்களை நாம் பாழ்படுத்தினால் செய்தி சீனர்களிடம் சொல்லப்படும். சோழர்கள் சீனர்களை வெறுக்கிறார்கள் என்று சொல்லப்படும். அது நமக்கும், சீனத்துக்கும் இருக்கும் நல் உறவை, நல்ல வியாபாரத்தைப் பாதிக்கும், நம்முடைய நானா தேசிகளும், மற்ற வணிக சபையினரும் இதை முக்கிய விஷயமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வியாபாரம் பாழ்படக் கூடாது. எனவே தீ

இடுவதோ, அழிப்பதோ நல்லதில்லை என்பது என்னுடைய அபிப்ராயம்.''

''பிறகு என்ன செய்யலாம்?''

''கொள்ளை அடிக்கலாம், மரக்கலன்களை திருப்பி அனுப்பலாம். அல்லது மரக்கலன்களை நிறுத்தி வைத்துக் கொண்டு அவர்களை சிறிய படகுகளில் ஊருக்கு போகச் சொல்லலாம்.''

''நல்ல யோசனையாகப்படுகிறது. பொருள்களை பாழ் செய்வானேன்.'' குந்தவை சொல்ல, இராஜேந்திரர் சிந்தித்தார்.

''இராஜராஜதித்தா, நான் இதற்கு விடை ஊருக்கு கிளம்பும் முன் தெரிவிக்கிறேன். இனி இந்த அரண்மனை உன்னுடைய அரண்மனை, உன் மனைவியரை வந்து இங்கு சுகமாக தங்கச் சொல். இந்த இடத்தில் ஒரே ஒரு அறையில் கீழ்பக்கம் குந்தவை குடியிருப்பாள். மற்றபடி இந்த மேல்பகுதி முழுவதும் உனக்கு சொந்தமானது.

மறுபக்கம் மற்ற இராஜராஜரின் அரசியர்களும் அங்கு இருப்பார்கள். இது மிக சுகமான இடம். இராஜராஜர் வாழ்ந்த இடம். நான் சந்தோஷமாக இருந்த இடம். இதை உனக்குப் பரிசளிக்கிறேன்'' என்று சொல்லி ஆரத் தழுவிக் கொண்டார்.

அப்பனும், பிள்ளையும் மாறி மாறி கன்னங்களில் முத்தமிட்டுக் கொண்டார்கள்.

''நீ இங்கு காவல் இருக்கிறாய் என்பதால், தஞ்சையைப் பற்றி தெற்கே எல்லைகள் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை. என்னையும் விட திறம்பட இதை நிர்வகிப்பாய் என்று எனக்குத் தெரியும், பரமன் மழபாடியாரையும், கிருஷ்ணன் ராமனையும் அனுசரித்துச் செல்.

வந்தியத்தேவரே லகுலீசப் பண்டிதரைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைத்தா.'' இராஜேந்திரர் சொல்லிக் கொண்டே இராஜராஜதித்தன் தோளில் கைபோட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

''லகுலீச பண்டிதரைப் பற்றி என்ன செய்தி வேண்டும்.'' இராஜராஜதித்தன் விசாரித்தான்.

''ஏன் சந்தித்தாயா.''

''பெருவுடையார் கோவிலில் இருக்கிறார். இன்று காலை பெருவுடையாரைத் தரிசனம் செய்யும் போது அவரையும் பார்த்து

விட்டு வந்தேன். எங்கே உன் தந்தை என்று கேட்டார். போய் சொல்கிறேன் என்று சொன்னேன். மற்ற விஷயங்கள் பேசும் போது இது மறந்துவிட்டது.''

''நல்லவேளை. இப்பொழுதாவது சொன்னாயே. தஞ்சை மக்களிடம் விடை பெறுவதற்கு முன்பு பெருவுடையார் கோவி லுக்கு போய்விட்டு வந்து விடுவோம். கிளம்புங்கள்'' என்று சொல்ல,

வெளியே அரசரின் தலை தெரிந்ததும் எக்காளங்கள் ஊதபபட்டன. முரசுகள் முழங்கியது, சோழம் சோழம் சோழம் என்று போர்வீரர்கள் கத்தினார்கள். நேரடியாக போருக்கு போகி றோம் என்று நினைத்து ஆவேசப்பட்டார்கள். அரசர் கையமர்த் தினார்.

மெய்க்காவல் படையிடம் தன் திட்டத்தை சொன்னார். மெய்க்காவல் படை ஓடிப்போய் அங்குள்ள வீரர்களிடம் ''அரசர் கோவிலுக்கு போய் வருவார். வந்த பிறகு கிளம்பலாம்'' என்று சொன்னார்கள். அவர்கள் அமைதியானார்கள்.

மெய்க்காவல்படை முன்னேற வந்தியத்தேவரும், இராஜராஜ தித்தனும், பரமன் மழபாடியாரும் பின்தொடர அவர்கள் பெரிய கோவிலை நோக்கி ஊர்வலமாகப் போனார்கள்.

கேரளாந்தகன் வாயிலை கடந்தார்கள். இராஜராஜர் வாயிலை கடந்தார்கள். உள்ளுக்குள்ளே எல்லா குதிரைகளும் ஒரு சேரப் போயின. முன் பக்கத்தில் படுத்திருந்த உருவம் சடேரென்று எழுந்து நின்றது. ஆறடி உயரம், இடுப்பில் கரைவேட்டி மொட்டைத் தலை, தலை சுற்றி ருத்திராக்ஷ மாலை, கையில் வளைதடி, உடம்பு முழுக்க திருநீறு, ஒற்றை கபாலம் தாங்கிய ருத்ராட்சம் கோர்த்த மாலை. கைகளில் பட்டை ருத்ராட்சம், கால்களில் வீரக்கழல், நெற்றியில் சுவர் பூச்சாய் திருநீறு. எழுந்து நின்று ''சிவோஹம்'' என்று லகுலீச பண்டிதர் குரல் கொடுத்தார்.

இராஜேந்திர சோழர் தன்குதிரையை விரைவாக முடுக் கினார். படிகளுக்கு அருகே போனார். தாவி இறங்கினார். படி களில் ஏறி பாசுபதத்தைச் சேர்ந்த லகுலீசப்பண்டிதர் என்கிற சிவாச்சாரியாரை விழுந்து வணங்கினார்.

''எல்லா நலன்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்க. சோழ தேசத்தினுடைய பெருமை உலகெங்கும் பரவட்டும்.

உன்னதமான ஒரு அரசன் என்ற உன் பெயர் பூவுலகம் இருக்கும் வரை நிலைக்கட்டும். இங்குள்ள பரத கண்ட அரசர்கள் எல்லோரும் தன்னை நெஞ்சை காப்பாற்றிக் கொள்ள வாட்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் நீயோ அடுத்தவன் நெஞ்சை பிளப்பதற்காக வாள் வைத்திருக்கிறாய். சோழ தேசத்தின் புகழ் கடல் கடந்து பரவும், இது சத்தியம். சிவன் மீது ஆணை'' என்று உரக்கச் சொன்னார்.

மன்னர் எழுந்து நின்று கை கூப்பினார்.

''நான் என்ன மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறேனோ அதையே சொல்கிறீர்கள்.'' இராஜேந்திரர் மிருதுவான குரலில் பேசினார்.

''நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன் தந்தை என்ன நினைத்துக் கொண்டிருந்தார். உன் பிள்ளை என்ன நினைக்கிறான் சகலமும் நான் அறிவேன். சோழ தேசத்தின் பெருமை மேலும் கூடப் போகிறது. உன் மகனால் இன்னும் வளரப் போகிறது. இன்னும் ஆறு தலைமுறைகளுக்கு உன் சோழ தேசத்தை அசைப்பதற்கு ஆள் இல்லை. உங்கள் காட்டில் பொன் மழை பெய்யப் போகிறது. அது உன்னுடைய காலத்தில் ஆரம்பம்.''

''ஆறுதலைமுறைக்குப் பிறகு மங்குமா?'' வந்தியத்தேவர் கேட்டார்.

''எது உயர்ந்ததோ அது தாழும். எது தாழ்ந்ததோ அது உயரும். இது உலகத்தின் நியதி வந்தியத்தேவரே, சோழ தேசம் மட்டும்தான் இந்த உலகத்தில் இருக்க வேண்டுமென்றால் அது நடக்காத காரியம்.

எங்கு இருக்கிறீர்கள். நூறாண்டுக்கு முன் எங்கிருந்தீர்கள். சோழ தேசம் என்று ஒன்று உண்டா. சோழப் பரம்பரை உண்டா. நடுவில் காணாமல் போயிருந்தீர்களே. விஜயாலயன் அல்லவா எடுத்து நிற்கவைத்தான். விஜயாலயனுக்குப் பிறகு வந்த பராந்தகன் அல்லவா கொடி பறக்கவிட்டான். அதற்கு பிறகு வந்த ஆதித்தனல்லவா இன்னும் உயர கொடியை தூக்கினான். சுந்தர சோழரல்லவா பலதும் காப்பாற்றினார். இராஜேந்திர சோழன் தகப்பன் இராஜராஜனல்லவா பெரும்புகழ் பரப்பினான். இவ்வளவு பெரிய கீர்த்திமான்கள் நிறைந்த பரம்பரை இது. மிகப்பெரிய வம்சம் இது. இது மேலும் தழைக்கும்.

எது உயர்ந்ததோ அது தாழும் இது விதி. மறுக்கவே முடியாது. எனவே தாழ்வதை பற்றி யோசிக்காமல் உயர்வது பற்றி யோசியுங்கள்.

என்ன வேண்டும் இராஜேந்திரா. எதற்கு இந்தக் கிழவனை தேடி வந்திருக்கிறாய்.''

''உங்களிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்க வேண்டும் என்று வந்தேன்.''

''தெரியும். உன் அத்தை, வந்தியத்தேவரின் மாதேவியார் குந்தவைதேவி ஏதோ சொல்லி அனுப்பி இருக்கிறாள்.

ஆமாம், நான்தானே குந்தவைக்கு சொன்னது, சில விஷயங்கள் கேட்பாரற்று கிடக்கின்றன. சோழ தேசத்தில் நிர்வாகம் சரியில்லை. போர், போர் என்று அலைந்து கொண்டிருக்கிறீர்கள். குடிமக்களை யார் கவனிப்பது, கோவில்களை யார் கவனிப்பது என்று கேட்டேன். சில தவறுகள் எடுத்து காட்டினேன்.

''ஆமாம். எல்லாதவறுகளையும் நானே சரிசெய்து கொண்டிருக்க முடியாது. பள்ளிப்படை கோவில்களை நிர்வாகம் செய்ய முடியவில்லை. அது தவறுதான், அது குற்றம்தான், அந்த குற்றம் தான். என் தங்கையின் தலையில் வந்து விடிந்திருக்கிறது.

எனவே, சோழ தேசத்தில் உள்ள அத்தனை பள்ளிப்படை கோவில்களையும் நீங்கள் நிர்வகிக்கும்படியாக ஒரு சாசனம் எழுதித் தருகிறேன். அதை கல்வெட்டாகவும் மாற்ற முயற்சிக் கிறேன்.

லகுலீச பண்டிதர் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். இதற்கு உண்டான பொன் கழஞ்சுகள் ஐந்நூறு முன்பணமாக இப்போது தருகிறேன்'' என்று திரும்ப, ஓலை நாயகத்தின் கையிலிருந்து ஒரு மூட்டை பொற்கழஞ்சு கனமாக தூக்கி அரசரிடம் கொடுக்கப்பட்டது. அரசர் மெல்ல எடுத்து லகுலீச பண்டிதரின் காலில் வைத்தார். கதவுக்கு பின்னால் இருந்த லகுலீசப் பண்டிதரின் சீடர்கள் வெளியே வந்தார்கள்.

லகுலீசர் கண்ணால் உத்தரவிட அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு போனார்கள்.

''ஆகட்டும் இராஜேந்திரா, பள்ளிப்படை கோவிலை நிர்வகிப்பது என்பது கடினமான வேலை, சாதாரணமான சிவாச்சாரியார்களால் செய்ய முடியாத வேலை, உள்ளே நுழையவும் சில

சமயம் அவர்கள் பயப்படுவார்கள். பஞ்சவன் மாதேவி பள்ளிப் படை கோவிலுக்குள் காராமணி போட்டவன் கன்னத்தில் அடித்து விட்டு வந்தேன். வாழை தோட்டத்தையும் வெட்டச் சொல்லி இருக்கிறேன். எல்லா பள்ளிப்படை கோவில்களையும் நான் கவனித்துக் கொள்கிறேன்.''

''அவர்கள் துணை உனக்கு உண்டு. உன்மீது எறிகின்ற அம்புகள் அவர்களால் தடுக்கப்படும். கவலை இன்றிப் போய்வா. இராஜநரேந்திரன் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்வான். கீழைச்சளுக்கியத்திலிருந்து எந்தவித பிரச் சனையும் வராது. நீ கவனம் கொள்ள வேண்டியது.''

''சொல்லுங்கள்.''

''கிழக்கு திசை, நிசம்பசூதனி பலி கேட்கிறாள். கிழக்கு திசை ஆடிக்கொண்டிருக்கிறது. நிசும்பசூதனி பலி கேட்கிறாள். ஆவேசமாக இருக்கிறாள். கோபமாக இருக்கிறாள். அங்கே கிழக்கு திசையில் சோழர்களுடைய கதறல்களை காது கொடுத்து கேட்க முடியாதவளாகத் தவிக்கிறாள்.

எனவே கிழக்கு திசை நோக்கி படை எடுக்க வேண்டும். நீ படை எடுக்கும் முன்பு நிசும்பசூதனியை பார்த்து விட்டுத்தான் போக வேண்டும்.''

''அப்படித்தான் செய்கிறேன். இராஜேந்திர சோழர் கை கூப்ப, அவர் கை தூக்கி விடை கொடுத்தார். இராஜேந்திர சோழர் பின்னடைந்தார். கீழே இறங்கினார். குதிரை ஏறினார். குதிரையில் இருந்தபடியே கோவிலை வலம் வந்தார். வேகவேக மாக கோவிலை விட்டு எல்லாக் குதிரைகளும் வெளியேறின.

லகுலீசப் பண்டிதர் திரும்பி பெருவுடையாரைப் பார்த்தார்.

''இந்த இளைஞன் சோழ தேசத்தின் பொக்கிஷம், இந்த இளைஞன் மன்னருக்கெல்லாம் மன்னன். இந்த இளைஞன் எரிக்க முடியாத ஒரு காமவேள். மன்மதன். அழகன். இவன் சீரும் சிறப்புமாக இருக்க உன்னுடைய ஆசீர்வாதங்கள் வேண்டும். நீ அவனை அரவணைத்துக் கொள்ள வேண்டும். நீ அவனுக்கு துணையாக இருக்க வேண்டும்.'' என்று சொல்லி கை கூப்பினார். கோவில் மணி உச்சிகால பூஜைக்கு அழைப்பாக ஒலிக்கத் துவங் கியது.

அத்தியாயம்

26

''என்னம்மா இது, என்ன இந்த முற்பகல் வேளையில், சொல்லி இருந்தால் நான் ஓடிவந்திருக்க மாட்டேனா. என்ன உடம்புக்கு, முகம் வாட்டமாக இருக்கிறதே, மேலுக்கு சுகமில்லையா அல்லது உள்ளே ஏதாவது பிரச்சனையா.''

''வைத்தியர் வீட்டிற்கு வந்தால் முகம் வாட்டமாகத்தான் இருக்க வேண்டுமா. அல்லது முகம் வாட்டமாக இருக்கிறவர்கள்தான் வைத்தியர் வீட்டிற்கு வருகிறார்களா.''

''இல்லை அம்மா. சந்தோஷமாக இருப்பவர்களும் வைத்தியர் வீட்டிற்கு வருவது உண்டு.''

''நான் சந்தோஷமாக வந்திருக்கிறேன்.''

''அடடா, உங்கள் சந்தோஷம் எங்கள் வீட்டில் வந்து தங்கட்டும். தங்கிப் பெருகட்டும். ''

''பெருகவேண்டும் என்று வந்திருக்கிறேன்.''

''அம்மா, பூடகமாகப் பேசுகிறீர்கள், உங்கள் அளவு எங்களுக்கெல்லாம் புத்தி போதாது. கலுவத்தில் மருந்து போட்டு அரைத்து, அரைத்து மூளை மழுங்கி விட்டது. சொல்லுங்கள். என்ன உடம்புக்கு.''

''உடல் நலம் நன்றாக இருக்கிறது. உங்களிடம் ஒரு விண்ணப்பத்திற்காக வந்திருக்கிறேன்.''

''என்னிடமா. விண்ணப்பமா. கட்டளை இடுங்கள் தாயே.''

''சற்று பொறுங்கள்.''

இராஜராஜ பிரம்மராயரின் மனைவி சோழகுல சுந்தரி கோவிலில் நடனமாடி திருமணமான பிறகு நடனத்தை விட்டு விட்டு கணவனை உபசரிப்பதே வாழ்க்கை என்று இருந்தவள் ஞானசம்பந்தனின் தாய் வெளியே எட்டிப் பார்த்தாள்.

அங்கு இருந்த சோழகுல சுந்தரியின் தோழிகள் உடனே ஓடிப்போய் பெரிய வில் வண்டியில் இருந்து பட்டுத் துணி

போர்த்திய இரு தட்டுகளை கொண்டுவந்தார்கள். பழங்களும், திரட்டுப்பாலும், தேன்குழலும் இருந்த அந்த தட்டுக்கள் மருத்துவரிடம் மரியாதையாக வைக்கப்பட்டன.

மருத்துவர் திகைத்தார். 'என்ன' என்பது போல் பார்த்தார்.

''இது எதற்காக என்று நினைக்கிறீர்கள்.''

''உங்கள் மகனை நான் சேர்த்துக் கொண்டு தொழில் கற்றுக் கொடுக்கிறேன். என்னைப்பற்றி ஆஹா, ஓஹா என்று சொல்லி இருப்பான். அதைப் பாராட்டும் வண்ணமாக வைத்திருக்கிறீர்களா.''

''உங்களைப் பற்றி மிக உயர்வாகச் சொல்கிறான். அதை பாராட்டும் வண்ணமாக நான் என்ன கொடுத்தாலும் ஈடாகாது. நாம் சம்மந்தம் பேச வந்திருக்கிறேன்.''

''யாரிடம்?''

''உங்களிடம்.''

''என்னம்மா இது. யார் யாருக்கு சம்மந்தம் வைப்பது. நீங்கள் அந்தணர். இராஜராஜ பிரம்மராயரின் ஒரே மனைவி. எப்படி சப்பந்தம் வைக்கப் போகிறீர்கள்.''

''என்னுடைய மகன் ஞான சம்பந்தனுக்கு உங்கள் மகள் நாகரத்தினத்தை பெண் கேட்டு வந்திருக்கிறேன்.''

''கடவுளே. நாங்கள் மருத்துவர்கள் அம்மா, நான்காவது வர்ணம்.''

''அதனால் என்ன, நான் ஒன்றும் பார்ப்பனத்தி இல்லையே, உண்மையில் என்னுடைய தந்தை மறவர், கற்சிலை என்பது என் தாயின் பெயர், திருவாரூரில் நடனமாடிக் கொண்டிருந்தவர். என் தந்தையை காதலித்து திருமணம் செய்து கொண்டவர். அவருக்கு பிறந்த மூன்றாவது பெண் குழந்தை நான். என்னை இராஜராஜ பிரம்மராயர் விரும்பி திருமணம் செய்து கொண்டார். எனக்கும், அவருக்கும் பிறந்த குழந்தை ஞானசம்பந்தன்.''

''போர்ப்பயிற்சி தருகிறேன் என்று சொன்னபோது வேண்டாம், நான் மருத்துவம் படிக்கிறேன் என்று வெகுதிடமாகச் சொல்லி வெகு தெளிவாக உங்களிடம் வந்து சேர்ந்து விட்டான்.

உங்களைப் பற்றி மிக உயர்வாக சொல்கிறான். உங்கள்

மனைவியைப் பற்றி மிக மரியாதையாகப் பேசுகிறான், வயிறு வாட விடமாட்டார்கள் என்று சொல்கிறான்.''

''அதுமட்டுமல்ல உங்கள் மகள் மீது அவனுக்கு பெரிய காதல், காதல் என்ன காதல், மோகம்.''

அவர் திகைத்தார்.

''பெரிய வார்த்தைகள் சொல்லுகிறீர்கள். ஏனம்மா உனக்கு ஏதாவது தெரியுமா?'' மனைவியைப் பார்த்தார்.

மனைவி தெரியும் என்பது போல தலை அசைத்தாள்.

''என்னிடம் சொல்லவே இல்லையே.'' அவர் குரல் லேசாக கோபத்தில் உயர்ந்தது.

''எப்படிச் சொல்வது; இதை நான் சொன்னால் சீறலாக வரும். சொல்ல வேண்டியவர்கள் சொன்னால் சரியாக வரும் என்றுதான் அமைதியாக இருந்துவிட்டேன்.''

''உங்கள் மகள் நாகரத்தினம் அழகியாம். கூரிய முகவாயாம். நீண்ட நாசியாம். வில்லொத்த புருவமாம், பெரிய கண்களாம். அடர்த்தியான தலைமுடியாம். அகலமான முதுகாம். கட்டுடம்பாக இருப்பாளாம், மருத்துவத்தைப் பற்றி நிறைய தெரிந்து வைத்திருக்கிறாளாம், மணிக்கணக்காக இரண்டு பேரும் பேசுவார்களாம், அவளுடன் பேசிப் பேசித்தான் நான் என்னுடைய மருத்துவ விஷயங்களை நினைவுபடுத்திக் கொள்கிறேன் என்று சொல்கிறான்.

அவள் எனக்கு மனைவியாக இருந்தால் நான் மிகச் சிறந்த மருத்துவனாக இருப்பேன். எனவே போய் பெண் கேள் என்கிறான்.''

''அம்மா என்னவோ மோகம் என்று சொன்னீர்கள்.''

''ஆமாம். மோகம்தான், பேச்சு பேச்சாக இருக்குமா. கொஞ்சம் எல்லை தாண்டி இருக்கிறது.''

''கடவுளே. இது நல்லதா. இது பாபமில்லையா.''

''என்னபாபம்.''

''அந்தணச் சிறுவனை நான் மடக்கி இழுத்து விட்டேன் என்று சொல்ல மாட்டார்களா.''

''இராஜராஜ பிரம்மராயரை எதிர்த்து யாராவது பேசுவார்களா, பேச முடியுமா.''

''ஆனால் அவர் சம்மதம் இருப்பதாக தெரியவில்லையே.''

''நான் சம்மதித்தால் அவர் சம்மதிக்கத்தாக அர்த்தம். அவர் எங்கோ போர் முனையில் இருக்கிறார்.''

''ஆமாம் அம்மா. ஊரே போருக்குக் கிளம்பிக் கொண் டிருக்கும்பொழுது, நாம் திருமணம் சம்மந்தம் பேசுவது நன்றாக இருக்கிறதா.''

''சரியாகத் தான் இருக்கிறது. போர்முனைக்குப் போக வேண்டுமென்று ஞானசம்பந்தன் பரபரக்கிறான். அப்படி போகும்பொழுது உடன் நாகரத்தினத்தை அழைத்துப் போனால், அவன் வைத்தியம் செய்வது எளிது என்றும், தன்னுடைய குறிப்பு களை நாகரத்தினம் சரியாக புரிந்து கொள்கிறாள் என்றும், மருந்து அரைப்பதில் வல்லவளாக இருக்கிறாள் என்றும், அடிபட்ட சோழ வீரர்களுக்கு விரைவில் வைத்தியம் செய்ய முடியும் என்று நினைக்கிறான். எந்நேரமும் மருத்துவம் பற்றி சிந்திக்கிறான். எந்நேரமும் மருத்துவம் பற்றி சிந்திக்கின்ற மகனுக்கு நான் அதற் கேற்ற பெண்ணைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டும்.''

''நான் ஆசைகாட்டி பார்த்தேன். அற்புதமான நடன அழகி களை மணம் செய்து வைப்பேன் என்று'' அவன் கை எடுத்து கும்பிட்டு விட்டான்.

அந்த அழகுக்கெல்லாம் நான் யோக்யதையே இல்லை. என்னுடைய வேலை அழகை ஆராதிப்பது அல்ல. மருந்து அரைப்பது. என் மீது எப்போதும் மருந்து நெடியும், கசப்பு வாசனையும் வீசும், எந்த நடனப் பெண்ணுக்கும் பிடிக்காது. எனவே, தயவுசெய்து அவர்களையும் வேதனைப்படுத்தி என்னை யும் துன்பத்தில் ஆழ்த்தாதே என்று சொல்லிவிட்டேன்.''

''நாகரத்தினத்தை பார்த்திருக்கிறீர்களா.?''

''இல்லை. பார்க்க வேண்டுமென்று ஆவலோடு வந்தேன்.'' சோழ குல சுந்தரி சொல்ல அவர் மனைவியை ஏறிட்டு நோக்கி னாள்.

மனைவி மெல்ல பின்பக்கம் போனாள். சற்று நேரத்தில் இரண்டு புஜத்திலும் வங்கி அணிந்து, கழுத்தில் காரை அணிந்து, மூக்கில் புல்லாக்கும், வலது மூக்கில் மூக்குத்தியும், காதுகளில் கனத்த தோடும் அணிந்து, நெற்றிச் சுட்டியோடு வந்து நின்றாள். கைகளில் அடுக்காய் வளையல்கள் இருந்தன. ஒல்லியான

உருவமாக இருந்தாலும், திடமாக முலைகள் இருப்பது அந்த மேலாடைக்கு உள்ளே தெரிந்தது. குல வழக்கப்படி கச்சு அணி யாது இருந்தாள். நெற்றியில் பெரிய திலகம் இருந்தது. வட்ட மான பிருஷ்டம், நீண்ட தொடைகள், சிறிய பாதங்கள், உதடு சிவந்திருந்தது, கட்டழகி என்று சொல்ல முடியாது. களை யானவள்.

''வந்து பெரியவர்களை நமஸ்கரித்துக் கொள்ளம்மா'' என்று அம்மா சொல்ல, திசை பார்த்து சோழகுல சுந்தரியை நமஸ்கரித்தாள். எழுந்து நின்று கண்ணோடு கண் பார்த்தாள். மிக மிருதுவாய்'' மிக்க நன்றி'' என்று சொன்னாள். சோழகுல சுந்தரிக்கு சிரிப்பு வந்தது. இழுத்து அணைத்துக் கொண்டாள். தலை தடவினாள். நெற்றியில் முத்தமிட்டாள்.

''நான் அணைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை கட்டிக் கொள்ள, மாட்டாயோ'' என்று மெல்லியதாக அதட்டினாள். கையை விரித்து மெல்ல சோழகுல சுந்தரியை தழுவிக்கொண்டு பிறகு சட்டென்று நாகரத்தினம் இறுக்கிக் கொண்டாள். அவளும் கன்னத்தில் முத்தமிட்டள். காதோரம் வந்து,

''அப்பா, எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள்'' என்று சொன் னாள்.

''அடியேய், நீ மாயக்காரியடி, என் பிள்ளைதான் அத்துமீறி விட்டான் என்று நினைத்தேன், மீற வைத்து விட்டாய்'' என்று முணுமுணுக்க, அவர்கள் இரண்டு பேரும் வாய்விட்டு சிரித் தார்கள்.

மருத்துவர் விழித்தார்.

''அம்மா, என் மகளை பிடித்திருக்கிறதா.''

''மிகவும் பிடித்திருக்கிறது, சூட்சுமமான பெண்ணாக இருக் கிறாள். என்ன பேச வேண்டும். எப்படி பேச வேண்டும் என்று தெரிந்திருக்கிறது. இது தெரிந்த பெண்கள் மிகக் குறைவு. வெறும் அசட்டு அழகாக இருந்தால் என் பிள்ளை காதலித்து இருக்க மாட்டான். இவளுடைய கெட்டிக்காரத்தனம்தான் அவனை ஈர்த்திருக்கும். இவருடைய சுறுசுறுப்பு தான் அவனை வியக்க வைத்திருக்கும். எனவே, அவன் தேர்ந்தெடுத்திருப்பது சரியான பெண்ணைத்தான் என்பதில் எனக்கு எந்தவிதக் குறையும் இல்லை.''

''இருப்பினும் அம்மா நாங்கள் மருத்துவர்கள்.''

''என்ன திரும்பத், திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.''

''இல்லை அம்மா, எனக்கு வேறு ஒரு கேள்வி இருக்கிறது.''

''சொல்லுங்கள்.''

''அவர் அந்தணப்பிள்ளை, பூணூல் போடுகின்ற தகுதி உடையவர். அவர் நாளை இன்னொரு அந்தணப் பெண் மணியை திருமணம் செய்து கொண்டு அந்தப் பெண், என்ன இருந்தாலும் நான் இரண்டாவதாக இருந்தாலும், நான் அந்தணப் பெண் நீ மருத்துவச்சி தானே என்று இவளை இழிவுபடுத்தினால் அது எங்களுக்கு வேதனையாக இருக்கும்.''

''சொல்லடி சொல். என் பிள்ளை என்ன சொன்னான் என்று சொல்.'' சோழகுல சுந்தரி அதட்டினாள்.

''அப்பா, என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதாலும் நினைக்க மாட்டேன் என்று, தாய் மீதும், தந்தையின் மீதும், கலுவத்தின் மீதும் அவர் சத்தியம் செய்திருக்கிறார்கள்.''

''மோகம் என்று சொன்னீர்களே அம்மா. அதன் விளைவாக இருக்கலாமல்லவா.''

''என் பிள்ளை இராஜராஜ பிரம்மராயருக்கு பிறந்தவன். உறுதிமிக்கவன். வாக்கு கொடுக்க மாட்டான். கொடுத்தால் மீற மாட்டான் என்று உங்களுக்கு தெரியாதா.''

''தெரியும் அம்மா. நன்றாகத் தெரியும். இருந்தாலும் என் பக்கத்து மக்களை கேட்டுக் கொண்டு,''

''உங்கள் பக்கத்து மக்கள் பலபேருக்கு இந்த காதல் விவகாரங்கள் தெரியும்.''

''அப்பொழுது நான் ஒருவன் தான் முட்டாளா.''

''இல்லை. பெண்ணிற்கு தந்தை என்று உங்களிடமிருந்து பயந்து விலகி இருந்திருக்கிறார்கள். உங்களுக்கு ஒரு மரியாதை கொடுத்திருக்கிறார்கள். அப்படித்தான் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.''

வைத்தியரின் மனைவி வைத்தியரை தள்ளிக் கொண்டு அந்த கூடத்தின் வேறு பக்கத்திற்கு போனாள். குசுகுசுவென்று

பேசினாள். நாகரத்தினமும், சோழகுல சுந்தரியும் இன்னும் நெருக்கமாக அமர்ந்து கொண்டார்கள்.

''இவைகள்தான் நகைகளா.''

''இன்னும் இருக்கின்றன அம்மா.''

''என் வீட்டிற்கு வாடி. ஏகப்பட்ட நகைகள் இருக்கின்றன. அத்தனையும் உனக்குத்தான்.'' ஆவலோடு பேசினாள்.

''மருந்து அரைக்கும் கைகளுக்கு எதற்கம்மா மர நகைகள்.''

''அடியே, எல்லா நேரமுமா மருந்து அரைத்துக் கொண்டு இருக்கப் போகிறாய். நீ வெளியே போகும் பொழுது விதம் விதமாக போட்டுக் கொள்ள, நிறைய புடவைகளும், நகைகளும் இருக்கின்றன. உனக்குத் தருவதில் எனக்கு பெரிய சந்தோஷம். என் மகனுக்கு நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள் என்பது மிகவும் ஆச்சரியம்.

காயத்திற்கு மருந்து போடுவதும், கட்டு போடுவதும் புண்ணை மெல்லக் கீறி மறுபடியும் ஆற வைப்பது உனக்கு கைவந்த கலையாமே. விதம் விதமாக உன்னைப் பற்றி சொல்லி இருக்கிறான்.''

வைத்தியர் மறுபடி கூடத்திற்கு வந்தார்.

''அம்மா எனக்கு சம்மதம். ஆனால் மோகம் என்று சொன்னீர்களே அந்த விஷயம்தான் வருத்தமாக இருக்கிறது. இவர்கள் இரண்டு பேருமே என்னை ஏமாற்றி விட்டார்கள் என்று மெல்லிய கோபம் வருகிறது.''

''சொல்லடி சொல், என்ன மோகம் என்று சொல், என் பிள்ளையிடம் பேசினாயே. அந்தக் கவிதையை உன் தகப்பனிடம் சொல்.'' சீறலாய் சோழகுல சுந்தரி பேச,

நாகரத்தினம் நிமிர்ந்து தந்தையை பார்த்தாள்.

''குறுந்தொகை என்ற நூலில் ஆயிரம் வருடத்திற்கு முன்பு எழுதப்பட்ட பாடல். இங்கே தலைவியை செவிலித்தாய் கேட்பதாக ஒரு விஷயம் வருகிறது.''

தலைவன் தலைவியைப் பார்க்க இரகசியமாக வந்தான். அவர்கள் இரண்டு பேரும் மாந்தோப்புக்குள் நுழைந்தார்கள். தலைவன் தலைவியோடு கூடுவதற்கு அவசரமாக முயற்சி

செய்தான். அவள் ஆடைகளை களைந்தான். செவிலித்தாய் தலைவியை தேடிக் கொண்டு வர, அவன் பயந்து தோப்பை விட்டு ஓடிவிட்டான்.

நிலைகுலைந்த ஆடையோடு இருக்கின்ற தலைவியைப் பார்த்து செவிலித்தாய் திகைத்துப் போனாள்.

'என்னடி இது, கற்போடு இருக்கின்றாயா இல்லையா; என்று கதறலோடு கேட்டாள். அதற்கு அந்த தலைவி பதில் சொன்னாள்.

''பசித்த யானை ஒன்று மாந்தோப்பிற்குள் வந்தது. தன்னுடைய நீண்ட துதிக்கையை நீட்டி மரக்கிளையை உடைத்தது. யாரோ, வரும் சத்தம் கேட்டு பயந்து வெளியே ஓடி விட்டது. இப்பொழுது மரக்கிளை முன்பு போல் இல்லாமலும் அதே நேரம் விழுந்து கீழே கிடக்காமலும் ஒரு பட்டையில் தொடங்கிக் கொண்டிருக்கிறது. என் கற்பும் அஃதே என்கிறாள்.

நான் கற்போடு இருக்கிறேன். அதே சமயத்தில் இல்லை. என்று பொருள்பட இந்தக் கவிதை அமைந்திருக்கிறது. நாங்களும் அவ்விதம்தான்'' என்று சொல்லித் தலைகுனிந்தாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

அவள் தகப்பன் மெல்ல முன்னேறி அவள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தான்.

''உன்னுடைய விருப்பப்படியே உன் திருமணம் நடக்கட்டும். எனக்கும் இதில் பூரண சம்மதம். நாகரத்தினம் முகம் பொத்திக் கொண்டு விசும்பத் தொடங்கினாள்.

சோழகுல சுந்தரி அவள் முதுகு தடவித் தேற்றினாள்.

''திருமணம் விரைவில் நடைபெற வேண்டும். நடைபெற்று இரண்டு பேரையும் போர்முனைக்கு அனுப்ப வேண்டும். போர் முனையில் தான் வைத்தியம் செய்வதற்கு உதவியாக தன்னுடைய மனைவி நிச்சயம் இருப்பாள் என்று ஞானசம்பந்தன் நினைக்கிறான். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே.''

''எனக்கே இவளை அழைத்துப் போக வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இப்பொழுது ஞானசம்பந்தன் போவதால் இவர்கள் இருவரும் போகட்டும், நான் தஞ்சையில் இருந்து கொள்கிறேன்'' என்று சொல்ல, எப்போது திருமணம் என்று அவர்கள் தொடர்ந்து பேசினார்கள்.

நாகரத்தினம் கொல்லைப்புறம் ஓடினாள். கவண்வில் எடுத்தாள். அடுத்த வீட்டு கிளையில் தொங்கிய மாங்காயை குறிபார்த்து அடித்தாள். மாங்காய் காம்பு சிதர கீழே பொத்தென்று விழுந்தது.

கீழே படுத்திருந்த ஞானசம்பந்தன் துள்ளி எழுந்தான். மாங்காயை எடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டான். கனிந்து விட்டது என்று அவனுக்கு தெரிந்து விட்டது.

லகுலீசப் பண்டிதர் தன் வலுவான கைகளால் அந்த பெரிய மரக்கதவுகளை அழுத்தி திறந்தார். விதம் விதமான ஓசை களுடன் எண்ணைய் காணாத அந்தக் கதவு விரியத் திறந்தது. கோவிலுக்குள் காற்று சுழன்று அடித்து சருகுகளை மேலே தூக்கி நிறுத்தின. அந்த சுழற்சி யாரோ நின்று வரவேற்பது போல அவருக்கு தோற்றம் அளித்தது. அவர் கை எடுத்து கும்பிட்டார்.

அது பஞ்சவன்மாதேவியின் பள்ளிப்படை. பஞ்சவன் மாதேவி இராஜராஜ சோழரின் அனுக்கி. அந்த அனுக்கிக்கு மாமன்னன் இராஜேந்திர சோழன், அவரை இறந்த பிறகு அவரை தகனம் செய்து அந்த அஸ்தியை கொண்டு வந்து இங்கு புதைத்து அதன் மீது சிவலிங்கம் எழுப்பினான். பழுவேட்டரையர் குலத்து பெண்மணி என்பதால் பஞ்சவன் மாதேவிக்கு பழுவேட் டரையர் சார்பாக துவார பாலகர்களும், நந்தியும் அனுப்பப் பட்டது.

அழகிய, உறுதியான கற்றளி ஒன்று எழுப்பப்பட்டது. மிகச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் நடந்தது.

இராஜராஜருடைய பட்டமகிஷி அல்ல. தந்தையினுடைய மனைவி அல்ல. இவள் அனுக்கி, நடனமாடுகின்ற பெண், அப்பா வின் காதலி. அவளுக்கு பள்ளிப்படை எழுப்ப வேண்டுமென் றால் அந்தப் பெண்மணி எவ்வளவு சிறந்தவளாக இருக்க வேண் டும். எத்தனை உத்தம ஸ்ரீயாக இருக்க வேண்டும். ஒரு காலத் தில் பஞ்சவன்மாதேவி என்றால் சோழர் குலமே எழுந்து கை கட்டி நிற்கும். மாமன்னர் இராஜராஜரிடம் என்ன காரியம் ஆக வேண்டுமென்றாலும் அது பஞ்சவன்மாதேவி மூலம் போனால் நிச்சயம் நடக்கும் என்ற எண்ணமும் மக்களுக்கு இருந்தது.

தஞ்சை எனக்கு வேண்டாம். நான் வேறொரு இடத்தில்

வேறொரு நகரம் ஸ்தாபித்துக் கொள்வேன் என்று இராஜராஜ ரிடம் இராஜேந்திரர் சொல்ல இருவருக்கும் பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது.

மிகத் தெளிவாக அதற்குள் புகுந்து பஞ்சவன்மாதேவி இராஜேந்திரன் பக்கம் இருக்கின்ற நியாய, தர்மத்தை எடுத்துச் சொல்ல இராஜராஜர் புரிந்து கொண்டார். சம்மதித்தார், இராஜேந் திர சோழருக்கு அதில் மிகப்பெரிய திருப்தியும், நன்றி உணர்ச்சி யும் இருந்தன. அதன் விளைவாகத்தான் இந்தப் பள்ளிப்படை கோவில் எழுப்பப்பட்டது.

ஆனால் கோவில் எழுப்பி என்ன புண்ணியம். இது சீராக பராமரிக்கப்படவில்லையே. இராஜேந்திர சோழர் தஞ்சையை விட்டு நகர்வதற்கு முன்பே பல கோவில்கள் இப்படி இருக்கின் றன. அவர் நகர்ந்துவிட்டால் இதையெல்லாம் கேட்பாரே யாரும் இல்லை. ஒரே தலைமுறையில் இந்த கோவில்கள் பாழடைந்து இருப்பது. இந்த கிராமத்து மக்கள் என்ன செய்கிறார்கள். அவர் மெல்லக் கோபப்பட்டார்.

கோவிலுக்குள் காராமணிச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. நிருதியில் வாழை மரங்கள் இருந்தன. தரையோடு தரையாக இருந்த கிணற்றின் மீது புற்கள் மூடி இருந்தன. கருவறைக்குள் இருந்து வௌவால்கள் உள்ளேயும், வெளியேயும் பறந்து கொண் டிருந்தன. இப்போது மெல்ல புறக்கணிக்கப்படுகிறது. இன்னும் வேகமாக புறக்கணிக்கப்படப் போகிறது என்று லகுலீசப் பண்டித ருக்குத் தெரிந்தது. வருத்தமானார்.

இங்கு சரியான தலைமை உட்காராவிட்டால் தஞ்சை மேலும் பாழடைந்துவிடும். இம்மாதிரியான பள்ளிப்படை கோவில் களுக்கு ஏற்கனவே ஜனங்கள் வருவதில்லை. யாருமே வராத இடமாக, அமானஷ்ய இடமாகப் போய்விடும். இந்த இடத்தில் மெல்லிய அமானுஷ்யம் இருக்கத்தான் செய்கிறது. பஞ்சவன் மாதேவி உலாவரும் இடமாகத்தான் இருக்கிறது. இதை சரிசெய்ய வேண்டும். இங்கு நான்கு ஆட்கள் உட்கார வேண்டும்.

அவர் கோவில் ஏறி சம்மணமிட்டு உட்கார்ந்தார். கிராம மக்கள் வரிசையாக உள்ளே நுழைந்தார்கள்.

''எதனால் இந்த கோவில் பாழ்பட்டு கிடக்கிறது. எதனால் நீங்கள் பராமரிக்கவில்லை. இந்த கோவிலுக்குள் காராமணி

விதைத்தது யார். வாழை வளர்த்து யார். காராமணி விதைத்த வருக்கு ஒரு பொன் அபராதம். வாழை நட்டவருக்கு இருபது மாடை அபராதம். சரியாக பராமரிக்கப்படாத உங்களுக்கு இரண்டுபொன் அபராதம். இன்று மாலைக்குள் இந்த கோவி லுக்கு எண்ணையும், சுத்தம் செய்ய துணிகளும், பெருக்கி, துடைக்க துடைப்பங்களும், நீரூற்றிக் கழுவி விட குடங்களும் தேவைப்படும். உடனடியாக அதைக் கொண்டுவந்து சுத்தம் செய்யும் வேலையை ஏற்பாடு செய்ய வேண்டும். குங்கிலியம் போட்டு வௌவால்களை துரத்த வேண்டும்.

இங்குள்ள சிவாச்சாரியார் யார்? அவர் ஏன் வரவில்லை?''

''பட்டீஸ்வரத்திலிருந்து சிவாச்சாரியார் வர வேண்டும்.

இந்த கோவிலுக்குள் வந்தால் அவருக்கு ஜூரம் வந்து விடுகிறதாம். அவருக்குப் பயமாக இருக்கிறதாம். அதனால் அவர் வர மறுக்கிறார். நாங்களாக எப்படி பூஜை செய்வது என்று பயந்து வெறுமே பூ மட்டும் மேலே தூவி விட்டு போய் விடு கிறோம். அதுவும் சில நாளாக நின்றுவிட்டது.''

''சரி, நான் இங்கு அமர்ந்து பூஜை செய்யப் போகிறேன். தினசரி அபிஷேகம் செய்யப் போகிறேன். என்ன தொந்தரவு எனக்கு வந்துவிடுகிறது என்று நீங்கள் கூட இருந்து பார்த்துக் கொள்ளலாம்.

மிக அழகான, மிக அமைதியான கேட்டதை கொடுக்கின்ற வலுவுடைய தேவதையின் கோவில் இது. ஒருபொழுதும் இதைப் புறக்கணித்துவிடாதீர்கள். நான் இருக்கிறேன். எந்த கலவரமும் வேண்டாம். இன்னும் அரை நாழிகையில் நான் கேட்ட பொருள் கள் அத்தனையும் இங்கு வந்துவிட வேண்டும். உடனடியாகத் தீபம் ஏற்றப்பட வேண்டும்'' என்று சொல்ல, கிராம மக்கள் பர பரப்பானார்கள்.

இராஜராஜ சோழரின் அனுக்கி பஞ்சவன்மாதேவி சந்தோஷ மானாள். லகுலீசப் பண்டிதரை நோக்கி கும்பிட்டாள். உள்ளே இருக்கின்ற தேவதை தன்னை வணங்குவது அவருக்குத் தெரிந் தது. அவர் கை உயர்த்தினார்.

''இந்த தேசத்தை காப்பாற்ற வேண்டியது உன் கடமை. உன் மகன் போருக்கு போகிறான். அவனுக்கு துணை செய்ய வேண்டியது உன் கடமை. அவனை வாழ்த்து தாயே,'' என்று லகுலீசர் விண்ணப்பித்துக் கொண்டார்.

மஞ்சள் நிற கொழுக்கட்டை மந்தாரை ஒன்று சுழன்று வந்து இராஜேந்திரர் தலையில் அமர்ந்து கொண்டது. தோட்டத் திலிருந்து காற்றில் மிதந்து வந்தது.

'அஹோய்' என்று எல்லோரும் வியந்தார்கள்.

இராஜேந்திர சோழர் அதை தலையில் இருந்து எடுத்து கண் ணில் ஒற்றிக் கொண்டு, பிறகு, வலதுகாதில் சொருகிக் கொண் டார்.

இராஜேந்திர சோழர் கட்டிலில் உட்கார்ந்திருக்க அவ னுடைய மனைவியர் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டார்கள். பரவை மட்டும் இரண்டடி தள்ளி இருநதாள். மற்றவர்கள் தழுவிக் கொள்ளட்டும் என்பது போல அந்தச் செய்கை இருந்தது.

''பரவை, சபை கூட இன்னும் எத்தனை நாழிகை ஆகும்.''

''கால் நாழிகை ஆகும் என்று சொல்கிறார்கள். கால் நாழிகை யில் சகலரும் வந்து விடுவார்கள். அத்தனை சேனாதிபதிகளும் இங்கு இருப்பார்கள்.''

அந்தப்புரத்திற்கு மறுபுறம் இருந்த அரண்மனையில் ஒவ் வொரு சேனாதிபதியாக உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்கு தக்கவாறு ஆசனங்கள் போடப்பட்டன. உபச்சாரங்கள் செய்யப் பட்டன.

அருண்மொழிப்பட்டன் ஒரு நாற்காலியின் கைப்பிடியில் அமர்ந்தபடி வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான். யாரெல் லாம் வருகிறார்கள். யாரெல்லாம் வர வேண்டும் என்று அவன் மனம் வேகமாக கணக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

முதல் வரிசையில் விக்கிரம சோழ சோழிய வரையனாகிய அரையன் இராஜராஜன் அமர்ந்திருக்க, அடுத்தது அருண்மொழி யின் தந்தை கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழ பிரம்மராயர் அமர்ந்திருந்தார். மாராயன் அருண்மொழியான உத்தம சோழ பிரம்மராயன் உட்கார்ந்திருக்க, ஈராயிரம் பல்லவரான உத்தம சோழ பல்லவரையன் இருந்தான். பாண்டிய ஸ்ரீ வல்லபன், வல்லவரையன் வந்தியத் தேவர், சத்திய சிகாமணி கொங்காள்வான் அப்பிம்மையாகிய இராஜேந்திர சோழ பிரம்மராயன், வீர இராஜேந் திர பிரம்ம மாராஜன், உத்தம சோழ பல்லவராயன், முடி கொண்ட சோழ விழுப்பரையன், விக்கிரம சோழி வரையன், பாண்டி உதய திவாகரன் இராஜராஜ நல்லூருடையான், நீலன்காடன்,

சேனாதிபதி மதுராந்தகன், பரகேசி மூவேந்த வேளாண், கொடும் பாளூர் இராஜேந்திர சோழமூவேந்த வேளார், இராஜராஜ அடிமூடி நாடாள்வான், இராஜேந்திர சோழ பிரம்மராயன், வில்லவன் ராஜன், ராஜராஜ குமாரராஜன், மூவேந்த வேளான், குணநிதி அருள்மொழி மூவேந்த வேளான், விக்கிரம சிங்க மூவேந்த வேளான், விக்ரம சோழ மூவேந்த வேளான், இராஜேந்திர சோழ மூவேந்த வேளான் வீர இராஜேந்திர அரையர். நீலகண்ட பட்டர், கொட்டி அதிராஜ்யாதி காடவராயர், வீரராஜேந்திர முனைய தாராயர், ஆதித்த சூடாமணி, இரட்டைபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான், ஜனநாத மூவேந்த வேளான், மதுராந்தக மூவேந்த வேளான், ராஜ மூவேந்த வேளான், வீர சோழ மூவேந்த வேளான், இராஜராஜ விஜயபாலர், விக்ரம நாராயண மூவேந்த வேளான், வைகுண்டன், சோழன் விழுப் பரையன், நிருப மூவேந்த வேளான், வீர இராஜேந்திர கட்சியூர் நாடாள்வான், பார்த்தீப இராஜேந்திர பிரம்மராயன், இராஜமாணிக்க மூவேந்த வேளான், மனுகுல சோழ மூவேந்த வேளான், இராஜ வித்யாதர மூவேந்த வேளான், வீர இராஜேந்திர மலையப்பச் சோழர், உதர மூவேந்த வேளான், மும்முடிச் சோழ விழுப் பரையர், ஸ்ரீ மாதவப்பட்டன், சிவதேவப்பட்டன், இருங்கடி வேங்கடபட்டன், விழுபுரம் நரசிம்மப் பட்டன், அத்தாமிபுரம் பட்டன், நானாவினோத மூவேந்த வேளாண், பராக்கிரம சோழ மூவேந்த வேளாண், வில்லவன் மூவேந்த வேளாண், இராமதூத வேளான், மாதேவன் பிரம்ம ராயன், கருணாகரன், மாதேவன் வெண்காடன் என்று பலரும் வந்திருந்தார்கள்.

இது தவிர நாராயணகவி என்ற புலவரும் சதுரான பண்டி தரும் தனியாக வீற்றிருந்தார்கள். இவர்கள் இருவருமே நாள் நட்சத்திரம் குறிப்பதில் வல்லவர்கள்.

இது பெருஞ்சபை. படை எடுக்கும் முன்பு என்ன செய்யப் போகிறோம் என்று சேனாதிபதிகளுக்கு தெளிவாக அறிவித்து விட வேண்டும். சேனாதிபதிகள் தங்கள் படைவீரர்களுக்கு சொல்வார்கள். எனவே, என்ன செய்யப் போகிறோம், எப்படி செய்யப் போகிறோம் என்பதை சொல்லுவதற்காக இந்த கூட் டத்தை இராஜேந்திரர் கூட்டி இருக்கிறார். கூட்டம் குறைவர கூடி இருந்தது.

கூட்டம் குறைவர கூடிவிட்டது என்று இராஜேந்திர சோழ ருக்கு உள்ளுணர்வு சொன்னது போலும். சரக்கென்று எழுந்து

நின்றார். ஒவ்வொரு மனைவியரையும் இறுக்க அணைத்துக் கொண்டு முத்தமிட்டார்.

''பரவை என்னோடு வா.'' என்று சொல்லி சால்வையை மேலே போர்த்தி நெற்றியில் திருநீறு இட்டு வெளியே வந்தார். பரவை மேலே சால்வை போட்டு பின் தொடர்ந்தான்.

இராஜேந்திர சோழர் உள்ளே நுழைந்ததும் தடேர் தடேர் என்று கைத்தடியை தரையில் தட்டி கட்டியக்காரன் உரத்த குரலில் அவர் வருகையை அறிவித்தான்.

திருமன்னி வளர இரு நில மடந்தையும்
போர்ச்செய பாவையும் சீர்த்தனிச் செல்வியும்
தன்பெரும் தேவியராகி இன்புற.....

என்று அவருடைய மெய்கீர்த்தியை, புகழை உரத்து பாடினான். அவன் மெய்கீர்த்தியை முடித்ததும், சோழம், சோழம், சோழம் என்று சேனாதிபதிகள் பிளிறினார்கள்.

இராஜேந்திர சோழர் வலது கையை இறுக்க மூடி தன் மார்பில் பட்டென்று மோதிக் கொண்டு,

''சோழம், சோழம், சோழம்'' என்று அடிக்குரலில் சொன்னார், எல்லோரும் அவரை நமஸ்கரித்தார்கள். இராஜேந்திர சோழர் பதிலுக்கு நமஸ்கரித்தார். அமரச் சொல்லி சைகை காட்டினார். எல்லோரும் அமர்ந்தார்கள். அமரும் சலசலப்பு சிறிது நேரம் இருந்தது. பிறகு, எந்த சப்தமும் இல்லாமல் அமைதியாக அவர் பேச்சுக்கு காத்திருந்தது.

''ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய. என் உயிரினும் மேலான சோழ தேசத்து சேனாதிபதிகளே, மாவீரர்களே, உங்கள் அனைவரையும் வரவேற்று வணங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர் கை கூப்பினார்.

எல்லோரும் தங்கள் கைகளை சிரம் மேல் கூப்பி அவருக்கு பதில் மரியாதை செய்தார்கள்.

நான் சுற்றி வளைத்துப் பேச விரும்பவில்லை. எதற்கு இந்த போர் என்பதை மட்டும் தெளிவுபடச் சொல்ல விரும்புகின்றேன்.

என் தங்கையினுடைய மகன், என் மருமகன் வேங்கி தேசத்திலிருந்து துரத்தப்பட்டிருக்கிறான். அவனுக்கு பதிலாக வேறொரு பெண்ணுக்கு பிறந்த விஷ்ணுவர்தன விஜயாதித்தன் என்பவனை

பட்டம் ஏற்க நம்முடைய குல எதிரியான மேலைச் சாளுக்கி யத்து மன்னன் ஜெயசிம்மன் பலவகையில் முயன்று வருகிறான். ஆனால் என் மருமகனை பதவியில் அமர்த்துகின்ற போர் அல்ல இது. அது ஒரு சாக்கு.

மேலைச்சாளுக்கியம் கீழைச்சாளுக்கியத்தை வளைத்து கீழைச்சாளுக்கியத்தோடு கலந்து பிறகு சோழ தேசத்திற்குள் நுழைய எண்ணம் கொண்டிருக்கிறது. நாம் போய் அடித்து நொறுக்கினோம் அல்லவா. பதிலுக்கு நொறுக்குவோம் என்று சபதம் செய்திருக்கிறது. நாம் கைப்பற்றினோம் அல்லவா. அந்த இடங்களிளெல்லாம் உள்ளுக்குள் நுழைந்து இவை மறுபடி யும் என்னுடைய இடம் என்று கொக்கரிக்கிறது. தொண்டை நாட்டை கபளீகரம் செய்வோம், காஞ்சிபுரத்தை எரியூட்டுவோம் என்றெல்லாம் மேலைச்சாளுக்கியர் பேசுகிறார்கள். திருவொற்றி யூரை சூறையாடப் போகிறோம், மயிலை, திருவல்லிக்கேணியை எரியூட்டப் போகிறோம் என்று அங்குள்ள மக்களுக்கு ஓலை அனுப்புகிறார்கள்.

மக்களை கலவரப்படுத்துகிறார்கள். இரட்டைபாடி, அதாவது வடமேற்காகப் போய் பிறகு மறுபடியும் வடகிழக்காக திரும்பி மானிய கேடயம் போய் மானிய கேடயத்தை அடித்து நொறுக்கி விட்டு, அங்கிருந்து இன்னும் சற்று கிழக்காக நகர்ந்து வேங்கியை நோக்கி வர வேண்டும்.

ஒருபடை கடற்கரை சாலை வழியாக வேங்கியை நோக்கி போகும். நமக்கு துணையாக குடகிலிருந்து மனிஜா வந்து நம் மோடு சேர்ந்து கொள்கிறார். ஆக, இடுக்கி தாக்குதல். ஒரு தூணும் நிற்கவொட்டாது, ஒரு அரண்மனையும் நிற்கவொட் டாது, ஒரு வீடும் நிற்க வொட்டாது சகலத்தையும் இடித்து தள்ள வேண்டும். யானையை விட்டு இடிக்க வேண்டும். நிலைக் காலை பெயர்க்க வேண்டும். தூணை பெயர்க்க வேண்டும். இதை முக்கியமாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். கொடுமை யான தண்டனைதான் அவர்களை மறுபடியும் சண்டைக்கு வராமல் இருக்க வைக்கும்.

இதோடு நாம் முடிந்து விடுவதில்லை. வேங்கியை தாண்டி ஒட்ட தேசத்திற்குப் போக வேண்டும். ஒட்டர்கள் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். பல் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த பற்களை உடைக்க வேண்டும். அதைத் தாண்டி மகிபாலன்

இருக்கின்ற பாலவம்சத்து மாளவ தேசத்தை அடித்து நொறுக்க வேண்டும். பிறகு, கங்கைக் கரையை அடைய வேண்டும்.

''கங்கைக் கரைக்கு போவது என்னுடைய நோக்கமல்ல. கங்கை கரைக்கு போய் கங்கை நீரை எடுத்து வந்து இங்குள்ள கோவில்களுக்கு கொடுப்பது விருப்பமென்றாலும் அதுவல்ல நோக்கம். நம்முடைய நானா தேசிகள் வணிகர்கள் ஸ்ரீ விஜயத்தில் மிகப்பெரிய துன்பங்கள் அனுபவித்திருக்கிறார்கள். அந்த துயரம் பார்க்க வயிறு எரிகிறது. அதைப் பற்றி நீங்களும் கேள்வி பட்டிருப்பீர்கள். எனவே, இந்தப் போரை தொடர்ந்து உடனடியாக, தொடர்ச்சியாக ஸ்ரீ விஜயத்தை நோக்கி போக வேண்டும். அப்படி ஸ்ரீ விஜயம் நோக்கி போக கங்கை கரை முகத்துவாரத்தில் நிற்கின்ற கடாரத்து படகுகள், நாவாய்கள், பெரும் நாவாய்கள் இவைகளை எல்லாம் வளைத்து பிடித்து வர வேண்டும் திரும்ப வரும்பொழுது ஒரு நாவாய் கூட்டம் நாகப் பட்டிணம் வந்து சேரும். நாம் தரை வழியாக வந்து சேருவோம்.''

''எனவே கங்கையை தொடுவது ஒரு விஷயமாக இருந்தாலும் மிகப் பெரிய நாவாய்களை கொண்டு வரவேண்டும். அந்த நாவாய்களின் அளவு பிரம்மிக்கதக்கதாக இருக்கிறது என்று வணிகர்கள் சொல்கிறார்கள். அந்த நாவாய்க்குள் நாலு யானைகள் நிற்கலாம். நூறுகுதிரைகள் நிற்கலாம். முன்னூறு ஆட்கள் இருக்கலாம். அவர்கள் அத்தனை பேருக்கும் குடிநீரும், உணவும் வைத்துக்கொள்கின்ற வசதியும் இருக்கலாம். போர் கருவிகள் இருக்கலாம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவ்வளவு பிரம்மாண்டமான நாவாய்களை நாம் அங்கிருந்து எடுத்து வரப் போகிறோம். இங்கேயும் நாவாய்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத்தாண்டி சேர தேசத்திலிருந்து கைப்பற்றிய நாவாய்கள் வெகுசீக்கிரம் நாகை வந்து அடையும், எனவே, ஸ்ரீ விஜயம் நோக்கிப் போகின்ற ஒரு அமைப்பும் நம்மிடையே இருக்கிறது.''

''இன்று கிளம்பினால் மறுபடியும் சோழ தேசம் வர எத்தனை காலமாகும் என்று நினைக்கிறீர்கள்.'' அவர் பேசி நிறுத்தினார்.

சேனாதிபதிகள் 'ஹா' என்று வாய்பிளந்த வ்ண்ணம் உட்கார்ந்திருந்தார்கள்.

''ஸ்ரீ வல்லபரே சொல்லுங்கள். இப்பொழுது கிளம்பினால் எப்பொழுது ஆகும்.''

''இரண்டு வருடங்களாவது ஆகும்.''

''மிக நல்லது. மிகச் சரியாகச் சொன்னீர்கள். இரண்டு வருடங்கள் ஆகும். தஞ்சைக்கு வந்து நாகையில் படகு ஏறப் போவதில்லை. கீழைச்சாளுக்கியத்திலேயே ஒரு நல்ல துறைமுக மாக பார்த்து நாம் படகு ஏறி விடுவோம். தூதுவர்களை அனுப்பி ஈழத்திலிருந்தும் நாவாய்கள் வரவேண்டும். ஈழத்து நாவாய் கள் மட்டுமல்ல சேரதேசத்திலிருந்து கொண்டு வந்த மிகப் பெரிய மரக்கலன்களும் நம்மை நோக்கி வரவேண்டும். எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவு கீழைச்சாளுக்கியத்தில் ஏறி மீதி உள்ள வர்கள் திருமயிலையிலும், திருக்கடல்மல்லையிலும் பிறகு நாகையிலும் ஏறிக்கொண்டு ஒட்டுமொத்தமாக நூற்றி இருபது மரக்கலன்களுக்கு மேலாக ஸ்ரீ விஜயத்தை அடைய வேண்டும்.

ஸ்ரீ விஜயத்தின் வரைபடம் இதுதான்'' என்று சொல்ல, அருண்மொழி மிகப்பெரிய வரைபடத்தை ஆணியில் அடித்து இறக்கினான். எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

விஜயத்தின் கிழக்கு பக்கம் பரந்த வயல்வெளிகள் உடை யது. ஸ்ரீ விஜயத்தின் மேற்கு பக்கம் முழுவதும் மலைகளால் ஆனது. மலைகள் என்றால் உயர்ந்த மலைகள் அல்ல. சிறிய பசும்குன்றுகள். இந்த குன்றுகளுக்கு நடுவே இடைவெளி உண்டு. இந்த இடத்திலிருந்து காலாட்படை போகும். கிழக்கே யானைகளும், குதிரைகளும் இறங்கும். இங்கேயும் இருமுனை தாக்குதல். ஸ்ரீ விஜயத்தை தீ இட வேண்டும். அவர்களை நம் பக்கம் சேர்க்க வேண்டும். அவர்கள் துணையோடு கடாரம், காம்போஜம் எல்லாவற்றையும் கொள்ளை அடிக்க வேண்டும். அத்தனை தங்கமும் நமக்கு வேண்டும். ஏனெனில் ஜெயங்கொண் டத்தில் நான் கட்டுகின்ற அரண்மனைக்கு நிறைய ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலைச்சாளுக்கியத்திலிருந்தும், இரட்டைபாடியிலிருந்தும், இலக்கத்திலிருந்தும், ஏன் ஒட்டர்களிடமிருந்தும், கீழைச்சாளுக் கியத்திடமிருந்தும், கலிங்கர்களிடமிருந்தும் ஆட்கள் வர வேண் டும். இங்கு வந்து கல் சுமக்க வேண்டும். நமக்கு அவர்களுக்கு கூலி கொடுப்பதற்கு உண்டான தங்கத்தை ஸ்ரீ விஜயத்திலிருந்து

கொள்ளை அடிக்க வேண்டும். கடாரத்திலிருந்து கொள்ளை அடிக்க வேண்டும்.

யாரேனும் ஒரு ஆள் விரல் நிமிர்த்தினால் கூட அந்த விரல் தறிக்கப்பட வேண்டும். யாரேனும் ஒருவர் முறைத்தால் கூட நெஞ்சில் கத்தி இறக்கப்பட வேண்டும். 'தூ' என்று ஒரு பெண் துப்பினால் என்ன செய்வீர்கள், சொல்லுங்கள்.'' ஒரு சேனாதி பதியை நோக்கி இராஜேந்திர சோழர் கேட்டார்.

சேனாதிபதி திகைத்தார்.

''பளீர் என்று கன்னத்தில் அறைவேன்.''

''கூடாது, அந்த இடத்திலேயே சிரச்சேதம் செய்ய வேண்டும். பெண்ணை கொல்வதா என்று யோசிக்காதீர்கள். தூ என்று துப்பியது உங்கள் மீது அல்ல. என் மீது. சோழ தேசத்தின் மீது. சோழ தேசத்து வணிகர்கள் மீது, இரண்டு கைகளையும் செதுக்கி, ஒன்றாகக் கட்டி கடைசிவரை சிவனை கும்பிட்டு கொண்டிரடா. என்று சொல்லி இருக்கிறார்கள் ஸ்ரீ விஜயத்தில், விடுவேனா. அவர்கள் கைகளை தரிப்பேன், முதுகு விரிய அடிப்பேன். பெண்களை அடித்தால் ஆண்கள் பதறுவார்கள் அல்லவா. பெண்களை அடிப்பேன். ஆண்கள் பதற வேண்டும். பதறி சண்டைக்கு வரவேண்டும். அப்படி சண்டைக்கு வந்தவனை குத்தி சொல்ல வேண்டும். பெண்களை அடித்தாலும் எவன் மௌனமாக கை கட்டிக்கொண்டு நிற்கிறானோ அவன் நமக்கு துணையாக வேண்டும்.

குழந்தைகளை அனுப்பி கிணற்றில் விஷம் கலந்தார்களே ஞாபகம் இருக்கிறதா. முன்னூற்று அறுபத்தியேழு வீரர்கள் இறந்தார்கள் ஞாபகம் இருக்கிறதா. அதுபோல இங்கும் நடக்கலாம், எனவே ஒரு வயது குழந்தையை கூட இராஜேந்திர சோழன் நம்பமாட்டான். அவனும் எதிரி. எதிரியின் மகள் எதிரி. பாம்புக்கு பிறந்தது பாம்பு. தேளுக்கு பிறந்தது தேள். தேளுக்கு பட்டுப் பூச்சியா பிறக்கும். பைங்கிளியா பிறக்கும்.

எனவே சிறிதளவும் ஈவு இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டிய போர் இது என்பதை சொல்லத்தான் உங்களை அழைத்தேன்.

பாவம் விட்டு விட்டேன் என்று தயவு செய்து என்னிடம் என்னிடம் சொல்லாதீர்கள். நான் உங்களை விட மாட்டேன்.

அவ்வளவு கடுமையாக என்னால் இருக்க முடியாது என்று உங்களில் யாரேனும் நினைப்பின் அவர்கள் இப்பொழுதே ஒதுங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு கோட்டை காவல் வேலை நிச்சயம் தருகிறேன். ஏன் நெல் அளக்கிற வேலை, பருத்தி துணி களுக்கு பாகு போடுகிற வேலை, கம்மாளர்களுக்கு உதவியாக இருக்கிற வேலை என்று பல வேலைகளை நீங்கள் செய்யலாம்.''

''போர்முனைக்கு வந்தால் இராஜேந்திர சோழனுக்கு இப்போது இருக்கின்ற வெறி உங்களுக்கும் இருக்க வேண்டும். இதைவிட அதிகமாக இருக்க வேண்டும்.''

சத்திரிய சிகாமணி கொங்காழ்வார் எழுந்தார். ''ஜெயசிம்மன் தோற்றோடி போவான் என்பது என் எண்ணம். நாம் வருவதற்கு முன்பு அந்த இடத்தை வேங்கியை காலி செய்து ஓடிப் போய் வடக்கே ஒளிந்து கொள்வான் என்பது என்னுடைய அனுமானம்.''

''இருக்கலாம்.''

''நாம் ஜெயசிம்மனை பின் தொடருவோமா. அல்லது....

''கங்கைக்கு போக வேண்டும். என் தந்தை செய்து முடிக்காத, ஆசைப்பட்ட அந்த வேலையை நாம் செய்து முடிக்க வேண்டும். சோழ தேசத்தில் உள்ள ஒவ்வொரு சிவாலயத் திற்கும் ஒரு சொம்பு கங்கை ஜலம் தரப்பட வேண்டும். புதிய ஏரி ஒன்றை ஜெயங்கொண்டத்திற்கு அருகே நிர்மாணித்து அதில் கங்கையை கலந்து அது முழுவதும் கங்கை என்று நாம் கொண்டாட வேண்டும். வடக்கே இருந்த கங்கை தெற்கே இராஜேந்திர சோழனால் வந்தது.

பகீரதன் தவம் செய்து கொண்டு வந்த கங்கை இராஜேந் திரன் எந்த தவமும் செய்யாமல் அவனுடைய சேனாதிபதிகள் துணையோடு இங்கே கொண்டு வந்து விட்டான் என்ற புகழ் எனக்கு வேண்டும்.''

''சோழம் சோழம் சோழம்.'' என்று அவர்கள் கத்தினார்கள்.

''இராஜேந்திர சோழர் வாழ்க'' என்று அவர்கள் கத்தினார்கள்.

இராஜேந்திர சோழர் விழி சிவக்க, பற்கள் நரநரக்க, மீசையை முறுக்கியபடி உடம்பில் ஒரு பதட்டத்தோடு இருந்தார்.

பரவை மெல்ல முதுகில் கை வைத்துத் தடவினார். அவர் திரும்பி பரவையைப் பார்த்து சிரித்தார். அமைதியானார்.

என்னுடைய எண்ணம் கங்கையை கொண்டு வருவது, கடற்படையை உருவாக்குவதும்தான். இது மிக முக்கியம். எனவே அடுத்த இரண்டு வருடங்களுக்கு நமக்கு தஞ்சையை பற்றிய எண்ணமே இருக்கக் கூடாது. ஆனால் சோழ தேசத்திற்காகத் தான் இதை செய்கிறோம். என்ற நினைப்பு நமக்குள் இருக்க வேண்டும்.

இரண்டு முறை நாள் குறித்து நாள் நகர்ந்துவிட்டது. சதுராம பண்டிதரே, இப்பொழுது சொல்லுங்கள், எந்த நாள் கிளம்ப லாம்.''

''நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. உங்களுக்கு சூரியன் மிக நல்ல கிரகம். சூரிய ஓரையில், சூரிய திசை நோக்கி அதாவது கிழக்கு நோக்கி சற்று நகர்ந்து விட்டு, பிறகு வடக்கு நோக்கி நகருங்கள்.''

இந்த கேள்வி வரும் என்று காத்திருந்தது போல சதுராம பண்டிதர் சொல்ல, அவர்கள் மறுபடியும் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

''வேறு ஏதேனும் கேள்வி இருக்கிறதா.''

''ஒரு இடம் நிரம்பாமல் இருக்கிறது.'' அருண்மொழி உரக்க குரல் கொடுத்தான். சபை அவனை நோக்கி திரும்பியது.

''தரையிலே நடக்கின்ற போரில் நமக்கு காயம் ஏற்பட் டால் அதற்கு மிகச் சரியான மருந்துகளை நம்முடைய மருத் துவர் குழு வைத்திருக்கிறது. ஆனால் கடல்பயணம் எப்படி என்று நம்மில் பலருக்கு தெரியாது. என்ன மருந்துகள் வேண் டும் என்பதும் நமக்கு அனுபவம் இல்லை. எனவே இதற்கு அனுபவமிக்கவர்கள் யார், எங்கு இருக்கிறார்கள். என்ன மருந்து, என்ன விதமான கடல் நோய்கள் வரும் என்பதை தெரிந்து கொள் ளாமல் போனால் பலஹீனமாக அங்கு போய் இறங்குவோம் என்று தோன்றுகிறது.''

''வணிகர்களைக் கேட்டால் போதுமா அல்லது வைத்தியர் களைக் கேட்க வேண்டுமா.''

''வணிகர்களையும் கேட்போம். வைத்தியர்களையும் கேட் போம். வைத்தியர்களில் மிக முக்கியமான உத்தம சோழ மிலா டுடையாரும், இராஜேந்திர சோழ பிரம்மராயனும், உத்தம சோழ

கோனும் நகர்ந்து விட்டார்கள். அவர்கள் வாள் முதுகு படையினர், முன்னே போய் திருவொற்றியூரில் தங்கி விட்டார்கள். எனவே வைத்தியரைத்தான் நாம் அழைக்க வேண்டும்.''

''நல்லது. வைத்தியரை அழைத்து வாருங்கள். வணிகர்களிடம் சந்தேகம் கேளுங்கள். இதை கிருஷ்ணன் ராமன் அவர்கள் பொறுப்பாக எடுத்துக் கொள்ளட்டும்.'' என்று சொல்ல,

''சபை கலையலாம்'' என்று கட்டியக்காரன் சொல்ல, எல்லோரும் வெளியே நகர்ந்தார்கள்.

இராஜேந்திர சோழர் சிம்மாசனத்தில் சாய்ந்து கொண்டிருந்தார். மெல்ல இறங்கினார். பரவையின் தோளில் கை வைத்து நகர்ந்தார்.

''அருண்மொழி என்னோடு வா'' என்றார். அருண்மொழி அந்தப்புரத்துக்குள் நுழைந்தான்.

வேற்று ஆண்மகன் வருகிறான் என்று தெரிந்ததும் பட்ட மகிஷியும், இராஜேந்திரர் மனைவியும் மேலே சால்வையை போர்த்திக் கொண்டு எழுந்து நின்றார்கள். சகலரையும் கால் தொட்டு அருண்மொழி வணங்கினான். அவனுக்கு ஆசனம் அளிக்கப்பட்டது.

''கடல் நோய் என்று ஒன்று உண்டா. அப்படி வருமா. நீ சொன்னது எனக்கு புதிராக இருந்தது. யோசிப்பதற்குள் சபை கலைந்துவிட்டது. என்னது வரும் கடல் நோய்?''

''பலதும் வரும், தலை சுற்றும், ஆடிக்கொண்டே இருப்பதால் வாந்தி வரும். உணவு உண்ண பிடிக்காது. குளிர்காற்று இருப்பதால் மூக்கில் தடுமன் பிடிக்கும். பிறகு மூச்சிழுப்பு இருக்கும். பிறகு ஜுரம். கண் திறக்கவொட்டாத அளவுக்கு கடும் ஜுரம் இருக்கும். அந்த கடும் ஜுரத்தோடு தரை இறங்கினால் என்ன போர் செய்வது. இதை நிச்சயமாக நமது போர் வீரர்கள் சமாளித்தாக வேண்டும்.''

''அடடே. அப்படியானால் இதற்கு உண்டான மருந்துகள் என்ன?''

''தெரியாது. நான் இதுவரை கடற்பயணம் போனதில்லை. ஆனால் இப்படியெல்லாம் தொந்தரவு இருக்கும். வணிகர்கள் சொல்வார்கள்.''

''வணிகர்களிடம் மருந்து இருக்குமா.''

''இருக்கலாம். இருபது பேருக்கு முப்பது பேருக்கு மருந்து இருக்கலாம். நாம் நூற்றி இருபது மரக்கலன்களில் போக வேண்டு மென்றால் எத்தனை? எங்கிருந்து? எப்படி?''

''இது முக்கியமான பிரச்சனையாக இருக்கும் போலிருக் கிறதே. சரி வைத்தியரை வரவழைத்து விடு. வைத்தியர் குழு வையே வரவைத்து விடு. நாம் பேசுவோம். நீ மட்டும் பேசு கிறாயா. அல்லது நானும் வரட்டுமா.''

''நீங்களும் இருங்கள். புதிது புதிதாக வேறு ஏதேனும் செய்திகளை அவர்கள் தரக்கூடும்.''

''ஒருவேளை அவர்களுக்கும் இதில் பரிச்சயம் இல்லாமல் இருந்தால் என்ன செய்வது,'' இராஜேந்திரர் கேட்டார்.

''அவர்களுக்கு பரிச்சயம் இல்லாமல் இருக்காது. ஏனெனில் வணிகர்கள் அவர்களிடமிருந்துதான் மருந்துகள் வாங்கிப் போகி றார்கள்.''

''வணிகர்களை எப்போது சந்திக்கலாம்.''

''நாளை மறுநாள் தானே போகிறோம். அதனால் நாளை காலையில் சந்திக்கலாம்.'' அருண்மொழிப் பட்டன் சொன்னான்.

''போய் வா.'' அருண்மொழி, ''என்ன அவசரமானாலும், எப்போது வேண்டுமானாலும் நீ அழைக்கலாம்.'' அவர் உள்ளே நகர, அருண்மொழி வெளியே வந்தான்.

* * *

அத்தியாயம் 27

அவனுடைய விரல்கள் அவளுடைய உடம்பு முழுவதும் தடவின. அவள் மயங்கிச் சரிந்தாள். என்னால் முடியாது நீ ஏதேனும் செய்து கொள். என்பதுபோல் கிடந்தாள்.

''இவ்வளவு எளிதாக முடியும் என்று நினைத்தாயா.''

நாகரத்தினத்தை பார்த்துக் கேட்டான். அவளுடைய சிறிய முலைகளில் முகம் தேய்த்தான். உறுதியானதும், சிவந்த காம்பு களை உடையதுமான அந்த முலைகள் ஆரோக்கியமாக இருந் தன. நரம்புகள் புடைத்திருந்தன. உடம்பு நெகிழ்ந்து கொண்டே இருந்தது. இடுப்பில் கை வைக்க இன்னும் நெளிந்தாள். அந்த நெளிவு அவளுக்கு வெட்கத்தை கொடுத்தது. அவனுக்கு ஆவே சத்தை கொடுத்தது. அவர்கள் திரும்பத் திரும்ப இறுக்கத் தழுவிக் கொண்டார்கள்.

''நமக்கு திருமணமாகப் போகிறது என்ற சந்தோஷத்தை விட உங்களோடு நாம் போர்முனைக்கு வரப் போகிறேன் என்ற சந்தோஷம்தான் மிகப் பெரிய குவியலாக இருக்கிறது.''

''குதியலாக இருக்கிறது என்று வெறுமே வார்த்தையில் சொன்னால் போதுமா. செய்கையில் காட்டு.''

''எப்படி காட்டுவது.''

''இப்படி.'' அவன் அவள் இதழோடு இதழ் பதித்தான் நாக்கு சுவைத்தான். அவள் மயங்கினாள். எச்சில் ஒழுக அவன் மீது சாய்ந்து கிடந்தாள்.

''அப்பா, என்று கம்பீரம்.'' அவள் அவனை வியந்தாள்.

அவன் அவளை மெல்லத் தழுவினான்.

என்னகுழைவு. என்ன மென்மை. அவனும் வியந்தான். பரஸ்பரம் வியந்து கொண்டிருந்தார்கள். கலவியில் ஈடுபட தவித்தார்கள். ஆனால் முறையாக கலவியில் ஈடுபட அவர்கள் இன்னும் பயிலவில்லை. அந்த உடம்பு இன்னும் பக்குவப்பட

வில்லை. ஆனால் இந்த தழுவலே, இந்த முத்தமிடலே, இந்த கொஞ்சலே அவர்களுக்கு மிகப் பெரிய சுகத்தை கொடுத்தது.

வாசலில் குதிரைகள் சத்தம் கேட்க, வைத்தியர் வெளியே கதவு திறந்து வந்தார். அவர்கள் இருவரும் திடுக்கிட்டு பிரிந்தார்கள். அவன் எழுந்து நின்று உடைகளை அணிந்து கொண்டான். அவளும் தன்னைச் சீராக்கிக் கொண்டாள். இரண்டு பேரும் என்ன என்று காது கொடுத்து அறை வாசலில் நின்று கேட்டார்கள்.

அவனை தந்தை அழைக்கப் போகிறார் என்று தெரிந்து அவனை முதுகில் தட்டி முன்னே போ. என்ற சைகை செய்தாள். அவன் எழுந்து முன்னே போய் கூடத்தில் நின்று கொண்டான்.

வைத்தியர் கூடத்திற்கு வந்தார். அவன் நிற்பதை பார்த்து "வெளியே வா. உன்னிடம் வணிகர்கள் பேசவேண்டும் என்கிறார்கள்." என்று சொல்ல, அவர்கள் இருவரும் வந்தார்கள். மற்ற வைத்தியர்களையும் அழைத்த வர ஆள் அனுப்பினார்கள். வணிகர்கள் கூட்டம் திண்ணையில் உட்கார, எதிர் திண்ணையில் வைத்தியர் உட்கார்ந்தார்.

"கடல் தாண்டி போக வேண்டும் என்றால் என்ன மருந்து என்ன விதமான பிரச்சனைகள் ஏற்படும்?"

"ஒரே ஒரு மருந்துதான். கிச்சிலிக்காய் போதும். எந்த இடத்தில் கிச்சிலிக்காய் கிடைக்கிறதோ அதை பச்சையாக பறித்து இலையாகவும், காயாகவும் வாங்கிக் கொண்டால் போதும், அதை முகர்ந்தால் போதும். தடுமன் பிடித்தால் அதற்கு உண்டான மருந்துகள் எங்களிடம் இருக்கின்றன. நுரையீரலில் கபம் சேர்ந்தால் அதை நீக்கவும் எங்களுக்கு தெரியும். ஜூரம் இருப்பினும் அதற்கு உண்டான மருந்துகள் இருக்கின்றன. வயிறு பிரட்டி வாந்தி எடுத்தால் அதற்குண்டான மருந்துகளையும் கைவவசம் வைத்திருக்கிறோம். ஆனால்,

பலநூறு மரக்கலன்களில் ஒரு லட்சம் பேர் படை எடுப்பார்கள். என்றால் அத்தனை பேருக்கும் நாளாகுமே. எனவே நாலா திசையிலும் ஆள் அனுப்பி சேர தேசத்திலிருந்தும், பாண்டிய தேசத்திலிருந்தும் அவைகளை கொண்டு வரச் செய்து போகின்ற இடத்தில் உள்ள மருத்துவர்களை சந்தித்து அவர்களிடமிருந்தும், அந்த மருந்துகளை பறித்துக் கொண்டு வரவேண்டும். அப்படி வந்தால் போருக்கு தாங்குமாறு மருந்துகளை சேகரித்து விடலாம்.

வெறும் பொன், பொருளை கொள்ளையடிப்பது மட்டுமல்லாது மருந்துகளை கொள்ளை அடிக்கவும் நாம் திட்டம் தீட்டியாக வேண்டும்'' என்று வைத்தியர் சொன்னார்.

''இந்தப் பிள்ளை ஏதோ சொல்ல விரும்புகிறான். போலிருக்கிறதே.'' என்று வணிகர் ஞானசம்பந்தனை நோக்கிச் சொன்னார்.

''அய்யா, எலிமிச்சை, கிச்சலி இந்த இரண்டு காய்கள் போதும். இவைகளை மெல்ல கீறி முகர்ந்து பார்த்தால் கொஞ்சம் சிறியதுளை இட்டு வாயில் இட்டுக் கொண்டால், கொஞ்சம் அழுத்தி நெற்றியில் தடவிக் கொண்டால் தலைவலி வராது, வயிறு பிரட்டல் வராது. வாந்தி வராது. தடுமனும் பிடிக்காது. எனவே கிச்சலி இலைகளாகவும், காய்களும் இருந்தால் அது மட்டும் போதும். கிச்சிலி காய்கள் பாண்டிய தேசத்தில் ஏகமாய் வளர்கின்றன. சோழ தேசத்திலும் உண்டு. இப்பொழுது பறித்தால் இருபது நாளைக்கு கிச்சலி காய்கள் தயாராக இருக்கும். எனவே நீங்கள் எப்பொழுது கிளம்புகிறீர்கள் என்று சொன்னால் அப்போது பறித்துக்கொண்டால் போதுமானது, இப்போது பறித்துக் கொண்டிருக்கிற அவசியம் இல்லை. ஆயினும் சில கிச்சிலி காய்களை ஊறுகாயாக போட்டு வைத்து உப்பு பதனிட்டு வைத்துக் கொள்ளலாம். அதில் பெரிதும் பயனில்லை. பச்சை கிச்சிலியினுடைய பயன் மிகவும் அரிது.

எப்பொழுது கிளம்பப் போகிறீர்கள், எங்கிருந்து கிளம்பப் போகிறீர்கள் என்று சொன்னால் அதற்கேற்றபடி கிச்சலி காய்கள் சேகரிப்பது நடக்கும்.''

''நன்றாக இருக்கிறது இவன் பேசுவது. இப்போதே மூட்டை கட்டி வைத்துக்கொண்டு இடத்தை அடைத்துக் கொள்ள வேண்டாம். சரி நீ யார்?''

''நான் இவருடைய மாப்பிள்ளை, ஞானசம்பந்தன்.''

''அவன் எனக்கு மட்டும் மாப்பிள்ளை இல்லை. இராஜராஜ பிரம்மராயருடைய பிள்ளை. சோழகுல சுந்தரிக்கும் இராஜராஜ பிரம்மராயருக்கும் பிறந்த பிள்ளை.''

அடடே, பெரிய இடத்து பிள்ளை அல்லவா, அவனையா மருமகனாக பெற்றிருக்கிறீர். வாழ்க வாழ்க. எங்களுக்கு ஒன்றும் திருமண செய்தி தெரியாதே.''

''நாளை திருமணம் நடக்கப்போகிறது.''

''அப்படியா வாழ்க வாழ்க வாழ்க. இதோ எங்களால் ஆன சிறிய பரிசு.'' அவர்கள் சட்டென்று ஒரு சிறிய துணியை வைத்தார்கள். பொற் கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன. யாரோ ஒருவர் தன் கை கடகத்தை அவிழ்த்து கொடுத்து.

''இந்தாரும். வைத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்ல அவர்கள் திருமண பரிசாக ஞானசம்பந்தனுக்கு கொடுத்தார்கள். ஞானசம்பந்தன் உள்ளே தலை நீட்டி மனைவியை அழைத்தான். அவள் வெளியே வந்தாள். சபையை நமஸ்கரித்தாள். இரண்டு பேரும் விழுந்து வணங்கி பரிசுப் பொருளை பெற்றுக் கொண்டார்கள்.

''திருமணத்து முன்பே பரிசு கிடைத்த ஒரே மாப்பிள்ளை நீதானடா.'' என்று ஒரு வைத்தியர் சொல்ல, எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

''அய்யா, கடற்பயணம் பற்றிய பயத்தை அதற்கு உண்டான நோய் தீர்க்கும் மருந்தை என்னிடம் விட்டு விடுங்கள். அருண்மொழி அய்யாவிடம் என்னுடைய வாக்குறுதியைச் சொல்லுங்கள். ஒருவருக்கும் தீங்கு நேரா வண்ணம் நான் அதை செய்கிறேன்.''

''அதாவது நீயும் கடற்பயணம் வருகிறேன் என்று சொல்லுகிறாயா?''

''ஆமாம். நானும், என் மனைவியும் யுத்த முனைக்கு வருகிறோம், யுத்த முனையிலிருந்து திரும்பும்போது நான் கடற்பயணம் மேற் கொள்ளப் போகிறேன். என் மனைவி தஞ்சைக்கு திரும்பி விடுவாள்'' என்று சொல்ல, அவர்கள் மறுபடியும் ஆரவாரம் செய்தார்கள்.

''வாழ்க வாழ்க'' என்று வாழ்த்தினார்கள்.

''இப்படி ஒரு மருத்துவன் கூட வருகிறான் என்றால் எங்களுக்கு என்ன பயம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.''என்று உற்சாகமானார்கள்.

''நாம் போய் சொல்லி விடுவோம்.''

''நாம் போய் சொன்னால் போதாது. இந்த சிறுவனை அழைத்துப் போவோம் அய்யா வைத்தியரய்யா நீரும் வாரும். உமது மாப்பிள்ளை என்று அறிமுகப்படுத்தும்.''

அவர்கள் இருவரும் மறுநாள் விடியற்காலையில் அருண் மொழிப்பட்டன் எதிரே நின்றார்கள்.

''எதனால் கடற்பயணத்தின் போது வாந்தி வருகிறது. அருண்மொழிப்பட்டன் கேள்வி கேட்டான். தலைமை வைத்தியர் எப்படி சொல்வது என்று தயங்கினார்.

''நான் சொல்லட்டுமா.'' அவன் தலைமை வைத்தியரிடம் அனுமதி கேட்டான்.

''சரி.'' என்று சொன்னார்.

''அய்யா, நாம் இரண்டு கால்களால் நேராக நிற்கிறோம். நிற்கும் பொழுது தலை ஆடாது நடுவே அமைதியாக இருக் கிறது. நமது காலுக்கு கீழே பூமி ஆடினால் மேலே இருக்கின்ற மூளையும் ஆடும், மூளை என்பது ஒரு திரவத்தில் மிதக்கிறது. அந்த மிதக்கிற மூளை வேகமாக ஆடினால் தலை சுற்றும், தலை சுற்றினால் வயிறு எதுக்களிக்கும், வயிறு எதுக்களித்தால் அடியில் உள்ள சோறு வெளியே வந்து விடும்.

எனவே, மூளை அசையாமல் இருப்பதற்கு உண்டான ஏற்பாடுகள் நாம் செய்ய வேண்டும். மூளை அசைந்தால் என்ன ஆகும். இம்மாதிரியான விஷயங்கள் ஏற்படும். என்று சொன் னேன். ஆனால் அசையும் என்பதைத் தவிர்க்க முடியாது. திரும்பத் திரும்ப அசையும். மூளை அசைவதை பழக்கப்படுத்திக் கொள்ளும் வரை இந்த தொந்திரவு இருக்கும். அப்படி இந்த தொந்திரவு இருக்கும்பொழுது கிச்சிலியை முகர்வதோ, எலுமிச் சையை முகர்வதோ, கிச்சிலி இலையை பிழிந்து வாயில் போட்டு மெல்வதோ நன்றாக இருக்கும். அது வாந்தியை கட்டுப்படுத்தும் வயிற்றுப் போக்கை சரிப்படுத்தும். மூக்கில் நீர்கோர்த்துக் கொள் வதை சரிப்படுத்தும்.

ஆனால், தலையினுடைய ஆட்டம் நிற்காது. படுத்து தூங்க முடியாது. உறங்க முடியாமல் ஆடிக்கொண்டு இருக்கும். கடல் களில் அலை அதிகமானால், கொந்தளிப்பு இருந்தால் இன்னும் மோசமாக இருக்கும்.

உதாரணத்திற்கு நான் நடித்துக் காட்டவா.'' அவன் வினவி னான். அருண்மொழிப்பட்டன் 'சரி' என்று சொல்ல, இடதும், வலதுமாக ஓடினான்.'' இப்படித்தான் நாம் பயணப்பட வேண்டி யிருக்கும்.'' இந்த நாற்காலியிலிருந்து எதிர்நாற்காலி வரை ஓடி, அந்த நாற்காலியிலிருந்து இந்த பக்கம் வந்து,

''இப்படி நாம் ஓட வேண்டியிருக்கும். அல்லது இப்படி இறுக்கமாக ஒரு தூணை பிடித்தக் கொண்டிருக்க வேண்டும். அந்த தூணும் ஆடும். இது கொந்தளிப்பான நேரம். கொந்த ளிப்பு இல்லாத நேரத்தில் இவ்விதமான ஆட்டம் இருக்கும்.'' அவன் மறுபடியும் நடித்துக் காண்பித்தான்.

அருண்மொழிப்பட்டன் வியப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இராஜராஜ பிரம்மராயன் மகனல்லவா. கூர்மையாக இருக் கிறாய். ஆனால் நீ கடற்பயணம் மேற்கொண்டதுண்டா?''

''இல்லை.''

''பிறகு எப்படி தெரிந்தது.''

''வணிகர்களிடம் விவரமாக கேட்டு அறிந்தேன். வணிகர் கள் நடித்துக் காட்டினார்கள். அதை உங்களிடம் நான் திரும்ப செய்து காட்டினேன்.

ஒவ்வொரு மரக்கலத்திலும் ஒவ்வொரு வைத்தியர் இருப் பார். நானும் உங்களோடு பயணப்பட விரும்புகின்றேன். நீங்கள் எந்த கப்பலில் இருக்கிறீரோ அங்கு நானும் இருக்க விரும்பு கின்றேன்.''

கடற்பயணம் பற்றி வேறு என்ன தெரியும்.''

''இங்கிருந்து ஸ்ரீ விஜயம் போவதற்கு பல்வேறு வசதிகள் இருக்கின்றன. ஒன்று வானசாஸ்திரம், இன்னொன்று கடலின் ஆழம். மூன்றாவது மூக்குத் திமிங்கலங்கள்.''

''என்னது ?''

''மூக்குத் திமிங்கலங்கள்.''

''மூக்கு திமிங்கலங்களா. அப்படியென்றால்.''

''சற்று மூக்கு நீளமான மிகப்பெரிய மீன்கள். திமிங்கலத் தின் அளவு பெரியவை. அவை கூட்டம் கூட்டமாக இருக்கும்.''

''அவை என்ன செய்யும்?''

''நாம் ஸ்ரீ விஜயத்தை நோக்கித்தான் போகிறோம் என்று புரிந்து கொண்டு நமக்கு அவை வழிகாட்டும். நாம் திசை மாறி னால் வந்து வழிமறிக்கும். 'க்வீக் க்வீக்' என்று கத்தி இடதுபக்கம் போக வேண்டும் என்று சொல்லும்.''

''இது எப்படித் தெரிந்தது?''

''இதையும் வணிகர்கள் எனக்கு சொல்லி இருக்கிறார்கள். அவைகளை நம்பி எங்கு வேண்டுமானாலும் போகலாம்.''

''ஸ்ரீ விஜயத்திற்குத்தான் போகிறோம் என்று அவைகளுக்கு எப்படித் தெரியும்?''

''இங்குள்ள நாவாய்கள் அத்தனையும் ஸ்ரீ விஜயம் நோக்கித் தான் போகின்றன. ஸ்ரீ விஜயத்திலிருந்துதான் வருகின்றன. எனவே ஒரு நாவாய் வந்தால் அவை ஸ்ரீ விஜயம் நோக்கி போகின்றன என்று அவைகளுக்குத் தெரியும். ஸ்ரீ விஜயத்தின் பாதையும் அவைகளுக்குத் தெரியும், எனவே அந்த மூக்குத் திமிங்கலங் களை வழிகாட்டியாக வைத்துக்கொண்டு வணிகர்கள் போவார் கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''வணிகர்களை விட அதிகம் தெரிந்து வைத்திருக்கிறாயே.''

''இல்லை. அவர்களிடம் தெரிந்து கொண்டதுதான் அதிகம்.''

''வேறு என்ன செய்தி?''

''நன்றாக தூங்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு வழி இருக்கிறது

''என்ன?''

''தூளிகட்டி விடுவது.''

''தூளியா?''

''ஆமாம். தரையில் படுத்து உறங்கினால் இடதும், வலதும் உருளுவோம். அப்படி உருளாமல் இருக்க இரண்டு தூண் களுக்கு நடுவே தூளிகட்டி அதில் ஏறி படுத்துக் கொண்டால் நாம் உருள மாட்டோம். அந்த தூளிக்குள் பொதிந்து பத்திரமாக இருப்போம்.''

''அட, இதுவும் அற்புதமாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது உன்னுடைய யோசனைகள்.''

''என் யோசனை அல்ல சேனாதிபதி அவர்களே. இது வணிகர்கள் சொல்கிற யோசனை.''

''வணிகர்களை விடமாட்டான். பின்தொடர்ந்து கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பான். அவர்கள் அலுத்துக் கொண்டு துரத்தும் வரை பின்னாலேயே ஓடுவான்.. அவன் இயல்பு அப்படி.''

''துடிப்பாக இருக்கிறான். சந்தோஷமாக இருக்கிறான். இவனை மாப்பிள்ளையாக பெற்றது உங்களுடைய பாக்கியம். நாளைக்குத் திருமணமா.''

''இல்லை, இன்று உச்சி வேளைக்கு முன்னால் திருமணம்.''

''ஆக, திருமணத்தை விட்டு விட்டா வந்திருக்கிறீர்கள்.''

''நீங்கள் அழைத்த பிறகு வராமல் இருக்க முடியுமா.''

''அடேய், முதலில் திருமணத்திற்கு போங்கள். இருங்கள்.'' ஒரு தட்டு கொண்டு வரச் சொன்னார். தட்டில் மாலைகளும், பொற்காசுகளும் வைத்தார். பட்டுத்துணி வைத்தார். காழகம் என்கிற கரை ஆடையை வைத்தார். அவனிடம் நீட்டினார்.

''வாழ்க வளமுடன், உன்னை போர் முனையில் சந்திக்கிறேன்.''

''என்னோடு என் மனைவியும் வருகிறாள். அதற்கும் அனுமதி அளிக்க வேண்டும்.''

''எதற்காக மனைவி?''

''அவள் எனக்கு மிகவும் உதவி செய்வாள். அவள் உதவி இருப்பின் என்னால் வைத்தியத்தை விரைவாகச் செய்ய முடியும்.''

''நல்லது, அழைத்து வா, இந்தா அவளுக்காக இதைக் கொடு.'' இரண்டு வெள்ளித் தண்டைகள் கொண்டு வந்து கொடுக்கப்பட அவற்றையும் தட்டில் வைத்தார்.

அவர்காலில் விழுந்து வணங்கி அவைகளை வாங்கிக் கொண்டான். திருமணத்திற்கு முன்பே அதிகமான பரிசுப் பொருள்கள் அதிர்ஷ்டவசமாக அவனுக்கு வருகிறது என்பதை தலைமை மருத்துவர் புரிந்து கொண்டார். அவனை அணைத்துக் கொண்டார்.

''உன்னைப் பற்றிய பயம் எனக்கு இருந்தது உண்மையடா, ஆனால் அது முற்றிலும் நீங்கிவிட்டது. எத்தனை விஷயங்கள் சொல்கிறாய், எவ்வளவு கெட்டிக்காரனாய் இருக்கிறாய். நான் பாக்யசாலி. நான் ஏதேனும் தவறாக பேசி இருப்பின் மன்னித்து விடு.''

அவன் அவரை இறுக்க அணைத்துக் கொண்டான். ''வாருங்கள் போவோம்.'' என்று கை கோர்த்துக் கொண்டான்.

தோள் பட்டையில் பொன்மூட்டை முடிச்சுடன், மாமனாரும், மாப்பிள்ளையும் வீடு நோக்கி நடந்தார்கள்.

அத்தியாயம்

28

அந்த அகலமான மாட்டுவண்டியில் குறுக்கும், நெடுக்கு மாக மரக்கட்டைகள் அடிக்கப்பட்டு கட்டம் கட்டமாக் பிரிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு கட்டத்திலும் மரப்பெட்டிகள் இறக்கப் பட்டிருந்தன. அந்த மரப்பெட்டிக்குள் தைல ஜாடிகளும், மருந்து கூடைகளும் அசையாமல் வைக்கப்பட்டன. தைல ஜாடியைச் சுற்றி கயிறாலும், வைக்கோலாலும் அடிபடாமல் மெத்தென்று இருக்க ஒருவகை செய்யப்பட்டிருந்தது.

ஞானசம்பந்தன் வண்டியின் மீது தாவி ஏறினான்.

''என்னென்ன ஏற்றியிருக்கிறாய் சொல்,'' மனைவியை பார்த்து கேட்டான். மனைவி ஓலையை உருவி படிக்கத் துவங் கினாள்.

பஞ்சாங்கத் தைலம் பத்து தூணி.

''சரி.''

''வாசனாதி ஏரண்ட் தைலம் ஆறுதூணி.

''மிகச்சரி.''

''உத்தம கர்ணாதி தைலம் ஏட்டு தூணி.

இருக்கிறது. பில்வாதி க்ருதம் பத்து பத்து மண்டூகரவடகம், திருவாதி, லவி மலை, சுனேத்திரி ஆறுபதகு தாம்ராதி பத்து பதகு, வஜ்ரகல்பம் இருபது பதகு, கல்யாண லவண்ம் நாலு பதகு.''

அவன் ஒவ்வொன்றையும் தொட்டுப்பார்த்து சரிபார்த்துக் கொண்டான். வண்டியை விட்டு கீழே இறங்கினான்.

இதே அளவு, இதே போல இன்னொரு மாட்டு வண்டியிலும் மருந்து கூடைகளும், தைல ஜாடிகளும் அசையாது இருக்க சட்டம் செய்யப்பட்டு, மிகப் பெரிய காளைகள் அவற்றை இழுக் கும்படி செய்யப்பட்டு நகரத் தயாராக இருந்தது.

தலைமை மருத்துவர் வீட்டு வாசலில் எல்லோரும் கூடி இருந்தார்கள் ''நேற்றைக்கு திருமணம் முடித்து, இன்றைக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்ப வேண்டிய பெண்ணை போருக்கு

அனுப்புகிறாய். என்ன உன் தலையெழுத்து. ஒரு வயதான கிழவி தலைமை மருத்துவரைப் பார்த்து அலுத்துக் கொண்டாள்.

தலைமை மருத்துவர் முகம் இறுகிக் கிடந்தது.

''அவருக்கு ஆயுசு கெட்டியம்மா. நல்லபடி போய் வருவாள். போய் கங்கை நீரை கொண்டு வருவாள். இத்தனை சட்டங்களுக்குள்ளும் ஆடாமல், அசையாமல் பல தவலைகளில் கங்கை நீர் வரும். வடக்கே இருக்கும் ஊர்களைப் பற்றி பல கதைகள் சொல்வாள். உடுப்புகள் வாங்கி வருவாள். நகைகள் வாங்கி வருவாள். அப்பொழுது வந்து அவளைப் பார். என்ன கொண்டாட்டமாக இருப்பாள் என்று பார்.

எல்லோரும்தான் வைத்தியருக்கு மகளாக பிறக்கிறார்கள் இவள் அதிர்ஷ்டக்காரி, அரசாங்கத்துக்கு வேண்டிய ஒரு இளைஞனை மணமகனாகப் பெற்றாள். இப்பொழுது அவன் அரசாங்க அதிகாரி. அரசாங்க அதிகாரியின் மனைவி என்றால் இங்கும், அங்கும் ஓடத்தான் வேண்டியிருக்கும். உட்கார்ந்து ஆடு, புலி ஆட வசதி இருக்காது. உங்கள் வாழ்க்கை வேறு. அவள் வாழ்க்கை வேறு. அவள் வென்று வருவாளம்மா. கவலைப்படாதே. வேறொரு கிழவன் மிகத் திடமாகச் சொன்னான்.

தலைமை வைத்தியருடைய முகம் மலர்ந்தது.

நாகரத்தினத்தினுடைய தாய் அவளை அணைத்துக் கொண்டாள். நாகரத்தினமும் தாயைத் தழுவிக் கொண்டாள்.

''கணவனோடு போகிறாய். ஜாக்கிரதையாக இரு. கண்ட இடத்தில் கண்ட நேரத்தில் அருகே படுத்துவிடாதே. அனுமதித்து விடாதே. மேலே வானம் கீழே பூமி என்று வெட்டவெளியில் கூடல் செய்ய வேண்டாம். எப்படி போகிறாயோ அப்படியே வா. வந்த பிறகு சகலமும் வைத்துக் கொள்ளலாம். உனக்கும் சிறு வயது. அவருக்கும் சிறுவயது. குழந்தையை பெற்றுக்கொண்டு வராதே. நல்ல அனுபவங்களை பெற்றுக் கொண்டு வா'' என்று காதோரம் சொன்னாள். நன்றியாக அம்மாவை மகள் இன்னும் இறுக்கிக் கொண்டாள்.

''அந்தணரான நீங்கள் இங்கு வந்து மருத்துவம் கற்றது சந்தோஷமாக இருக்கிறது. எனினும் எங்கள் குலத்துப் பெண்ணையே மணந்து கொண்டு எங்களில் ஒருவராக மாறினீர்களே இது மிகப் பெரிய செயல். இதனால் எங்கள் மருத்துவர் குலம்

உயர்ந்தது. அரசர் கூப்பிட்டால் போகவேண்டும். வைத்தியம் செய்ய வேண்டும். உடனே வெளியேற வேண்டும் என்றுதான் இருந்தோம். ஆனால் இப்பொழுது எங்களுக்கு கூடுதலாக மரியாதை வந்துவிட்டது.

''நேரே அரசரிடம் போய் போருக்கு போய் வந்தோம். பூணூல் அணிந்து கொள்ள உத்தரவு கொடுங்கள் என்று கேட்கப் போவதில்லை. மாறாக நிறைய ஆதுரச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று கேட்கப் போகிறோம். ஒவ்வொரு வீடாகப் போய் வைத்தியம் செய்வதற்கு பதில ஆதுரச்சாலைக்கு வந்து விடு. அங்கேயே இரு என்று நோயாளிகளை ஒரு இடத்தி லேயே வைத்து நாம் வைத்தியம் செய்யலாம். மழைக்கோ, வெய்யிலுக்கோ பயப்படாமல் ஓடுகள் வேய்ந்த உயர்ந்த கூரைக் குக் கீழ் நிம்மதியாக மருத்துவம் செய்யலாம்.'' ஞானசம்பந்தன் பேசினான்.

''மழை என்று வந்து விட்டால் என் வீட்டில் கைப்பிடி மருந்து கூட அரைக்க முடியாது. நல்ல வீடு இல்லையே என்று மிகப்பெரிய வருத்தம் எனக்கும் உண்டு. இந்த குறையெல்லாம் உன்னால் தீரும் ஞானசம்பந்தா'' என்று ஒருவர் சொல்ல, அவன் அவரை தீர்க்கமாகப் பார்த்தான்.

''நீங்கள் சொல்வது புரிகிறது. நமக்காக இல்லை, வைத்தி யம் என்ற விஷயத்திற்காக அரசரிடம் இதுபற்றி கேட்கிறேன். சமயம் வரும்பொழுது நாம் ஒட்டுமொத்தமாகப் போய் இதைப் பற்றிச் சொல்வோம்.''

''ஞானசம்பந்தா, அங்கிருந்து வெறும் பாத்திர, பண்டங்கள் எடுத்து வராதே, மருந்துகள் எடுத்து வா. அது மிக முக்கியம், மருந்துகளுக்கு உண்டான மூலிகைச் செடிகளை எடுத்து வா, அதுவும் முக்கியம்'' என்று சொல்ல, அவரை அருகே போய் ஞான சம்பந்தன் கட்டித் தழுவிக் கொண்டான். நல்ல நேரம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது, சூரியன் மேலே எழ, நிழல் கீழே விழ அந்த நிழலை உற்று கவனித்து,

''இப்போது கிளம்பலாம். என்று கை அசைத்தார்கள். பெண்கள் குலவை இட்டார்கள்.

மாட்டுவண்டிகள் மெல்ல நகரத் துவங்கின.

ஆறு மாட்டுவண்டிகளும் முன்னே போக, பிறகு கோவேறுக் கழுதைகளும், சிறிய குதிரைகளும் பின்னே போக, கணவனும்,

மனைவியும் ஊரை வணங்கி விட்டு கைகோர்த்துக் கொண்டு நடந்தார்கள். அவர்களுக்கு உண்டான குதிரைகள் முன்னே போய்க் கொண்டிருந்தன.

''போர் என்றால் நல்லதும் இருக்கிறது. கெட்டதும் இருக் கிறது. போனவர்கள் ஊத்தை அடையாமல் வரவேண்டுமே என்ற கவலை இருக்கிறது. போய் வெற்றி பெற்று வந்தால் சோழ தேசத்தை வளமாக்கி விடுவார்கள் என்ற சந்தோஷமும் இருக்கிறது.

நீங்கள் சொன்னது போல நல்ல மூலிகைச் செடி இங்கு வந்தால் மூலிகைத் தோட்டம் வைத்து பயிர் செய்தால் எவ்வளவு பிரமாதமாக இருக்கும். சோழ தேசத்தில் நோயே இல்லாது செய்து விடலாமே.'' என்று ஒரு வைத்தியர் சொல்ல, எல்லோரும் ஆர வாரித்தார்கள்.

''இராஜேந்திர சோழர் வாழ்க.'' என்று கூவினார்கள்.

யுத்தம் என்பது ஒரு தேசத்தை புரட்டிப் போடுகிற விஷயம். இங்கே புரட்டிப் போடுகின்ற ஆயத்தங்கள் மிகத் தெளிவாக, சுத்தமாக நடைந்தேறின.

இது விற்பொறி தேரோடு பிணைக்கப்பட்டது. நிருத்த வினோதப் பெருந்தச்சன் தன்னை சுற்றி உள்ள மறவர்களுக்கு அது என்ன என்று காண்பித்தான்.

''ஒரே நேரம் ஆறு அம்புகள் விடுவதற்கான வசதி இதில் இருக்கிறது. சுருள் கம்பியின் விசையால் வேகமாக மேலே பறக்கக் கூடியது. எதிரியை பயமுறுத்த உதவக்கூடியது.

இந்தப்புறம் இருந்து மறுபுறம் உள்ள கோட்டைக்குள் ஒரே நேரத்தில் ஆறு அம்புகள் செலுத்தலாம். இது ஒரு குதிரை யோடு இணைக்கப்படும். இதை இயக்கும்போது குதிரையை அவிழ்த்து விடுங்கள். ஒரு மேட்டில் இதை சாய்த்து ஆப்பு அடித்து உறுதியாக நிற்க வையுங்கள். ஆறு அம்புகளை இந்த இடத்தில் சொருகுங்கள். பிறகு இந்த கட்டையை இழுத்து வைத்துக் கொள்ளுங்கள். வண்டியை அசைத்து எந்த திசை போக வேண்டும் என்பதை பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு இழுத்த கட்டையை இப்படி தூக்கி விடுவித்து விட்டால் அந்த கட்டை இந்த அம்பின் அடிப்பாகங்களை வேகமாகத் தாக்கும்.

இதோ பாருங்கள், செய்து காட்டுகிறேன்.''

அம்புகள் சரேல்என்று ஒரே வேகத்தில் உயரப் பறந்தன. வெகு தொலைவு போய் தரையில் குத்திட்டு நின்றன.

''ஒன்றை விடுவித்ததும் அடுத்த ஆறு வைத்துவிடுங்கள். மறுபடியும் இழுங்கள். மறுபடியும் விட்டு விடுங்கள். ஐம்பது நொடியில் இரண்டு முறை, அதாவது பன்னிரெண்டு அம்புகளை வெகு சுலபமாக நாம் விட்டு விட முடியும், நல்ல பழக்கம் பழக்கம் இருந்தால் மூன்று முறைகள் ஆறு ஆறு அம்பு விடுதலை செய்ய முடியும்.

இதுபோன்ற விற்பொறிகள் பதினாறு செய்து வந்திருக்கிறேன். பதினாறு வண்டிகளை சாய்த்து நிறுத்தி ஒரே நேரம் அனுப்பினால் தொண்ணூற்றியாறு அம்புகள் கோட்டைக்குள் போய் விழும். உடனடியாக இன்னொரு தொண்ணூற்றி ஆறு அம்புகள் அனுப்பினால் எதிரி நிலை குலைந்து போவான்.

இதைத்தவிர வில்லாளிகளும் தங்கள் பக்கத்து அம்புகளை அனுப்பலாம். துல்லியமாக குறி பார்த்து அடித்தல் என்பது இதில் நடக்காது. எதிரியைப் பயமுறுத்த கைக்கு கிடைத்ததை வீசி அடிப்பது போல, வரிசையாக நிற்கின்ற படைகளை நிலை குலைந்து போகச் செய்ய இவை மிகவும் உதவும். படைகளின் முன்புறம் இந்தப் பொறிகளை நிறுத்தி குதிரைகளை எதிர் பக்கம் வைத்து நீங்கள் தயார் நிலையில் நின்றால். பார் ஓடுவதற்காக தயாராக இருக்கிறார்கள். பயந்துவிட்டார்கள் என்றெல்லாம் பேசிக்கொள்வார்கள். இரண்டு முறை இவைகளை சீறியடித்தால் எதிர்படை எப்படி அதை தடுப்பது என்று தெரியாமல் நிலைகுலைந்து போகும். என்னதான் கேடயம் வைத்து தைத்தாலும் பத்து அம்பில் மூன்று அம்பு பழுதில்லாமல் அடிபடும். எதிர் பக்கம் பொம்மை வைத்து இந்தப் பொறியை சோதித்தேன். பத்து அம்புகளுக்கு எட்டு அம்புகள் தைத்திருக்கின்றன. இதைச் சரியாக இயக்குவது உங்கள் பொறுப்பு.''

அவர்கள் குதூகலமானார்கள். யாரெல்லாம் அதில் சேர்ந்து கொள்வது என்பதைப் படைத் தலைவர்கள் தீர்மானித்தார்கள். மறுபடி மறுபடி அம்புகளை சீரமைத்துப் பார்த்தார்கள். ஓடிப் போய் அம்புகளை எடுத்து வந்தார்கள்.

''ஒருவேளை நமது போராத காலம் இந்தப்பொறிகள் எதிரியிடம் மாட்டிக் கொண்டால் எதிரி இதை இயக்க கற்றுக்

கொண்டால் நாம் எப்படி சமாளிப்பது.'' நித்த வினோதகப் பெருந் தச்சன் கேட்க, அவர்கள் திகைத்தப் போய் நின்றார்கள்.

''உங்களுக்கு வெறும் விற்பொறிகள் மட்டும் தராமல் இதை தடுக்கின்ற கேடயங்களும் தருகிறேன். எதிர்பக்கத்தி லிருந்தும் அம்பு வருமல்லவா. அந்த அம்புகள் வந்தால் எப்படி தடுப்பது. நாம் எல்லோரும் பித்தளையிலோ அல்லது தாமிரத் தகட்டிலோ, இரும்பிலோ கேடயங்கள் வைத்திருக்கிறோம். எவ்வளவுதான் நீங்கள் பெரிதாகச் செய்தாலும் அது ஏற்புடை யதாக இருக்காது. வாளை தடுப்பதற்கு இரும்பு கேடயங்கள் சரி, அம்பு தடுப்பதற்கு என்ன செய்யலாம். எனவே பிரம்பினால் ஆன நன்கு அழுத்தமாக முடைந்த தூக்குவதற்கு எளிதான கேடயங்கள் செய்திருக்கிறேன்.''

அவன் கொண்டு வந்து கொடுத்தான்.

''இந்த கேடயங்களை எடுத்துக்கொண்டு போய் பத்து பேர் தொலைவில் நில்லுங்கள்.'' என்று சொல்ல, பத்து பேர் தொலை வில் நின்றார்கள். வில்லாளிகளைப் பார்த்து,

''அவர்களைத் தாக்குங்கள்'' என்று கட்டளை இட, வில் லாளிகள் எச்சரித்து விட்டு வில் வளைந்து அம்பு தொடுத்தார் கள். அந்த அம்புகள் அந்த பிரம்பு கேட்யங்களால் மிக எளிதாக தடுக்கப்பட்டன.

''எனவே, ஒவ்வொரு தேரோடும் அம்புகள் வைக்கின்ற தனி பெட்டியும், அதற்கு மேல் இந்த பிரம்பு கேடயமும் இருக்கும். ஒரு தேருக்கு இரண்டு பேர் என்று பங்கிட்டுக் கொண்டு ஒருவர் தேர் ஒட்டவும், ஒருவர் பின்னால் பெட்டியின் மீது அமர்ந்து கொள்ளவும் பழகிக் கொள்ளுங்கள். மேடு பள்ளங் களில் சாயாது போக இந்த தேரை நன்கு வடிவமைத்திருக் கிறேன். ஆயினும் மேடு பள்ளங்களில் மற்ற தேர்களைப் போல் விரைவாகப் போகாமல் சற்று நிதானமாகப் போங்கள். உள்ளே கனம் இருக்கிறது அல்லவா. அதனால் அமைதியாக ஏறி இறங் குவது நல்லது.'' என்று சொல்ல அவர்கள் மறுபடியும் கூச்சலிட் டார்கள்.

''நிஜமாகவே நீர் வினோதமான பெருத்தச்சர்தான்யா, உம்மை பாராட்ட வார்த்தைகளே இல்லை என்று பொறிகள் மறுபடி, மறுபடி இயக்கப்பட்டன. கேடயங்கள் மீது அம்புகள்

தைக்கப்பட்டன. அவைகளைப் பிடுங்கிப் போட்டார்கள். மிக உற்சாகமாக அந்த பொறிகளை இயக்கிப் பார்த்தார்கள்.

''இந்த சுருள் கம்பி பழுதானால் என்ன செய்வது?'' நித்த வினோத பெருஞ்தச்சன் கேட்டான்.

''பழுதாகுமா?''

''ஆகலாம், கழண்டு போகலாம். என்ன செய்வது.''

''என்ன செய்வது?'' மறவர்கள் கேட்டார்கள்,

''அதற்காக நான்கு ஜதை சுருள் கம்பிகளை ஒவ்வோர் வண்டியிலும் வைத்திருக்கிறேன். அவை இங்கே தொங்க வைக்கப்படும்.'' வண்டியின் வெளிப்புறத்தைக் காட்டினான். மறவர்கள் வாய்பிளந்தார்கள்.

மட்டமான குதிரைகளை வைத்துக் கொள்ளாமல் உயர மான, கனமான குதிரைகளை வைத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி, நித்த வினோத பெருந்தச்சன் விடை பெற்றான்.

''இதற்காகவா வந்தீர்கள்.''

''ஆமாம். ஜெயங்கொண்டத்தில் இந்த வேலைதான் செய்து கொண்டிருந்தேன். இந்தப் போருக்கு என்னுடைய பங்களிப்பு இருக்க வேண்டும் என்று விரும்பி, இதை இரவு முழுவதும் விழித் திருந்து வடிவமைத்தேன். மற்ற நேரங்களில் கல் வேலை இருக்கவே செய்தது.''

''கோவில் எப்படி வந்திருக்கிறது.''

''வந்து பாருங்களேன். உமது வாயால் சொல்லுங்களேன். மிக அழகாக வந்திருக்கிறது. சண்டேஸ்வரர் சிற்பத்தை செதுக் கிக் கொண்டிருக்கிறார் ஒரு கல்தச்சர், காலமெல்லாம் அது இராஜேந்திர சோழரின் பெயர் சொல்லப்போகிறது. கிட்டத் தட்ட பெருவுடையார் கோவிலைப் போலவே இருக்கும். அவ் வளவு உயரம் இருக்காது. இருக்கக்கூடாது என்பது இராஜேந்திர சோழரின் கட்டளை, அதைவிடச் சிறிதாய் ஆனால் இன்னும் நுணுக்கமானதாய் இந்த கோவில் இருக்கும்.''

''போகும்போது இராஜேந்திர சோழர் கண்டிப்பாக போவா ரல்லவா.''

''போவார், ஆனால் நீங்கள் நேராக கடற்கரை ஓரமாக வேங்கியை நோக்கி நகர்ந்து விடுவீர்கள். உங்களுடைய பங் களிப்பு தான் அங்கு முதலில் இருக்கும். இதை இராஜேந்திர

சோழர் இயக்கி பார்த்த பிறகு இதை அரையன் இராஜராஜனிடம் ஒப்படைக்கச் சொன்னார். உங்களை அரையன் இராஜராஜன் சந்தித்து படை முதலிலேயே உங்களை அனுப்பிவிடுவார். கோட்டை மூடி இருப்பின் அதை திறக்க வைக்க நீங்கள் பெரும் முயற்சி செய்து இதை இயக்க வேண்டியிருக்கும்.''

மறவர்கள் மறுபடியும் வாழ்த்தொலி எழுப்பினார்கள்.

நித்த வினோத பெருந்தச்சன் வணக்கம் கூறி விடை பெற்றார். மெல்ல மர ஆசனத்தில் கால்வைத்து ஏறி குதிரையில் உட்கார்ந்து கொண்டார்.

''வயதாகி விட்டதய்யா. தளர்ந்துவிட்டார்'' என்று சொல்ல,

''ஆமாம், பெரிய கோவிலை உருவாக்கிய கை அல்லவா. குஞ்சரமல்லரின் சீடரல்லவா. அவருக்காக உழைத்தவரல்லவா. இப்பொழுது கொஞ்சம் வயதாகிவிட்டுதான் இருக்கிறது. கல் வேலை செய்வது எளிதா. சூடல்லவா, அந்த சூடு உடம்பை தாக்கு மல்லவா.'' என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

நித்த வினோதக பெருந்தச்சன் தன்னுடைய குடுமியை முடிந்தவாறே மறுபடியும் ஜெங்கொண்டம் நோக்கிப் போனார். அவர் குதிரை சேணத்தினுடைய தனித்த பையில் இராஜேந்திர சோழர் கொடுத்த ஆயிரம் கழஞ்சு பத்திரமாக இருந்தது.

தெரிந்த கைக்கோளப்படை முதலில் நகர்ந்தது. வீர சோழிய குதிரைப்படை அடுத்து நகர்ந்தது. தெரிந்த கைக்கோளப்படை இடங்கை வீரர்கள் பிறகு நகர்ந்தார்கள். அதற்குப் பிறகு தேர் கள் அணிவகுத்தன. பிறகு யானைகள் வந்தன. பிறகு ஈட்டி யோடு கூடிய குதிரை வீரர்கள் வந்தார்கள். பிறகு வில்லோடு கூடிய குதிரை வீரர்கள் வந்தார்கள். மிகப்பெரிய படை நிதான மாய் அரண்மனையைக் கடந்தது. இராஜேந்திரசோழர் ஒவ்வொரு படையையும் உற்றுப் பார்த்து சுற்றியுள்ள சேனாதிபதிகளிடம் திருத்தங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

கருந்தட்டான்குடியை முதல்படை தாண்டிய பிறகும் இங்கு சேனைகளின் வரிசை முடியவில்லை. ''அடர்த்தியாகப் போங்கள். அடர்த்தியாகப் போங்கள்.'' என்று வீரர்களை சேனாதிபதிகள் அதட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தெருவினுடைய அடர்த்திக்கு அளவு படைகள் சென்றன. குதிரைகள் ஒன்றின்மீது ஒன்று உராய்ந்தன. தஞ்சையை தாண்டியது பிறகு விலகி ஓடலாம். அதுவரை அடர்த்தியாக

அமைதியாக போக வேண்டும் என்ற கட்டளை இருந்தது. தஞ்சையைத் தாண்டியதும் குதிரைகள் விலகின. நான்காக, ஐந்தாக பரவிப் போயின. பெரிய்யதூசு கிளம்பியது. மக்கள் வாய்பொத்திக்கொண்டு துண்டின் நுனியை வேகமாக ஆட்டிக் கொண்டிருந்தார்கள். மேலாடையை உயரத் தூக்கி வீசி பிடித் தார்கள்.

இராஜேந்திர சோழர் தன் மனைவியரை ஒவ்வொருவராய் அணைத்துக் கொண்டார். படி இறங்கினார். தன் குதிரையில் தாவி ஏறினார். குதிரை திரும்பி அரண்மனையை பார்த்தது. அவர்களை நோக்கி விடைபெறும் வண்ணம் கை தூக்கினார். அவர் நகர்ந்ததும் பரவை நாச்சியார் எல்லோரிடமும் விடை பெற்றார். கீழே இறங்கினார். இன்னொரு குதிரையின் மீது தாவி ஏறினார். அவரைச் சுற்றி மெய்க்காவல் வீரர்கள் வளைத்துக் கொண்டார்கள். அரசருக்கு தனி மெய்க்காவல் வீரர்களும், இவ ருக்கு தனி மெய்க்காவல் வீரர்களும், ஒரு அதிகாரி மிக நெருக்க மாக அவருக்கு அருகே தன் குதிரையை செலுத்திய வண்ணம் இருந்தாள். குதிரைகள் அரண்மனையைத் தாண்டின. இராஜேந் திர சோழனின் பட்டமகிஷியும், மற்ற மனைவியரும், வேறு பெண்களும் குலவையிட்டார்கள். மிக மங்கலமான ஒலியோடு அவைகள் அரண்மனைக்கு வெளியே போக, அரண்மனைக் கதவுகள் சாத்தப்பட்டன. இனி அரண்மனைக் கதவு கொஞ்சமாகத் தான் திறக்கும்.

இராஜேந்திர சோழர் கிளம்பிவிட்டார் என்று எக்காளமும், சிறு முரசும் அறிவித்தன. இங்கே அவர் மெய்கீர்த்தி சொல்லப் பட்டன. இராஜேந்திரசோழர் கொஞ்சம் கடுகடுப்பான முகத்தோடு இரு பக்கமும் பார்த்துக் கொண்டு வந்தார்.

''எந்த படையிலும் ஒழுங்கில்லை.'' என்று பரமன் மழபாடி யிடம் சீறினார்.

''என்னை பார்ப்பதில்தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர படையில் சீராக அணிவகுத்து போக வேண்டும் என்று தெரிய வில்லை. கேரளத்து வீரர்களை கவனித்து இருக்கிறீர்களா. அந்த குதிரை வீரர்களுக்கு முன்னால் போகும் குதிரைதான் கணக்கு. அரசனோ, சேனாதிபதியோ எங்கிருப்பினும் அவர்கள் அதை கவனிக்க மாட்டார்கள். ஒரே சீரான நடையில், ஒரே வேகத்தில்

குதிரைகள் போவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவ் வழியை நாமும் பின்பற்ற வேண்டும். அதைத் தவிர குதிரை களை எல்லாம் அவரவர் மனப்போக்கின்படி அலங்கரித்து இருக் கிறார்கள். யாரோ தன் குதிரைக்கு சலங்கை கட்டி இருக்கிறான். அறிவு கெட்டவன். இரவு நேரத்தில் சலங்கை ஒலியை குதிரை தலை அசைத்து ஒலி எழுப்பாதா. அது நல்லதா. போருக்கு போகி றோமா. அல்லது திருமணத்திற்கு போகிறோமா.''

கொதிக்கின்ற எண்ணெய் சட்டியில் போட்ட தண்ணீர் போல் சடபுடவென்று பொறிந்தார்.

சேனாதிபதிகள் அமைதியாக இருந்தார்கள்.

''ஒரு சிறிய பிரச்சனை இருக்கிறது.'' வந்தியத்தேவர் மிருது வாகப் பேசினார்.

''என்ன பிரச்சனை?''

''ஒரேவிதமாக அலங்கரிக்க முயற்சி செய்தோம். முடிய வில்லை.''

''என்ன தவறாயிற்று.''

''துணி கிடைக்கவில்லை. நெச்வு பிரச்சனை. நம் நெச வாளர்கள் செய்த பல்வேறு விஷயங்கள் படைக்கு போதவில்லை. எனவே வாள் முதுகு படைக்கு மட்டும், மெய்க்காவலர்களுக்கு மட்டும் தலைக்கு உண்டான தலைப்பாகை தயார் செய்யச் சொன்னேன். மற்றவர்களெல்லாம் அவரவருக்கு விருப்பமானபடி தான் தலைப்பாகை அணிந்திருக்கிறார்கள்.''

''காழகங்கள் வந்திருக்குமே என்ன ஆயிற்று?''

''ஆறு மாதமாக சீனக் கப்பலிருந்து எதுவும் வரவில்லை. கடைசியாக உங்களுக்கு கொடுத்ததுதான் காழக ஆடை, மற்ற படிக்கு சந்தைக்கு எதுவுமே வரவில்லை. அரசாங்க கணக்கிலும் ஆடைகள் இல்லை. எனவே அதற்காகவே ஒருமுறை ஸ்ரீ விஜயம் போகவேண்டும் போல் இருக்கிறது.''

''ஆமாம், நிச்சயமாக ஸ்ரீ விஜயம் போக வேண்டும். போக வில்லையெனில் சோழ தேசத்தினடைய நாகரீகத்தில் பாதிப்பு ஏற்படும். சோழ மக்களின் வாழ்க்கையில் சற்று தொய்வு ஏற் படும்.'' வந்தியத்தேவர் சொன்னார்.

''எனக்கு புரிகிறது. விரைவாக அதற்குண்டான வேலைகளைச் செய்வோம். சேனாதிபதிகள் அவரவர் படைக்கு போகலாம்.'' என்று விடை கொடுக்க, சேனாதிபதிகள் அவரை சுற்றிக் கொண்டு தங்களுடைய படைகளை நோக்கி விரைவாக குதிரையைச் செலுத்தினார்கள்.

''உங்களோடு யார் வருவது?''

''நானும் பரவையும் மட்டும் திருவொற்றியூர் வரை தனியாக வர விரும்புகின்றோம். நீங்கள் எல்லோரும் எனக்கு முன்னே அரைக் காத தூரத்தில் பயணப்படுங்கள். ஆரத்தியோ, மலர் தூவுதலோ வேண்டாம் என்று மக்களிடம் சொல்லிவிடுங்கள். விலகி நின்று பார்க்கச் சொல்லி விடுங்கள். எவரும் குறுக்கே வந்து பேச வேண்டாம்.''

எதனாலோ மன்னர் கடுகடுப்பாக இருக்கிறார் என்று அந்த சேனாதிபதிகள் புரிந்து கொண்டார்கள். பேசினால் அதிகமாகும் என்பதால் மௌனமாக முன்னே நடந்தார்கள். பரவை அவரை எப்படி சமாதானப்படுத்துவது என்ற எண்ணத்திலேயே நடந்தாள்.

அரசர் வரும் சத்தம் எக்காளத்தின் மூலம் அவனுக்கு கேட்டது. அவன் எழுந்து நின்றான். நட்ட மூங்கிலை வளைத்தான். தன் குடுமியை முடிந்து கொண்டான். வாளை தொடையில் தீட்டிக் கொண்டான். அருகே வைத்துக் கொண்டான். கைகூப்பினான். அவன் மனைவி வாய்விட்டுக் கதறினாள் அவன் குழந்தைகள் அழுதன. மற்றவர்கள் எல்லோரும் அவனுக்கு அருகே போய் ''வேண்டாமய்யா, வேண்டாமய்யா'' என்று கெஞ்சி னார்கள். ஆனால் அவன் உறுதியாக இருந்தான்.

தன்னுடைய குதிரையை வேகமாக செலுத்தி நகர்ந்த கைக்கோளப் படையை நோக்கி போய்க் கொண்டிருந்த பாண்டியன் ஸ்ரீ வல்லபனுக்கு அந்த காட்சி தென்பட்டது. தாண்டிப் போனவர் சுழற்றி குதிரையை அருகே கொண்டு வந்தார்.

''என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார். அவன் பதில் பேசாது இருந்தான்.

''நவகண்டம் கொடுக்க தீர்மானித்திருக்கிறான்.'' என்று ஊர்மக்கள் சொன்னார்கள். அவர் குதிரையை வந்தியத்தேவன் நோக்கி செலுத்தினார். எதிரே பாண்டியன் ஸ்ரீ வல்லபன் வருவதை பார்த்து வந்தியத்தேவர் வியப்பில் ஆழ்ந்தார்.

''என்ன?''

''ஒருவன் நவகண்டம் தீர்மானித்து கையில் வாளோடு, குடுமி முடிந்தபடி இருக்கிறான்.''

''கடவுளே, ஏற்கனவே கோபத்தில் இருக்கிறார். இதைப் பார்த்தால் இன்னும் வெறியாகி விடுவார். அடித்து விரட்டு.''

''நவகண்டம் கொடுப்பவரை விரட்டினால் சரியாக இருக்குமா. அது அச்சான்யம் அல்லவா.''

''கூடாது, ஒருபொழுதும் கூடாது. அரசருக்காக தற்கொலை செய்துகொள்வது கூடவே கூடாது. இது அரசர் விரும்புவதில்லை. வேண்டுமென்றால் குதிரை ஏறி யுத்தத்திற்கு வரட்டும். அங்கே வந்து செத்துப் போகட்டும். எழுப்புங்கள் அவனை.''

''நான் எப்படி எழுப்புவது, என்னிலும் வயதானவனாக இருக்கிறான்.''

''விடு, நான் வருகிறேன்.'' அவர் குதிரையை வேகமாக செலுத்தினார். இரண்டு குதிரைகளும் நவகண்டம் கொடுப்பவர் அருகில் வந்தன. வந்தியத்தேவர் தரையில் குதித்தார். மூங்கிலை பிடுங்கிப் போட்டார். குடுமியை உருவி வீசினார். மூங்கில் பிரம்பை எடுத்து 'பளீர் பளீர் பளீர்' என்று அவனை அடித்தார்.

அவன் திகைத்து நின்றான்.

''அரசருக்காக சாகப் போகிறேன்.''

''தாராளமாக, நிச்சயமாக, நீ செத்துப் போனால் சந்தோஷம் தான். ஆனால் இப்படி அல்ல. இது தற்கொலை, நவகண்டம் கொடுக்கக்கூடாது என்பது அரசருடைய கட்டளை. வேண்டுமென்றால் யுத்தத்தில் சேர்ந்து கொள். அங்கு வந்து செத்துப் போ'' என்று சொல்ல, அவன்

''முடியாது.'' என்று மறுத்தான், வந்தியத்தேவர் வாள் உருவினார். அவன் நெஞ்சில் வைத்தார்.

''உள்ளே இறக்கி இரத்தம் பார்த்துவிடுவேன். முட்டாள், அரசருக்கு சற்றும் பிடிக்காத காரியத்தை எப்படி செய்யத் துணிந்தாய்.''

''அரசருக்கு பிடிக்காது என்று நீங்கள் சொன்னால் ஆயிற்றா, அரசர் சொல்லட்டும்.''

''உங்கள் ஒவ்வொருவரிடமும் அரசர் பேச வேண்டுமா. அப்பொழுதுதான் நீங்கள் பேசுவீர்களா. ஊருக்குள் பெரிய மனித னாக இப்படியெல்லாம் எண்ணமா.'' அந்த வாளால் பட்டென்று அவன் கன்னத்தில் அடித்தார். அவன் கன்னத்தை பொத்தித் கொண்டான். மக்கள் மிரண்டு பின்னடைந்தார்கள். அவன் மனைவி வாய் பொத்திக் கொண்டு அழுதாள்.

''அடிக்காதீர்கள் அய்யா'' என்று அழுதாள்.

''இளம் மனைவி, சிறு குழந்தைகள், என்ன, நாடகம் போடு கிறாயா. யார் பரிதாபத்தைச் சம்பாதித்துக் கொள்ள. எதற்காக யுத்தம் மிகப் பெரிய யுத்தம் நடக்கப் போகிறது. வா. வந்து மான்ய கேடயத்தை தாக்கு. வேங்கியை வீழ்த்து. ஒவ்வொரு வீரனும் ஏகப்பட்ட வேலையோடு அலைந்து கொண்டிருக்கிறான். நீ இங்கே உட்கார்ந்து கொண்டு தலைமுடியை சீவுவது போல கழுத்தை சீவிக் கொள்ளப் போகிறாயா. உன் உயிர் ஒன்றும் எங்களுக்கு தேவை இல்லை. உன் உழைப்பு எங்களுக்குத் தேவை. உன் வீரம் எங்களுக்குத் தேவை. உன் தற்கொலை எங்க ளுக்கு முக்கியம் அல்ல. நரபலியை மன்னர் விரும்புவதில்லை. ஆடுகளைக் கூட வெட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

போய் மன்னரிடம் நவகண்டம் கொடுக்கிறான் என்று சொல்.'' பாண்டியன் ஸ்ரீ வல்லபனிடம் காதோரம் மெல்லச் சொல்ல, பாண்டியன் ஸ்ரீ வல்லபன் சட்டென்று குதிரை ஏறி பறந்தான்.

அவன் வாள் எடுத்து தன்னை தாக்கிக் கொள்வானோ என்ற பயத்தில் அவனைப் புரட்டி முதுகுபக்கம் கயிறு போட்டு இறுக் கினார். தரையில் உட்காரவைத்தார். அவன் முகம் முழுவதும் கோபத்தோடு தரையில் உட்கார்ந்து கொண்டான்.

இனி என்ன ஆகும்'' என்பதுபோல் மக்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

இராஜேந்திர சோழர் அருகே வந்தார். அவனை உற்றுப் பார்த் தார். அவன் இராஜேந்திரசோழனை நோக்கி அழத் துவங்கினான்.

''சரி. இவனுடைய நவகண்டம் நமக்குத் தேவையில்லை. இவனுக்கு பதிலாக இவன் மனைவியையும், குழந்தையை யும் எண்ணைய் ஊற்றி எரித்து விடுங்கள். விறகுகளை அடுக் குங்கள்'' என்று சொல்ல, அங்கு விறகுகள் வேகமாக அடுக்கப் பட்டன. அவன் அலறினான்.

''நீ எதற்காக சாகிறாய், எனக்காக உன் மனைவியும், குழந்தைகளும் சாகட்டும். நான் நிச்சயமாக ஊத்தை அடையாமல் வருவேன். உன்னைவிட அவர்களுடைய அலறல் என்னை காப்பாற்றுமல்லவா. எங்கே நீங்கள் தீ வையுங்கள்'' என்று சொல்ல தீப்பந்தம் தயார் ஆயிற்று.

வந்தியத்தேவர் அமைதி என்று கை காட்டினார். அவர்கள் எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருக்க,

''மன்னித்துக் கொள்ளுங்கள் அய்யா, இனிமேல் இப்படி செய்ய மாட்டேன்'' என்றான்.

''உன் மனைவியின் உயிர் உனக்கு முக்கியமல்லவா. அதே போல உன் உயிர் உன் மனைவிக்கு முக்கியம். இப்படிச் செய்யாதே, வா. யுத்தத்திற்கு போகலாம். எழுந்திரு'' என்றார்.

அவன் கை கட்டு அவிழ்த்து விடப்பட்டது. குதிரையில் தாவி ஏறினான். மன்னரை சுற்றிவிட்டு அவரை வணங்கி முன்னேறினான்.

அரசர் தன் பையில் இருந்த பத்து கழஞ்சு பொற் பையை அவன் மனைவியிடம் வீசினார். அவள் அதை வாங்கிக் கொண்டு நிலம்பட விழுந்து வணங்கினாள். குழந்தைகள் வணங்கினார்கள். ஊர்மக்கள் வணங்கினார்கள். மன்னர் முகத்தில் மிக மெல்லியதாய் ஒரு மகிழ்ச்சி ரேகை ஓடியது.

பரவை நிம்மதி அடைந்தார். மன்னர் பரவையைப் பார்த்து, ''நம்முடைய சோழ ஜனங்கள் என்மீது வைத்திருக்கும் காதலுக்கு நான் என்ன பதில் செய்வேன் எனக்கு தெரியவே இல்லை பரவை,'' என்று சொன்னார். பரவை பதில் சொல்லாது சிரித்தாள். அவளுக்குள் ஒரு நிம்மதி வந்தது.

இப்படியே திரும்பி வரும்வரை இனிமையாக வந்தால் தஞ்சை பெருவுடையாருக்கு செண்பகமாலை சாத்துவதாக அங்கேயே வேண்டிக்கொண்டாள்.

தஞ்சை பெருவுடையார் கோவிலை மறுபடியும் பார்ப்போமா அல்லது ஜெயங்கொண்டத்திலேயே தங்கி விடுவோமா அவருக்கு சட்டென்று சந்தேகம் வந்தது. எதுவாய் இருந்தால் என்ன என் பெயரால் வேறு யாரோ சாத்துவார்கள். வேண்டிக் கொண்டது நிறைவேற்றப்படும். நான் வராவிட்டால் என்ன. ஆனால் வரவேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் ராகு தசை ராகு புக்தி மனகிலேசங்கள் இராஜேந்திரரை தாக்கிக் கொண்டுதான் இருக்கும்.

அத்தியாயம்

29

அவர்களுக்கு வழியில் வண்ணமாக உணவு கிடைத்தது. எல்லா அந்தணர்கள் குடியிருப்பிலும் அவர்களை வரவேற்று உணவு படைத்தார்கள். அவர்கள் எடுத்து வந்த அரிசி அதிகம் செலவழியாமல் இருந்தது. வெட்டவெளிகளில் தங்காமல் வீட்டுத் திண்ணைகளில் தங்கினார்கள். கோவில்களில் உறங்கினார்கள். ஒரு பகல் பொழுது பெரிய ஆலமரத்தடியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''நமது மன்னர் இராஜேந்திர சோழர் பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தது பற்றி விவரமாக சொல்வதாகச் சொன்னீர்கள். அதை கேட்க ஆவலாக இருக்கிறோம்.'' மருவூர் அந்தணர் சரப சாஸ்திரிகள் பேச, விஸ்வநாத ஸ்ரௌதிகள் வாய்விட்டுச் சிரித்தார்.

''இன்னும் அதை மறக்கவில்லையா. மறந்திருப்பீர்கள் என்று நினைத்தேன்.''

''எப்படி மறக்க முடியும். நான் இடைவிடாது அதைப் பற்றிய யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு பெண்ணுக்கு ருது ஜாதகம் முக்கியம். ருது ஜாதகம் சரியாக எழுதப்பட்டு விட்டால் ஜனனகால ஜாதகத்தையும் தூக்கி போட்டுவிடலாம். அதேபோல ஒரு மன்னனுக்கு பட்டாபிஷேக நாள் மிக முக்கியம். அது சரியாக கணிக்கப்பட்டு விட்டால் ஜனனகால ஜாதகத்தை பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. மன்னர் இராஜராஜர் நேரிடையாக உட்கார்ந்திருக்கிறார். கிருஷ்ணன் ராமன் இருந்திருக்கிறார். நீங்களும், உங்களைச் சார்ந்தோரும் போயிருக்கிறீர்கள். அத்தை குந்தவை தேவியார் வந்திருக்கிறார். இப்படி எல்லோருமாய் இருந்து, கணித்த ஜாதகமல்லவா இது. எல்லோருடைய கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக் கூடிய விஷயமல்லவா அது.''

''என்ன செய்தீர்கள், கொஞ்சம் தயவுசெய்து சொல்லுங்கள்.''

''எதற்காக இதை இவ்வளவு ஆவலோடு கேட்கிறீர்கள்.'' விஸ்வநாத ஸ்ரௌதிகள் சரபரைக் கேட்டார்.

''இது தெளிவானால் இன்னும் கூர்மையாக மற்றவர் ஜாதகங்களையும் நான் கனிக்க முடியும். ஜாதகங்களை பார்க்க பார்க்கத்தான் இந்த ஜோசிய அறிவு விருத்தி ஆகிறது.''

''அது உண்மை, ஆவலாக கேட்பதால் உங்களுக்கு சொல்லித் தருவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இதில் எந்த இரகசியமும் இல்லை.

ஒரு மிகச்சிறந்த நாளை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது தான் மாமன்னர் இராஜராஜருடைய கட்டளை, கிருஷ்ணன் ராமன் என்னை தேர்ந்தெடுத்து இதை நீங்கள் சரியாக செய்வீர்கள். உங்களுக்கு துணையாக இருக்கிறேன் என்று சொன்னார். கிருஷ்ணன் ராமனுக்கும் நன்கு வேலை தெரியும். ஆனால் விரைவாகச் செய்யத் தெரியாது. எனக்கு செய்து செய்து பழக்கம் என்பதால் என் மனக் கணக்கு நினைவுகள் பலம்பெற்றது என்பதால் இதை நான் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சி செய்து விரைவாக செய்து முடித்தேன்.

நான் குறித்த நேரம் ரிஷப லக்னம். ரிஷப இராசி, லக்னத்தில் சந்திரன்.''

''ஆஹா. ஆஹா.'' பல அந்தணர்கள் எழுந்தார்கள்.''

''லக்னத்தில் சந்திரன் இருந்தால் அவன் அழகன். மன்மதனுக்கு ஒப்பான, நிகரான அழகன்.''

''ஜனனகாலத்து ஜாதகத்தில் லக்னத்தில் சந்திரன் இருந்திருக்கிறது. ஆனால் பட்டாமிஷேக ஜாதகத்தில் அது வர வேண்டும் என்பதில் நான் குறிப்பாக இருந்தது. ஏனெனில் ஒரு அழகு வளர வரை அதிகரிக்க வேண்டுமே தவிர குறையக் கூடாது. நீங்கள் வேண்டுமென்றாலும் உற்று கவனித்து வாருங்கள். மாமன்னர் இராஜேந்திரருடைய அழகு வயதாக வயதாக இன்னும் பொலிவாக இருக்கும். வெகுச் சிலருக்கே இது அமையும்.

அதற்கு காரணம் ஜாதகம் மட்டுமா. வயதாகி ஏதும் சாதிக்கவில்லையென்றால் முகம் தொய்ந்து போகும். அய்யோ எதற்கு இத்தனை நாள் உயிரோடு இருந்தோம் என்ற நினைப்பே வாட்டும். வெற்றி மீது வெற்றி பெற்றவருக்கு வயதாக வயதாக நிறைய

சாதித்து விட்டோம் என்ற சந்தோஷத்தின் பேரிலேயே முகம் பொலிவுள்ளதாக மாறும்.''

''உண்மை.''

''அப்படி மிகவும் சாதிக்க வேண்டுமென்றால் மற்ற கிரகங்களும் சரியாக இருக்க வேண்டுமல்லவா.''

''ஆமாம்.''

''இரண்டிலே சூரியனும், சுக்கிரனும், அதாவது வீடு ஸ்தானத்தில் இடம், பொருள், மனை, வாகனம் இவையெல்லாம் மிகச் சரியாக அமையும். நாலுக்குரிய சூரியன் இரண்டில், குடும்பம், தனம், வாக்கு மிகச் சிறப்பாக இருக்கும். சொன்ன சொல் தவறாதவர். எப்படி பேசவேண்டும் என்று தெரிந்தவர். வாக்கில் வன்மை உடையவர், கூர்மையான புத்தி உடையவர். இதனால்தான் இரண்டிலே சூரியனும், சுக்கிரனும் இருக்கும்படி அமைத்தேன்.

இரண்டில் சூரியனும், சுக்கிரனும் இருப்பின் ஆறாம் இடத்தில் சனி. ஆறாம் இடத்தில் சனி உச்சன். ஏழாம் இடம் களத்திர ஸ்தானம். களத்திர ஸ்தானத்துக்கு உரியவன் செவ்வாய் பன்னிரெண்டில்.''

''ஆஹா பன்னிரண்டு மறைவிட மாயிற்றே.''

''இருந்தால் என்ன. அங்கு செவ்வாய் ஆட்சி. செவ்வாய் பூமி காரகன். அதிகப்படியான பூமியை இந்த ஜாதகன் நிச்சயமாக கைக்கொள்வான். இந்த பட்டாபிஷேகம் இந்த நேரத்தில் நடைபெற்றால் பல தேசங்களை வெற்றி கொள்ளக்கூடிய வாய்ப்பு வெகு நிச்சயம் இந்த ஜாதகங்கருக்கு கிடைக்கும் என்று அடித்துச் சொன்னேன்.''

''பிறகு.''

''பத்தில் கேது. எது செய்தாலும் சிறப்பு, ஆறில் சனி உச்சமாக இருப்பதால் தனம், ரோகம், சத்ரு இவைகள் சரியாக இருக்கும். சத்ருவை நாசம் செய்வான். ரோகம் பெரிதாக இருக்காது. தனம் கொண்டுவந்து கொட்டும்.

சுக்கிரன் இரண்டில் இருப்பதால் இவருடைய விதி பலமாகவும் இருக்கும். பதினோருக்குரிய குரு ஒன்பதில், பதினொன்று லாபஸ்தானம். அவன் இருப்பது சிறப்பான இடத்தில், எனவே இரு ஒரு பரிபூரண ஜாதகம். மிகச் சிறந்த நேரம்.

அதாவது அதிகாலை நாலரை மணிக்கு சுக்கிர ஹோரையில் பட்டாபிஷேகம் நடத்த வேண்டுமென்று. நாலரையிலிருந்து ஆறுவரை என்று தீர்மானித்தேன். மிக அற்புதமாக அந்த பட்டாபிஷேகம் நடந்தது. அப்போது ஒரே ஒரு குறை இந்த ஜாதகத்தில் இருக்கிறது என்று கிருஷ்ணன் ராமனிடம் சொன்னேன்.

இராகு திசை இராகு புத்தியில் இந்த ஜாதகர் கஷ்டப்படுவார். மிக மன சஞ்சலங்களுக்கு ஆளாவார். இழப்புகள் ஏற்படும். தோல்விகள் வராது. எனினும், வெற்றிகளுக்கு அதிகம் பலி கொடுக்க வேண்டியதாயிருக்கும் என்று சொன்னேன். அதை ஞாபகம் வைத்திக்கொண்டிருக்கிறார். கிருஷ்ணன் ராமன் இதை என்னிடம் வெளியே சொல்லாதே என்று சொல்லிவிட்டார்.

ஆனால் கிருஷ்ணன் ராமன் வாயை பிடுங்கி இராஜேந்திர சோழர் என்னவென்று விசாரித்து இதை தெரிந்துகொண்டு விட்டார் என்னை தனியாக அழைத்து நீர்தானே, ஜாதகம் கணித்தீர். இதுதானே அந்த ஆறாவது வருடம், இப்போதுதான் ஆரம்பிக்கிறது.

'இராகு திசை, இராகு புத்தி' என்று கேட்டார். நான் ஆமாம் என்று சொன்னேன். இந்த நேரத்தில் நான் மரணமடைவேனா' என்று கேட்டார். வெகுநிச்சயம் நீங்கள் மரணமடைய மாட்டீர்கள். நீங்கள் எண்பத்திரண்டு வயது வரை வாழ்வீர்கள் என்று உறுதி சொன்னேன். ஆனால் வெற்றி இருக்காதோ. தோல்வி ஏற்படுமோ என்று பயந்தார்.

இராகு திசை அவரை கலங்கடிக்கிறது என்பதை புரிந்து கொண்டேன். இல்லை இதற்கும் பிரசன்னம் பார்த்து விடலாம். நீங்கள் படி ஏறுவதற்குள் உங்கள் உடம்பில் பறவை எச்சம் விழுந்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்று சொன்னேன். அவர் படி ஏறுவதற்குள் காக்கை எச்சம் அவர் தோளில் விழுந்தது. அவர் சந்தோஷமானார்.''

''இப்படி பிரசன்னம் எப்படி பார்க்கிறீர்கள்.?''

''அது உள்ளுணர்வு, அது தவிர பேசுகின்ற நேரத்தை கணித்து எது நமக்கு இப்போது உதவி செய்யும் என்று கணித்து விடலாம். பறவை, பல்லி, பசு, கருடன் என்று பலவிதங்களில் நமக்கு நல்ல சகுனம் கிடைக்கும். அதே போல கெட்ட சகுனங்களுக்கும் சில விஷயங்கள் உண்டு.''

''இதற்கு இராஜேந்திரர் என்ன சொன்னார்?''

''நான் உங்களை எல்லாம் தவறாக எடைபோட்டு விட்டேன். கருந்தச்சர்களுக்கு நான் ஏதோ கொடுக்க முற்பட்டபோது பலமாக அந்தணர்கள் மறுத்ததால் எனக்கு கோபம் ஏற்பட்டு விட்டது.''

''ஆமாம். நாம் அதை கொஞ்சம் வேகமாகத்தான் செய்து விட்டோம். தஞ்சை அந்தணர்கள்தான் அதில் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். அப்படி நடந்து கொண்டதற்கு ஒரே ஒரு காரணம் உண்டு. பூணூல் அணிந்து கொள்ள வேண்டும் என்று கருந்தச்சர்கள் கேட்டவுடன் இவர்கள் பயந்து விட்டார்கள். தங்களுக்கு போட்டியாக வந்துவிடுவார்களோ என்று பயந்து விட்டார்கள். போட்டியாக வரமுடியாது என்பதை புரிந்து கொள்ள மறந்துவிட்டார்கள்.

பூணூல் அணிந்து கொள்ளேன் என்று தாராளமாக சொல்லி இருக்கலாம். நெருப்பில் உட்கார்ந்து இரும்பை ஓங்கி அடிக்கிறவன் எப்படி காயத்ரி ஜபம் செய்ய முடியும். அந்த சப்தத்தில் இருப்பவன் எப்படி மனதை ஒருநிலைப்படுத்த முடியும். எனவே பூணூல் என்பது அவர்களுக்கு அலங்காரமாகத்தான் இருக்கும் என்பதை புரிந்து கொள்ளாமல் வேகமாகி விட்டார்கள். அதனால் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார்கள்.''

''இப்பொழுது இராஜேந்திரருடைய நிலைமை என்ன?''

''மிகப் பிரியமாக இருக்கிறார். மிக மரியாதையாக இருக்கிறார். நாமெல்லாம் எந்த எதிர்ப்புமில்லாமல் காசிக்கு கிளம்பியது அவருக்கு மிகுந்த சந்தோஷம். வேண்டாம் என்றுகூட சொல்லி விடலாமா என்பதைத்தான் மறுபடியும் சொன்னார். நாங்கள் சந்தோஷமாக போய் வருகிறோம். உங்களுக்கு உதவியாக இருக்கிறோம். என்று சொன்னபோது அவர் அளவில்லாத சந்தோஷம் அடைந்தார்.''

மருவூர் அந்தணர் எழுந்தார். விஸ்வநாத ஸ்ரௌதிகளின் காலில் விழுந்து வணங்கினார்.

''உங்களைப் போன்றவர்கள் இருப்பதால்தான் நாட்டில் மழை பெய்கிறது. நீங்கள் சொன்ன ஒரு வார்த்தை முக்கியம், அவரவக்கு வேலை இருக்கிறது. அவரவர் வேலையை அவரவர் செய்துவந்தால் போதும் நாடு சுபீட்சமாக இருக்கும். இவருக்கு இது கூடாது அவருக்கு அது கூடாது என்று மறுப்பதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை.

கருவறைக்கு வந்து யாராவது பூஜை செய்ய வேண்டு மென்றால் வந்து செய்யட்டுமே என்றுதான் சொல்லிவிட வேண்டும். அதற்குண்டான யோக்யதையை வளர்த்துக்கொள் என்கிற ஒரே ஒரு கட்டளையை வைத்துக்கொள்ள வேண்டும். மது அருந்தி விட்டு கோவில் கருவறைக்குள் வர முடியுமா. எனவே மது அருந்தும் பழக்கத்தை விட்டு விடு.''

''ஆமாம். இன்று பல காளி கோவில்களில் அந்தணர் அல்லா தவர்தான் பூஜை செய்கிறார்கள். மிகச் சிறப்பாக நடக்கிறார்கள். மிக அழகாக அலங்காரம் செய்கிறார்கள். அவர்களுள் வடமொழி கற்றவர் நன்கு உரத்த குரலில் மந்திரம் சொல்கிறார்கள்.''

''வடமொழி கற்பதற்கு பெரிய புத்தி தேவையா. எதுவும் இல்லை ஐயா. ஒழுக்கமாக இருப்பதற்குத்தான் நல்ல புத்தி தேவை. ஒழுக்கமாக இருக்க எவர் முயன்றாலும் அவர் சிறப்பாக இருப்பார். இதில் ஜாதி வித்தியாசமே இல்லை.

ஒரு தட்டு தட்டி நம்மை தாழ்த்தி வைத்தது தான் நல்ல தாகப் போயிற்று. இல்லையெனில் தலைகால் புரியாமல் ஆடிக் கொண்டிருப்போம். மேலே விழாதே. அங்கே நிற்காதே. இங்கே நிற்காதே என்று அலட்டிக் கொண்டிருப்போம். அதுமட்டு மில்லை மிகப்பெரிய காசு ஆசை வந்துவிட்டது. அதனால்தான் பிரச்சனை பெரிதாகிவிட்டது. செல்வந்தராக இருக்க வேண்டும். மாராயராக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதுக்கேற்றபடி இடுப்பில் வாள் தரித்து போருக்கு போக பயப் படுகிறார்கள். வெறும் கழியை வைத்துக்கொண்டே பெருந் தனம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இதெல்லாம் தான் பிரச்சனையை கொண்டு வந்து கொடுத்துவிடும்.''

''இப்பொழுது சொல்லுங்கள் இந்த ஒன்றரை வருடம் ராகுதிசை ராகுபுத்தி இராஜேந்திரசோழருக்கு என்னவெல்லாம் பிரச்சனை வரும்.''

''என்னுடைய அபிப்ராயத்தில் இராஜநரேந்திரன் மயிரிழை யில் தப்பிப்பான். என்னுடைய அபிப்ராயத்தில் குறைந்தபட்சம் பதினைந்து சேனாதிபதிகளாவது மரணமடைவார்கள். என் னுடைய அபிப்ராயத்தில் இராஜேந்திரசோழர் அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் ஆறு அல்லது ஏழு முறை திகைத்துப் போய் நிற்பார். என்னுடைய அபிப்ராயத்தில் இன்னும் ஆறு வருடங்களுக்கு அவருக்கு ஓய்வு என்பதே இருக்காது. என்னுடைய

அபிப்ராயத்தில் நீண்ட வயது வாழ்வார். ஆனால் அவர் தன் மகன் இழப்பை அதாவது புத்திர சோகத்தை சந்திக்கும்படி நேரும்.''

''அடடா, அடடா'' அந்தணர்கள் மன்னருக்காக வருத்த முற்றார்கள்.

''இதையெல்லாம் உங்களோடு வைத்துக்கொள்வது நல்லது. அதிகம் வாய்திறந்து பேசினீர்கள் என்றால் உங்களுக்கு உண் டான மரியாதை கெட்டுப் போகும். இராஜாதிராஜன் சீக்கிரம் இறந்துவிடுவார் என்று சொன்னால் அவர் இறக்க நீங்கள் ஆசைப் படுவது போல் வந்துவிடும். எனவே வாயைத் திறக்காதீர்கள். அதிகம் பேசாதீர்கள். அலட்டலாகப் பேசாதீர்கள். எல்லோரையும் மரியாதையாக நடத்தப் பழகுங்கள், ஒருமையில் கூப்பிடாதீர்கள். அப்படி ஒருமையுடன் கூப்பிட விரும்புவதென்றால் பிரியத்துடன் கூப்பிடுங்கள்.

ஜாதகம் கணிப்பதற்கோ, கல்வி, கேள்விகளில் உதவி செய் வதற்கோ ஏழைகளிடம் காசு வாங்காதீர்கள். உண்ண உணவு, இருக்க இடம், உடுத்த உடை இது போதும். மிகப்பெரிய சொத்துக் கள் எதுவும் நமக்குத் தேவையில்லை. அப்படி விலகி இருந் தாலே சொத்துக்கள் தானாக வரும்.

நாளை கொள்ளிடம் தாண்டி ஜெயங்கொண்டம் போய் விடுவோம். மிகச்சிறந்த அரண்மனை பெரிய கோட்டையுடன், கோவிலுடன் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறதாம். இராஜேந்திர சோழர் பார்த்து பார்த்து செய்கிறாராம். நித்த வினோத பெருந் தச்சன் தன் முழு திறமையைக் காட்டியிருக்கிறாராம். காலா காலத்துக்கும் நின்று பெரிய கதையை சொல்லுமாம். அவ்வளவு அழகாம். பெருவுடையார் கோவிலைப் போல உயரமாக இல் லாமல், அதே வடிவத்தில் சிறிதாக இருக்குமாம். பெருவுடை யார் கோவிலை ஆண் என்றால், இதை பெண் என்றும் சொல் லலாம் என்று சொல்லுகிறார்கள். அத்தனை அழகு என்று சொல்லு கிறார்கள்.

வழிமுழுக்க எத்தனை ஊர்களை பார்த்தோம். எத்தனை விதமான மனிதர்கள். எத்தனை விதமான பயிர்கள். தஞ்சை யில் விளையும் நெல்லுக்கும் இங்குள்ள நெல்லுக்கும் எவ்வளவு வித்தியாசம். கரும்பு எவ்வளவு தடிமனாக இருக்கிறது. வெற்றிலை எவ்வளவு முரடாக இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. அதைவிட எனக்கு பிடித்தது சாமகானத்திற்கென்றே ஒரு ஊர்

இருக்கிறது. அந்த கிராமத்தில் உள்ள அத்தனை பேரும் சாம கானம் தான் சொல்கிறார்கள். கிழிந்த உடையுடன் இருக்கிறார் கள். நல்ல போஷாக்கான உணவு இல்லை. ஆனாலும் அதைப் பற்றியெல்லாம் கவலையே இல்லை. சாமகானம் கற்பது. சாம கானம் சொல்லித் தருவது, இதுதான் வாழ்க்கை. அவர்களை வலம் வந்து நமஸ்கரித்தது எனக்கு மிகுந்த சந்தோஷம். கரை போட்ட காழகம் நாலும், புடவைகள் ஐந்தும் கொடுத்தபோது அவ்வளவு குதூகலம் அவர்களிடம், ஒரு கூடை நெல்லையும் கொடுத்துவிட்டு வந்திருக்கிறோம், அதுவும் சந்தோஷம், வாங் குவது மட்டும்தான் சந்தோஷமா. கொடுப்பதும் சந்தோஷம் இல்லையா. நான் அப்போதுதான் அதை உணர்ந்து கொண் டேன். நாமும் கொடுக்க பழக வேண்டும். வாரி வழங்கப் பழக வேண்டும்'' என்று விஸ்வநாத ஸ்ரௌதிகள் சொல்ல, எல்லா அந்தணர் களும் மிக வேகமாக ''ஆமாம் ஆமாம்.'' என்று தலை ஆட்டினார்கள்.

வாழ்க்கையில் நடக்கின்ற மோசமான அனுபவங்களி லிருந்து பாடம் கற்றுக் கொள்பவன் கெட்டிக்காரன், தஞ்சை புறம்படியை தாண்டியதும் பரமன் மழபாடியார் இராஜேந்திர ரிடம் விடை பெற்றார்.

தஞ்சையை பற்றிய எந்த கவலையும் உங்களுக்கு வேண டாம். இராஜராஜன் அங்கிருக்கும்வரை தெற்கே உள்ள எந்த தேசங்களைப் பற்றியும் கவலை வேண்டாம். நான் வெறுமனே உட்கார்ந்து கொண்டிருக்க மாட்டேன். சுற்றி சுற்றி வருவேன். கிளம்பும் முன்பு வீரமாதேவியார் ஒரு விண்ணப்பத்தை உங்க ளிடம் வைக்கச் சொன்னார். நான் எங்கு போனாலும், எங்கு பயணப்பட்டாலும் என்னோடு அவர்களும் வருவதாகச் சொன் னார்கள். நான் அழைத்துப் போகட்டுமா. உங்கள் அனுமதி தேவை.'' மிகத் தாழ்ந்த குரலில் அமைதியாக பரமன் மழபாடியார் கேட்டார்.

இராஜேந்திரசோழர் அவரையே பார்த்துக் கொண்டிருந் தார். யோசித்தார்.

''அழைத்துப் போங்கள். வீரமாதேவிக்கு அது ஆறுதலாக இருக்கும். கீழைசசாளுக்கியம் நோக்கி தான் வரவில்லையே என்ற கவலை அவளுக்கு இருக்கிறது. ஆனால் உடல்நிலை ஏற்றுக்கொள்ளுமா என்பதை மட்டும் ஒருமுறைக்கு இருமுறை

சோதனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். முதலில் தஞ்சைக் குள்ளாகவே குதிரை ஓட்டிப் போகட்டும். எப்படி ஓய்வெடுக் கிறார்கள். ஓய்வெடுக்க முடிகிறதா. கை, கால்களில் வலி இருக் கிறதா. வேறு ஏதேனும் தொந்திரவு இருக்கிறதா என்று பாருங் கள். பெண்கள் பிரச்சனை பெரிதாகாமல் இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். அந்த உடல்நிலை சரியாக இருந்தால் எங்கு வேண்டுமானாலும் போய்விடாலாம். ஒரு வாரம் அல்லது அரை மாதம் தஞ்சைக்குள்ளாகவே அவர் சுற்றி வரட்டும், பிறகு தெற்கே கன்னியாகுமரி வரையில் கூட போய் வரலாம். கேரளத் திற்கு போவது மட்டும் யோசித்துச் செய்யுங்கள்.''

''கேரளத்திற்கு நான் போகப் போவதில்லை. ஏனெனில் அவர்கள் மறைந்திருந்து தாக்குபவர்கள். பாண்டிய தேசம் போகலாம் என்றிருக்கிறேன். மதுரையை அவர்களுக்கு காட்ட வேண்டும். திருவெண்காடும், பூம்புகாரும், நாகை பௌத்த விகாரையும், மேல்பட்டிணமும் இன்னும் சற்றுத் தள்ளி இராமேஸ் வரமும் அவர்களுக்கு போகவேண்டும் என்பது ஆசை. அவர்கள் உடல்நிலைக்கு ஏற்ப பக்குவமாக அழைத்துப் போகிறேன். என்னாலேயே விரைவாக குதிரை ஓட்டமுடியாது. வயதாகிவிட்ட தல்லவா'' என்று மறுபடியும் தாழ்த்தகுரலில் பேசினார்.

''உங்களால் எப்பொழுதும் விரைவாக குதிரை ஓட்ட முடியும். ஆனால் மனது நிதானமாகி விட்டது. அதுதான் என்னை வியக்க வைக்கிறது. உங்கள் வயதில் உங்கள் நிதானம் எனக்கு வருமா. என்று கேள்வி இருக்கிறது. அல்லது சாகும் வரை பட படப்பாகவே இருப்பேனா என்ற பயமும் இருக்கிறது.

சேனாதிபதி சோம்பலாக இருக்கலாம். மன்னர் படபடப்பாக இல்லாமல் முடியுமா.

ஒரு பிரச்சனையா. இரண்டு பிரச்சனையா. போதாக் குறைக்கு நாமாக வேறு பிரச்சனைகளை இழுத்துவிட்டுக் கொள் கிறேன்.''

''எதை இந்தப் படைஎடுப்பை சொல்கிறீர்களா?''

''ஆமாம், குந்தவையால் ஏற்பட்ட படை எடுப்புதானே. குந்தவைக்கு தெரியுமா. எத்தனை வீரர்கள், எத்தனை குடும்பங் களை பிரிந்து எவ்வளவு தூரம் நடக்கிறார்கள் என்று அந்த குந்த வைக்க தெரியுமா, புரியுமா, ஒரே ஒரு பெண்மணியால் இந்த படை எடுப்பு நடக்கிறது. விமலாதித்தன் மிக நல்லவன். அவனை அனுசரித்து குடித்தனம் நடத்தி இருந்தால் கீழைச்சாளுக்கியம்

வலுவாகி இருக்கும். நமக்கு பெரும் உதவியாக இருந்திருக்கும். நமக்கென்று சில தலையெழுத்து இருக்கிறதல்லவா.'' இராஜேந்திர சோழர் அலுத்துக் கொண்டார்.

அவர்கள் கைகூப்பினார்கள். பிரிந்தார்கள்.

திருவையாரில் அய்யாரப்பனை இராஜேந்திர சோழர் வணங்கினார். சேனாதிபதிகள் எல்லோரும் சன்னதிக்குள் குழுமி இருந்தார்கள். இராஜேந்திர சோழர் எல்லோருக்கும் திருநீறு இட்டார், தலையைத் தடவினார். எல்லா சேனாதிபதிகளும் சந்தோஷமானார்கள்.

''இனிமேல் நிதானமான பயணம் இல்லை. விரைவான பயணம். எவ்வளவு விரைவாக ஜெயங்கொண்டம் போய்ச் சேர முடியுமோ அவ்வளவு விரைவில் சேரவேண்டும். இரவு நேரப் பயணம் வேண்டாம்'' என்று கட்டளை இட்டார்.

மெய்க்காவல் படைக்கு நடுவே பரவையோடு உட்கார குதிரைகள் வேகம் எடுத்தன. ஜெயங்கொண்டம் நோக்கி போக வேண்டும் என்று எல்லோருக்கும் கட்டளை வந்தது, வெளிச்சம் மங்கும்வரை பயணம் செய்தார்கள். பிறகு அங்கங்கே உள்ள கிராமங்களில் தங்கினார்கள். கிராம மக்களைத் தொந்தரவு செய்யாது தாங்களே சமைத்து உண்டார்கள். வேடிக்கை பார்த்த கிராமத்து இளைஞர்களையும் அரவணைத்து பக்கத்தில் உட்கார வைத்து அவர்களுக்கும் சோறு கொடுத்தார்கள். வேகவைத்த கறித்துண்டுகளை நீட்டினார்கள். திண்ணைகளிலும், பொதுக்கூடங்களிலும், மரத்தடியிலும் கோயில்களிலும் அயர்ந்து தூங்கினார்கள். நீர் சுத்தமாக இருக்கிறதா என்று சோதித்த பிறகே குடிக்கவும், குளிக்கவும் துவங்கினார்கள்.

இரவுநேரம் நிற்காமல் தன் மனைவியோடு ஞானசம்பந்தன் மாட்டு வண்டிகளை விரட்டிக் கொண்டு ஜெயங்கொண்டம் நோக்கிப் போனான். தந்தையை எப்படியும் அங்கு சந்தித்து விடலாம் என்று திட்டுமிட்டு இருந்தான்.

ஜெயங்கொண்டத்து கோட்டைக் கதவுகள் விரியத் திறந்தன. நித்த வினோதகப் பெருந்தச்சனும் அவனுக்குத் துணையாக இருந்த வீரசோழ பெருந்தச்சனும், காஷ்டகாரி ஆராவுமத புருஷோத்தமனனான, இராஜேந்திர பேராசிரியனும், கிருஷ்ணன் ரங்க திரிகோணை மாதேவி பேராசிரியனும் அந்த கோவில் கட்டவும்

பொறுப்பாக இருந்தார்கள். ஓவியக் குலத்தை சேர்ந்த நால்வர் விதம்விதமாக சுண்ணம் அடித்தார்கள். அந்தணர் வீடுகளில் காவியும், வெள்ளையும் இடப்பட்டன. மறவர் வீடுகளில் மஞ்சள் எழுதப்பட்டன. எல்லோர் வீட்டு வாசலிலும் புலி வரையப்பட்டிருந்தது. வாசல் மெல்லிய நீல நிறத்தால் எழுதப்பட்டிருந்தது. சேனாதிபதிகளுடைய கட்டிடங்கள் வெள்ளை நிறத்தில் இருந்தன. பஞ்சமருக்கு உறுதியான ஓட்டு வீடுகள் எழுப்பப்பட்டன. பஞ்சமருக்கு கோட்டைக்கு வெளியே வைக்க வேண்டுமா என்று வீரசோழ பெருந்தச்சனான இரவி என்பவன் கேட்டதற்கு, 'இல்லை. அவர்களுக்கும் கோட்டைக்கு உள்ளேயே இடம். எவரை யும் நாம் பிரித்து வெளியே அனுப்ப முடியாது. பாதுகாப்புக்கு நல்லதல்ல. சகலமும் கோட்டைக்குள்ளேயே இருக்க வேண்டும்' என்று இராஜேந்திர சோழர் சொன்னார்.

இராஜேந்திரசோழருடைய அரண்மனை கருநிறத்தில் பளபளத்து இருந்தது. அதற்கு உள்கோட்டை என்று பெயர். சுற்றி மதில் சுவர் எழுப்பி அதில் கண்காணிக்க கோபுரங்கள் அமைத்து உள்ளுக்குள்ளே அலுவலகம், அலுவலகம் தாண்டி சபை, சபை தாண்டி இரகசியமாக பேச வேண்டிய முற்றம். பிறகு அரண்மனை வாசலில் இன்னொரு சபை, அதைத் தாண்டி அந்தப்புரங்கள் என்று மிகப்பெரிதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

வாள்முதுகு படைவீரர்கள் வந்துவிட்டார்கள் என்று எக்காளம் சொல்ல சபதிகள் பரபரப்பானார்கள். அத்தனை பேரும் வந்து அரண்மனை முதற்கொண்டு எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து விட்டுத்தான் போவார்கள். அவர்கள் போய் விதம்விதமாக மாளிகையைப் பற்றி பேசுவார்கள். இது நல்ல கண்காட்சி. இப்படி பேசுகிறபோது என்ன குறை என்பதும் அவர்களுக்கு தெரிந்துவிடும். இதனால் தங்களுடைய ஆட்களை மற்றவர் பேசுவதை கேட்க விழிப்போடு இருக்கும்படி சொன்னார்கள்.

கோவில் வேலை முக்கால் திட்டம் முடிந்திருந்தது, அரண்மனை வேலை முழுவதும் முடிந்துவிட்டது. ஆனால் மரவேலைகள் நடந்து கொண்டிருந்தன. பண்டங்கள் வைக்கின்ற மர ஆசனமும் வேகமாக செய்யப்பட்டிருந்தன. எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு வந்தவரை உபசரிப்பதே முக்கியமான வேலை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. மூலைக்கு ஒன்றாய்

பல இடங்களில் குழிவெட்டி அடுப்பு தயாராக இருந்தது. விறகு கள் வெட்டப்பட்டு தயாராக இருந்தன.

வாள்முதுகுப்படை வந்ததும் இரண்டு அந்தணர்கள், இராஜ ராஜ பிரம்மராயரும், உத்தம சோழமிலாடுடையாரும் பூரண கும்பம் கொடுத்து வரவேற்றார்கள்.

''வலதுகாலை எடுத்து வைத்து உள்ளே வாருங்கள்'' என்று கட்டளை இட, அவர்கள் குதிரையிலிருந்து இறங்கி வலது காலை எடுத்து வைத்து கோவிலை நோக்கி வணங்கினார்கள்.

''சோழம் சோழம் சோழம்.'' என்று உரக்க கூவப்பட்டது.

''மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க.'' என்று கூவப்பட்டது. குதிரையை பிடித்துக்கொண்டு அவர்கள் உள்ளே நடந்தார்கள். வியப்பின் எல்லையைத் தொட்டார்கள்.

''இத்தனை பெரிய நகரமா. நீருக்கு எங்கே போவது.''

''கொள்ளிடம் இருக்கிறதய்யா. கொள்ளிடத்திலிருந்து பிரிந்து பல கிணறுகள், குளங்கள் என்று உள்ளுக்குள் சேமித்து வைத்திருக்கிறோம். குறுக்கும், நெடுக்கமாக கால்வாய்கள் வெட்டி இருக்கிறோம். கால்வாய்கள் சேறு உறிஞ்சிக் கொள் ளாமல் இருப்பதற்காக அதில் கருங்கல் பதித்திருக்கிறோம்.

அரண்மனைக்குள்ளே கால்வாய் போகிறது. அந்தப்புரத் துக்குள்ளே கால்வாய் போகிறது, அந்தணர் குடியிருப்பிலும் கால்வாய் போகிறது. பஞ்சமருக்கும் கால்வாய் போகிறது. கால்வாய் இல்லாத இடமே இல்லை. அரண்மனை முழுவதும் பின்னல் பின்னலாக கால்வாய்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

ஐம்பது கோலுக்கு ஒருபாலம் நீங்கள் தாண்டியாக வேண் டும்.''

''ஒருவேளை கொள்ளிடம் பொய்த்துவிட்டால் நீருக்கு என்ன செய்வது?''

''கேணிகள் இருக்கின்றன. அதைத்தவிர அருகே இருக் கின்ற வீரநாராயணம் ஏரியிலிருந்து தனியாக ஒரு கால்வாய் வெட்டி உள்ளுக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. அங்கு மதகு கட்டப்பட்டு இருக்கிறது. வேண்டுமெனில் வரவழைத்துக் கொள்ளலாம். வேண்டாமெனில் தடுத்து நிறுத்தி விடலாம்.''

''கோவிலுக்குள் போய்ப் பார்க்கலாமா?''

''தாராளமாக, நீங்கள் பார்க்க் வேண்டுமென்றுதானே எங்கள் ஆசை, உணவருந்திவிட்டுப் பார்க்கலாம்.''

''முதலில் பார்த்து விடுகிறோமய்யா, பிறகு உணவு எடுத்துக் கொள்கிறோம்.'' அவர்கள் ஆவலாகக் கோவிலுக்குள் நுழைந் தார்கள்.

''காலணிகளை போட்டுக்கொண்டே போங்கள். இன்னும் கும்பாபிஷேகம் நடக்கவில்லை. அங்கங்கே கற்கள் சிதறி இருக்கும். ஆணிகள் இருக்கும். உளிகள் இருக்கும். எனவே காலணி களை அணிந்துகொண்டே போங்கள். உள்ளுக்குள்ளே போகும் பொழுது மட்டும் அவிழ்த்து விடுங்கள்'' என்று சொல்ல, வீரர் கள் அத்தனை பேரும் காலணிகளோடு கோவிலுக்குள் சுற்றி வந்தார்கள்.

''கருங்கல் நந்தியா?''

''இல்லை, சுதையினால் செய்யப்பட்டது, செங்கல் நந்தி.''

''சண்டேஸ்வரரும் சுதையினாலா?''

''இல்லை, அது சுத்தமான கருங்கல், நீலக்கருங்கல்.''

''விமானம் ஏறி பார்க்கலாமா?''

''எங்கு வேண்டுமானாலும் ஏறலாம். ஜாக்கிரதையாக செய் யுங்கள்.'' அவர்கள் எல்லோரும் விமானம் ஏறிப் பார்த்தார்கள்.

கொள்ளிடம் எங்கிருக்கிறது, எங்கிருந்து நீர் வருகிறது, எப்படி பிரிகிறது, என்றெல்லாம் ஆராய்ந்தார்கள். கீழே இறங்கினார் கள். ஓடிவந்து இராஜராஜ பிரம்மராயர் நித்த வினோதப் பெருந் தச்சனை தழுவிக் கொண்டனர்.

''ஆச்சரியம், மிகப்பெரிய ஆச்சரியம், உங்களுடைய சாமர்த் தியம் முழுவதையும் காட்டி இருக்கிறீர்கள். சோழ தேசம் உங்களை சிற்பியாகப்பெற்றது பாக்கியம், சோழ தேசத்தினுடைய ஜாதகம் மிகச்சரியாக இருக்கிறது. இங்கு வேலை செய்கிறவர்கள் அத்தனை பேரும் உன்னதமானவர்களாக இருக்கிறார்கள். உன்னதமானவர் கள் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் பிறந்திருக்கிறார்கள். இது தான் எனக்கு சொல்லத் தோன்றுகிறது.''

சிற்பி சரியா, போர்வீரர் சரியா, அந்தணர் சரியா எனக்கு ஒன்றும் புரியவில்லை. மன்னருக்கெல்லாம் மகுடம் வைத்தது

போல ஒரு அற்புதமான மாமன்னர் நமக்கு கிடைத்திருக்கிறார். நொடி நேரத்தில் முடிவு எடுக்கிறார். தீர்மானமாக இருக்கிறார். தெளிவாக இருக்கிறார். அவரிடம் பேசப்பேச வியப்புதான் வரு கிறது. ஒரு அற்புதமான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண் டிருக்கிறோமய்யா. இந்த காலத்தில் வாழ கொடுத்து வைத்தி ருக்க வேண்டும்.

சேனாதிபதிகளுக்கு எங்கே வீடு?''

''அது பிரித்து பிரித்து தரப்பட்டிருக்கிறது. அரண்மனைக்கு அருகே ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு. கோட்டை வாசலில் ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு. கோவிலுக்கு அருகே ஆறு சேனாதிபதிகளுக்கு வீடு. என்று ஆறு ஆறாக நாலாபக்கமும். பிரித்திருக்கிறோம்.''

''கோட்டைக்கு எத்தனை வாசல்.''

''இரண்டே வாசல்கள். ஒன்று கிழக்கு. இன்னொன்று மேற்கு.''

கேணியிலிருந்து நீர் எடுத்து பருகினார்கள். சுவையோ சுவை என்றார்கள். சாப்பிட உட்கார்ந்தார்கள். கன்னிமூலை கணபதி என்ற இடத்திற்கு போகச் சொன்னார். அங்கு போய் உட்கார்ந்தார்கள். மெல்ல திரைச்சீலையை விலக்கி கணபதி யைக் காட்டினார்.

மிக அழகான, உயரமான, அகலமான, குழைவான ஒரு பிள்ளையார் சிலை அங்கிருந்தது. எல்லோரும் கை எடுத்து கும்பிட்டார்கள். மெல்லத் தொட்டார்கள். காதுகளை வருடிப் பார்த்தார்கள். துதிக்கையைத் தடவினார்கள்.

* * *

அத்தியாயம் 30

எசாளத்திலிருந்தும், எண்ணாயிரத்திலிருந்தும் இருநூறு மாணவர்கள் ஜெயங்கொண்டம் நோக்கி மெல்ல நடந்த வந்தார் கள். சர்வசிவ பண்டிதரும், ஈசான சிவ பண்டிதரும் பல்லக்கிலே வர, அந்த மாணவர்கள் வேதம் சொன்னபடியும், ஸ்லோகங் கள் சொன்னபடியும், மூலமந்திரங்கள் சொன்னபடியும் ஜெயங் கொண்டம் அரண்மனையை வந்து சேர்ந்தார்கள். வாசலில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

யாரென்று விளக்கிச் சொல்லுங்கள் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அவர்கள் தங்களைப் பற்றியும், தங்கள் குரு வழிப் பற்றியும் சொல்ல, வீரர்கள் மதிலிலிருந்து கீழிறங்கி வந்தார் கள். கதவுகளைப் பெரிதாகத் திறந்தார்கள், சர்வ சிவ பண்டிதரின் பல்லக்கை முன்னே வரச் சொன்னார்கள். அந்த பல்லக்கு வர அவர்கள் கைகூப்பி நின்றார்கள். திரை விலக்கப்பட்டது. சர்வ சிவ பண்டிதர் கை கூப்பினார். தட்டில் உள்ள மஞ்சள் அரிசியை அவர்கள் மீது தூவினார்.

''வாழ்க சோழம், ஜெயங்கொண்டத்திற்கு இப்பொழுது தான் முதலில் வருகிறேன். மாமன்னர் இராஜேந்திரரை இங்கு சந்திப்பதாக ஏற்பாடு. நான் உள்ளே போகலாமா'' என்று அனுமதி கேட்டார்.

''உங்கள் வரவு நல்வரவாகுக. தாராளமாகப் போகலாம். கோட்டைக் காவல் எவரையும் தடுத்து நிறுத்தி விசாரித்து உள்ளே அனுப்புவது என்ற வழக்கத்தை கொண்டிருக்கிறது. அந்த வழக்கத்தின்பால் தான் நிற்க வைத்தோமே தவிர நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியும். உள்ளே வாருங்கள். உங்கள் வரவு நல்வரவாகுக'' என்று அவரைப் பணிந்தார்கள்.

அடுத்த பல்லக்கும் வந்தது.

ஈசான சிவ பண்டிதர் திரையை விலக்கி அவர்களுக்கு விபூதி கொடுத்தார். அவர்கள் நெற்றியில் இட்டுக் கொண்டார் கள். அவரையும் விழுந்து வணங்கினார்கள். அந்த இரண்டு

பல்லக்குகளும் முன்னே போக, மாணவர்கள் பின்னே யஜுர் வேதம் சொல்லத் துவக்கினார்கள். கோவிலையும், அரண்மனை யையும் பார்த்துவிட்டு ஈசானசிவ பண்டிதர் திகைத்தார். பல் லக்கை இறக்கச் சொல்லி கீழிறங்கி நடையாகவே வருவது என்று தீர்மானித்தார். சர்வசிவ பண்டிதருக்கு காலில் கொஞ்சம் வலி,

''நான் பல்லக்கிலேயே வரட்டுமா,'' என்று கேட்க,

''தாராளமாகச் செய்யுங்கள்.'' என்று சொல்லி பல்லக்குக்கு அடுத்தபடி அவரும் நடந்தார்.

''அற்புதம் செய்திருக்கிறார்களய்யா, என்ன அற்புதமான சிற்பிகள், என்ன தெளிவான நிர்மாணம். ஒவ்வொன்றும் அள வெடுத்து செய்திருக்கிறார்களே. ஒரே மாதிரி செய்திருக்கிறார் களே. திட்டமிடப்பட்ட நகரம் என்றால் இதுதான் திட்டமிடப் பட்ட நகரம். இப்படி ஒரு நகரம் நான் எங்கேயும் பார்த்த தில்லை. காசி தேசத்தை மிகப்பெரிய நகரம் என்று சொல்லு வார்கள். ஆனால் குறுகலான சந்துகள். நடமாட முடியாத வீடுகள். என்றெல்லாம் நிறைய இருக்கும். ஆனால் இங்கு அப்படி இல்லை. தெருக்கள் அகலமாக இருக்கின்றன. சுத்தமாக இருக்கின்றன. வீடுகளுக்குள் இடைவெளி இருக்கின்றன. நகரம் என்பதற்காக பெருமரங்கள் வெட்டப்படவில்லை, மாறாக பல இளஞ்செடி கள் நடப்பட்டு இருக்கின்றன. குறுக்கே கால்வாய்கள் அதிகம் போகின்றன. கொள்ளை அழகு. கொள்ளை அழகு'' என்று வாய் விட்டு அரற்றினார்.

பல்லக்கு கோவிலுக்குள் போயிற்று, சுற்று வந்தது. அங்கு லம் அங்குலமாக ரசித்தார்கள்.

''உள்ளுக்குள் போவோமா.''

''வேண்டாம். கும்பாபிஷேகம் நடக்கும்போது போவோம். இப்பொழுது உள்ளே வேலை செய்து கொண்டிருப்பார்கள், அவர்களை தொந்தரவு செய்ய வேண்டாம். கோவில் எப்படி என்று ஓரளவு தெரிந்துவிட்டது. இது போதும். வெளியே போக லாம்.'' கோவிலை விட்டு வெளியே வந்தார்கள்.

அகலமான மறவர் தெருக்களை கடந்தார்கள். பிறகு வணிகர் தெருக்களைக் கடந்தார்கள். பிறகு அந்தணர் குடியிருப்பை கடந்தார்கள். பிறகு சேனாதிபதிகள் வீட்டைக் கடந்தார்கள். அரண்மனை வாசலில் நின்றார்கள். அங்கும் அவர்கள் வரவேற்கப்

பட்டார்கள். அரண்மனையை சுற்றிப் பார்த்தார்கள். அரண்மனை வாசலில் பெரிய கூடத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

''இங்கு உட்கார்ந்து சிவனைப் போற்றுவோம். இது மன்னர் இருக்க வேண்டிய இடமல்லவா. இந்த இடத்தில் வேத கோஷம் ஒலிக்கட்டும். ருத்ரம் சொல்லுங்கள். சமகம் சொல்லுங்கள்'' என்று சர்வசிவ பண்டிதர் ஆணையிட்டார்.

பையன்கள் உரத்த குரலில் ருத்ரம் சொல்ல ஆரம்பித் தார்கள். அவர்களுக்கு பானகம் வினியோகம் நடந்தது. பையன் கள் ஆவலோடு குடித்தார்கள். வாழைப்பழங்கள் கொடுக்கப்பட் டன. உரிந்து உண்டார்கள்.

''இவர்களுக்கு உணவுக்கு என்ன ஏற்பாடு செய்வது.''

''இல்லை ஏற்பாடு நாங்களே செய்து கொள்வோம். ஒரு அடுப்பு மட்டும் தயார் செய்து கொடுங்கள். பானை ஏற்றி இவர் களே செய்துவிடுவார்கள்'' என்று சொல்ல, பின்னால் வந்த மாட்டு வண்டியில் இருந்து பானைகள் இறக்கப்பட்டன. அரிசி களைந்து போடப்பட்டது.

''தயிர் இருக்குமா?'' என்று ஒரு மாணவன் கேட்க,

''இருக்கிறது'' என்று ஒரு சிற்பி வெளியே ஓடினான். பெரிய சட்டி தயிரோடு கொண்டு வந்தான். சோறு கொதித்தது, மடமடவென்று கைக்கு கிடைத்த காய்கறிகளை நறுக்கி பருப்பு போட்டு கூட்டு செய்தார்கள், கூட்டு வாசனை மூக்கை சுண்டி இழுத்தது. மாணவர்கள் உணவு உண்டார்கள். களைப்போடு படுத்தார்கள். கீச்கீச்சென்ற குரலில் பேசிக்கொண்டே அரண் மனை முழுவதும் மாணவர்கள் சுற்றி வந்தது சிற்பிகளுக்கு சந்தோஷமாக இருந்தது.

''அரசர் உள்ளே நுழையும்போது இவர்களை வைத்து மறுபடியும் வேதகோஷம் செய்யச் சொல்ல வேண்டும். அது இன்னும் நல்ல சகுனமாக இருக்கும்.'' என்று சிற்பிகள் பேசிக் கொண்டார்கள்.

மாணவர்கள் வரிசை ஆனார்கள்.

தேர்ப்படை உள்ளே நுழைந்தது. தேரோட்டிகள் தூசு மிகுந் தவர்களாக காணப்பட்டார்கள். கன்னி ஓடைப்பக்கம் அவர் களுக்கு இடம் காட்டப்பட்டது. ஓடைகளின் ஓரம் குதிரைகள்

நிறுத்தப்பட்டன. தேரில் இருந்து அவிழ்க்கப்பட்டன. குதிரையை ஜாக்கிரதையாக இறக்கி கால்வாய்களில் நிற்கவைத்து சேணங்களை பிடுங்கிப் போட்டு குதிரைகளைக் குளிப்பாட்டினார்கள். நீர் காட்டினார்கள். குதிரைகள் குளித்து முடித்து, நீர் குடித்ததும், மேலேறின. கால்வாய்களில் ஜலம் சுழித்துக்கொண்டு போயிற்று. பிறகு வீரர்கள் முங்கிமுங்கிக் குளித்தார்கள். உடம்பை பீர்கங்சுரனை போட்டு துடைத்துக் கொண்டார்கள். மேலேறி தலை துவட்டிக் கொண்டார்கள்.

சரெக்கென்று ஒரு ஆடு வெட்டப்பட்டது. அங்கேயே தோலுரிக்கப்பட்டது. வேகமாக கறிகள் துண்டு செய்தார்கள். பானைகயில் போட்டு உப்பிட்டு, மிளகு தூள் போட்டு கொதிக்க வைத்தார்கள். பருப்பும், அரிசிமாவும் கலந்து குழைந்தார்கள், குழம்புபோல கறி காய்கறிகளோடு மணத்தோடு வெந்தது. சோறு தனிப்பானையில் செய்தார்கள். பானையை சாய்த்து இறுக்கி கஞ்சி வடித்தார்கள். கஞ்சியை வேறு கலயத்தில் ஆற வைத்து மோர் கலக்கினார்கள். உப்பிட்டார்கள்.

தேர்ப்படை வீரர்கள் எல்லோரும் தட்டுகள் வைத்திருக்க அந்த தட்டுகளில் முதலில் கறி பறிமாரப்பட்டது. பிறகு சோறு வைக்கப்பட்டது, கிண்ணங்களில் அரிசி கஞ்சி மோரோடு தரப் பட்டது, அரிசி கஞ்சியை உறிஞ்சிக் குடித்தபடி அவர்கள் கறியை எடுத்து சுவைத்து உண்டார்கள். சோறோடு கலந்து சாப்பிட் டார்கள்.

''இன்னும் போடு இன்னும் போடு'' என்று கேட்டு உண் டார்கள்.

போர்ப்படை என்பது வயிறால் நடப்பது என்று தெரிந் திருந்தது. எனவே வீரர்கள் மனம் கோணாத வண்ணம் சிறப்பி கள் பறிமாறினார்கள். வேதம் படிக்கின்ற மாணவர்கள் தொலை தூரம் நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

''ஆதித்யச்சமே, ப்ரயச்சமே, பிரதிச்சமே'' என்று ஒரு மாணவன் உரத்த குரலில் சமகம் சொல்ல,

''அடேய். மே, மே என்று சொல்லாதே, உன்னையும் ஆடு என்று நினைத்து அறுத்துவிடப் போகிறார்கள். பார்ப்பதற்கு குட்டி ஆடுபோல் தான் இருக்கிறாய்'' என்று ஒரு பெரிய மாணவன் சொல்ல, வாய்விட்டு சிரித்தார்கள்.

அந்த சிரிப்புகள் மறவர்களுக்குக் கேட்டன.

''ஆடு அறுத்து சாப்பிடவேண்டும் என்ற ஆசை யாருக்குத் தான் இருக்காது. அந்தணர்களுக்கும் இருக்கும் போலும்'' என்று ஒரு மறவன் சொல்ல, மற்றவர்கள் வாய்விட்டு சிரித்தார்கள்.

யானைகள் உள்ளே நுழைந்தன. மாணவர்கள் ஓடிப்போய் யானைகளை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று பல யானைகள் உள்ளே நுழைந்தன. அம்பாரி வைத்த யானைகளிலிருந்து சேனாதிபதிகள் கீழே இறங்கினார்கள்.

யானைகளுக்கு தென்னோலைகள் தரப்பட்டன. பச்சை புற்கள் தரப்பட்டன. யானைகளுக்கு இடம் புதிது என்பதால் அடிக்கடி பிளிறின. யானைப் பாகர்கள் அதன் கன்னத்தில் அடித்து சமாதானப்படுத்தினார்கள். ஈட்டியை மூன்று மூன்றாய் சாய்த்துவிட்டு குதிரை வீரர்கள் குளிக்கப் போனார்கள். யானை குளிப்பதற்கு முன்னால் போய் இறங்கினார்கள். குதித்து குதித்து குளித்தார்கள். அவர்களையும் வேதபாடசாலை மாணவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். அங்கும் உணவு தயார் ஆயிற்று.

ஒரு துணியிலிருந்து வெள்ளைப்பன்றி மாமிசத்தை எடுத் தார்கள். அறுத்தார்கள். துண்டாக்கி பானையில் போட்டார்கள்.

''இது என்ன கறி.'' என்று வியப்பாக ஒரு மாணவன் கேட் டான்.

''அது பன்றிக்கறி.''

''இவர்களுக்கு மட்டும் ஏன் பன்றிக் கறி.''

''குதிரை சூடான விஷயமல்லவா. சூட்டிலே உட்கார்ந்து வருகிறார்கள் உடம்பு குளுமையாக வேண்டும். இல்லையெனில் ஆசனவாயில் புண் வந்துவிடும். அதற்காகத்தான் குளுமையான பன்றிக் கறி.''

''நாமும் வேதம் சொல்லும்போது உடம்பு சூடாகிறதே. நமக்கு ஏன் இம்மாதிரி கறி உணவுகள் தருவதில்லை.''

''உட்கார்ந்து கொண்டு வேதம் சொல்கிறாய். படுத்த தூங்கு கிறாய். மறுபடியும் உட்கார்ந்துகொண்டு பேசுகிறாய். இதைத் தவிர வேறு ஏதேனும் செய்கிறாயா. ஓடுகிறாயா. படுக்கிறாயா. ஆடுகிறாயா எதுவும் இல்லை. எனவே உனக்கு கறி சரியாக வராது.

உனக்கு தயிர்சாதம்தான் சரி. பானகமும், ஆறு வாழைப்பழமும் சாப்பிட்டாய். அது செரிமானம் ஆயிற்றா.''

''வயிற்றிலேயே இருக்கிறது. பசியே இல்லை.''

''இவர்கள் எப்படி ஆவலோடு சாப்பிடுகிறார்கள் பார். அவ்வளவு தொலைதூரம் வந்த களைப்பு பசியை அதிகரிக்கச் செய்கிறது. அந்த பசிக்கு இந்த உணவுதான் சரி. அந்த உணவு தான் அடுத்தபடி பயணம் செய்ய உதவிசெய்யும், அப்பொழுது தான் ஜீரணமாகும், நாம் மாமிசம் சாப்பிட்டால் ஒரு மாதத்தில் செத்துப்போவோம்.'' என்று பெரியவன் சொன்னான்.

மற்றவர்கள் 'ஆமாம் ஆமாம்' என்றார்கள்.

வெளியே எக்காளம் கேட்டு, மாணவர்கள் ஒன்று திரண் டார்கள். ஓடினார்கள்.

''மன்னர் வருகிறார் என்று நினைக்கிறேன். நான் சொல்லும் படி கேட்க வேண்டும்.'' என்று தலைவன் போல் உள்ள பெரிய பிள்ளை சொல்ல, மற்றவர்கள் தலை அசைத்தார்கள். கோட்டை வாசலில் நின்று கொண்டார்கள். கோட்டைக் கதவுகள் திறந்தன.

மெய்க்காவல் படை வீரர்கள் முன்னே வர, மாமன்னர் இராஜேந்திர பின்னே தொடர்ந்தார். மெய்க்காவல் வீரர்கள் சுட்டிக் காட்டி 'யார்' என்று கோட்டைக் காவலரிடம் விசாரித்தார்கள்.

''வேதம் படிக்கிற மாணவர்கள். எண்ணாயிரம், எசாளத் திலிருந்து வருகிறார்கள்'' என்று சொல்ல சரி என்று தலை அசைத்தார்.

''இன்னும் சற்று விலகி இருங்கள்.'' என்று ஈட்டியால் அவர் களை மெல்ல பின்பக்கம் தள்ளினான். அவர்கள் பின்னடைந் தார்கள். மாமன்னர் இராஜேந்திரர் உள்ளே நுழைந்ததும்,

''திருமன்னி வரை. இருநிலை மடந்தையும் என்ற மெய் கீர்த்தியை மாணவர்கள் சொன்னார்கள். பிறகு வேத கோஷம் செய்தார்கள்.

''வருக வருக. உங்கள் வரவு நல்வரவாகுக'' என்று வரவேற் றார்கள். 'ஜெயவிஜயீபவ' என்று கொண்டாடினார்கள்.

உள்ளே நுழைந்ததும் மெய்க்கீர்த்தியும், வேதகோஷமும், ஸ்லோகமும், ஜெய விஜயீபவ என்ற வார்த்தையும் அவர் காதுக்கு குளுமையாக இருந்தன. யார் மாணவர்கள் என்று விசாரிக்க,

எண்ணாயிரம், எசாளம் என்று அவருக்கு பெயர் சொல்லப் பட்டது.

''அடடே, சர்வசிவ பண்டிதர் வந்திருக்கிறாரா.''

''ஈசான சிவ பண்டிதரும் வந்திருக்கிறார்'' என்று சொல்ல, அவர் அவர்களை சந்திக்க விரைவானார். மாணவர்கள் அவரை சூழ்ந்து கொண்டார்கள். கை கூப்பினார்கள். பிறகு வேதங் களை சொன்னார்கள். தங்கள் பாடசாலை மிக நன்றாக நடப் பதாகக் கீச்சுக்குரலில் தெரிவித்தார்கள்.

அரசர் வியப்போடும், சந்தோஷத்தோடும் அவர்களைப் பார்த்தார். கை உயர்த்தி ஆசீர்வதித்தார். குதிரைகள் தொடர்ந்து நடந்தன. கோவிலுக்குள் குதிரையை திருப்பினார். செங்கல் லால் அடுக்கப்பட்டு செய்யப்பட்டு நந்திக்கு காரைப்பூச்சு நடந்து கொண்டிருந்தது. காரைப்பூச்சு முடிந்த இடத்தில் நுணுக் கமான வேலைப்பாடுகளை சுண்ணாம்பிலேயே செய்யப்பட்டன.

விமானத்தின் உச்சியில் கற்களை அடுக்கிக் கொண்டிருந் தார்கள். வட்ட வடிவமாக சாரம் அமைத்து அதில் யானைகள் மூலம் கற்கள் ஏற்றி போகின்ற வேலை இங்கே நடக்கவில்லை. மாறாக சாரமே 'ட' என்ற எழுத்தைப் போல ஒரு பக்கம் சரிந்து மறுபக்க திரும்பி இருந்தது. இரண்டு பக்கமும் இணைக்கின்ற இணைப்பில் பெரிய தளம் இருந்தது. கல்லை தலையில் தூக்கிக் கொண்டு போய் அங்கே வைத்து பிறகு ஆசுவாசப்படுத்திக் கொண்டு பிறகு மேலே வேலை ஆட்கள் நடந்தார்கள். சிறு கற்கள் போக இரும்பு ராட்டினங்களில் கயிறு பொறுத்தப் பட்டு கற்கள் தூக்கப்பட்டன. அவைகளை சிற்பிகள் ஒழுங்காக அடுக்கினார்கள். சாந்து பூசினார்கள். முற்பக்கத்தை பளபளப் பாக்க உளியால் தேய்த்தார்கள். உளியில் கூர்மைபட்டு நெருப்பு சிதறியது.

பரவை திகைத்தாள்.

''இது என்ன கனவா நனவா என்று புரியவே இல்லை. இவ்வளவு அழகான கோவிலா.''

''எதற்கு படைஎடுப்பு என்று கேட்டாயே இதற்குத்தான் படை எடுப்பு. மேலைச்சாளுக்கியம் சோழதேசத்தை திட்டக் கூடாது என்பதற்காக அல்ல. நாம் போய் அடித்து இருப்பவர் களை இழுத்துக்கொண்டு வந்து பொன்னும், பொருளும் வாங்கி

வந்து இந்த மாதிரி ஒரு அற்புதமான நகரத்தை நிறுவி நாங்கள் நாகரீகம்மிக்கவர்கள் என்பதை உலகுக்கு சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் இது.

போர் இல்லாவிட்டால் நெல்லும், பொன்னும் கிடைத்திருக் காது, நெல்லும் பொன்னும் கிடைக்காவிட்டால் இப்படி உழைப் பவர்கள் கிடைத்திருக்க மாட்டார்கள். இப்படி உழைப்பவர்கள் கிடைக்கா விட்டால் இந்த உயரத்திற்கு கோவிலெல்லாம் எழும்பி இருக்காது. அவரவர் வீட்டுத் தோட்டத்தில் அவரவர் காய்கறி பயிர் செய்து செத்துப் போவோம் அவ்வளவுதான்.

போர் சுழற்சி, போர் ஒரு மாறுதல், போர் ஒரு முன்னேற் றம், போர் ஒரு வெளிச்சம். அதில்தான் இம்மாதிரியான அற்புத மான விஷயங்களெல்லாம் வெளியாகின்றன. வா.''

கோவிலை விட்டு வெளியே வந்தார். மறவர்களுடைய வீடுகள், அந்தணர்களுடைய வீடுகள் என்று வரிசையாக குடி யிருப்பைக் காட்டினார்.

ஒவ்வோர் வீட்டிற்குள்ளும் நுழைந்து என்ன விதமாக செய்திருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டினார். சேனாதிபதிகள் வீடுகளில் திண்ணை இருந்தது. அந்த திண்ணை சொகுசாக இருந்தது. அந்தணர் வீட்டில் இரண்டு பக்கமும் ஒரே அகல மான திண்ணை இருந்தது. இரண்டு சபை எதிரும் புதிருமாக உட்கார்ந்து பேச வசதி இருந்தது. அந்தணர் வீட்டில் நடு பகுதி யில் திறந்த முற்றம் இருந்தது. முற்றத்தில் பறவையோ, மிருகங் களோ புகுந்துவிடாமல் இருக்க கம்பி கொடுக்கப்பட்டிருந்தது. வணிகர் வீட்டில் முன்பகுதியில் கிடங்கு இருந்தது. அடுத்த பகுதியில் கூடம் இருந்தது.

பஞ்சமர் வீட்டில் உறுதியான ஓட்டு வீடுகள் இருந்தன. முன் பக்கம் இரண்டு தூண்கள் நடப்பட்டு இருந்தன. ஓடுகளுக் கும் அந்த தூண்களுக்கும் இடையே தட்டோலை பிணைந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஆடுகள் மாடுகள் நிழலில் நிற்கும்.

அரண்மனை இன்னும் பெரிதாக, உயரமாக மதில்களோடு இருந்தது. இது உள்ளாலை அல்லது உட்கோட்டை என்று சிற்பி கள் விளக்கம் சொன்னார்கள். உட்கோட்டையில் சேனாதிபதி களுக்கு தனித்த தனியான இடம். அரசருடைய பெண்டுகளுக்கு

தனியான இடம். அரசருடைய மனைவிமார்களுக்கெல்லாம் தனியான இடம் என்று பிரம்மாண்டமாய் கட்டப்பட்டு இருந்தது.

அந்தப் புரத்திற்கும் சேனாதிபதிகளுக்கும் நடுவே அரண்மனை இருந்தது. ஆயிரம்பேர் உட்காரக்கூடிய பெரிய கூடம் தெரிந்தது. தூண்களிலெல்லாம் சித்திரம் எழுதப்பட்டிருந்தது. அரண்மனையின் பின்புறத்திலிருந்து ஈசானசிவ பண்டிதரும், சர்வசிவ பண்டிதரும் மெல்ல உள்ளே வந்து அரசரை நோக்கி கை உயர்த்தினார்கள். அரசர் விழுந்து வணங்கினார். வேத பாடசாலை மாணவர்கள் அரசரை வாழ்த்திப் பாட ஆரம்பித்தார்கள். வணக்கம் சொன்னார்கள். வாழ்க என்று கோஷம் இட்டார்கள்.

சகலரையும் அரசர் உட்காரச் சொன்னார். நலம் விசாரித்தார். ''என்ன வேண்டும்'' என்று கேட்டார்.

''வேத பாடசாலை செவ்வனே நடந்து வருகிறது. ஆனால் மாணவர்கள் முன்னைவிட அதிகமாகி விட்டார்கள். ஊர் ஒத்துழைப்பதால் சிரமமின்றி நகர்ந்தது. ஆனால் ஊரை அதிகம் தொந்தரவு செய்ய முடியாது.'' என்று சர்வசிவ பண்டிதர் விண்ணப்பித்தார்.

''இன்றிலிருந்து வருடத்திற்கு இரண்டாயிரம் கலம் நெல் வேதபாடசாலைக்குத் தருகிறேன். நன்கு படிக்கின்ற மாணவர்களுக்கு பொற்கழஞ்சு தருகிறேன். உடைகளுக்கு ஏற்பாடு செய்கிறேன். உடனடியாக உங்கள் உபயோகத்திற்காக அரிசி வண்டி ஒன்றை உங்களுக்கு திருப்புகின்றேன். மாணவர்கள் குறையின்றி சாப்பிடட்டும். எல்லோர்முகமும் தெளிவாகவும், அழகாகவும் இருக்கிறது. ஆனால் மாணவர்கள் வாடி இருக்கிறார்கள் என்பது என் கருத்து.''

''இல்லை, இல்லை. அவர்கள் வாடி இல்லை. அதிகம் சாப்பிடாமல் நான் பார்த்துக்கொள்கிறேன். அதிகம் சாப்பிட்டால் தூக்கம்தான் வரும். அவர்கள் மறவர்கள் அல்ல. குறைவாக அதே சமயம் நிறைவாக சாப்பிடுகிறார்கள். அவர்கள் ஆரோக்கியம் நல்லமுறையில் இருக்கிறது.'' என்று வாக்கு கொடுத்தார்.

ஈசானசிவ பண்டிதர், போகும் விஷயம் மிக வெற்றிகரமாக முடியவேண்டும் என்றும், கோட்டை எல்லையில் ஸ்தாபித்துள்ள காளிகளை கண்திறந்து சீக்கிரமே ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்றும், வந்ததும் முதல் காரியமாக எல்லைக் காளிகளுக்கு உயிரூட்ட வேண்டுமென்றும் சொன்னார்.

இராஜேந்திரசோழர் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

''அரண்மனை மிக நன்றாக இருக்கிறது. நகரம் மிகச் சிறப் பாக இருக்கிறது. இப்படி ஒரு நகரம் பரதகண்டத்தில் எங்குமே இல்லை'' என்று அவர்கள் புகழ்ந்தார்கள்.

அவர்கள் பரதகண்டம் முழுவதும் சுற்றியவர்கள் அவர் களுக்குத் தெரியும் எது எப்படி இருக்கிறதென்று. அவர்களுடைய வார்த்தை அரசரைக் குளிர்வித்தது.

கிரகப் பிரவேசம் செய்யாமல் அரண்மனையில் தங்க வேண்டாம் என்று சொல்லப்பட்டதால் சேனாதிபதிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட வீட்டில் அரசர் தங்கினார். வீட்டைச் சுற்றி வளை யமாக இருந்துபோர்வீரர்கள் பாதுகாத்தார்கள். சேனாதிபதிகள் வந்து சேர்ந்ததும் அவர்களை மறுபடியும் பார்க்க விரும்புவதாக மன்னர் கட்டளை இட்டார்.

மறுநாள் விடியும்பொழுதில் ஜெயங்கொண்டத்தில் நிர்மா ணிக்கப்பட்ட அந்த புதிய நகரம் மிகுந்த பரபரப்புக்கு உள் ளாகியது. இராஜேந்திர சோழரை நோக்கி சேனாதிபதிகள் வரத் துவங்கினார்கள். எல்லோரும் வந்ததும் தரையில் கோலம் போல பரதகண்டத்தின் படம் வரைந்து அதில் வேங்கியையும், முசங்கி யையும், மான்ய கேடயத்தையும் தனித்தனியாகச் சுட்டிக்காட் டினார்.

''இரட்டைப்பாடி, ஏழரை இலக்கம், முசங்கி வழியாக மான்ய கேடயத்தை வடமேற்காக நகர்ந்து தாக்க வேண்டும் என்றும் ஒரு படை கீழைச்சாளுக்கியத்தின் கிழக்கு கடற்கரை ஓரமாகவே நகர்ந்து கலிதுண்டி என்ற கிராமத்தை தாண்டி வேங்கியை தாக்க வேண்டும்'' என்றும் கட்டளை இட்டார்.

''நாம் இரண்டுபேரும் எப்பொழுது ஒன்று சேருவோம் என்று தெரியாது. ஆனால் தாக்குதல் இரண்டு பக்கமாக நடக்க வேண்டும். நாம் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. வேங்கிக்குள் நுழைந்ததும் சூறையாடி விடுங் கள். நான் வழியில் எந்த இடம் தென்பட்டாலும், எந்த நகரம் இருந்தாலும் அதை எரியூட்டிவிட்டு வருகிறேன். நம்முடைய சந்திப்பு வேங்கியிலோ அல்லது மான்ய கேடயத்திலோ இருக் கட்டும். வேங்கி முற்றிலும் வீழ்ந்துவிட்டது. வேங்கி ஒன்றும் இல்லை என்றால் நீங்கள் வேங்கியிலிருந்து கிளம்பி மான்ய

கேடயம் நோக்கி வந்து விடுங்கள். நான் இரட்டைப்பாடி, ஏழரை இலக்கம், முசங்கி எல்லாவற்றையும் தாக்கிக் கொண்டு மான்ய கேடயம் வருகிறேன். ஒரு நகரம்கூட மேலைச்சாளுக்கியத்தில் இருக்கக்கூடாது. வேங்கியில் ஒரு மேலைச்சாளுக்கியர் கூட உயிரோடு இருக்கக் கூடாது. கீழைச்சாளுக்கியர் மட்டுமே இருக் கலாம். மான்யகேடயத்திலிருந்து நாம் ஒட்டதேசம் போவோம். ஒட்ட தேசத்திலிருந்து கலிங்கம் போவோம். பிறகு கடவுள் தீர் மானித்தபடி எங்கு நகர வேண்டுமோ அங்கு நகரலாம்.''

''நாளை மறுநாள் படை இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிளம்ப வேண்டும். இப்பொழுது என்னுடைய படை முன்னால் நீங்கள் பின்னால் வருவீர்கள். முதலில் போன படை திருவொற் றியூரை அடைந்து திருவொற்றியூரிலிருந்து வடமேற்காக நகரும். நீங்கள் திருவொற்றியூரை அடைந்து திருவொற்றியூரிலிருந்து கிழக்கு கடற்கரை ஓரமாக நேரே வடக்கே போய்விடுங்கள். என்னுடைய வழி சுற்றுவழி என்பதால் நான் முன்னே கிளம்பு கிறேன். உங்களுக்கு அவ்வளவு எதிர்ப்புகள் இருக்காது என்ப தால் வேகமாகப் போகலாம் என்பதால் நீங்கள் இரண்டாவதாக வந்தால் நன்றாக இருக்கும்.'' என்று சொல்ல, சேனாதிபதிகள் தலை அசைத்தார்கள்.

''ஏதேனும் குறை இருக்கிறதா இந்த திட்டத்தில்.'' என்று கேட்க, எல்லோரும் உற்று கவனித்து 'ஒன்றுமில்லை' என்று சொன்னார்கள்.

''எப்படி படையை பிரிக்கப் போகிறோம்.?'' என்று வந்தியத் தேவர் கேட்டார்.

''அறுபது, நாற்பது, என்னோடு அறுபது சதவிகிதம் அரையன் இராஜராஜனோடு நாற்பது சதவிகிதம் வரும். ஆகவே நாம் இப்பொழுதே படையை இரண்டாகப் பிரித்து முன்பின் னாக நகர்ந்துபோய் திருவொற்றியூரில் காத்திருப்போம். திரு வொற்றியூரில் வேங்கி மன்னனுடைய நிலைமை என்ன என்று தகவல்கள் நமக்கு கிடைக்கும். அதைப் பொறுத்து கிளம்புகின்ற நேரத்தைத் தீர்மானிப்போம். ஆனால் படை பிரிக்கப்படுவது இங்கேயே, இப்போதே மிகத் தெளிவாகச் செய்ய வேண்டும்'' என்று கட்டளை இட்டார்.

படை எப்படி பிரிக்க வேண்டும் என்பதுபற்றி அவர்கள் வெகுநேரம் பேசினார்கள். இரவு நேரம் எல்லோருக்கும் பாலும், அரிசி கஞ்சியும் கலந்த உணவு தரப்பட்டது.

''இரவு ஆரியக்கூத்து நடக்கப்போகிறது. கேட்கிறீர்களா?'' என்று நித்த விநோதகப் பெருந்தச்சன் மன்னரிடம் விண்ணப் பித்தான்.

''அப்படியா, ஆரம்பித்திலிருந்தா. வெகுநாளாகுமே.''

''இல்லை. ஏதேனும் ஒரு பாகம். எந்த பாகத்தை நீங்கள் நடிக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ அதை நடிக்க தயாராக இருக்கிறார்கள்.''

''அபிமன்யு வதம். நடிக்கச் சொல். ஒன்றரை நாழிகை, இரண்டு நாழியில் நாடகம் முடிக்கட்டும். போர் வீரர்கள் கொஞ்சம் அயர்ந்து தூங்கட்டும் என்று சொல்ல, அபிமன்யு வதம் நடிக்கப் பட்டது.

அபிமன்யுவை வஞ்சகத்தால் உள்ளழைத்து எல்லோரும் தாக்க அவன் ஒருவனாக போரிடுவது. அதைக் க்ண்டு அர்ஜுனன் பதறுவது. அபிமன்யு இறந்தபிறகு அர்ஜுனன் கதறுவதும், சபதம் செய்வதும் மிகத் தத்ரூபமாக நடிக்கப்பட்டன. எல்லோர் மனதிலும் ஒரு கோபமும் வெறியும் மூண்டது. அயோக்கியத் தனத்திற்கு பதிலடி கொடுத்தே ஆக வேண்டும் என்ற ஆத்திரம் எழுந்தது.

அபிமன்யு கயிறுபிடித்து ஒரு கட்டையில் ஏறிக் கொள்ள அந்தக் கயிறை இழுத்தார்கள். அபிமன்யு மெல்ல கூட்டத்தின் நடுவிலிருந்து சொர்க்கத்துக்கு போவது போல எல்லோரையும் ஆசீர்வதித்து சொர்க்கத்துக்கு போனான். மரக்கிளையின் மீது உட்கார்ந்து கொண்டான். அங்கிருந்து கீழிறங்கி வந்தான். எல் லோரும் 'சோழம் சோழம் சோழம் என்று கத்தினார்கள். அபிமன்யு வாக நடித்தவனைப் போய் கட்டித் தழுவிக் கொண்டார்கள். கலைந்து போனார்கள். அவர்கள் கலைந்து போனதும் சிற்பிகளை அழைத்தார்.

''இன்னும் என்ன வேண்டும்.'' என்று கேட்டார்,

இன்னும் ஆட்கள் வேண்டுமய்யா, இந்த கதியில் வேலை நடந்தால் எங்களுக்கு இன்னும் ஒரு வருடம் ஆகிவிடும். இன்னும் நிறைய ஆட்கள் தேவை. இன்னும் நிறைய பொற்காசுகள் தேவை, இன்னும் நிறைய உணவு வகைகள் தேவை, ஆட்களுக்கு ஏற்றபடி உணவும் பொற்காசுகளும் இருந்தால்தான் இந்த வேலை ஒரு வருடத்திற்குள் முடியும். நீங்கள் ஊருக்கு திரும்பு

வதற்குள் ஒரு சிறிய ஆணிகூட அடிக்க வேண்டாத நிலையில் இந்த அரண்மனையை நாங்கள் தயாராக வைத்திருக்க வேண்டும். கோவில் தொண்ணூற்றி ஐந்து விழுக்காடு முடிந்துவிடும். கும்பாபிஷேகம் முடிந்த பிறகு செய்ய வேண்டிய வேலைகள் தான் இருக்கும். எனவே குடியேறுவதற்கு தயாராக இருக்க வேண்டுமெனில் எனக்கு நீங்கள் இரண்டு மூன்று மாதங்களில் முன்னூறு ஆட்களை அனுப்ப வேண்டும்.''

''எந்த மாதிரி ஆட்களை எதிர்பார்க்கிறாய்.?''

''மரங்கள் சுமக்க வேண்டும். கற்களைப் புரட்ட வேண்டும். ஒட்ட தேசத்தின் தடியர்கள் வேண்டும். அவர்களால்தான் இதை செய்ய முடியும்.''

''ஒட்ட தேசத்து ஆட்களை நிச்சயம் கொண்டு வந்து தருகிறேன்.''

''ஆனால் அவர்கள் தப்பித்து ஓட முயற்சிப்பார்கள் என்றும் எங்களைப் பயமுறுத்துகிறார்கள்.''

''இரண்டு பேரை நிற்க வைத்து சிரம் அறுத்தால் யாரும் போக மாட்டார்கள். அதிகம் மேலை சாளுக்கிய வீரர்களையும் அனுப்புகிறேன். முன்னூறு போதுமா. இன்னும் மேற்கொண்டு வேண்டுமா.''

''இல்லை. இப்போது முன்னூறு போதும், மேற்கொண்டு வேண்டுமென்றால் நான் சொல்லி அனுப்புகிறேன். எனக்கு உங்களோடு சிறிது தூரம் பயணப்பட வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.''

''என்னோடா, எதுவரையில்?''

''திருவொற்றியூர் வரையில்.''

''ஏன் திருவொற்றியூர் வரையில், மான்யகேடயம் வரைக்கும் வாயேன்.''

''இல்லை. திருவொற்றியூர் கோவில் சிறிது சிதிலாமாயிருக்கிறது என்றும், வெளி மண்டபம் கட்டப்பட வேண்டும் என்றும், வேறு சில பிரகாரங்களை எழுப்பப்பட வேண்டுமென்று எனக்கு அங்கிருந்து தகவல் வந்திருக்கிறது. திருவொற்றியூர் பற்றி எனக்கு பல கதைகள் சொல்லப்பட்டும் இருக்கின்றன. அந்த கோவிலைப் பார்த்தது போலவும் ஆகும். உங்களோடு

பேசியது போலவும் ஆகும். அந்தக் கோவிலுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நான் குறித்துக் கொண்டது போலவும் ஆகும்.''

''உடனடியாக அங்கு வேலை துவங்குவாயா.''

''இல்லை. இங்குள்ள வேலைகளை முடித்துவிட்டு நான் அடுத்தபடி அந்தப்பக்கம் போவேன். போகும்முன்பு உங்களுக்கு தகவல் தெரிவிக்கிறேன். நீங்கள் வரும்பொழுது திருவொற்றியூர் வழியாகத்தானே வருவீர்கள். நான் உங்களை அங்கு சந்திக்கிறேன். நீங்கள் வருவதற்குள் திருவொற்றியூரையும் நான் செப்பனிட்டு விடுகிறேன்.''

''மிகவும் நல்லது. நீ உற்சாகமாய் இருக்கிறாய் என்பது சந்தோஷமாக இருக்கிறது. அடுத்த வேலை, அடுத்த வேலை, என்று எவனொருவன் போகிறானோ அவன் வெற்றி பெற்றவன். வேலை முடிந்த பிறகு ஓய்வெடுப்பவன் வெற்றி பெற முடியாது ஓய்வில்லாத வேலைதான் ஒரு நல்ல மனிதனுடைய லட்சணம்.''

''ஆமாம், உங்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டால் அப்படித்தான் வாழ வேண்டும். சோழ தேசத்தில் எல்லோரும் உங்களைத்தான் முன்மாதிரியாகக் கொள்கிறார்கள்.''

''போதுமடா புகழ்ச்சி,'' இராஜேந்திரசோழர் அலுத்துக் கொண்டார்.

''அருண்மொழித்தேவரிடம் சொல்லி இருக்கிறேன். இந்த முறை நிறைய உருக்கு சாமான்கள் கொண்டு வாருங்கள். அடித்து உளிகளும், சுத்திகளும், கடப்பாறைகளும் செய்ய வேண்டி இருக்கிறது. அவைகளுக்காக தேனிரும்பு தேவைப் படுகிறது. அந்த இரும்பு வந்தால் எங்களுக்கு ஈயம் கலந்து உறுதிபடுத்திக்கொள்ள நன்றாக இருக்கும். பாத்திரம் செய்ய தோதாக இருக்கும்.''

''வேறென்ன வேண்டும்.''

''ஊர் பாலைவனமாக இருக்கின்றது.''

''எந்த ஊர்?''

''இப்பொழுது நாங்கள் இருக்கின்ற ஊர்.''

''இந்த ஜெயங்கொண்டமா.''

"ஆமாம்."

"என்ன சொல்கிறாய். ஏன் பாலைவனம்."

"நடனமாட பெண்களே இல்லை. ஆண்களே பெண்கள் வேடம் போட்டு நடனமாடுகிறார்கள். இது நன்றாக இல்லை. கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடந்த பிறகுதான் ஆடல் மகளிர் வர வேண்டுமா. அதற்கு முன்னதாகவே வரலாமே என்பதுதான் என்னுடைய எண்ணம்.

அந்த உதவி செய்ய முடியுமென்றால் மிக நன்றாக இருக்கும். இரவு நேரம் கண்ணயருவதற்கு முன்பு இம்மாதிரியான கூத்துகள் பார்த்துவிட்டு சிற்பிகள் படுத்துத் தூங்குவார்கள். அதுவும் தவிர கோஷ்ட சிற்பங்கள் செய்வதற்கு எனக்கும் ஆசையாக இருக்கிறது. அழகான பெண்கள் சிலவும், சுமாரான பெண்கள் பலவும் இங்கே வரவழைத்தால் நன்றாக இருக்கும் என்பது எங்களுடைய விருப்பம். இது ஒரு விண்ணப்பம். முடிந்தால் செய்யவும்,"

"இது நியாயமான கோரிக்கை உடனடியாக ஏற்பாடு செய்கிறேன். பரஞ்சோதிக்குப் பிறகு இப்போது தளிச்சேறி பெண்டுகளை யார் நிர்வாகம் செய்வது."

"கேசவபட்டன் என்ற அந்தணர் நிர்வாகம் செய்கிறார்."

"நல்லது. கேவசபட்டனிடம் நான் சொன்னேன் என்று நடனமாடும் பெண்களை வரவழைக்க ஏற்பாடு செய். பத்து அழகானப் பெண்கள். நாற்பது சுமாரான பெண்கள் என்று கணக்குச் சொல்."

"வேறு என்ன வேண்டும் பெருந்தச்சா."

"எதுவும் இல்லை மாமன்னரே. எல்லாம் இங்கு திருப்தியாக இருக்கிறது."

"உங்களை ஒன்று கேட்க வேண்டும்." பரவை பேச்சுக்கு நடுவே புகுந்தாள்.

"கேளுங்கள் தாயே."

"கோவில் அழகாக இருக்கிறது. மிகச்சீராக இருக்கிறது. நல்ல உயரமாக இருக்கிறது. ஆனால் சிற்பங்களே இல்லையே."

''மாமன்னர் இந்தக் கேள்வியை கேட்பாரென்று நினைத்தேன். நீங்கள் கேட்டுவிட்டீர்கள். சிற்பங்கள் தயாராக இருக்கின்றன. தாயே, நட்சத்திர குறியிட்ட கோஷ்டங்களில் அவை நிறுவப்படும். கோஷ்டங்களில் வைத்து செதுக்குவது என்பது இயலாது. எனவே தரையில் படுக்கை நிலையில் வைத்து அதன் மீது உட்கார்ந்து கொண்டுதான் நாங்கள் செதுக்குவோம். பார்ப்பதற்கு அவ்வளவு ரசமாக இருக்காது. சிவன் தலையில் கால் வைத்து உட்கார்ந்து இருக்கிறானே என்று உங்களுக்குத் தோன்றும், கோவிலை நிர்மாணிக்கும் வரை அது வெறும் கல்தான். கோவிலை அந்தணரிடம் கொடுத்த பிறகுதான் அதற்கு உயிர் வருகிறது. சிற்பங்களை நாலு பேர் பார்க்க செதுக்குவதே இல்லை. மன்னர் விரும்பினால் வெகு நிச்சயமாக அந்த சிற்பங்களை காண்பிக்கிறேன்.''

''பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டு பெருந்தச்சா. ஆனால் நீயாக அறிவிக்காமல் நானாக கேட்பது உனக்கு சங்கடத்தை உண்டு பண்ணுமோ என்று மௌனமாக இருந்தேன்.''

''மாமன்னர் வாழ்க. உங்கள் தன்மை மிகப்பெரும் தன்மை. மற்றவரின் மனம் அறிந்து பழகுவதற்கு உங்களைப் போல் எவரும் இல்லை. நீங்கள் சொல்வது ஒருவிதத்தில் சரி. எல்லோரும் அந்த சிற்பங்களைப் பார்ப்பதற்கு அனுமதிக்க இயலாது. கண்ணேறு படும். அந்த கண்ணேறு பட்டால் நான் கொண்டு போய் கோஷத்திற்குள் வைப்பதற்குள் உன்பாடு, என்பாடு என்றாகி விடும். எனவே நீங்களும், உங்கள் துணைவியாரும், இன்னும் நாலைந்து சேனாதிபதிகளும் பார்க்கலாம். மற்றவர்களை அனுப்பி விடுங்கள்.''

''நான்தான் முதலில் பயணப்படப் போகிறேன். அதனால் யாரையும் அனுப்ப இயலாது. நாளை காலை எழுந்திருந்து வெளிச்சத்தில் அவைகளை பார்க்கிறேன்.

''எங்கே இருக்கின்றன.''

''தனியே ஒரு கொட்டகையில் வைக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் வருவீர்கள் என்று தெரிந்தால் பக்கத்திலுள்ள தட்டிகளை எல்லாம் பிரித்து வெளிச்சத்திற்கு ஏற்பாடு செய்து விடுவேன். அந்தப்பக்கம் இருக்கும் படைகளை மட்டும் கொஞ்சம் வாசலுக்கு அனுப்பிவிட்டால் நன்றாக இருக்கும்.''

மறுநாள் காலை அவ்விதமே அந்தப்பக்கம் இருக்கின்ற சிறுதேர் படைகள் வேறுபக்கம் இடம் பெயர்ந்தன. மாமன்னர் குளித்துவிட்டு, கஞ்சி குடித்து விட்டு சிற்பக்கூடம் நோக்கிப் போனார். அவர் வந்ததும் சிற்பக் கூடத்தின் தட்டியெல்லாம் மடமடவென்று பிரித்து எடுத்துப்பட்டன. உள்ளே வெளிச்சம் பரவியது. மேலே கூரை அழுத்தமாக நின்றது. சிலைகள் புரட்டி நிற்க வைக்கப் பட்டன.

மாமன்னர் இராஜேந்திரர் திகைத்துப் போனார்.

* * *

அத்தியாயம்

31

"இது சண்டேஸ்வர மூர்த்தி, தந்தையை விட சிவனே முக்கியம் என்று சொன்ன சண்டேஸ்வரருக்கு சிவபெருமான் தன்னுடைய பிரதிநிதியாக முடிசூட்டிய இடம். எல்லா கோவில் களிலும் அவருக்கு இடம் உண்டு என்று அறிவித்த இடம்.

சண்டேஸ்வர மூர்த்தி மண்டியிட்டு அமர்ந்திருக்க பரி வட்டம் போன்று ஒன்றை சிவபெருமான் சற்று வலமாக திரும்பி அவருக்குச் சூட்டுகிறார். அருகே ஒயிலாக பார்வதி அமர்ந்திருக் கிறார். அவர்கள் திகைத்துப் போனார்கள்.

"இவ்வளவு அழகா ஒரு ஆண். இவ்வளவு அழகா ஒரு பெண். இப்படி ஆண்களை இப்படி பெண்களை எங்கே பார்த் தாய்."

"எல்லாம் கற்பனைதான் மாமன்னரே, சாமுத்ரிகா இலட் சணம் என்று எங்களுக்கு தனி ஒரு புத்தகம் இருக்கிறது. அதன் படி இந்த உயரத்தில் இந்த அகலத்தில், இந்த விரல் நீளத் தில் என்றெல்லாம் அளவுகள் உண்டு. மூக்குக்கும், உதடுக்கும் உள்ள இடைவெளி இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்ற கணக்கு உண்டு. முகவாய் குழி விழுதல், கன்னங்கள் செழுப் பேறுதல், புருவங்கள் வில் போன்று வளைந்திருந்தல் போன் றவை எல்லாம் நல்ல இலட்சணங்கள்.

அம்மையோடு கூடிய அப்பனை பார்த்தீர்களல்லவா. அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். இதோ பாருங்கள். இது காலசம்ஹார மூர்த்தி, மார்கண்டேயனுக்காக சிவலிங்கத்தி லிருந்து வெளிப்பட்டு காலனை சம்ஹாரம் செய்த இடம், கீழே பரிதாபமாக எமதர்மன் கிடக்க, அவரை மிதித்தவாறு கையில் உள்ள கோலை அவருடைய தொடையில் அழுத்தியவாறு அடுத்த அடி முகத்தில் விழும் வண்ணம் கையை ஓங்கியவாறு இருக்கிறார். முகத்தில் மெல்லிய கோபம். மிகக் கடுமையாக கோபித்துக் கொள்ள சிவனால் இயலாது. சிவன் கடுமையாக கோபித்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. மெல்லிய

கோபம் போதும், இங்கே இருந்து பாருங்கள். சிவனின் முகத்தில் கோபம் இருக்கும். இதுதான் மெல்லிய கோபம். உதடுகளை சிரிக்கும்படி விட்டு கண்களை நெறுக்கமாக வைத்தால் கண்களிலிருந்து கோபம் வெளிப்படும். உதடுகளில் சிரிப்பு இருக்கும்.''

''அற்புதம். அற்புதம். அற்புதம்.'' கன்னத்தில் கை வைத்து பரவை வியந்தாள்.

''இது சரஸ்வதி. இது லக்ஷ்மி. இது பிரம்மா. இது சிவன். உட்கார்ந்த நிலை, இது தட்சிணா மூர்த்தி, கன்னி மூலையில் நிறுவுவதற்காக செய்யப்பட்ட பெரிய கணபதி. இது கோஷ்டத்தில் வைப்பதற்காகச் செய்யப்பட்ட சிறிய கணபதி.

''நான் ஒருமுறை அந்த கன்னி மூலை கணபதியை தழுவிக் கொள்ளட்டுமா. என்ன அழகு. என்ன தொந்தி, இவரைப் பார்த்தது போலவே இருக்கிறது.''

''அம்மா, கிட்டத்தட்ட இராஜேந்திர சோழரை மனதில் வைத்துக் கொண்டு சிவனும், பார்வதியுமாக ஒரு உருவம் செதுக்கி இருக்கிறேன். இங்கே வந்து பாருங்கள். இதுதான் அது. உமாமகேஸ்வரர் சற்று தொந்தியுடன் சுகாசனத்தில் இருக்கிறார். அவருக்கு பக்கத்தில் ,மிக நெருக்கமாக பரவை நாச்சியார். மன்னிக்கவும் உமாமகேஸ்வரர் இருக்கிறார்.''

பரவை வாய்விட்டுச் சிரித்தாள். மன்னரும் சிரித்தார். அந்த சிலையும் மிக அழகாக இருந்தது. அதையும் அவர்கள் தடவிப் பார்த்தார்கள்.

''என்னடா. கோவிலில் ஏதோ குறைகிறதே என்று பார்த்தேன். அற்புதம் செய்திருக்கிறாய் நித்த வினோதப் பெருந்தச்சா, மிக அழகான பெயர் உனக்கு. நித்தம், நித்தம் வினோதம் செய்து கொண்டிருக்கும் பெரும்தச்சன் நீ. இழைத்திருக்கிறாய். கல்லில் இப்படி இழைக்கமுடியுமா. இதென்ன மரமா, களிமண்ணா. இப்படி உன்கைக்கு வாட்டப்படுகிறதே.''

''எல்லாம் உங்களுடைய அன்பு, எதுகேட்டாலும் வாரி வாரி கொடுக்கிற உங்கள் அன்பு இருக்கும்பொழுது எனக்கு என்ன குறை.

''பெருந்தச்சா, உன்னை கொண்டாடிக் கொள்ளவும், என்னை கொண்டாடிக் கொள்ளவும், என் குடும்பத்தை, குலப்

பெருமையை சொல்லிக் கொள்ளவும் இந்தக் கோவிலை நான் எழுப்பவில்லை, நாம் ஒரு நாகரீகத்தில் பிறந்தவர்கள். காவிரிக் கரை நாகரீகம், சோழ தேச நாகரீகம். சோழ தேசம் சோறுடைத்து. வெறும் சோறு தின்கிறதல்ல. அந்த சோற்றினால் விளைந்த நாகரீகம் இது, ஆடல் பாடல் நிற்குமோ, ஓவியங்கள் தாங்குமோ தெரியாது, ஆனால் இந்தச் சிற்பங்களெல்லாம் காலம் தாண்டி நிற்கும். மழையை, வெய்யிலை எல்லாம் தாண்டி நிற்கும். நிற்க வேண்டும் என்பது என்னுடைய அவா. செங்கல்லால் கட்டிய என் மாளிகை நூறு வருடங்கள் கழிந்து மெல்ல சரிந்து விழலாம். ஆனால் இந்தக் கருங்கல்ளால் ஆன கோவில் ஒருபொழுதும் அழியாது. ஆயிரம் ஆயிரம் வருடங்களாக என் பெயரை, உன் பெயரை நம்குலப் பெயரை, நம் நாகரீகத்தை, நம் தமிழ் மொழியின் வளமையை, அதன் துல்லியத்தை சொல்லிக் கொண்டிருக்கும். நமக்கு கணிதம் எவ்வளவு கரதலப் பாடம் என்பதை சொல்லிக் கொண்டிருக்கும். நமக்கு கட்டிடக் கலை எவ்வளவு எளிது என்பதை சொல்லிக்கொண்டிருக்கும். நம்முடைய உழைப்பு எவ்வளவு மேன்மையானது என்று சொல்லிக் கொண்டிருக்கும். இதைச் சொல்லத்தான், இதை செய்ய வேண்டுமென்றுதான் நான் போருக்கு போகிறேன். இதற்காகத்தான் என் உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். சோழ தேசம் சாமான்ய மானது அல்ல. அது காவிரிக்கரை நாகரீகம். தமிழ் நாகரீகம்.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை அரு மறையின்
அகத்தானை அணுவையா ர்க்கும் தெரியாத தத்துவனை

என்று சொல்லுகின்ற நாகரீகம். கடவுளுடைய பிரம்மாண்டத்தை சொல்லுகின்ற நாகரீகம். சிவலிங்கம் எப்போது ஸ்தாபிப்பீர்கள்.''

''அய்யா, அது பாதி வரையில் தான் செதுக்கப்பட்டு இருக் கிறது. அதை காட்டுவதற்கு எனக்கு விருப்பமில்லை. சந்திர காந்தக்கல்லை மேலே வைக்கலாமா. மூலக்கிரகத்தின் கீழே வைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். சிவ லிங்கத்தின் கீழ் அந்தக் கல்லை வைத்துவிட்டால் அந்த இடம் குளுமையாக இருக்கும் என்பது என் அபிப்ராயம். குளுமையான காலத்தில் வெதுவெதுப்பாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். எனவே அவைகளையெல்லாம் பூர்த்தி செய்துவிட்டு உங்களுக்கு சொல்லி அனுப்புகிறேன். வெகு நிச்சயமாக ஒரு வருடமாகும். ஐயன் எப்போது வருவீர்கள்.''

''எனக்கும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் ஆக லாம். இங்கு வந்து மறுபடியும் இந்த சிற்பங்களை பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நித்த வினோதப் பெருந் தச்சா வாழ்க, நீ வாழ்க நீ.'' மன்னர் நகர்ந்ததும், வந்தியத்தேவரும், அருண்மொழிப்பட்டனும், பாண்டியன் சீவல்லபனும் அந்தச் சிலைகளைத் தொட்டுப் பார்த்தார்கள். அருண்மொழிப்பட்டனும் அந்த விநாயகரை ஒருமுறை தழுவிக் கொண்டான்.

''கொஞ்சும்படியாகத்தான் இருக்கிறது'' என்று அருண் மொழி மனம் விட்டுப் பேசினான். அவர்கள் வெளியே வர மறுபடியும் தட்டிகளை முடைந்தார்கள். அந்த இடத்தை இருட் டாக்கினார்கள்.

''அரண்மனையை வியப்பதா, கோவிலின் சிற்பங்களை வியப்பதா, ஊர் நிர்மாணித்த அழகை வியப்பதா, ஊருக்குள் ஓடும் கால்வாய்களை வியப்பதா எதை வியப்பது என்று தெரிய வில்லை. சுற்றியுள்ள கோட்டைகள்தான் எனக்கு மிகவும் பிடித் திருக்கின்றன. உள்ளுக்குள்ளே எல்லோரும் மிகப் பத்திரமாக இருக்கலாம். பஞ்சமர்களுக்கும் அதில் இடம் உண்டு என்று சொல்லியிருக் கிறீர்களே உங்கள் மனம் மிகப் பெரியது. இதுவரை இருந்த பல்வேறு வித்தியாசங்களை நீங்கள் தகர்த்துவிட்டீர்கள்.''

பாண்டியன் சீவல்லபன் சொல்ல, மாமன்னர் மேலே கை காட்டினார். இறைவனுடைய அனுக்கிரஹம் என்று சொல்லாமல் சொன்னார்கள்.

''விரைவாகப் போக வேண்டுமென்பதால் இன்னும் ஒரு நாள் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். நாளை கிளம்புவோம். படை களுக்கு சொல்லிவிடு.'' என்று சொல்ல, செய்தி நாலாபக்கமும் பரவியது.

சோழப்படைகள் நகரத் துவங்கி விட்டன. திருவொற்றி யூருக்கு நாளை மறுநாள் வந்து சேர்ந்து விடுவார்கள். திருவொற் றியூர் வந்து சேர்ந்ததும் படைகள் இரண்டாகப் பிரியும், கிடுக்கித் தாக்குதல் இருக்கும். இந்த முறை மான்ய கேடயத்தை சூறை யாடாமல் திரும்பமாட்டேன் என்று இராஜேந்திர சோழர் சபதம் செய்திருக்கிறார். எனவே நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்.'' ஒற்றர் படைத் தலைவன் மிக இரகசியமாக மேலை சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனிடம் பேசினான்.

''என் உத்தேசம் உனக்கு தெரிந்தாக வேண்டுமா.''

''ஆமாம், அதற்கேற்ற படிதான் சில காரியங்கள் செய்தாக வேண்டும்.''

''என்ன?''

''நீங்கள் ஊரைவிட்டு போவதற்கு முன்பு தான் போக வேண்டும் என்று விஷ்ணுவர்தன விஜயாதித்தன் திட்டமிட்டிருக்கிறான். அதற்கு தயாராக இருக்கும்படி தன்னுடைய சேனைகளுக்கு கட்டளை இட்டிருக்கிறான். எனவே.'' அந்த உளவுப் படை தலைவன் பேச்சை நிறுத்தினான்.

''எனவே என்ன எனவே சொல்.'' ஜெயசிம்மன் கட்டளை இட்டான்.

''தெற்கு நோக்கி போவது போல ஒரு படைஎடுப்பை ஏற்படுத்தி படைகளை முன்னே நடத்திக்கொண்டு போய் பிறகு படைகளை நடுவே நிறுத்திவிட்டு நீங்களும் உங்கள் மெய்க் காவல் வீரர்களும் வடமேற்காக மான்யகேடயம் நோக்கி போய் விடுங்கள், மான்யகேடயம் நோக்கி ஒருவேளை இராஜேந்திரர் வந்தால் அங்கிருந்து தப்பி இன்னும் வடக்கே போய் விடுங்கள்.''

''விஷ்ணுவர்தன விஜயாதித்தன் பின்னால் வந்தால் என்ன செய்வது?''

''அவனை கோட்டையில் வைத்து பூட்டிவிடலாம். கோட்டையின் எல்லாக் கதவுகளையும் வெளியே தாழ்ப்பாள் போட்டு அகழி கதவை தூக்கி விடலாம். கோட்டையிலிருந்து வெளியே வராதபடி செய்துவிடலாம்.''

''இதைத் தாண்டியும் கோட்டையிலிருந்து வெளியே வருவதற்கு வழி இருக்கிறதா.''

''இருக்கிறது.''

''என்ன வழி?''

''சுரங்கப்பாதை.''

''அது விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு தெரிந்திருக்குமா.''

''தெரிந்திருக்கலாம்.''

''அதையும் அடைத்து விடு.''

''சரி. எப்போது படைஎடுத்து போகப் போகிறீர்கள்.''

''நாளையே படைஎடுத்துப் போகலாம்.''

''நாளை நாள் நன்றாக இல்லையே.''

''தப்பித்து போவதற்கு நாள் என்னடா கணக்கு, காத்தி ருக்கவா முடியும். உடனே கிளம்பு என்றால் படைகள் தடுமாறும். நாளை கிளம்பலாம் என்றால் உடனே சகலமும் சரி என்று தலை அசைப்பார்கள். அவர்கள்ள குறிப்பாக கீழைச்சாளுக்கிய வீரர் களை முன்னே அனுப்பி இரவோடு இரவாக வடமேற்கு நோக்கி ஓடிவிட வேண்டும்.

கோட்டைக் கதவை யார் தாழ்பாள் போடுவார்கள், சுரங் கத்தை யார் மூடுவார்கள்.''

''அதை நான் செய்கிறேன்.'' உளவுப்படைத் தலைவன் மண்டியிட்டுப் பதில் சொன்னான்.

''மிகச் சரியான வேலை, உனக்கு எவ்வளவு வேண்டும்?''

''நீங்கள் எத்தனை பார்த்துக் கொடுத்தாலும் சரி.''

''உனக்காக ஐநூறு பொன்கழஞ்சு தருகிறேன்.''

''அய்யா, உங்கள் உயிரையே காப்பாற்றி தருகிறேன். உங்கள் உயிர் ஐநூறு பொன் கழஞ்சா.''

''எவ்வளவு வேண்டும்.?''

''ஒரு ஆயிரமாவது கொடுங்கள்.''

ஒரு ஆயிரம் பொன் கழஞ்சுகள் எண்ணி அவனுக்கு தரப் பட்டது. இது அதிகம்தான். இருந்தாலும் என்ன செய்வது. இப்போ தைக்கு இவனை முறைத்துக் கொள்ள முடியாது, பிற்பாடு வழி யில் மடக்கி மொத்த பொன்னையும் பிடுங்கிக்கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அவர் பொன்கழஞ்சுகளை கொடுத்துவிட்டு அந்தப்புரத்தில் நகர்ந்தார். அவர் நகர்ந்ததும், உளவுப்படை தலைவன் குதிரையில் ஏறிக்கொண்டான். வேக மாக வெளியேறினான்.

அரண்மனையில் பின்பக்கம் போய் நின்றுகொண்டான். கோட்டையின் மதில்சுவருக்கும், உள்சுவருக்கும் நடுவே இடை வெளி இருந்தது. இருட்டாக, குதிரையை நிற்க வைத்தான். உள் பக்கத்திலிருந்து அவன் வருகையை, குதிரையை நிற்க வைப் பதை பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

''குதிரையை பார்த்தாயா.''

''ஆமாம். வலப்பக்கம் மூட்டை தொங்குகிறது. அங்கிருந்து தான் வந்திருப்பான் போலிருக்கிறது.'' விஷ்ணுவர்தன விஜயா தித்தன் கூர்மையாக குதிரையைப் பார்த்தான்.

''நான் அவனிடம் பேச்சு கொடுக்கும்பொழுது அந்த மூட் டையை எடுத்துக்கொண்டு கூழாங்கல்லை தயார் செய்துவிடு.''

ஒரு பை நிறைய கூழாங்கற்கல் நிரப்பப்பட்டன. அவன் வந்ததும் கதவு திறந்தார்கள்.

உள்ளே நடுங்கியபடி விஷ்ணுவர்தன விஜயாதித்தன் உட் கார்ந்து கொண்டிருந்தான்.

''என்ன இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்.''

''பயமாக இருக்கிறது.'' என்று ஈனஸ்வரத்தில் பேசினான்.

''ஒரு பயமுமில்லை. உங்களுக்கு முன்னதாகவே கிளம்ப வேண்டும் என்று அவர் தீர்மானித்திருக்கிறார். நீங்கள் அவருக்கு முன்னதாக கிளம்பி விடுங்கள்.''

''அவர் எப்பொழுது கிளம்புகிறார்.?''

''நாளை தெற்கு நோக்கி படைஎடுக்கிறார். படைஎடுப்பு என்பது பொய். படைஎடுப்பு பாதிதூரம் போய்விட்டு அங்கேயே படைகளை நிற்க வைத்து பிறகு வடமேற்காக மான்ய கேடயம் நோக்கிப் போகிறார். நீங்கள் இன்று இரவே கிளம்பி விடுங்கள்.''

''ஏன் அப்படி?''

''தாமதித்தீர்கள் என்றால் உங்களை கோட்டைக்குள் வைத்து பூட்டச் சொல்லியிருக்கிறார். நானும் அவ்விதமே வாக்கு கொடுத் திருக்கிறேன்.''

''கோட்டைக்குள் வைத்து பூட்டுவதா. யாருடைய எண்ணம் இது?''

''அவருடைய எண்ணம்தான்.''

''நன்றாக இருக்கிறது. என்னிடம் வசமாக ஒரு முறை மாட்டப் போகிறான். அப்பொழுது கை, கால்களை வெட்டி வீழ்த்துகிறேன். சுரங்க வழி இருக்கிறதே மறந்து போயிற்றா.''

''அதையும் அடைத்துவிடச் சொல்லி இருக்கிறார்.''

''நல்லது. நான் இன்று இரவே கிளம்புகின்றேன்.''

''இவ்வளவுதூரம் வந்து சொல்கிறேன். எனக்கு ஒன்றும் கிடையாதா.'' அவன் பல் காட்டினான்.

''வைத்திருக்கிறேன். நிச்சயம் திருகிறேன்.''

''எங்கே அந்த மூட்டை'' என்று கேட்க, அவன் குதிரை யிலிருந்து பொன் மூட்டையை அவிழ்த்துவிட்டு கூழாங்கல் மூட்டையை கட்டினார்கள் பொன்மூட்டையை வேகமாக எடுத்து வந்தார்கள். அதிலிருந்து இருநூறு பொற்காசுகளை எடுத்தார்கள். சிறு மூட்டையாக்கி கொடுத்தார்கள்.

''என்ன இது? பிச்சையா போடுகிறீர்கள். உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன். என்னை இப்படி இழிவாக நடத்து கிறீர்களே.''

''அய்யா, இதற்கு மேல் நூறு பொன்தான் தரமுடியும். இதற்கு மேல் என்னால் ஆகாது. நான் என்ன மன்னனா, இளவரசனா. எதுவும் இல்லை. ஒரு பகடைக்காய், நான் உயிர் தப்பி ஓடு வதற்கு இருக்கிறேன். என்னிடம் பேரம் பேசுகிறீர்களே. உங்க ளுக்கு புண்ணியமாகப் போகும். இன்னொறு நூறு பொன் வாங்கி விட்டு விடுங்கள்.''

இன்னொரு நூறு பொன் கொடுக்கப்பட்டது. முன்னூறு கழஞ்சை வாங்கிக் கொண்டு அவன் மூட்டையை கையில் வாங்கிக் கொண்டான்.

''ஆயிரமும் முன்னூறும், ஆயிரத்து முன்னூறு, இரண்டு கிராமங்களை வாங்கி எங்கேயாவது தனியாக சிவனே என்று உட்கார்ந்து விட வேண்டியதுதான். எத்தனை படைகள் வந்தா லும் வாளே எடுப்பதில்லை. சாதாரண பொதுஜனம் விவசாயம் என்று சொல்லிவிட வேண்டியதுதான். யார் ஜெயித்தாலும் வாழ்க வாழ்க என்று கோஷம் போட வேண்டியதுதான்'' என்று தீர்மானம் செய்து கொண்டான்.

அவர்கள் குதிரையில் தயார் ஆனார்கள். வடக்கு பக்கம் வாசலை திறந்தார்கள். ஒவ்வொரு குதிரையாக வெளியே வந்தன. இருளில் நுழைந்தன. காணாமல் போயின.

அவன் வெளியே வந்து தன் குதிரையை எடுத்து மூட் டையை தொட்டுப் பார்த்தான். மூட்டை பத்திரமாக இருந்தது. நிம்மதியான பெருமூச்சுடன் அவன் கிழக்கு நோக்கி நகர்ந்தான்.

கிராமங்கள் வாங்குவதற்கு பதிலாக மரக்கலன்கள் வாங்கினால் போதும். இன்னும்கூட தள்ளிப்போய் கலிங்கத்திலேயோ அல்லது வங்க தேசத்திலேயோ போய் குடியேறிக்கொள்ளலாம். அங்குபோய் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் வந்தது. அவன் தன் வீடு நோக்கி நகர்ந்தான்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தன் குதிரைகள் வடக்கு நோக்கி, ஒட்ட தேசம் நோக்கி தலைதெறிக்க ஓடின. விடியற்காலையில் கோட்டைக் கதவுகள் சாத்தினார்கள். சுரங்கப்பாதையை மூடினார்கள். மேலைச்சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மன் உள்ளுக்குள் வைத்து விஷ்ணுவர்தனை பூட்டிவிட்டோம் என்ற கர்வத்தோடு கீழைச்சாளுக்கி படைகளை நகர்த்திக்கொண்டு தெற்கு நோக்கி நடந்தான்.

இராஜேந்திர சோழர் படைகள் உத்திரமேரூரைத் தாண்டின. வீதியின் நடுநாயகமாக இருக்கும் மண்டபத்தை நோக்கி இராஜேந்திர சோழர் கை கூப்பினார். பரவையை வணங்கச் சொன்னார். புருஷனும், மனைவியும் அந்த மண்டபத்தில் ஏறினார்கள். அமர்ந்து கொண்டார்கள். அவரைச்சுற்றி சேனாதிபதிகள் நின்று கொண்டிருக்க அவர் நாலாபுறமும் மண்டபத்தை சுற்றிப் பார்த்தார்.

''என் முன்னோர் பராந்தகச் சோழன் காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் இது. வெறும் மண்டபம் இல்லை, சோழ மண்ணின் நாகரீகத்தை சொல்லும் மண்டபம். மக்கள் ஆட்சிதான் மன்னன் ஆட்சி என்று சொல்லுகின்ற மண்டபம். குடவோலைத் திட்டம் நடந்த மண்டபம். குடவோலைத்திட்டம் எப்படி நடக்க வேண்டும் என்று தெளிவாக கல்வெட்டில் பொறிக்கப்பட்ட மண்டபம்,

யாருக்கு படிக்கத் தெரியும், போய் அந்த சுற்றுச்சுவரில் படித்துவிட்டு வாருங்கள். ஒவ்வோர் ஊரிலிருந்தும் ஆட்களை தேர்ந்தெடுத்து அவர்கள் பெயர்களை எழுதி ஒரு குடத்தில் போட்டு பிறகு ஒரு குழந்தையை விட்டு எடுக்கச் சொல்வார்கள். அந்த குழந்தை யார் பெயரை எடுக்கிறதோ அவரைத் தான் அந்த வாரியத்தின் தலைவராக நியமிப்பார்கள். ஏரி வாரியம், தர வாரியம், தோட்ட வாரியம் என்று மூன்று வாரியங்களாகப் பிரித்து முப்பத்து பேரில் பன்னிரெண்டு பேர் சம்வத்த வாரியர்களாகவும், பன்னிரெண்டு பேர் தோட்ட வாரியர்களாகவும், ஆறு

பேர் ஏரி வாரியத் தலைவர்களாகவும் பணி அமர்த்தப்படுவார் கள். புறநகர் குடியிருப்புக்கு பன்னிரெண்டு பேர் தேர்ந்தெடுத்து அவர்களை ஆறு பேர் பஞ்சவார வாரியத்திற்கும், ஆறு பேர் பொன் வாரியத்திற்கும் தலைவர் ஆவார்கள்.

''யார் வாரியத் தலைவர்களாக போட்டியிட வேண்டும் தெரியுமா. ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் இருக்க வேண்டும். சொந்த வீடு இருக்க வேண்டும். முப்பதிலிருந்து அறுபது வய துக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். வேதங்களையும், சாஸ்திரங்களையும் கற்றவராக இருக்க வேண்டும். உடல் வலிமை யும், உள்ள வலிமையும் உள்ளவராக இருக்க வேண்டும். இது வரை வாரியத்தலைவராக இல்லாதிருக்க வேண்டும். அல்லது வாரியத்தில் இருப்பவருக்கு உறவினராக இல்லாதிருக்க வேண் டும். என்னத் தெளிவு. என்னத் தெளிவு. முதலில் தகுதிவாரி யாக போட்டியிடுவார்கள். உள்ளுக்குள் நுழைவார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்படுவது இறைவன். ஒரு பாலகன். எனவே எந்த வித தவறும் நிர்வாகத்தில் ஏற்படாது. இதோ இந்தக் கூடத்தில் தான் சபை குறைவா கூடியிருந்து நடுவிலே தாமிரப்பானை வைத்து அதற்குள் ஓலை எழுதிப் போட்டு சிறுபையனை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். மண்டபத்தை உயரே கட்டியிருக்கிறார் கள். எனவே சுற்றி உள்ள மக்களும் தொலைவிலிருந்து என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். எதுவும் இரகசியமில்லை, எந்த ஒளிவு மறைவும் இல்லை.''

''என்னை என்னவோ மிகப்பெரிய நாகரீகம் மிக்கவன். அற்புதமாக சிற்பக் கலைஞர்களுக்கு உதவி செய்பவன். இப்படி இருப்பவன். அப்படி இருப்பவன் என்று சொன்னீர்களே நூறு வருடங்களுக்கு முன்பு என்ன தெளிவாக ஆட்சி நடந்திருக் கிறது. என் மூத்தோர் பராந்தகனை நான் என்னவென்று கும்பிடுவது.''

''இது மிகச் சிறந்த நாகரீகம் அய்யா. நான் கொண்டு வரவில்லை. என் தந்தை கொண்டு வரவில்லை, அதற்கும் முன்னதாகவே இந்த தஞ்சை நாகரீகம், சோழ தேசத்து நாகரீகம் வந்துவிட்டது. ஊர் நிர்வாகத்தை மன்னன் நடத்தவில்லை. சேனாதிபதிகள் நடத்தவில்லை. மந்திரிமார்கள் நடத்தவில்லை. ஊருக்குள் உள்ளவர்களே நடத்தி இருக்கிறார்கள். அவர்களுக் குத் தான் பிரச்சனையினுடைய மையம் தெரியும். அவர்கள் எல்லோரும் மன்னனுக்கு கட்டுப்பட்டவர்கள். மன்னன் அவர்களை

சுயமாக ஆட்சி செய்ய அனுமதித்தான். அவன் கையும் ஓங்கி இருந்தது. என்ன அழகு, இந்த பரத கண்டத்தில் எங்கேனும் ஒரு இடத்தில் இப்படிப்பட்ட ஆட்சிமுறை நடந்திருக்குமா அல்லது இந்த உலகத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் மக்கள் ஆட்சி, என்பது நடந்திருக்குமா. எல்லா இடத்திலும் வாள் வைத்துக் கொண்டிருந்த மன்னர்தானே சிறப்பாக இருக்கிறார். புஜவலிமை தானே பெரிதாக இருக்கிறது. புஜவலிமை தாண்டி புத்தி வலிமை முக்கியம். நேர்மை முக்கியம். தியாகம் முக்கியம். என்று சொன்ன. ஒரே ஒரு பரம்பரை சோழப் பரம்பரை.''

எல்லா சேனாதிபதிகளும் ஆஹாரம் செய்தார்கள். கை கூப்பினார்கள். பராந்தகனை மனதில் நினைத்து வணங்கினார்கள்.

'யார் இதற்கு காரணம், பராந்தகரைச் சொல்வதா, அல்லது பராந்தகருக்கு உறுதுணையாக இருந்த சேனாதிபதிகளைச் சொல்வதா. அல்லது சேனாதிபதிகளுக்கு உறுதுணையாக இருந்த மந்திரிமார்களை, குருமார்களை சொல்வதா. யாரோ ஒரு ஞானவான் இருந்திருக்கிறான். அவன் மன்னனுக்கும் மேலாக நின்றுநல்லதை செய்திருக்கிறான். இப்படி ஞானவான்கள் பிறந்த பூமி அய்யா சோழதேசம். இந்த சோழ தேசத்தை கிள்ளுக்கீரை என்று நினைத்து எவனேனும் உள்ளே வந்தால் சும்மாவிடலாமா. வெட்டி எறிய வேண்டாமா. எங்கள் நாகரீகத்தை கலைக்க முற்பட்டால் சும்மா இருப்போமா. சிதற அடிக்கமாட்டோமா?

உங்களுடைய ஆட்டம் பாட்டங்களையும், பெண் போகத்தையும் இங்கே கொண்டுவந்து காட்டலாம் என்று பார்க்கிறாயா முடியாது. பெண்ணை காட்டி அரசை கவிழ்க்க பார்க்கிறாய், எவ்வளவு கேவலமானவன் நீ. எங்கள் நாகரீகத்தில் கால் தூசுக்கு ஈடாக முடியுமா.'' அவர் உரத்தக் குரலில் பேச, எல்லோரும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய சீற்றத்தின், அடிமனது வேதனை நன்கு புரிந்தது.

இரண்டு நாள் பயணப்பட்டு மூன்று குதிரை வீரர்கள் வந்தார்கள். அவசரம் என்றார்கள். அவர்களை உடனே உத்திர மேரூர் மண்டபத்தில் அனுமதித்தார். 'என்ன' என்று கேட்டார்.

''வேங்கியின் கோட்டைக் கதவுகள் வெளிப்பக்கம் தாழிடப் பட்டன. சுரங்கப்பாதை மூடப்பட்டு விட்டது. உள்ளே யார் இருக்

கிறார்கள் என்று தெரியவில்லை. ஆனால் உள்ளே இருந்து எந்த சத்தமும் வரவில்லை. கோட்டை மதிலில் யாரும் ஏறவில்லை அகழியினுடைய மரப் பாலங்களெல்லாம் தூக்கப்பட்டு விட்டன. கோட்டையிலிருந்து இரவு நேரம் வெளிச்சம்கூட வரவில்லை. எல்லாம் மர்மமாக இருக்கிறது.'' என்று சொன்னார்கள்.

இராஜேந்திர சோழர் வாய்விட்டுச் சிரித்தார்.

''அப்படியானால் வேங்கியில் யுத்தம் இல்லை.''

''என்ன?''

''ஜெயசிம்மன் அங்கு இல்லை.''

''இல்லை. ஜெயசிம்மன் படைஎடுத்து தெற்கு நோக்கி வருகிறார்.''

''வரமாட்டார். விஷ்ணுவர்தன விஜயாதித்தனை உள்ளே அடைத்துவிட்டு தான் போக்கு காட்டி ஓடிவிடலாம் என்று நினைக்கிறான். செய்யட்டும், ஆனால் விஷ்ணுவர்தன விஜயா தித்தனும் உள்ளே இல்லை என்பது அவனுக்கு புரியவில்லை.''

''ஏன்?''

''உள்ளே இருந்தால் ஐயய்யோ என்று அலறி இருப்பான். பெரிய சத்தம் கேட்கும், காப்பாற்றுங்கள் என்று குரல் கேட்கும். உள்ளே சத்தம் வரவில்லை என்றால். உள்ளே விஷ்ணுவர்தன் இல்லை என்று அர்த்தம்.''

''எங்கே போயிருக்கக் கூடும். மான்யகேடம் வந்தால் மறுபடியும் மாட்டிக் கொள்வானே.''

''மான்யகேடயம் போக மாட்டான். அவன் ஒட்டதேசத் திற்கு போய் விடுவான். எனவே நம்முடைய படைஎடுப்பின் பெரிய வேலை இரட்டைபாடியிலும், மான்யகேடயத்திலும்தான் இருக்கின்றன.''

''மான்யகேடயத்தை அழித்துவிட்டு அப்படியே ஒட்ட தேசம் போய்விடலாமா அல்லது வேங்கிக்குப் போய் இராஜ நரேந்திரனை பட்டத்தில் உட்கார வைக்கலாமா.

''எது சரி என்று யோசிக்க வேண்டும். எனவே எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ கிளம்புவோம். வாழ்க பராந்தகர். வாழ்க சோழ தேசம்'' என்று சொல்ல வீரர்கள் எதிரொலித்தார்கள்.

மேலைச்சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனுக்கும் தகவல் வந்தது.

''உள்ளிருந்து எந்த சலனமும் இல்லை, பூட்டப்பட்டது பூட்டப்பட்டதாகவே இருக்கிறது. பணி ஆட்கள் மட்டுமே கதவைத் தட்டுகிறார்கள். வேறு எந்தக் குரலும் இல்லை. வீரர்கள் குரல் வரவே இல்லை. தீப்பந்தங்கள் எரியவே இல்லை. என்ன செய்வது.'' என்று கேட்டார்கள்.

''நாய் தப்பித்துவிட்டது. எங்கு போகும். போகட்டும். ஒட்ட தேசம்தான் போகும். என்மீது விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி, நான் என்னை காப்பாற்றிக்கொள்ள மான்யகேடம் போகி றேன். மான்யகேடயத்தை பலப்படுத்துகிறேன். அதை நோக்கி நிச்சயம் இராஜேந்திரன் வருவான். எத்தனை வீரர்கள் என்பதை கணக்கிட்டு முன்னாடியே சொல்லித் தெரிந்தால் நாம் தாக்கு வதற்கு தயாராக இருப்போம்.''

''அதுவும் தெரிந்திருக்கிறது.''

''எத்தனை வீரர்கள்?''

''ஒன்பது லட்சம் வீரர்கள்.''

''என்ன?'' ஜெயசிம்மன் திகைத்தான்.

ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று நினைத்தேனே. இத்தனை வீரர்களை அவன் எப்படி ஒன்று திரட்டினான்.''

''உங்கள் தலையை கொய்ய வேண்டுமென்பதே அவ னுடைய முக்கியமானப் பணி, முழு வேகம், அதனால் சகல பக்கமும் வீரர்களை திரட்டி எடுத்துக்கொண்டு நம்மை நோக்கி வருகிறான்.''

''அப்பொழுது கிடுக்கி தாக்குதலாக வருகிறான்.''

''ஆமாம்,''

''சரி, அப்போது மான்யகேடயமும் போக முடியாது. வேறு எங்கு போகலாம்?''

''வடக்கே போய்விடுங்கள்.''

''வடக்கே என்றால்.''

''கல்யாணியை நோக்கிப் போங்கள்.''

''அது தான் சரியான யோசனை.'' அவன் சேனாதிபதி சொன்ன யோசனையை உடனே ஏற்றுக்கொண்டான். குதிரை

எடுத்தான். கீழைச் சாளுக்கிய வீரர்களிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் வேகமாக வடமேற்கு நோக்கி ஓடி னான். அவனைத் தொடர்ந்து அவனுடைய மெய்க்காப்பாளர்களும், சேனாதிபதி களும் பின்தொடர்ந்தார்கள். அவன் போகும்வரை கீழைச்சாளுக் கிய வீரர்கள் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் போய் மறைந்ததும்,

''வாழ்க. இராஜேந்திர மாமன்னர் வாழ்க, சோழம் வாழ்க. கீழைச்சாளுக்கியம் வாழ்க'' என்று கூவினார்கள். அதேசமயம் துக்கப்பட்டார்கள். மன்னர் இல்லாத, சரியான தலைமை இல்லாத ஒரு நல்லப் படை எப்பொழுதும் கூனிக்குறுகித்தான் நிற்கும். அந்த அவமானம் அவர்கள் முகத்தில் எழுதி ஒட்டி இருந்தது.

''இராஜேந்திரரை எப்படி பார்ப்பது. என்ன பேசுவது'' என்று அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

* * *

அத்தியாயம் 32

செழுங்கழிநீர் ஓடைப்பக்கம் போய் கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு வந்த அந்த அந்தணருக்கு பெரிய பரிசல் கண்ணுக்கு பட்டது.

மயிலாப்பூரின் எல்லையில் அந்த செழுங்கழிநீர் ஓடை இருந்தது. ஆழம் அதிகம் இல்லாது போனாலும் ஓடையில் நீர் பெருக்கு இருக்கும். அகலம் அதிகம் இல்லாது போனாலும் அதை கடக்க பெண்களும், குழந்தைகளும் தடுமாறுவார்கள். அரிசி, பருப்பு போன்றவைகளை நனையாமல் எடுத்துப் போக ஒரு பரிசல் தேவையாக இருந்தது. துடுப்பு போட்டு செல்லாமல் ஆற்றின் இரண்டு கரைகளுக்கு நடுவே ஆணி அடித்து கயிறு கட்டி, பரிசலில் உட்கார்ந்து கயிறை பிடித்த வண்ணம் எதிர் கரைக்கு போய் விடுவார்கள். எதிர்கரையிலிருந்து இந்தப் பக்கம் வருவார்கள்.

அப்படி போவதற்கு காசு வசூலிக்க வேண்டும் என்று அவர் சொல்ல, வேளாளர்கள் முடியாது என்று மறுத்துவிட்டார்கள். ஆனால் பொது சபையிலிருந்து அந்த பரிசல் ஓட்டிக்கு இத்தனை கலம் நெல்லும், இரண்டு முறை வேட்டியும் எடுத்துத் தர வேண்டுமென்று உத்தரவாகி இருந்தது.

தனக்கு நல்லபடி நெல் ஒதுக்கித் தந்தது வேளாளர்கள் என்பதால் அந்த பரிசல் ஒட்டி வேளாளர்களோடு அதிகம் பேசுவான். அந்தணர்கள் வந்தால் எங்கே என்று கூட கேட்க மாட்டான். இரவுபகல் எந்நேரமும் அவனுடைய சேவை தேவை என்பதால் அங்கேயே அவனுக்கு குடிசை போட்டுக் கொடுத்திருந்தார்கள். அரிசி போனால் நாலு கைப்பிடி அரிசி எடுத்துக் கொள்வான். காய்கறியும், வெற்றிலையும் அவனுக்கு இனாமாகக் கிடைத்தன. அதைத்தவிர அவனுடைய குடிசையை ஏற்றி வேலி போட்டு உள்ளுக்குள் காய்கறிகள் பயிர் செய்து கொள்ளலாம். என்று வேளாளர்கள் யோசனை சொல்லி உதவியும் செய்தார்கள். வீட்டிற்கு வந்து சாணஉரம் எடுத்துப் போகச் சொன்னார்கள்.

அதைத்தவிர வேளாளர்களிடமிருந்து பழந்துணிகள் கிடைத்தன. எதற்கும் கவலை இல்லாத சந்தோஷமான ஆளாக அவன் இருந் தான். அவனுடைய சந்தோஷம் அவருக்கு உறுத்தலாக இருந்தது.

அரை நிலவு வெளிச்சம் கொண்டிருந்த நேரத்தில் அவர் மறுபடியும் செழுங்கழுநீர் ஓடைப்பக்கம் வந்து பரிசல் இருக் கிறதா என்று பார்த்தார். அவன் வீட்டில் இருக்கிறானா என்று பார்த்தார். வீடு உட்பக்கம் பூட்டப்பட்டு இருந்துது. மெல்ல பரிச லில் ஏறி உட்கார்ந்து கொண்டார். கயிறை அவிழ்த்துவிட்டார். ஓடையில் உள்ள நீரின் இழுப்பால் பரிசல் ஓடையில் நகர்ந்து வந்து விரைவாக கிழக்கு நோக்கி போயிற்று.

கடற்கரை ஓரமாக இருந்த கபாலி கோவிலைச் சுற்றி செழுங்கழிநீர் ஓடை போகும். அங்கே கடற் மணற்பரப்பில் ஆழம் குறைவான இடத்தில் கடலோடு கலக்கும். நல்லநீர் கட லோடும் கலக்கின்ற இடத்தில் செம்படவர்கள் குடிசை போட்டு இருந்தார்கள். வங்கக் கடலை தொழிலுக்கும் செழுங்கழுநீர் ஓடையைக் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் வைத்துக் கொண்டார் கள். அந்த ஆற்று வண்டல் மண்ணை கொண்டு வந்து அவர் களும் தோட்டம் போட்டிருந்தார்கள்.

அவர் அந்த குடிசைகளுக்கு நடுவே இறங்கினார்.

''அடேய்.'' என்று குரல் கொடுத்தார்.

குடிசையில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் எழுந்தார்கள்.

''யார்?'' என்று கேட்டார்கள்.

அவர் தன்னைப் பற்றி சொன்னார். தீப்பந்தங்கள் கொளுத் தப்பட்டன.

''இந்த நேரத்தில் என்ன.'' அவர்கள் அவரை வியந்து வர வேற்றார்கள்.

''அரைநிலவில் ஓநாய்கள் வராது. பௌர்ணமியில்தான் வரும், இந்த நிலவில் ஓநாய்கள் உறங்கும். குளிர் வேறு அதிக மாக இருக்கிறது. இதுதான் சரியான சமயம், ஓநாய்களால் அவஸ்தைப்படுவது நீங்கள்தான் அதிகம். இந்த ஆற்றை தாண்டி ஓநாய்கள் உங்கள் குடிசைகளுக்கு வந்து விடுகிறது என்று கேள்விப்பட்டேன். குழந்தைகளைக் கூட கடித்து விடுகிறது என்று சொன்னார்கள்.''

''ஆமாம் அய்யன், நாய், பூனை எல்லாவற்றையும் கடித்து குதறி விடுகிறது. கன்றுக்குட்டிகளைக் குதறிவிடுகிறது. மிகப் பெரிய தொல்லையாக இருக்கிறது.'' என்று சொல்ல,

''அதுதான் இன்று வேட்டை ஆடலாம். நாள் நன்றாக இருக்கிறது.''

''வேட்டையாடவா. நீங்கள் மட்டும் வந்திருக்கிறீர்கள்.''

''நானா வேட்டையாடப் போகிறேன். நீங்கள்தான்.''

''எப்படி? எங்களிடம் பெரிய ஆயுதங்கள் இல்லையே.''

''பழந்துணிகள் இருந்தால் எடுத்து வாருங்கள். நான் எண்ணெய் கொண்டு வந்து இருக்கிறேன்.'' அவர் கசண்டு எண்ணெயை காட்டினார். புளித்த வாடை வீசியது. அவர்கள் முகம் சுளித்தார்கள்.

சட்டென்று பற்றிக் கொள்வதற்காக மதுக்கஷாயம் கலந் திருக்கிறேன். இதை எடுத்துக் கொண்டு வாருங்கள். துணியில் நனையுங்கள். கருவேல மரங்களின் மீது போட்டு நெருப்பு வைத்து விட்டு வந்துவிடுங்கள். பரிசல் கொண்டு வந்திருக் கிறேன். இந்தப் பரிசலை சேற்றில் வைத்து இரண்டு பேர் மூன்று பேர் மெல்லிய உருவத்தினர் கருவேலம் காட்டிற்குள் நுழைந்து நெருப்பு வைத்துவிட்டால் அதிலேயே ஓநாய்கள் செத்து விடும். மீறி இந்தப்பக்கம் வருபவற்றை தடியால் அடித்து கொன்று விடலாம். வேட்டை நாய்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.'' என்று கட்டளை இட்டார்.

''நாளை பார்த்துக்கொள்ளலாமா? பகல் பொழுதில்.''

''வேண்டாம். இரவு நேரம்தான் சரியான விஷயம். இது தான் சரியான நேரம். அதனால்தான் நானே வந்திருக்கிறேன்.'' என்று சொல்ல, அவர்கள் ஆயத்தமானார்கள்.

பெரிய துடுப்புகள் எடுத்துக் கொண்டார்கள். வீசிப் பார்த் தார்கள். பெரிய மூங்கில் குச்சிகளில் துணிகளை சுற்றினார்கள். அதில் எண்ணெய் வார்த்தார்கள். பரிசலை தலையில் கவிழ்த்து கொண்டு கடல்மணலில் நடந்தார்கள். வெகுதூரம் உள்ள கூவம் நதிக்கரையில் நின்றார்கள். சேற்றின் மீது பரிசலை வைத்தார் கள். ஒருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் நன்றாக இருந்தது.

இன்னொருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் லேசாக அமிழ்ந்தது. இன்னொருவன் ஏறி உட்கார்ந்தான். பரிசல் அதிகம் அமிழவில்லை.

''கொம்பு போட்டு தள்ளு.'' என்று சொல்ல, நீண்ட குச்சி எடுத்து ஊன்றினார்கள். ஆனால் நீண்ட குச்சிக்கு கீழாக சேறு இருந்தது. இரண்டு குச்சிகளாக இணைத்தார்கள். எண்ணெயும், துணியும் எடுத்துக்கொண்டு நெட்டித் தள்ளினார்கள். மற்றவர் எல்லோரும் வரிசையாக ஓநாய்கள் உள்ளே நுழைந்தால் அடித்துக் கொல்லுவதற்கு தயாராக இருந்தார்கள். பெண்களும் சிலபேர் கையில் இரும்பு ஆயுதங்களுடன் வந்தார்கள். போகும்போதே எண்ணெய் துணியை கருவேல மரத்தில் போட்டு விட்டு எதிர் கரைக்குப்போய் அங்கே துணியை பற்ற வைத்தார்கள். துணி திகுதிகு என்று எரிந்தது. ஓநாய்கள் ஊளையிட்டன. வேகமாக இந்தபக்கம் வந்தார்கள். ஆனால் காற்றினுடைய வேகம் வடக்கிலிருந்து தெற்காக இருந்தது. எனவே நெருப்பு எகிறி அடுத்த துணிமீது பட்டது. இவர்கள் வருவதற்குள் ஆறு, ஏழு கருவேல மரங்கள் முழு வேகத்தில் எரிந்தன. இவர்கள் விலகி நின்று வந்தாலும் அவர்கள்மீது நெருப்பு விழுந்தன. அவர்கள் தள்ளாடினார்கள். பயந்தார்கள். பரிசல் கவிழ்ந்தது. இரண்டு கோல் ஆழத்தில் நீச்சல் அடிக்கவும், முடியாமல் மேலே மிதக்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டார்கள். மூழ்கினார்கள்.

ஓநாய்கள் நெருப்பு எரிவது பார்த்து ஓடி வந்தன. எங்கெல்லாம் கற்கள் உண்டோ அங்கெல்லாம் முகர்ந்து பார்த்து எகிறி கரைக்கு வந்தன. அவர்கள் துடுப்பால் அடித்தார்கள். மூங்கிலால் விளாசினார்கள். அரிவாளால் வெட்டினார்கள். ஒன்றன் பின் ஒன்றாய் வந்த ஓநாய்களை அடித்து துவைத்தார்கள். தூக்கி நெருப்பில் போட்டார்கள். இவர்களை யாரும் கவனிக்கவில்லை, மூழ்கியவர்களை கவனித்த ஒரு பெண்மணி கூவினாள். ஆனால் எதுவும் செய்வதற்கில்லை.

அவர்களுக்கு நஷ்டஈடாக ஆறு பொன்கழஞ்சுகள் கொடுத்தார்.

''நெருப்பிற்கு பயப்படாமல் வந்திருக்க வேண்டும். ஏறி நின்று எதற்காக ஆடினார்கள். அவர்களே கவிழ்ந்து போனார்கள்.'' என்றெல்லாம் சொன்னார்.

அவர்கள் பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்து கொண்டார்கள்.

இறந்து போனவரின் மனைவி பெரிதாக ஓலமிட்டாள். அவள் பேசியது யாருக்கும் புரியவில்லை. மிகுந்த துக்கம் என்பது மட்டுமே தெரிந்தது.

வெகுசில ஓநாய்களே எஞ்சி இருந்தன. அவை ஒன்றாகக் கூடி எரிந்து போன காட்டையே பார்த்துக் கொண்டிருந்தன. பிறகு வடக்கு நோக்கி கடற்கரை ஓரமாகவே நண்டுகளை முகர்ந்த வண்ணம் தாவித்தாவி ஓடின. ஓநாய்கள் தொல்லை இனிமேல் இல்லை, என்பதாக மக்கள் பேசிக்கொண்டார்கள்.

மறுநாள் விடியலில்தான் செய்த மிகப்பெரிய தீரச்செயலை அவர் முழக்கமாக அறிவித்தார்.

''என்னை அடித்த அந்தணப் படைத்தளபதி திருவொற்றியூர் போய்விட்டான். அவன் ஒருநாளும் திரும்பி வரப்போவதில்லை. என்னை அடித்த பாவம் சும்மா விடாது. இங்கிருக்கின்ற வேளாளர்கள் எல்லாம் அவனுடைய கைக்கூலிகளாக இருக்கிறார்கள். காட்டிக் கொடுக்கிறார்கள். கடைசியில் ஓநாய்களை அழித்தது யார். நான்தானே. நான் ஒருவன்தானே'' என்று வீரமாக முழக்கமிட்டார்.

ஓநாய்கள் இனிமேல் வராது என்பது நிம்மதியான விஷயமாக இருந்தாலும் அவர் அதிகம் பேசுகிறார் என்று எல்லோருக்கும் தெரிந்தது. இந்த நேரத்தில் பதில் சொல்லக்கூடாது என்று அவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

''**கீ**ழைச்சாளுக்கியத்தில் ஆளே இல்லையா. என்ன தேசமடா இது. இப்படி சுடுகாடுபோல் காட்சி அளிக்கிறது.'' ''அரசன் இல்லையென்றால் ஒரு தேசம் எவ்வளவு அவலமான நிலைக்கு வரும் பார்த்துக்கொள்ளுங்கள்.'' படைத்தளபதிகள் சொல்ல ஒட்டர்கள் வியப்போடு வேங்கியை பார்த்தபடி குதிரையில் வலம் வந்தார்கள்.

''ஜெயசிம்மன் வடமேற்கே மண்ணைக்கடகம் நோக்கி போய்விட்டான். விஷ்ணுவர்தன விஜயாதித்தன் வடக்கே எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறான். ஒட்ட தேசத்திற்கு வருவானா இல்லை தாண்டி வங்காளத்திற்கு போய்விடுவானா என்று தெரியவில்லை.''

''மிக வேகமாக ஓடினான் என்றார்கள்.''

''அப்படியானால் வங்காளதேசம் போய்த்தான் நிற்பான். நம் மீதும் அவனுக்கு நம்பிக்கை இல்லை.''

''இப்பொழுது என்ன செய்யலாம்?''

ஒரு இருநூறு குதிரை வீரர்கள் மெல்ல தயங்கித் தயங்கி தெற்கு நோக்கி வந்தார்கள். கீழைச்சாளுக்கிய படையை கடல் உள்ளுக்குள் வந்த புலிக்காடு அருகே சந்தித்தார்கள். கீழைச் சாளுக்கியப்படை பல கிராமமக்களிடையே பொன் கழஞ்சு கொடுத்தும், வெறுமே கை ஏந்தியும் உணவு வாங்கி உட்கொண் டிருந்தது, என்னது செய்வது என்று தெரியாமல் திகைத்துப்போய் நின்றது, இராஜேந்திர சோழர் வருவார் அப்பொழுது விடியும் என்று காத்திருந்தது. ஆனால் இராஜேந்திரசோழர் திருவொற் றியூர் வரவில்லை. வந்தாலும் இந்தப் பக்கம் வரப்போவதில்லை. அவர் வடமேற்காக நகரப் போகிறார் என்றெல்லாம் செய்தி வந்தது.

கீழைச்சாளுக்கியத்தினரை புறக்கணித்துவிட்டு நூறுபேர் கொண்ட ஒரு ஒட்டர்படை இன்னும் தெற்கு நோக்கி வந்தது. திருவொற்றியூர் நகருக்குள் போகாமல் அலைகள் மோதும் கடற்கரை ஓரமாகவே தெற்கே வரவேண்டும் என்று தீர்மானித் தது. திருவொற்றியூரில் குறைந்தபட்சம் நாலாயிரம், ஐந்தா யிரம் வீரர்களாவது இருப்பார்கள் என்று சொல்லப்பட்டதால் பூனையைப் போல அவர்கள் நடுஇரவில் திருவொற்றியூர். கடற் கரையைக் கடந்தார்கள். எதிரே ஓநாய்கள் ஓடிவந்தன. வில் வளைந்து அம்பு தொடுத்துக் கொன்றார்கள். குற்றுயிரும், குலை உயிருமாக இருந்த ஒரு ஓநாயின் முதுகில் ஒருவன் ஈட்டியால் குத்தினான். குத்தி எடுத்து கடலில் தூக்கிப் போட்டான்.

''இராஜேந்திர சோழனையும் இப்படி தூக்கிப் போட வேண் டும்'' என்று உரக்கச் சொன்னான். ஒட்டர்கள் சிரித்தார்கள்.

கடற்கரையில் மேலைச்சாளுக்கிய வீரர்கள் வந்ததற்கான பழைய கொடிகள் இருந்தன. அவர்கள் இடுப்பிலும் மேலை சாளுக்கிய கொடி இருந்தது. அதை தங்கள் ஈட்டிமேல் பறக்க விட்டார்கள். அல்லிக்கேணி கரைஓரம் வந்து நின்றார்கள். என்ன செய்வது என்று திகைத்தார்கள். தொலைவில் பரிசல் இருப்பது தெரிந்தது. தோளில் உள்ள உடும்பில் கயிறு கட்டி சுழற்றி

வேகமாக அந்த கவிழ்ந்து கிடந்த பரிசலை நோக்கி வீசினான். உடும்பு பொத்தென்று அந்த பரிசல் மீது விழுந்து இறுக்கப் பற்றிக் கொண்டது. மெல்ல கவனமாக இழுத்தார்கள். பரிசல் வந்தது. தட்டி சரி செய்தார்கள். மல்லாக்க போட்டார்கள். ஆற்றுக்கு குறுக்கும், நெடுக்குமாக கயிறு கட்டிக் கொண்டார்கள். எரிந்துபோன கருவேலமர கிளைகளை பற்றியபடி தாண்டி மறுகரைக்கு போனார்கள். விடிவதற்கு முன் நூறு வீரர்களும் அக்கரைத் தாண்டி திருவல்லிக்கேணி கடற்கரையில் புகுந்தார்கள். வெற்றிலையை மென்றார்கள். வெள்ளரியை உடைத்து தின்றார்கள். மறித்த காவற்காரனை வெட்டிப் போட்டார்கள். குதிரை ஏறினார்கள். குடிப்பதற்காகவும், குளிப்பதற்காகவும் செழுங்கழுநீர் ஓடை வந்தார்கள். இறங்கிக் குளித்தார்கள். குதிரை ஏறி செழுங்கழிநீர் ஓடை தாண்டினார்கள்.

செம்படவர்கள் எழுந்து நின்று யாரென்று பார்க்க, வேல் கம்பால் குத்திவிடுவேன் என்று மிரட்டினார்கள். செம்படவர்கள் பயந்து ஒதுங்கினார்கள். செழுங்கழிநீர் ஓடையின் வடகரையாகவே நகர்ந்தார்கள்.

அவள் தாமரைச் செல்வி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். அவளை யாரோ தொட சிலையாக மாறுகிறாள். அந்த சிலையை தூக்கி மக்கள் அழுகிறார்கள் என்று ஒரு கனவு வந்தது.

என்ன கனவு இது. வியந்தாள்.

காஞ்சிபுரம் நோக்கி போயிருக்கிறாராம். இன்னும் அரிசி வேண்டுமாம், பருப்பும், காராமணியும் வேண்டுமாம். நல்ல பாதை இருப்பதால் மாட்டுவண்டிகள் விரைவாக வந்துவிடுமாம். மயிலை அல்லது திருவொற்றியூரில் இராஜேந்திர சோழர் ஒரு வாரத்திற்கு மேல் தங்குவாராம். எனவே இல்லையென்று சொல்லாமல் உணவு போடவேண்டும் என்பதால் கூடுதலாக அரிசிக்கு நாலாபுறமும் பறந்து கொண்டிருந்தான். மயிலையிலும், திருவல்லிக்கேணியிலும் அரிசி வாங்கியாகிவிட்டது. ஆகவே மேற்கொண்டு வேண்டும் என்பதற்காக செழுங்கழுநீர் பேட்டைக்கும் அப்படியே காஞ்சிபுரத்திற்கும் போய் அரிசி வண்டிகள் வர ஏற்பாடு செய்திருக்கிறார்.

''அம்மா. அந்த அந்தணர் பீற்றிக் கொள்கிறார்.''

''என்ன?''

''அவர் ஒருவராகவே ஆயிரம் ஓநாய்களை அழித்து விட்டாராம்.''

''அங்கிருந்த ஓநாய்களை?''

''கூவம்நதிக்கரை சேற்றிலே இருந்த ஓநாய்களை அவர் அழித்துவிட்டார் என்று சொன்னார்.''

''அவைகளை அழித்துவிடுவது நல்லதா. அவ்வதானே நமக்கு பாதுகாப்பு.''

''செம்படவர்கள் வந்து அழுதார்களாம், அவரிடம் வந்து குறை சொன்னார்களாம், எப்படியாவது காப்பாற்றுங்கள் என்று மண்டியிட்டார்களாம். அவர்களின் துணைகொண்டே அழித்து விட்டாராம்.

''எப்படி அழிக்க முடியும்?''

''நெருப்பு வைத்துவிட்டாராம்.''

''அடப்பாவி, முட்டாள்தனமல்லவா அது,''

''ஆமாம். மற்ற அந்தணர்களும் அதைத்தான் சொல்கிறார்கள்.

இப்பொழுது கருவேலஞ் செடிகளையெல்லாம் அழித்து விட்டால் கடப்பது எளிதாகிவிடுமே. பரிசலில் அல்லது ஓடத்தில் அந்த சேற்றை தாண்டிவிடுமே. மரப்பலகை போட்டுக் கொண்டே வந்துவிடலாமே என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது அவருக்கு புரியவில்லை. ஓநாய்களை கொன்றுவிட்டேன் என்பதை மட்டும் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார். குதிரை ஏறி போய் வரலாம் என்றால் இந்த நேரத்தில் மயிலாப்பூரில் ஒரு வீரர்கூட இல்லை. வணிக குதிரைகள் தான் இருக்கின்றன. வணிகர்கள் பார்த்துவிட்டு வர போயிருக்கிறார்கள்.'' என்று பதட்டத்தோடு சொன்னான்.

இந்த நேரத்தில் சீராளன் இல்லையே என்று அவள் கவலைப்பட்டாள். என்ன செய்வது என்று திகைத்தாள். ஆனாலும் ஏதாவது செய்தாகவேண்டும். யாரைக் கேட்பது, அவள் உடனே வேளாளர்களை ஒன்று கூட்டினாள். வேளாளர்கள் ஒன்று கூடும் போது வணிகர்கள் தலைதெறிக்க ஓடிவந்தார்கள்.

''மிகப்பெரிய மேலைச்சாளுக்கியப்படை வருகிறது. முரட்டு குதிரையில் வில்லோடும், அம்போடும், ஈட்டிகளோடும் ஆட்கள்

வருகிறார்கள்.'' என்று சொல்ல, வேளாளர்கள் ஆயுதங்களை உருவிக் கொண்டார்கள்.

''ஓடு, காஞ்சிபுரத்திற்கு ஓடு, அவரிடம் செய்தி சொல். திருவொற்றியூருக்கு ஓடு. அங்கே ஏதேனும் படை இருந்தால் இந்தப் பக்கம் வரச்சொல். என்று அவள் ஆட்களை பிரித்து அனுப்பினாள் ஒட்ட வீரர்கள் மேலைச்சாளுக்கிய கொடியோடு உள்ளே நுழைந்தார்கள். கண்ணுக்கு தென்பட்டதை எல்லாம் அடித்து நொறுக்கினார்கள். ஆயுதம் எடுத்தவர்களை அம்பால் அடித்து வீழ்த்தினார்கள். விழுந்து சுருண்டவர்களை ஈட்டியால் குத்தி கொலை செய்தார்கள். முன்னேறினார்கள், வீட்டு வாசலில் நின்றார்கள். காவல்காரர்களை தலைமுடி பிடித்து இழுத்து ஓங்கி அடித்தார்கள்.

''எங்கே? இந்த மயிலாப்பூரின் தலைவன் எங்கே?'' என்று கேட்டார்கள். காஞ்சிபுரம் போயிருப்பதாக பதில் கிடைத்தது.

''கீழைச்சாளுக்கியம்தான் வெறிச்சோடிக் கிடக்கிறது என்றால் இது என்னடா தொண்டைநாடும் வெறிச்சோடி கிடக்கிறது'' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

''தலைவன்கூட இல்லாது இங்கு யார் ஆட்சி செய்வது?''

''என் தலைவி இருக்கிறாள். அவள் உத்தரவிட்டிருக்கிறாள். வெகு சீக்கிரத்தில் திருவொற்றியூரிலிருந்து படைகள் வரும். ஓடிப்போய் விடுங்கள்.'' அந்த காவல்காரன் சொல்ல, அவன் தலை துண்டாடப்பட்டது. அவர்கள் கோட்டை வாயில் இரத்தச் சேறாகியது.

ஒட்டர்களுக்கு கொலை செய்வது மிக எளிதாக இருந்தது. வேண்டாம் விட்டுவிடுங்கள் என்று சொன்னவரைக் கூட அவர்கள் இழுத்து வைத்து அடித்தார்கள். அடித்தபிறகு கொலை செய்தார்கள்.

''எதற்கு அடிக்கிறீர்கள், எதற்கு கொலை செய்கிறீர்கள்.'' என்று ஊர்மக்கள் கேட்டதற்கு, வலிக்க வேண்டும் என்று அடிக்கிறோம், இறக்க வேண்டும் என்று கொலை செய்கிறோம்'' என்று மேலைச் சாளுக்கிய மொழியில் பேசினார்கள்.

''தலைவி இருக்கிறாளாம். எனக்கு அந்த தலைவியை பார்க்க வேண்டுபோல் இருக்கிறது.'' ஒருவன் மார்பை வேகமாக சொரிந்து கொண்டான். அது காம விகாரமான காட்சியாக இருந்தது.

வீட்டைச் சுற்றியும் சில குதிரைகள் வந்தன. பதுங்கிப் பதுங்கி ஒருவன் முன்னே போனான்.

அவள் கிணற்று விளிம்பிலேயே நின்று கொண்டிருந் தாள். மெல்லத் திரும்பி வந்தாள்.

கட்டழகி, பெரும்கட்டழகி, அற்புதமாக இருக்கிறாள். தலைவா உனக்குத்தான் பொருத்தமாக இருக்கும்'' என்று வெறி ஏற்றினான். அவன் தொடை தட்டிக் கொண்டான். மெல்ல வளைய மாக முன்னேறினார்கள். அவர்களை பெண்கள் தடுத்தார்கள். அடிக்கப்பட்டார்கள். தலைமுடியை பிடித்து சுவரோடு மோதப் பட்டார்கள். அவன் இன்னும் முன் தொடர்ந்தான்.

அவள் கிணற்று கைப்பிடிசுவற்றில் ஏறி நின்றாள். அவ ளுக்கு அந்த கிணறுபற்றி தெரியும். பலமுறை அந்த கிணற் றில் குதித்திருக்கிறாள், குதித்து உறை என்று வளையமாக, வலப்பக்கம் நோண்டப் பட்டிருக்கும். அதற்குள் நுழைந்தால் அடுத்த கிணறுகளுக்கு போய் விடலாம், கழுத்தளவுதான் தண்ணீர் இருக்கும். தலை வெளியே நீட்டியபடி சுவாசித்து போய் விடலாம். மழைக்காலங்களில் தான் அந்த உறை மூழ்கும்படி இருக்கும். அப்படி இருக்கும்பொழுதும் அவள் நீச்சலடித்து போயிருக்கிறாள். என்ன செய்வது என்று யோசித்தாள். ஆட்கள் குதிரையில் ஏறி தடதடவென்று பாய்ந்துவர அவள் 'தடேர்' என்று உள்ளுக்குள் குதித்தாள். உறைக்குள் பதுங்கினாள். கழுத்தளவு நீரில் நின்று கொண்டாள்.

''பேரழகி என்று சொல்கிறார்களே, நீரில் நனைந்த பேரழகியை பார்க்க வேண்டுமே.'' அந்த தலைவனே கிணற்றில் இறங்கினான். உறை இருப்பதைக் கண்டுபிடித்தான்.

''அடி ஏய், இங்கு ஒளிந்து கொண்டிருக்கிறாயா. வா, வெளியே வந்து விடு, உனக்கு மன்னிப்பு தருகிறேன்'' என்று அவன் உரக்கச் சொன்னான்.

அவள் வாய் முழுவதும் நீர் நிரப்பித்தூ என்று அவன் முகத்தில் துப்பினாள். களிமண்ணை பிய்த்து முகத்தில் அடித் தாள். அவன் கண்கள் காயப்பட்டன. கோபமானான். மேலே ஏறி வந்தான், கொழுத்த பிராணிதான். ஆனால் இது நமக்கு அடங்காது. என்று புரிந்து கொண்டான்.

''அடேய். எல்லார் வீட்டிலிருந்தும் அம்மியும், உரலும், கற்களும் கொண்டு வாருங்கள். பாறைக்கற்களை கொண்டு வந்து

உள்ளே போடுங்கள். தண்ணீர் மேலே ஏறட்டும். மெல்ல மெல்ல சாகட்டும்.''

அவன் இரண்டு கிணறுகளிலும் தடேர் தடேர் என்று கருங்கற்களைப் போட தண்ணீர் மேலே ஏறியது. அவள் உறை கிணற்றின் நடுவில் நின்று கொண்டாள்.

மேலே நிலம். கீழே தண்ணீர், கழுத்து, முகவாய், உதடு, மூக்குநுனி என்று வந்தது. அவள் தலையை உயர்த்தி நிமிர்த்திக் கொண்டாள். மிகச்சிறிதளவே இடைவெளி இருந்தது. மேலும் கற்கள் போடப்பட்டன அவள் தண்ணீரை விழுங்கினாள். மூக்கால் இழுத்தாள். நுரையீரலில் தண்ணீர் நிரம்பியது. மூச்சு திணறியது. கை, கால்கள் துடித்தன. இறுக்க அவள் களி மண்ணை பற்றிக் கொண்டாள். மெல்ல அந்த உச்சிக் களிமண் ணில் 'சீராளா.' என்று எழுதினாள். உயிர் ஒன்றுகூடி நெஞ்சில் நின்றது. வலித்தது. கண்கள் இருண்டன. மெல்ல அவள் உயிர் பிரிந்தது. கற்பின் கனல் தண்ணீரில் மிதந்தது.

அவர்கள் ஓய்ந்து போனார்கள். திருவொற்றியூரிலிருந்து ஒரு படை கிளம்பிவிட்டது என்று தெரிந்து மறுபடியும் மயி லையை விட்டு நகர்ந்தார்கள். வேண்டுமென்ற பொருள்களை கொள்ளை அடித்து கொண்டார்கள். தனித்த குதிரையில் கட்டிக் கொண்டார்கள். கடற்கரை ஓரமாகவே கூவம் தாண்டினார்கள். கட்டுமரத்தின் மீது குதிரைகளை ஏற்றி நிற்கவைத்து மறுபக்கம் போய் இறங்கினார்கள். கொள்ளை அடித்த பொருள்களோடு வேகமாக வெளியேறினார்கள். போகும்போது கவனமாக மேலைச் சாளுக்கிய கொடியை அறுத்து கீழே வீசிவிட்டு ஓடினார்கள்.

கீழைச்சாளுக்கிய வீரர்களுக்கு எங்கிருந்து வந்தார்கள். எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. ஆனால் குதிரைகள் மீது பல்வேறு மூட்டைகள் இருப்பதை பார்த்துவிட்டு கொள்ளை அடிக்கப் பட்டிருக்கின்றது என்பதை புரிந்து கொண்டார்கள்.

மயிலாப்பூர் அவள்வீடு கொல்லைபக்கம் ஒன்று திரண் டது. மெல்ல கயிறு கட்டி கிணற்றுக்குள் இறங்கியது. உறைக் குள் இருந்த அவளை எட்டிப்பார்த்து, மெல்ல புடவை மிதப்பது தெரிந்து புடவையை இழுத்தது. அவள் பிணமாக உறையி லிருந்து வெளியே வந்தாள். கயிறு கட்டி மேலே தூக்கினார்கள். வயிறு நீரால் நிரம்பி இருந்தது. முதல் சிகிச்சை செய்து பார்த் தார்கள். இருதயத் துடிப்பு எப்போதோ நின்று போயிருந்தது.

வேறு வழியில்லை. அவர்கள் அந்தக் கொல்லைப்புறமே அவளை படுக்க வைத்து நெற்றியில் பெரிய குங்குமம் இட்டார்கள்.

அவள் தன் உடலுக்கு அருகே நின்று கொண்டாள்.

"இங்குதான் இறந்துபோனேன். சீராளா. இங்குதான் இறந்து போனேன். இந்த இடம்தான் நான் மரணமடைந்த இடம். சீராளா. உனக்காக நான் இங்கே உயிர்த் தியாகம் செய்தேன். எவனேனும் என்னைக் கைப்பற்றினால் என்னைத் தொட்டால் அது உனக்கு இழுக்கு. உனக்கு இழுக்கு என்றால் தொண்டை தேசத்திற்கு இழுக்கு. தொண்டை தேசத்திற்கு இழுக்கு என்றால் சோழ தேசத்திற்கு இழுக்கு இராஜேந்திர சோழருக்கு இழுக்கு. எனவே, யாருக்கும் இழுக்கு ஏற்படாமல் நானே மெல்ல மெல்ல மெல்ல மெல்ல ஒவ்வொரு விரற்கடையாய் தண்ணீர் மேலேறி வர அத்தனையும் அனுபவித்து, இறக்கப் போகிறோம் என்று தெரிந்து இறந்து போனேன். சீராளா போய் வருகிறேன்."

"இந்த மயிலை, திருவல்லிக்கேணியை நான் காப்பேன். உனக்காக நான் காத்தேன். தொடர்ந்து காவல் செய்வேன். இந்த மயிலை, திருவல்லிக்கேணி என்னுடைய பாதுகாப்பில் என்றும் இருக்கும். பூமி உள்ளவரை இருக்கும்" என்று அவள் உடல் அருகே நின்று சத்தியம் செய்தாள்.

அந்த சத்தியம் யாருக்கும் தெரியவில்லை. அவனுக்கு மட்டும் கனவாக ஏதோ வந்தது. மனைவியின் உடல் நிலை சரியில்லை என்று சொல்லப்பட்டது, அவன் வேகமாக திரும்பி வந்தான். அருகே வந்து நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதான். அவள் அவன் தலையைக் கோதினாள். நெற்றியில் முத்தமிட்டாள். ஒருமுறை ஒருமுறையாவது கூடியிருக்கலாம். ஒருமுறைக் கூட என்னை அவிழ்த்து பார்க்கவில்லை. என்னை அணைத்துக் கொள்ளவில்லை. வாயார முத்தமிடவில்லை. எப்பொழுதும் சோழம் சோழம் என்று இருந்து விட்டாய். அதனால் என்ன. என் புருஷனுக்கு வேலை முக்கியம். எனக்கு என் புருஷனுக்காக நான் மயிலை, திருவல்லிக்கேணியை நிச்சயம் காப்பேன். என்று மறுபடியும் அவன் முன்பு சபதம் செய்தான். அது அவனுக்கு தெரியவில்லை.

அவள் அந்த கிணற்றங்கரையிலேயே தகனம் செய்யப் பட்டாள். அஸ்திக்கலசம் எடுக்கப்பட்டது. அந்த கிணற்று கரையிலேயே அவள் அஸ்திகலசம் புதைக்கப்பட்டது. அதன் மீது படம் எடுத்து ஆடுகின்ற நாகம்போல ஒரு சிலை நிறுவப்பட்டது.

''அது அவள் உட்கார்ந்த இடமடா, கிழக்கு பார்த்தல்லவா கோவில் இருக்க வேண்டும். வடக்கு பார்த்து வைக்கிறாயே.''

''இல்லை. அவள் வடக்கு பார்த்துதானே இறந்தாள்.''

''சரி, வடக்கு பார்த்து ஒன்று வை. கிழக்கு பார்த்து ஒன்று வை,'' கிழக்கே பெண் என்று விஷயத்தை குறிப்பது போல கல்செதுக்கி அந்த கல்லுக்கு வெள்ளியில் தாலி கட்டி பூமியில் அழுத்தமாக பதித்தார்கள். அதற்கு மேலே கூரை வேய்ந்தார் கள். சுற்றிலும் தட்டி போட்டார்கள்.

''எனக்கு இந்த இடம் போதும். இந்த எளிமை போதும், எனக்கு மேலே விமானம் வேண்டாம். நான் வெளியே போய் மயிலையே காப்பாற்ற, திருவல்லிக்கேணியை பாதுகாக்க அடிக்கடி போக வேண்டியிருக்கும், விமானம் இருந்தால் வெளியே போக முடியாது. இந்த கூரை போதும், நான் போய்வர இதுதான் சௌகரியம்.'' அவள் கனவில் சொன்னாள். பலபேருக்கு அறி வித்தாள். அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி இவளுக்கு கோவில் இதுவே என்று தீர்மானித்தார்கள்.

தாமரைச்செல்வி என்ற பெயரை முண்டகக்கண்ணி என மாற்றினார்கள். அவளை குலதெய்வமாக அந்தப்பகுதி மக்கள் கொண்டாட ஆரம்பித்தார்கள். கற்புக்கரசியினுடைய அஸ்தி புதைக்கப்பட்ட இடம் புனிதமான இடம். அவள் காவல்காப்பது என்பது சத்தியம்.

* * *

அத்தியாயம்

33

திருமயிலையிலிருந்து திருக்கடல்மல்லை வரை சோழ தேசத்து வீரர்கள் பரவி இருந்தார்கள். மருந்தீஸ்வரர் கோவிலில் குதிரைப்படை ஓய்வெடுத்துக் கொண்டது. திருமயிலையில் இராஜேந்திரசோழருடைய மெய்க்காவல் படையும், தேர்ப்படையும் வலம் வந்தன. திருவிடந்தை நித்யபெருமாள் கோவிலினுள், திருவிடந்தை கிராமத்திலும் யானைகள் நின்றிருந்தன. கடலைக் கண்டு மிரண்ட யானைகள் பிறகு இறங்கி கும்மாளம் போட்டன.

ஒரு வயல் முழுவதும் இருந்த கரும்புகளை யானைகளுக்கென்று திருவிடந்தை கிராம மக்கள் கொடுத்தார்கள். ஒவ்வொரு சதய நட்சத்திரத்தின் போதும் கடலோடிகள் மாமன்னர் இராஜராஜருக்கு அவர்கள் விழா எடுப்பதை இராஜேந்திரருக்கு சுட்டிக் காட்டினார்கள். இராஜேந்திரர் தன் பங்காக இருபத்தைந்து கழஞ்சு பொன் கொடுக்க, ஆரவாரம் செய்தார்கள்.

திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோவிலில் வீரமா தேவிக்காக வேண்டிக் கொண்டார். அரிசியும், பருப்பும் கொடுத்தார். நித்யபடி அமுதுக்கு நிலங்களை வாங்கி கோவிலுக்கு எழுதி வைத்தார். அதை கல்வெட்டிலும் பதிந்துக்கொள்ளச் சொன்னார். திருமயிலைக்கு வந்து நின்றார்.

''இது கோட்டையா, கோவிலா.'' அலைகடல் சீறியடிக்கின்ற கோவிலைப்பார்த்து அதிசயித்தார். உள்ளுக்குள்ளே போய் கபாலி அருகே மனமுருகி நின்றார்.

''ஏன் திருமயிலையில் காபாலிகம்.'' விளக்கம் கேட்டார்.

''திருமயிலை வணிகர்கள் நிறைந்த இடம். தரைவழி வணிகர்களே அதிகம். அந்த வணிகர்கள் தாங்கள் காட்டுப்பகுதிகளுக்கும், வெவ்வேறு ஊர்களுக்கும் பயணம் செய்யும்போது கண்ணடி படாமல் இருக்கவும், பில்லி, சூனிய வகைகள் தாக்காமல் இருக்கவும் காபாலிகர்களை அணுகுவார்கள். அவர்கள் கண்ணேறு கழிப்பதில் வல்லவர்கள். அதேநேரம் பில்லி, சூனியத்திலிருந்து

காப்பாற்றவும் மந்திரங்கள் செய்வார்கள். ஆனால் அதெல்லாம் பழங்காலம், இப்பொழுது ஆகம விதியின் படிதான் கோவில் நடந்து கொண்டிருக்கிறது. காபாலிகர்கள் வடக்கே போய்விட்டார்கள்.'' என்று பதில் சொல்லப்பட்டது.

அங்கம்பூம்பாவை கதை சொல்லப்பட்டது,

சிவநேசச் செட்டியார் என்பவர் மயிலையின் எல்லையில் வாழ்ந்து வர அவருடைய மகள் திருஞானசம்பந்தரையே நினைத்துக் கொண்டு அவர் பதிகங்களையே பாடிக் கொண்டிருக்க, அவரையே திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்ப, ஒருநாள் பாம்பு கடித்து இறந்தாள். சிவநேசத் செட்டியார் அவளை தகனம் செய்து. அஸ்தியை வைத்தார். அந்தப் பக்கம் திருஞானசம்பந்தர் வரும்பொழுது தன் கதையை சொல்லி அழுதார்.

''இதற்காக அழுவானேன். உங்கள் மகளை நான் திருப்பிக் கொண்டு வந்து தருகிறேன்.'' என்று பதிகம்பாடி பூம்பாவையை அஸ்திக்கலசத்திலிருந்து ஞானசம்பந்தர் உயிர்ப்பித்தார். எப்படி இறந்தாரோ அதேபோல அதே ஆடை அணிகலன்களுடன் பூம்பாவை எழுந்து வந்தாள்.

என்மகளை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஞானசம்பந்தரிடம் சிவநேசச் செட்டியார் வேண்ட,

''அவளை மறுபடியும் உருவாக்கியது நான். எனவே அவளுக்கு தகப்பன் போல் ஆவேன், அவள் இங்கு சிவத்தொண்டு செய்து வரட்டும். என்று சொல்ல, கன்னிமாடம் அமைத்து கடைசி வரை சிவத்தொண்டு செய்து கொண்டிருந்தாள் அங்கம் பூம்பாவை'' என்று கதை சொல்லப்பட்டது.

''இவ்வளவு அற்புதமான மகான்கள் நாம் வாழும் காலத்தில் இல்லையே. இருக்கிறார்களா. நமக்குத்தான் தெரியவில்லையா'' என்று வியப்போடு வந்தியத்தேவரை கேட்க, வந்தித்தேவரும் ஆமாம் என்று தலை அசைத்தார்.

அருண்மொழிப்பட்டன் ஏதோ சொல்லவந்து சட்டென்று நிறுத்திக் கொண்டான். அதை இராஜேந்திரர் கவனித்துவிட்டார்.

''சொல் அருண்மொழி, என்ன விஷயம் சொல்ல வந்தாய்.''

''ஒரு உயிரை பிழைக்க வைத்தவர்கள் இருக்கிறார்களா எனக்குத் தெரியாது. ஆனால் தேசத்திற்காக உயிர் கொடுத்தவர்கள்

பலர் உண்டு. அதில் வினோதமாக உயிர் கொடுத்தவர்கள் உண்டு. மறவர்கள் மட்டுமே ஒரு தேசத்தை காக்கிறார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இல்லை. நல்ல ஜாதிப் பெண்களும், உத்தம ஸ்தீரிகளும் நமது எல்லையை காக்கிறார் கள். அப்படி ஒரு சம்பவம் இங்கு நிகழ்ந்திருக்கிறது.'' சொல் லும்போது அருண்மொழியின் கண்கள் கலங்கின.

''என்ன விஷயம் அருண்மொழி.'' என்று கேட்க, தாமரைச் செல்வியின் மரணம் சொல்லப்பட்டது.

''மேலைச்சாளுக்கியர் வந்து கொன்றார்ககளா?

நூறு வீரர்கள் வந்து கொள்ளை அடித்தார்களா, என்ன இது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் மனதில். அப்படி சட்டென்று மயிலைக்குள் வரமுடியாதே. வருவதென்றால் பாடி வழியாக அல்லவா வரவேண்டும். திருவொற்றியூர் தாண்டியல் லவா வரவேண்டும்.''

''இல்லை. இந்தப் பக்கம் ஒரு தவறு நடந்துவிட்டது.''

''என்ன?''

''சேறாக இருந்த சதுப்பு நிலத்தை ஓநாய்களை கொல்ல வேண்டும் என்று ஒரு அந்தணர் தீயிட்டு கொளுத்தி விட பரிசலை அங்கேயே விட்டுவிட அந்த பரிசலில் ஏறி வீரர்கள் உள்ளே வந்துவிட்டார்கள்.''

''என்ன நடந்தது? விவரமாகச் சொல்.''

''அவன் வேகமாக நடந்தவற்றை சுருக்கமாகச் சொன்னான்.

''முதலில் அந்த பெண்ணுடைய நடுகல்லை போய் பார்க் கலாம்.'' அவர் குதிரையை முன்னே செலுத்த மெய்க்காவல் வீரர் கள் சுற்றிக் கொண்டார்கள். அருண்மொழி அவர்களுக்கு வழி காட்டினான்.

கலைந்த தலையுடன் மேலே ஒரு துண்டும், இடுப்பில் ஒரு வேட்டியும் கட்டிக் கொண்டு துக்கமாக சீராளன் உட்கார்ந்து கொண்டிருந்தான். அருண்மொழி இறங்கி கைகளை அகலமாக விரித்து அவனைத் தழுவிக் கொண்டான்.

''கேள்விப்பட்டேன் சீராளா, கேள்விப்பட்டேன். மன்னர் உன்னை பார்க்க வந்து கொண்டிருக்கிறார்'' என்று சொல்ல,

அடுத்த சில நொடிகளில் அந்த இடம் பரபரப்பாகியது, பெண்கள் வாய்விட்டு அலறினார்கள்.

''எங்கள் குலக்கொழுந்து போய்விட்டதய்யா, எங்கள் குலக் கொழுந்தை சூறையாடி விட்டார்கள் அய்யா. திருமயிலையில் பலபேரை கொன்றுவிட்டு போய்விட்டார்களய்யா'' என்றெல் லாம் குழறினார்கள்.

ஜனங்களுடைய குமுறலை அமைதியாக இராஜேந்திர சோழர் வேடிக்கை பார்த்தார். கதறும்வரை கதறட்டும் என்று காத்திருந்தார். வந்தியத்தேவர் கை உயர்த்த, மெல்ல மெல்ல கூட்டம் அமைதியாயிற்று.

''பழிக்கு பழி. இரத்தத்திற்கு இரத்தம், உயிருக்கு உயிர். நிச்சயம் வாங்கப்படும். உள்ளே நுழைந்தது மேலைச்சாளுக் கியம் அல்ல. ஒட்ட தேசத்தவர்கள். மேலைச்சாளுக்கியர் போல் உள்ளே நுழைந்தார்கள். ஒட்டதேசம் வரைப் போய் ஒட்ட அறுத்து விட்டு வருவேன். பேடிகளை சவுக்கால் விளாசிவிட்டு வருவேன். அவர்கள் பெண்டுகளை கூந்தல் பிடித்து இழுத்து வருவேன்.

உயிருக்கு உயிர், அடிக்கு அடி, உதைக்கு உதை, இரத்தத் திற்கு இரத்தம், பழிவாங்காமல் இராஜேந்திர சோழன் ஊர் திரும்ப மாட்டான். இது சத்தியம், என் தாய் நிசும்ப சூதனியின் மீது சத்தியம். என் தாய் வானவன் மாதேவியின் மீது சத்தியம். என் தந்தை இராஜராஜர் மீது சத்தியம்.'' என்று உரக்கச் சொன்னார்.

கூட்டம் குலைவை இட்டது,

''சீராளா, நீ இங்கு இருந்தால் இதையே நினைத்து வருத்தப் பட்டுக் கொண்டிருப்பாய். உன்னைப் போல திறமை மிக்கவர் எனக்கு அருகே இருக்க வேண்டும். வழிநெடுக பல்வேறு இடங் களில் அரிசி வாங்கி படையினருக்கு உணவு கொடுக்கும் வேலை உன்னுடையது. நீயும் கங்கை வரை போய் வர வேண் டும், அங்குபோய் உன்மனைவியின் மனக்கேதம் தீருவதற்கு நீராடி வழிபாடு செய்ய வேண்டும். வழியில் உள்ள எல்லா நதி களிலும் அவள் பெயர் சொல்லி நீர் வார்க்க வேண்டும். அவ ளுடைய தாபத்தை தணிவிக்கும்'' என்று இராஜேந்திரர் சொல்ல, அவன் 'உத்தரவு' என்றான்.

அடுத்த கால் நாழிகையில் கரைபோட்ட காழகத்துடன் இடுப்பில் மூன்றாம் துண்டுடன், மேலே சால்வையுடன், இடுப்பில் வாளுடன், கையில் குத்தீட்டியுடன் குதிரை ஏறி நின்றான்.

அவன் தந்தை பெரிய வேளாளர், மயிலை, திருவல்லிக் கேணியின் பாதுகாப்பை ஏற்பதாக உறுதி அளித்தார். அவன் தம்பி துணை இருப்பதாகச் சொன்னான்.

''எல்லாவற்றிக்கும் மேல் உன்மனைவி துணை இருக்கிறா ளடா உரக்கச் சொல்ல,. எல்லோரும் மறுபடியும் குலைவை இட்டார்கள். அவள் சந்தோஷமானாள். எகிறி குதித்தாள்.

'ஊர் ஊராக வரப்போகிறாயா, ஆறுகளில் · ஸ்நானம் செய்யப் போகிறாயா. எனக்காக நீர் இறைக்கப் போகிறாயா, நீ நீர் ஊற்றி கீழே இறைக்கும் முன்பு அதை நான் குடித்துவிடு வேன். உன் கையில் நீர் குடிப்பது எவ்வளவு சந்தோஷம்: அவள் ஆனந்தமயமானாள்.

இராஜேந்திர சோழர். எந்த இடத்தில் ஓநாய்கள் அடித்து சொல்லப்பட்டனவோ அந்த இடத்திற்கு போய் நின்றார்.

கருவேலங்காடு எரிந்துவிட்டது. மறுபடியும் ஓநாய்கள் வந்து குடிபுகும். எனவே கருவேலங்காடாக இல்லாமல் இந்த இடத்தில் பாதை போட்டு விடலாம். மூன்று நாட்களில் பாதை தயாராக வேண்டும். நமது வீரர்களே இதை செய்ய வேண்டும். மயிலைக்கும், திருவல்லிக் கேணிக்கும் இந்த பாதை நம்முடைய அன்பளிப்பாக இருக்கும். பாதைக்கு மறுபக்கம். ஆற்றுக்கு அந்தப்புறம் ஒரு மிகச் சிறந்த பாடி வீடு அமைய வேண்டும். திருவொற்றியூரை தலைமை இடமாக வைத்து, இதை துணை படை நிலையமாக வைத்து திருவல்லிக்கேணி, மயிலாப்பூரை காவல் காக்க வேண்டும்.

மறுபடியும் மயிலாப்பூரை சுற்றி வந்தார்.

''இவர்தான் அந்த அந்தணர்.'' திண்ணையில் இருந்தவரை இழுத்து எதிரே நிற்க வைத்தார்கள்.

கண்கொட்டாமல் அவரையே பார்த்தார்.

''நான் நல்லதுதான் செய்தேன். எவ்வளவு ஓநாய்கள் தெரி யுமா.'' எந்த கேள்வியும் கேட்காமல் அவரே பதில் சொன்னார், இராஜேந்திரசோழர் அவரையே பார்த்தார்.

''நூற்றுக்கணக்கான ஓநாய்கள் இதோ இந்தத் தெருவில் வரும். உங்கள் குதிரை வீரர்களைப் போல கம்பீரமாகப் போகும் நூறு ஓநாய்கள்'' என்று சொல்ல,

இராஜேந்திர சோழர் மெல்ல முகம் சுளித்தார். வந்தியத் தேவர் பல் கடித்தார். அருண்மொழிப்பட்டன் உக்கிரமானான்.

''பேசத்தெரியாது பேசுகிறாரா, அல்லது பேசத் தெரிந்து வேண்டுமென்றே பேசுகிறாரா. அந்தணரை யாரும் எதுவும் செய்யமாட்டார்கள் என்ற துணிச்சலா. இராஜேந்திர சோழரைப் பற்றி ஒன்றும் அறியாத முட்டாளாக இருக்கிறானே'' என்று நொந்து கொண்டார்.

''இந்த அந்தணருக்கு எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன?''

''எனக்கு இருக்கிறதய்யா, கண்ணுக்கு எட்டிய வரையில் நஞ்சையும், புஞ்சையும். உண்மையில் இந்த மயிலையில் அதிக மான நிலச்சொத்து உடையவன் நான் மட்டும்தான். அதனால் தான் என்னை தலைவராக நியமிக்க வேண்டும் என்று சொல் கிறேன், குடவோலைத் திட்டம் அப்படித்தானே சொல்கிறது.'' என்று சொல்ல,

''போதும் நிறுத்து,'' என்று வந்தியத்தேவர், ஒற்றை வார்த் தையில் ஏகவசனத்தில் அடக்கினார். அந்தணர் மிரண்டார்.

''இவருடைய எல்லா சொத்துக்களையும் பிடுங்கி மயிலை கபாலீஸ்வரத்துக்கு சொந்தமாக எழுதி வைத்து அதில் வருகின்ற அத்தனை நெல்லும் மயிலாப்பூர் பொதுச்சபைக்கு கணக்கு கொடுத்து மயிலாப்பூர் பொதுச் சபை அதில்பாதி தங்களுடைய உபயோகத்திற்கும், மீதியை கபாலீஸ்வரத்திற்கும் கொடுக்கட் டும். இந்த அந்தணரை சேர தேசத்திற்கு நாடு கடத்துங்கள். குடும்பத்தோடு கடத்துங்கள்.''

அவர் மனைவி 'ஓ'வென்று அழுது ஓடிவந்தாள்.

''சேரதேசம் வரை நான் எப்படி போக முடியும், எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனவே.''

''என்ன செய்யச் சொல்கிறாய். உன் புருஷன் விதி எப்ப டியோ அப்படித்தான் உன் விதியும்.''

''இல்லை. தேவையில்லை, நான் மயிலையிலேயே இருக்க விரும்புகின்றேன்.''

''இல்லை. உன் புருஷனோடு போக முடியாதென்றால் உன் புருஷன் தனியாகப் போகட்டும். நீ தஞ்சையை நோக்கி போக வேண்டும். இந்த ஊரில் நீ இருப்பது உனக்கும் கேவலம்.

உன் புருஷனுக்கும் கேவலம், ஒரு கேவலமான இடத்தில் உன் குழந்தைகள் வளர வேண்டாம், தஞ்சையை நோக்கிப் போய் அங்குள்ள அந்தணர்களிடம் உன் பிள்ளைகளை ஒப்படைத்து அவர்களை வேதம் படிக்கச் சொல்,

அருண்மொழி இதற்குண்டான அறிமுக ஓலையை கொடுத்து விடு. என் முத்திரையையும், உன் முத்திரையையும் இட்டுவிடு'' என்று சொல்ல, அவள் புருஷனை விட்டு விலகி நின்றாள்.

அவள் புருஷன் நாலா பக்கமும் விழித்துப் பார்க்க, ஊர் கைகொட்டிச் சிரித்தது,

''மூன்று வீரர்கள் இவரை அழைத்துப்போகட்டும். அவர்கள் குதிரையில் வரட்டும், இவர் பெண் குதிரையில் ஏறி கேரளத் திற்கு போகட்டும். இனி திருமயிலை பக்கமே இவர் வரக் கூடாது. வயலே இல்லாத, சோறே விளையாத கேரளத்தில் போய் தேங்காயும், இலந்தைப்பழமும் தின்றுகொண்டிருக்கட் டும்'' என்று கட்டளை இட்டார்.

அந்த அந்தணனை குதிரையில் ஏற்றினார்கள். அவர் பெண்மணி வீட்டிலுள்ள பொருள்களை எடுத்துக்கொண்டு மாட்டு வண்டியில் கிளம்பினாள். ஒரு பெரிய தொந்தரவு மயிலையை விட்டுநீங்கியது.

''அடேயப்பா, என்ன ஏகடியும் பேசுவான். என்ன எகிறிப் பேசுவான். அவன் நிலமையைப் பார்த்தாயா. ஊர் முழுவதும் சபித்துக் கொண்டிருப்பானே இப்பொழுது அவனுக்கு கிடைத்த சாபத்தைப் பார்த்தாயா.'' ஊர்மக்கள் விதம்விதமாக பேசி கலைந் தார்கள்.

''பிரம்பால் அடித்து என்ன பயன், மறுபடியும் அது புத்தியை காட்டிற்று, இப்பொழுது நாடு கடத்தினால் இந்தப்பக்கமே அந்த நாய் வராது.'' என்றெல்லாம் ஆத்திரத்தோடு பேசினார்கள்.

''நல்ல தீர்ப்பு.'' என்று கொண்டாடினார்கள்.

''பாவம் அந்தப் பெண்மணி.'' என்று பரிதாபப்பட்டார்கள்.

''அவளும் கடைசிநேரம் புருஷனை கை கழுவி விட்டாள் பார். அதுதான் சரி. மோசமான புருஷனுக்கு அதுதான் நல்ல முடிவு'' என்றும் திருமயிலை பேசியது.

கூவத்தின் நடுவே கல்தூண்கள் வைத்து கட்டடம் எழுப்பினார்கள். அதன்மீது மரக்கட்டை பதித்தார்கள். மரக்கட்டையின் மீது காரை ஊற்றினார்கள். பிறகு கருங்கல் பொடியை தூவினார்கள். இரண்டு புறமும் சுவர் எழுப்பினார்கள். அதிக உயரம் இல்லாத அதே நேரம் தரைப்பாலம் போல் இல்லாத ஒரு பாலத்தை விரைவாக சோழதேசத்து வீரர்கள் கட்டி முடித்தார்கள்.

''இது திருவல்லிக்கேணி, மயிலைக்கு என் அன்பான பரிசு. இங்குள்ள அந்தணர்களும், வணிகர்களும் எங்களுக்கு வயிறார சோறு போட்டீர்கள், எந்த சுணக்கமும் இல்லாமல் முகமலர்ச்சியாக ஆதரித்தீர்கள். இராஜேந்திரன் இதற்கு நன்றியோடு இருப்பான். உங்கள் கபாலீஸ்வரர் என் உள்ளத்தை கொள்ளை கொண்டு விட்டார். அங்கம்பூம்பாவை கதை இன்னும் நெஞ்சில் மிதந்து கொண்டிருக்கிறது. அதையெல்லாம் விட, தாமரைச் செல்வி, அவளுடைய கதை நெஞ்சை உருக்குகிறது. தொடர்ந்து பலகாத தூரம், பல மாதங்கள் நான் பயணப்பட வேண்டியிருக்கும். தாமரைச்செல்வி என்னோடு வருவாள் என்று நினைக்கிறேன், சோழ தேசம் வெற்றி பெற துணையிருப்பாள் என்று நினைக்கிறேன். அவளை நன்கு பேணி கவனித்து வாருங்கள். தினமும் உபசாரம் செய்யுங்கள். தினமும் சக்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யுங்கள். தாமரைச் செல்வியை கொண்டாட, கொண்டாட திருமயிலை சிறப்பாக இருக்கும். திருவல்லிக்கேணி வளமோடு வாழும்.

இராஜேந்திரன் காலத்தில் ஜாதிகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளக் கூடாது. நான்முக்கியமா. நீ முக்கியாமா, நான் உயர்வா, நீ உயர்வா என்ற பேச்செல்லாம் எடுபடாது. இங்கு அந்தணர்களும் முக்கியம். பஞ்சமர்களும் முக்கியம். பஞ்சமர்கள் இல்லாமல் இந்த படைஎடுப்பு முழுமை பெறுமா. அவர்கள் துணை இல்லாமல் ஜெயித்துவிட முடியுமா. எனவே இவர் முக்கியம். அவர் முக்கியம் என்ற முட்டாள்தனமான பேச்சுக்கு ஒருபொழுதும் செவி கொடுக்காதீர்கள். அப்படி யார் பேசினாலும் தட்டி அடக்குங்கள்.

திருமயிலை வேளாளர் வசமேஇருக்கும். வணிகர்கள் ஊருக்கு போய்வருவதால், இங்கு ஊரிலேயே இருக்கின்ற இங்கு சீராக நிர்வாகம் செய்ய வேளாளர்கள்தான் சிறப்பானவர்கள். வணிகர்கள் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.

அந்தணர்கள் அவர்களுக்கு பலமாக இருக்க வேண்டும். இந்த ஊர் ஒற்றுமையாக இருக்கிறது என்பதை திரும்பி வரும்போது நான் கேள்விப்பட வேண்டும். திருமயிலையில் படகுகள் நிற்க, நாவாய்கள் நிற்க இடம் ஏற்படுத்த வேண்டும். கூவம் ஆறு தாண்டியதும் கடல் உட்பக்கமாக குவிந்து வருகிறது. எனவே நாவாய்கள் நிறுத்த அந்த இடம் நன்றாக இருக்கும். நாங்கள் வருவதற்குள் அந்த இடத்தை ஆழம் செய்து நாவாய் கள் வந்து தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நாவாய் களிலிருந்து சாமான்கள் இறக்குவதற்கு மரக்கலன்கள் கட்டி யிருக்க வேண்டும். இதை வேளாளர்களும் வணிகர்களும் திட்ட மிட்டு செயல்படுத்த வேண்டும்.

இதற்குண்டான செலவை அரசாங்கம் ஏற்கும். இப்போ தைக்கு ஐநூறு கழஞ்சுகள் முன்பணமாக தரப்படும்'' என்று அருண்மொழியிடம் சைகை செய்தார். அருண்மொழி ஓலை நாயகத்திடம் கண்காட்டி பேச, காசு கை மாறியது.

மாமன்னர் இராஜேந்திரர் திருமயிலையிலிருந்து நீங்கி திருவொற்றியூர் போனார். எல்லாப் படைகளும் திருமயிலையை வலம்வந்து போயின, காபாலியை தரிசனம் செய்தன. போட்ட பாதையை கண்கொட்டாமல் பார்த்தன.

''திருமயிலைக்கு அன்பளிப்பா இந்த பாதை. ஒரு சேனாதிபதி வியப்போடு கேட்டார்.

''ஏன்?''

''மன்னர் அப்படித்தான் சொன்னார்.''

''இல்லை. அங்கே துறைமுகம். இங்கே நாடு. அந்த துறை முகத்திற்கும், ஊருக்கும் இடையே சேறு இருந்தது, அந்த சேறை சமன்படுத்தி உயரமாக கருங்கல் தூக்கி ஒரு பாலம் அமைத்து விட்டார். எனவே எந்தப் பொருள் நாவாயில் வந்தாலும் இறக்கி உடனடியாக பாலம் தாண்டி திருவல்லிக்கேணி வழியாக மயிலைக்கு வந்து விடும். மயிலையின் கடற்கரை ஓரமாகவும் மாமன்னர் சாலைப்போடச் சொல்வார், அல்லது நீங்களாகப் போடுவது நல்லது.'' என்று சேனாதிபதி சொல்ல, வணிகர்கள் 'அடடே' என்று வியந்தார்கள்.

''இராஜேந்திரரா கொக்கா. ஒரே நேரத்தில் பல வேலைகள் செய்பவராயிற்றே. ஒரு கல்லில் பல மாங்காய், அவர் அந்தக்

கடல் உள்வாங்கி இருப்பதை எப்பொழுது கவனித்தார், எப்படி கவனித்தார். எவ்வளவு திறமைசாலியாக இருந்தால் இப்படி ஒரு கணக்கு செய்ய முடியும்'' என்று ஆச்சரியப்பட்டார்கள்.

''இத்தனை வீரர்கள் இல்லை என்றால் இவ்வளவு விரைவாக இந்தப் பாலம் நடைபெற்று இருக்குமா, இந்த வீரர்களுக்கு வேலை கொடுத்தது போலவும் ஆயிற்று, பாலம் கட்டியது போலவும் ஆயிற்று'' என்று கொண்டாடினார்கள்.

''அவர் சொன்னது போல தாமரைச்செல்வியை கொண்டாடுவோம். தாமரைச்செல்விக்கு நிவேதனம் செய்வோம், அவள் ஊரை காக்கும்படி செய்வோம்'' என்று சொல்லி தினமும் தாமரைச் செல்விக்கு சக்கரைப்பொங்கல் நைவேத்யம் செய்தார்கள். சாரி சாரியாக வந்து பார்த்தார்கள், அந்தணர்கள், வேளாளர்கள், வணிகர்கள் எந்த வித்யாசமும் இல்லாமல் எல்லோரும் வந்தார்கள்.

''யார் பூஜை செய்வது? அந்தணரா. வேளாளரின் சமாதியல்லவா. எனவே வேளாளர்களே வேலை செய்யட்டும்'' என்று அந்தணர்கள் விட்டுக்கொடுத்தார்கள்.

வேளாளர்கள் மிகக் கம்பீரமாக அந்த பூஜை முறையை அவர்களிடம் கற்று செய்யத் துவங்கினார்கள்.

திருவொற்றியூர் படை வீரர்களால் நிரம்பியது. இராஜேந்திர சோழருக்கு கம்பீரமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. எக்காளங்கள் இடைவிடாது முழங்கின. முரசுகள் அதிர்ந்தன. கோவிலுக்குள் இராஜேந்திரசோழர் கூப்பிய கரங்களோடு நுழைந்தார்.

''ஓய்வெடுத்துக்கொண்ட பிறகு சாமி தரிசனமா. சாமி தரிசனத்திற்குப் பிறகு ஓய்வெடுத்துக் கொள்கிறீர்ளா.''

''ஓய்வு எங்கே எடுப்பது?''

''இங்கேயே. ஆயிரங்கால் மண்டபத்தில் துணி கட்டி வைத்திருக்கிறோம், நிம்மதியாகத் தூங்கலாம்.'' என்று சொல்ல,

''முதலில் கை, கால் கழுவி சாமி தரிசனம் செய்துவிடுவேன்'' என்று சொன்னார்.

உள்ளுக்குள்ளே போய் புற்றாலான சிவலிங்கத்தை வணங்கினார். எண்ணையும், சந்தனமும் வாசற்படியில் வைத்தார். உற்சவருக்கு பால் அபிஷேகம் செய்யச் சொன்னார். எல்லாம் முடிந்த பிறகு வெளியே வந்தார், மண்டபத்தில் அமர்ந்தார்.

புளியோதரையும், பொங்கலும், எலுமிச்சைப்பழம் சாதமும் வயிறாரச் சாப்பிட்டார், உடம்பு அடித்து போட்டது போல வலித்தது. கை, கால் நீட்டி படுத்தார், மண்டபத்தை சற்றி துணிகள் கட்டப்பட்டிருந்தன. உள்ளுக்குள் பஞ்சு மெத்தை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, தலையணைகள் உயரமாக வைக்கப்பட்டிருந்தன. சற்று நேரம் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். தாமரைச்செல்வி பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். மெல்ல கால் நீட்டினார்.

அந்த ஊர் தேவதாசிப் பெண்கள் வந்து வணக்கம் சொன்னார்கள். கையில் பெரிய மயிலிறகு விசிறி வைத்திருந்தார்கள்.

''தூங்குங்கள் மன்னா'' என்று சொல்லி விசிறினார்கள். ஒரு பெண் மெல்ல கால் பிடித்துவிட்டாள். இராஜேந்திர சோழர் அயர்ந்து உறங்கினார்.

கனவில் தாமரைச்செல்வி வந்தாள். செக்கச் செவேல் என்ற உடை உடுத்தியிருந்தாள்.

''உனக்கு என்ன வேண்டும் சொல் தருகிறேன். உனக்கு என்ன வேண்டும் சொல்'' என்று கேட்டு, திகைப்போடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''எனக்கு என்ன வேண்டுமென்று தெரியவில்லை. என் தந்தை ஆசைப்பட்டு செய்ய நினைத்து, செய்ய முடியாத காரியங்களை நான் செய்தாக வேண்டும். பாண்டியன் மணிமுடியை, செங்கோலை அவரால் கொண்டுவர முடியவில்லை. நான் ரோஹணத்தில் நுழைந்து அதிரடியாய் அவைகளை மீட்டேன். கங்கைக்கு போகவேண்டும் என்பது என் தந்தையார் விருப்பம். அதையும் செய்ய வேண்டும். மிகச் சிறந்த முறையில் சிவனுக்கு கோவில் எழுப்ப வேண்டும். சோழ தேசத்தைப் பற்றி உலகம் அழியும் வரையில் பேச வேண்டும். இது ஒரு தனித்த நாகரீகம் என்று கொண்டாடப் பட வேண்டும்.

இவையெல்லாம் ஆசைகளா, கனவுகளா, இல்லை வெறும் அபிப்ராயங்களா இதற்கு என்ன செய்ய வேண்டும் எதுவும் தெரியவில்லை. கால் போன போக்கில் போய்க் கொண்டிருக்கிறேன். காற்றடித்த வேகத்தில் அலையும் சருகு போல் இருக்கிறேன். உள்ளே செய்யவேண்டும் என்ற ஆத்திரம் இருக்கிறது. ஆனால் செய்யத் தெரியவில்லையோ என்ற ஏக்கமும் இருக்கிறது. நான்

இரண்டுகெட்டானாக இருக்கிறேன், என்னை ஒன்றாக்கு, ஒரு நிலைப்படுத்து.''

தாமரைச்செல்வி வாய்விட்டு சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?

''உலகத்தில் எல்லா மனிதர்களின் நிலையும் இதுவே, சொல்லும், செயலும் ஒன்றாக இருப்பவர்கள் மிகக் குறைவு, உனக்கு என்ன வேண்டும் என்று தெரிகிறது. நான் ஏற்பாடு செய்கிறேன்.'' அவள் எழுந்தாள். காணாமல் போனாள். அவர் திடுக்கிட்டு விழித்தார்.

''எங்கே அவள்?'' என்று விசிறுகின்ற தாதியைப் பார்த்து கேட்டார்.

''கால்பிடித்து விட்டுக் கொண்டிருந்தவள்தானே, இப்போது தான் வெளியே போனாள். நான் பிடித்து விடவா.''

அவருக்கு உள்ளே சோர்வாக இருந்தது. வெறுமே வானம் பார்த்து உட்கார்ந்திருந்தார்.

நான் ஏற்பாடு செய்கிறேன். என்ற வார்த்தை மீண்டும் ஞாபகம் வந்தது. என்ன ஏற்பாடு செய்யப் போகிறாள்.

''வந்தியத் தேவர் எங்கே?''

''அயர்ந்து தூங்குகிறார்.''

''அருண்மொழிப்பட்டன்.''

''சிவன் சன்னதியில் கண்மூடி உட்கார்ந்திருக்கிறார்.''

''அருண்மொழிப்பட்டன் தூங்கவில்லையா.''

''தூங்க முயற்சித்தார் தூக்கம் வரவில்லையாம். எனவே எழுந்து முகம் கழுவிக் கொண்டு சிவன் சன்னதிக்கு போய்விட்டார். இன்று பிற்பகல் சிவன் சன்னதி மூடவில்லை. எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் வருவீர்கள் என்பதால் கதவு திறந்தே இருக்கிறது.''

அவர் எழுந்து உடைகளை சரி செய்து கொள்ள, மெய்க் காவல் வீரர்கள் வரிசை ஆனார்கள்.

''அதிகம் பேர் வேண்டாம். இரண்டு பேர் போதும். கோவிலைச் சுற்றி வரப்போகிறேன். அவ்வளவே.'' அவர் மெல்ல நடந்து கோவிலில் உள்ள மகிழ மரத்தடியில் நின்றார். பிறகு

வேறு பக்கம் போய் சுந்தரமூர்த்தி நாயனார், சங்கிலி நாச்சியார் என்று எழுதப்பட்ட சன்னதியின் முன் நின்று கை கூப்பினார்.

பின்னால் ஆள் அசையும் சத்தம் கேட்டது. அருண்மொழிப் பட்டன் கை கூப்பினான்.

''நன்றாக ஓய்வெடுத்தீர்களா?''

''நன்றாக ஓய்வெடுத்தேன். நீ தூங்கவில்லையாமே.''

''தூக்கம் வரவில்லை.''

''ஏன் உடம்பில் அலுப்பு இல்லையா.''

''அலுப்பு இருக்கிறது. ஆனாலும் இரவு நேரம் தூங்கிக் கொள்ளலாம். பகலில் விழிப்போடு இருக்கலாம் என்று தோன்றியது.''

''எதற்காக?''

''எப்போதோ ஒருமுறை இந்த சிவன் சன்னதிக்கு வருகிறோம். அதை தூங்கிக் கழிப்பானேன். இறைவனை பார்த்துக் கொண்டிருப்போம் என்று தோன்றியது.''

''அடடே, இது எனக்கு தோன்றவில்லையே.''

''எல்லோருக்கும். ஒருபோல எதுவும் தோன்றாது, ஒவ்வொருவருடைய மன வளர்ச்சிக்கு ஏற்ப விஷயங்கள் மாறும்.''

என்னுடையது வளர்ச்சியா, தாழ்ச்சியா.''

''வளர்ச்சி, தாழ்ச்சி என்று குறிப்பிட முடியாது. நீங்கள் ஒரு பக்கம். நான் ஒரு பக்கம். வெவ்வேறு கிளைகளாக பிரிந்திருக்கிறோம். எனக்குள் இந்தக் கோவில் மிகப் பெரிய அதிர்வை ஏற்படுத்துகிறது.''

''என்னவிதமான அதிர்வு?''

''நான் சுந்தரரைப் பற்றி அதிகம் எண்ணிக் கொண்டிருந்தேன்.''

''வா, வா. நானும் அதையேதான் எண்ணிக் கொண்டிருந்தேன். சுந்தரர் பற்றித்தான் எனக்கு திரும்பத் திரும்ப எண்ணங்கள் வந்து கொண்டிருக்கிறது.

கோவிலுக்கு போய் நின்று பார்ப்பதை விட, சன்னதியில் நிற்பதை விட இந்த மகிழ மரத்தடியில் நிற்கலாம் என்று தோன்றியது. இங்குதானே இறைவன் நின்றான்.

உன்னுடைய கேள்வி என்ன? சுந்தரரைப் பற்றி.'' மன்னர் அருண்மொழிப்பட்டரை கேட்டார். அருண்மொழிப்பட்டன் கண்மூடி இருந்தான்.

''உங்களுடைய கேள்வி என்ன. அதிலிருந்து துவங்குவோம்'' என்றான். மன்னர் யோசித்தார்.

''இது என்ன? இந்துமத அடிப்படை விஷயமே எனக்கு புரியவில்லை. இந்த ஊரில் ஒரு பெண்ணை பார்க்கிறார். ஏற்கனவே திருமணமானவர். காதலித்து கைப்பிடித்தவர். இங்கு வந்து இந்தப் பெண்ணை பார்த்து, 'எனக்கு திருமணம் செய்து வை' என்று இறைவனிடம் கேட்கிறார்.

இறைவன் அந்த அம்மாள் கனவில் போய் இவரை திருமணம் செய்து கொள் என்று சொல்ல, அவர்கள் நெகிழ்ந்து ஓடி வருகிறார்கள். ஆனால் திருவாரூரில் பரவை இருக்கிறாரே, அங்கு போய்விடுவாரே என் கதி என்ன என்று பயப்படுகிறார்கள்.

'அவனை சத்தியம் செய்யச் சொல். அவன் உன்னை விட்டுப் போகமாட்டான்' என்கிறார். அவர் சத்தியம் செய்வதற்கு சரி என்று ஒத்துக்கொள்கிறார். அதேநேரம் இறைவனிடம் நான் சத்தியம் செய்வது உன்னுடைய சன்னதியில். அங்கே நீ இருக்காதே. மகிழ மரத்தடிக்கு போய்விடு என்று சொல்கிறார். இறைவரும் சரி என்கிறார்.

ஆனால் அந்தம்மாள் சங்கிலியார் கனவில் போய் அவன் இறைவன் சன்னதியில் சத்தியம் செய்கிறேன் என்பான். நீ ஒத்துக்கொள்ளாதே. மகிழ மரத்தடியில் சத்தியம் செய் என்று கேள். நான் அங்குதான் இருப்பேன் என்று சொல்ல,

சங்கிலியாரின் தோழிகள் 'இவ்வளவு பெரிய விஷயத்தை சிவன் சன்னதியில் செய்யலாகாது. வெளியே வந்து செய்து கொடுத்தால் போதும்.'

''எங்கே வெளியே.''

''மகிழ மரத்தடியில்'' என்று சொல்கிறார்கள். அவருக்கு சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை. ஆனாலும் இறைவன் பார்த்துக் கொள்வான் என்று துணிந்து சத்தியம் செய்கிறார்.

'சோழ தேசத்தின் சக்கரவர்த்தியாக இருக்கின்ற நான் இந்த நேரம் படை எடுத்து மேலை சாளுக்கியம் போகின்ற நான் என்ன செய்ய வேண்டும். முற்றிலும் சிவனிடம் ஒப்படைத்து விட வேண்டுமா?''

''ஆமாம். முற்றிலும் சிவனிடம் ஒப்படைத்து விட வேண்டும்.''

''எப்படி அருண்மொழி. நான் திட்டமிடாமல், நான் யோசனை செய்யாமல் எப்படி இதை இறைவனிடம் ஒப் படைப்பது.''

''அதனால்தான் நீங்கள் இராஜேந்திர சோழர். அதனால் தான் அவர் சுந்தரர். அவருடைய பாட்டு ஒன்று உங்களுக்கு சொல்லி காண்பிக்கட்டுமா.

மீளா அடிமை உமக்கே ஆளாய் பிறரை வேண்டாதே
மூளா தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்தேபோம் நீரே.

சுந்தரர் எப்படி இருக்கிறார் பார்த்தீர்களா.

மீளா அடிமை உமக்கே ஆளாய் என்கிறார். என்றேனும் சிறிது நேரமாவது இறைவனுக்கு ஆட்பட்டிருக்கிறீர்களா. அப்படி ஆட்பட்டவரால்தான் வாழ்ந்தே போம் நீரே என்று கோபித்துக் கொள்ள முடியும். நீர் சௌக்கியமாய் இரும். நான் அவஸ்தைப் பட்டுக் கொள்கிறேன் என்று நொந்து கொள்ள முடியும்.

நீங்களும் நானும் இறைவனிடமிருந்து பிரிந்து இருக் கிறோம். நான் செய்கிறேன், நீ துணைக்கு வா என்பது நம் எண்ணம். இதனால்தான் இறைவன் வாராது போவானோ என்கிற பயம் இருக்கிறது.

சுந்தரர் பயமற்றவர். கொடு, என்ன கேட்டாலும் கொடு என்கிறார். அருண்மொழி பேச இராஜேந்திரர் மௌனமானார்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள், அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டார். அவருக்கு பல தகவல்கள் தரப்பட்டன. ஒட்ட தேசத்தில் அவரை சந்திக்க சோழ தேசத்து உளவாளிகள் வணிகர் வேடத்தில் வந்தார்கள். அவர்களிடம் ஊர் நிலைமையை விளக் கினார்.

கீழைச்சாளுக்கியத்திலிருந்து மாடுகள் ஓட்டி ஒட்டதேசத்தில் விற்பது தான் வேலையாம். மாமன்னர் இராஜேந்திரரிடம் எப்படியாவது இந்த தகவல் போய் சேர்ந்துவிடும் என்று அவன் உறுதி சொன்னான்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் மருவூர் கூட்டத்தோடும் தஞ்சாவூர் கூட்டத்தோடும் நிம்மதியாக பயணமானார். பல விஷ்ணு தலங்களை தரிசித்துக் கொண்டு கோசல தேசத்திற்குள் பிரவேசித்தார்.

* * *

அத்தியாயம்

34

திருவொற்றியூரிலிருந்து விரைவாகக் கிளம்பிய அந்தப் படை புலிக்காடு தாண்டி, பெரிய ஏரிகளைத் தாண்டி கடற்கரை ஓரமாகவே நடந்தது. இடதுபுறம் அடர்ந்த வனங்கள் இருந்தன. வலதுபுறம் கடல் சீறிக் கொண்டிருந்தது. ஒரு குறிப்பிட்ட தூரம் போனதும் எதிரே கீழைச்சாளுக்கியப் படையை அந்த வீரர்கள் சந்தித்தார்கள். வாளை உருவினார்கள். வாள்முதுகுப் படையை எதிர்க்க எண்ணமில்லாத கீழைச்சாளுக்கிய வீரர்கள் குதிரை யிலிருந்து இறங்கி கைகூப்பி வரவேற்றார்கள்.

அந்த வாள்முதுகுப் படையின் தலைவர்கள் நடுப்பக்கத் திலிருந்து முன்பக்கம் விரைந்து வந்தார்கள்.

'உங்களில் தலைவன் யார்' என்று கேட்டார்கள். ஒருவன் மட்டும் முன்னே வந்து நிற்க, அவனை மட்டும் தனியே அழைத் துக் கொண்டு மற்றவர்களை விலகி இருக்கச் சொன்னார்கள்.

''எங்கிருந்து வருகிறீர்கள்.''

''வேங்கியிலிருந்து.''

''ஏன் இங்கு வந்தீர்கள்.''

''வேங்கியில் செய்வதற்கு ஒன்றுமில்லை.''

''என்ன அர்த்தம் இதற்கு.''

''வேங்கியில் மன்னர் என்று யாரும் இல்லை. விமலா தித்தர் இறந்து போனார்.''

''தெரியும். பிறகு.''

''ஜெயசிம்மன் அவர்கள் எங்களை தலைமை ஏற்று நடத்திப் போவதாகச் சொல்லி பாதி தூரம் வந்தார். பிறகு திரும்ப வடமேற்கு நோக்கி ஓடிவிட்டார்.''

''அந்தப்பையன். விஷ்ணுவர்தன விஜயாதித்தன்.''

''அவன் கோட்டைக் கதவின் பின்பக்கம் திறந்துகொண்டு வெளியேறி வடக்கு நோக்கி ஒட்டதேசம் நோக்கி ஓடிவிட்டான்

அவனை பூட்டி விட்டுத்தான் இங்கு வந்திருக்கிறார். ஆனால் அவன் சாமர்த்தியமாக தப்பிவிட்டான்.''

''ஆக இரண்டு பேருமே இப்போது அங்கு இல்லையா.''

''அங்கு தலைவர் என்று யாருமே இல்லை. இராஜராஜ நரேந்திரன் இருந்திருந்தால் இந்நேரம் அழகாக முடிசூடியிருக்கலாம். ஜனங்கள் அவர் இல்லாது போய்விட்டாரே என்று மிகவும் வருத்தப்படுகிறார்கள். இன்றைய பொழுதில் கீழைச்சாளுக்கியம் தத்தளிப்பது போல வேறு எந்த நேரமும் தத்தளித்ததில்லை. வயதானவர்கள் விக்கி, விக்கி அழுகிறார்களய்யா. அனாதையாகப் போனோமே என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுகிறார்கள்.

'இளம் பையன்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு குழு ஒட்டதேசம் போகலாம் என்று கிளம்பியது. நான் அதட்டி நிற்க வைத்தேன். 'இது என்னுடைய மண், உன்னுடைய தேசம். ஒருபொழுதும் இதைவிட்டு நீங்காதே' என்று அவர்களுக்கு அறிவுரைச் சொன்னேன்.

''மாமன்னர் இராஜேந்திரர் வந்தால் பிரம்பால் அடித்தே கொல்லுவார். அதற்கு ஒட்டதேசம் போய்விடுவதே நல்லது என்று நினைக்கிறார்கள்.''

''வீரர்கள் தவிர மற்ற வகுப்பினருடைய நிலை என்ன.''

''வேலை என்று ஒன்றும் இல்லை. அரிசி விலை, பருப்பு விலை எல்லாம் மிக அதிகமாக விற்கிறது. எல்லாம் பதுக்கப்பட்டிருக்கிறது. எந்த நேரம் யார் பிடுங்குவார்கள் என்று தெரியவில்லை. பொதுமக்கள் கீரைகளையும், கிழங்குகளையும் பறித்து தின்கிறார்கள். காட்டுக்குள்ளேயே போய் மான் வேட்டையாடி அந்தக் கறியை சாப்பிடுகிறார்கள். உடல் நோவுக்கு மருந்தில்லை. அதுதான் கொடுமையாக இருக்கிறது. இந்த முறை மழை கடுமை. அதனால் அங்கங்கே தலைவலி, ஜுரம், மூக்கடைப்பு என்று ஜனங்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பச்சிலைகளை மென்று தின்கிறார்கள். சரியான வைத்தியம் இல்லை.''

''இந்த நேரம் இராஜராஜ நரேந்திரன் அங்கு இருந்தால் நிச்சயம் எங்களுக்கு தெம்பாக இருக்கும்.''

தள்ளி நின்று கேட்டுக் கொண்டிருந்த இராஜராஜ பிரம்ம ராயனுடைய கன்னத்து தசைகள் புடைத்தன. கை நரம்புகள் முறுக்கேறின. குதிரையை விலக்கிப் போய் அதில் உட்கார்ந்த படி தனியே சிந்தித்தார். அந்த கீழைச்சாளுக்கிய தலைவனை நகர்த்திவிட்டு வாள்முதுகு படைகள் தொடர்ந்து வேங்கியின் உள்ளே நகர்ந்தது.

இராஜ நரேந்திரன் குதிரையை ஓட்டிக்கொண்டு முன் பக்கம் போனான். பிரம்மராயருக்கும், மிலாடுடையாருக்கும் நடுவே தன் குதிரையை நிறுத்திக் கொண்டான்.

"உங்களோடு சிறிது பேச வேண்டும்."

"என்ன திடீரென்று உன் இடத்தை விட்டு வந்துவிட்டாய். பின்னால் பாதுகாப்பு வேண்டாமா."

"அங்கு உத்தம சோழ கோன் இருக்கிறார். நான் பாதுகாப் புக்கு பின்னால் இருப்பதை விட, முன்னால் இருப்பது நல்லது என்று நினைக்கிறேன்."

"என்ன திடீரென்று. என்ன ஆயிற்று உனக்கு."

"இது என்னுடைய தேசம்."

"புரிகிறது. நான் மறுக்கவே இல்லை."

"இந்த தேசத்தில் என் மக்கள் என்னை எதிர்பார்க்கிறார்கள்."

"அதையும் கேள்விப்பட்டோம்."

"அப்படியிருக்கையில் இந்தப் படையை நான் நடத்திக் கொண்டு போய் வேங்கியை கைப்பற்றினால்தான் சிறப்பு. அது அல்லாது நீங்கள் படை நடத்திக் கொண்டு போய் எனக்கு பிச்சை இட்டது போல இதைச் செய்தீர்கள் என்றால் என்னை ஜனங்கள் மதிக்க மாட்டார்கள்.

இராஜ நரேந்திரன் படை எடுத்து வந்தார். வேங்கியை தன்வசப்படுத்திக் கொண்டார் என்ற பெயர் எனக்கு வேண்டும். எனவே நீங்கள் இருவரும் பின்னால் வாருங்கள். உத்தமசோழ கோன் என்னோடு வரட்டும். நான் இந்தப் படையை நடத்திப் போகிறேன்."

"ஆனால் இது உன் படை அல்லவே. இராஜேந்திர சோழ னுடைய படை. எங்களுக்கு கட்டுப்பட்ட படை. உங்களுக்குக் கட்டுப்படாது."

''கட்டுப்படும்படியாக நீங்கள் ஆணையிட வேண்டும்.''

''இல்லை. இராஜேந்திர சோழன்தான் இந்த மாறுதலை சொல்ல முடியும். நான் சொல்ல முடியாது. இந்தப் படை என் வசம் ஒப்படைத்திருக்கிறது. என் உயிர் போகும் வரை இந்தப் படைக்கு நான்தான் பொறுப்பு. நீங்கள் பொறுப்பாக முடியாது.''

''அப்படியானால் நான் எதிர்ப் பக்கம் போய் நீங்கள் உள்ளே வராது உங்களைத் தடுப்பேன்.''

''நரேந்திரா, முட்டாள்தனம் செய்யாதே.''

''வேறு வழியில்லை. வேங்கிக்குள் வேறு ஒரு படை வரக் கூடாது. இராஜேந்திரருடைய படை இங்கு வர வேண்டுமென் றால் நான் தலைமை ஏற்றுத்தான் வரவேண்டும். நீங்களாக வர முடியாது. நீங்களாக வந்தால் நீங்கள் எனக்கு எதிரியாவீர்கள். நான்தான் உள்ளே வர வேண்டுமென்றால் இந்தப்படை என் நட்புப்படை. என்னுடைய நட்புப் படையோடு நான் உள்ளே வந்து வேங்கியை கைப்பற்றினேன் என்ற பெயர் எனக்கு வேண்டும்.''

அவர்கள் கை [illegible]ர்த்தினார்கள். குதிரை வீரர்கள் நின்றார் கள். இறங்கச் சொன்னார்கள். குதிரை வீரர்கள் இறங்கி களைப் பாறினார்கள்

இராஜராஜ நரேந்திரனை அழைத்துக் கொண்டு உத்தம சோழ மிலாடுடையார் முன்னே நடந்தார்.

''முற்றிலும் முட்டாள்தனமான ஒரு வேலையை நீங்கள் செய்ய முற்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய நிலைமை எனக்கு புரிந்தாலும் இதற்கு சரி என்று ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமை என்னிடம் இல்லை. எனக்கு இட்ட கட்டளை வேங்கியை கைப்பற்றச் சொல்லி. வேங்கியை கைப்பற்றச் செல்லும்போது நீங்களும் உடனிருந்து உதவுமாறு உங்களை இராஜேந்திரர் கேட்டுக்கொண்டார். உடனிருந்து உதவுமாறு மறுபடி சொல்கிறேன். நீங்கள் உடனிருந்துதான் உதவ வேண் டுமே தவிர நீங்கள் இந்தப் படையை முன்னே அழைத்துப் போக முடியாது.''

''அப்படியானால் ஒன்று செய்யுங்கள். எனக்கு இந்தப் படை கீழ்ப்படிய வேண்டாம். உங்களுக்கு கீழ்ப்படிந்ததாகவே

இருக்கட்டும். ஆனால் உங்களிடமிருந்து பத்து கஜம் தொலை வில் நான் பயணப்படுவேன். புலிக்கொடியை ஏந்தி வேங்கிக் கொடியை ஏந்தி என்னோடு இரண்டு வீரர்கள் வரவேண்டும். அவர்கள் இருவரையும் எனக்கு மெய்க்காப்பாளராக நீங்கள் நிய மிக்க வேண்டும். நாங்கள் மூவரும் முன்னே சென்று வேங்கியை கைப்பற்றப் போகிறோம் என்று மிகுந்த முழக்கத்தோடு முன்னே செல்வோம்.''

''இது நாடகம் போலல்லவா இருக்கிறது.''

''நாடகம்தான். இருக்கட்டுமே. எனக்கு நல்லதல்லவா.''

உத்தம சோழ மிலாடுடையார் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்க, இராஜராஜ பிரம்மராயர் தொண்டையை கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''மிலாடுடையாரே, இந்தப் பையன் பேசுவதில் ஒரு நியாயம் இருக்கிறது. தான் முன்னே செல்ல வேண்டும் என்ற ஆசையில் ஒரு அர்த்தம் இருக்கிறது. இப்பொழுது வேங்கியை கைப்பற்றுவது என்பது பெரிய போருக்கு பிறகு வரப் போவ தில்லை. இவர் பத்திரமாக முன்னே போகட்டும். காலியாக இருந்த ஒரு மரப் பொந்தில் ஒரு பறவை போய் உட்காருவது போல யாருமே இல்லாத வேங்கியில் இவர் போய் உட்காரப் போகிறார். நாம் பின்னே போய் துணைக்கு இருக்கப் போகிறோம். அவரை முன்னே அனுப்பலாம். வீணாக விவாதம் செய்து கொண் டிருப்பதில் எந்த லாபமும் இல்லை.

இவர் நம்மை விட்டு நீங்கி இராஜேந்திரரிடம் போனால் இராஜேந்திரர் கோபித்துக் கொள்ளக்கூடும். நரேந்திரா, இப் பொழுது எங்களிடம் என்ன பேசினாயோ, இதை ஒரு மேடை யில் ஏறி, அல்லது ஒரு பாறையில் ஏறி வாள்முதுகுப்படை வீரர் களிடம் நீ பேச வேண்டும்.

இந்தப் படையை நான் நடத்திச் செல்லப்போகிறேன். எனக்குத் துணையாக மிலாடுடையாரும், பிரம்மராயரும் வரு வார்கள். நீங்களும் துணையாக வர வேண்டும். இது என் தேசம். நீங்கள் முன்னே போய் நான் பின்னால் வந்தால் நன்றாக இருக் காது. எனவே எனக்கு உதவி செய்யுமாறு கேட்டுக் கொள் கிறேன் என்று கைகூப்பி கேட்க வேண்டும். அப்போது இந்த வீரர்கள் என்ன சொல்வார்களோ அதை நீங்கள் ஏற்க வேண்டும். உங்கள் தலைமையை எங்கள் வீரர்கள் ஏற்க மறுக்கலாம்.''

''மறுக்கக்கூடாது. மறுக்கக் கூடாதபடி நீங்கள்தான் பேச வேண்டும்.'' இராஜ நரேந்திரன் வேகமாகப் பேசினான்.

''சரி, எங்களுக்கு சம்மதம் என்று தெரிவித்து விடுகிறோம். அந்த வீரர்கள் ஏதேனும் சொல்வார்கள். என்ன சொன்னாலும் கைகூப்பி அவர்களை வேண்டிக்கொள். அதுதான் நல்லது. முரட்டுத்தனமாக பேசாதே. உன்னை வாள்முதுகு படைவீரர்கள் ஏற்காது போகலாம். ஏனெனில் உனக்கு இருப்பது உடைவாள். இடுப்பில் தொங்கவிட்டிருக்கிறாய். எங்களுடைய வழி வேறு. எங்களுடைய கத்திகள் இருக்கும் இடம் வேறு. எங்கள் போர் பயிற்சி வேறு. நீ வெறுமே இந்த பயிற்சிகள் எதுவும் இல்லாது எங்களை தலைமை தாங்குவது என்பது சரியாக இருக்காது. என் வீரர்கள் சிரிக்கலாம், முறைக்கலாம், நான் சமாதானப்படுத்து கிறேன்.

உன்னுடைய ஆதங்கத்தில் ஒரு நியாயம் இருப்பதால் இதற்கு அனுமதிக்கிறேன். மிலாடுடையாரே இது என்னுடைய எண்ணம். உங்களுடைய எண்ணம் என்ன.''

''பிரம்மராயரே, இது உங்கள் படை. நீங்கள் சரி என்று ஒத்துக்கொண்டால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.''

அவன் பாறை மீது ஏறினான். வீரர்களை கைதட்டி அழைத் தான். வீரர்கள் அவன்மீது அலட்சியமாக இருந்தார்கள்.

''நானே இந்தப் படைக்கு தலைமை தாங்கப் போகிறேன்'' என்றான்.

''முதுகில் வாள் இருப்பவர்கள்தான் எங்கள் படைக்கு தலைமை தாங்க முடியும். புல் வெட்டும் கத்தியை இடுப்பில் வைத்துக் கொண்டு எங்களை தலைமை தாங்குகிறேன் என்று சொல்கிறீரே. என்ன நியாயம் இது?'' ஒரு வீரன் கேட்க,

நரேந்திரன் அவனை முறைத்தான்.

மிலாடுடையார் மெல்ல கை உயர்த்தினார்.

''இந்த தேசம் அவருடையது. அவரால் இந்த தேசம் பிடிக்கப் பட வேண்டும் என்று விரும்புகிறார். நாம் உள்ளே போவது இராஜேந்திரருடைய கட்டளையின் பேரில். இராஜேந்திரர் உத்தரவு நரேந்திரருக்கு உதவி செய்ய வேண்டும் என்பது. இந்த உதவியை இன்னும் கொஞ்சம் அதிகமாக நரேந்திரர் எதிர்

பார்க்கிறார். நரேந்திரர் முன்னே போக நாம் பின்னே தொடர வேண்டும். போகட்டுமே. பெயர் வாங்கிக் கொள்ளட்டுமே. ஏனெனில் அங்கு பெரும்படை ஒன்று இருப்பின் தாக்குதல் என்று ஒன்று இருப்பின் நாம் பயப்பட வேண்டும். வேங்கி ஆள் அரவம் அற்று இருக்கிறது. கோட்டைக் கதவுகள் திறந்து இருக் கின்றன.

எனவே, இவரே தன் கொடியோடு கம்பீரமாய் முன்னே போய் அமர்ந்து கொள்ளட்டும். நாம் வேங்கியை காவலும் காப்போம்'' என்று சொல்ல,

வீரர்கள் அரை மனதுடன் சரி என்று ஒத்துக்கொண்டார்கள்.

நாலு கோல் தூரம் புலிக்கொடியோடும் கீழைச்சாளுக்கிய கொடியோடும் இராஜராஜ நரேந்திரன் முன்னே போனான். அவன் அதிக வேகம் போகாதபடியும், அதிக தொலைவு போகாத படியும் கூட வந்த வீரர்கள் மடக்கி அழுத்திக் கொண்டார்கள். சரியான இடைவெளியில் அவனை போக அனுமதித்தார்கள்.

ஜெயசிம்மன் மான்ய கேடயத்தை அடையும் முன்பு நடுவ ழியில் அவன் தளபதியை சந்தித்தான். கால வம்சத்தை சேர்ந்த கங்கை யாதவ் ஓடிவந்து தன் மன்னனை தழுவிக் கொண்டான்.

''நீங்கள் இந்த நேரம் எதற்காக வேங்கியை விட்டு வந்தீர் கள். விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை ஏன் விட்டு விட்டீர்கள். அவனையும் அழைத்து வந்திருக்கலாமே. வேகமாகப் பல கேள்விகள் கேட்டான்.

''யாதவா, கொஞ்சம் பொறு. அந்த கிறுக்கன் பயந்து போய் ஒட்டர்களிடம் ஒண்டிக் கொண்டான். மான்ய கேடயத்தை தாக்குவதற்காக இரண்டாகப் பிரித்து இராஜேந்திர சோழர் ஒன்பது லட்சம் வீரர்களோடு வருகிறார். ஆறு லட்சம் வீரர்கள் வடமேற்காக நுழைந்து பிறகு வடகிழக்காக திரும்புகிறார்கள். மூன்று லட்சம் வீரர்கள் திருமயிலையில் கொண்டாட்டமாக மூன்று நாட்கள் தங்கியிருக்கிறார்கள். எனவே மான்ய கேட யத்தை காப்பது என் கடமை என்று நான் இந்தப் பக்கம் திரும்பி விட்டேன்.''

மான்ய கேடயத்தை காப்பது என் பொறுப்பல்லவா. நீங்கள் ஏன் பதறுகிறீர்கள். இது மிகுந்த நல்ல நேரம். வேங்கியை நாம் கைப்பற்ற வேண்டிய நேரம். வேங்கியை நம்முடைய தேசம்

என்று உறுதிப்படுத்த வேண்டிய நேரம். நீங்கள் அங்கிருந்து வந்தது பிசகு.''

''அப்படியானால் ஒன்று செய் யாதவா.''

''சொல்லுங்கள்.''

''நீ வேங்கியை பாதுகாத்துக் கொள். நான் மான்ய கேடயம் போகிறேன். மான்ய கேடயம் பற்றிய கவலை எனக்கு இருக் கிறது. இரட்டைபாடியில் உள்ள சிற்றரசர்களுக்கு தகவல் சொல்லி விட வேண்டும். அவர்களை தயாராக இருக்க வைக்க வேண் டும். மான்ய கேடயத்தை நோக்கி இராஜேந்திரர் வருகிற பொழுது அங்கேயே வெட்டி கொன்றுவிட வேண்டும். நீ வேங்கியை பார்த்துக் கொள்'' என்று சொல்ல,

கங்கையாதவ் அதற்கு சம்மதித்தான்.

கங்கையாதவ் மாபெரும் வீரன். சோழ தேசம் கைப்பற்றிய இடங்களையெல்லாம் அவன் முன்னேறி கைப்பற்றியிருக் கிறான். சோழ தேசம் புலிக்கொடியை வெட்டி எறிந்துவிட்டு தன்னுடைய கொடியை பறக்க விட்டிருக்கிறான்.

''உனக்கு யார் வேண்டுமோ எடுத்துக்கொள்'' என்று ஜெய சிம்மன் சொல்ல, மாரசிம்மா என்கிற தளபதியை மட்டும் தன் னோடு அழைத்துக் கொண்டான். அசூகி, புலிசராசா, ஜெயகேசி, ஏராயா என்கிற மற்ற தளபதிகள் ஜெயசிம்மனோடு மான்ய கேடயம் நோக்கிப் பயணப்பட்டார்கள்.

இரண்டாம் ஜெயசிம்மன் மான்ய கேடயத்தை நெருங்கு வதற்கு முன்பாகவே கங்கை யாதவ் வேங்கிக்குள் நுழைந்து எக்காளமிட்டு உள்ளுக்குள் தன்னுடைய படைகளை சரியாக நிறுவினார். கீழைச்சாளுக்கியப்படை எங்கே என்று கேட்டு எஞ்சியவர்களை திரட்டி வாசலில் முன்பு வைத்தார்.

கோட்டையின் மீது மேலைச்சாளுக்கியப்படை கொடி பறந்தது.

வாள் முதுகுப்படை மெல்ல மெல்ல கிழக்கு கடற்கரை ஓரமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும் இராஜராஜ நரேந் திரன் அதற்கு தலைமை தாங்கி வருகிறான் என்றும் அவனுக்கு செய்திகள் இரண்டாம் நாள் சொல்லப்பட்டன.

''வாள்முதுகுப்படையா. இது சரியான நேரம். அம்பெய்து கொன்றுவிடலாம். வில் வீரர்களை முன்னே நிறுத்து. குதிரை

யில் ஏறச் சொல். தொலைதூரத்தில் பார்த்த உடனேயே சரமாரி யாக அம்பு விடச்சொல். நூற்றுக்கணக்கான வீரர்கள் எதற்கும் அஞ்சாமல் இடைவிடாது அம்பு தொடுத்து வாள்முதுகு படை யினரை நெருங்கினால்தானே வெட்டுவார்கள். நெருங்குவதற்கு முன்பே போட்டு தீர்த்துவிடலாம்'' என்று உத்தரவிட்டான். உற்சாகப்படுத்தினான்.

ஒரு அம்புக்கு ஒரு சோழ வீரன். ஒரு சோழ வீரனை கொண்டு வந்தால் உனக்கு ஐந்து பொன் காசு தருகிறேன் என்று சொன்னான். கீழைச்சாளுக்கியம் கஜானாவைத் திறந்து காசு களை அள்ளிக் கொண்டான்.

இராஜராஜ நரேந்திரன் தலைமை ஏற்றுப் போய்க் கொண் டிருக்கிறான் என்ற செய்தி இராஜேந்திரருக்கு திருவொற்றி யூரில் சொல்லப்பட்டது. அவர் திடுக்கிட்டார். ''என்ன முட்டாள் தனம். அவனை யார் தலைமை ஏற்கச் சொன்னது.''

''எவ்வளவு சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை. தானே போக வேண்டும். இல்லையெனில் எதிர்த்து நின்று வாள் முதுகுப் படையை தாக்குவேன். கீழைச்சாளுக்கியத்தின் மீது படை எடுத்து வந்ததாக ஒற்றை வீரனாக அடிப்பேன் என்றெல்லாம் சொன்னார். வேறு வழியின்றி இராஜராஜ பிரம்மராயர் ஒப்புக் கொண்டார்'' என்று சொல்ல, அவர் தலையில் அடித்துக் கொண்டார்.

''என் தங்கையின் திருட்டுத்தனம் அப்படியே அவனிடம் இருக்கிறது. அடக்கமாக இருக்க தெரியவில்லை. அரையன் இராஜராஜன், உடனே கிளம்பு. மூன்று லட்சம் வீரர்களோடு எங்கும் நிற்காமல் நேரே போய் வாள்முதுகுப்படை வீரர்களை சந்தித்து அவர்களுக்கு பக்கபலமாக இரு. பிறகு வேங்கியில் நுழை.

யார் படையை நடத்துவது.

ஒழிந்து போகட்டும். அவனே நடத்திப் போகட்டும். ஆனால் அவனுக்கு பாதுகாப்பாக இருங்கள். அவன் மிக முக்கியம். அவன் எங்கேனும் மாட்டினால் இழுத்து பின்பக்கம் தள்ளிவிடுங்கள்.''

அரையன் இராஜராஜன் வேகமாக செயல்படுத்தினார். முன்னே குதிரை வீரர்கள்ள அனுப்பினார். அடுத்தபடி தேர்களை அனுப்பினார். பிறகு யானைகளை வரிசையாக வரச் சொன்னார்.

மூன்று லட்சம் வீரர்கள் கொஞ்சமும் ஓய்வெடுக்காமல் மிக விரைவாக கீழைச்சாளுக்கியம் நோக்கி நகர்ந்தார்கள். கீழைச் சாளுக்கியம் நோக்கி அரையன் இராஜராஜன் வந்து கொண்டிருக் கிறார் என்ற செய்தி வாள் முதுகுப்படை வீரர்களுக்கு எட்டியது.

பிரம்மராயர் சந்தோஷமடைந்தார். மிலாடுடையார் 'நல்லது நல்லது' என்று ஆரவாரித்தார். ''அவர்கள் வந்து சேர்ந்ததும் படை எடுப்பு நடத்துவோம். அதுவரை வேங்கியின் எல்லை யில் இருப்போம்'' என்று சொல்லி வேங்கியின் எல்லையில் கூடாரம் அடித்து தங்கினார்கள். ஒன்றரை நாளில் அரையன் இராஜராஜன் வந்துவிடுவான் என்று சொல்லப்பட்டது. அந்த ஒன்றரை நாளுக்காக காத்திருந்தார்கள்.

இரவு நேரம் சுற்றி வீரர்கள் காவல் இருக்க தீப்பந்தங்கள் எரிய உத்தமசோழ மிலாடுடையார் கூடாரத்திற்குள் அயர்ந்து படுத்துக் கொண்டிருந்தார். வழக்கம் போல அவருக்கு கால் குடைச்சல் ஏற்பட்டது. இரண்டு கால்களிலும் பலத்த காயங்கள் இருந்ததால் நரம்புகள் கிழிக்கப்பட்டதால் அவருக்கு வலி அதிகம் இருந்தது. தைலம் தடவி உருவி விட்டார்கள். அவர் வலி மறக்க புகை போட்டார்கள்.

என் மூலிகை இது. எனக்கும் மயக்கம் வரும்போல் இருக் கிறது.'' இராஜராஜ பிரம்மராயர் மகனைக் கேட்டார்.

தூங்குங்கள் அப்பா. இன்னும் ஒன்றரை நாள் ஓய்வு இருக் கிறதல்லவா என்று அவன் புகையை மட்டுப்படுத்தினான். ஆனாலும் அந்தப் புகையை கொஞ்சம் இராஜராஜ பிரம்மராயர் சுவாசித்தார். கண் இழுத்தது. படுத்துக் கொண்டார். இராஜராஜ நரேந்திரன் எல்லோருக்கும் முன்னால் தனித்த கூடாரத்தில் புலிக்கொடி பறக்க அதற்குக் கீழே கட்டில் போட்டு தூங்கினான். ஒரு வீரனை கவரி வீசச் சொன்னான்.

அவர்கள் படுத்து உறங்குகிறார்கள் என்ற செய்தி கங்கை யாதவுக்கு கிடைத்தது. எடுத்தவுடனேயே அடித்தால் என்ன. அவர்கள் வரும்வரை ஏன் காத்திருக்க வேண்டும். கீழைச்சாளுக் கியத்தில் நுழைந்துவிட்டார்கள் அல்லவா. வேங்கிக்கு வரும் வரை ஏன் நிற்க வேண்டும். எதற்கு கோட்டைக்கு வரும்வரை காத்திருக்க வேண்டும். கிளம்புங்கள்.'' அவன் நூறு வீரர்களோடு கிளம்பினான். அவன் அதிகம் ஓசையெழாது அவர்கள் வாள்முதுகுப்

படை இருக்கும் இடம்நோக்கி வந்தார்கள். அரைவட்டமாக சுற்றி நின்றுகொண்டார்கள்.

வில் வீரர்களுக்கெல்லாம் நுனியில் எண்ணெய் சுற்றிய பந்தம் போடப்பட்டது. சரமாரியாக நெருப்பு பந்தங்கள் கூடாரங்கள் மீது விழுந்தன. பெரிய ஆரவாரம் ஏற்பட்டது. அடுத்த ஐம்பது பேர் கண்ணிமைக்கும் நேரத்தில் காவல் இருந்த வீரர்களை வெட்டி எறிந்துவிட்டு உள்ளே ஓடி வந்தார்கள். எங்கே இராஜ நரேந்திரன் என்று தேடலானார்கள்.

உத்தம சோழ மிலாடுடையார் எழுந்திருக்க முடியாத தூக்கத்தில் இருந்தார். இராஜராஜ பிரம்மராயர் தடுமாறி எழுந்தார். ஓடிப்போய் இராஜராஜ நரேந்திரனுடைய கூடாரத்தை கலைத்தார். உள்ளே தூங்குபவனை இழுத்தார். வெளியே கொண்டு வந்தார். குதிரையில் ஏற்றினார்.

ஓடு, ஓடு, தெற்கு நோக்கி ஓடு. அரையன் இராஜராஜனை சந்திக்கும் வரை எங்கும் நிற்காதே. எந்த இடத்திலும் நிற்காதே. ஓடு என்று விரட்டினார். அவன் உட்காருவதற்குள் குதிரையின் பின்னே ஓங்கி அடித்தார். குதிரையில் அவன் தொங்கிக் கொண்டு ஓடினான். பிறகு அவன் கால் போட்டான். உடைவாள் கூட இல்லாது பரட்டை தலையுடன் எச்சில் ஒழுகும் வாயோடு அவன் தென்திசை நோக்கி ஓடினான்.

வாழ்க்கையில் முதன் முதலாக மரண பயத்தை உணர்ந்தான். தூங்கியது தவறோ என்று யோசித்தான். ஆனால் அதற்கு விடை தெரியவில்லை. அவன் பின்னே சில குதிரை வீரர்கள் வந்தார்கள்.

''உங்களுக்கு துணையாக வரச் சொல்லியிருக்கிறார்கள். ஓடுங்கள். எங்கும் நிற்காது ஓடுங்கள்'' என்று சொல்ல,

''நாம் எதிர்த்து போரிட்டால் என்ன'' என்று சொன்னான்.

''அடித்து நொறுக்கி விடுவேன். போங்கள், உங்களுக்கு இப்போதைய உத்தரவு அரையன் இராஜராஜனை நீங்கள் போய் அடைய வேண்டும் என்பதுதான். வீணாக எதுவும் பேசி வம்பில் மாட்டிக் கொள்ளாதீர்கள். உங்கள் உயிர் முக்கியம். அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம். அங்கே தனித்தபடியாக இராஜ ராஜ பிரம்மராயர் போரிட்டுக் கொண்டிருக்கிறார்.

இராஜராஜ பிரம்மராயர் எழுந்து நின்று சகலரையும் வெட்டினார். கத்தி பலபக்கம் சுழன்றது. குதிரை வீரர்கள் குத்துப்பட்டார்கள். குதிரைகள் வெட்டுப்பட்டன.

''கங்கை யாதவ் வந்துவிட்டானா. எங்கே அவன். எங்கே அவன்.'' குதிரையைத் தேடினார்.

குதிரை மேலே ஏறி உட்காரும்போது அந்த குதிரையை நோக்கி ஒரு அம்பு வந்து நெஞ்சில் தைத்தது. குதிரை சுருண்டு விழுந்தது. இறங்கி அவர் இன்னொரு குதிரையை நோக்கி ஓடினார். ஏற ஓடும்போது இன்னொரு அம்பு அவர் தோளில் தைத்தது. அவர் வேகமாக குதிரை ஏறி அம்பை பிடுங்கிப் போட்டார்.

''கங்கை யாதவ் எங்கே இருக்கிறாய், வாடா நாயே'' என்று உரக்க கத்தினார். வாளை சுழற்றினார். நாலு தலை சுழன்று கீழே விழுந்தது. இன்னும் முன்னேற ஒரு அம்பு வலது புஜத்தில் தைத்தது. கையை தூக்க முடியவில்லை. வாளை இறுக்க பிடிக்க முடியவில்லை. இன்னொரு அம்பு வயிற்றில் தைத்தது. இன்னொரு அம்பு நெற்றியை அடித்தது. இன்னொரு அம்பு நெஞ்சில் தைத்தது.

குதிரையில் இருந்தபடியே இராஜராஜ பிரம்மராயர் வஞ்சனையால் வீழ்ந்தார். கண் சொருகினார். இரத்தம் பீறிட்டது.

இரவு நேரத் தாக்குதல் நடத்துவது நல்ல மரபு இல்லை. நல்ல வீரர்களுக்கு அழகு இல்லை. இம்மாதிரியாக கோழைத்தனமான தாக்குதல்களை மேலைச்சாளுக்கியம் அடிக்கடி செய்திருக்கிறது.

''ஞானசம்பந்தம் என்னை காப்பாற்றிவிடுவாயா. ஞானசம்பந்தன் எனக்கு வலிக்கிறதடா. இந்த வலியை நீக்குவாயா. ஞானசம்பந்தன் எப்படியாவது காப்பாற்றிவிடு. இராஜநரேந்திரன் நல்லபடியாக சேர்ந்தார் என்று கேட்ட பிறகு நான் இறக்கிறேன். இன்னும் ஒரு நாழிகை என்னை எப்படியாவது காப்பாற்றிவிடு'' என்று கதறினார்.

அவன் அம்புகள் எடுத்தான். நெஞ்சுப் பக்கம் அம்பு எடுக்கும்போது பயமாக இருந்தது. மிகு நிதானமாக, அமைதியாக உருவினான். சட்டென்று உள்ளுக்குள் விரல் வைத்து துணி போட்டு அழுத்தினான்.

ஆனால் இருதயம் அடிபட்டு இருந்தது. இருதயம் அடி பட்டது என்பதை துடிப்பு காட்டியது. கண்கள் சொருகின.

''முடியவில்லையடா முடியவில்லையடா.''

''அப்பா, இறைவனின் பெயரை சொல்லுங்கள். இறை வனின் பெயரைச் சொல்லுங்கள். இறைவன் காப்பாற்றுவான்.''

ஞானசம்பந்தன் அதே விஷயத்தை வேறுவிதமாய் சொன் னான்.

''அப்பா, உங்களிடம்தான் இருக்கிறது. உயிரோடு இருக்க வேண்டும் என்று நீங்கள் தீர்மானித்தால் இருதயம் சரியாக இயங்கும். உங்களிடம் தான் இருக்கிறது. ஜாக்கிரதையாக இருப்பேன், இருப்பேன், இருப்பேன் என்று சொல்லுங்கள். போராடுங்கள் அப்பா. நான் சரி செய்து விடுகிறேன்.''

அவன் இருதயத்திற்குள் பட்ட காயத்திற்குள் விரல் நுழைத்து மருந்தை எடுத்து இருதயத்தின் மீது தடவினான். இருதயம் ஒட்டிக்கொண்டது. இரத்த ஓட்டம் நின்றது. பிழைத்து விடுவார் என்று தோன்றியது.

கூடாரத்தின் வெளிப்பக்கம் மிகப்பெரிய சத்தம் கேட்டது. மேலைச்சாளுக்கிய வீரர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. பல வீரர்கள் குத்தப்பட்டு துடிதுடித்துக் கொண் டிருக்கிறார்கள்.

கங்கை யாதவ் முன்னேறிக் கொண்டிருந்தான்.

''போய்விடு. ஞானசம்பந்தா. போய்விடு. அவர்கள் முன் னேறி வருகிறார்கள். இங்கே நிற்காதே போய்விடு. அவர்கள் வைத்தியன் என்றும், பெண் என்றும் பார்க்க மாட்டார்கள். வெட்டிக் கொல்வார்கள். பேடிகள். போய்விடு'' என்று சொல்ல, அவர்கள் இருவரும் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு அடுத்த கூடாரத்திற்கு ஓடினார்கள். ஒளிந்து கொண்டார்கள்.

கங்கை யாதவ் அவர் இருந்த கூடாரத்தை தூக்கி சிதிலப் படுத்தினான். வெட்டவெளியில் மார்பு முழுவதும் இரத்த விளா றாக இராஜராஜ பிரம்மராயர் படுத்திருந்தார்.

''நீர்தான் இராஜராஜ பிரம்மராயரா. தீப்பந்த ஒளியில் அவர் முகத்தைப் பார்த்தான். உம்மை சந்திக்க வேண்டும் என்று நிறைய ஆசை. ஏகப்பட்ட போரில் ஜெயித்திருக்கிறீர்களாமே.

உம்மை வெல்ல யாராலும் முடியாதாமே. வாள் முதுகு என்ற விஷயத்தை கண்டுபிடித்தது நீர்தானாமே. இப்போது எங்கே வாள்முதுகு காணோமே. மருத்துவம் நடக்கிறதா. எதற்கு மருத்துவம். போகப் போகிறீர் புரிகிறதா. இந்தப் படைக்கு தலைமை வகித்து கீழைச்சாளுக்கியம் நோக்கி வந்ததற்கு தண்டனையை இப்போது நான் தரப்போகிறேன்.

அந்தணனை கொல்வது பாவம் என்று எங்களுக்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் நீர் அந்தணனல்ல. மறவன். அந்தணர் எனற போர்வையில் கத்தி வீசி கொலை செய்கிற மறவன். எனவே உம்மை கொல்வதில் எந்த பாவமும் இல்லை. இதோ போய் வாரும். என் பெயர் கங்கை யாதவ். நான் மேலைச்சாளுக்கியத்தின் முக்கியமான தளபதி. ஜெய சிம்மனுக்கு அடுத்தபடியான பதவியில் இருக்கிறவன். ஜெய சிம்மனுடைய பெயரால் நான் உன்னை குத்தி கொல்லப் போகிறேன் என்று வாளை உயரத் தூக்கினான்.

இராஜராஜ பிரம்மராயர் கண்மூடிக் கொண்டார். எந்த இடத்தில் விரல் நுழைத்து ஞானசம்பந்தன் சரி செய்தானோ அந்த இடம் நோக்கி வாள் வேகமாகப் பாய்ச்சப்பட்டது. முதுகு வழியே நின்றது.

ஞானசம்பந்தன் துடித்து எழுந்தான். அவனை நாகரத் தினம் அழுத்திக் கொண்டாள்.

இராஜராஜ பிரம்மராயர் அடிபட்டு விட்டார் என்று தெரிந்து வீரர்கள் அந்தப் பக்கம் ஓடிவந்தார்கள். கங்கை யாதவ்வை சுற்றி தாக்கினார்கள். கங்கை யாதவ் குதிரையை திருப்பிக் கொண்டு தன் வீரர்களை ''கிளம்புங்கள், கிளம்புங்கள்'' என்று உத்தரவிட்டான். அந்த வீரர்கள் பின்னடைந்தார்கள். மேலை சாளுக்கிய வீரர்கள் அத்தனை பேரும் வேங்கியை நோக்கி போனார்கள். கோட்டைக்குள் நுழைந்து கதவை சாத்திக் கொண் டார்கள்.

ஞானசம்பந்தன் வாய்விட்டு அலறினான்.

''அப்பா, உன்னை காப்பாற்றியிருப்பேனே, உன்னை தூக்கி நிறுத்தியிருப்பேனே. இப்படி செய்துவிட்டானே மகாபாவி'' என்று அலறினான். தந்தையை கட்டிக் கொண்டு அழுதான். நாகரத்தினமும் அழுதாள்.

"இராஜராஜ நரேந்திரனை அரையன் இராஜராஜன் மிகக் கடுமையாக கண்டித்தார். "நீ செய்தது மிகப் பெரிய தவறு" என்றார்.

இன்னும் விரைவாக வேங்கி நோக்கி ஓடினார்.

இராஜராஜ பிரம்மராயர் சிதையில் அடுக்கப்பட்டு தயாராக இருந்த நிலையில் அரையன் இராஜராஜன் படைகள் அங்கு வந்து சேர்ந்தன.

மிலாடுடையாரை குதிரை மிதித்து கொன்று போட்டிருந்தது. உத்தமசோழகோனை தலையை வெட்டி கொன்றிருந்தார்கள். அறுநூறு வீரர்களில் நூற்றி இருபது பேர் மட்டுமே எஞ்சியிருந் தார்கள். பல வீரர்கள் அடிபட்டு சாய்ந்து விட்டார்கள். பல பேர் தூக்கத்தில் இருக்கும்பொழுதே அம்பு எய்து கொல்லப்பட் டிருந்தார்கள். மிக மோசமான கொலை என்று பார்க்க பார்க்க தெரிந்தது.

அரையன் இராஜராஜன் பல் கடித்தார்.

"எப்போது வேங்கியை நோக்கி போகப் போகிறோம்" என்று இராஜ நரேந்திரன் கேட்டதும் திரும்பினார். ஓங்கி அவன் கன்னத்தில் அடித்தார்.

"இந்த பிணங்களின் மீது கால் வைத்து நீ மட்டும் போ வேங்கிக்கு" என்று சீறினார். இராஜராஜ நரேந்திரன் கன்னத்தை பொத்திக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

அவனை கைது செய்யும்படி கட்டளை இட்டார். அவன் பின் கை கட்டப்பட்டது. அவன் மரத்தடியில் சாய்த்து உட்கார வைக்கப்பட்டான். அடுத்தது என்ன செய்வது என்று தெரியாமல் அரையன் இராஜராஜன் திகைத்துப் போனார்.

இது மிகப் பெரிய பலி. எடுத்தவுடனே இராஜேந்திர சோழருக்கு கிடைத்த மோசமான பரிசு. தவறான விஷயம். இராஜேந்திர சோழரின் கோபம் பன்மடங்கு பெருகும். ஆனாலும் அற்புதமான மூன்று உயிர்கள் இறந்துவிட்டன. இறந்த இந்த வாள்முதுகு படை வீரர்கள் இரவு நேரம் உறங்கும்பொழுது கொல்லப்பட்டார்கள். இது நடந்திருக்கக் கூடாது. "

இராஜராஜ நரேந்திரனை அனுமதித்திருக்கக் கூடாது. அவர் செய்வதறியாமல் தவித்தார். மேற்கில் வெகுதொலைவே போன இராஜேந்திரருக்கு மூன்று நாட்கள் கழித்து அந்த செய்தி கிடைத்தது.

இராஜேந்திரர் பேய் போல அலறினார். வாளை எடுத்துக் கொண்டு நாலாபுறமும் அலைந்தார். இராஜ நரேந்திரனை தூக்கிலிடு'' என்று உரக்கக் கத்தினார்.

பரவை சமாதானப்படுத்தினார். எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.

இராஜராஜ பிரம்மராயரின் அஸ்தி சேகரிக்கப்பட்டு ஒரு கலசம் ஞானசம்பந்தனிடம் கொடுக்கப்பட்டது. ஒரு கலசம் அங்கேயே புதைக்கப்பட்டது. மேலே சிவலிங்கம் வைக்கப் பட்டது. வாள்முதுகு படைவீரர்கள் வாய்விட்டு அழுதார்கள்.

வீரமாதேவியும், பரமன் மழபாடியாரும் பத்தாயிரம் பேர் கொண்ட ஒரு படையோடு தெற்கு நோக்கி நகர்ந்தார்கள். நாகையை பார்க்க வேண்டுமென்று வீரமாதேவி ஆசைப்பட் டார். தஞ்சையை இராஜராஜதித்தன் பொறுப்பில் விட்டுவிட்டு நாகையையும், மேல்பட்டிணத்தையும் பார்த்து பிறகு இராமேஸ் வரம் போகலாம் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. இதற்கு முன்பு கடலை பார்த்தது இல்லை. நாகை கடற்கரையில் நின்ற போது அவள் திகைத்துப் போனாள்.

இதுதான் கடலா. இவ்வளவு தொலைவுக்கு நீரா, அதில் மரக்கலன்களா. எப்படி வருகிறார்கள். எப்படி போகிறார்கள். பிரமித்தாள். நாகை விகாரத்திற்குள் படியேறினாள். அங்கு அவருக்கு சிறப்பான வரவேற்பு தரப்பட்டது.

பதினைந்து பிட்சுவுக்கு உணவளிப்பதாக ஒரு சாசனம் வடித்திருக்கிறார். இப்பொழுது முன்னூற்றைம்பது பேர்கள் இருக்கிறார்கள். இத்தனை பேருக்கு இங்கு என்ன வேலை.

குறுக்கும், நெடுக்குமாக இளைஞர்களும், சிறுவர்களும் மொட்டைத் தலையும், காவியுமாக போனார்கள். இப்படிப்பட்ட சிறுவர்களை வைத்துக் கொண்டு புத்த மதத்தை வளர்க்க முடியுமா. அல்லது இப்பொழுதிலிருந்தே வளர்க்க வேண்டும் என்று ஆரம்பிக்கிறார்களா. அவள் நாகை விகாரத்தை சுற்றிப் பார்த்துவிட்டு வந்ததற்கு உண்டான காணிக்கையாக இருபத்தி ஐந்து பொன் கழஞ்சுகள் கொடுத்துவிட்டு வெளியேறினார்.

''எனக்கு இந்த நாகை விகாரைப் பிடிக்கவில்லை. இந்த புத்த பிட்சுக்களையும் பிடிக்கவில்லை. இவர்கள் யார் பார்வை

யிலும் கனிவு இல்லை. உண்மை இல்லை. ஒரு திருட்டுத்தனம் இருக்கிறது. இவர்கள் அத்தனை பேருமே உளவாளிகளா என்று தோன்றுகிறது. நல்லவர்கள் போல் நடிக்கிறார்கள் என்று தோன்று கிறது.'' அவள் இறங்கி வெளியே வந்தாள். சோழ தேசத்து வணிகர்கள் அவளை வரவேற்றார்கள்.

''நான் உங்களோடு தங்கப் போகிறேன்'' என்று சொல்ல, அவர்கள் அவளுக்கு ஒரு நல்ல வீட்டை வேகமாக சரி செய்து கொடுத்தார்கள். துணைக்கு பெண்டுகளை அனுப்பினார்கள். அவளுக்கு உணவு பரிமாறப்பட்டது.

''எத்தனை நாள் பயணம் ஸ்ரீ விஜயத்திற்கு?''

''காற்று நல்லபடி வீசினால் ஏழுநாள் பயணம்.''

''ஸ்ரீ விஜயத்தின் பிரச்சனைக்கு என்ன காரணம்?''

''பேராசை காரணம். ஸ்ரீ விஜயத்தின் இந்துக்களும், கடாரத்தில் பௌத்தர்களும் அதிகமாக இருப்பதால் இவர்கள் இரண்டு பேருக்கும் நடுவே ஒரு அரசியல் குழப்பம் வந்து விட்டது. ஒற்றுமையாக இருந்தவர்கள் இரண்டுபட்டு நிற்கி றார்கள்.

ஸ்ரீ விஜயத்தின் வணிகத்தை பாழ்செய்ய கடற்கொள்ளைக் கார்களை கடாரத்திலிருந்து அனுப்புகிறார்கள்.''

''ஒரு நாவாயில் ஏறிப் பார்க்கலாமா.''

''மரக்கலத்திலேயே ஏறிப் பார்க்கலாம். மரக்கலம் என்பது நாவாயை விட பெரியது. அவை மேல்பட்டிணத்தில் இருக் கின்றன. விதம் விதமான மரக்கலன்களை பார்க்கலாம். காற்றில் மட்டும் போவதும், துடுப்பு போட்டு காற்றோடு போவதும் இருக்கின்றன. பத்து துடுப்பு மரக்கலன்கள், முப்பது துடுப்பு மரக் கலன்கள் இருக்கின்றன.

''முப்பது துடுப்பு மரக்கலன்களில் என்னவெல்லாம் ஏற்றிக் கொண்டு போகலாம்.''

''மூன்று யானைகளை ஏற்றிக்கொண்டு போகலாம்.''

உடனே ராமநாதபுரம் என்கிற மேல்பட்டிணம் போக வேண்டும் என்று தீர்மானித்தாள். மறுநாள் காலையில் விடை பெற்றாள். மேல்பட்டிணம் நோக்கிப் போனாள்.

சேர தேசத்து மரக்கலன்கள் ஆறு அங்கே நிற்க வைக்கப் பட்டிருந்தன. ஈழ தேசத்தில் முல்லைத்தீவுக்கு அருகே பதினாறு மரக்கலன்கள் கட்டப்பட்டிருக்கின்றன. என்றும் அவளுக்கு தெரிவிக்கப்பட்டது.

''இங்கிருந்து முல்லைத்தீவு எவ்வளவு தூரம்?'' என்று கேட்க, பரமன் மழபாடியார் கை அமர்த்தினார்.

''தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கக்கூடாது. உங்கள் உடல்நலம் ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை.''

''தாராளமாக ஒத்துழைக்கும். என் உடல்நலம் பற்றி பேசா தீர்கள். சிரமம் இருப்பின் நான் முடியாது என்று தெள்ளத் தெளி வாக சொல்லி விடுவேன்.''

சுக்கானை இரண்டு பேர் கவனித்தார்கள். பாய்மரத்தை பத்து பேர் விரித்து திசை மாற்றினார்கள். வடக்கே இருந்து வீசிய காற்று வேகமாக இருந்ததால் மரக்கலம் நீரை கிழித்துக் கொண்டு ஓடியது.

''இராஜேந்திர சோழர் வந்தால் என் கதி என்னாகுமோ என்று தெரியவில்லை'' என்று பரமன் மழபாடியார் நடுங்கியது போல் பேசினார்.

''இங்கு நடக்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் நானே பொறுப்பு. நீங்களல்ல. உங்களை ஒருபொழுதும் இராஜேந்திரர் குறை சொல்ல மாட்டார்.''

''ஏன் இதற்கு நான்தான் பொறுப்பு என்று சொன்னால் என்னைக் கூட குறை சொல்ல மாட்டார். மாறாக வெறுமே உட்கார்ந்து வெட்டிப் பொழுது போக்காமல் அடுத்தது என்ன செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதை நான் செய்கிறேன் என்று பாராட்டுவார்.''

''கடற்பயணம் வயிற்றை புரட்டும் என்று சொல்லுவார் களே. எனக்கு அப்படி ஒன்றும் ஆகவில்லையே.'' வியப்போடு வீரமாதேவி கேட்டாள்.

''தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் மிகக் குறைவாகத் தான் சாப்பிடுகிறீர்கள். அரை வயிற்றுக்குத்தான் உணவு எடுத்துக் கொள்கிறீர்கள். இது மிகவும் நல்லது.''

சூரியன் உதிக்கும் நேரம் அவள் கப்பலின் மேல்தளத் திலிருந்து கிழக்கு நோக்கிப் பார்த்தாள்.

'ஸ்ரீ விஜயம் அந்தப் பக்கம்தானே இருக்கும். விடக்கூடாது. போய் பார்த்துவிட வேண்டும். கடல் கடக்க வேண்டும். என்னை கங்கை கரைக்கு கூட்டி போகாவிட்டால் என்ன ஸ்ரீ விஜயம் நிச்சயம் அழைத்துப் போவீர். அதற்குத்தான் என்னை நான் தயார் செய்து கொள்கிறேன். அவள் தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் தலைமையில் உண்டான அந்தணர் கூட்டம் திருப்பதி மலையில் ஏறியது.

ஏழுமலை ஏறி இறங்கினால் நடுவே உள்ள அழகிய பள்ளத் தாக்கில் மகாவிஷ்ணு குடியிருக்கிறார் என்றும் அங்கே அவருக்கு தொண்டு செய்ய நிறைய வைஷ்ணவர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. புலிகளும், சிறுத்தைகளும், சிங்கங் களும் வழிமுழுவதும் தென்பட்டன. பலத்த ஓசை கேட்டு பயந்து பின்வாங்கின. திருமலையின் உச்சியில் நின்று அவர்கள் வேத கோஷம் எழுப்பினார்கள்.

இந்தத் திருமலை மிக ரம்மியமான இடம். மறுப்பதற்கு இல்லை.

கண்ணப்பநாயனார் கதையை மிக அழகாக சொன்னீர்கள். சரப சாஸ்திரிகளே. மறுபடியும் கண்ணப்ப நாயனார் கதையை சொல்லுங்களேன். எங்கே வேதம் சொல்லும்பொழுதும் நான் வேதவித்து என்ற நினைப்பே இல்லை. கண்ணப்ப நாயனாருக்கு முன்னால் நான் கால் தூசு. இதே வேங்கடமலையில் கண்ணப்ப நாயனார் வந்தால் மிக வேகமாக உள்ளே போய் இறைவனை தொட்டு வணங்கி, முத்தமிட்டு விட்டு திரும்புவார் என்று தான் தோன்றுகிறது. இறைவனோடு ஒன்றியவர்களால் அப்படி இருக்க முடியும். மறுபடியும் அந்தக் கதையைச் சொல்லுங்கள்.''

''அவனுக்கு திண்ணன் என்று பெயர். இளவரசு பட்டம் கட்டியதும் கன்னி வேட்டை. வேட்டையில் எது கடினமான வேட்டை என்று அவர்கள் பேசிக் கொள்ள, காட்டுப்பன்றியை வேட்டையாடுவதுதான் கடினம் என்று அவர்களுக்கு தெரிந்தது.

காட்டுப்பன்றியை துரத்திக் கொண்டு திண்ணன் போக, மடக்கி கொல்ல, அதற்குள் வந்த நண்பர்கள் நாங்கள் பக்குவப்

படுத்தி தருகிறோம் என்று சொல்ல, அவர் மட்டும் மலையில் ஏற அங்கே ஒரு சிவலிங்கம் இருந்ததை பார்த்தார். சிவலிங்கம் தெய்வம் என்று அவருக்கு சொல்லித் தரப்பட்டிருக்கிறது. அவர் கைகூப்பி வணங்கினார்.

இந்த ஒரு மலையில் இப்படி தனியாக அமர்ந்திருக்கிறீரே உமக்கு பயமாக இல்லையா. இந்த இடம் அசுத்தமாக வேறு இருக்கிறது. வெறும் இலைக் குப்பைகளையும், பூ குப்பை களையும் போட்டிருக்கிறீர்களே. இப்படி தனியாக இருந்தால் பசிக்காதா. நல்ல உணவு வேண்டாமா. குடிக்க நீர் வேண்டாமா. எதுவுமே இல்லாமல் இருக்கிறீரே. அழுக்கடைந்து இருக்கிறீர் களே என்றார். மெல்ல கீழிறங்கினார்.

நண்பர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர் வேகமாக மாமிசத் துண்டுகளை அறுத்தார். தாமரை இலை யில் வைத்துக் கொண்டார். பிறகு பொன்முதலி ஆற்றில் இறங் கினார். வாய் நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டார். பிறகு வழியில் இருந்த பூக்களை பறித்துக் கொண்டு கொண்டையில் சொருகிக் கொண்டார். மெல்ல மேலேறி வந்து மாமிசத்தை முன்னே வைத்து, வாயில் உள்ள உமிழ்நீரை இறைவனுக்கு அபிஷேகம் செய்வித்து தலையில் சூடிக் கொண்டிருந்த காட்டு மலர்களை அந்த இறைவனுக்கு சூட்டி, ''சாப்பிடு, சாப்பிடு'' என்று சொன்னார்.

அன்று இரவு முழுவதும் நான் துணையாக இருக்கிறேன் என்று அருகே படுத்துக் கொண்டார். மறுநாள் வேறு ஏதேனும் வாங்கி வருகிறேன் என்று கீழே இறங்கினார். அப்பொழுது அந்த சிவலிங்கத்திற்கு பூஜை செய்கின்ற சிவாச்சாரியார் மேலே வந்தார். மாமிசத் துண்டுகளை பார்த்துவிட்டு தலையில் அடித்துக் கொண்டு சுத்தப்படுத்தினார். வில்வ தளத்தையும், பூக்களை யும் சிவன் மீது வைத்தார். பூஜை செய்துவிட்டு விலகிப் போனார். இப்படி மாறி மாறி இரண்டு பேரும் பூஜை செய்து கொண்டிருந் தார்கள்.

ஒரு நாள் சிவாச்சாரியாருக்கு யார் இந்த அடாத செயல் களை செய்வது. ஒரு நாள் உடும்பு கறி, ஒரு நாள் ஓணான் கறி, ஒரு நாள் மலைப்பாம்பு என்று விதம்விதமாக கொண்டு வந்து போடுகிறார்களே யார் இது என்று கோபமாக கண்டிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

சிவலிங்கத்திற்கு பின்னே இருக்கின்ற பெரிய மரத்தடியில் உட்கார்ந்து கொண்டார். சுற்றிலும் புதர்கள் இருந்தது. அவர் உட்கார்ந்திருப்பது யாருக்கும் தெரியாது. அப்பொழுது வேடன் திண்ணன் கையில் மாமிசத்தோடு அங்கு வந்தான். வாயில் உள்ள உமிழ்நீரை துப்பினான். மலர்களை எடுத்து வைத்தான். மாமிச துண்டங்களை அவருக்கு உண்ணக் கொடுத்தான்.

''நன்றாக இருக்கிறது. மான் மாமிசம். என்ன ருசி பாருங்கள். நெய் ஒழுகுகிறது'' என்றெல்லாம் பேசினான்.

சிவாச்சாரியார் தலையில் அடித்துக் கொண்டார்.

எழுந்து திட்டலாம் என்று போகும்பொழுது, சட்டென்று அவன் பயப்படுவது தெரிந்தது.

யாரைக் கண்டு பயப்படுகிறான் என்று திகைத்து உட்கார்ந்தார்.

''இரத்தம் வருகிறதே, உங்கள் கண்ணில் இரத்தம் வருகிறதே. அவன் அலறினான். ஓடிப்போய் பச்சிலைகளை பறித்துக் கொண்டு வந்தான். அவர் இருக்கும் பக்கம் வந்தான். அவர் அழுந்தி உட்கார்ந்து கொண்டார். மூலிகை இலைகளை பறித்தான், கசக்கினான்.• கண்ணில் வைத்தான்.

''இல்லையே, நிற்கவில்லையே'' என்று பதறினான்.

ஏன் கண்ணில் இரத்தம் வருகிறது என்று தவித்தான். பிறகு யோசித்தான். ஒரு உறுப்பு போனால் அதை இன்னொரு உறுப்பு வைத்து சரிசெய்து விடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே கண்ணுக்கு கண். இதோ என் கண்ணை தருகிறேன் என்று சொல்லி, அம்பை எடுத்து சரக்கென்று தன் கண்ணிலே குத்திக் கொண்டு விழியை நோண்டி எடுத்து அதை அவருடைய கண்ணிலே அப்பினான்.

சிவாச்சாரியார் தவித்துப் போனார்.

''மறுபடியும் இன்னொரு கண்ணில் இரத்தமா'' என்று அவன் குதிக்க, என்ன செய்வது என்று தெரியாமல் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். ஏதோ நாடகம் நடக்கிறது என்று தெரிந்துவிட்டது. இன்னும் அழுந்த உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்போது மறுகண்ணில் வழியும் இரத்தத்தை எப்படி தீர்ப்பது,

கைவசம் மருந்து இருக்கிறது. எனக்கு இன்னொரு மருந்து இருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். எனவே, அடுத்த கண் எங்கு இருக்கிறது என்று செருப்புக் காலை தூக்கி அவருடைய கண்ணிலே வைத்தார். அம்பை வைத்து அழுத்தினான். அப்பொழுது சிவனுடைய கரம் ஒன்று சிவலிங்கத்திலிருந்து நீண்டது.

''நில்லு கண்ணப்ப,'' என்ற குரல் கேட்டது. திண்ணன் என்கிற அந்த வேடனை, சிவன் கையால் தொட்டு நிறுத்தி 'கண்ணப்ப' என்று அழைத்தார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரையும் சிவன் தொடவில்லை. ஒருவருக்கும் பட்டப் பெயர் தரவில்லை. ஆனால் இந்த வேடனுக்கு 'கண்ணப்ப' என்று சொல்லி கையால் தடுத்து நிறுத்தினாள். எல்லோருக்கும் கிட்டாத ஒரு மிகப் பெரிய பதவி, கடவுளுடைய கருணை அந்த வேடனுக்கு கிடைத்தது.

சரபர் பேச்சை நிறுத்தினார்.

''அந்த சிவாச்சாரியார் கதி என்னவாயிருக்கும். அவர் படிப்பு மொத்தமும் குப்பையில் போட்டது போல் அல்லவா ஆயிருக்கும்.''

''எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. அந்தணன் என்கிற அகம்பாவத்தை அந்த சிவாச்சாரியாருக்கு துடைத்தது போல எனக்கும் துடைத்துவிட்டார்.'

இறைவனை நேசிக்கின்ற உண்மையான பக்தி. என்னுடையது இல்லை என்று சொல்லுகின்ற ஒரு இடம் மனிதருக்கு வேண்டும். குறிப்பாய் அந்தணருக்கு வேண்டும். ஆனால் அதோ அந்த வேடனுக்கு இருந்திருக்கிறது. வெறும் படிப்பல்லவே வாழ்க்கை. வெறும் வேத கோஷம் அல்லவே இறை வழிபாடு. உள்ளுக்குள்ளே இருக்க வேண்டுமல்லவா. புத்தி பேசினால் போதுமா. மனதில் அலட்டிக் கொண்டால் போதுமா. அந்தராத்மாவில், ஆழத்தில் இறைவனோடு ஒன்றி இருப்பவருக்குத் தானே கண்ணை நோண்டி எடுத்து கையில் வைத்துக் கொள்ள முடியும். அதை இன்னொரு கண்ணில் அப்ப முடியும். இப்படிப்பட்ட விஷயத்தை கதறுகின்ற வலி கொடுக்கின்ற விஷயத்தை சர்வசாதாரணமாக அந்த திண்ணன் செய்திருக்கிறான் என்றால்

மன்னிக்கவும். கண்ணப்பர் செய்திருக்கிறார் என்றால் எப்பேர்ப் பட்ட பக்தி. எனக்கு துவண்டு போகிறதய்யா.''

என்னை விட மிகப்பெரிய அந்தணன் அந்த வேடர் கண்ணப்பர் என்று தோன்றுகிறது. அவருக்கு முன்னால் நான் தூசு என்று தோன்றுகிறது. எப்பேர்ப்பட்ட மனித மனம். எப்பேர்ப் பட்ட மகான்.

வேடனே விலகிப்போ என்று பல அந்தணர்கள் சொல் கிறார்களே. என்ன அபத்தம் அது. யாரை விலகிப் போகச் சொல்வது, எப்படி விலகிப் போகச் சொல்வது. பூணூலை கழற்றி கங்கையோடு விடப் போகிறேன் அல்லது பஞ்சகச்ச வேட்டி என்று இல்லாமல் வெறும் துண்டும், மேலே ஒரு சால்வையுமாகத் தான் இருக்கப் போகிறேன்.

சிவலிங்கம் என்பது ஒரு கல், கல் என்பது ஒரு அடை யாளம். அந்த அடையாளத்தை வைத்துக் கொண்டு அதன் மூலமாக மனதை விருத்தி செய்து கொள்ள வேண்டும். இறை வனை தேட வேண்டும் என்று உபாயமாக அதைச் சொன்னார் கள். அது உபாயமே இல்லை. உண்மையில் இறைவன் என்று தெள்ளத் தெளிவாக வேடன் கண்ணப்பன் நினைத்திருக் கிறார். நமக்கு சிவலிங்கம் உபாயம். ஒரு தந்திர சாதனம். அதன் மூலமாக கடவுளை அடைய வேண்டும் என்று ஒரு வழியில் வைத்துக் கொண்டிருக்கிறோம். அடைய முடியாது அரைகுறை யாக நிற்கிறோம்.

இறைவன் எங்கே, இதோ என் எதிரே என்று வேடன் கண்ணப்பன் பார்க்க, நமக்கு பார்க்க தெரியவில்லை.

விஸ்வநாத ஸ்ரௌதிகள் புலம்பினார். சரபர் அவரை தேற்றினார்.

அவர்கள் திருமலையிலிருந்து இறங்கி மேற்கொண்டு நடந்தார்கள். வழியில் வாள்முதுகுப்படை அடிபட்டதை பார்த்து தவித்தார்கள். இறந்தவர்களின் மனக்கேதம் தீர்க்கும் பொருட்டு விளக்கேற்றினார்கள். தாகம் தணிக்க தகனம் செய்த இடத்தில் நீர் ஊற்றினார்கள். கல் நட்டு நீர் வார்த்தார்கள். பிறகு அங்கிருந்து கிளம்பி வேங்கியை நோக்கி போனார்கள். வேங்கியில் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

சேனாபதி கங்கை யாதவ் அவர்களை யார் என்று விசா ரித்தான்.

தொண்டை நாட்டு அந்தணர்கள் காசிக்கு போகிறோம் என்று சொல்ல, அவர்கள் உடமைகள் அத்தனையும் சோதனை செய்யப்பட்டது.

சந்தேகப்படும்படியாக எதுவும் இல்லை. காய்கறிகள் நறுக்க கத்திகள்தான் வைத்திருக்கிறார்கள் என்று சொல்ல,

இரண்டு நாள் தங்கிவிட்டு போகலாம் என்று மடக்கி நிறுத்தி வைக்கப்பட்டார்கள். இரண்டு நாளும் அரண்மனை யில் உள்ள அந்தணர்களோடு அவர்கள் வடமொழியில் உரை யாடினார்கள். அந்த அந்தணர்கள் அவர்களை விட்டு விடலாம் என்று சொல்ல, கங்கை யாதவ் சந்தேகத்தோடு அவர்களை விட்டு விட்டான். வேங்கியைத் தாண்டி அவர்கள் ஒட்டதேசத் திற்குள் நுழைந்தார்கள்.

ஒட்டதேசத்தில் விஷ்ணுவர்தன விஜயாதித்தன் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்ற செய்தி அவர்களுக்கு மெல்ல மெல்ல தெரிந்தது. ஆனால் எந்த இடம் என்று தெரியவில்லை. அதிகம் துருவி விசாரித்தால் சந்தேகப்படுவார்கள் என்பதால் விஸ்வ நாத ஸ்ரௌதிகள் மௌனமாக இருந்தார். ஆனால் விஷ்ணு வர்தன விஜயாதித்தன் எங்கு ஒளிந்திருக்கிறான் என்பது இராஜேந் திரரிடம் சொல்லப்பட்டால் அது மிக உபயோகமான தகவலாக மறக்க முடியாத ஒரு விஷயமாக இருக்கும் என்பது அவருக்கு தெரிந்திருந்தது.

''ஒரு போரில் ஜெயிக்க வேண்டுமென்றால் தொண்டை நாட்டில் என்னவிதமான ஹோமங்கள் செய்வார்கள்'' என்று அந்த அந்தணர் வந்து கேட்டார்.

''யார் கேட்டது?'' என்று கேட்க,

''போரில் ஜெயிக்க வேண்டும் என்று நானா கேட்பேன். ஒரு அரசர் தான் கேட்டார்.''

''எந்த அரசர்? அவருடைய நட்சத்திரம் என்ன, எந்த மாதம் பிறந்தார். நீங்கள் விசாரிக்கின்ற ஓரை செவ்வாய் ஓரை, செவ்வாய் பூமிகாரகன், சண்டைக்கு உரியவர். யுத்தம் பற்றி பேச இது சரியான நேரம்தான். ஆனால் நட்சத்திரத்தினுடைய பலம் தெரிய வேண்டும். எனக்கு அந்த அரசரை பார்க்க வேண் டும். உங்களுக்கு அதர்வண வேதத்தில் பரிச்சயம் உண்டா'' என்று கேட்க,

வந்த அந்தணர் உதடு பிதுக்கினார்.

''யாரேனும் பரிச்சயம் உள்ளவர்கள் இருக்கிறார்களா'', என்று கேட்க,

''அப்படி யாரும் இருப்பதாக தெரியவில்லை'' என்று சொன்னார்.

''எங்களில் பலபேருக்கு அதர்வண வேதத்தின் விஷயங்கள் கரதலப்பாடம். நான்கு வேதங்கள் தெரிந்த சதுர்வேதிகளும் இருக்கிறார்கள். கோட்டை முற்றத்தில், வயல்வெளியில், கோவில் வளாகத்தில் பூஜை செய்யப்பட வேண்டும். இவைகளில் ஏதேனும் ஒரு இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். இடம் சுத்தமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். நீங்கள் வெறுமே தகவல் தெரிந்து கொண்டு போய் அரைகுறையாக பேசாதீர்கள்.''

''சரி, சரி, நான் போய் கேட்டு வருகிறேன்'' என்று அந்த அந்தணர் விடை பெற்று போனார்.

அவருக்காக விஸ்வநாத ஸ்ரௌதிகள் காத்திருந்தார்.

இரண்டு நாளில் அந்த அந்தணர் திரும்பி வந்தார்.

''ஒட்ட தேசத்து அந்தணர்கள் வேறு எவரும் ஹோமம் செய்வதை அனுமதிக்கவில்லை. எகிறுகிறார்கள். நரபலி தர வேண்டும் என்கிறார்கள். பத்து வயது இளைஞனை அரச குலத்தவனை கொண்டு வந்து தரச் சொல்கிறார்கள். ஆடுகளும், எருமைக்கடாவும், ஒரு குதிரையும் பரிசு தர வேண்டும் என்கிறார்கள். ஆனால் நீங்கள் காசிக்கு போகிறீர்கள் என்று கேள்விப்பட்டு உங்கள் அனைவருக்கும் வஸ்த்ர தானம் செய்ய விரும்புகிறார்கள்.''

விஸ்வநாத ஸ்ரௌதிகள் சம்மதித்தார்.

அந்த இளைஞன் சோர்வாக இருந்தான். கண்களில் தூக்கம் இருந்தது. உடம்பில் அழுக்கு இருந்தது. வெகுதொலைவில் இருந்து வந்திருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஐம்பது காத தூரம் பயணப்பட்டிருந்தால்தான் இத்தனை அலுப்போடு இருக்க முடியும். அவனைக் குளித்துவிட்டு வரச் சொன்னார்கள். சரியாக உணவு

எடுத்துக் கொள்ளாதது போல் வயிறு குவிந்திருந்தது. விலா எலும்புகள் தெரிந்தன. சங்கல்பம் செய்த பிறகு அவனை தூங்க அனுமதித்தார்கள். அந்த மாளிகையின் மேலே உள்ள அறையில் அவன் அயர்ந்து தூங்கினான்.

அவனுடைய மெய்க்காப்பாளனிடம் விஸ்வநாத ஸ்ரௌதிகள் பேச்சுக் கொடுத்தார். அவருக்குள் மெல்லியதாக ஒரு திட்டம் மலர்ந்தது.

''வாழ்க்கையில் சொல்லவொண்ணா கஷ்டங்கள் பட்டிருப்பீர்கள். உங்கள் மனோதைரியத்தால் அத்தனையும் தாண்டி விட்டீர்கள்'' என்று அந்த படைவீரனுக்கு அவர் ஜோசியம் சொல்ல ஆரம்பித்தார். அந்த ஜோசியம் உலகத்திலுள்ள அத்தனை பேருக்கும் பொருந்தும் ஜோசியம். ஆனால் அது அவனுக்குத் தெரியவில்லை.

''மனைவியைப் பற்றி உங்களிடம் கேட்க வேண்டும்.'' அவர் தாழ்ந்த குரலில் இரகசியமாகக் கேட்டார்.

''என்ன செய்வது சிலபேர் தலையெழுத்து அப்படியாகத் தான் இருக்கிறது.''

''ஆமாம் அய்யா, என் தலையெழுத்து மோசமாக இருக்கிறது. எனக்கு விடியலில் இருந்து நடு இரவு வரை இங்கு காவல் இருக்க வேண்டியிருக்கிறது.''

''அப்படி யாரை காவல் காக்கிறீர்கள். பெண்கள் நிறைய பேர் இருக்கிறார்களா.''

''பெண்களை காவல் காக்க வேண்டிய அவசியமே இல்லை. பெண்களை விட மோசமாக பயப்படும் ஒரு சிறுவனை கண்காணிக்க வேண்டியிருக்கிறது.''

''ஒட்டதேசத்து இளவரசனா?''

''இல்லை. கீழைச்சாளுக்கியத்திலிருந்து ஓடிவந்தவன், எனக்கு கீழைச்சாளுக்கியம் பற்றி எதுவுமே தெரியாது.''

விஸ்வநாத ஸ்ரௌதிகள் முகம் மலர்ந்தார்.

* * *

அத்தியாயம்

36

சொக்கவைக்கும் கூத்து சொக்கக் கூத்து. சொக்கன் ஆடிய கூத்து சொக்கக் கூத்து.

சொக்கன் என்று அழைக்கப்படும் சிவபெருமான் இந்த உயிரினங்கள் தோன்றுவதற்கு நடனமாடினார். அவருடைய ஒவ்வொரு அசைவிலிருந்தும் ஒவ்வொருவிதமான உயிரினங்கள் தோன்றின. பிரபஞ்சத்திலிருந்து பூமியில் இறங்கின. இங்கே உயிரினங்கள் உலாவுகிறவரை சிவன் நடனம் தொடரும். சிவன் நடனம் நின்றால் எல்லா உயிரினங்களும் அழிந்துவிடும். உயிரினங்களின் அசைவுதான் சிவநடனம். சிவம் என்பது உருவமல்ல. ஒரு பெரிய சக்தி. பூமியை சுத்தியிருக்கிற சக்தி. பூமியில் உள்ள அசையும் பொருள்கள் அத்தனையிலும் கவிழ்ந்திருக்கின்ற சக்தி. இந்த பூமியை அசையும் பொருளாக ஆக்கியதால்தான் சிவன் நடனமாடுபவனாக சொல்லப்படுகிறார். நடனம் என்பது இடையறாது அசைவு. அதேதான் பூமியும். பூமி மட்டும் சுழன்று கொண்டிருக்கவில்லை. அது தன்னைத்தானே சுழண்டு கொண்டிருப்பதில் மட்டும் இல்லை. அதிலுள்ள கோடிக்கணக்கான உயிர்கள் முன்னும், பின்னும், மேலும், கீழும், இடதும், வலதும், பறந்தும், நீந்தியதும் தங்கள் அசைவை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. சிவனை தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. சிவன் அசைவே பூமியின் அசைவு.

அதை சொக்கக் கூத்து என்கிற வரையில் தளிச்சேரி பெண்டினர் நடனமாடப் போகின்றனர். ஒரு பெரிய பானையில் ஓலைகள் போடப்பட்டிருக்கும். அந்த ஓலை நறுக்கில் ஏதேனும் ஒரு உயிரினத்தின் பெயர் எழுதப்பட்டிருக்கும். வண்டு, நரி, யானை, குதிரை, மான், முதலை, மீன் என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கும். பாம்பும் தேளும் கூட சொல்லப்பட்டிருக்கும். அந்த தளிச்சேரிப் பெண் அதை வாங்கி பார்த்துக் கொண்டு சில நிமிடங்கள் தியானத்தில் இருப்பாள்.

பாம்பு எப்படி நகரும். தியானிப்பாள். யானை எப்படி நகரும். செய்து பார்த்துக் கொள்வாள். புலி எப்படி நகரும். நடந்து

பார்த்து கொள்வாள். மீனும், முதலையும் எப்படி அசையும். அதையும் ஒவ்வொரு பெண்களும் பார்த்துக் கொள்வார்கள். எந்தப் பெண்ணுக்கு எந்த ஓலை வந்ததோ, அந்த ஓலையில் என்ன எழுதப்பட்டிருக்கிறதோ அதேவிதமாக அவர்கள் மாறுவார்கள். ஒவ்வொருவராக வந்து நிற்பார்கள். அந்த அசைவை வைத்துக் கொண்டு ஜனங்கள் அது என்ன என்பதை சொல்லிவிடுவார்கள். மிகச் சிறப்பாக அசைந்து வந்தால், நடனமாடினால் ஜனங்கள் ஆரவாரித்து கைதட்டுவார்கள். சில சமயம் குலைவையும் போடுவார்கள். அவர்கள் கூக்குரலிலிருந்து நன்றாக நடனமாடியிருக்கிறோம் என்று தெரிந்து கொள்ளலாம்.

முதலில் வந்தவளை பார்த்து யானை யானை என்று கூவினார்கள். அச்சு அசல் யானையினுடைய அத்தனை ஆட்டமும் அவள் செய்து காண்பித்தாள். காது மடல் அசைவிலிருந்து பின் கால் சற்று தூக்கி நிற்பது முதல், துதிக்கை ஆட்டுவது வரை, துழாவிக் கொண்டிருப்பது வரை விதம் விதமாக செய்து காட்டினாள். ஜனங்கள் பெரிதாக ஆரவாரம் செய்தார்கள்.

அவள் குனிந்து வணங்கிவிட்டு நகர்ந்தாள்.

அடுத்தது பாம்பு ஊர்ந்து வந்தது. 'சரட்' என்று சீறியது. ஜனங்கள் பயந்தார்கள். அதற்கும் ஆரவாரம் செய்தார்கள். புலி உருமிற்று. கரடி குதித்தது. நரி குழைந்து வந்தது, மீன் முன்னும், பின்னும் அலைந்தது. அந்த மீன் வேடம் போட்டவள் வேறொரு தந்திரம் செய்திருந்தாள். மேற்கூரையில் கயிறு கட்டி அதில் ஒரு பறவை உருவம் தொங்கவிட்டிருந்தாள். அந்த மீன் பறவைக்கு அருகே வரும்போது அந்தப் பறவை சரட் என்று கீழே குதிக்கும். அப்போது அந்த மீன் துள்ளி குதித்து விலகி ஓடும். இது மீன்கொத்தி மீனை வேட்டை ஆட முற்படுவதும், மீன் தப்பித்து ஓடுவதும் அங்கு அழகாக சொல்லப்பட்டிருந்தது. அதற்கும் ஜனங்கள் எகிறி குதித்து வாழ்த்து தெரிவித்தார்கள்.

தீப்பந்தங்கள் எல்லாம் மெல்ல, மெல்ல மறைக்கப்பட்டது. இருள் சூழ்ந்தது. ஒரே ஒரு இடத்தில் மட்டும் தீப்பந்தம் மின்னியது. அதுவும் மெல்லிய துணியால் மறைக்கப்பட்டிருக்க வெறும் வெளிச்சமாக இருந்தது. நடுவே சிவன் வந்து நின்றார். சிவன் காலைத்தூக்கி நடனமாடினார். அருகே உமாதேவியார் வியந்து பார்த்துக் கொண்டிருந்தார். விநாயகரும், முருகனும் பிரம்மித்து பார்த்துக் கொண்டிருக்க சிவன் சுற்றி சுற்றி நடனம்

ஆடினார். வேகமாக நடனமாடினார். எல்லா பிராணிகளுடைய அசைவையும் அந்த ஒரு சிவனே சட் சட்டென்று மாற்றிக் காட்டினார். வந்து உமாதேவியாருக்கு அருகே உட்கார்ந்தார். ஒவ்வொரு மிருகமாய் உள்ளே நுழைந்தன. பிளிறின. உருமின. கூவின. குதித்தன. அவருக்கு அருகே நின்று, மண்டியிட்டன. எல்லா உயிரினங்களும் மண்டியிட சிவன் எழுந்து நின்று அவைகளை ஆசீர்வதித்தார்.

''ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவாய, ஓம் நமச்சிவ்ாய'' என்று எல்லோரும் பாடினார்கள்.

நாட்டிய நாடகம் இனிதே முடிந்தது. எல்லோர் மனதிலும் சிவ தாண்டவமே நின்றிருந்தது. உலகம் முழுவதும் இறைவன் படைப்பு. நீயும், நானும் இறைவன் படைப்பு. இங்கு இறைவனல்லாது எதுவும் நகராது என்று தெள்ளத் தெளிவாக அவர்களுக்கு புரிந்தது.

''எல்லா ஜனங்களுக்கும் ஒரு விண்ணப்பம்.'' தலைகோலி விமலை உரத்த குரலில் கலைந்து போகும் ஜனங்களை இழுத்து நிறுத்தினாள்.

''இன்று நீங்கள் எல்லோரும் சொக்கனின் நடனத்தை கண்டு ரசித்தீர்கள். சொக்க வைக்கும் நடனத்தை பார்த்து ஆதரித்தீர்கள். உங்கள் அன்புக்கு நன்றி. வரும் வாரம் நாங்கள் எல்லோரும் தஞ்சையிலிருந்து இடம்பெயர்ந்து ஜெயங்கொண்டம் நோக்கிப் போகிறோம். இங்கு மிகச் சிலரே இருப்பார்கள். அவர்கள் கோவில் பணி செய்வார்கள். நடனமாட என்று யாரும் இருப்பதற்கு இல்லை. மத்திம வயது உடையவர்கள் சுவாமி புறப்பாட்டின் போதும், அரசர் வரும்போதும் மெல்லியதாய் நடனமாடுவார்களே தவிர இப்படி சொக்க நடனம் நடக்காது.''

''நான் இங்கு வந்து நாற்பது வருடம் ஆகிறது. என் மகள் நடனமாடி ஓய்ந்து போய் என் பேத்தி நடனமாடிக் கொண்டிருக்கிறாள். அவருடைய நடனத்திற்கு நீங்கள் பேராதரவு தெரிவித்தீர்கள். என் பேத்திக்கு ஜெயங்கொண்டம் வரச் சொல்லி உத்தரவாகி இருக்கிறது. பேத்தியை மட்டும் அனுப்பி நாங்கள் என்ன செய்வது. எனவே, என் மகளும், நானும் அவளோடு ஜெயங்கொண்டம் பயணப்படப் போகிறோம்.''

''இங்கு சில தேவரடியார்களே இருப்பார்கள். அவர்கள்

கோவில் வழிபாட்டின் போதும், அரசர் வரும்போதும் மெல்லிய தாய் நடனமாடுவார்களே தவிர இப்படி சொக்க நடனமெல்லாம் நடக்காது. சொக்க நடனம் பார்க்க விரும்பினால் நீங்கள் ஜெயங்கொண்டம் வர வேண்டியிருக்கும். நாங்கள் வரும் வாரம் மூட்டை முடிச்சுகளுடன் மாட்டு வண்டி ஏறி ஜெயங் கொண்டம் பயணப்படுகிறோம். இதுவரை எங்கள் நடனத்தை ஆதரித்து எங்களை கௌரவித்த தஞ்சை மக்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.''

''வாழ்க இராஜேந்திரர். வாழ்க தஞ்சை மாநகரம். வாழ்க தஞ்சாவூர் மக்கள்'' என்று உரத்த குரலில் முழங்கினாள்.

சட்டென்று முகத்தை பொத்திக் கொண்டு அழத் துவங் கினாள். நாற்பது வருட காலம் வாழ்ந்து வந்த பூமியை விட்டு பிரிவது என்பது எளிதான விஷயமா. இல்லவே இல்லை. ஜனங் களும் கண்கலங்கினார்கள். ஆனால் என்ன செய்வது இது அரச கட்டளை. மீற முடியாது.

தஞ்சையிலிருந்தும், திருவாரூரிலிருந்தும், நாகைப்பட் டிணத்திலிருந்தும், திருவெண்காட்டிலிருந்தும் வந்தோமல் லவா. அதேபோல தஞ்சையிலிருந்து ஜெயங்கொண்டம் போகப் போகிறோம். அரசன் எங்கு இருக்கிறானோ அங்குதான் மக்கள் இருக்க வேண்டும். தஞ்சை நெரிசலாகி விட்டது. இன்னும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் ஜெயங் கொண்டத்திற்குத்தான் போக முடியும். ஜெயங்கொண்டம் ஒரு திட்டமிடப்பட்ட நகரம், அங்கு வாழ்க்கை இன்னும் சௌகரிய மாக இருக்கும்.

தஞ்சையை பிரிவது என்ற வேதனையை சகித்துக் கொண்டு அங்கே புகுந்துவிட்டால் வெகுசீக்கிரத்தில் தஞ்சையை மறந்து விடலாம், ஆனால் தளிச்சேரி பெண்டுகள் நகர்ந்து போனபோது ஊரே நகர்ந்து போனதுபோல ஒரு பிரம்மை உண்டாயிற்று. அவர் கள் நகர பட்டுத்துணி தைப்பவர்கள். நகர்ந்தார்கள். நடன உடை தைப்பவர்கள் நகர்ந்தார்கள். செருப்பு தைப்பவர்கள் நகர்ந்தார்கள்.

''என்றேனும் ஒருநாள் இடம் மாறி போகப் போகிறோம். அதற்கு இந்த கூட்டத்தோடே நகர்ந்துவிடலாமே'' என்று சிலரும் கிளம்பினார்கள்.

போகும் வழியில் சாப்பாட்டுக்கு கவலையே வேண்டாம். நாங்களும் கூடவே வருகிறோம்'' என்று சோற்றுக்கடை அந்தணர்கள் பயணப்பட்டார்கள்.

''என்ன, ஒரு மாடை அதிகமாக நீங்கள் தர வேண்டியிருக்கும். வண்டி சத்தம் யார் கொடுப்பது'' என்று கேட்டார்கள்.

இவர்களுக்கு முன்னே போய் நின்று அடுப்பு மூட்டி கதம்ப சாதமும், புளியஞ் சாதமும், தயிர் சாதமும். இலை இலையாய் வழங்கினார்கள். காசு கவனமாய் வாங்கி போட்டுக் கொண்டார்கள்.

''நெல்லு. கொடுத்து சோறு வாங்குவது, பாத்திர பண்டங்களாகி வைத்து சோறு வாங்குவது என்பது வேண்டாம். எங்களுக்கு மாடைதான் வேண்டும். காசுதான் முக்கியம்'' என்றார்கள்.

சோழ தேசத்தில் மெல்ல மெல்ல பண்டமாற்றுக்கு பதிலாக காசுனுடைய ஆட்சி அதிகமாயிற்று. ஓவியக்காரனின் மகன் ஒருவன் வெள்ளை சுண்ணம் அடித்த பலகையில் மாடையாலேயே லஷ்மி உருவம் செய்திருந்தான். நான்கு கரங்களுடைய லஷ்மியின் வலது கையிலிருந்து மாடை அருவிபோல் பொங்கியது.

நூற்றி அறுபது மாடையில் செய்யப்பட்ட அந்த ஓவியத்தை ஒரு தளிச்சேரி பெண் இருநூற்றி பத்து மாடை கொடுத்து வாங்கிக் கொண்டாள். அவள் அதை பார்த்துக் கொண்டிருந்த நேரம் மரத்திலிருந்து பூ கழன்று அதன் மீது விழுந்தது, அவள் பரவசமானாள்.

''ஓகோ என்று சம்பாதிக்கப் போகிறாய்'' என்று பார்த்தவர்கள் எல்லாம் வியந்தார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். எல்லோருக்கும் புதிய ஊருக்குப் போய் நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

''மாடையில் நடராஜர் பெருமானுடைய நடனத்தை செய். பின்பக்கம் விதம் விதமான வர்ணம் தீட்டி பிரளயகால வேகம் போல சிகப்பும், கருப்பும் கலந்து அலைகள் பொங்குவதைப் போல செய்துவிடு. பிரளயகால நடனமாக அது காட்சியளிக்கட்டும்'' என்று ஒரு அந்தணர் யோசனை சொல்ல, அவன் உடனடியாக வேலையில் இறங்கினான்.

அந்த அந்தணருக்கு ஐந்து மாடை காசு கொடுத்தான். வழி யெல்லாம் பேச்சும், சிரிப்புமாக அவர்கள் ஜெயங்கொண்டம் நோக்கி போனார்கள். ஜெயங்கொண்டம் போய் கோவிலை பார்த்ததும் திகைத்துப் போனார்கள். ஊரை சுற்றி சுற்றி வந்தார் கள். குறுக்கும், நெடுக்குமாய் போகின்ற கால்வாய்களில் இறங்கி முகம் கழுவிக் கொண்டார்கள்.

''எங்கள் வீட்டின் வலது பக்கமும் கால்வாய் போகிறது. இடது பக்கமும் கால்வாய் போகிறது. குளுகுளுவென்று இருக் கிறது'' என்று ஒருவர் பீற்றிக் கொண்டார். தளிச்சேரி பெண்டு களுக்கு தனியாக வீடுகள் ஒதுக்கப்பட்டன. அவர்களுக்கு துணையாக இவ்வளவு ஆட்கள் தேவைப்படும் என்று சிற்பி கள் அறிந்திருக்கவில்லை. எனவே, தளிச்சேரி பெண்டுகள் இருக்கும் இடத்திற்கு நேர் பின்னாக ஒரு புளியந்தோப்பில் திடமாக ஓலைக்குடிசைகள் எழுப்பி சுற்றிலும் மண்சுவர் அமைத்து தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள்.

ஜெயங்கொண்டம் சட்டென்று தீப்பிடித்துக் கொண்டது போல பரபரப்பாக மாறியது.

''சிற்பிகளிடம் மாடைகளே இல்லை.'' ஒருவர் சொன்னார்.

''அய்யோ, பிறகு நாம் எப்படி பிழைப்பது.'' இன்னொருவர் கேட்டார்.

''எல்லாம் பொற்கழஞ்சுகளாக வைத்துக் கொண்டிருக் கிறார்களய்யா. அந்த பொற்கழஞ்சு மதிப்பு என்னவென்று அவர் களுக்கு தெரியவில்லை. ஒரு மரக்கட்டை தெறிக்க நாலு மாடை கொடுத்தால் போதும். அவன் இரண்டு பொன் கழஞ்சு கொடுக் கிறான். ஆட்டு உரலுக்கு மர ஆப்பு அடித்து கொடுத்து விடு கிறேன். நாலு கைகள் பிடிக்கும் அளவுக்கு நீள ஆப்பு. இரண்டு பேர்கள் சுழட்டலாம். இன்னும் வேகமாக அரவையாகும். எனக்கு காசு எதுவும் கொடுக்க வேண்டாம். ஒரு முப்பது நாளைக்கு மூன்று இடரிக கொடுத்தால் போதும் என்றார்கள்.

நேர் எதிரே இருக்கின்ற உடையார்குடியிலிருந்து அரிசி யும், பருப்பும், காய்கறிகளும் வந்தன. வெற்றிலை கூடை கூடை யாய் வந்து இறங்கியது. மக்கள் வரத்து அதிகரிக்க விலை அதிக மாகியது.

''ஒரு கழஞ்சு பொன்னுக்கு ஐந்து கலம் நெல், தஞ்சையில் விற்கிறதடா.'' ஒருவர் உரக்கக் கத்தினார்.

''அது அந்தக் காலம். இப்பொழுது போய் கேள். நீங்களெல்லாம் கிளம்பி வந்துவிட்டீர்கள் அல்லவா. தஞ்சையில் வாங்குவதற்கு ஆள் இல்லை. எனவே சரக்குகள் எடுத்துக் கொண்டு காவிரியில் படகேறி துறைமுக நகரங்களுக்கு போகிறார்கள். ஒரு கழஞ்சுக்கு தஞ்சையில் நாலு கலம் நெல். இங்கு மூணு கலம் நெல். விலை ஏற்றுவதற்கு உங்களுக்கு ஏதேனும் காரணம் வேண்டும். ஆட்கள் இல்லையென்றாலும் விலை ஏறும். ஆட்கள் வந்திருந்தாலும் விலை ஏறும். வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கின்ற காலம் யுத்த காலம்.''

''என்ன எங்களுக்கு கொள்ளை லாபமா. அவனவன் உயிரை பணயம் வைத்து வருகிறானய்யா. போன மறவன் திரும்ப வருவான் என்றுகூட யூகிக்கலாம். ஆனால் வாணிபம் செய்பவன் திரும்பி வருவான் என்பது சொல்லவே இயலாது. இவர்களுக்கெல்லாம் வணிகன் என்றால் இழிவு. நோகாமல் சம்பாதிக்கிறவன் என்று ஒரு அலட்சியம். கொள்ளை அடிக்கிறோம் என்று ஒரு கடுகடுப்பு. ஆனால் நமது கஷ்டம் நமது வீட்டு நாய்க்கு கூட தெரியாது.

மறவர்கள் யுத்தத்திற்கு போக வேண்டுமே என்று அலுத்துக் கொள்கிறார்கள். தளிச்சேரி பெண்கள் நடனமாட ஆட்களே இல்லையென்று அலுத்துக் கொள்கிறார்கள். சட்டை தைப்பவர்களே வரவில்லை என்று தையற்காரர்கள் அலுத்துக் கொள்கிறார்கள். கிழிந்த சட்டைதான் தைத்துக் கொண்டிருக்கிறோம் என்று நொந்து கொள்கிறார்கள்.

பஞ்சமர் உதவியுடன் உழுது பயிரிடல் அமோகமாக நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது அத்தனை பஞ்சமர்களும் களை பிடுங்குதலும், உரம் போடுதலும் செய்கிறோம் என்கிறார்கள் என்று உழவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள்.

சோழ தேசத்தில் சந்தோஷமாக இருப்பது யார் சொல்லுங்கள். கடலோடிகள். கடலில் மீன் பிடிப்பவர்கள் மரக்கலன் செலுத்துபவர்கள். இவர்களுக்கு அதிகமாக கூலி கொடுத்து வணிகர்கள் விலைக்கு வாங்குகிறார்கள். சேர தேசத்திலிருந்து வந்த மரக்கலன்களை பழுது பார்த்து மறுபடியும் பயணப்பட தயாராக இருக்கிறார்கள்.''

''ஸ்ரீ விஜயம் போகக்கூடாது என்று சொல்லிவிட்டார்களே.''

''அதனால் என்ன. இலங்கைக்கு போகலாமே, இலங்கையை சுற்றிக்கூட வருவதில்லை. இடையே புகுந்து விடுகிறார்கள். முல்லைத்தீவில் தங்கி பிறகு மறுபடியும் கிளம்புகிறார்கள். நாகை, திருக்கடல்மல்லை, மயிலாப்பூர், திருவொற்றியூர் என்று தங்குகிறார்கள். சேர தேசத்திலிருந்து மூன்று மரக்கலன்களில் பானை பானையாக மருந்துகள் போயிருக்கின்றன. திருவொற்றியூர் போய் ஒதுங்கி இருக்கின்றன. திருவொற்றியூர் தாண்டியும் ஒரு மரக்கலன் போயிருக்கிறது.

ஒரு நாளைக்கு ஒரு பொன் கழஞ்சு. ஒரு நாள் பிடித்த மொத்த மீனையும் பத்து மாடைக்கு விற்றவர் இப்பொழுது ஒரு பொன் கழஞ்சு வாங்குகிறார். இத்தனைக்கும் இரண்டு வேளை சோறு போட்டு அதற்கு மேல் கழஞ்சுகள் கொடுக்கிறார்கள்.''

''இன்னொரு குழுவினரும் சந்தோஷமாக இருக்கிறார்கள்.''

''யாரது?''

''பாண்டிய தேசத்து கூலிகள். எந்த வேலை சொன்னாலும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். மரம் அறுக்க வேண்டுமா, கல் தூக்க வேண்டுமா, காட்டுக்கு போய் விறகு வெட்டி வர வேண்டுமா, மாடுகள் மேய்க்க வேண்டுமா, ஆடுகளை அறுக்க வேண்டுமா, எதற்கும் தயாராக இருக்கிறார்கள்.''

''ஆமாம் அவர்களுக்கு பாண்டிய தேசத்தில் எந்த வேலையும் இல்லை.''

''வேலை இல்லையா, வீடே இல்லை. இங்கு ஓலை குடிசை பார்த்ததும் துள்ளி குதிக்கிறார்கள். இனிமேல் வெட்டவெளியில் தூங்க வேண்டியதில்லை என்று சந்தோஷப்படுகிறார்கள்.

''அய்யோ பாவம். சரி போர் எப்பொழுது முடியும்?''

''இப்போது அல்ல. இன்னும் இரண்டு வருடங்கள் ஆகும். இராஜேந்திர சோழர் தஞ்சை வந்துவிட்டு உடனடியாகக் கிளம்புவார். அல்லது ஜெயங்கொண்டம் வந்து அரண்மனையை திறந்து அங்கு சிறிது நாள் இருந்துவிட்டு பிறகு பூம்புகாரிலிருந்து கிளம்புவார்.

ஸ்ரீ விஜயம் படையெடுப்பு முடிந்தால்தான் போர் ஓய்ந்ததாக அர்த்தம். கங்கைக்கரை படை எடுப்பு முடியவே இரண்டு வருடங்கள் ஆகும். அதற்குப் பிறகு கடல் பயணம் நேரம் பார்த்து

போக வேண்டும். ஸ்ரீ விஜயம் போய் இறங்க வேண்டும். அங்கு தங்கி கொள்ளை அடித்து அரசியல் மாற்றங்கள் செய்து மீண்டு வர ஒரு வருடம் ஆகும். ஆக, நான்கு வருடங்களுக்கு பிறகு தான் சோழ தேசம் பழைய நிலைக்கு வரும்.''

''அப்போதும் அரிசி விலை குறையாது.'' ஒரு மத்தளக்காரர் நெட்டுயிர்ப்பாக பேசினார்.

''ஏன்?''

''அப்பொழுது உள்ளுக்குள்ளே நிறைய பொன்னும், பொருளும் வந்துவிடும். ஆறு மாடைக்கு கிடைத்திருந்த நெல் ஒரு கழஞ்சு கொடுத்தாலும் கிடைக்காது. ஏனெனில் எல்லோரிடமும் பொன்னும், மாடையும் குவிந்து கிடக்கும். கொள்ளை அடித்த பொருள்களில் வீரர்கள் தங்களுக்கென்றும் ஒதுக்கி வைத்துக் கொள்வார்கள். எனவே பண நடமாட்டம் அதிகம் இருக்கும். நெல்லின் விலை அதிகமாகும். பொன்னுக்கு அர்த்தமில்லாது போகும்.''

''அப்போது எது சுபிட்சமான காலம்.''

''ஒரு போருக்கும் இன்னொரு போருக்கும் இடைவெளி அதிகம் இருந்தால் அது சுபிட்சமான காலம்.''

''ஆனால் கீழைச்சாளுக்கியத்திலிருந்து எந்த செய்தியும் வரவில்லையே.''

''இன்று அல்லது நாளை வந்துவிடும் என்று சொல்கிறார்கள். முதல் தாக்குதலுக்கு தயாராகி விட்டோம் என்ற செய்தி வந்ததாம். தாக்குதல் நடந்ததா என்று தெரியவில்லை.

''கீழை சாளுக்கியத்துடன் போரா, மேலைச்சாளுக்கியத்துடன் போரா.''

''கீழைச் சாளுக்கியம் நமக்கு அடங்கிய தேசம். நமக்கு பிரியமானவர்கள். மேலைச்சாளுக்கியம், கீழைச்சாளுக்கியத்தை அடக்கி ஆண்டு தங்களுடைய படைகளை வைத்து அங்கு நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறார்கள்.''

''தஞ்சை பெருவுடையாரே நல்ல செய்தி வர வேண்டும். நிரம்ப வெற்றிகள் பெற வேண்டும். வெற்றி பெற்று போதும் போதும் என்று மறவர்கள் சாய்ந்து உட்கார வேண்டும். அரிசி விலை குறைய வேண்டும். ஆட்டம் பாட்டங்கள் அதிகமாக

வேண்டும். வழக்கம் போல தஞ்சாவூர் களைகட்டி நிற்க வேண்டும்.''

''களை கட்டி நிற்பதா, தஞ்சாவூரா. அது முடிந்த கதை இனிமேல் ஜெயங்கொண்டம்தான் களைகட்டி நிற்கும். அங்கு தான் எல்லா வேடிக்கைகளும் நிகழும். அதுதான் சோழ தேசத்தின் மூளையாக, இருதயமாக செயல்படும்.''

''அப்படியானால் தஞ்சாவூர்.''

''பழையன கழிதலும், புதியன புகுதலும் கால வகையி னானே அது காலத்தின் கட்டாயம். மிகச் சிறந்ததாக ஒரு தலை நகரம் ஜெயங்கொண்டத்தில் அமையும்போது தஞ்சையை யார் கவனிப்பார்கள்.

இதையெல்லாம் விட மிகப் பெரிய கேள்வி ஒன்று இருக் கிறது.

''என்ன?''

''பெருவுடையார் கோவிலை யாராவது கவனிப்பார்களா, இல்லை. மெல்ல மெல்ல கைவிட்டு விடுவார்களா, அந்த பயம் என்னிடம் இருக்கிறது.''

''இவ்வளவு அழகான கோவிலையா அவர்கள் கைவிட்டு விடுவார்கள்.''

''இதைவிட அழகான கோவில். பல்வேறு விதங்களில் மேம்பட்ட கோவில் ஜெயங்கொண்டத்தில் உருவாகி வருகிறது.''

''இராஜாதி ராஜர் இங்கிருக்கிறாரே. அவர் பார்த்துக் கொள்ள மாட்டாரா.''

''இல்லை. தகப்பனுக்குப் பிறகு இராஜாதி ராஜன் ஜெயங் கொண்டத்திற்கு போகவே பிரியப்படுவார். இராஜாதிராஜன் மகனும் அப்படித்தான் ஆசைப்படுவார். தஞ்சாவூருடைய வாசனை மெல்ல மெல்ல மங்கும்.''

''கண்ணெதிரே ஒரு ஊர் குற்றுயிராய் போவதை இப் பொழுதுதான் பார்க்கிறேன்.''

''இனி அதிகம் பார்ப்பாய். நிறைய பேர் குற்றுயிராய் இருப் பதை பார்ப்பாய். இங்கு இருக்கின்ற தளிச்சேரி பெண்டுகளை எத்தனை அழகிகளாக நான் பார்த்திருக்கிறேன் தெரியுமா.

எடுப்பான மார்பும், துடிப்பான தொடையும், அழகிய கண்களுமாய் இருப்பவர்கள் முகம் சுருங்கி, கூன் விழுந்து தட்டுத் தடுமாறி நடக்கிறார்கள். பார்க்க பாவமாக இருக்கிறது. குரவைக் கூத்து ஆடின கால்கள் உடையவள். இப்பொழுது கட்டுப் போட்டுக் கொண்டு நொண்டி நொண்டி நடக்கிறாள்.''

''வடக்கு வீதியில் போர்வீரர்கள் வந்திருக்கிறார்கள். கீழைச்சாளுக்கியத்திலிருந்து வந்திருக்கிறார்கள். வெவ்வேறு இடத்திலிருந்து வந்திருக்கிறார்கள்.'' யாரோ கூச்சல் போட அந்த கூட்டம் ஓட்டமும், நடையுமாய் வடக்கு வீதி நோக்கி போயிற்று.

சோழ குல சுந்தரியின் வீட்டிலிருந்து மிகப் பெரிய அலறல் சத்தம் கேட்டது. இராஜராஜ பிரம்மராயர் வில்லால் அடிபட்டும், கத்தியால் குத்தப்பட்டும் மரணமடைந்தார். உத்தமசோழமிலாடுடையார், உத்தம சோழகோன் என்று இன்னும் இரண்டு தளபதிகளும் இறந்து போனார்கள்.

முதல் நரபலி கீழைச்சாளுக்கியத்தின் வாசலில், வேங்கியிலிருந்து சில காத தூரத்தில் நடந்தது. இரவு நேரத்தில் படை எடுத்து வந்து தாக்கி தூங்குகிறவர்களை அடித்து கொன்றார்கள்.

ஜனங்கள் இந்தச் செய்தியை கேட்டதும் வெறிபிடித்தது போல் கத்தினார்கள். மார்பில் அடித்துக் கொண்டு அழுதார்கள். சோழகுல சுந்தரி நடு கூடத்தில் தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் மடியில் இராஜாதிராஜ பிரம்மராயரின் நீண்ட வாள் கிடந்தது. அவளுடைய ஞாபகமாக அந்த வாள் எடுத்து வந்திருந்தார்கள். அவளுக்கு அந்த வாள் அடையாளம் தெரிந்திருந்தது. நெஞ்சில் வைத்துக் கொண்டு சிறிது நேரம் அழுதாள். பிறகு மடியில் வைத்துக் கொண்டு தடவிக் கொடுத்தாள்.

முடிந்துவிட்டது. வாழ்க்கை முடிந்துவிட்டது. பேரப்பிள்ளைகள் வருவார்கள் பேரன் முகத்தில் இவரை [illegible] தஞ்சையை விட்டு ஜெயங்கொண்டம் போய்விடலாமா என்று தோன்றியது. இல்லை. அவரோடு சுற்றிய [illegible] இனி எனக்கு இடம். இதுதான் என்னுடைய [illegible] இந்த தஞ்சையை விட்டு நான் போகமாட்டேன். [illegible] அவர் வாங்கியது. என் மகன் வருவான். [illegible] வேண்டுமென்று அடிக்கடி பேசிக் கொண்டிருந்தாள் [illegible]

சாலை. இராஜராஜ பிரம்மராய ஆதுரச்சாலை. ஆதுரச்சாலைக்கு வந்தவர்க்கு ஆறுதல் சொல்வது என்னுடைய வேலை.

அடிபட்ட ஒவ்வொரு வீரனுக்கும் மருத்துவ உதவி செய்வது என் வேலை. தஞ்சையை ஏன் பாழ்பட்ட பூமியாக செய்ய வேண்டும். தஞ்சை பாழ்பட்ட பூமியாக இருக்காது. தஞ்சை அமைதியான இடம். தஞ்சை அலுத்துப் போனவர்களுக்கு அமைதி கொடுக்கும் இடம். தஞ்சை, யுத்தம் போய் அடிபட்டு நொந்தவர்க்கு உதவி செய்யும் இடம்.

என் பிள்ளை அற்புதமான மருத்துவன். அவர் பெயரை ஒளிர வைப்பான். அவன் வருவதற்கு முன்பே இந்த இடத்தி லேயே பல கட்டில்கள் தயார் செய்துவிட வேண்டும். மருந்து அரைப்பதற்கு உண்டான உலக்கைகளும், உரல்களும், கலுவங் களும் கொண்டு வர வேண்டும். சாதாரண மருத்துவர்களை இங்கு கொண்டு வரச் சொல்லி அவர்கள் மூலம் சிறிய நோய் களுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும்.

அம்மா அழவில்லை. தைரியமாக இருக்கிறேன் என்று மகனுக்கு செய்தி அனுப்ப வேண்டும்; அவள் தீர்மானித்தாள். எழுந்து நின்றாள். அந்த நீண்ட வாளை சுவரில் மாட்டினாள். அதற்கு அருகே தீபம் எரிய வைத்தாள். அந்த கூடம் பிரகாசமாகி யது. மொத்த தஞ்சையும் பிரகாசமாய் மாறியதாய் அவள் நினைத்தாள். எல்லா ஊருக்கும் ஏதோ ஒரு பயன் இருக்கத்தான் செய்கிறது. எல்லா செயலுக்கும் ஒரு விளைவு இருக்கத்தான் செய்கிறது.

ஜெயங்கொண்டத்திற்கு போகிறவர்கள் போகட்டும். ஓடி, அலுத்து திரிந்தவர்கள் நல்ல இடம் தஞ்சை, அமைதியான இடம் தஞ்சை. அவள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டாள்.

அவள் தேவரடியார், நித்யகன்னி பதியிலார். முகம் கழுவி குங்கும பொட்டிட்டு, முகத்திற்கு மஞ்சள் எழுதி, மை எழுதி பிரகாசமாக வெளியே வந்தாள்.

கூட்டம் அவளை கைகூப்பி நின்று அழுதது, தொழுதது. அவள் அதை பிரியத்துடன் ஏற்றுக்கொண்டாள்.